தமிழில் சொல்லாக்கம்

முனைவர் ச. இராசேந்திரன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழில் சொல்லாக்கம்

முனைவர் ச. இராசேந்திரன்

இணைப்பேராசிரியர்-தலைவர்

மொழியியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-338-6

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 281

திருவள்ளுவராண்டு 2035, மார்கழி- திசம்பர் 2004

நூல்	:	தமிழில் சொல்லாக்கம்
ஆசிரியர்	:	முனைவர் ச. இராசேந்திரன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	மொழியியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு 2004
பக்கம்	:	XVI+502 = 518
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 கிலோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரூ. 130/-
படிகள்	:	1000
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
துணைவேந்தர்

அணிந்துரை

சொல்லாக்கம் மொழியியல் நோக்கில் பல்வேறு நிலைகளில் ஆராயப்பெற்று வருகின்றது. ஒலியனியல், தொடரியல், பொருண்மையியல் எனப் பல நிலைகளிலும் பல்வேறு ஆய்வுகள் வெளிவந்துள்ளன. மரபு இலக்கண நிலையிலும் இலக்கண அறிஞர்கள் சொல்லாக்கம் குறித்துத் தங்கள் கருத்துகளைத் தம் நூல்களில் பதிவு செய்துள்ளனர். பழம் உரையாசிரியர்கள் மொழியில் காணலாகும் - பயன்படுத்தப்பெறும்- புதிய சொல்லாக்கங்களுக்கும் விளக்கம் தந்துள்ளனர். மாறனலங்கார உரையாசிரியர் புதிய சொல்வடிவங்களைப் பயன்படுத்தும் நெறியைப் பற்றி விளக்கும்போது சொற்சோதனை என்னும் சொல்லால் குறிப்பிடுவார்.

'தமிழில் சொல்லாக்கம்' என்னும் இந்நூலில் ஆசிரியர் தமிழின் சொல்லாக்கக் கோட்பாட்டினை நன்கு விவரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ் தனக்கென்றே உரிய சொல்லுறுப்புகளையும், சொற்களையும், ஒட்டுகளையும் கொண்டு சொல்லாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுத் தனது சொற்களஞ்சியத்தைப் பெருக்கியுள்ளது எனக் கூறி அவற்றிற்குரிய தரவுகளையும் தந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வினையிலிருந்து பெயர், பெயரிலிருந்து பெயரடை, பெயரிலிருந்து வினையடை, வினையிலிருந்து பெயரடை, வினையிலிருந்து வினையடை என்று ஒரு கூறிலிருந்து பிற இலக்கணக் கூறில் படும் சொல்லாக்கங்களை உருவாக்குவதில் தமிழ் தனித்தன்மையை இழக்காமல் வெற்றிகண்டுள்ளது என்பர். ஒலிபெயர்ப்பு, கருத்து மொழிபெயர்ப்பு, கலப்புச் சொல் உருவாக்கம் போன்ற

செயற்பாடுகளைப் பயன்படுத்திக் கலைச் சொற்களை உருவாக்கித் தன்பயன்பாட்டை ஆட்சிமொழிப் பயன்பாடு, அறிவியல் மொழிப்பயன்பாடு, பொறியியல் மொழிப்பயன்பாடு எனப் பல்வேறு தளங்களில் விரிவுக்கம் செய்யப் பெறுவதையும் காணுகின்றோம்.

பழந்தமிழ் மரபுகளில் காணலாகும் சொல்லாக்கங்களையும் இன்றைய காலச் சூழலில் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய புதிய சொல்லாக்கங்களைப் பயன்பாட்டிற்குத் தரப்படுத்தவும் வேண்டும். மொழியியல் வல்லுநர்கள் இத்துறையில் மேலும் காலூன்றிச் செய்வதற்கு இத்தகைய நூலாக்கங்கள் பெரிதும் பயன்படும்.

தமிழில் சொல்லாக்கம் என்னும் இந்நூலினை உருவாக்கிய முனைவர் ச. இராசேந்திரன் அவர்கட்கும், நன்முறையில் வெளியிட்டு உதவிய பதிப்புத்துறையினருக்கும் இனிய பாராட்டுதல்கள்.

தஞ்சாவூர்
10.12.2004

இ. சுந்தரமூர்த்தி

பொருளடக்கம்

	பக்க எண்
1. முன்னுரை	1
1.1. ஊகங்களும் நோக்கங்களும்	1
1.2. சொல்லாக்கத்தைப் பற்றிய சுருங்கிய வரலாறு	2
2. சில அடிப்படைக் கருத்துகள்	8
2.1. சொற்களும் சொல்லாக்கமும்	8
2.2. சொல், சொல்வடிவு, சொல்லன்	9
2.3. உருபன், உருபு, மாற்றுருபு	10
2.4. கட்டுருபு, தனி உருபு, ஒட்டு	11
2.5. வேர், பகுதி, அடி	11
2.6.திரிபும் ஆக்கமும்	12
2.7. கூட்டு	18
2.8. உள்வட்ட, வெளிவட்ட, நேரியைபு, உம்மைத் தொகை கூட்டுகள்	19
2.9. வகுப்பு காத்தல் மற்றும் வகுப்பு மாற்றல்	20
2.10. மாற்றம்	21
2.11. சுருக்கம்	21
2.12. எல்லைக்கோடுகளின் பற்றாக்குறை	22
2.12.1. கூட்டாக்கமும் ஆக்கமும்	23
2.12.2. ஆக்கமும் திரிபும்	26
3. சொல் நிலையாக்கம்	28
3.1. சொல்லின் வரலாற்றை மீட்டறிதல்	28
3.2. திடீர் வடிவாக்கம்	30
3.3. அமைப்பு முறைக்கு உட்படுத்துதல்	31
3.4. சொல் நிலையாக்கம்	32
3.5. சொல் நிலையாக்க வகைகள்	33
3.5.1. ஒலியனியல் சொல்நிலையாக்கம்	34
3.5.2. உருபனியல் சொல் நிலையாக்கம்	35
3.5.3. பொருண்மையியல் சொல் நிலையாக்கம்	36
3.5.4. தொடரியல் சொல் நிலையாக்கம்	38
3.5.5. ஒன்றுகலந்த சொல் நிலையாக்கம்	39
4. விளைவாக்கம்	40
4.1. பூர்வாங்கம்	40
4.1.1. விளைவாக்கம் உள்ளமை	40

4.1.2. விளைவாக்கமும் படைப்பாக்கமும் 41
4.1.3. ஒரே கால அடிப்படையிலான மற்றும் கால மாற்றம் அடிப்படையிலான விளைவாக்கம் 42
4.2. தொடரியல் மற்றும் உருபனியல் விளைவாக்கம் 43
4.2.1. புதிய வடிவுகளின் உருவாக்கம் 44
4.2.2. மிகப் பெரிய வடிவு உள்ளமை 44
4.2.3. நிகழ்வுறும் சாத்தியம் 45
4.2.4. தொடரியல் மற்றும் உருபனியல் விளைவாக்கங்களுக்கு இடையே உள்ள வேறுபாடு 46
4.3. விளைவாக்கம் பற்றிய சாம்ஸ்கியின் ஆய்வுக் கட்டுரை 47
4.3.1. விளைவாக்கம் பற்றிய ஆய்வுகளின் சிக்கல்கள் 47
4.3.2. சாம்ஸ்கியின் விளைவாக்கம் 48
4.3.3. உள்ளமைப்பு 50
4.3.4. தற்போக்கு 52
4.3.5. நிரப்பிகள் 54
4.3.6. முடிவுரை 55
4.4. குறை விளைவாக்கம் 55
4.5. விளைவாக்கத்தில் சில கட்டுப்பாடுகள் 58
4.5.1. பயன்வழியியல் 58
4.5.2. தடங்கல் 60
4.5.3. செயற்பாங்கில் உட்படும் அடிகள் மீதான எல்லைக் கட்டுப்பாடுகள் 61
4.5.4. கூட்டில் பகுதிகளின் சொல்லடி வகைப்பாட்டு வரையறை 63
4.5.5. பொருண்மைப் பொருத்தம் 63
4.5.6. ஒப்புமையாக்கம் 64
4.5.7. பிற வரையறைகள் 65
4.5.8. கிளைன் விளைவாக்கம் 65
4.5.9. ஒத்தியைவில் செயல்படும் எல்லைக் கட்டுப்பாடுகள் 66
4.6. விளைவாக்கம் பற்றிய சுருக்கம் 67
5. சொல்லாக்கத்தில் ஒலியனியல் பிரச்சினைகள் 69
5.1. கூட்டுகளும் அசை அழுத்தமும் 69
5.2. ஆக்கங்களும் அசை அழுத்தமும் 74
5.3. விட்டிசை மற்றும் இடம் விட்டு இடம் எழுதுகை 75
5.4. சொல்லசை அமைப்பு 76
5.5. சொல்லாக்கத்தின் கூறு மாறுபாடு 77
5.5.1. கூட்டாக்கப் புணர்ச்சி விதிகள் 78

5.5.2. கூட்டாக்கப் புணர்ச்சி விதியும் தொடராக்கப் புணர்ச்சியும் 84
5.5.2.1. கூட்டுகளில் வலிமிகுதல் 84
5.5.2.2. தொடர்களில் வலிமிகாமை 87
5.5.2.3. தொடர்களில் வலி மிகுதல் 89
5.5.2.4. அம் ஈற்றுப் பெயர்களின் கூட்டாக்கப் புணர்ச்சியும் தொடராக்கப் புணர்ச்சியும் 90
5.5.2.5. மீட்டுருவாக்கப் புணர்ச்சி விதிகள் 92
6. சொல்லாக்கத்தில் தொடரியல் மற்றும் பொருண்மையியல் பிரச்சினைகள் 93
6.1. முன்னுரை 93
6.1.1. பொருண்மையியல் பிரச்சினைகள் 93
6.1.2. தொடரியல் பிரச்சினைகள் 97
6.2. சொல்லாக்கத்தில் வாக்கியத்தை மூலமாக எடுத்துக் கொள்வது 105
6.3. வினைப்பாங்கு 107
6.3.1. எதிர்மறை 107
6.3.2. காலம் 110
6.3.3. வினை நோக்கு 111
6.3.4. வினையாற்று வகை 114
6.4. கூட்டில் அக நிலை வினை 117
6.5. தொடரியல் வரையறைகள் 122
6.5.1. தொடர் வகைப்பாடுகள் 123
6.5.2. தொடரியல் வகைப்பாட்டு நிலைமாற்றம் 124
6.5.3. இடைமாறிகள் 127
6.5.4. புற நிரலாக்கம் இல்லாமை 128
6.5.5. பொருண்மை இணைப்பாக்கம் 129
6.5.6. தற்போக்குத்தகவல் 130
6.5.7. முதல் சகோதரி நெறி 131
6.5.8. சொல் அடிப்படையிலான உருபனியல் 137
6.5.9. தேற்றப்பாடு 140
6.6. தொடரடி வகைப்பாடு 140
6.6.1. தொடரடி வகைப்பாட்டுச் சட்டங்களின் அமைப்பொழுங்கு 141
6.6.1.1. உள்ளார்ந்த சட்டகங்கள் 141
6.6.1.2. நீக்கப்பட்ட சட்டகங்கள் 143
6.6.1.3. சேர்க்கப்பெற்ற சட்டகங்கள் 144

6.6.2. தொடர்டி வகைப்பாடும் முதல் சகோதரிக் கொள்கையும் 145
6.7. சொல்லாக்கத்தில் பொருள் திட்டவட்டம் 149
6.8. சொற்பதிவுகள் 159
6.8.1. அகராதி 160
6.8.2. ஒரு சொல்லனுக்கான சொற்பதிவு 161
6.8.3. ஒட்டிற்கான சொற்பதிவு 164
6.8.4. சொல் நிலையாக்கம் பெற்ற கலவை வடிவின் சொற்பதிவு 165
6.8.5. சில எடுத்துக்காட்டுகள் 169
7. தமிழில் சொல்வகைப்பாடு 172
7.1. மரபிலக்கணச் சொல் வகுப்புகள் 173
7.2. தற்காலத் தமிழுக்கான சொல் வகுப்புகள் 174
7.2.1. பெயர்ச்சொல் 176
7.2.1.1. மாற்றுப்பெயர் 176
7.2.1.2. அளவுப்பெயர் 179
7.2.1.3. எண்ணுப்பெயர் 180
7.2.2. வினை 180
7.2.3. பின்னுருபுகள் 181
7.2.4. பெயரடைகள் 183
7.2.5. வினையடைகள் 193
7.2.6. அளவடைகள் 195
7.2.7. வரையறை அடைகள் 196
7.2.8. இணைப்பான்கள் 196
7.2.9. குறைச்சொற்கள் 196
7.2.10. வினைசார் கிளவி 197
7.2.11. உணர்ச்சி வெடிப்புச் சொல் 198
7.2.12. உணர்வுக் குறிப்புச் சொல் 198
7.2.13. விளிப்புச் சொல் 198
7.2.14. விளியேற்புச் சொல் 198
7.2.15. விகுதி 198
7.2.16. சாரியை அல்லது நிரப்பி 199
7.3. முடிவுரை 199
8. தமிழில் சொல்லாக்க வகைப்பாடு 201
8.1. கூட்டாக்கம் 201
8.1.1. கூட்டுப்பெயர்கள் 202
8.1.2. கூட்டுவினைகள் 207

8.1.3. கூட்டுப்பெயரடைகள் 209
8.1.4. கூட்டு வினையடைகள் 211
8.2. முன்னொட்டாக்கம் 211
8.3. பின்னொட்டாக்கம் 212
8.3.1. பெயராக்கம் 212
8.3.1.1. பெயரிலிருந்து பெயர்கள் 212
8.3.1.2. வினையிலிருந்து பெயர்கள் 216
8.3.1.3. பெயரடையிலிருந்து பெயர்கள் 221
8.3.1.4. இடைச்சொற்களிலிருந்து பெயர்கள் 222
8.3.2. வினையாக்கம் 225
8.3.2.1. பெயர்களிலிருந்து 225
8.3.2.2. வினைகளிலிருந்து 226
8.3.3. பெயரடையாக்கம் 226
8.3.3.1. வேர்ச்சொற்களிலிருந்து 227
8.3.3.2. பெயர்களிலிருந்து 227
8.3.3.3. வினைகளிலிருந்து 228
8.3.4. வினையடையாக்கம் 228
8.3.4.1. விளைவிலா ஆக்கம் 228
8.3.4.2. விளைவாக்கம்: பெயரிலிருந்து 229
8.4. மாற்றம் 230
8.5. பின்னாக்கம் 230
8.6. கத்தரிப்பாக்கம் 231
8.7. கலப்பாக்கம் 231
8.8. தலைப்பெழுத்தனாக்கம் 232
8.9. சொல் உருவாக்கம் 232
8.10. முடிவுரை 232
9. தமிழ்ச் சொல்லாக்கத்தின் பரிமாணம் 234
9.1. முகவுரை 234
9.2. பெயராக்கம் 235
9.2.1. பின்னொட்டாக்கம் 236
9.2.1.1. காரன்/காரி/காரர் 236
9.2.1.2. ஆளர்/ஆள்/ஆளி 238
9.2.1.3. தாரர்/தார் 239
9.2.1.4. நர் 239
9.2.1.5. ஞர் 240
9.2.1.6. இ 240
9.2.1.7. இயல் 241

9.2.1.8. அகம் 241
9.2.1.9. தல் ~ த்தல் 241
9.2.1.10. அல் ~ கல் ~ க்கல் 241
9.2.1.11. கை ~ க்கை 242
9.2.1.12. ஆமை ~ காமை ~ க்காமை 242
9.2.1.13. ப்பு 242
9.2.1.14. வு 242
9.2.1.15. வை 243
9.2.1.16. மானம் 243
9.2.1.17. அம் 243
9.2.1.18. மம் 244
9.2.1.19. பாடு 244
9.2.1.20. ஈடு 245
9.2.1.21. தனம் 245
9.2.2. முன்னொட்டாக்கம் 245
9.2.3. கூட்டுப்பெயராக்கம் 246
9.2.3.1. தொல்காப்பியரின் அணுகுமுறை 247
9.2.3.2. தொல்காப்பிய உரையாசிரியர்களின் பார்வை 251
9.2.3.2.1. இளம்பூரணர் பார்வை 251
9.2.3.2.2. சேனாவரையர் பார்வை 256
9.2.3.2.3. நச்சினார்க்கினியரின் பார்வை 257
9.2.3.2.4. தொகைகளின் பொருள்விளக்கம் குறித்த ஒட்டுமொத்தமான பார்வை 259
9.2.3.3. நன்னூலின் அணுகுமுறை 264
9.2.3.4. விஜய வேணுகோபால் பார்வையில் கூட்டுப் பெயராக்கம் 268
9.2.3.4.1. கூட்டாக்கம் 271
9.2.3.4.2. சிக்கல்கள் 273
9.2.3.4.3. கூட்டுகளைப் பாகுபாடு செய்தல் 276
9.2.3.5. சொற்சேர்க்கை குறித்த மறைமலையின் அணுகுமுறை 281
9.2.3.5.1. இருபெயர்த்தொகைச் சொல்லாக்கம் 281
9.2.3.5.2. பல்பெயர்த்தொகைச் சொல்லாக்கம் 288
9.2.3.5.3. கூட்டுச்சொல்லாக்கம் 296
9.2.4. பெயராக்கத்தின் சுருக்கம் 300
9.3. வினையாக்கம் 303

9.3.1. பின்னொட்டு வினையாக்கம் 303
9.3.2. கூட்டு வினையாக்கம் 303
9.3.2.1. கூட்டுவினைகளைத் தொடர்களிலிருந்து வேறுபடுத்தி அறிதல் 304
9.3.2.2. கூட்டுவினைகளின் அமைப்பு 311
9.3.2.2.1. அடிகள் 311
9.3.2.2.2. வினையாக்கிகள் 314
9.3.2.2.3. வினையாக்கிகளின் தொடரியல் பண்புக்கூறுகள் 316
9.3.2.3. கூட்டு வினையாக்கத்தின் செயல் நோக்கம் 317
9.3.2.4. கூட்டு வினையாக்கமும் விதிகளும் 324
9.3.2.5. கூட்டு வினையாக்கத்தின் விளைவாக்கமும் சொல் நிலையாக்கமும் 325
9.3.2.6. வினையாக்கிகள் அடிப்படையிலான கூட்டாக்க ஆய்வு 330
9.3.2.6.1. அடி 330
9.3.2.6.2. அடை 332
9.3.2.6.3. அளி 334
9.3.2.6.4. ஆகு 334
9.3.2.6.5. ஆக்கு 335
9.3.2.6 6. ஆடு 336
9.3.2.6.7. ஆட்டு 337
9.3.2.6.8. ஆற்று 337
9.3.2.6.9. இடு 338
9.3.2.6.10. உறு 339
9.3.2.6.11. உறுத்து 340
9.3.2.6.12. ஊட்டு 341
9.3.2.6.13. எடு 341
9.3.2.6.14. எய்து 342
9.3.2.6.15. ஏல் 342
9.3.2.6.16. ஏறு 342
9.3.2.6.17. ஏற்று 343
9.3.2.6.18. கட்டு 344
9.3.2.6.19. காட்டு 344
9.3.2.6.20. கூறு 344
9.3.2.6.21. கொடு 345
9.3.2.6.22. கொள் 348
9.3.2.6.23. செய் 349

9.3.2.6.24. சொல் 350
9.3.2.6.25. தட்டு 351
9.3.2.6.26. படு 351
9.3.2.6.27. படுத்து 352
9.3.2.6.28. பண்ணு 352
9.3.2.6.29. பார் 353
9.3.2.6.30. பிடி 353
9.3.2.6.31. புரி 354
9.3 2.6.32. பெறு 355
9.3.2.6.33. போ 356
9.3.2.6.34. போடு 357
9.3.2.6.35. மூட்டு 360
9 3.2.6.36. வா 361
9.3.2.6.37. வாங்கு 361
9.3.2.6.38. விடு 362
9.3.2.6.39. விழு 364
9.3.2.6.40. வை 366
9.3.2.7. முடிவுரை 367
9.4. பெயரடையாக்கம் 367
9.4.1. பெயர்ப்பெயரடைகள் 369
9.4.1.1. மாற்றமுறாப் பெயர்ப்பெயரடைகள் 369
9.4.1.2. மாற்றமுற்ற பெயர்ப்பெயரடைகள் 370
9.4.2. வேர்ச்சொல்லால் ஆன பெயரடைகள் 374
9.4.2.1. 'பேர்' என்னும் வாய்ப்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள் 375
9.4.2.2. 'பெரு' என்னும் வாய்ப்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள் 376
9.4.2.3. 'பெரும்' என்னும் வாய்ப்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள் 376
9.4.2.4. ஐ பின்னொட்டிய பெயரடைகள் 377
9.4.2.5. ஏ பின்னொட்டிய பெயரடை 377
9.4.2.6. 'பெரிய' என்னும் வாய்ப்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள் 377
9.4.2.7. வேர்ச்சொல் பெயரடைகள் குறித்த விவாதம் 379
9.4.3. பெயரெச்சத்தாலாகிய பெயரடைகள் 392
9.4.3.1. பெயரெச்சம் பின்னொட்டிய பெயரடைகள் 392
9.4.3.1.1. ஆன பின்னொட்டிய பெயரடைகள் 392

9.4.3.1.2. என்ற பின்னொட்டிய பெயரடைகள் 397
9.4.3.2. பெயரெச்சப் பெயரடைகள் 398
9.4.3.2.1. 'செய்' பெயரெச்சப் பெயரடைகள் 398
9.4.3.2.2. 'செய்த' பெயரெச்சப் பெயரடைகள் 400
9.4.3.2.3. 'செய்கிற' பெயரெச்சப் பெயரடைகள் 406
9.4.3.2.4. 'செய்யும்' பெயரெச்சப் பெயரடைகள் 406
9.4.3.2.5. 'செய்யாத' பெயரெச்சப் பெயரடைகள் 407
9.4.3.2.6. 'செய்யா' பெயரெச்சப் பெயரடைகள் 408
9.4.4. வினையெச்சப் பெயரடை 410
9.4.5. பெயரடை வகைகளின் புள்ளியியல் தரவு 411
9.4.6. முடிவுரை 412
9.5. வினையடையாக்கம் 417
9.5.1. வினையெச்சமல்லா வினையடைகள் 419
9.5.1.1. வேற்றுமையல்லா வினையடைகள் 419
9.5.1.1.1. சுட்டு-வினா கட்டுருபன்கள் மற்றும் சில தெரிநிலைப் பெயரெச்சங்கள் அடிப்படையிலான வினையடைகள் 420
9.5.1.1.2. எண்ணுப்பெயரடை ஒரு அடிப்படையிலான வினையடைகள் 424
9.5.1.1.3. முன், பின் அடிப்படையிலான வினையடைகள் 425
9.5.1.1.4. ஏ என்ற குறைச்சொல்லால் முடியும் வினையடைகள் 426
9.5.1.1.5. உம் என்ற குறைச்சொல்லில் முடியும் வினையடைகள் 428
9.5.1.1.6. வரை என முடியும் வினையடைகள் 430
9.5.1.1.7. எல்லாம் என முடிவும் வினையடைகள் 431
9.5.1.1.8. மேல் என முடியும் வினையடைகள் 432
9.5.1.1.9. பெயர் இரட்டிப்பு வினையடைகள் 433
9.5.1.1.10. இரட்டிப்பு வினையடை 433
9.5.1.2. வேற்றுமை வினையடைகள் 433
9.5.1.2.1. உக்கு இறுதியில் வரும் வினையடைகள் 434
9.5.1.2.2. ஒடு இறுதியில் வரும் வினையடைகள் 436
9.5.1.2.3. உடன் இறுதியில் வரும் வினையடைகள் 437
9.5.1.2.4. இல் இறுதியில் வரும் வினையடைகள் 4?
9.5.1.2.5. ஆல் இறுதியில் வரும் வினையடைகள்

9.5.2.1. வினையெச்சம் பின்னொட்டாக வந்து ஆக்கப்பட்ட வினையடைகள் 441
9.5.2.1.1. ஆக பின்னொட்டிய வினையடைகள் 442
9.5.2..1.2. என்று பின்னொட்டிய வினையடைகள் 452
9.5.2.1.3. என பின்னொட்டிய வினையடை 458
9.5.2.2. வினையெச்சம் பின்னுருபாக வந்து ஆக்கப்பட்ட வினையடைகள் 458
9.5.2.3. வினையெச்ச வினையடைகள் 461
9.5.2.3.1. 'செய்ய' வினையெச்ச வினையடைகள் 461
9.5.2.3.2. 'செய்து' வினையெச்ச வினையடைகள் 464
9.5.2.3.3. 'செய்யாமல்' வினையெச்ச வினையடைகள் 468
9.5.2.3.4. 'செய்யாது' வினையெச்ச வினையடைகள் 471
9.5.2.3.5. 'செய்தால்' வினையெச்ச வினையடைகள் 471
9.5.3. வினையடை வகைகளின் புள்ளியியல் தரவு 472
9.5.4. முடிவுரை 474
10. முடிவுரை 476
10.1. சொல்லாக்கம் பற்றிய நெறிகள் மற்றும் கோட்பாடுகளில் ஒருமித்த கருத்தின்மை 476
10.2. சொல்லாக்கம் பற்றிய ஆய்வின் தொய்வும் உய்வும் 477
10.3. சொல் விளைவாக்கமும் சொல் நிலையாக்கமும் 477
10.3.1. விளைவாக்கம் 477
10.3.2. நிலையாக்கம் 479
10.4. சொல்லாக்கத்தில் பிரச்சினைகள் 480
10.5. தமிழில் சொல்வகைப்பாடு 480
10.6. தமிழில் சொல்லாக்க வகைப்பாடு 481
10.7. தமிழில் சொல்லாக்கம் 481

துணைநூல் பட்டியல் (ஆங்கிலம்) 483
துணைநூல் பட்டியல் (தமிழ்) 498

தமிழில் சொல்லாக்கம்

1

முன்னுரை

1.1. ஊகங்களும் நோக்கங்களும்

சொல்லாக்கத்தைப் பற்றிய ஆய்வு இடைவெளிப்பட்ட ஒரு காலக்கட்டத்திலிருந்து வெளிப்பட்டதாகும். திடீரென்று சொல்லாக்கத்தைப் பற்றிய ஆய்வுகள் கோட்பாட்டு மொழியியலாரிடையே முக்கியத்துவம் பெற்றுள்ளது. துரதிருஷ்டவசமாகச் சொல்லாக்கத்தைப் பற்றி ஆய்வதில் எந்த நெறிமுறையை அல்லது எந்த அடிப்படைக் கோட்பாட்டுப் பின்னணியைப் பின்பற்ற வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்து இல்லை; இதனால் சொல்லாக்க ஆய்வு ஒரு குழப்பமான நிலையில் உள்ளது. தற்பொழுது 'சொல்லாக்கக் கோட்பாடு' என்ற ஒரே தன்மையான கோட்பாடு இல்லை; மற்றும் இதற்கு எம்மாதிரியான தரவுகள் தேவை என்பதிலும் இணக்கம் இல்லை.

இந்த ஆய்வேட்டில் எடுத்துக் கொண்ட தற்கோள் (assumption) ஒரே காலம் (asynchronic) மற்றும் ஆக்கமுறை இலக்கணம் இவற்றின் அடிப்படையிலானதாகும்; இருப்பினும் ஒரே காலம் என்ற அடிப்படை பல இடங்களில் வரலாற்று (diachronic) அடிப்படையிலான உண்மைகளால் தளர்த்தப்பட்டுள்ளது; மட்டுமின்றி ஆக்கமுறை இலக்கணப்

பின்னணி பயன்படுத்தப்பட்டுள்ளமை மரபுவழிப் பட்டதல்ல. குறிப்பாக, கருத்துகளும் தரவுகளும் பரந்த அளவில் வகைப்பாட்டியல் மற்றும் ஆக்கமுறை இலக்கண அடிப்படையில் அமைந்தவைகளையும் உள்ளடக்கியதாகும். தொடரியல் அணுகுமுறை அடிப்படையாக அமைந்தாலும் பிற ஒலியனியல், உருபனியல், பொருண்மையியல் மற்றும் பயன்பாட்டியல் (pragmatics) இவற்றின் கோணங்களும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

சொல்லாக்கம் பற்றி அறிய விரும்புபவர்க்கு ஒரு அறிமுகம் தேவை என்ற எண்ணத்தைக் கருத்தில் கொண்டு இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. எனவே தமிழின் சொல்லாக்கத்தைப் பற்றிக் கூறுவதைக் காட்டிலும் தமிழின் சொல்லாக்கக் கோட்பாட்டைப் பற்றிக் கூறுவதில் கூடுதல் அக்கறை காட்டப்பட்டுள்ளது. தமிழில் சொல்லாக்கத்தைப் பற்றிய மிக விரிவான ஆய்வுத்திட்டம் பல்கலைக்கழக மானியக்குழு நிதி நல்கையின் கீழ் முடிக்கப்பட்டு ஆங்கிலத்தில் ஆய்வேடு எழுதப்பட்டுச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அதில் தமிழ்ச்சொல்லாக்கம் பற்றிய செய்திகள் மேலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

1.2. சொல்லாக்கத்தைப் பற்றிய சுருங்கிய வரலாறு

சொல்லாக்கத்தைப் பற்றிய ஆய்வின் தொடக்கம் மொழி ஆய்வின் தொடக்கத்தோடு இணைந்தது. பாணினியின் காலத்திலிருந்தே சொல்லாக்கத்தைப் பற்றிய ஆய்வு நடந்து கொண்டிருக்கின்றது. 17, 18, 19 ஆகிய நூற்றாண்டுகளில் சொல்லாக்கம் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகள் இன்றும் கேட்கப்படுகின்றன. இதற்குக் காரணம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் சொல்லாக்க ஆய்வுகள் மொழியியலாரிடையே மதிப்புப் பெறாமையாகும். சசூர் எடுத்துக்கூறிய ஒருகால அடிப்படையிலான ஆய்வுக்கும் வரலாற்று அடிப்படையிலான ஆய்வுக்கும் உள்ள வேறுபாட்டை இதற்குக் காரணமாய்க் கூறலாம்; இவ்வேற்றுமை 1916 - க்குப் பின் மொழியியல் ஆய்வைப் பெரிதும் பாதித்தது. ஒரு கால அடிப்படையிலான மற்றும்

வரலாற்று அடிப்படையிலான ஆய்வுகளை உள்ளடக்கிய சொல்லாக்க ஆய்வு இதன் காரணமாய் ஒதுக்கி வைக்கப்பட்டது. எஸ்பர்சன் (1942) போன்றோர் ஒருகால அடிப்படை, வரலாற்று அடிப்படை என்ற இரண்டினையும் இணைத்துச் சொல்லாக்க ஆய்வு செய்தனர். பெரும்பாலான மொழியியலார் சொல்லாக்க ஆய்வை முழுவதுமாக ஒருகால அடிப்படையிலேயோ அல்லது முழுவதுமாக வரலாற்று அடிப்படையிலோ மேற்கொண்டனர்.

சுருக்கமாகக் கூறினால் சொல்லாக்கம் எதிர்கொண்ட இந்தச் சூழ்நிலையில் தான் 'சாம்ஸ்கி புரட்சி' 1957 - இல் மொழியியலைப் பாதித்தது. 'Syntactic Structures' (Chomsky,1957) என்ற நூல் மிகச் செல்வாக்கு மிகுந்த மொழியியலாளர்களின் அணுகுமுறையைப் பெரிதும் மாற்றியது. 1940 முதல் 1950 வரை அமெரிக்க அமைப்பு மொழியியல் (American Structural Linguistics) ஒலியனியலுக்கும் உருபனியலுக்கும் தான் முக்கியத்துவம் கொடுத்தது; அமைப்புமொழியியலாரின் கோட்பாட்டில் (Structural Linguist's Theory)சொல் எந்தவித முக்கியத்துவமும் பெறவில்லை; அவர்கள் சொல்லைக் காட்டிலும் குறைந்த அலகுகளில் தான் கவனம் செலுத்தினர். ஆக்கமுறை மாற்றிலக்கணம் (Generative Transformational grammar) சொல்லாக்கத்தில் கவனம் செலுத்தவில்லை; அது சொல்லைவிடப் பெரிய அலகுகளான தொடர், வாக்கியம் இவற்றில் கவனம் செலுத்தியது. வாக்கியங்கள் உருபன்களால் ஆனவைகளாகக் கருதப்பட்டனவேயன்றி சொற்களால் ஆனவைகளாகக் கருதப்படவில்லை. லீஸ் (Lees,1960) பெயராக்கம் குறித்து ஆக்க முறை மாற்றிலக்கணச்சட்டகத்தில் ஆயும்போதுகூட சொல்லாக்க வாயிலான சொல்லாக்க முறையைக் கையாளும்போது சொல்லாக்கங்களை தனிவகையான அலகுகளாகக் கொள்ளாமல் உட்படு வாக்கியங்களாகக் (embedded sentences) கொள்கிறார். இந்த அணுகுமுறைதான் பெரும்பாலான மாற்றிலக்கண ஆய்வில் காணப்படுகிறது. ஒரு சில ஆய்வுகள் தான் சொல்லாக்கத்தில் வரும் பிற சிக்கல்கள் குறித்து ஆய்கின்றன. சிம்மர்

(Zimmer,1964) சில சொல்லாக்கச் சிக்கல்களில் கவனம் செலுத்தியுள்ளார்.

லீஸ் (Lees,1960 : xix) பாணினி முதற்கொண்டு தொடர்ந்த முந்தைய சொல்லாக்க ஆய்வுகளை வகைபாட்டியலை(taxonomy) அடிப்படையாகக் கொண்டது என்று தள்ளி வைக்கிறார். இம்மாதிரியான, குறிப்பாகப் பாணினி தொடர்பான, மறுப்பு தற்போது விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளது. 'வகைப்பாட்டியல்' என்ற கலைச்சொல் இக்காலக் கட்டத்தில் ஆக்கமுறை மாற்றிலக்கணத்தால் ஒரு பழிப்பு வழக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வகைப்பாட்டியல் என்ற சொல்லை லீஸ் எந்த அர்த்தத்தில் பயன்படுத்துகிறார் என்று தெரியவில்லை. லீஸின் ஆய்வையும் ஏன் வகைப்பாட்டியலை அடிப்படையாகக் கொண்டது எனக் கூற இயலாது என்ற கேள்விக்கு விடை காண்பது அரிது. வகைப்படுத்தித்தரும் எந்த ஆய்வும் வகைப்பாட்டியல் ஆய்வுதான். லீஸின் ஆய்வும் இதற்கு விலக்கல்ல. லீஸின் கணக்குப்படி மார்சன்டின் ஆய்வு நூலான "The Categories and Types of Present - Day English Word - Formation" (1969) என்பதும் வகைப்பாட்டியல் வகையைச் சாரும். இரண்டு ஆய்வுகளும் கோட்பாடு அடிப்படையிலான கருத்துகளைக் கொண்டுள்ளதால் சொல்லாக்க ஆய்வுக்கு முக்கியமானவைகளாகக் கருதப்படுகின்றன. மார்ச்சன்ட் நிலைபேறுபெற்ற பாணியான ஒருகால அடிப்படையான ஆய்வு அல்லது வரலாறு அடிப்படையான ஆய்வு இவற்றிலிருந்து வேறுபட்டு ஒருகால அடிப்படை, வரலாற்று அடிப்படை இவையிரண்டையும் சொல்லாக்க ஆய்வுக்குப் பயன்படுத்துகிறார்.

ஆக்கமுறை மாற்றிலக்கணம் கவனம் செலுத்திய மொழியின் மற்றொரு கோணம் ஒலியனியலாகும். முக்கியமாக 1962 -இலிருந்து ஒலியனியலில் ஆக்கமுறை மாற்றிலக்கணம் கவனம் செலுத்தத் தொடங்கியது. சாம்ஸ்கி மற்றும் ஹால்லே எழுதிய "The Sound Pattern of English" (Chomsky and Halle, 1968) இந்நோக்கில்

வெளிவந்ததாகும். அமெரிக்க உருபொலியனியல் மரபுப்படி, ஆக்கமுறை ஒலியனியல், உருபனின் உள்ளுறை உருப்படுத்தத்திலிருந்து (Underlying representation) அதன் எல்லாப் புறநிலை வடிவுகளை உருவாக்குவதில் முக்கியமான கவனம் செலுத்தியது. எடுத்துக்காட்டாக, மரங், மரம் என்ற இரண்டும் மரம் என்பதன் புற வடிவுகள் என்பதைக் காட்டும் வகையில் விதிகள் வகுக்கப்பட்டன. 1957- க்கும் 1967- க்கும் இடையில் தான் சொல்லாக்கம் ஆக்கமுறை மாற்றிலக் கணத்தில் பேசப்பட்டது. ஆனால் உருபன்களின் கோவை மற்றும் எல்லைகளிலிருந்து பெறப்பெற்ற ஒரு சொல்லின் ஒலிவடிவத்தை (Phonetic form) அல்லது ஒலியனியல் வடிவத்தை (phonological form) நிர்ணயிப்பதைத்தான் ஒலியனியல் செய்தது. ஒலியனியல் விதிகளுக்கு இடுபொருளாக (input) வரும் சரியான உருபன் கோவை மற்றும் எல்லைகளை உருவாக்குவதைப் பற்றிக் கவலைப் படவில்லை; இது தொடரியல் உட்கூறின் பிரச்சனையாகத் தான்கருதப்பட்டது. சாம்ஸ்கியின் "Remarks on nominalization" என்ற ஆய்வுக்கட்டுரையின் வெளியீட்டிற்குப் பின்னர்தான் சொல்லாக்கம் பற்றிய ஆய்வு ஆக்கமுறை மாற்றிலக்கணத்தில் முக்கியத்துவம் பெற்றது. இந்தக் கட்டுரையில்தான் சொற்செருகல் பற்றிய சொல்லியலாளர் (lexicalist) வழிமுறைக்கும் மாற்றிலக்கணத்தாரின் வழிமுறைக்கும் உள்ள வேறுபாடு மாற்றிலக்கணப் பள்ளிக்குள் ஒரு பெரிய பிரிவுகளில் ஒன்றாக நிறுவப்பட்டது. இந்தச் சர்ச்சை சொல்லாக்கம் பற்றிய தரவுகளை மொழியியல் அக்கறையின் மையத்திற்குக் கொண்டு வந்தது. இருப்பினும் ஆக்கச் சொற்களெல்லாம் சிறப்பு வகையான வாக்கியங்களாகத்தான் கருதப்பட்டன. அவற்றின் வடிவு ஒலியனியலால் தீர்மானிக்கப்பட்டது.

யதேட்சையாக ஆக்கமுறை மாற்றிலக்கணத்திற்கு அப்பாற்பட்டு ஆய்வு செய்து கொண்டிருந்த ஆய்வாளர்களால் தான் சொல்லாக்கம் பற்றிய ஆய்வுகள் வெளிவந்தன. இவை சொல்லாக்கம் பற்றிய ஆய்வை நோக்கிய முன்னேற்றத்தைத் தெரிவிக்கும். மர்சன்டின் (Marchand,1969) 'The Categories and

types of Present day English Word Formation', ஆடம்ஸின் (Adams,1973) 'An Introduction to Modern English Word - Formation' என்பன இவ்வகையைச் சாரும். இதே சமயத்தில் ஆக்கமுறை மாற்றிலக்கண மரபில் படும் சொல்லாக்கம் பற்றிய ஆய்வுகளும் பரவலாகச் செய்யப்பட்டன. பவ்வரின் (Bower,1969) 'The deep structure of abstract nouns', கிளைட்மேன்கள்(Glietman & Glietman 1970) எழுதிய "Phrase and Paraphrase : Some innovative uses of language", லேகோபின் (Lakoff,1970) Irregularity in syntax, லீசின் (Lees,1970) "Problems in the grammatical analysis of English nominal Compounds", நியூமேயரின்(Newmayer,1970)" The derivation of English action nominalization", வெண்லரின்(Vendler,1968)"Adjectives and Nominalization" என்பன இவ்வகையைச் சாரும்.

சமீப காலத்தில் சொல்லாக்கம் மொழியியலாளர்களால் வெவ்வேறு நோக்கில் ஆயப்பட்டன. ஒலியனியல் நோக்கிலும் (Halle,1973; Linger,1975) தொடரியல் நோக்கிலும் (Jackendoff,1975; Roeper & Siegell 1978) பொருண்மையியல் நோக்கிலும் (Leech,1974; Lyons,1977) ஆய்வுகள் வெளிவந்தன. 1950 முதல் ஆய்வில் ஈடுபட்டு வந்த மொழியியலாளர்கள் சொல்லாக்கம் பற்றிய தரவுகளைக் குறிப்பிட்ட தங்கள் கொள்கைகளை மெருகேற்றப் பயன்படுத்தினர். தற்போதும் பல மொழியியலாளர்கள் சொல்லாக்கம் எவ்வாறு மொழிக்குப் பொதுவாய் அமைகிறது என்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். மொழியியலாரில் சிலர் கோட்பாடுகளைப் பொறுத்தவரையில் அவற்றில் காணும் சிறப்பான அம்சங்களைப் பின்பற்றும் முறையைக் கையாளுகின்றனர். ஆக்கமுறை மாற்றிலக்கணத்தார் அவ்வாறில்லாமல் தாங்கள் பயன்படுத்தும் கோட்பாடுகளால் கருத்து வேற்றுமை கொண்டுள்ளனர்.

தற்போது சொல்லாக்கம் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து மாறுபடும் தன்மையில் அமைந்துள்ளன. கருத்தொருமித்த கோட்பாடுகள் மிகக்குறைவாக உள்ளது. எனவே, ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுக்கென்று கோட்பாடுகளையும்

முறைகளையும் ஏற்படுத்திக் கொண்டு ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். சொல்லாக்கம் பற்றிய பெரும்பாலான வருணனை ஆய்வுகள் கோட்பாடு அடிப்படையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த விளைவாக்கம் (productivity) பற்றி பேசுவதைத் தவிர்த்துள்ளன; இதனால் கோட்பாட்டாளர்கள் இக்கட்டான நிலையில் உள்ளனர். இந்த அனுகூலமற்ற சூழ்நிலையிலும், சொல்லாக்கம் பற்றி ஆய்கையில் ஆய்வாளர்கள் கோட்பாடு அடிப்படையிலான பல கருத்துக் கோணங்களை ஒருங்கிணைக்கத் தயாராய் உள்ளனர்; ஒருகால ஆய்வுடன் வரலாற்று ஆய்வையும் உருபனியலுடன் ஒலியனியலையும் தொடரியலுடன் பொருண்மை யியலையும் ஒருங்கிணைக்கத் தயாராய் உள்ளனர்.

2
சில அடிப்படைக் கருத்துகள்

இப்பகுதியில் சொல்லாக்கத்தை விளக்கப் பயன்படும் சில கலைச்சொற்களின் விளக்கம் தரப்பட்டுள்ளது. இக்கலைச்சொற்கள் யாவும் எல்லா உருபனியல் ஆய்வுக்கும் பொதுவானதாய் அமையும். இப்பகுதி ஒருவிதத்தில் பின்னால் வரும் பகுதிகளுக்கு அடிக்கல் இடுவது போல் அமைந்தாலும், இதில் எழுப்பியுள்ள சில வாதங்கள் ஆர்வத்தைத் தூண்டுவதாயும் மொழியியல் கோட்பாட்டிலுள்ள சில பிரச்சனைகளை வெளிப்படுத்துவதாயும் அமையும்.

2.1. சொற்களும் சொல்லாக்கமும்

சொல்லாக்கம் பற்றிய எந்த விவாதமும் இரு ஊகங்களைச் செய்கின்றன: ஒன்று சொல் என்றஇலக்கணக் கூறு உண்டு; மற்றொன்று சொற்களில் சில ஆக்கப்படுகின்றன.

சொல்லின் வரையறை விளக்கம் மொழியியலில் நீண்ட நாட்களாக இருந்து வரும் பிரச்சனையாகும். எப்படி சொல்லுக்கு வரையறை விளக்கம் தந்தாலும் சில வேளைகளில் சில மொழிகளில் அதைப் பேசுவோர் 'சொல்' என்று குறிப்பிடுவது, தந்துள்ள வரையறை விளக்கத்தில்

அடங்காமல் போகும். சொல்லுக்கு வரையறை விளக்கம் தருவது கடினமாக இருந்தபோதிலும் 'சொல்' என்ற கருத்துச் சாயலை அடிப்படையாகக் கொள்வதற்கு நல்ல நியாயங்கள் இருக்கின்றன. அவையாவன:

1. சொல்லின் உட்கூறுகளின் நிரல் தொடரின் உட்கூறுகளின் நிரலிலிருந்து வேறுபடுகின்றது.

2. சொல்லின் அசை அழுத்த அமைப்பொழுங்கு தொடரின் அசை அழுத்த அமைப்பொழுங்கிலிருந்து வேறுபடுகிறது.

3. சொற்களுக்கிடையே இடம் விட்டு எழுதும் மரபு இருக்கிறது.

4. கூட்டுச்சொற்களை ஆக்கும் சொற்களுக்கிடையே '-' என்ற குறி இடும் மரபு இருக்கிறது.

5. சொல்லின் உட்கூறுகளுக்கிடையே பொருண்மைப் பற்றாசு (semantic cohesion) காணப்படுகிறது.

2.2. சொல், சொல் வடிவு, சொல்லன்

அவன் பூனையைப் பார்த்தான் என்ற வாக்கியத்தில் வரும் பார்த்தான் என்ற சொல்லின் பொருளை பார் என்ற அகராதிச் சொல்வடிவைப் பார்த்து அறிகின்றோம். பார்த்தான் என்ற சொல் வரும் திரிபு அடுக்கில் பார் என்பது ஒரு முக்கிய அங்கமாகும். பார் என்ற சொல்லைப் பற்றி இக்கருத்துப்புலனில் பேசும்போது அது ஒரு குறிப்பிட்ட இடத்தில் வரும் ஒரு குறிப்பிட்ட வடிவைக் கூறுவதாக அமையாமல் வேறு வடிவுகளையும் கூறுவதாக அமையும். இக்கருத்தில் 'சொல்லன்' (lexeme) என்ற கலைச்சொல் பயன்படுத்தப்படுகிறது. பார்த்தான், பார்க்கிறான், பார்ப்பான் என்ற சொற்கள் பார் என்ற சொல்லனின் கீழ் அடங்கும். இச்சொற்கள் பார் என்றசொல்லனைக் கொண்டிருப்பதுடன் அச்சொல்லுடன் தொடர்புடைய பல திரிபு வகைபாடுகளின் மாதிரிகளாக அமையும். சொல்லன் அல்லாது ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு சொல்லின் வடிவத்தைக் குறிப்பிட 'சொல்வடிவு' (word form) என்ற கலைச்சொல் பயன்படுத்தப்படுகிறது. சொல்வடிவுக்கு ஒலியனியல்

மற்றும் எழுத்து வடிவு உண்டு; ஆனால் சொல்லன் என்பது நுண்மையான அலகாகும். ஒரு சொல்லனின் திரிபு அடுக்கிலிருந்து எடுக்கப்பட்டு அகராதியில் பயன்படுத்தப் படும் சொல்வடிவு மேற்கோள் வடிவாகும் (Citation form). எடுத்துக்காட்டாக *பார்*என்ற சொல்லனின் மேற்கோள் வடிவம் *பார்*என்பதாகும்; *பார்த்தான், பார்க்கிறான், பார்ப்பான்*என்பன மேற்கோள் வடிவுகளல்ல. மேற்கோள் வடிவு மரபு அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. இலக்கணச்சொல் (grammatical word) என்பதையும் 'சொல்' என்பதன் வேறு கருத்துப்புலனாகக் கொள்ள வேண்டியதிருக்கின்றது. எடுத்துக்காட்டாக, *பார்க்கும்* என்பது வினை எச்சம், ஒன்றன் பால் வினைமுற்று என்ற இரு இலக்கணச் சொற்களைக் குறிக்கும் ஒரு சொல் வடிவாகும்.

2.3. உருபன், உருபு, மாற்றுருபு

சொல் வடிவுகளின் உள் அமைப்பை விவரிக்கும் மொழியியலின் ஒரு கிளை உருபனியலாகும் (morphology). உருபனியல் ஆய்வுக்கான அடிப்படை அலகு உருபனாகும் (morpheme). *அப்பையன்கள்* என்ற சொல் வடிவை எடுத்துக்கொண்டால், அதை *அ+பையன்+கள்* என்று பிரிக்கலாம். ஒவ்வொரு தனிமத்துக்கும் ஒரு வடிவமும் பொருளும் வருகை முறையும் உண்டு. *அ* என்பதற்கு /அ/ என்ற ஒலியனியல் வடிவமும் சேய்மையைக் காட்டும் பொருண்மையும் உண்டு. *அ* என்பது *அப்பையன், அப்பெண்* என்ற சொற்களில் மறுபடியும் வரும். *பையன்* என்பதற்கு /பையன்/ என்ற ஒலியனியல் வடிவம் உண்டு. இது *பையனால், பையனுடைய* என்ற சொல் வடிவங்களில் திரும்பவும் வரும். *அ, பையன், கள்*என்ற கூறுகளை மேலும் கூறிட முடியாது. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு உருபனைக் குறிப்பன. உருபன் மிகச் சிறிய இலக்கணக் கூறாகும். இது வெளிப்படையாக வராத ஒரு நுண் அலகாகும். சொல்லை ஆய்கையில் நமக்கு வெளிப்படையாகக் கிடைப்பது ஒலி வடிவமோ எழுத்து வடிவமோ ஆகும். இவ்வடிவு தான் உருபனாகக் கொள்ளப்படுகிறது.

உருபன்களை உணர்த்தும் படி ஒரு ஒலிக்கோர்வையோ அல்லது எழுத்துக்கோர்வையோ பகுக்கப்பட்டால் அவை உருபுகள் எனப்படும். மீப்பையன்கள் என்ற சொல் வடிவு அ+பையன்+கள் எனப் பகுக்கப்படும் போது ஒவ்வொரு பகு கூறும் ஒரு உருபாகும்; அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு உருபனை உணர்த்தி நிற்கும். ஒரு குறிப்பிட்ட உருபனை உணர்த்தும் ஒரு சொல் வடிவின் ஒரு கூறு உருபு (morph) ஆகும் என்று வரையறை விளக்கம் தரலாம். மரங்கள் என்ற சொல் வடிவில் மரம் என்பது மரங் என்ற ஒலி வடிவில் (அல்லது எழுத்து வடிவில்) வருகிறது. கள் என்ற பன்மை உருபுக்கு முன்னர் மரம் என்பது மரங் என வரும். இவ்வாறு ஒலி அடிப்படையிலோ இலக்கண அடிப்படையிலோ நிபந்தனைக்கு உட்பட்டு வந்து ஒரு உருபனை உணர்த்தும் உருபுக்குழுமத்தின் ஒரு அங்கம் மாற்றுருபாகும் (Allomorph).

2.4. கட்டுருபு, தனி உருபு, ஒட்டு

தனியாக வரும் உருபு தனி உருபாகும் (Free morph). எப்பொழுதும் ஏதாவது ஒரு உருபுடன் சேர்ந்து வரும் உருபு கட்டுருபாகும். (Bound morph). எடுத்துக்காட்டாக புன்முறுவல், புன்னகை என்பதில் வரும் புன் என்ற உருபு கட்டுருபாகும். இது முறுவல் அல்லது நகை என்பதுடன் சேர்ந்து தான் வரும்; தனித்து வராது. எனவே புன் என்பது கட்டுருபாகும். ஆனால் முறுவல், நகை என்பன தனித்து வர வல்லன. எனவே இவை தனி உருபுகளாகும். ஆய இல்லாத மற்றும் சொல்லன்களை உணர்த்தாத கட்டுருபன்கள் ஒட்டுகள் எனப்படும். அடியின்முன் வருவன, பின்வருவன, இடையில் வருவன என்ற முறையில் ஒட்டுகளை முன்னொட்டுகள் (prefixes) (எ.கா. அநீதி என்பதிலுள்ள அ), பின்னொட்டுகள் (suffixes) (எ.கா. கண்கள் என்பதிலுள்ள கள்), இடையொட்டுகள் (infixes) எனப் பிரிக்கலாம். இடையொட்டுகள் தமிழில் இல்லை.

2.5. வேர், பகுதி, அடி

ஆக்க (Derivational) மற்றும் திரிபு (Inflectional) உருபனியலால் மேலும் பகுக்க இயலாத வடிவம் வேராகும்

(Root). எல்லாத் திரிபு மற்றும் ஆக்க ஒட்டுகள் போக மீதி வரும் பாகம் வேராகும். எடுத்துக்காட்டாக அக்கண்கள் என்பதில் கண் என்பது வேராகும்; அ என்பது ஒரு கட்டுருபு; கள் என்பது பின்னொட்டாகும். கண்விழி என்ற கூட்டில் (compound) கண், விழி என்ற இரண்டும் வேர்களாகும். திரிபு உருபனியலைப் பற்றி பேசும்போது தான் பகுதி (stem) பற்றி கூற வேண்டியது வரும். பகுதி தனிநிலை வடிவிலோ (single form) கலப்பு வடிவிலோ (complex form) வரும். கண்கள் என்பதில் கண் தனிநிலைப் பகுதியாகும். அநீதிகள் என்பதில் அநீதி கலப்பு நிலைப் பகுதியாகும். கண்விழிகள் என்பதில் கண்விழி என்பது பகுதியாகும். எந்தவித ஒட்டுக்களையும் சேர்க்கவல்ல சொல் வடிவம் அடியாகும் (base). அதாவது எந்த வேரும் அல்லது எந்தப் பகுதியும் அடியாக வரலாம்; ஆனால் வேர்களின் குழுமம் மற்றும் பகுதிகளின் குழுமம் இவற்றைச் சேர்த்துக் கிடைப்பதுதான் அடிகளின் மொத்தம் என்று கூற முடியாது. ஆக்க ஒட்டுகள் சேரும் ஆக்கப் பகுப்பாயத்தக்க வடிவை அடி எனலாம்.

2.6. திரிபும் ஆக்கமும்

முன்னர் சொல்லன், வேர், பகுதி இவற்றை வரையறை விளக்கம் செய்யும்போது திரிபு என்பதனை வரையறை விளக்கம் செய்து விட்டதாக எடுத்துக்கொண்டு விளக்கம் தரப்பட்டது. இது கோட்பாடு அடிப்படையில் தவறானதாகும். ''திரிபானது பகுதி அல்லது பகுதிகளிலிருந்து தொடரியல் அடிப்படையில் நிறுவப்படும் சூழ்நிலைகளில் வரும் ஒரு சொல்லனின் எல்லாச் சொல் வடிவுகளையும் உருவாக்கும்,'' என்று லையான் (Lyons, 1977: 521-2) வரையறை விளக்கம் தருகிறார். இந்த வரையறை விளக்கம் திரிபின் செயற்பாங்கைச் சரியாக நிர்ணயித்தாலும் இவ்விளக்கம் சொல்லன் என்பது என்னஎன்பதைப் பொறுத்து அமையும். திரிபையும் சொல்லனையும் ஒன்றையொன்று தொடர்புபடுத்தி நேரிடையல்லாத சுற்று வரையறை விளக்கம் தரும் நிலை ஏற்படுகிறது. திரிபு உருபனியலின் எல்லா குணங்களையும் எடுத்துக்கொண்டால் இம்மாதிரியான நேரிடையல்லாத சுற்று வரையறை விளக்கத்தைத் தடுக்கலாம்.

ஒரு நெகிழ்வுறா ஒழுங்கு முறையில் (Closed system) திரிபு ஒரு சில மாறிகளைத்தான் உட்படுத்தும் என்பது முதல் விவரக்கூறாகும். எடுத்துக்காட்டாகத் தமிழில் எண் என்ற இலக்கண வகைபாட்டிற்கு ஒருமை, பன்மை என்ற இரு மதிப்புகள் தான் உள்ளன; இருக்கிற ஒழுங்கு முறையைப் பெரிதும் மாற்றாமல் கூடுதலான மாறிகளை இப்பட்டியலில் சேர்க்க இயலாது. இதைத்தான் நெகிழ்வுறா ஒழுங்குமுறை என்பர். புதியவைகளைச் சேர்க்க இயலும் பெரிய வகுப்புகளின் அங்கங்களாய் வரும் ஒட்டுகள் பொதுவான விதிப்படி திரிபு ஒட்டுகள் அல்ல; மாறாகப் புதிய அங்கங்களைச் சேர்க்க இயலாத சிறிய வகுப்புகளின் அங்கங்களாய் வரும் ஒட்டுகள் திரிபு ஒட்டுகளாகும்.

திரிபைப் பற்றிய அடுத்தபடியான விவரக்கூறு இனமாற்றும் தன்மை (commutability) என்பதன் அடிப்படையில் அமையும் விவாதமாகும். இனமாற்றும் தன்மை என்பது ஒரு உறுப்பமைவு (syntagmatic) சட்டகத்தில் பதிலீடு செய்யும் தன்மையாகும். ஒரு குழுமம் இணைச்சொல் வடிவுகளை அதன் தொடரியல் சூழலிலிருந்து தனியே எடுத்துக்கொண்டு, தந்துள்ள ஒரு ஒட்டை அது வருமிடங்களிலெல்லாம் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒட்டுகளால் இடமாற்றம் செய்ய இயலுமானால், அச்சொல் வடிவுக்குள் அது கூடுதலான இனமாற்றும் தன்மையுடையது எனலாம். எடுத்துக்காட்டாக *கால்கள், நாய்கள், காய்கள், கைகள்* என்ற சொல் வடிவுகளின் குழுவில் *கள்* என்பதை -ஓடு, -ஆல் என்ற ஒட்டுகளோடு இனமாற்றம் செய்யலாம். ஆனால் -மை, -வி என்பன சில அடிகளோடு சேரும் என்றாலும் (எ.கா. ஆண்மை, பெண்மை, மனைவி, துணைவி) எல்லாவிடங்களிலும் -கள் என்பதுடன் இனமாற்றம் செய்யாது. மாறாகச் சொல் வடிவுகளில் கூடுதல் இனமாற்றத்தன்மை உள்ள ஒட்டுகளுக்கு தந்துள்ள வாக்கியத்தில் இனமாற்றத்தன்மை குறைவாக இருக்கும். எடுத்துக்காட்டாக *நாய்கள் கள்ளனைப் பார்த்துக் குரைத்தன* என்ற வாக்கியத்தில் *கள்* என்பதை ஐ, ஆல், ஓடு

என்பவற்றுடன் இன மாற்றம் செய்ய இயலாது. எனவே திரிபு சொல் வடிவுக்குள் கூடுதல் இனமாற்றம் செய்யும் தன்மையுள்ளது என்றும், வாக்கியத்திற்குள் குறைந்த இனமாற்றம் செய்யும் தன்மையுடையது என்றும் கூறலாம்.

இனமாற்றம் என்றஅளவீடுதிரிபுறு தன்மையின் படிநிலை வரிசையைக் காட்டுகின்றதேயன்றி தந்துள்ள ஒட்டுதிரிபு ஒட்டா, ஆக்க ஒட்டா என்ற கேள்விக்கான 'உண்டு' அல்லது 'இல்லை' என்ற விடையைத் தருவதில்லை. ஆக்கஒட்டான -தல் எந்த வினைப்பகுதியுடனும் வந்து (எ.கா.ஓட்டுதல், நடத்தல்) பெயராக்கம் செய்யவல்லன. இது சொல் வடிவுக்குள் கூடுதல் இனமாற்றம் காட்டுகின்றது. மாறாகத் திரிபாகக் கருதப்படும் ஒட்டுகள் சில வாக்கியத்திற்குள் கூடுதல் இனமாற்றம் காட்டுகின்றன.

திரிபு இலக்கணம் உருபன்களைப் பற்றியே ஆய்கின்றது என்று கூறப்படுவதுண்டு. இது அவ்வளவு சரியல்ல. இயைபு (agreement) விதிகளால் குறிப்பிடப்படுகின்ற உருபுகளைத் திரிபு ஒட்டுகள் என்று கூறலாம். இயைபை வருமுறை இயைபு (concordance), வரையறை இயைபு (government) என்று பிரிக்கலாம். இரு சொல்லன்கள் அவைகளுக்குள்ளான ஒரு தொடரியல் உறவைக் குறிக்க ஒரே இலக்கண வகைபாட்டிற்காகக் குறிப்பிடுவது வருமுறை இயைபு எனப்படும். தமிழில் ஒரு வாக்கியத்தில் வரும் எழுவாயின் இடம், எண், பால் இவற்றிற்கு இயைந்தவாறு பயனிலையில் வரும் வினைமுற்றுகளின் முற்று விகுதியின் இடம், எண், பால் அமைவதை இதற்கு எடுத்துக்காட்டாக் கூறலாம்.

எ.கா.

சிறுவன் வந்தான்.

சிறுமி வந்தாள்.

சிறுவர்கள் வந்தார்கள்.

ஒரு வாக்கியத்திலுள்ள ஓரலகு வேறொரு அலகுடன் எந்த உருபன் சேர்க்கப்பட வேண்டும் என்று

தீர்மானிக்குமானால் அதற்கு வரையறை இயைபு என்று பெயர். தமிழில் விட, காட்டிலும் என்ற பின்னுருபுகள் இரண்டாம் வேற்றுமை உருபனான -ஐ முன் வந்து ஒட்டி மாறுபடுவதை உணர்த்தி நிற்பதை வரையறை இயைபுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

எ.கா.

ராமனை விட கோபாலன் நல்லவன்.

சீதையைக் காட்டிலும் ரமா நல்லவள்.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் விட, காட்டிலும் என்ற பின்னுருபுகள் முன்வரும் பெயர்ச்சொற்களின் வேற்றுமை ஒட்டான -ஐ யைத் திட்டவட்டப்படுத்துகின்றன. இயைபு அடிப்படையிலான வரையறையின் இடர்பாடு என்னவென்றால் எல்லா உருபன்களும் இயைபைக் குறிப்பிடுவனவல்ல. எடுத்துக்காட்டாகக் காலத்தைக் காட்டும் ஒட்டுகள் திரிபு ஒட்டுகளாக இருந்தபோதிலும் அவை இயைபைக் குறிப்பிடுவனவல்ல. (கால வினையடைகளுக்கு இயைபாய்க் கால ஒட்டுகள் வருவதை இயைபு என்று குறிப்பிடத் தயக்கமாயுள்ளது.) இதேபோல் பசுவின்பால் என்பதில் வரும் இன் இயைபைக் குறிப்பிடவில்லை. இருப்பினும் அது ஒரு தொடரியல் செயற்பாட்டைக் குறித்து நிற்கின்றது. இந்த இயைபு வரைமுறை பொதுவாகத் திரிபு என்று கருதப்படும் எல்லா உருபன்களையும் உட்படுத்தத் தவறினாலும் குறைந்தது பொதுவாக ஆக்கம் எனக் கருதப்படும் உருபன்களைப் புறந்தள்ளி வைக்கின்றது.

ஆக்கம் மற்றும் திரிபு அலகுகள் ஒன்று சேர்ந்து காணப்படும்போது ஆக்க ஒட்டுகள் வேரோடு கூடுதல் நெருங்கி இணைந்திருக்கும் தன்மை எடுத்துக் கூறப்படுவ துண்டு. எடுத்துக்காட்டாக, படுக்கையை என்பதில் படு என்ற வினைவேருடன் நெருங்கி இணைந்து நிற்கும் -க்கை என்ற ஒட்டு ஆக்க ஒட்டாகும்; அதன் பின்வரும் இரண்டாம் வேற்றுமை ஒட்டு -ஐ திரிபு ஒட்டாகும். எல்லா மொழிகளுக்கும் இது பொருந்தாது.

ஆக்கத்தை ஓரளவுக்குத் திரிபின் மறுமலையாய்க் கொள்ளலாம், புதிய சொல்லன்களை உருவாக்கும் உருபனியல் செயற்பாங்கை ஆக்கம் என்பர். ஒரு திறந்த வகுப்பில் இது பல மாறிகளை உட்படுத்தியிருக்கவோ உட்படுத்தவோ செய்யலாம். ஆக்கம் சொல் வடிவிற்குள் குறைந்த இனமாற்றத்தையும் ஒரு சில ஆக்க வகைகள் வாக்கியத்திற்குள் கூடுதல் இனமாற்றத்தையும் கொண்டிருக்கும். தமிழில் வி/இ என்ற பெண்பால் ஒட்டு ஆக்க ஒட்டாகும் (எ.கா. மனைவி, துணைவி).

ஆக்கத்தை அறிய ஒரு இலகுவான பரிசோதனையை எடுத்துக் கூறுவர். ஒட்டுக்களை உட்படுத்திய ஒரு வடிவு அது வாக்கியங்களில் வரும் சில இடங்களில் ஒரு வேர் வடிவால் இடம்பெயர்க்கப்படுமானால் அதைத் திரிபாகக் கருதாமல் ஆக்கமாகக் கருதலாம். எடுத்துக்காட்டாகப் பின்வரும் வாக்கியத்தில் இயக்குநர் என்பதை ஆள் என்ற சொல்லால் இடம் பெயர்க்கலாம்.

அந்த இயக்குநர் நல்லவர்.

அந்த ஆள் நல்லவர்.

எனவே, இயக்குநர் என்பது -நர் ஒட்டு உட்படுத்திய ஒரு ஆக்கமாகும். ஆனால்,

அவன் அவளை அடித்தான்.

என்ற வாக்கியத்தில் வரும் அடித்தான் என்ற சொல்லை ஒரு வேர்ச்சொல் வடிவால் இடம்பெயர்க்க இயலாது. எனவே, த், ஆன் என்ற ஒட்டுகளை உட்படுத்திய அடித்தான் என்பது ஒரு திரிபாகும். இந்த வரையறையும் திருப்திகரமாக எல்லா மொழிகளுக்கும் பொருந்துவதில்லை; எல்லா இடங்களிலும் பொருந்தி வருவதில்லை. எடுத்துக்காட்டாக,

அவன் குரங்கைப் பார்த்தான்.

என்ற வாக்கியத்தில் வரும் குரங்கை என்பதைக் குரங்கு என்ற வேர்ச்சொல் வடிவால் இடம் பெயர்க்கலாம்.

அவன் குரங்கு பார்த்தான்.

இந்த இடத்தில் இன்னும் இரண்டு வரைமுறைகளைக் குறிப்பிடலாம். இவ்வரன்முறைகளும் திரிபு எது ஆக்கம் எது என்பதைத் தீர்மானிக்க முழுவதுமாக உதவாது. முதலாவது வரைமுறை இனமாற்றம் என்பதன் பயனாய் வருவதாகும். இதன்படி ஒரு ஒழுங்குமுறையில், ஆக்கத்தில் எதிர்பார்க்க இயலாத நிறைய இடைவெளி இருக்கும்; ஆனால் திரிபில் குறைந்த இடைவெளிகள் தான் இருக்கும். ஆக்கச் செயற்பாட்டின் குறைந்த விளைவாக்கத் தன்மையாக இதைச் சில சமயங்களில் குறிப்பிடுவர். எடுத்துக்காட்டாக படி, துடி, இரு, தூங்கு, வாங்கு, பாடு என்ற வினைகளை எடுத்துக்கொண்டால் அவற்றிலிருந்து படிப்பு, துடிப்பு, இருப்பு என்ற பெயர்களைத்தான் ஆக்கங்களாகப் பெறலாம். *தூங்குப்பு, *வாங்குப்பு, *பாடுப்பு என்ற வினைப் பெயராக்கங்களைப் பெற இயலாது; இதற்கு மாறாக படிக்க, துடிக்க, இருக்க, தூங்க, வாங்க, பாட என்ற வினை எச்சத்திரிபு வடிவங்களை இடைவெளியின்றிப் பெறலாம்.

('*' குறியீடு வர இயலா இலக்கணச் சொல்லையோ அல்லது வாக்கியத்தையோ குறிக்கும்)

மேற்கண்ட கருத்திற்கு எதிரிடையாக ஒரு ஒழுங்கு முறையில் திரிபு வடிவங்கள் இடைவெளி விட்டும் வரலாம். எடுத்துக்காட்டாக மாடு என்ற வினை மாட்டேன், மாட்டாய், மாட்டார் என எதிர் மறைக்குத் திரிபுற்ற வடிவங்களில் வரும். *மாடினேன், *மாடுகிறேன் *மாடுவேன் எனக் காலத்திரிபு ஒட்டுகள் பெற்ற வடிவங்களில் வரா. இதற்கு மாறாக -கை என்ற பெயராக்க ஒட்டு எல்லா வினையடிகளுடனும் சேர்ந்து பெயராக்கம் செய்யும். (எ.கா. படிக்கை, துடிக்கை, இருக்கை, தூங்குகை, பாடுகை)

இரண்டாவது வரைமுறை என்னவென்றால் திரிபு உருபனியலின் விளைவுகள் பொருண்மை அடிப்படையில் முறைப்படி அமைந்திருக்கும். ஆனால் ஆக்க உருபனியலின் விளைவுகள் அவ்வாறு பொருண்மை அடிப்படையில் முறைபட அமைந்திருப்பதில்லை. எடுத்துக்காட்டாக கண், பெண் என்ற பகுதிகளிலிருந்து பெறப்பட்ட பன்மைத் திரிபு

வடிவங்களான கண்கள், பெண்கள் என்பனவற்றிற்குள்ள பொருண்மை உறவு முரண்படாதிருக்கும். ஆனால், படு, வா என்ற வினைகளிலிருந்து பெயராக்கம் பெற்ற வடிவங்களான படுக்கை, வருகை என்பன பொருண்மை உறவால் முரண்பட்டிருக்கும். இருப்பினும் ஆக்கம் எனக் கருதப்படும் பல செயற்பாங்குகள் பொருண்மை ஒழுங்கைக் காட்டுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக -தல் என்ற பெயராக்க ஒட்டு இடைவெளியின்றி எல்லா வினைகளிலிருந்தும் வினைப்பெயர்களை ஆக்கும். மட்டுமன்றி அவ்வாறு ஆக்கப்பெற்ற பெயர்கள் ஒரு பொருண்மை ஒருங்கையும் காட்டுகின்றன(எ.கா. படித்தல்,வருதல், நினைத்தல்).

2.7. கூட்டு

பகுதிகளாகப் பயன்படுத்தத்தக்கதான இரண்டு அலகுகள் சேர்ந்து மற்றொரு பகுதியை ஆக்கினால் அந்த வடிவைக் கூட்டு எனலாம் (எ.கா.மரப்பெட்டி, கூரை வீடு). இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பகுதிகள் உள்ளடங்கிய ஒரு சொல்லனைக் கூட்டுச்சொல்லன் அல்லது சுருக்கமாகக் கூட்டு எனலாம். ஒரு பகுதியில் ஒரு வேர் இருக்க வேண்டும்; எனவே ஒரு கூட்டில் குறைந்தது இரண்டு வேர்கள் இருந்தாக வேண்டும். கூட்டில் வரும் இரண்டு பகுதிகளில் ஒன்று கூட்டாக இருந்தால் இரண்டிற்கு மேற்பட்ட வேர்கள் ஒரு கூட்டில் வரலாம் (எ.கா. மாடி வீட்டு மாப்பிள்ளை). இவ்வாறு வரும்போது செயற்பாட்டின் அடிதான் கூட்டாகும். எனவே, ஆக்கச் செயற்பாட்டிற்குத் தொடர்ந்து ஆளாகாத இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தகுதியுள்ள பகுதிகள் உள்ளடங்கிய சொல்லனைக் கூட்டு எனலாம். இரண்டிற்கு மேற்பட்ட வேர்களடங்கிய வடிவத்தில் ஆக்கத்தைப் பிரயோகிக்கலாம்; என்றாலும் கூட்டைப் போல இரண்டு வேர்கள் அடங்கியிருக்க வேண்டிய கட்டாயம் ஆக்கச் செயற்பாட்டிற்குத் தேவையில்லை. திரிபால் பெறப்பட்ட, மற்றும் வேர்களால் மட்டுமான சொற்களுக்கு எதிரிடையான ஆக்கத்தாலும் கூட்டாலும் பெறப்பட்ட வடிவுகளைக் குறிப்பிட கலவை வடிவு (complex form)

என்பதைப் பயன்படுத்தலாம். கலவை வடிவை ஆக்குவது சொல்லாக்கம் என்று இதன்படி வரையறை செய்யலாம். ஆக்கத்தால் பெறப்படுவது ஆக்கம். முதலில் சொல்லாக்கத்தை ஆக்கம், கூட்டு என்று இரண்டாகப் பிரிக்கலாம். (இந்த இரண்டு தலைப்பின் கீழ் எல்லா சொல்லாக்க வகைகளையும் அடக்க முடியாது என்பதை இங்கு மனதில் கொள்ள வேண்டும்.) சொல்லாக்கம் கலவை வடிவுகளையும் ஆக்கம் ஆக்கங்களையும் கூட்டு கூட்டுகளையும் உற்பத்தி செய்யும். கலவையல்லாத சொற்களைத் தனிநிலைச் சொற்கள்(simiple form) எனலாம்.

2.8. உள்வட்ட, வெளிவட்ட, நேரியைபு, உம்மைத்தொகைக் கூட்டுகள்

கூட்டுகளைப் பொருண்மை அடிப்படையில் நான்காகப் பகுக்கலாம். பின்வரும் எடுத்துக்காட்டுகளை எடுத்துக்கொள்வோம்: தேன்கூடு, மரமண்டை, வக்கீல் மாமா, செடிகொடிகள். இவற்றையெல்லாம் இரண்டிரண்டு அலகுகளாகப் பிரிக்கலாம். இரண்டாம் அலகு ஒரு இலக்கணத் தலையாகவும்(grammatical head) முதல் அலகு அதன் அடையாகவும் வரும். முதல் எடுத்துக்காட்டில், கூட்டு இலக்கணத்தலையின் பொருளடங்குச் சொல்லாக (hyponym) வருகிறது; அதாவது தேன்கூடு என்பது ஒருவகைக்கூடு என்ற பொருளில் கூடு என்பதன் பொருளடங்குச் சொல்லாக வருகிறது. இவ்வகையான கூட்டை உள்வட்டக்கூட்டு என்கிறோம். இரண்டாவது எடுத்துக்காட்டில் கூட்டு இலக்கணத்தலையின் பொருளடங்குச் சொல்லாக வரவில்லை; அதாவது 'முட்டாள்' எனப் பொருள்படும் மரமண்டை ஒருவகை மண்டை எனப் பொருள்படாது. இவ்வகைக் கூட்டை வெளிவட்டக்கூட்டு என்கிறோம். மரபிலக்கணங்கள் இவற்றை அன்மொழித்தொகை எனக் குறிப்பிடும். இக்கூட்டு கூறப்படாத ஒரு பொருண்மைத் தலையின்(Semantic head) பொருளடங்குச் சொல்லாக வரும். இவ்வகையான கூட்டில் பொருண்மைத் தலைக் கூறப்படாது வருவதால், இவ்வகைக் கூட்டுகள் உருவகங்களாக வரும். மூன்றாவது எடுத்துக்காட்டில் வக்கீல் மாமா என்பது ஒரு வகை

மாமா எனவும் ஒரு வகை வக்கீல் எனவும் பொருள்பட்டு மாமா, வக்கீல் என்ற இரண்டிற்கும் பொருளடங்குச் சொல்லாக வரும். இவ்வகையான கூட்டுகளை நேரியைபுக் கூட்டுகள் எனலாம். நான்காவது எடுத்துக்காட்டான செடிகொடிகள் என்ற கூட்டில் வரும் சொற்களில் எச்சொல் இலக்கணத்தலை என்று கூறுவது கடினம்; இக்கூட்டு இதில் வரும் எந்தச் சொல்லுக்கும் பொருளடங்கு சொல்லாக வராது; ஆனால் ஒவ்வொரு சொல்லும் தனித்தனியாக உள்பொருள்களைப் (entities) பெயரிடும்; அப்பொருள்கள் சேர்ந்து கூட்டு குறிப்பிடும் பொருளைத் தரும். மரபிலக்கணங்கள் இவற்றை உம்மைத்தொகை எனக் குறிப்பிடும்.

பொருள் அடிப்படையிலான கூட்டுகளின் பாகுபாடுகள் கூட்டுகள் மற்றும் அவற்றை ஆக்கும் சொற்கள் இவற்றின் வடிவ வகுப்பு (form class) அடிப்படையிலான பாகுபாடுகளுடன் ஒருங்கிணைந்து பலவகைப்பட்ட பாகுபாடுகளைத் தரும்.

2.9. வகுப்பு காத்தல் மற்றும் வகுப்பு மாற்றல்

வகுப்பு மாற்றா (class maintaining) ஆக்கத்திற்கும் வகுப்பு மாற்றும் (class changing) ஆக்கத்திற்கும் உள்ள வேற்றுமை குறிப்பிடப்படவேண்டும். இவ்வேற்றுமை பெயர், வினை, பெயரடை போன்ற வடிவ வகுப்புகளைப் பொறுத்து அமைகின்றது. வகுப்பு மாற்றா ஆக்கம் அடியின் வடிவ வகுப்பைச் சார்ந்த அதே வடிவ வகுப்புச் சொல்லனை உருவாக்கும். மாறாக வகுப்பு மாற்றும் ஆக்கம் அடியின் வடிவ வகுப்பைச் சாராத வேறு வடிவ வகுப்புச் சொல்லனை உருவாக்கும். எடுத்துக்காட்டாக அ என்ற ஒட்டு நீதி என்ற பெயருடன் சேர்ந்து அநீதி என்ற பெயரை உருவாக்குவது வகுப்பு மாற்றா ஆக்கமாகும். -ப்பு என்ற ஒட்டு படி என்ற வினையுடன் சேர்ந்து படிப்பு என்ற பெயரை உருவாக்குவது வகுப்பு மாற்றும் ஆக்கமாகும்.

வகுப்பு மாற்றா ஆக்கம் எனக் கூறுவது தவறான நெறியாகும் என்பர். நீதி -அநீதி என்ற இரு சொல்லன்களும்

ஒரே வடிவ வகுப்பைச் சார்ந்தவை என்றாலும் புதிதாய் உருவான சொல்லனான அநீதி அதன் அடியான நீதி என்பதிலிருந்து வேறுபட்டுத் தான் நிற்கின்றது; நீதி என்பது அநீதி என ஒட்டாக்கமுற்றதுபோல் அநீதி என்பது *அஅநீதி என ஒட்டாக்கமுறுவதில்லை.

2.10. மாற்றம்

வடிவமாற்றமில்லாது ஒரு சொல் வடிவம் முந்தைய வடிவ வகுப்பிலிருந்து மற்றொரு வடிவ வகுப்பிற்கு மாறுவதை மாற்றம் (conversion) என்கிறோம். எடுத்துக் காட்டாக பிடி என்ற வினைச்சொல் பிடி என்ற பெயர்ச்சொல்லாக வகுப்பு மாற்றம் அடைவதை மாற்றம் எனலாம். சொல்லாக்கம் என்பதன் கீழ் இதன்நிலை தெளிவாக இல்லை. சிலர் இதை ஆக்கம் (derivation) என்பதன் கிளையாகவும், ஒரு சிலர் ஆக்கம், கூட்டு என்பதன் நிலையில் தனியாக ஒருவகைச் சொல்லாக்கமாகவும் கொள்வர். இந்தவேறுபாடு சொல்லாக்கக் கோட்பாட்டில் உண்மையாக எந்தத் தாக்கத்தை உண்டாக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. மாற்றம் என்பதைப் பூஜிய ஆக்கம் எனவும் அழைப்பர். பலர் இரண்டையும் ஒரு பொருள்பன் மொழிகளாகவே பயன்படுத்துகின்றனர்.

2.11. கூருக்கம்

சொற்களின் அக அமைப்பைப் பற்றிக் கூறுவது உருபனியலாகும். உருபனியல் ஆய்ஞர் சொல் வடிவுகளை அவற்றின் ஆக்கக் கூறுகளாகப் பிரித்து அவை ஒவ்வொன்றின் வருகைமுறையைக் கூற முயல்வர்.

உருபனியலைச் சொல் திரிபு உருபனியல், சொல்லாக்கம் (சொல் வழி உருபனியல்) என்று இரு கிளையியல்களாகப் பகுக்கலாம். சொல் திரிபு உருபனியல் சொல்லன்களின் (lexemes) பல வடிவங்களைப் பற்றிக் கூறுகின்றது. ஆனால் சொல்லாக்கம் தந்துள்ள அடியிலிருந்து புதிய சொற்களை ஆக்குவது பற்றிக் கூறுகின்றது. சொல்லாக்கத்தை ஆக்கப்பாடு (derivation) என்றும் கூட்டாக்கம் (compounding) என்றும் மேலும்

வகைப்படுத்தலாம். ஆக்கப்பாடு ஒட்டாக்கத்தால் புதிய சொல்லன்களை உருவாக்குவதைப் பற்றிக் கூறுகிறது. கூட்டாக்கம் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த பகுதிகள் சேர்ந்து புதிய சொல்லன்களை உருவாக்குவது பற்றிக் கூறுகிறது. ஆக்கப்பாட்டை வகுப்புமாற்றா ஆக்கப்பாடு, வகுப்பு மாற்றும் ஆக்கப்பாடு என இரு வகுப்புகளாகப் பிரிக்கலாம். அடியிலிருந்து அதே வகுப்பைச் சார்ந்த சொல்லன்களை ஆக்குவது வகுப்புமாற்றா ஆக்கப்பாடாகும்; அடியிலிருந்து வேறுபட்ட சொல் வகுப்பைச் சார்ந்த சொல்லன்களை ஆக்குவது வகுப்பு மாற்றும் ஆக்கப்பாடாகும். கூட்டாக்கத்தையும் ஆக்கப்பட்ட கூட்டுகளின்வடிவ வகுப்பு அடிப்படையில் கூட்டுப் பெயர், கூட்டுவினை எனப் பிரிக்கலாம். ஆக்கப்பாடுகளைப் பொருண்மையியல் அடிப்படையில் உள்வட்டக்கூட்டு, வெளி வட்டக்கூட்டு, நேரியைபு கூட்டு, உம்மைத் தொகைக்கூட்டு என்று பிரிக்கலாம். கீழே தந்துள்ள படம் உருபனியலின்அடிப்படையான பாகுபாடுகளைக் காட்டும்.



2.12. எல்லைக்கோடுகளின் பற்றாக்குறை

உருபனியலின் பல உட்பாகுபாடுகள் எல்லாம் வெவ்வேறானது என்று இதுவரை அனுமானிக்கப்பட்டது.

எடுத்துக்காட்டாக கூட்டாக்கம் மற்றும் ஆக்கம் அல்லது ஆக்கம் மற்றும் திரிபு இவைகளை எப்பொழுதும் தெளிவாக வேறுபடுத்தமுடியும் என்று அனுமானிக்கப்பட்டது. ஆனால் இது முழு உண்மையல்ல. உருபனியல் தெளிவான திரிபு நேர்ச்சிகளிலிருந்து தெளிவான ஆக்க நேர்ச்சிகள் வரையிலானவற்றை ஒரு கிளைன் (Cline) போலவும், ஆக்கத்தை அவ்வளவு கோலின் சரியாக விளக்கப்படாத மத்திய பகுதி போலவும் காட்டுகிறது; உருபனியலின் எல்லாப் பிரிவுகளும் சொல்லின் அமைப்பைப் பற்றிக் கூறுகின்றன என்பதைப் பொதுவாகக் கொண்டுள்ளன; திரிபு, ஆக்கம் இவையிரண்டும் ஒட்டாக்கத்தைப் பற்றி கூறுகின்றன; ஆக்கம், கூட்டாக்கம் இவையிரண்டும் புதிய சொல்லன் உருவாக்கத்தைப் பற்றிக் கூறுகின்றன. உருபனியலின் பல உட்பிரிவுகள் அவைகளுக்குள் சரியான எல்லை வரையறையின்றி இருப்பது கீழே விரிவாகத் தரப்பட்டுள்ளது.

2.12.1. கூட்டாக்கமும் ஆக்கமும்

எல்லைக்கோடு தெளிவாக இல்லாமையைக் காட்டும் சரியான எடுத்துக்காட்டு கூட்டாக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் இடையிலானதாகும்; ஆக்கம் என்பது சொல்லனிலிருந்து பின்னொட்டிற்கோ பின்னொட்டிலிருந்து சொல்லனுக்கோ செல்லும் வரலாற்றுச் செயற்பாங்கான வழியாகும். இரண்டாவதான நேர்ச்சிகள் முதல் நேர்ச்சிகளைவிடக் குறைவானதாகும். ஆங்கிலத்தில் -ism மற்றும் -ology என்ற ஒட்டுகள் -isms மற்றும் -ologies என்று பயன்படுத்தப்படுவதை இரண்டாவது வகையான மாற்றத்திற்கு எடுத்துக்காட்டாய் கூறலாம். இத்தனிமங்கள் வரும் சொல்லன்கள் விரைவில் ஆக்கமாகக் கருதப்படாமல் கூட்டாக்கமாகக் கருதப்படும் நிலை வரப்போவதை எண்ணிப்பார்க்கலாம். மிகத் தெளிவான எடுத்துக்காட்டுகளாக Phonemic மற்றும் Phonetic என்பதிலிருந்து பெறப்பட்ட emic மற்றும் etic நிலையிலான பகுப்பாய்வு என்று வேறுபடுத்தப்படும் மொழியியல் கலைச்சொற்கள் அமையும்.

ஆங்கிலத்தில் ஒரு கூட்டின் இரண்டாவது தனிமம் பின்னொட்டிலிருந்து சொல்லனாக வரலாற்று வழியில் மாறுவது மிகக்கூடுதலாக நிகழ்வதாகும். எடுத்துக்காட்டாக -dom (எ.கா.dukedom) என்ற ஒட்டு பழைய ஆங்கிலத்தில் doom 'judgement' என்ற சொல்லனிலிருந்து வந்ததாகும். சொல்லனிலிருந்து பின்னொட்டாக மாற்றம் அடைந்து வருகிற செயற்பாங்கிற்கு எடுத்துக்காட்டாக postman என்பதிலுள்ள man என்பதைக் கூறலாம். postman என்பதிலுள்ள man உயிரின் மாத்திரை குறைவால் / mən / என்று உச்சரிக்கப்பெறுகின்றது. இது முழு உயிர் மாத்திரையுள்ள MAN என்ற சொல்லனிலிருந்து வேறுபடுகிறது. போகப்போகக் கூட்டாக்கத்தில் வரும் /mən/ ஒரு ஒட்டாக மாற கூடுதலான சந்தர்ப்பம் உள்ளது. தமிழில் முன்னேற்றம், பின்னேற்றம் என்பதில் வரும் முன், பின் என்பன சொல்லன்களாகக் கருதப்பட்டாலும் இவற்றைப் பயன்படுத்திவரும் புதிய சொல்லாக்கங்களின் நேர்ச்சிகளால் முன், பின் என்பனவற்றையும் முன்னொட்டுகளாய்க் கருத வழியுண்டு.

வேறு வகையான சிக்கல் ஆங்கிலத்தில் கட்டு ருபன்களாக உள்ள cran மற்றும் bil வரும் cranberry மற்றும் bilberry என்பவைகளால் எழுப்பப்படுகிறது. goldenberry, blueberry, loganberry என்ற சொற்களில் வரும் வேர்களுடன் அவற்றை ஒப்பிட இயலும். ஆனால் பிற காரணிகள் அவற்றை வேராகக் கொள்வதை ஐயுறச் செய்கின்றன. அவைகள் தனி நிலையிலான எந்தச் சொல்லனின் வடிவாகவும் வருவதில்லை; அவை ஆக்கம் அல்லது திரிபு ஒட்டுக்களை ஏற்பதில்லை. அவை வேர்கள் என்றால் cranberry ஒரு கூட்டாகும்; இல்லாவிடில் அவை ஆக்கப்பாடுகளாகும். cran-, bil- என்பவைகளை முன்னொட்டுகளாக எடுத்துக்கொள்ள இயலும். ஆனால் அவைச் சாதாரண முன்னொட்டுக்களை விட மிகுந்த வரைமுறைக்கு உட்பட்டவை. இச்சொற்கள் ஆக்கப்பாடு என்ற வகைபாட்டிலும் இலகுவில் பொருந்தாது; கூட்டு என்ற

வகைபாட்டிலும் அடங்காது. அவை இரண்டிற்கும் இடைப்பட்டவைகளாகத் தெரிகிறது.

இறுதியாகக் கவனிக்க வேண்டிய சிக்கல் வரையறை விளக்கமாகும். பெரும்பாலான ஆய்வாளர்கள் கூட்டு என்பதை இரண்டோ அதற்கு மேலோ வரும் சொல்லன்களால் ஆன ஒரு சொல்லனாகும் என்று வரையறை விளக்கம் தருகின்றனர். எடுத்துக்காட்டாக, வேலைக்காரன், வண்டிக்காரன், கொலைகாரன் என்பனவற்றில் வரும் வேலை, வண்டி, கொலை என்பன தனியாக வருவன; ஆனால் காரன் தனியாக வருவதில்லை; ஆனால் தனியாக வரும் சொல்லன்களுடன் இனமாற்றம் செய்யவல்லன. வேலைக்காரன், வண்டிக்காரன் என்பன கூட்டாக வரும் பிற வடிவுகளுக்கு இணையான வடிவுகளாக வந்தாலும் அவைகள் மொழி பேசுபவரால் கூட்டாகத்தான் கருதப்படுகின்றன.

இருப்பினும் கூட்டு என்பதை இரண்டு தகுதியுள்ள பகுதிகள் (இரண்டு சொல்லன்கள் அல்ல) உள்ள ஒரு வடிவு என்று வரையறை விளக்கம் தரலாம். கூட்டு என்பதில் மேற்சொன்ன வரையறை விளக்கம் மற்றும் அதை ஒட்டிய சிக்கலின் தீர்வும் இடுகுறித்தன்மையானதாகும். இருப்பினும் கூட்டு மற்றும் ஆக்கப்பாடு என்பதன் எல்லைகளை இம்மாதிரியான கலைச்சொல் அடிப்படையிலான சின்ன மாற்றத்தால் சரிப்படுத்தலாம் என்பது இரண்டிற்குமுள்ள எல்லைக்கோடுகள் எவ்வளவு நிலையற்றது என்பதைக் காட்டுகிறது. Anglophobe என்ற சொல்லை எடுத்துக்கொண்டால் *ANGLO மற்றும் *PHOBE என்பவை சொல்லன்களல்ல. Anglo என்பது ஒரு பகுதியல்ல; ஏனென்றால் திரிபு ஒட்டுகளை அதனுடன் நேரடியாகச் சேர்க்க இயலாது. இருப்பினும் Anglo மற்றும் -Phobe என்பவைகளைக் கட்டுவேர்கள் (bound roots) என்று வாதிடலாம். மேற்கண்ட தற்போதைய வரையறை விளக்கத்தின்படி Anglophobe என்பது ஒரு கூட்டாகாது; ஆனால் கூட்டு என்பதை இரண்டு வேர்கள் அடங்கிய வடிவு என்று கொண்டால் Anglophobe என்பது ஒரு கூட்டாகும்.

2.12.2. ஆக்கமும் திரிபும்

சில தனிமங்கள், சொல்லன்கள் என்ற நிலையிலிருந்து ஒட்டுகள் என்ற நிலைக்குக் காலத்தால் மாறுவதை முன்னர் பார்த்தோம். இது போலவே வரலாற்று அடிப்படையில் தனிமங்கள் ஆக்கத்தனிமம் என்பதிலிருந்து திரிபுத்தனிமமாக மாறுவது சாத்தியமாகும். ஜெஸ்பர்சன் (1924:42) திரிபுக்கும் ஆக்கத்திற்கும் உள்ள வரையறை எல்லை சில நேர்ச்சிகளில் இடுகுறித்தன்மையானது என்று சுட்டிக்காட்டுகின்றார். அவர் பிரெஞ்சு மொழியில் ban:bonne என்பதில் n இரட்டித்து e சேர்க்கப்படும் ஆண்பாலிலிருந்து பெண்பாலுக்கான மாற்றத்தைத் திரிபு என்றும் ஆனால் paysan:paysanne என்பதில் ஆண்பாலிலிருந்து பெண்பாலுக்கான மாற்றத்தை ஆக்கம் என்றும் கருதப்படுவதைக் குறிப்பிடுகிறார். ஒரே மாதிரியான வடிவம் (formal) மற்றும் பொருண்மை அடிப்படையிலான மாற்றம் திரிபு என்றும் ஆக்கம் என்றும் வகுக்கப்படுவது முரணாகத் தெரிகிறது; முன்னர் சொன்ன காரணிகளைப் பயன்படுத்தினால் இம்மாதிரியான முடிவுக்குத்தான் வரவேண்டியது வரும்.

ஆக்கத்தைக் கண்டுகொள்வதற்கான சோதனை என்னவென்றால் ஒரு வாக்கியத்தில் ஆக்கத்தை ஒரு தனிநிலை வேரினால் இடம் பெயர்க்கலாம் என்பதாகும். It's getting colder என்ற வாக்கியத்தில் colder என்பதை cold என்பதால் இடம்பெயர்க்கலாம். ஆனால் Siberia is colder than Denmark என்ற வாக்கியத்தில் colder என்பதைத் தனிநிலை வேரால் இடம்பெயர்க்க முடியாது. இதிலிருந்து ஒரே மாதிரியான சோதனை முரண்பாடான முடிவுகளைத் தரும் அதாவது ஒரே சொல்லை சில வாக்கியங்களில் ஆக்கமாகவும் சில வாக்கியங்களில் திரிபாகவும் கொள்ள வேண்டியது வரும் என்று கொள்ளலாம். இந்தத் தீர்மானம் திருப்திகரமாய் இல்லாவிடினும் ஒப்பு அளபுவைத் (comparative degree) திரிபு உருபனியலுக்கோ ஆக்க உருபனியலுக்கோ மயக்கமில்லாமல் வகுத்தளிக்க இயலாது என்று எடுத்துக் காட்டவில்லை.

திரிபு ஒரு தனிநிலைச் சொல்லனின் புதிய வடிவை ஆக்கும் என்றும் ஆக்கம் புதிய சொல்லன்களை ஆக்கும் என்றும் முன்னர் கண்டோம். இது தமிழில் வினை எச்சம், பெயரெச்சம் என்ற வடிவுகளுக்கு இலக்கண வகைப்பாடு தருவதில் சிக்கலை உண்டாக்குகிறது. எடுத்துக்காட்டாக *செய்ய* என்ற வினை எச்சத்தையும் *செய்த* என்ற இறந்தகாலப் பெயரெச்சத்தையும் எடுத்துக்கொள்வோம். *செய்ய, செய்த* என்பன முறையே வினையடைகளாகவும் பெயரடை களாகவும் செயல்படுகின்றன. இவ்வடிவ மாற்றங்கள் எல்லா வினைகளுக்கும் பொதுவானதாகும்; இவைகள் பெரும் பான்மையான தமிழ் இலக்கணங்களில் திரிபு வடிவங்களாகத்தான் கொள்ளப்படுகின்றன. ஆனால் வினையிலிருந்து வினையடையாகவும் பெயரடையாகவும் மாறும் இம்மாற்று வடிவங்களை ஏன் ஆக்க வடிவுகளாகக் கொள்ளலாகாது என்ற வினா எழலாம். சீராகவும் விளைவாக்கம் உள்ளதாயுமிருப்பதால் இவற்றைத் திரிபு வடிவங்களாகக் கொள்வதே சரி என்ற விடையைப் பெறலாம். இச்சூழலில் ஏன் *-தல்/த்தல் (எ.கா. செய்தல், படித்தல்)* வினைப்பெயர் ஆக்கங்களைத் திரிபு வடிவங்களாகக் கொள்ளலாகாது என்ற கேள்வியும் எழலாம். இதற்கு இலக்கண வகைப்பாட்டு மாற்றம் காரணமாகக் காட்டப்படலாம். குறிப்பு வினை எச்சம் என்று மரபு வழி அழைக்கப்பெறும் பெரிய, நல்ல என்ற வடிவுகளைத் தற்காலத் தமிழிலக்கணத்தார் பெயரடைகள் என்ற வடிவ வகுப்பில் அடக்குகின்றனர். இரண்டு வடிவுகளையும் முறையே *பெரு/பேர்*, *நல்* என்ற வேர்ச்சொற்களிலிருந்து *-அ* என்ற ஒட்டைச் சேர்த்து ஆக்கமுற்றதாய் கொள்ளலாம். இவற்றை ஆக்கங்களாகக் கொள்ளும்போது ஏன் பெயரெச்சங்களைப் பெயரடை ஆக்கங்களாகக் கொள்ளக்கூடாது என்ற கேள்வி எழத்தான் செய்யும். இக்கேள்விகள் திரிபுகளுக்கும் ஆக்கங்களுக்கும் இடையேயுள்ள எல்லைக்கோட்டை மங்கச்செய்யும்.

3

சொல் நிலையாக்கம்

3.1. சொல்லின் வரலாற்றை மீட்டறிதல்

ஒரு சொல் கடன் வாங்கப்பெற்றிருந்தாலும் சரி புதிதாய் உருவாக்கப்பட்டிருந்தாலும் சரி முதன் முதலில் தோன்றும் போது அம்மொழியைப் பேசுபவர் அச்சொல்லின் புதுமையை அறிந்துள்ளதாகத் தோன்றுகிறது; அதாவது அவர்கள் மொழியின் விளைவாக்க அமைப்பு பயன்படுத்தியுள்ளமை பற்றி அறிவார்கள். பத்திரிக்கையாளர் மொழியில் இச்சொல் மேற்கோள் அடைப்புக்குறிகளுக்குள் தரப்பட்டிருக்கும், அல்லது 'என்று அறியப்படுகிற', 'என்று சொல்லப்படுகிற' போன்ற தொடர் அடைகளால் விவரிக்கப்பட்டிருக்கும். நாளிதழ்களும் கால இதழ்களும் ஏராளமாக வரத் தொடங்கியுள்ள இந்நூற்றாண்டில் புதிய சொற்கள் பல கையாளப்பட்டு வருகின்றன. இலக்கிய மொழியில் சிறப்பான பாதிப்பை ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்தப் படும் புதிய சொற்கள் மேற்கோள் அடைப்புக் குறிகளுக்குள் தரப்படுவதோ அடைகளால் விரிக்கப்படுவதோ இல்லை; இப்புதிய சொற்கள் தாங்களே பொருள்களைத் தர விடப்படும். புள்ளிவிவரப்படி இலக்கிய மொழி விதிவிலக்காகக் கருதப்படுமேயன்றி மொழியியல் நடத்தை விதியாகக் கருதப்படுவதில்லை.

ஒரு புதிய சொல் வழக்கில் பயன்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. புதிய சொல்லை முதலில் பயன்படுத்தியவருக்குச் சமூகத்தில் உள்ள அந்தஸ்து காரணமாய் அமையலாம் அல்லது அதைப் பயன்படுத்திய காலஇதழின் அந்தஸ்து மற்றும் பரவலான விற்பனை காரணமாய் அமையலாம். இருப்பினும் ஒரு புதிய சொல் ஏற்றுக்கொள்ளப்பட்டுஅடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகிறது அல்லது அவ்வாறு பயன்படுத்தப்பட்டு வரவில்லை என்பது அச்சொல்லைப் பற்றி அது வழங்கப்படும் சமூகத்தின் மனப்பான்மையைப் பொறுத்து அமைகிறது. இம்மனப் பான்மை பெரும்பாலும் ஒரு புதிய பொருளுக்கு அல்லது கருத்திற்குப் புதிய பெயர் தேவை என்பதாய் அமையும்.

சில வேளைகளில் புதிய சொல் தேவைப் படாதிருக்கலாம். இருப்பினும் தன்மானம் காரணமாய்ப் புதிய சொல் பயன்படுத்தப்படலாம். வேறு சந்தர்ப்பங்களில் ஒருவித பாதிப்பு ஏற்படுத்த அல்லது இடவிரையத்தைத் தவிர்க்க அல்லது பேசுபவர் சாதாரணமாய் பயன்படுத்தும் சொல்லை மறந்ததின் காரணமாகப் புதிய சொல் பயன் படுத்தப்படலாம். தேவைதான் இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணமாய் அமைகின்றது; ஏனென்றால் கையில் இருக்கிற சொற்கள் பேசுபவருக்குத் திருப்தி தராமல் இருந்திருக்கலாம். புதிய சொல் தெளிவாகத் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் கூட்டச் சமூகம் சுலபமாகப் புதிய சொல்லை ஏற்றுக் கொள்வதில்லை. சமூகத்தால் புதிய சொல் ஏற்றுக் கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில்கூட மக்கள் புதிய சொல்லைப் பற்றி அழகுணர்ச்சி, சொற்பிறப்பியல், இலக்கணம், பொருண்மையியல், கொச்சை இவற்றில் ஏதோ ஒன்றின் அடிப்படையில் குறை கூறிப் பத்திரிகை ஆசிரியருக்கு எழுதுகிறார்கள்.

ஒரு சொல் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அச்சொல் அந்த மொழியால் உட்கிரகிக்கப்பட்டு பிறசொற்களைப்போல் பயன்படுத்தப்படும். பேசுபவரும் கேட்பவரும் அச்சொல் ஏன் அவ்வடிவில் இருக்கிறது

என்பதை மறந்து அதுசொல்ல வந்த கருத்தைச் சரியாக உணர்த்தும் சின்னமாகக் கருதுகின்றனர். புதிதாய் மொழியைப் படிப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட கலவைச்சொல் வடிவு எதன் அடிப்படையில் அமைந்தது என்பதை அறியாமலேயே அதைத் திருப்திகரமாய்ப் பயன்படுத்துகின்றனர். இச் சந்தர்ப்பங்களில் கலவைச் சொற்களை உருபன்களாகப் பகுக்க இயலும் என்றாலும் அவற்றை ஒருருபன் சொற்களாகவே கருதுகின்றனர். எத்தனைப் பேருக்குத் தெரியும் பாறை + ஆம் + கல் என்பது தான் பாறாங்கல் என்று கூறப்படுகிறது என்று. இயக்குநர் என்பதை இயக்கு + நர் என்று பலர் பிரித்துப் பார்ப்பதில்லை. சில சமயங்களில், உருபன்களாகப் பிரிக்க முடியாத சொற்களைப் பிரித்து அவைகளுக்குக் கற்பிதச் சொற்பிறப்பியல் (Folk etymology) தருவர். ஒரு கலவைச் சொல் வடிவு பிரிக்க இயலாத வடிவாகக் கருதப்பட்டால் அது ஒலியன் அடிப்படையிலோ பொருண்மை அடிப்படை யிலோ மாற்றம் எய்தலாம். மேற்சொன்ன வரலாற்று (கால மாற்றம்) அடிப்படையிலான உண்மைகள் கருத்து வேறுபாடில்லாதவை. இருப்பினும் ஒரு கால அடிப்படையிலான இலக்கணங்களில் இவை வருணனைச் சிக்கல்களைத் தரலாம்.

3.2. திடீர் வடிவாக்கம்

பேசுபவராலோ எழுத்தாளராலோ புதிய தேவையைப் பூர்த்தி செய்ய உருவாக்கப்பெறும் கலவை வடிவத்தைத் திடீர் வடிவாக்கம் (nonce formation) என்று கூறுவர். புதிய சொற்கள் ஒழுங்கான முறையில் அமைக்கப்பெற்ற போதிலும் நாம் அதைத் திடீர் வடிவாக்கம் என்று கூற இடையுண்டு. திடீர் வடிவாக்கம் என்ற நிலைகுலையாது ஒரே சொல் வடிவம் வேறுபட்ட பேசுபவர்களால் வேறுபட்ட காலங்களில் உருவாக்கப்பட வழியுண்டு. பேசுபவர் தாங்கள் பயன்படுத்தும் சொல் முன்னரே கேட்ட சொல் என்பதை உணர்கையில் அச்சொல் வடிவம் திடீர் வடிவாக்கம் என்ற நிலையை இழக்கிறது. இருப்பினும் ஒரு சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பெறும் திடீர் வடிவாக்கங்கள் பல உள்ளன; ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில் அவை வருகையில்

வேறுபட்ட பேசுபவர்களால் பயன்படுத்தப்படுவதால் திடீர் வடிவாக்கம் என்ற நிலையை இழப்பதில்லை. உடன் தேவையைப் பூர்த்தி செய்ய உருவாக்கப்பட்ட இவ்வடிவாக்கங்கள் ஒப்பற்றவை அல்லது அரிதானவை (எ.கா. தடகளப்போட்டி, தொகுப்பூதியம், நம்பிக்கை யில்லாத் தீர்மானம்). நாம் தினமும் கேட்கும் கலவை வடிவங்களில் எவ்வளவு பகுதி திடீர் வடிவாக்கங்கள் என்பதை உணர்ந்ததில்லை.

ஒரு சில திடீர் வடிவாக்கங்களின் தன்மை என்னவென்றால் அவை தனியாக நின்று மயக்கம் ஏற்படுத்தவல்லன. கூட்டாக்கங்களிலும் வினையிலிருந்து பெயராக்கம் செய்யப்பட்டவைகளிலும் இவை மிகுதியாகக் காணலாம். பிழை ஆய்வு என்பது 'பிழையான ஆய்வு' என்றும் 'பிழைகள் மிகுந்த ஆய்வு' என்றும் பொருள் படுவதோடு ஆங்கிலத்தில் error analysis என்ற கலைச்சொல்லின் தமிழாக்கமாகவும் பொருள்படும். இருக்கை என்பது 'அமரும் இடம்', 'உட்காரும் செயல்', 'உயிருடன் வாழ்தல்' என்றெல்லாம் பொருள் தரும். திருச்சி பஸ் என்பது 'திருச்சியிலிருந்து வரும் பஸ்' என்றும் 'திருச்சிக்குப்போகும் பஸ்' என்றும் பொருள்படும். மேற்கண்ட வகையில் படும் கூட்டாக்கங்கள் இருப்பதால் தான் பல கூட்டுகளின் அகநிலை அமைப்புகளில் முரண்படுகிற பல்வினைகள் இருப்பதாகவும் அவை புறநிலை அமைப்பில் எதிர்நீக்கம் (neutralization) அடைவதாயும் எடுத்துக் கொள்ளவேண்டி இருக்கிறது. மேலும் பெயராக்கத்தின் போது பெறப்படும் பல பொருள்கோள்களுக்காக அகநிலை அமைப்பில் 'வினை', 'உண்மை' போன்ற பொருண்மைக்குறிகள் இருப்பதாயும் எடுத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது.

3.3. அமைப்பு முறைக்கு உட்படுத்துதல் [அமைப்பு முறையாக்கம்] (Institutionalization)

ஒரு சொல்லனின் வரலாற்றில் அடுத்தகட்டமாக வருவது அத்திடீர் வடிவாக்கம் பேசுபவரால் அறியப்பட்ட

சொல்லாக எடுத்துக் கொள்ளப்படுவதாகும். இக்குறிப்பிடத் தகுந்த கட்டத்தில் வரத்தக்க மயக்கங்கள் புறக்கணிக்கப்பட்டு ஒரே பொருளில் அல்லது ஒருசில பொருளில் தான் பயன்படுத்தப்படும். துணைவேந்தர் என்ற கூட்டு 'அரசனுக்கு துணை நிற்பவர்' அல்லது ' அரசனுக்கு அடுத்த நிலையில் இருப்பவர்' என்ற பொருள்களில் இல்லாமல் ஒரு பல்கலைக்கழகத்தின் தலைவரைக் குறித்து நிற்கிறது. புதுச்சொல் கட்டுமானமாய்க் காணப்படாமல் சொல்லனாகக் கருதப்படுகிறது. அதாவது அச்சொல் அமைப்பு முறைக்கு உட்படுத்தப்பட்டு விட்டது என்று அர்த்தமாகிறது. அமைப்பு முறைக்கு உட்படுத்தப்பட்ட எந்தச் சொல்லும் பொருளடிப்படையில் தெளிவானதாக விளங்கும். சொல்லாக்கம் மூலம் புதிய சொற்களை உருவாக்குவதை மட்டுமன்றி இருக்கிற சொல்லன்களின் பொருளை உருவகத்தால் விரிவுபடுத்துவதையும் அமைப்புமுறைக்கு உட்படுத்தல் என்று கூறலாம்.

3.4. சொல் நிலையாக்கம்

மொழியமைப்பில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாய் ஒரு சொல்லன் விளைவாக்க விதிகளால் பெறப்படாத வடிவத்தைக் கொள்வது கடைசி நிலையாகும். இந்நிலையில் அச்சொல்லன் சொல்நிலையாக்கம் அடைந்துவிட்டது என்று கூறலாம். ஒவ்வொரு மொழியியல் ஆய்வு நிலையிலும் சொல் நிலையாக்கம் ஏற்படுகிறது. சொல்நிலையாக்கம் அடைந்த பெரும்பாலான சொல் வடிவங்களும் பொருண்மை அடிப்படையில் தெளிவற்று இருக்கும். அதாவது அவற்றை ஒரே கால (காலம் மாறா) நிலையில் உருபன்களாகப் பிரிக்க முடியாது. ஆனால் பொருள் தெளிவின்மையைச் சொல் நிலையாக்கம் அடைவதற்கு முன் நிபந்தனையாகக் கொள்ள இயலாது. உருபனியல் ஒழுங்கு முறை மாற்றத்தால் சொல் வடிவுகள் சொல்நிலையாக்கம் அடையலாம். எடுத்துக் காட்டாகச் -சாலி என்ற பின்னொட்டு, புத்திசாலி, பலசாலி என்ற சொல்லாக்கங்களைத் தந்திருந்தாலும் இப்பொழுது விளைவாக்கம் உள்ளதல்ல. எனவே புத்திசாலி, பலசாலி என்பன சொல் நிலையாக்கம் அடைந்தோ அடையாமலோ

வரும் என்பது மேற்கண்ட விவாதங்கள் மூலம் உணர்கிறோம். சொற்கள் ஒலியனியல் அல்லது உருபனியல் அல்லது பெருண்மையியல் அடிப்படையில் சொல் நிலையாக்கம் பெற்றுள்ளன என்று பிரித்துப் பட்டியலிடுவது திருப்தி கரமானது என்று சில ஆய்வாளர்கள் கருதுவர். இதன்படி ஒரு சொல்லனின் ஒலியனியல் போக்கு அனுமானிக்கக்கூடியதாய் இருந்து அதன் பொருண்மையில் போக்கு அனுமானிக்க இயலாததாய் இருந்ததால் அச்சொல்லன் பொருண்மையியல் அடிப்படையில் ஒழுங்கற்றிருக்கிறது என்று குறிப்பிடலாம்; அதன் ஒலியனியல் போக்கு பற்றிப் பேசத்தேவையில்லை; லையான்ஸ் (1977:547) அகராதி நிலையாக்கம் என்பதற்குப் புதைபடிவமாக்கம் (fossilization) என்ற சொல்லைப் பயன்படுத்தகிறார். தனிநிலைச் சொல்லன்களிலிருந்து விதிகளால் ஆக்கப்பட்ட வடிவாக்கங்கள் மொழியில் தற்போதைய ஒழுங்கமைப்பில் விளைவாக்கம்இன்றி இருப்பதால் இவ்வடிவுகள் புதை படிவ ஆக்கங்கள் என்று இவரால் கொள்ளப்படுகின்றன. அவர் pick-pocket, turn-coat என்பனவற்றை எடுத்துக்காட்டுகளாகத் தருகிறார். இதில் இருந்து வேறுபடுத்திக் கல்லாக்கம் (petrification) என்ற சொல்லையும் பயன்படுத்துகிறார்.

3.5.சொல் நிலையாக்க வகைகள்

சொல்நிலையாக்கம் காலமாற்றம் (diachronic) அடிப்படையிலான செயற்பாங்காகும். ஆனால் இது விட்டுச் செல்லும் அடையாளச் சின்னமான சொல்நிலையாக்கம் பெற்ற சொல்லன்கள் காலமாற்றம் அடிப்படையில் அல்லாத ஒருகாலநிலை (synchronic) அடிப்படையிலான இலக்கணத்தால் ஏற்றுக் கூறப்படவேண்டும். ஒரு அகராதிச் சொல் பல்வேறுபட்ட வழிகளில் சொல்நிலையாக்கம் பெறும் என்று எடுத்துக்கொண்டோமானால் சாத்தியமான ஒவ்வொரு வகைச் சொல்நிலையாக்கத்திற்கும் ஒரு சட்டம் (slot) அகராதியில் இருக்க வேண்டும். சொல் நிலையாக்கத்தின் கண் ஏற்படும் தனி முரண்பாட்டை (idiosyncrasy) அதாவது ஒழுங்கற்ற மற்றும் முன்னறிந்து கூற முடியாத தன்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம். சொற்களஞ்சியம்

அல்லது பேரகராதி குறித்த கோட்பாடு இத்தரவுகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

3.5.1. ஒலியனியல் சொல் நிலையாக்கம்

3.5.1.1. மீப்பண்புப் கூறுகள்

ஆங்கிலம் போன்ற மொழிகளில் சொல் நிலையாக்கத்தைக் காட்டும் மீப்பண்புக்கூறு அசையழுத்தம் (stress) ஆகும். பெரும்பாலும் கலப்பு வடிவங்களின் (complex form) அசையழுத்த அமைப்பொழுங்குகள் (stress patterns) தனிச்சொல்லன்களின் அமைப்பொழுங்குகளிலிருந்து வேறுபட்டவை. ஒரு வடிவு அமைப்புமுறைக்கு உட்படுத்தப்பட்டுவிட்டால் அது அசையழுத்த மாற்றங்கள் அடையலாம்; விளைவாக்க அடிப்படையில் அல்லாது உருவாக்கம் பெற்ற சொல்லின் அசை அமைப்பொழுங்கைப் பெறலாம். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் சாதாரணமாக -ic ஆல் ஆக்கப்பெறும் ஆக்கச்சொற்களில் அசை அழுத்தம் பின்னொட்டிற்கு முந்தைய அசையில் இருக்கும் (எ.கா. syn'chronic,pho'netic). ஆனால் சில ஆக்கச்சொற்களின் அசையழுத்தம் முதல் அசையில் இருக்கும் (எ.கா.'arabic, 'chivalric).

3.5.1.2. கூறாக்கப்பட்ட பண்புக்கூறுகள்

கூறாக்கப்பட்ட பண்புக்கூறுகளுக்கிடையே சொல் நிலை இரண்டு காரணிகளால் ஏற்படுகிறது. இவற்றில் மிகவும் வெளிப்படையானது ஒலி மாற்றமாகும் (sound change). ஒலிமாற்றம் உருபைத் தனித்தோ பிற உருபகளுடன் இணைந்து வரும்போதோ பாதிக்கும். இரண்டாவதாக மீப்பண்புக்கூறுகள் சில குறிப்பிட்ட சேர்க்கையில் வரும் உருபின் கூறாக்கப்பட்ட பண்புக்கூறுகளில் மாற்றம் விளைவிக்கும். தொன் என்ற சொல்லும் பத்து என்ற சொல்லும் சேர்ந்ததன் விளைவால் ஏற்பட்ட ஒலிமாற்றத்தால், * தொன்பத்து என்ற கூட்டுச்சொல் ஒன்பது என்று மாறி சொல்நிலையாக்கம் பெற்றுள்ளது. இம்மாதிரியான பொருள் மறைவை ஏற்படுத்தும் மாற்றவகை சொல்லாகக் கோட்பாட்டிற்குச் சிக்கலைத் தருகிறது. காலம்

மாறா அடிப்படையிலான இலக்கணத்தில் ஒன்பது என்பதைக் கூட்டுச்சொல்லாக அது தொடர்பான ஒலியனியல் மற்றும் சொற்பொருள் தற்போக்குப் பண்புக்கூறுகளுடன் பட்டியல் படுத்துவதா அல்லது தனிநிலைச் சொல்லானாகப் பட்டியல் படுத்துவதா என்ற கேள்வி எழுவதுண்டு. ஒன்பது என்பதைத் தனிநிலைச் சொல்லாகக் கருதுவதற்குத் தான் மொழியியல் கூறுகள் உகந்ததாயிருக்கின்றன. இம்மாதிரியான சிக்கலைத் தீர்க்க 'எல்லாவற்றிற்கும் ஒரே தீர்ப்பு' என்ற வகையிலான தீர்ப்பில்லை. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் மொழிச்சமுதாயம் ஒலிமாற்றத்தால் ஏற்படும் மாற்றத்தை மீட்புறச்செய்யும். எடுத்துக்காட்டாக அருமாந்தபிள்ளை என்ற கூட்டுச்சொல் மீட்புறப்பெற்று மீண்டும் அருமருந்து அன்னபிள்ளை என்று ஆளப்படுகிறது.

3.5.2. உருபனியல் சொல்நிலையாக்கம்

3.5.2.1. பிணைத் தனிமங்கள்

புல்லாங்குழல், பாறாங்கல், கூழாங்கல் என்ற கூட்டுப்பெயர்களில் ஆம் என்ற தனிமம் இரு பெயர்ச் சொற்களை இணைத்து கூட்டுப்பெயராக்கம் செய்வதைக் காணலாம். இத்தகைய பிணைத்தனிமம் உள்ளடங்கிய கூட்டுச் சொற்கள் ஆக்கப்பெறுவது தமிழில் ஒரு காலக்கட்டத்தில் விளைவாகமாய் இருந்ததாய்க் கருத இடமுண்டு. ஆனால் தற்காலத் தமிழில் இத்தகைய பிணைப்பாக்கங்கள் விளைவாக்கம் பெறவில்லை. மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளைப் புல்லால் ஆகும் குழல், பாறையால் ஆகும் கல், கூழால் ஆகும் கல் என்று விரித்துப் பொருள் கொணர இயலும். எனினும் இத்தகைய ஆக்கங்கள் தற்காலத் தமிழில் விளைவாக்கம் பெறாத காரணத்தால் இவற்றைச் சொல்நிலையாக்கங்களாய்த் தான் கொள்ள இடமுண்டு.

3.5.2.2. வேர்களின் சொல்நிலையாக்கம்

தமிழில் பல வேர்ச் சொற்கள் ஒட்டுக்கள் பெற்று சொல் வடிவங்களாக நிலையாக்கம் பெற்றுள்ளன. இவ்வேர்ச் சொற்கள் பல விளைவாக்கம் மிகுந்தவையாக உள்ளன.

எடுத்துக்காட்டாக புது என்ற வேர்ச் சொல்லிலிருந்து புது, புதுசு, புதுமை, புதிய என்ற சொல் வடிவுகள் சொல் நிலையாக்கம் பெற்றுள்ளன. மட்டுமல்லாமல் புத் விளைவாக்கம் உள்ள வேராகப் பல கூட்டுச் சொற்களின் ஆக்கத்திற்குத் துணைபுரிகின்றது (எ.கா. புத்துணர்ச்சி, புத்தாடை, புத்தொளி, புத்துயிர்). ஆனால் பண் என்ற வேர்ச்சொல் விளைவாக்கமின்றி ஒரு சில ஆக்கங்களுக்குத் துணை நின்று சொல் வடிவுகளாக (எ.கா. பண்பு, பண்பாடு, பண்படு).சொல் நிலையாக்கம் பெற்றுள்ளது. இது போலவே தண் என்ற வேர்ச் சொல்லும் விளைவாக்கமின்றி ஒரு சில ஆக்கங்களுக்குத் துணை நின்று சில சொல் வடிவுகளாக (எ.கா.தண்ணீர், தண்மை, தணுப்பு) சொல்நிலையாக்கம் பெற்றுள்ளது. இல் என்ற வேர்ச்சொல் இல்லம், இல்வாழ்க்கை போன்ற சொல் வடிவுகளாகவும், இல் என்ற வேற்றுமை உருபாகவும் சொல் நிலையாக்கம் பெற்றுள்ளது. இல் என்பதற்கு இணையான வீடு என்ற சொல் தான் விளைவாக்கம் மிகுந்ததாய் உள்ளது (எ.கா. வீட்டுக்கணக்கு, வீட்டுவேலை, வீட்டுக்காரர்).

3.5.2.3. ஒட்டுகளின் சொல்நிலையாக்கம்

பிணைப்புக் கூறுகளும் வேர்களும் விளைவாக்கமின்றி இருப்பது போல், சில ஒட்டுகளும் விளைவாக்கமின்றி இருக்கின்றன. எடுத்துக்காட்டாக அ என்ற முன்னொட்டு அநீதி (அ+நீதி) அநாகரிகம் (அ+நாகரிகம்) என்ற ஆக்கங்களை உருவாக்கியுள்ளது என்றாலும் இது எதிர்மறைப் பொருளைத் தருவிக்க உதவும் விளைவாக்க முன்னொட்டாகப் பயன்படவில்லை. அநீதி, அநாகரிகம் போன்ற சொற்கள் சொல்நிலையாக்கம் அடைந்துள்ளன.

3.5.3. பொருண்மையியல் சொல்நிலையாக்கம்

பொருளின் சொல்நிலையாக்கம் ஒரு ஒருங்கிணைந்த சொற்பாங்கல்ல. இதைப் பாகுபடுத்துவதும் சிரமமான செயலாகும். பலவகைப்பட்ட பாகுபாடுகள் கூறப்பட்டுள்ளன. இருப்பினும் எல்லாப் பாகுபாடுகளும் திருப்தி தருவதாய் அமையவில்லை. எடுத்துக்காட்டாக

லிப்கா பண்பாடு மாற்றம் மற்றும் மொழி மாற்றம் என்ற அடிப்படைப் பிரிவுகள் ஏற்படுத்தும் சொல்நிலையாக்கம் அடிப்படையிலான பாகுபாடுகளைத் தந்துள்ளார் (Bauer 1983:55).

இரண்டாவது வகையிலான பாகுபாடு பொருண்மைச் செய்திகள் கூடுவதாலோ குறைவதாலோ சொல் நிலையாக்கம் விளையும் என்பதன் அடிப்படையில் அமைந்தது. இது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாகுபாடு. எடுத்துக் காட்டாக எண்ணெய் என்ற சொல்லை எடுத்துக்கொண்டால் இது எள்+ நெய் கூட்டாக்கத்தால் விளைந்த மற்றும் 'எள்ளின் நெய்' என்ற பொருளில் வந்த சொல்லாகும். ஆனால் இச்சொல்லின் அங்கமான எள் என்ற சொல்லின் பொருண்மைச் செய்திகள் மறைந்ததால் இப்பொழுது எண்ணெய் ஒரு தனிச்சொல்லாகக் கொழுப்புச்சத்து நிறைந்த திரவத்தைக் குறித்து நின்று சொல்நிலையாக்கம் அடைந்துள்ளது. தண்ணீர் என்ற சொல்லும் தண் என்பதன் பொருண்மைச் செய்திகளின் இழப்பால் சொல்நிலையாக்கம் அடைந்துள்ளது. இத்தகைய பாகுபாடு சிறப்பாகத் தோன்றினாலும் இதிலும் சிக்கல்கள் ஏற்பட ஏதுவாகும். எடுத்துக்காட்டாக ஆக்கச்சொற்களில் சில பொருண்மைச் செய்திகள் குறைந்தும் சில பொருண்மைச் செய்திகள் கூடியும் வருவதற்கு வாய்ப்புண்டு. எடுத்துக்காட்டாக 'அவர் ஒரு விளையாட்டுப்பிள்ளை' என்ற வாக்கியத்தில் வரும் விளையாட்டுப்பிள்ளை என்ற கூட்டில் வரும் விளையாட்டு, பிள்ளை என்ற சொற்கள் சில பொருண்மைச் செய்திகளைக் கூடுதலாகப் பெற்றும் சில பொருண்மைச் செய்திகளை இழந்தும் வருகின்றன. இத்தகைய சொல்நிலையாக்கத்தை மூன்றாவது வகையாகக் கொள்ள வேண்டியது வரும். பல சொற்கள் இந்தப் பாகுபாட்டில் அடங்க வாய்ப்புண்டு. மட்டுமல்லாமல் சில சொற்கள் இவ்வகையிலான பாகுபாட்டிற்கு உடன்படுபவை அல்ல. சொல்லின் ஒரு தனிமம் பொது வழக்கிலிருந்து மறைந்து விட்டாலோ முழுவதுமாக மாய்ந்து விட்டாலோ இப் பாகுபாடு பொருந்தாது. மட்டுமன்றி 'கூடுதலான

பொருண்மைச் செய்திகள்' என்றத் தொடரின் கருத்து தெளிவானதல்ல. எடுத்துக்காட்டாகத் தட்டச்சுப்பொறி என்ற சொல்லிலிருந்து 'தட்டினால் அச்சு அடிக்கிற பொறி' என்ற செய்தியைப் பெறலாமன்றி, அதற்கு சாவிப்பலகையுண்டு, உருளையுண்டு, அச்செழுத்துக்கள் உண்டு போன்ற செய்திகளைத் தட்டச்சுப்பொறி என்ற சொல்லிலிருந்து பெற இயலாது. எனவே கூடுதலான பொருண்மைச் செய்திகள் என்பதைக் கணிப்பது சிரமம். மேலும் வெளிவட்டக் கூட்டுகளான மரமண்டை, துடியிடை என்பன இச் சொற்களில் வராத பொருண்மைத் தலையைக் கொண்டிருக்கும் என்பது இயல்பு. வெளிவட்டக்கூட்டுகள் எல்லாம் சொல்நிலையாக்கம் அடைந்தவை; எனவே அவை அகராதியில் தரப்படவேண்டும் என்ற கருத்து ஐயத்திற்குரியதாய் இருக்கிறது.

பொருண்மைச் சொல்நிலையாக்கமும் அதன் வகைப்பாடும் ஐயத்திற்குரியதாய் இருந்தாலும் பொருண்மைச் சொல்நிலையாக்கம் நிலைபேறு பெற்றதாகும். சொல்லாக்கம் பற்றிய படைப்புகளில் பொருண்மை ஆக்க அமைவுக் (semantic compositionality) குறைவு அதாவது முழு பொருண்மையைக் கூறுகளிலிருந்து ஊகிக்க முடியாமை பற்றிப் பேசப்படுகின்றது. கூறுகளிலிருந்து முழுப்பொருண்மை பெற இயலாதவை யெல்லாம் சொல்நிலையாக்கம் அடைந்தவை என்றும் கூறுகளிலிருந்து முழுப்பொருண்மையைப் பெற இயலுபனவைச் சொல்நிலையாக்கம் அடையாதவை என்றும் கொள்வதற்கும் இடமுண்டு என்றாலும் அடிப்படையில் சொல்நிலையாக்கம் பெற்றுள்ளது, சொல்நிலையாக்கம் பெறாதது என்று வேறு திரிப்பது சிரமமானதாகும். இருப்பினும் சில சொற்கள் பொருண்மைச் சொல் நிலையாக்கம் பெற்றவை என்பதை உறுதியாகக் கூற இயலும்.

3.5.4 தொடரியல் சொல்நிலையாக்கம்

சொல்லாக்க ஆய்வுகளைப்பற்றிய கேள்விகளில் ஒன்று சொல்லாக்கம் இலக்கணத்தில் எந்த இடத்தை வகிக்கிறது

என்பதாகும். ஆக்கம் ஒலியனியலின் கீழ் பெரும்பாலும் பேசப்பட்டாலும் கூட்டாக்கம் பெரும்பாலும் தொடரியலின் கீழ்த்தான் பேசப்படுகிறது. தொடரியல் சொல்நிலையாக்கம் எதைப் பொறுத்தது என்ற கேள்விக்கு விடை சொல்லாக்கத்தில் தொடரியலின் பங்கு பற்றிய மனப்பான்மையைப் பொறுத்து அமையும் எனக் கூறலாம். சொல்லாக்கத்தைத் தொடரியல் செயல்முறையாகக் கொள்வதானால் சொல் நிலையாக்கத்தைப் பற்றிப் பேச வகையுண்டு. தொடரியல் சொல்லாக்கத்தில் பங்கேற்கிறது என்பதை ஒத்துக்கொண்டாலும் ஒத்துக்கொள்ளாவிட்டாலும், கலவை வடிவுகளின் தொடரியல் பாங்கு பொது விதிகளால் அல்லது / மற்றும் பங்கு கொள்ளும் வேர்கள் மற்றும் ஒட்டுகளால் ஊகிக்க இயலுபவையாகவோ இயலாதவையாகவோ இருக்கின்றன. அப்படி ஊகிக்க இயலாதவையாக இருக்குமானால் தொடரியல் சொல்நிலையாக்கத்தைக் கலவை வடிவுக்கு வெளியிலிருந்து பேச இயலும்; அதாவது கலவை வடிவு வாக்கியத்தின் பிற சொற்களுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதைப் பொறுத்துச் சொல்நிலையாக்கம் அமையும்.

3.5.5 ஒன்று கலந்த சொல்நிலையாக்கம்

இதுவரை தனிவகைப்பட்ட சொல்நிலையாக்கங்களை எடுத்துக்காட்டுகளாகப் பார்த்தோம். பலவகைச் செயல் நிலையாக்கங்கள் ஒன்று கலந்த எடுத்துக்காட்டுகளும் உள்ளன. ஒரு சொல் ஒரு வழியில் சொல்நிலையாக்கம் பெற்றுவிட்டது என்றால் அது பிற வழிகளிலும் சொல்நிலையாக்கம் பெறுவது எளிது.

4

விளைவாக்கம்

4.1. பூர்வாங்கம்

இப்பகுதியில் கூறப்படும் கருத்துகள் யாவும் பாரின் (Bauer, 1989) கருத்துக்களைப் பிரதிபலிப்பதாக அமையும். பாரின் கருத்துக்களை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் அவரது பார்வைக் கோணத்தை விளக்குவது அவசியமாகின்றது.

4.1.1. விளைவாக்கம் உள்ளமை

சொல்லாக்கம் விளைவாக்கம் உள்ளது என மறைமுகமாய் நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். இருப்பினும் விளைவாக்கம் (productivity) சொல்லாக்கத்தில் சர்ச்சைக் குரியதாகவே இருந்து வருகிறது. இது குறித்து பல ஆய்வுக்கட்டுரைகளிலும் நூல்களிலும் எழுதப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட சொல்லாக்கம் விளைவாக்கம் நிறைந்ததா என்பதல்ல பிரச்சனை. எந்த அளவுக்குச் சொல்லாக்கத்தைப் பொதுவாக விளைவாக்கமாகக் கொள்ள இயலும் என்பதே வாதத்திற்குரிய விஷயம்.

சில சொல்லாக்கச் செயல்முறைகள் விளைவாக்க முள்ளவை என்பது தெளிவு. எடுத்துக்காட்டாக ஆனஎன்ற

ஒட்டை ஒருகுழுமப் பெயர்ச்சொற்களுடன் சேர்த்துப் பெயரடைகளை ஆக்கலாம் (எ.கா.அழகு+ஆன =அழகான). ஆக என்ற ஒட்டை ஒருகுழுமப் பெயர்ச்சொற்களுடன்சேர்த்து வினையடைகளை ஆக்கலாம் (எ.கா. வேகம்+ஆக= வேகமாக). சொல்லாக்கத்தின் விளைவாக்கம் தான் தமிழில் பெரிய சொற்றொகை இருப்பதற்குக் காரணமாய் அமைகின்றது. செய்தித்தாள்களில் புதிய சொல் வடிவங்கள் பயன்படுத்தப் படுகின்றன; செய்தித்தாளின் தலைப்புகளிலும் விளம்பரங் களிலும் இப்போக்கைக் காணலாம். எனவே, சொல்லாக்கம் பற்றிய எந்தக் கோட்பாடும் விளைவாக்கம் குறித்து விளக்கம் தர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

4.1.2. விளைவாக்கமும் படைப்பாக்கமும்

விளைவாக்கம் என்பது மனித மொழியை விளக்கப் பயன்படுத்தப்படும் பண்புகளில் ஒன்றாகும். இந்தப் பண்புதான் எண்ணிக்கை வரையறையில்லா வாக்கியங்களை உருவாக்க மொழி பேசுவோரை அனுமதிக்கிறது. விளைவாக்கம் ஆக்க முறை இலக்கணத்தில் விதிகளால் கணக்கிடப்படவேண்டும் என்று கருதப்படுகிறது. ஆனால் படைப்பாக்கம் (creativity) என்பது மொழி பேசுபவர் மொழியை எவ்வாறு செயல்நோக்கத்துடன் ஊகிக்க இயலாத வழியில் (விதி கட்டுப்பாடின்றி) விரிவாக்கப் பயன்படுத்த இயலும் என்பதாகும்.

சொல்லாக்கத்திலிருந்து ஒரு எடுத்துக்காட்டை எடுத்துக் கொள்வோம்; வெட்டு கத்தி என்பது வெட்ட உதவும் ஒரு கருவியைக் குறித்து நிற்கும்; ஆனால் வெட்டு கத்தி என்பதை 'சண்டை சச்சரவுகளில் ஈடுபடுபவர்' என்று உருவகமாகப் பயன்படுத்துவது படைப்பாக்கமாகும். கத்தி என்ற சொல்லுக்கு 'சண்டைச் சச்சரவாளர்' என்ற பொருளில்லை. மட்டுமன்றி வெட்டுக்கத்தி என்பது இரண்டாவது பொருளான 'சண்டைச்சச்சரவுகளில் ஈடுபடுபவர்' என்ற பொருளில் பயன்படுத்தப்படலாம் என்றோ இந்த வடிவு இவ்வகைப்பட்டப் பொருளில் விரிவுபடுத்தப்படும் என்றோ ஊகிக்கமுடியாது.

விளைவாக்கமும், படைப்பாக்கமும் பல புத்தாக்கங்களை (neologisms) உருவாக்கும். ஆனால் விதி கட்டுப்பாட்டிற்குட்பட்ட புதுவழியாக்கங்கள் (innovations) தான் விளைவாக்கங்களாகும். படைப்பாக்கத்தைப் பொது நெறிப்படுத்துவதோ வகைபாடு செய்வதோ சிரமமான செயலாகும்.

4.1.3. ஒரேகால அடிப்படையிலான மற்றும் கால மாற்றம் அடிப்படையிலான விளைவாக்கம்

விளைவாக்கம் பற்றிப் பேசும்போது காலமாற்றம் அடிப்படையிலான கருத்தையும் ஒரே கால அடிப்படையில்ான கருத்தையும் குழப்பிக் கொள்ள வகையுண்டு. சொல்லாக்க விளைவாக்கம் மொழியின் பாகமாக அமையும் புதிய சொல்லன்களைக் கண்டுபிடித்தல் என்ற முறையில் அமைய வேண்டும். இன்ன காலத்தில் இன்னரால் பயன்படுத்தப்பட்டது, அல்லது இது முறையான விதிப்படி உருவான சொல்லனாகும் என்ற செய்திகளெல்லாம் காலமாற்றம் அடிப்படையில் அமைந்ததாகும்.

பல புதிய வடிவாக்கங்கள் மொழியில் நிலைபெறாது போய்விடுகின்றன. இருப்பினும் அவைகள் குறிப்பிட்ட விதிகளின்படி நிலைபெற்ற வடிவாக்கங்களைப் போல உருவாக்கப்பெறுகின்றன. மொழிபேசுபவருக்கு எக் காலத்திலும் புதிய வாக்கியங்களை உருவாக்குவதைப் போல புதிய சொற்களை உருவாக்கும் திறன் உண்டு. மொழி ஒழுங்குமுறையில் தேவைக்குத்தகுந்த புதிய சொற்களை உருவாக்கும் விதிகள் ஒருகால அடிப்படையிலான இலக்கணத்தில் இருக்க வேண்டும். தேவைக்காக உருவாக்கப் பெற்ற இப்புதிய சொற்களின் எதிர்கால நிலைமை காலமாற்றம் அடிப்படையிலானது.

இவ்வுண்மைகள் பின்வடிவாக்கங்களைப் பற்றிப்பேசும் போது ஏற்புடையதாய் அமையும். ஒப்புமையாக்கம் (analogy) மூலம் கலப்பு வடிவமான வடிவிலிருந்து பின் னொட்டையோ அல்லது ஒட்டல்லாத வடிவையோ நீக்கிப்

புதிய சொல்லை உருவாக்குவது பின்வடிவாக்கமாகும். எடுத்துக்காட்டாகப் பயணம் என்றப் பெயர்ச்சொல்லிலிருந்து அம் என்ற ஒட்டை அல்லது ஒட்டல்லா வடிவை நீக்கிப் பயண் என்ற பின்வடிவைப் பெற்றுப் பின்னர் வினையாக்கியான -இ என்ற ஒட்டைச் சேர்த்துப் பயணி என்ற வினையை ஆக்குவதை ஒரு வகைப் பின்வடிவாக்கம் (சரியாகப் பின்வடிவஒட்டாக்கம்) என்று கூறலாம். பின்வடிவாக்கம் என்பது காலமாற்றம் அடிப்படையிலான நிகழ்ச்சி; எனவே பயணி என்ற வினை பயணம் என்ற பெயர்ச்சொல்லிலிருந்து ஒப்புமையாக்கத்தால் ஆக்கப்பெற்றது என்பதை விட ஒரேகால அடிப்படையில் பயணம் என்பது பயணி என்பதன் பெயராக்கம் என்று கொள்பவரும் உண்டு. பின் உருவாக்கத்தைச் சொல்லாக்கமாகக் கொள்ளலாமா என்பது விவாதத்திற்குரியது.

4.2 தொடரியல் மற்றும் உருபனியல் விளைவாக்கம்

முற்கோட்பாடு (pre-therotical) அடிப்படையில் தொடரியல் செயற்பாங்கு, ஆக்கச் செயற்பாங்கு இவற்றிற்குள் வேற்றுமை இல்லை என்று கருதுபவர் உண்டு. புதுச்சொற்படைப்புகள் (neologisms) கட்டுமானங்களுடன் (constructions) தொடர்பின்றி தனியே பொது விதிகளால் பெறப்பெறுவன அல்ல என்று கருதுபவரும் உண்டு. இவ்விரு எதிரிடையான கருத்துகளையும் எடுத்துக்கொண்டு எந்த அளவுக்கு உருபனியல் விளைவாக்கம் தொடரியல் விளைவாக்கத்திற்கு முழுமையாக ஒப்பானது அல்லது சமமானது என்பதை அறிவது ஆய்வுக்கு உகந்தது. இரண்டும் முழுவதுமாக ஒத்திருக்கிறது என்றால் சொல்லாக்கத்தைத் தொடரியலின் ஒரு அங்கமாகக் கொள்ள வேண்டும். இரண்டுக்கும் பொதுவான ஏதும் இல்லையென்றால் சொல்லாக்கத்திற்கும் தொடரியலுக்கும் ஏதும் சம்பந்தமில்லை என்று கொள்ள வேண்டும்.

வாக்கியங்களின் விளைவாக்கம் பற்றி மாற்றிலக்கணப் படைப்புகளில் குறைந்தது மூன்று மொழிவுகள் பொதுவாகக் கூறப்படுகின்றன.

1. மொழி பேசுபவர் அம்மொழியின் புதிய வாக்கியங்களை உருவாக்கவும் புரிந்துக் கொள்ளவும் முடியும்.

2. மிகப்பெரிய வாக்கியம் என்ற வரையறை இயற்கை மொழியில் கிடையாது.

3. தந்துள்ள கூற்று, பேசுபவர் - கேட்பவரால் முன்னரே கேட்கப் பெற்றது / உருவாக்கப்பெற்றது என்ற புள்ளி விவரக் கணிப்படிப்படையிலான நிகழுமை (statistical probability) பூஜ்ஜியத்தை எட்டும்.

மேற்கண்ட மூன்று மொழிவுகள் சொல்லாக்கத்திற்கு எவ்வளவு பொருத்தமானதாகும் என்பதைக் காண்பது உகந்ததாகும்.

4.2.1. புதிய வடிவுகளின் உருவாக்கம்

இதுகுறித்து முன்னரே பார்த்தோம். சொற்பிறப்பியல் அகராதியைப் பார்த்தால் புதிய சொற்கள் உருவாக்கப் பட்டுள்ளதின் காலமாற்ற அடிப்படையிலான உண்மை தெரிய வரும்; அறிவியல் அடிப்படையிலான கதைகள் தற்காலத் தகவலுக்கு மூலமாய் அமையும். சொல்லாக்கம் விளைவாக்கமானது என்று கூறினால் பொதுவாக மொழிக்குரியவர் புதிய சொற்களை உருவாக்கவும் புரிந்து கொள்ளவும் முடியும் என்ற பொருளிலல்லாமல் வேறொன்றுமில்லை. இந்த அடிப்படைக் கருத்தில் வாக்கிய உருவாக்கத்தில் விளைவாக்கம் என்பதும் சொல்லாக்கத்தில் விளைவாக்கம் என்பதும் முழுவதுமாக ஒத்திருக்கின்றன.

4.2.2. மிகப்பெரிய வடிவு உள்ளமை

இங்கு கூட்டாக்கத்தையும் தனித்தனியாகப் பேசுவது உகந்ததாய் அமையும்.

4.2.2.1. கூட்டாக்கத்தில் மிகப்பெரிய வடிவு

தமிழில் மிகப்பெரிய கூட்டு என்ற ஒன்று இல்லை. தமிழ்ப்பெயர்சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து வந்து கூட்டுகள் உருவாகுவதை அனுமதிக்கிறது. (எ.கா. தமிழ்ப்பல்கலைக்கழக ஆட்சிக்குழுக்கூட்ட நடவடிக்கை) வாக்கிய உருவாக்கத்தில் குறுகிய நினைவாற்றல் ஏற்படுத்தும்

வரையறை போலக் கூட்டாக்கத்திற்கும் வரையறை உண்டு என்றாலும் கோட்பாடு அடிப்படையில் கூட்டாக்கத்திற்கும் வரையறை எல்லை இல்லை (எ.கா. விறுவிறுவிறு... நடை).

4.2.2.2. ஆக்கத்தில் மிகப்பெரிய வடிவு

இதன் கீழ்வரும் செய்திகள் தெளிவானவையல்ல. ஒட்டுகள் அடிக்குப்பின் திரும்பவும் திரும்பவும் வந்து சொல்லாக்கம் செய்ய வல்லன எனத் தமிழில் கூற முடியாது. ஒட்டாக்கத்தால் விளையும் சொற்களின் நீளம் வரையறை எல்லைக்குட்பட்டது என எண்ணத் தோன்றினாலும் கோட்பாடு அடிப்படையில் மிக நீளமான வாக்கியம் இல்லாதது போல மிக நீளமான ஆக்க வடிவு இல்லை என்று கூற இடமுண்டு (Bauer, *1983:71*).

4.2.3. நிகழ்வுறும் சாத்தியம்

ஒரு குறிப்பிட்ட ஒன்றின் நிகழ்வுறும் சாத்தியத்தைக் (Probability of occurrence) கணக்கில் எடுக்கும் போது வாக்கிய விளைவாக்கத்திற்கும் கலவைச் சொல்லன்களின் விளைவாக்கத்திற்கும் இடையே உள்ள வேற்றுமை தெரிய வரும். வாக்கியத்தைப் பொறுத்தவரை தந்துள்ள ஒன்றின் நிகழ்வுறும் சாத்தியம் பூஜியமாகும். இது சொல்லன்களுக்குப் பொருந்தாது. எடுத்துக்காட்டாக நிகழ்வெண் அகராதிகள் (frequency dictionaries) தகவல் தொகுப்பில் (corpus) சொல்லன்கள் வேறுபட்ட தடவைகள் நிகழ்வுறுவதைச் சார்ந்திருக்கின்றது. அதாவது சொல்லன்கள் நிகழ்வுறும் சாத்தியத்தில் வேறுபடுகின்றன. ஒலிமாற்றத்தைப் பற்றிய ஒரு கோட்பாடு அடிக்கடி நிகழ்வுறும் சொல்லன்களில் ஒலிமாற்றம் நிகழும் என வருவதுரைக்கின்றது. சொல்லன்களுக்கு வேறுபட்ட நிகழ்வுறும் சாத்தியம் இருக்கிறது என்றும் நிகழ்வுறு பூஜியமல்ல என்றும் ஊகிக்கப்படுகிறது. ஆனால் வாக்கியங்களுக்கான நிகழ்வெண் அகராதியோ ஒலிமாற்றம் அடிக்கடி நிகழ்வுறும் வாக்கியங்களில் ஏற்படும் என்ற கோட்பாடோ இல்லை. அகராதி ஒரு மொழியின் சொல்லன்களைப் பட்டியல் போடுகிறது; ஆனால் ஒரு மொழியின் வாக்கியங்களைப்

பட்டியல் போடும் முயற்சி கேள்விக்குரியதாய் அமைகின்றது.

கோட்பாடு அடிப்படையில் நிகழ்வுறும் சாத்தியத்தின் வேறுபாட்டைக் கணித்துக் காட்டுவதில் சிக்கல் ஏற்படுகின்றது. 40 ஒலியன்கள் உள்ள ஒரு மொழியின் ஒலியன்களை நாற்பதுக்கும் மேற்பட்ட வகையில் ஒழுங்கமைக்கலாம். இதுபோலவே n சொல்லன்கள் உள்ள ஒரு மொழியில் n- க்கும் மேற்பட்ட ஒழுங்கமைவுகளில் வாக்கியங்கள் வரும். எனவே வாக்கிய உருவாக்கம் சொல்லாக்கத்தை விட விளைவாக்கம் நிறைந்ததாய் இருப்பது தவிர்க்க முடியாத ஒன்று. இவ்விளைவாக்க வேற்றுமை அளவு அடிப்படையில் அமைந்த ஒன்று; விளைவாக்கம் இரண்டிற்கும் பொதுவான ஒன்று; விளைவாக்கத்தில் காணப்படும் மிகப்பெரிய வேற்றுமையை ஒரு மொழியில் ஒலியன்களும் சொல்லன்களும் வரும் வரிசை முறை எண்ணிக்கையின் அடிப்படையில் அறிந்துக்கொள்ளலாம். பொதுவாக இது தேர்வுகள் மற்றும் இடங்கள் இவற்றைப் பொறுத்து அமையும். இரண்டு தனிமங்களை எடுத்துக் கொண்டால் அவை நான்கு வரிசை முறைகளில் வரும் (எ.கா.அஆ, ஆஅ, அஅ, ஆஆ) . தனிமங்களின் தேர்வுகளும் அவை வரும் இடங்களும் கூடும் போது வரிசை முறைகளின் எண்ணிக்கையும் கூடும். இந்த மாதிரியான சேர்க்கைகளின் (combinations) எண்ணிக்கை கணக்கிட இயலாது என்றாலும் மொழி கணக்கிட இயலாத சேர்க்கைகளைப் பயன்படுத்தாது; கணக்கிடத்தக்க சேர்க்கைகளையே பயன்படுத்துகின்றன. இவ்வடிப்படையில் சொல்லன்களின் நிகழ்வுறும் சாத்தியத்திற்கும் வாக்கியங்களின் நிகழ்வுறும் சாத்தியத்திற்கும் உள்ள வேறுபாடு அவற்றின் தனிமங்கள் வரும் வரிசை முறைகளின் எண்ணிக்கையும் பொறுத்தது என்ற முடிவுக்கு வரஇயலும்.

4.2.4. தொடரியல் மற்றும் உருபனியல் விளைவாக்கங்களுக்கு இடையேயுள்ள வேறுபாடு

தொடரியல் மற்றும் உருபனியல் விளைவாக்கங்களுக்

கிடையே வேற்றுமைகளை விட ஒற்றுமையே அதிகம் எனலாம். வாக்கிய உருவாக்கத்திற்கும் சொல் ஆக்கத்திற்கும் இடையேயுள்ள வேற்றுமை அளவு அடிப்படையிலன்றி இயல்பு அடிப்படையிலல்ல என்பதை ஏற்றுக்கொள் வதானால் வாக்கிய உருவாக்கத்தையும் சொல்லாக்கத்தையும் இலக்கணத்தில் ஒரே இடத்தில் ஆயலாம். இதன் வழியில் வரும் வேறு காரணிகளில் ஒன்றான குறைவிளைவாக்கம் (semi-productivity) சிக்கல்களை உருவாக்கலாம்.

4.3. விளைவாக்கம் பற்றிய சாம்ஸ்கியின் ஆய்வுக்கட்டுரை

4.3.1. விளைவாக்கம் பற்றிய ஆய்வுகளின் சிக்கல்கள்

சாம்ஸ்கியின் கட்டுரையான "Remarks on Nominalization" (Chomsky, 1970) என்பதைப் பற்றிக் குறிப்பிடாமல் சொல்லாக்கம் விளைவாக்கம் உள்ளது என்று கூற இயலாது. ஏனென்றால் இக்கட்டுரையில் சொல்லாக்கம் விளைவாக்கம் உள்ளது அல்ல என்ற கருத்து பரிமாறப்படுகிறது. இதில் சாம்ஸ்கி பெயராக்கத்தை (nominalisation) மாற்றமாகக் கூறமுடியாது, அதாவது நிர்ணயிக்கப்பட்ட விதிகளால் விளைவாக்கமான உருவாக்கமாகக் (generation) கொள்ள முடியாது என்று வாதாடுகிறார்.

சாம்ஸ்கி அவருடைய தீர்மானத்தைச் சொல்லியலார் (lexicalist) நிலை என்றும் பிறருடைய தீர்மானத்தை மாற்றியலார் (transformationalist) நிலை என்றும் குறிப்பிட்டு வேறுபடுகிறார். சொல்லியலார் கருத்துப்படி எல்லாப் பெயராக்கமும் (அதாவது கூட்டுகளும் ஆக்கங்களும்) அகராதியில் தனியாகப் பட்டியலிடப்பட வேண்டும். அதாவது அவைகள் முழுமையாக நிலையாக்கம் பெற்ற அல்லது தனிநிலைச் (simplex) சொல்லன்களாகக் கொள்ளப் பட வேண்டும். மாறாக மாற்றியலார் பெயராக்கங்கள் (அதாவது கூட்டுகளும் ஆக்கங்களும்) அகராதியில் பட்டியலிடப்படாமல் இலக்கணத்தின் மாற்றுத்தொடரியல் பகுதியால் ஆக்கப்பெற வேண்டும் என்ற நேர்எதிரிடையான கருத்தைக் கொண்டுள்ளனர்.

சாம்ஸ்கி இரண்டு எதிரிடையான கருத்துகளுக்கு இடைப்பட்ட ஒரு சமாதான நிலையைப் பற்றிக் கூறினாலும் அவருடைய கட்டுரையில் காணப்பெறும் அவர் வாதங்கள் அவர் மாற்றியலார் நிலையைத் தவறு என்று குறிப்பிடுவதைத் தெரியப்படுத்தும். மாற்றியலார் கருத்து தவறென்றால் சொல்லியலார் கருத்து சரி என்று தானாக ஒப்புக் கொள்ளப்படும். சமாதான நிலை சொல்லாக்கத்தின் உண்மை நிலையைத் தெளிவாகக் காட்டும்.

சாம்ஸ்கி பெயராக்கம் பற்றிய மாற்றியலாரின் அணுகுமுறைக்கு எதிராக மூன்று முக்கியமான வாதங்களைத் தருகிறார். அவர் வைக்கும் முதல் வாதம் பெயராக்கம் விளைவாக்கம் உள்ளதல்ல என்பதாகும். ஆக்கப் பெயர்களுக்குப் (derived nominals) பெயர்த்தொடரின் உள்ளமைப்பு (internal structure) இருக்கிறதேயன்றி ஆக்கப்பட்ட வாக்கியத்தின் அமைப்பு இல்லை என்பது அவருடைய இரண்டாவதான வாதம். உருபனியல் மற்றும் பொருண்மையியல் அடிப்படையில் ஆக்கப்பெயர்கள் (derived nominals) அவற்றிற்குப் பொருத்தமான வினைகளுடன் தற்போக்காகத் தொடர்பு கொண்டுள்ளன என்பது அவரின் இறுதி வாதம்.

4.3.2. சாம்ஸ்கியின் விளைவாக்கம்

சாம்ஸ்கி விளைவாக்கம் என்பதைச் சில வினைகளுக்கு இணையான ஆக்கப்பெயர்கள் இல்லை என்ற பொருளில் கூறவில்லை; ஆக்கப்பெயர் எப்பொழுதும் வினையை இடம்பெயர்ப்பதில்லை என்கிறார். எடுத்துக்காட்டாக சாம்ஸ்கி (Chomsky, 1970: 188-9) கீழ்வருவனவற்றைத் தருகிறார்:

1.அ. John is certain to win the prize

1.ஆ. John amused the children with his stories

2.அ. * John's certainty to win the prize

2.ஆ. * John's amusement of the children with his stories

3.அ. John is certain that Bill will win the prize

3.ஆ. John was amused at the children's antics

4.அ. John's certainty that Bill will win the prize

4.ஆ. John's amusement at the children's antics

வினைக்கும் அதன் பங்கெடுப்பாளர்களுக்கும் (arguments) இடையேயுள்ள அகஅமைப்பு உறவுகள் வாக்கியங்கள் 1-2 க்கும் 3-4க்கும் வேறுபடுகின்றன. வாக்கியம் 1.அ -வில் வருவது It is certain ஆனால் 3.ஆ-வில் வருவது John is certain; 1.ஆ-வில் வருவது the children were amused; 3.ஆ-வில் வருவது John was amused. மேற்சொன்ன வேறுபாட்டை மாற்றியபடிக் கூறுவது சிரமமானதால் சாம்ஸ்கி இத்தகைய ஆக்கப்பெயர்களை மாற்றியல் கருதுகோளில் (hypothesis) பார்ப்பதை விட்டுவிடக் கூறுகிறார். மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளைக் கூடுதலாக ஆய்வு செய்யும் போது சில உண்மைகள் தெரிய வருகின்றன.certainty சொல்நிலையாக்கம் பெற்ற பழம் பிரஞ்சு மொழியிலிருந்து கடன் வாங்கிய சொல்லாகும். இது விளைவாக்கத்தால் உருவானதல்ல. இதுபோலவே amusement என்பதும் சொல்நிலையாக்கம் பெற்றதாகும்; -ment ஒரு விளைவாக்க ஒட்டாகப் பயன் படுத்தப்படவில்லை. இந்த ஒட்டு வினைவாக்கமுள்ளதாக இருந்தபோது இதன்பொருள் 'State of being Ved' என்று அமையும். சாம்ஸ்கி பொருண்மை அடிப்படையில் வேறொரு பொதுமையாக்கத்தை உணரத் தவறிவிட்டார். உணர்ச்சியை வெளிப்படுத்தும் வினையிலிருந்து (அல்லது பெயரடையிலிருந்து) ஆக்கப் பெற்ற பெயரை விசேடணை செய்யும் கிழமை வேற்றுமை வடிவில் (genitive case) வரும் பெயர் உணர்ச்சியை அனுபவிப்பவரைக் காட்ட வேண்டும். பின்னரும் எடுத்துக்காட்டுகள் இதைத் தெளிவுபடுத்தும்.

5.அ. John shocked the Victorians by his immortality

5.ஆ.* John's shock of the Victorian by his immortality

6.அ. John was shocked at the Victorian's immortality

6.ஆ. John's shock at the Victorians' immortality

4.3.3. உள் அமைப்பு

ஒரு வாக்கியத்தில் ஆக்கப்பெயரை உருவாக்குதலில் தொடரியல் சிக்கல் உள்ளது. சாம்ஸ்கி (1970: fn 11) John's beliefs are not mutually consistent, John's beliefs are intense என்ற வாக்கியங்கள் உள்ளதைச் சுட்டிக்காட்டி John's beliefs என்ற தொடரை What John believes என்ற தொடரிலிருந்து பெற முடியாது என்று சுட்டிக்காட்டுகிறார். சாம்ஸ்கி இந்த வாதங்களை மாற்றியல் கருதுகோளுக்கு எதிரானவை களாகக் கருதுகிறார். மாற்று சுழற்சி (transformational cycle) என்ற கருத்துச்சாயலை (notion) எடுத்துக்கொண்டால் இது இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதில்லை; ஏனென்றால் பின்வரும் கிளை அமைப்பை முற்கோளாகக் கொண்டால் அடி வாக்கியத்தில் முதலில் செயல்படும் சுழற்சி ஆக்கப் பெயரைத் தலைமை வாக்கியம் (matrix sentence) எடுத்துக் கொள்ளப்படும் முன்னரே தந்து விடும் (Bauer, 1983).

7.



பெயராக்கத்தை உருவாக்கிய வாக்கியம் அது பெயராக்கம் பெற்றது மற்றும் அதில் believe என்ற வினையுள்ளது என்பதைத் தவிர கூடுதலான செய்தியைக் கொண்டிருக்கத் தேவையில்லை. இது சாம்ஸ்கி அவருடைய கட்டுரையில் பின்னர் எழுப்பிய இரு சிக்கல்களைத் தீர்த்து வைக்கும்.

முதலாவதாக, சாம்ஸ்கி (1970:193) ஏற்றுக் கொள்ள முடியாத பெயராக்கம் உள்ள வாக்கியமான 9-க்கு

எதிரிடையான ஏற்றுக்கொள்ளக்கூடிய வினைப்பெயர் (gerund) உள்ள வாக்கியமான 8-ஐ சொல்லியலார் (lexicalist) கருதுகோளுக்கு ஆதரவாய் அமைவதாய்க் கூறுகிறார்.

8.His criticising the book before he read it

9.*His criticism of the book before he read it

ஏனென்றால் அவர் வினைப்பெயரானது உள்ளுறை வினையிலிருந்து (underlying verb) ஆக்கம் பெற்றதாயும் பெயராக்கம் அவ்வாறு ஆக்கம் பெறவில்லை என்றும் கொள்கிறார். அவர் 8-ஆவது வாக்கியமானது He criticized the book before he read it என்பதை உள்ளுறை செய்யும் என்றும் before he read it என்பது வினைத்தொடர் அடை (VP modifier) என்றும் எனவே பெயர்த்தொடரை (NP-ஐ) அடை செய்யாது என்றும் கருதுகிறார். ஆனால் கிளை அமைப்பான 7-ஐ உள்ளடக்கிய ஆக்கத்தில் before he read it என்பது மாற்றத்தால் ஆக்கம் பெற்றது என்று கொள்ளக்கூடிய criticism என்பதை அடை செய்வதில்லை. ஏனென்றால் 6-இல் உள்ள N-கணுவிற்கு வினையடையாக வரத்தகுந்த சகோதரத் தொடரில்லை.

சாம்ஸ்கியின் இரண்டாவது சிக்கல் sudden refusal, obvious sincerity என்ற தொடர்களைச் சம்பந்தப்பட்டது. இவைகளை 7-ஐப் போன்றஅமைப்புள்ள பெயரெச்சத் தொடரில் இருந்து ஆக்கலாம்; ஆனால் கூடுதலான ஒரு உட்படை வாக்கியம் (S)(embedded sentence) பெயரின் (N-இன்) சகோதரத் தொடராக வரவேண்டும் (பார்க்க சாம்ஸ்கி, 1965:107 vii). சாம்ஸ்கி (1970:195) மாற்றியலார் முறையில் இத்தொடர்கள் வினையடைகள் (refused suddenly, was obviously sincere) உள்ள உள்ளுறை வாக்கியங்களிலிருந்து (underlying sentences) ஆக்கப்படவேண்டும் என்கிறார்; ஆனால் இது உண்மையாக வேண்டும் என்பதல்ல, மட்டுமல்லாமல் இது மாற்றியலார் முறைக்குச் சிக்கல் தர வேண்டிய அவசியமும் இல்லை.

எனவே (வாக்கியத்தில் வினையின் முழு அமைப்புள்ள வினைப் பெயர்களிலிருந்து மாறுபட்ட) ஆக்கப்

பெயர்களுக்குப் பெயர்த்தொடர்களின் (NP-களின்) அமைப்பு இருக்கும் என்ற சாம்ஸ்கியின் மறுப்பு மாற்றியலார் நிலைக்கு எதிரான வாதம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. மாறாக வேறுபட்ட மாற்று மூலங்கள் இரு வகையான பெயர்களை விவரிக்கும்; அதாவது சாம்ஸ்கி குறிப்பிடுவது போல வினைப்பெயர் (gerunds) வாக்கியத்திலிருந்தும் பெயராக்கங்கள் (nominalizations) 7-இல் கண்ட ஒழுங்கு அமைப்புகளிலிருந்தும் ஆக்கப் பெறலாம்.

4.3.4. தற்போக்கு

ஆக்கப் பெயர்களுக்கும் அதற்கு இணையான வினைக்கும் இடையே உள்ள தொடர்பு பெரும்பாலும் தற்போக்கானதாகும். இது உருபனியல் அடிப்படையிலும் பொருண்மையியல் அடிப்படையிலும் உண்மையாகும்.

4.3.4.1. உருபனியல் தற்போக்கு

முதலில் உருபனியல் நோக்கை எடுத்துக்கொண்டால் சாம்ஸ்கி ஆங்கிலத்திலுள்ள எல்லா ஆக்க ஒட்டுகளையும் ஒட்டு மொத்தமாக எடுத்துக்கொண்டு ஆய்வதே ஒரு பகுதி சிக்கலுக்குக் காரணமாவது தெளிவாகும். பெயராக்க ஒட்டான -ter உள்ள ஒரே சொல்லான laughter என்பதையும் விளைவாக்கம் இல்லாதது போல் தெரிகிற ஒட்டு உள்ள marriage என்ற சொல்லையும் சொல் நிலையாக்கமுற்ற belief என்ற சொல்லையும் சாம்ஸ்கி பிற எடுத்துக்காட்டுகளுடன் மேற்கோளாகக் காட்டுகிறார். விளைவாக்கம் உள்ள ஒட்டுக்களை மட்டும் எடுத்துக்கொண்டால் இந்நிலைமை தெளிவாகியிருக்கும்.

4.3.4.2. பொருண்மையியல் தற்போக்கு

மேற்சொன்ன அதே வாதப்படியே பொருண்மையியல் தற்போக்கை ஓரளவுக்கு விளக்கலாம். வினையின் நிறுவப்பெற்ற எல்லா பொருள்களோடும் இசையாத நிறுவப்பெற்ற பெயராக்கப் பொருள்களுக்கு எடுத்துக்காட்டாகச் சாம்ஸ்கி (Chomsky 1970: 80) trial என்ற சொல்லைக் குறிப்பிடுகிறார்; மற்றும் இப்பெயராக்கத்தின் முக்கியப் பொருள் வினையின் மிகப் பொதுவானதல்லாத

சிறப்புப் பொருளாகும். doubt மற்றும் residence என்ற சொற்கள் பிரஞ்சு கடன் சொற்களாகும்; இவை விளைவாக்க விதிகளுக்கு உட்படத் தேவையில்லை. மேலும் ஒரு குறிப்பு இங்கு ஆழ்ந்து சிந்திக்கப்படவேண்டியதாகும். அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள ஆக்கப்பெயர்களில் பல பொருள் மயக்கம் (ambiguity) உள்ளவை. எடுத்துக்காட்டாக qualification பின்வரும் வகையில் பொருள் தரும்:

1.a quality suiting one for one

2.a required condition for holding office

3.the act of qualifying

4.the state of being qualified

5.modification, limitation or restriction

6.an instance of 5

ஒன்றையொன்று விலக்கி வைக்காத இரண்டு சாத்தியங்களை இங்கு எண்ணிப்பார்க்கலாம். முதலாவதாக கவனிக்க வேண்டியது சில பொருள்கள் தாம் விளைவாக்கம் உள்ளவை (எ.கா. மேற்கண்ட 3,4 ஆகிய அர்த்தங்கள்). ஆக்கப்பெயர்கள் பிற அர்த்தங்களில் சொல்நிலையாக்கம் பெற்றுள்ளன. ஆனால் மேற்சொன்ன குறைந்த எண்ணிக்கையான பொருள்களில் விளைவாக்கம் பெற்றுள்ளன. இரண்டாவதான சாத்தியம் என்னவென்றால் ஆக்கப் பெயருக்கும் அதனோடு ஏற்புடைய வினைக்கும் உரிய உறவு முழுவதுமாய்த் திட்டவட்டமாக்கப்படவில்லை. மாறாக, வினைப் பெயராக்கத்தின் இலக்கண உறவுதான் திட்டவட்டமாக்கப் பட்டுள்ளது. பொருண்மை உறவு பயன்வழியியல் (pragmatics) வழி தீர்மானிக்கப் பெறுகிறது. பெயர்க் கூட்டாக்கங்களுக்கும் இது சரியாக இருக்குமென்று தோன்றுகிறது. சொல்லாக்கத்தின் பிற பகுதிகளுக்கும் இது பொருத்தமாயிருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்விரு முன் மொழிவுகளில் ஏதாவது ஒன்று சாம்ஸ்கி பெயராக்கத்தில் குறிப்பிட்ட வெளிப்படையான பொருண்மை ஒழுங்கின்மையைப் பெருமளவுக்குக் குறைத்துவிடும்.

4.3.5. நிரப்பிகள்

சாம்ஸ்கி வேறு ஒரு விவாதக் கருத்தையும் எழுப்புகிறார். இது வினையின் நிரப்பி (complement) அல்லது பெயராக்கம் என்பது பற்றியதாகும். சாம்ஸ்கி பின்வருமாறு கூறுகிறார் (1970:190): refuse என்ற சொல் ஒரு பெயர்த்தொடரை அல்லது ஒரு குறுக்கப்பெற்ற வாக்கிய நிரப்பியை ஏற்கும். ஆனால் destroy என்ற சொல் ஒரு பெயராகவோ வினையாகவோ பெயர்த்தொடரை மட்டும்தான் ஏற்கும் என்பது நடுநிலைச் சொற்பதிவின் (neutral lexical entry) பண்புக்கூறு அமைப்பால் தெரிவிக்கப்படுகிறது. இங்கு ''நடுநிலைச் சொற்பதிவு'' என்பது பெயராக அல்லது வினையாக புறவாக்கமுறும் என்று அறுதியிட்டுக் கூற இயலாத சொற்பதிவு என்ற அர்த்தத்தில் கையாளப்பட்டுள்ளது. இப்படித்தான் சாம்ஸ்கி பெயராக்கத்தை அதனுடன் ஏற்புடைய வினையுடன் தொடர்புபடுத்துகிறார். இது ஒரு சரியான தீர்ப்பு என்றாலும் மாற்றியலார் அணுகுமுறையைப் பயன்படுத்தியும் இச்சிக்கலைத் தீர்க்கலாம். விளைவாக்க ஈட்டத்தில் ஒரு வினை ஒரு குறிப்பிட்ட முன்னுருபை (preposition) ஏற்றால் அதன் ஆக்கப் பெயர் அடுத்த முன்னுருபை ஏற்கும். மட்டுமன்றி ஒரு வினை நேர் செயப்படுபொருளை ஏற்றால் பெயராக்கத்திற்கும் உள்ளுறை செயப்படுபொருளுக்கும் இடையில் 'of' என்பது செருகப்படும் என்பது பொதுமையாக்கம் ஆகும். 'of' வருவதைச் சாம்ஸ்கியின் சட்டகத்தில் (Chomsky's framework) ஒரு வகையான மிகைமை விதி (redundancy rule) வழி கூறலாம் என்றாலும், மாற்றியல் பகுப்பாய்வு நடுநிலையாக அமையும் என்று தோன்றுகிறது. சொல்நிலையாக்க நேர்வுகளுக்கு இது பொருந்தாது; எடுத்துக்காட்டாக hope (We hope for a miracle என்பதுடன் our hope for a miracle என்பதை ஒப்பிடுக.), desire (We desire for peace என்பதுடன் Our desire for peace என்பதையும் * Our desire of peace என்பதையும் ஒப்பிடுக; We are desirous of peace என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது.) என்பன சொல்

நிலையாக்கத்தைக் கணக்கிலெடுக்காத மாற்றியல் பகுப்பாய்வுக்குத் தருவதுபோல சிக்கலைச் சாம்ஸ்கிக்கும் தரும்.

4.3.6. முடிவுரை

'உண்டு இல்லை' என்ற அணுகுமுறையில் மாற்றியலார் கருதுகோளையோ அதற்கு மாறான சொல்லியல் கருது கோளையோ ஏற்றுக்கொள்ளாமல் சொல்நிலையாக்கம் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டால் சொல்லியலாருக்குச் சாதகமாய் அமைகிறது என்று சாம்ஸ்கி குறிப்பிடும் சான்று இல்லாமல் போகும்; மட்டுமல்லாமல் சாம்ஸ்கி சொல்லாக்கத்திற்கு ஆக்க முறை அணுகுமுறைக்கான சாத்தியத்தை மறுத்து விடவில்லை. சாம்ஸ்கியின் தீர்மானங்கள் எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக்கொண்டாலும், சொல்லாக்கத்திற்கு ஆக்கமுறை அணுகுமுறை இல்லை என விலக்கத் தேவையில்லை. ஏனென்றால் சாம்ஸ்கி முழுவதும் பெயராக்கம் பற்றியே பேசுகிறார். பெயராக்கத்திற்குப் பொருந்துகிற கருத்துரைகள் எல்லா வகையான சொல்லாக்கத்திற்கும் பொருந்தத் தேவையில்லை. -less,-able என்ற ஒட்டுகள் ஆக்கும் பெயரடைகளும் -er,-ness என்ற ஒட்டுகள் ஆக்கும் பெயர்களும் சாம்ஸ்கியின் மறுப்புரைக்கு ஆளாகவில்லை என்று தோன்றுகிறது. இதற்கு உடன்படாத ஆய்வாளர்கள் சாத்தியமான வடிவங்களுக்கும் (possible forms) நிலைநிறுத்தப்பட்ட வடிவங்களுக்கும் (established forms) உள்ள வேறுபாட்டைக் கணக்கிலெடுக்கவில்லை என்று தெரிகிறது. நிலைநிறுத்தப்பட்ட வடிவுகள் சாத்தியமான வடிவுகளின் ஒரு சிறு விகிதமாகவே அமையும்.

4.4 . குறை விளைவாக்கம்

திரிபிற்கெதிரிடையான ஆக்கத்திற்படும் மாதிரியாக குறை விளைவாக்கம் (semiproductivity) அமையும். தமிழில் பல ஒட்டுகள் வினையுடன் சேர்ந்து பெயராக்கம் செய்கின்றன. -தல், -கை என்ற ஒட்டுகள் எல்லா வினைகளுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யும் (எ.கா. படித்தல், படிக்கை, குடித்தல், குடிக்கை, ஆள்தல், ஆள்கை). ஆனால் -ப்பு, -அம் போன்ற ஒட்டுகள் எல்லா வினைப் பகுதிகளுடனும் சேர்ந்து

பெயராக்கம் செய்வதில்லை (எ.கா. படி+ப்பு =படிப்பு, தூங்கு+அம்=தூக்கம், மற+ப்பு =*மறப்பு, வாங்கு+அம் =*வாங்கம்). -அம், -ப்பு என்பன எல்லா அடிகளுடனும் சுயேட்சையாகச் சேர்வதில்லை. அதனால் அவை முழுவிளைவாக்கமுள்ளவை அல்ல, குறைவிளைவாக்க முள்ளவை.

குறைவிளைவாக்கம் காரணமாய் ஆக்கம் வாக்கியங்களின் உருவாக்கம் போல விளைவாக்கமுள்ளதாய்க் கருதக்கூடாது என்று வாதிடுவர். சிம்மர் (Zimmer 1964:18) போன்றோர் இதற்குமாறான பின்வரும் கருத்தைக் கொண்டுள்ளனர்; சொல்லாக்க விதிகளை முழுச்சுதந்திரமாகச் செலுத்தவிட்டால் அதனால் உருவாக்கப்பெற்ற வடிவுகளில் பல இலக்கணமானவையாகவும், ஆனால் நிகழ்வுறாதும் வரும் ; வழக்களாக வருவதில்லை. நிகழ்வுறாமைக்குக் காரணங்கள் மொழி ஒழுங்குமுறைக்குப் பொருத்தமற்றதாய் அமையலாம். ஏனென்றால் வழுவானவை மற்றும் ஏற்றுக்கொள்ளமுடியாதவை எனக் குறிப்பிடப்பெற்ற சில வடிவுகள் பின்னர் இலக்கணமானவையாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாகவும் வரலாகும். மட்டுமல்லாமல் இம்மாதிரியே வாக்கியங்களையும் இலக்கணமானவை ஆனால் நிகழுறாதவை என்று கூற முடியும். தங்கக்காற்று என்ற சொல்லனால் குறிப்பிடத்தக்க பொருள் உலகில்லையாதலால் அச்சொல்லன் தமிழிலில்லை. உருவகவியலார் என்ற ஒரு கூட்டம் ஆள்கள் இல்லாத காரணத்தால் உருவகவியலார் என்ற சொல்லன் இல்லை. 'அவள் பேனாவால் தண்ணீரில் கடிதம் எழுதினாள்' என்ற நிகழ்ச்சி நிகழ்வுறாது என்ற காரணத்தால் வாக்கியமாகாது போகலாம். இத்தகைய காரணிகள் எல்லாம் வாக்கிய உருவாக்கத்தின் விளைவாக்கம் பற்றிய விவாதங்களில் பொதுவாகப் பொருத்தமானதாய்க் கருதப்படுவதில்லை. இதுபோலவே அவைச் சொல்லாக்கம் பற்றிய விவாதங்களுக்குக் கூடுதல் பொருத்தமானதாய் அமையும் என்று நம்புவதற்கும் தகுந்த காரணம் இருப்பதாய்த் தெரியவில்லை. எனவே கொள்கை அடிப்படையில் வாக்கிய உருவாக்கத்தின் விளைவாக்கத்திற்கும் சொல்லாக்கத்தின்

விளைவாக்கத்திற்கும் வேறுபாட்டைக் குறைவிளைவாக்கம் அடிப்படையில் கருதத் தேவையில்லை.

இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவான மேலும் ஒரு குறிப்பை இங்கு கூறவேண்டியதிருக்கிறது. சரியாக விளக்கப்படாமல் தவறாகப் புரிந்துக்கொள்ளப்பட்ட சொல்லாக்கத்தின் விளைவாக்கம் குறித்து பலவரையறைகள் இருக்கின்றன. சில வரையறைகள் பின்னர் விளக்கப்பெறும். சில வரையறைகள் இலக்கண அடிப்படையிலானவை. சொல்லாக்கம் பற்றிய இம்முறையான வரையறைகள் வாக்கியங்களில் காணப் பெறும் உடன்பாடு (agreement) போன்றவை ஏற்படுத்தும் வரையறைகளுக்குச் சமமானவை. இலக்கணங்களால் வாக்கியங்களின் குறைவிளைவாக்கம் கூறப்படாதபோது சொல்லாக்கத்திலும் குறைவிளைவாக்கம் கூறப்படலாகாது.

சொல்லாக்கத்தின் 'இலக்கணத்தன்மையான ஆனால் நிகழ்வுறாத' வடிவங்களைப் பற்றிப் பேசுகையில் தான் சொல்லாக்கத்தின் ஆக்கமுறைக் கோட்பாட்டின் நோக்கமான செயல்திறம் (performance) அல்லாத அறிதிறம் (competence) பற்றி ஒருவர் வாதிக்கிறார் என்று குறிப்பிட முடியும் என்று போவர்ஸ் (Bowers,1970:522) சுட்டிக்காட்டுகிறார். பெரும்பாலும் இதன் அடிப்படையிலேயே விளைவாக்கம் குறித்த கட்டுப்பாடுகள் எல்லாம் சொல்லாக்க ஆய்வாளர்களால் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்றும் கருதப்படுகிறது. ஆனால் அறிதிறத்திற்கும் செயல்திறத் திற்கும் உள்ள வேறுபாட்டைச் சீராகவும் தீர்மானமாகவும் கொள்ளுகிற இலக்கணச்சட்டகத்தில் இது சாத்தியமான முறை மட்டுமல்லாமல் 'இலக்கணத்தன்மையான ஆனால் நிகழ்வுறாத' வடிவுகளைப் பொறுத்தவரையில் தேவையான பின்விளைவாகும். ஆனால் ஒரு ஆய்வாளரின் கோட்பாடு கைக்கொள்ளத்தவறிய எல்லா மாறுபாடுகளையும் விளக்கச் 'செயல்திறம்' என்பதனை நழுவிக்கொள்ள உதவும் ஒன்றாகக் கருதும் ஆபத்தும் இருக்கிறது. மேற்சொன்ன விவாதங்கள் யாவும் ஏற்புடமை (acceptability) என்பதன் அடிப்படையில் அல்லாமல் இலக்கணத்தன்மை என்ற அடிப்படையில்

அமைந்தவை. இது செயல்திறத்தின் அடிப்படையில் அல்லாத அறிதிறத்தின் அடிப்படையிலான கிளை நிபந்தனையாக அமையும்.

''இலக்கணத் தன்மையை இம்மாதிரியான காரியங்களில் பேசுவது சற்றி வளைப்பதாகும். ஏனென்றால் பேசுபவரின் உள்ளுணர்வு இலக்கணம் எழுதுவதற்கான இடுபொருளின் (input) ஒரு பகுதியாக உள்ளுணர்வைப் பிரதிபலிக்க வேண்டும்,'' என்கிறார் டிக் (Dik 1969:372).

4.5. விளைவாக்கத்தில் சில கட்டுப்பாடுகள்

தெளிவுக்காகத் தொடரியல் விளைவாக்கக் கட்டுப்பாட்டிற்கும் தொடரியல் அல்லாத விளைவாக்கக் கட்டுப்பாட்டிற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டலாம். இத்தகைய வேறுபாடு செயற்கையானதாய் அமையும். தொடரியல் விளைவாக்கக் கட்டுப்பாட்டைத் தற்காலிகமாக விதிகள், புறவடிவமைதிகள் (configuration) மற்றும் / அல்லது அடி மற்றும் ஒட்டு அல்லது செயற்பாங்கு உருபு (process marker) இவற்றாலான கோர்வை (string) அல்லது கூட்டாக்கத்தில் இரண்டு (அல்லது அதற்கு மேற்பட்ட) பகுதிகளால் (stems) ஆன ஒரு கோர்வையாக வரும் கூட்டு இவற்றைப் பாதிக்கும் என்று விவரணம் செய்யலாம்.

4.5.1. பயன் வழியியல்

தற்சமயம் தனித்தனியாகப் பல ஆய்வுகள் சொல்லாக்கம் பற்றிய ஒரு திருப்திகரமான விளக்கத்திற்குப் பயன் வழியியல் காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளன. பரந்த நோக்கில் பயன் வழியியலை மொழி ஒழுங்குமுறை பற்றிய அறிவுக்கு முரணான உண்மை உலகக்கட்டமைப்பைப் பற்றிய அறிவு மற்றும் நம்பிக்கையின் தாக்கம் என்று விவரணம் செய்யலாம். சொல்லாக்கம் சில வழிகளில் பயன் வழியியல் காரணிகளால் தாக்கமும் வரையறையும் அடைகிறது.

4.5.1.1. உள்ளமையின் தேவை

பொது விதிப்படி ஒரு சொல் இல்லாத ஒரு பொருளை

அல்லது வினையை அல்லது பண்பைக் குறிப்பிட உருவாக்கப்படுவதில்லை. இங்கு உள்ளமை (existence) பரந்த பொருளில் புனைவு உள்ளமை (fictional existence) மற்றும் புராண உள்ளமை (mythlogical existence) இவற்றுடன் இவ்வுலகில் மொழி பேசுபவர் அறிந்த கண்ணுறு உள்ளமை (observable existence) என்பனவெல்லாம் உள்ளடக்கிக் கூறப்படுகின்றது. முன்பு கூறியபடி தங்கக்காற்று என்ற சொல் இல்லாததற்குக் காரணம் அப்படி ஒரு பொருள் இவ்வுண்மையுலகில் இல்லாமையாகும். இது இவ்வுண்மை உலகின் மெய்மையேயன்றி மொழியைப் பற்றிய மெய்மையல்ல. கட்டுக்கதையில் தங்கக்காற்று சொல்லாகப் பயன்படுத்தப்படலாம். படிப்பவர் வேறுபல சந்தர்ப்பங்களில் இந்தச் சொல் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக வருவதை உணர்வார்கள். இது முக்கியமான வாதமாகும். ஏனென்றால் ஒரு வடிவின் உள்ளமை குறைவு சொல்லாக்கத்தின் விளைவாக்கத்திற்கு எதிரான வாதமாகப் பயன்படுத்தப்படுகிறது. எவ்வாறு இந்தக் கூட்டின் உறுப்புகளின் பொருள்கள் கூட்டின் பொருளோடு தொடர்புடையது என்ற அடிப்படையில் தமிழ்ச் சொற்களஞ்சியம் பற்றிய தமிழ்ப்பேசுபவரின் அறிவு அமைகிறது. இதன் காரணமாய் தங்கக்காற்று இலக்கணத்தால் தடை செய்யப்படவேண்டும் என்பதல்ல இதன் பொருள். தங்கக்காற்று என்பதன் அமைப்பு முறையாகப் பொருள் (institutionalized meaning) இதைப் புதிராகக் காட்டலாம்; ஆனால் இலக்கணமானதல்ல என்று கூற முடியாது. பேசுவரின் அனுபவத்தில் உள்ள ஏதேனும் ஒன்று அச்சொல்லால் விவேகமாகக் குறிப்பிடப்படுகிறது என்பதைப் பொறுத்து இது அமைகிறது. குடிப்பு என்ற சொல்லில்லாத காரணத்தால் ப்பு விளைவாக்கமானதல்ல என்று கூறஇயலாது.

4.5.1.2.பெயரிடத்தக்கமையின் தேவை

ஒரு சொல்லன் பேசுபவர் உண்மை என்று உணர்கிற ஒன்றை மட்டுமன்றி பெயரிடத்தக்க எதையும் குறிப்பிட

வேண்டும். நிகழ இயலா ஒரு செயலைக் குறிப்பிட ஒரு வினைச்சொல்லை ஆக்குவதில்லை. ஏனென்றால் ஆக்கத்தால் கூறப்படும் உறவுகள் எளிமையானதாகவும் பொதுவானதாகவும் இருக்கும். இது உண்மையென்றால் இது சொல்லாக்கத்தைப் பற்றிய முக்கிய மெய்மையாகும்; வேறுபட்ட மொழிகள் வேறுபட்ட நடை முறைகளை அவற்றின் அமைப்பில் குறியீடு செய்கின்றன. எடுத்துக்காட்டாகத் தமிழ் ஒரு வகை அடுக்கிவரும் செயலைக் குறிக்கச் சொல் அடுக்குச் செயற்பாங்கைப் பயன்படுத்துகிறது (எ.கா.கேட்டு கேட்டு மகிழ்ந்தான்). புதிய ஆக்கக் குறியீடுகளைத் தேவைப்பட்டால் ஒரு மொழியில் புதிய அர்த்தங்களைக் கொணர்வதற்கு வேண்டி புகுத்தலாம். எடுத்துக்காட்டாக -நர் என்ற ஒட்டு 'பணியில் ஈடுபட்டுள்ளவர்' (எ.கா. ஓட்டுநர், இயக்குநர்) என்ற அர்த்தத்தில் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகிறது. காணுநர் என்ற சொல் தற்போது பயன்படுத்தப்படா விட்டாலும் தேவைப்பட்டால் 'காணும் பணி செய்பவர்' என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படலாம். மாறாகக் கலப்புச் சொற்களில் பெயரிடத்தக்கமை சாம்ஸ்கி (Chomsky 1965:29) கூறியதைப் போன்று சொற்களின் ஏற்கத்தக்கமையை ஆளுகின்ற பொது விதிகளுக்கு உட்படவேண்டும்; எடுத்துக்காட்டாகப் பெயர்ச்சொற்களால் விளக்கம் பெறும் பொருள்கள் (objects) காலஇட அண்மைக் கட்டுப்பாடு (condition of spatiotemporal contiguity) போன்றவற்றிற்கு இசைவுற வேண்டும். சாம்ஸ்கி இந்த வரைமுறைகளை உலகப் பொதுக் கூறுகளாக ஏற்றுக்கொள்கிறார். அவைகள் இறுப்பான்களாக (fitters) கலப்பு மற்றும் தனிச் சொல்லன்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

4.5.2.தடங்கல்

ஒரு வடிவு இருக்கின்ற காரணத்தால் வேறு கலப்பு வடிவு நிகழ்வுறாமையை ஆரனோப் (Aronoff 1976:43) தடங்கல் (blocking) என்று குறிப்பிடுகிறார். தடங்கலை ஏற்படுத்தும் வடிவு தனி வடிவாகவோ கலப்பு வடிவாகவோ இருக்கலாம்.

எடுத்துக்காட்டாக குடி என்ற பெயர் இருக்கின்ற காரணத்தால் குடிப்பு என்ற ஆக்கம் நிகழ்வுறாதிருக்கிறது என்று கருதலாம்.

இதைப் பயன் வழியியல் காரணிகளின் நீட்சி எனலாம்; ஒரு சொல்லன் ஏதாவது ஒரு பொருளைக் குறிப்பிட வேண்டும் என்பது மட்டுமல்ல, அப்பொருளைக் குறிப்பிட ஒரு புதிய சொல்லன் உருவாக்கப் பெற்று மொழிச்சமூகத்தால் அங்கீகாரம் பெறுவதற்கு முன் அதற்கான தேவையும் இருக்க வேண்டும். மொழிச்சமூக அங்கீகாரம் மிக முக்கியமானதால் அமைப்பு முறையாக்கத்தைப் போல தடங்கல் புதிய வடிவுகள் உருவாக்குவதை அவ்வளவாய் தடை செய்வதில்லை. ஓட்டுநர் என்ற சொல்லாக்கப்படி திருடுநர் என்ற புதிய சொல்லாக்கத்திற்கு வழியுண்டு என்றாலும் திருடர் என்ற சொல் உள்ள காரணத்தால் திருடுநர் என்ற சொல்லுக்குத் தேவையில்லை. ஆனால் திருடுவது சமூகத்தால் அங்கீகரிக்கப் பட்ட ஒரு தொழிலாக மாறுகையில் திருடுநர் என்ற சொல் 'திருடும் பணி செய்யும் பணியாளர்' என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படலாம்.

இப்படியாக விளைவாக்கத்திற்கும் அமைப்பு முறையாக்கத்திற்கும்/ சொல் நிலையாக்கத்திற்கும் உள்ள உறவு மறுதலையானதாகும்; விளைவாக்க அமைப் பொழுங்குகள் யாவும் சொல்நிலையாக்கம் பெறுவதில்லை. முழுச் சொல்நிலையாக்கச் செயற்பாங்குகள் யாவும் விளைவாக்கமுள்ளவையுமல்ல .

4.5.3. செயற்பாங்கில் உட்படும் அடிகள் மீதான எல்லைக்கட்டுப்பாடுகள்

சில அடிகள் அவற்றின் வடிவம் காரணமாகத் தரப்பட்ட சொல்லாக்க விதிக்குப் பொருத்தமான உள்ளீட்டைத் தருவதில்லை என்பது மிக அறியப்பட்ட நடத்தையாகும். அடிகள் மீதான கட்டுப்பாட்டின் வேறுபட்ட வகைகள் இங்கு விவாதிக்கப்பட்டு எடுத்துக்காட்டுகள் தரப்படும்.

4.5.3.1. ஒலியனியல் தொடர்பாணவை

சில இடங்களில் ஒலியனியல் வடிவம் எந்த

அடிப்படை வடிவு ஒரு சொல்லாக்க விதியின் இடுபொருளாகப் பயன்படும் என்பதை நிர்ணயிக்கும். எடுத்துக்காட்டாக ஆளைக் குறிப்பிடும் -அர் என்ற ஒட்டு எண்களுடன் சேர்ந்து 'இத்தனை பேர்' என்று குறிப்பிடுகையில் - அர் எண்களின் வேர் வடிவத்துடன் தான் சேரும் (எ.கா. ஒரு + அர் = ஒருவர், இரு + அர் = இருவர்). பேர் என்ற கட்டுருபு ஒன்று என்பது தவிர பிற எண்களின் பெயர் வடிவங்களுடன் சேர்ந்து 'இத்தனை பேர்' என்ற பொருளில் வரும் (எ.கா. இரண்டுபேர், மூன்றுபேர்).

4.5.3.2. உருபனியல் தொடர்பானவை

உருபனியல் ஒழுங்கமைப்பில் கடன் வாங்கிய சொற்களும் வடிவாக்கிகளும் (formatives) உருபனியல் அடிப்படையிலும் ஒலியனியல் அடிப்படையிலும் சொந்தமான சொற்களிலிருந்தும் வடிவாக்கிகளிலிருந்தும் வேறுபட்டு இருக்கும் என்பது வெளிப்படையான உண்மை. தமிழ் சம்ஸ்கிருத மொழியிலிருந்து கடன் வாங்கிய சில சொற்களில் அ/அன் என்ற முன்னொட்டு எதிர்மறைப் பொருளைத் தர பயன்படுத்தப்பட்டுள்ளது (எ.கா. நீதி : அநீதி, அர்த்தம் : அனர்த்தம்). சொந்தச் சொற்களில் இம்மாதிரியான எதிர்மறை ஆக்கங்களைக் காண இயலாது. சமஸ்கிருதத் திலிருந்து கடன் வாங்கிய வினை குறித்த சில பெயர்ச் சொற்களிலிருந்து வடிவ மாற்றமும் ஒட்டாக்கமும் செய்து வினையாக்கம் செய்யப்பட்டுள்ளது (எ. கா. தண்டனை- அனை = தண்ட், தண்ட் + இ = தண்டி, பயணம் - அம் = பயண், பயண் + இ = பயணி).

4.5.3.3 சொல்லியல் தொடர்பானவை

சில சொல்லாக்கங்கள் தனிப்பட்ட வேர்களால் ஊக்குவிக்கப்படவோ வரையறுக்கப்படவோ செய்யப்படும். எடுத்துக்காட்டாக வருமானம், வருவாய் என்ற பெயர்ச் சொற்கள், வரு என்ற வினையடி முறையே வாய், மானம் என்ற ஒட்டுகளுடன் இணைந்து ஆக்கப பெற்றவை. இதற்கு இணையாக நாம் கருதும் * செல்வாய், * செல்மானம் , * போவாய், * போமானம் என்ற சொற்கள் இல்லை. குறைந்த

விளைவாக்க அமைப்பொழுங்கு சொல்நிலையாக்கச் சொற்களிலேயே காணப்பெறும்.

4.5.3.4. பொருண்மை தொடர்பானவை

ஆக்கத்தில் படும் அடிகளின் பொருண்மை வரையறையும் மிகச்சாதரணமாகும். சிலசந்தர்ப்பங்களில் ஒரு குறிப்பிட்ட பொருண்மைப் பண்புக்கூறுஒரு சொல்லாக்கச் செயற்பாங்கிற்குத் தேவையான முன் நிபந்தனையாகிறது. எடுத்துக்காட்டாக - *பான்* என்ற கட்டுருபன்ஒரு குறிப்பிட்ட பண்புக்கூறுகளுள்ள வினைகளுடன் மட்டுமே சேர்ந்து கருவிப்பெயராக்கம் செய்யும் (எ.கா. *இணை + பான் = இணைப்பான், துளை + பான் = துளைப்பான், * பதிப்பான், *தின்பான்).*

4.5.4. கூட்டில் பகுதிகளின்சொல்லடி வகைப்பாட்டு வரையறை

ஒரு உள்வட்டப் பெயர்க்கூட்டில் வரையறை செய்கிற தனிமம் எப்பொழுதும் ஒரு உட்தொகுப்பின் முதன்மை விளக்கப்பண்புக் கூறுகளைக் காட்டும். எடுத்துக்காட்டாக *காவல்நாய்* என்ற கூட்டில் ஒரு கூட்டம் நாய்களின் முதன்மை விளக்கப்பண்புக்கூறு *காவல்* என்பதுடன் தொடர்புடையது. *சாய்வு நாற்காலி* என்பதில் முதன்மைவிளக்கப்பண்புக்கூறு அது சாயப் பயன்படும் தன்மையாகும்; அது மெத்தையுள்ளது என்பது முக்கியமல்ல. * *விலங்கு நாய்* போன்ற இனவகைக் கூட்டுகளில் தீர்மானிக்கும் பண்பு தலைமைத் தனிமத்தில் உள்ளடங்கி இருப்பதால் இவ்வகைக் கூட்டுகள் சாத்தியமல்ல. இருப்பினும் இதற்கு விதிவிலக்கு இல்லாமலில்லை. மிகை வடிவாக்கங்களுக்கு (redundant formation) மிகையிலா குறிப்புப் பொருள் இருக்குமானால் அவை ஏற்றுக்கொள்ளப்படும் (எ.கா. *கெண்டை மீன், பனைமரம்).* இது மிகையைத் தவிர்க்கவில்லை என்றாலும் முன்பு கூறிய முதன்மை விளக்கப் பண்புகளுக்கு உகந்ததாய் அமைகிறது.

4.5.5. பொருண்மைப் பொருத்தம்

ஒரு செயற்பாங்கு கூடுதல் விளைவாக்கம் உள்ளதாய்

இருக்கும்போது அதன் பொருண்மை விளைவுகளைக் குறிப்பிட்டுக் காட்ட இயலும். எடுத்துக்காட்டாக விளைவாக்கம் உள்ள -தல்/-த்தல் என்ற வினைசேர் ஒட்டுகள் உருவாக்கும் பெயர்களின் பொருண்மை விளைவுகள் முன்னறிந்து கூறத்தக்க விதத்தில் அமைந்துள்ளன (எ.கா. ஆடுதல், ஓடுதல்). ஆனால் விளைவாக்கமில்லாத -வு உருவாக்கும் பெயர்களின் பொருண்மை விளைவுகளை முன்னறிந்து கூறுவது கடினம் (எ.கா. வரவு, செலவு, நிறைவு). இது சொல்நிலையாக்கம், அமைப்புமுறையாக்கம் என்பனவற்றுடன் தொடர்புடையதாயிருக்கிறது. சொல்நிலையாக்க அல்லது அமைப்பு முறையாக்கச் சொல்லன்களைப் பொருண்மை அடிப்படையில் முன்மதிப்பிட இயலாது; புதிய சொல்லாக்கங்களை முன்மதிப்பிட முடியும். விளைவாக்கம் மிகுந்த ஒட்டுகள் விளைவாக்கமாகப் பயன்படுத்தப்படுகையில் முன்மதிப்பிடக்கூடிய பொருளில் வர வேண்டும். ஆக்கச்சொல் எந்தப்பொருளில் வரும் என்பது உறுதிப்படுகையில் அச்சொல்லாகச் செயற்பாங்கு கூடுதலாகப் பயன்படுத்தப்படுதல் இயல்பு.

4.5.6. ஒப்புமையாக்கம்

சில கலப்பு வடிவ ஆக்கங்கள் தனித்தன்மை வாய்ந்தனவாகவோ மிகக் குறைந்த விளைவாக்கமுள்ள தாகவோ வரலாம். இந்த நிகழ்வுகளைச் சொல்லாக்க விதிகள் வழி விளக்காமல் ஒப்புமையாக்கம் (anology) வழி விளக்கலாம். விளைவாக்கமாக வராமல் ஏற்கனவே இருக்கிற சொல்லனை மாதிரியாகக் கொண்டு வரும் புதிய உருவாக்கத்தை ஒப்புமையாக்கச் சொல்லாக்கம் என வருணனை செய்யலாம். விளைவாக்கத்திற்கும் ஒப்புமையாக்கதிற்கும் வேறுபாடு உள்ளது. ஆனால் ஒப்புமையாக்கமும் ஒரு தொடரான ஆக்கங்களுக்குக் காரணமாகலாம். விவரம் என்ற பெயர்ச்சொல் விவரி என்று வினையாக்கம் பெறும் மாதிரியின்படி பயணம் என்ற பெயர் பயணி என வினையாக்கம் பெறுவதை ஒப்புமையாக்கத்திற்கு

எடுத்துக்காட்டாகக் கூறலாம். உண்மையான ஒப்புமையாக்கம் விதிகளுக்கு உட்படாததாய் அமையும்.

4.5.7. பிற வரையறைகள்

விளைவாக்கப் பொருண்மை பெறாது சொல்நிலையாக்கப் பொருண்மை பெறும் வடிவம் இருப்பது விளைவாக்கத்தை வரையறை செய்யலாம். எடுத்துக்காட்டாக, புல(மை) என்பதிலிருந்து ஆண்பால் மற்றும் பலர்பால் ஆக்கச் சொற்கள் புலவன், புலவர் என வரினும் அதற்கு இணையான புலவி என்ற பெண்பால் ஆக்கச்சொல் இல்லை; ஒத்த ஒலிப்புடைய புலவி என்ற சொல் போலி 'புணர்ச்சி' என்ற பொருளில் ஏற்கனவே இருப்பது இதற்குக் காரணமாகும்.

மொழியியல் அடிப்படையில் அல்லாத பல காரணிகள் விளைவாக்கத்தைத் தடை செய்யலாம். தமிழில் பல புதிய சொல்லாக்க வடிவுகள் அழகுணர்ச்சி காரணமாகத் தள்ளப் பட்டுள்ளன. ஆட்சியாளர் மறுக்கப்பட்டு ஆட்சியர் என்ற ஆக்கம் ஆளப்படுவது இதற்கு எடுத்துக்காட்டாகும். தமிழில் தனதாக்கம் (nativisation) என்பதன் அடிப்படையில் பல வட மொழியாக்கங்கள் தள்ளப்பட்டுள்ளன. வெப்பமானி, காற்றுமானி என்ற வடமொழி விகுதியாக்கங்கள் தள்ளப் பட்டு வெப்பஅளவி, காற்றுஅளவி என்ற தனதாக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இம் மாதிரியான காரணிகள் எல்லாம் தற்போக்காக அமைவதால் சொல்லாக்கம் பற்றிய இலக்கணத்தில் ஒழுங்குமுறையாகக் கணக்கிடஇயலாது என்றாலும் சொல்லாக்கத்திற்கு மேலும் இறுப்பானாக அமையும் இவற்றைப் பற்றிக் குறிப்பிட வேண்டும்.

4.5.8. கிளைன் (Cline) விளைவாக்கம்

மேற்கண்டபடி விளைவாக்கம் கிளைன் போன்ற 'இது' அல்லது 'அது' என்ற இயல் நிகழ்ச்சியல்ல. சில செயற்பாங்கு வேறுசில செயற்பாங்குகளைக் காட்டிலும் விளைவாக்கம் மிகுந்தவை. பிற வரையறைகளை எடுத்துக்கொண்டாலும் இது உண்மையானதாகும். இது பல காரணங்களால் சொல்நிலையாக்கத்தோடு மிக முக்கியத்துவமாகத் தொடர்பு

கொண்டுள்ளது. முன்பு குறிப்பிட்டுள்ளது போல் பொருண்மைப் பொருத்தம் விளைவாக்கத்தோடு ஒன்றுக் கொன்றான எதிரிணைத் தொடர்புடையது. பொருண்மைப் பொருத்தமின்மை அகராதியில் பட்டியலிடப்படவேண்டும். ஒரு சொல்லாக்கச் செயற்பாங்கு எவ்வளவு காலம் விளைவாக்கமாகப் பயன்படுத்தப் படுகிறதோ அதற்குத் தகுந்தாற்போல் செயற்பாங்கில் ஈடுபடத்தக்கக் கணிசமான எண்ணிக்கையிலான அடிகள் அமைப்பு முறையாக்கம் பெற்ற சொல்லன்களைத் தரும். இதனால் செயற்பாங்கிற்கு விளைவாக்கமாக ஈடுபடுத்த மிகக் குறைந்த அடிகளே மிஞ்சும். எனவே இச்செயற்பாங்கு குறைந்த விளைவாக்கமாக அமையும். விளைவாக்கத்திற்கும் சொல்நிலையாக்கத்திற்கும் இடையே உள்ள உறவு சிக்கலானதாகும். செல்வாக்கு ஒருமுகமானதாக இருக்க வேண்டும் என்பதில்லை.

பிற காரணிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டாலும் சொல்லாக்கம் ஒரு வகையான மாறி விதி (variable rule) என்ற அடிப்படையில் பெரும்பாலும் இயங்குகிறது. குறைந்தது சில வகைப்பட்ட ஆக்கங்களில் ஒரு உருபனியல் செயற்பாங்கு ஒரு வகைப் பயன்பாட்டிற்குப் பதிலாக மற்றொரு வகைப் பயன்பாட்டிற்கு விருப்பச்சார்வு காட்டுவதாகத் தெரிகிறது.

எவ்வாறு ஒரு மாறி விதி கூறப்படுகிறது என்பது நம்முடைய உடனடியான அக்கறை அல்ல. விளைவாக்கம் பற்றி விளக்குகையில் விருப்பச்சார்பான விளைவாக்க வகைகள் உண்டு என்பதுதான் முக்கியம். இது விளைவாக்கம் என்பது 'இது' அல்லது 'அது' என்ற தேர்வல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

4.5.9. ஒத்தியைவில் செயல்படும் எல்லைக் கட்டுப்பாடுகள்

எந்த ஒரு ஆக்கமும் எவ்வகையைச் சார்ந்தது என்ற பட்டியலில் தணிக்கை செய்யப்படுகிறது. அது இந்நிகழத்தக்க ஆக்கங்களிலிருந்து வேறுபட்டு நிற்குமானால் அது வேண்டாம் என்று தள்ளப்படும். திட்டவட்டமாக

இவ்வெல்லைக் கட்டுப்பாடுகள் எவ்வாறு செயல்படுகிறது என்பதை நிரூபிக்கத் தேவையான தரவுகளைக் கண்டுபிடிப்பது மிகக் கடினமானதாகும் என்றாலும் முடியாததல்ல. இவ்வாறு இவ்விஷயத்தை அணுகுவது கூடுதல் எளிமைப்படுத்துவதாய் அமையும். சில எல்லைக்கட்டுப்பாடுகளைக் கவனத்திற் கொள்ள வேண்டாம் என்று தோன்றும். ஒரு நிலையில் பல எல்லைக் கட்டுப்பாடுகள் ஒரு சொல்லின் ஆக்கத்தின்போது மீறப்பட வேண்டி வரும். இதனால் ஒரு நிகழத்தக்க ஆக்கம் காரணிகளின் உச்சத்தால் தடைசெய்யப்படலாம். அதாவது ஒரு நிகழத்தக்க ஆக்கத்தைப் பொறுத்தவரையில் எல்லைக் கட்டுப்பாடுகள் தனித்தனியாக அன்றி ஒத்தியைவில் செயல்படும் என்பதாகும். கருத்தியல் அடிப்படையில் வேறுபட்ட எல்லைக் கட்டுப்பாடுகளை முக்கியத்துவங்கள் அடிப்படையில் பேச முடியும்; ஆனால் தற்போதைய நிலையில் இது ஒரு ஊகமாகவே அமையும்.

4.6. விளைவாக்கம் பற்றிய சுருக்கம்

இப்பகுதியில் கூறிய வாதங்களின்படி விளைவாக்கம் என்பதற்கு ஒரு வரையறை வருணனை தர இயலும். ஒரு ஒட்டை விளைவாக்கமுள்ளது என்று கூற வேண்டுமானால் அடிப்படையான வழி, அவ்வொட்டு புதிய சொற்களில் வரவேண்டும் என்பதாகும். இச்சொற்கள் புதிய வடிவங்கள் என்பதைத் தவிர கூடுதலாக வளர்ச்சியடையாது. இல்லாவிடில் அவை நாளடைவில் நிலைநாட்டப்பட்ட வைகளாகி விடும். மாறாக ஒரு விளைவாக்கம் இல்லாத ஒட்டு அது வருமிடங்களை அது இணைந்துவரும் அடிகளின் பட்டியலின் அடிப்படையில் தான் கணக்கிட்டுக் கூறும்படியாக அமையும். விளைவாக்கமில்லாத ஒட்டுகள் தான் ஓரினமாதல் (assimilation) அசையழுத்த அமைப்பொழுங்கு மாற்றம் (change of stress pattern) இவற்றை அனுமதிக்கும் என்பதல்ல.

ஒரு கூட்டம் விளைவாக்க ஒட்டுகளுக்குள் சில பிறவற்றை விட மிகுந்த விளைவாக்கமுள்ளதாயும் இருக்கும். விளைவாக்கத்தரம் அடிகளின் எல்லைக் கட்டுப்பாடுகளின்

கண்டிப்பு என்பதற்கிணங்கவும் அமையும்; அவற்றை அளப்பது சிரமம். ஒரு குறிப்பிட்ட வகையான புதிய சொல்லனின் தேவை, விருப்பத்தேர்வு, அழகுணர்ச்சி, எல்லைக்கட்டுப்பாடு (செவிக்கினிமை) என்பன இதன் பாற்படும்.

எல்லைக் கட்டுப்பாட்டின் கீழ்க் கோடியில் இருப்பது ஒப்புமையாக்கமாகும். இதன்படி ஒரு புதிய வடிவு மட்டும் தான் இருக்கலாம். மேல்நிலை எல்லைக்கட்டுப்பாடு தெளிவின்றி இருக்கிறது. ஒரு ஒட்டு எந்த அடியுடனும் இணையும் என்ற கருத்தில் எல்லைக் கட்டுப்பாடே இல்லாத சொல்லாக்கம் இருப்பது இயலாத ஒன்றாகும். ஒரு ஒட்டு பொருண்மையியல், தொடரியல் அல்லது ஒலியனியல் பண்புக்கூறுகளால் விளக்கத்தக்க எல்லா அடிகளுடன் பயன்படுத்தப்பட்டு வருவது முழு விளைவாக்கமாகும். இக்கருத்தில் கூட ஒரு செயற்பாங்கு முழு அளவில் விளைவாக்கமுள்ளது என்று குறிப்பிட இயலும் என்பது ஐயமாகவேயுள்ளது; ஏனென்றால் ஏற்கனவே இருக்கிற ஒரு சொல்லன் அடிக்கடி இதற்குத் தடையாக அமையலாம்.

குறைவிளைவாக்கம் என்று அழைக்கப்படுவது இரண்டு விஷயங்களாகும். பெரும்பாலும் இது விளைவாக்கமில்லாதது; இதில் பொதுமையாக்கத்திற்காக விரிதரவாக (corpus) பயன்படுத்தப்பட்ட சொல்நிலையாக்க வடிவுகளுள்ளன. மிக அரிதான மற்றொரு சாத்தியம் கூடுதல் கட்டுப்பாடுகள் உள்ள விளைவாக்கம் ஆகும். குறைவிளைவாக்கத்திற்குத் தனியான மதிப்பு அளிக்க இயலாது.

சுருக்கமாக ஒரு உருபனியல் செயற்பாடு எத்தனைப் புதிய சொற்களை உருவாக்கப் பயன்படுகிறது என்பதைப் பொறுத்து கூடுதல் அல்லது குறைந்த விளைவாக்கமுள்ளது என்று கூறலாம்.

5
சொல்லாக்கத்தில் ஒலியனியல் பிரச்சினைகள்

தமிழைப் பொறுத்தவரையில் சொல்லாக்கத்தில் ஒலியனியலின் விளைவுகள் ஆங்கிலத்தைப் போல் அவ்வளவு சிக்கலானதல்ல. ஆங்கிலத்தில் பல ஒலியன்கள் உள்ளன. ஒலியனியல் வேறுபாடும் உறழ்ச்சியும் மிகுந்தது. எனவே ஆங்கிலத்தில் உள்ள ஒலியனியல் சிக்கல்கள் பிற மொழிகளுக்கு, எடுத்துக்காட்டாகத் தமிழுக்குப் பொருந்தாது வரலாம். இருப்பினும் சொல்லாக்கம் பற்றிய கோட்பாட்டை விவாதிப்பதற்காக ஆங்கிலத்தின் சிக்கலும் இங்கு சிறிது பேச வேண்டி வருகிறது. தமிழ்ச் சொல்லாக்கத்தில் வரும் ஒலியனியல் சிக்கல்கள் ஆங்கிலத்திலிருந்து வேறுபடும். தமிழில் அசை அழுத்த அமைப்பு சொல்லாக்கத்தில் எடுத்துக் கூறத்தக்கதான விளைவுகளை ஏற்படுத்தவில்லை. ஆனால் ஆங்கிலத்தைப் பொறுத்த மட்டில் அசை அழுத்த அமைப்பு சொல்லாக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

5.1 கூட்டுகளும் அசை அழுத்தமும்

ஆங்கிலத்தைப் பொறுத்தவரையில் கூட்டுகளுக்கும் அசை அழுத்தத்திற்கும் உள்ள தொடர்பு பற்றிய கருத்து

வேறுபாடுகளில் ஒன்று என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட அசை அழுத்த அமைப்பு ஒரு கூட்டை நிர்ணயிக்கிறதா என்பது தான்.

எந்த ஆங்கில மொழி பேசுபவரும் தந்துள்ள கூட்டிற்கு அழுத்த அமைப்பு தருவதில் முரண்பாடில்லாது இருக்கின்றனர். இம்முரண்பாடின்மையைக் குறிப்பிட்ட மொழி பேசுபவரிடம் மட்டுமன்றி மொத்த மொழிச் சமுதாயத்திலும் காணலாம். தனியாக உச்சரிக்கும் போதான அழுத்த அமைப்பு முக்கியமானதாகும். ஒரு கூற்றின் பகுதியாக வருகையில் அழுத்த அமைப்பு பல விதங்களில் வேறுபடும்.

கூட்டுகளைப் பற்றிய கருத்து வேறுபாடு என்ன வென்றால் எந்தச் சொற்சேர்க்கைகளைக் கூட்டாகக் கொள்வது எந்தச் சொற்சேர்க்கைகளைக் தொடரியல் தொடர்களாகக் கொள்வது என்பது தான். சில ஆய்வாளர்கள் கூட்டை நிர்ணயிக்க அசை அழுத்தத்தை அளவீடாகக் கொள்கின்றனர். அவர்கள் கருத்துப்படி பின்வரும் எடுத்துக்காட்டுகளில் வரிசை எண் 1-இல் வருபவை கூட்டுகளாகும் 2-இல் வருபவை தொடரியல் தொடர்களாகும் (Bauer, 1983:104).

1	2
'bankrate	'bank 'holiday
'carbon-paper	'carbon di'oxide
'garden party	'garden 'city
'paper-clip	'paper 'tiger
'strip-show	'strip- 'poker
'trade name	'trade-'union
'wing-span	'wing-com'mander

வேறு சில ஆய்வாளர்கள் வரிசை எண் 1-இலும், 2-இலும் வருபவைகளெல்லாம் கூட்டுகள் தான். அசை அழுத்தத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்ற கருத்தை உடையவராய் இருக்கின்றனர். கூட்டுகளுக்கும் தொடரியல் தொடர்களுக்கும் இடையே வேறுபாட்டைக் காண

விரும்புகிறவர் பெரும்பாலும் கூட்டுகள் 'சொற்கள் போன்றவை' என்ற கருத்தைக் கூறுகின்றனர். இடம்பெயர்தல் (positional mobility) (சொல் வாக்கியத்தில் ஒரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாறுதல் அல்லது வெவ்வேறு இடங்களில் வருதல்), குறுக்கீடு செய்யப்படமுடியாமை (uninterruptability) (ஒரு சொல்லுக்குள் வடிவாக்கிகளுக்கிடையில் வேறு ஏதாவது தனிமம் வர இயலாமை), அகநிலைப்பாடு (internal stability) (சொல்லுக்குள் வடிவாக்கிகளை மீள்நிரல்படுத்த இயலாமை) என்பன போன்ற அளவீடுகள் சொற்றன்மையை நிர்ணயிக்கும். ஆனால் இந்த அளவீடுகள் ஓரசையழுத்தமுள்ள வரிசை எண் 1-இல் வருபவைகளையும் ஈரசையழுத்தமுள்ள 2 -இல் வருபவைகளையும் பிரித்தறியாது. இடம்பெயர்தலைப் பொறுத்தவரையில் ஓரசை அழுத்த மற்றும் ஈரசையழுத்த பெயர் + பெயர்கட்டுமானங்கள் ஒரே மாதிரியாகத்தான் செயல்படுகின்றன; இரண்டும் ஒரே வாக்கியத்தில் எழுவாயாகவும் செயப்படுபொருளாகவும் வரலாம்; இரண்டையும் செயப்பாட்டு மாற்றம் (passivization) போலிப்பிளவு மாற்றம் (pseudo-clefting) போன்ற பெயர்ச்சி மாற்றத்தால் இடம் பெயர்க்கலாம்.

எ.கா.

The 'wing com'mander saw the 'strip-show

The 'strip show was seen by the 'wing com'mander

பெயர் + பெயர் சொல்லடி வகைபாடு அடங்கும் பெயர்த் தொடர் இடம்பெயர்வதனால் ஓரசையழுத்தமுள்ளதா ஈரசையழுத்தமுள்ளதா என்ற வேறுபாடின்றி அவற்றின் இரு பகுதிகளும் சேர்ந்து இடம் பெயரும்; இந்த அளவில் இருவகையான சொல்லடி வகைபாடுகளும் குறிக்கீடு செய்யப்படமுடியாதவை. ஆனால் இந்தக் குறிப்பிட்ட அளவீடு அவ்வளவு தெளிவானதல்ல. ஏனென்றால் 'அஇஆ' என்ற கலப்பு வடிவு வரத்தக்கதான 'அஆ' என்ற கலப்பு வடிவில் வரும் 'இ' என்ற தனிமம் 'அ' உடனோ 'ஆ' உடனோ சேர்ந்து ஒன்றாக வரவியலுமாதலால் 'அஇஆ' என்ற

(இடையூறு செய்யப்பட்ட) வடிவு வருதலைக் 'குறிக்கீடு செய்ய முடியாமை' என்ற அளவீட்டுக்கு மாறானது என்று எடுத்துக்கொள்ள இயலாது. இந்த அளவீடு மறுக்கப்பட வேண்டுமானால் அடிப்படை வடிவின் பாகங்களை எளிதாகக் கூட்டவோ குறைக்கவோ இடையூறு செய்யவோ முடியும் என்று இருக்க வேண்டும். ஆனால் பின்வரும் அட்டவணை இதற்கு மாறான நிலையைக் காட்டுகின்றது (Bauer,1983:106).

	Base Form	interrupted form	incorrectly interrupted form
ஆக்கம்	Sensationism	Sensationalism	*Sensationism
ஒரசையாக்கத் திற்குற்பட்டது	Library book	Library comicbook	*Library boring book
ஈரசையாக்கத் திற்குட்பட்டது	City office	City insurance office	*City big office

சொற்றன்மை (Wordness) என்பதற்கான மூன்றாவது அளவீடு அகநிலைப்பாடாகும். இந்த அளவீடும் தெளிவானதல்ல. இந்த அளவீட்டின் வலுவான கூற்றுப்படி ஒரு சொல்லுக்குள் வரும் தனிமங்களை மீள்நிரல்படுத்த இயலாது. ஆனாலும் மீள்நிரல்படுத்தப்பட்டும் சொல்லாகவே வரும் எடுத்துக்காட்டுகளும் உள்ளன (Bauer, 1983:107).

எ.கா.

	அஆ	ஆஅ
ஆக்கம்	Biblicist	Biblistic
ஒரசையழுத்தத்திற்கு உட்பட்டது	armchair	Chair-arm
ஈரசையழுத்தத்திற்கு உட்பட்டது	garden city	city garden

சில ஆய்வாளர்கள் ஓரசையழுத்தப் பெயர் + பெயர் என்ற சொல்லடி வகைப்பாட்டிற்கும் ஈரசையழுத்தப் பெயர்+ பெயர் என்ற சொல்லடி வகைப்பாட்டிற்கும் பொருள் வேறுபாடு வரலாம் என்று கூறுவர். எடுத்துக்காட்டாக, day time என்பது ஓரசையழுத்தம் காரணமாய் bed time, night time போன்றவற்றுடன் உட்கிடை வேற்றுநிலையில் (implicit contrast) வருவதைக் குறிப்பிடுவர். இது இப்படியென்றால், எல்லா கூட்டுகளும் ஓரசையழுத்தம் உடையதாய் வரவேண்டும். ஆனால் இது உண்மையல்ல (எ.கா.'cherry 'brandy vs 'apricot 'brandy). வேறு ஒரு கருத்து என்னவென்றால் ஓரசையழுத்தம் நிரந்தரமான சொல்லுறவுடன் கூடியது; ஆனால் ஈரசையழுத்தம் தொடரியல் உறவுடன் கூடியது என்பதாகும். சொல்நிலையாக்கம் பெற்ற கூட்டுகள் ஓரசையழுத்தம் பெறுவது இயல்பு என்றாலும் இந்த வேறுபாடு ஈரசையழுத்தம் 'Regent Street' - உக்கும் 'Regent 'Terrace- உக்கும் உள்ள வேறுபாட்டையோ 'literature book- உக்கும் 'literature 'textbook உக்கும் உள்ள வேறுபாட்டையோ கணிக்க இயலாது;மேலும் நிரந்தர சொல்லுறவுள்ள 'world 'war என்ற சொல் ஏன் ஈரசையழுத்தம் உள்ளது என்பதையும் கவனிக்க இயலாது.

ஆங்கிலப் பெயர் + பெயர் குழுக்களில் அசையழுத்தம் இரு பெயர்களில் இரண்டாவது பெயரால் கட்டுண்டது என்று லீஸ் (Lees 1960:120) கூறுவார் (எ.கா.'literature book vs 'literature 'textbook, 'physical book vs 'physics 'textbook). பார் (Bauer, 1977) இம்மாதிரியான இணைகளில் எப்பொழுதும் ஒன்றாவது சொல் நிலையாக்கம் பெற்றிருக்கும் என்றும் லீஸின் கருத்து விளைவாக்கக் கூட்டுகளுக்குப் பொருந்தும் என்றும் கூறுகிறார். இது எப்பொழுதும் உண்மையானதல்ல. சில சமயங்களில் கூட்டுகளில் பங்கெடுக்கும் சொல்லன்களைப் பொறுத்தமையாத குறிப்பிட்ட அசை அழுத்த அமைப்பை எதிர்பார்க்கும் பொருண்மை அமைப்புகளும் உண்டு (எ.கா. 'lawbook vs 'cardboard 'book).

துரதிருஷ்டவசமாக லீஸின் பிரேரணை அவ்வளவு

பயனுள்ளதல்ல. லீஸ் சொன்ன கண்டுண்ட அமைப்புகள் மிகவும் குறைவு; பெரும்பாலான ஈரசை அழுத்தத்திற்குற்பட்ட கூட்டுகள் சொல் கட்டுமானத்திற்கு உட்பட்டு வராமல் சொல் கட்டுமானத்தின் பொருண்மை முரண்பாட்டிற்கு உட்பட்டு வரும். ஒரு சில ஈரசை அழுத்தமுள்ளவைகூட பொதுவான இயல்புக்கு மாறாகச் சொல்நிலையாக்கம் பெற்றுள்ளன (எ.கா. re'turn ticket vs 'season ticket). இதுவரை விவாதிக்கப்பட்ட செய்திகள் பின்வருவன:

ஒன்று 'ஒரு சொல் இல்லையா' என்பதற்குத் தந்துள்ள அளவீடுகளிலிருந்து ஒரு அசைஅழுத்தத்திற்குட்பட்ட மற்றும் ஈரசை அழுத்தத்திற்குட்பட்ட பெயர்+பெயர் சொல்லடி வகைபாடுகளை வேறுபடுத்த இயலாது. பொதுவாக ஓரசை அழுத்தத்திற்கும் ஈரசை அழுத்தத்திற்குமுள்ள வேறுபாடு பொருண்மை வேறுபாட்டுடன் தொடர்புடையதல்ல. ஆனால் அசை அழுத்த அமைப்பு விளைவாக்கமுள்ளதாய் இருந்தால் பெயர்+பெயர் சொல்லடி வகைபாடுகளைச் சொல் கட்டுமானம் உள்ளதாய்க் காணலாம். இவைத் தெரிவிப்பது என்னவென்றால் ஓரசை அழுத்தமுற்ற சொல்லடி வகைப்பாட்டிற்கும் ஈரசை அழுத்தமுற்ற சொல்லடி வகைப்பாட்டிற்கும் உள்ள வேறுபாடு இருவகையான தொடரியல் அமைப்புகளுக்குள்ள வேறுபாடு அல்ல; தனியொன்றான கூட்டுகளின் குழுவில் படும் எதிர்பாராத புறநிலை அமைப்புக்கூறுபாடாகும். பெயர்+பெயர் தொடரியல் தொடரிலிருந்து வேறுபட்ட கூட்டு என்பதை விட ஈரசை அழுத்தக்கூட்டிலிருந்து வேறுபட்ட ஓரசை அழுத்தக்கூட்டு என்று வேறுபடுத்துவது புத்திசாலித் தனமானது.

5.2. ஆக்கங்களும் அசையழுத்தமும்

ஆங்கில ஆக்கங்களுக்கு அசை அழுத்தம் வகுத்தமைப்பதிலும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. கருத்து வேறுபாடு தரவு பற்றியதல்ல. எந்த அளவுக்கு ஆக்கங்களில் அசை அழுத்தத்தைப் பொது விதிகளால் முன்னறிவிக்க இயலும் என்பதைப் பற்றியதாகும். மூன்று வகையான

ஒட்டுகள் உள்ளன. முதல் வகையில்அடியில் வரும் அதே அசையில் ஆக்கத்திலும் அசை அழுத்தம் வரும் (எ.கா. 'perish vs 'perishable); இரண்டாவது வகையில் ஒட்டு முக்கிய அசை அழுத்தத்தைக் கொண்டிருக்கும் (எ.கா. 'tonsil vs tonsil 'litis); மூன்றாவது வகையில் ஒட்டுக்கு முன்வரும் அசையில் ஆக்கத்தின் அசை அழுத்தம் வரும் (எ.கா. symbol vs sym 'bolic). ஆக்கங்களின் அசை அழுத்த அமைப்பு மேற்கண்டவாறு மூன்று வகைகளாகப் பகுக்கத்தக்க அளவுக்கு எளிதானதல்ல. சொல்லின் ஈற்றுப்பகுதி உண்மையான பின்னொட்டாய் இருந்தால் தான் மேற்சொன்ன அசைஅழுத்த அமைப்புகள் பொருந்தும்.

ஆங்கில அசை அழுத்த அமைப்பு விதிகள் பற்றிய பொதுவான கருத்து ஒற்றுமை இல்லையென்றாலும், ஆங்கில சொற்களில் பெரும்பாலானவற்றிற்கு அசை அழுத்தத்தைப் பொது விதிகளால் உருவாக்கலாம் என்ற கருத்து ஒற்றுமை இருக்கிறது. தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டுள்ள இவ்வேட்டில் ஆங்கிலத்தில் அசை அழுத்தம் குறித்து கூடுதலாகப் பேசத் தேவையில்லாத காரணத்தால் ஆங்கில அசை அழுத்தம் பற்றிக் கூறுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

5.3. விட்டிசை மற்றும் இடம் விட்டு இடம் எழுதுகை

சொற்களுக்கு இடையில் விட்டிசை வரலாம்; இவ்விட்டிசைச் சொல் எல்லையைத் தெரிந்துக் கொள்ள உதவலாம். ஆனால் பேச்சில் ஏற்படும் விட்டிசையைக் கொண்டு சொல் எல்லையைத் தீர்மானிப்பது விபரீதமாக முடியலாம்; ஏனென்றால் ஒரு தொடரே விட்டிசையின்றி உச்சரிக்கப்படலாம். எழுத்துத் தமிழில் சொற்களுக்குள் இடம் விட்டு எழுதுவது சொல் எல்லையைக் கணிக்கப் பயன்படலாம்; ஆனால் சில சமயங்களில் ஒரு தொடரே அதன் சொற்களுக்குள் இடம்விட்டு எழுதப்படாமல் வரலாம்; அச்சடிப்பதற்கு ஏதுவாக சில சமயம் சொற்கள் இடைவெளியின்றி ஒன்றாக இணைக்கப்படலாம். எனவே இடவெளியைச் சொல்லின் எல்லையாகக் கொள்ள இயலும்

என்றாலும் சொல்லுக்குச் சொல் இட வெளியிடுப்படுவதை எதிர்பார்க்க இயலாது. இடம் விட்டு எழுதுவதும் விட்டிசையும் ஒன்றையொன்று உணர்த்துவது சாத்திய மென்றாலும் விட்டிசைக்கும்இடத்திலெல்லாம் இடம் விடப்படும் என்றோ இடம் விடப்படும் இடத்திலெல்லாம் விட்டிசை வரும் என்றோ தீர்மானமாகக் கூற இயலாது.

5.4. சொல்லசையமைப்பு

எழுத்துத் தமிழ் ஒருவகையான சொல்லசை யமைப்பைச் சொற்களிடம் எதிர்பார்க்கிறது: எல்லா உயிர்களும் சொல்லின் முதலில் வரும்; எ தவிர்த்த பிற உயிர்கள் சொல்லின் ஈற்றில் வரும். மெய்யெழுத்துக்களில் க், ச், ஞ், த்,ந்,ப்,ம்,ய்,வ் என்பன சொற்களின் முதலில் வரும்; க்,ச்,ஞ்,ட்,த்,ந்,ப்,வ்,ற் என்பன இயற்சொற்களின் ஈற்றில் வரா; மெய்ய்டுக்குகள் (மெய்மயக்கங்கள்) சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரா; மூன்றடுக்கு மெய்கள் சொல்லின் இடையிலும் வரா. மேற்கண்டசொல்லமைப்புச் செய்திகள் இயற்சொற்களின் எல்லைகளை அறியப் பயன்படலாம். ஆனால் புறச்சந்தி ஈற்றெழுத்து விதியைப் புறந்தள்ளுகிறது. எடுத்துக்காட்டாகப் புறச்சந்தியால் *மாங்காயை+தின்றான்* என்ற தொடர் *மாங்காயைத்தின்றான்* எனவும் *வீட்டுக்கு+போனான்* என்ற தொடர் *வீட்டுக்குப் போனான்* எனவும் வரும். சொற்களுக்குள் இடம் விட்டு எழுதப்பட்டால் ஈற்றொலியின் கட்டுப்பாட்டால் *மாங்காயைத்* என்பதன் சொல் வடிவு *மாங்காயை* எனவும், *வீட்டுக்குப்* என்பதன் சொல்வடிவு *வீட்டுக்கு* என்றும் அறிந்து கொள்ளலாம்; ஆனால் சொற்களுக்குள் இடைவழியின்றி, *மாங்காயைத்தின்றான் வீட்டுக்குப்போனான்* என்று எழுதப்பட்டால் ஈற்றொலியின் விதி தோல்வியுறும். சொல் அசைகளின் எண்ணிக்கை சில அனுமானங்கள் செய்ய உதவலாமேயன்றி தீர்மானங்களக்கு உதவாது; தமிழில் பெரும்பாலான தனிநிலைச் சொற்கள் ஓரசை, ஈரசை, மூவசை, நாலசை, ஐயசை என்ற வகுப்புகளில் அடங்கும்; திரிபுச் சொற்களும் கூட்டுச்சொற்களும் இவற்றிற்கும்

மேம்பட்ட அசை எண்ணிக்கையுள்ள சொற்களை உருவாக்கலாம்; அசைகளின் எண்ணிக்கை சொற்கள் தனிநிலையிற்பட்டனவா அல்லது கலவை நிலையிற்பட்டனவா என்பதை அனுமானிக்கப் பயன்படலாமேயன்றி தீர்மானிக்கப் பயன்படாது.

5.5. சொல்லாக்கத்தின் கூறு மாறுபாடு

சொல்லாக்கத்தின் பயனாய் அடுத்தடுத்து உடனிணைந்து பெரும்பாலும் நிறுவப்பெற்ற வடிவுகளில் வருவது ஒலியனியல் வடிவ மாற்றமாகும். ஒன்றோடொன்று தொடர்புடையதாய் ஒரு ஒலியனிலாவது வேறுபட்டுவரும் ஒரு உருபனின் வெளிப்பாடுகள் உருபொலியனியல் மாற்று வடிவங்கள் எனப்படும். சரியாகச் சொன்னால் உருபொலியனியல் மாற்று வடிவங்கள் சொல்லாக்கச் செயற்பாட்டால் கட்டுண்ட மாற்றுருபன்களாகும். மரபிலக்கணங்கள் இம்மாதிரியான மாறுபாட்டைப் புணர்ச்சி விதிகளால் குறிப்பிடும். தமிழ்ச் சொல்லாக்கத்திற்குத் தேவையான புணர்ச்சி விதிகள் பெரும்பாலும் தெளிவானதாகும். இவ்விதிகளில் சில விளைவாக்க முள்ளவை; சில ஒருசில வடிவுகளுக்கேயுரிய விளைவாக்கமில்லாத விதிகளாகும். சொல்லாக்கத்தின்போது ஒட்டுகள் அடியுடன் சேர்ந்து ஒட்டாக்கம் செய்யும்போதோ சொற்கள் தம்மில் சேர்ந்து கூட்டாக்கம் செய்யும்போதோ ஒலியனியல் மாற்றங்கள் நிகழலாம்அல்லது நிகழாதும் வரலாம். நிகழ்வுறும் மாற்றங்களைத் தமிழ் மரபிலக்கணப்படி மூன்று வகையாகப் பிரிக்கலாம்: (1) தோன்றல் (2) திரிதல் (3)கெடுதல். ஒரு காலக்கட்டத்தில் பயன்பாட்டிலிருந்த புணர்ச்சி விதிகள் வேறொரு காலகட்டத்தில் பயன்பாட்டிலிருந்து நீக்கப்படலாம். இதனால் மாற்றங்களுக்குட்பட்ட ஆக்கவடிவுகள் புதிய வடிவை அடையலாம் அல்லது ஒலியனியல் நிலையில் சொல்நிலையாக்கம் அடையலாம். முதலில் புணர்ச்சி அடிப்படையிலான பொது விதிகள்யாவை எனத் தெரிந்து கொண்டு அவ்விதிகள் எந்த அளவுக்குப் பயன்பாட்டில் உள்ளது, அவற்றின் கட்டுமானங்கள் யாவை, புறனடையாவை என்று ஆயலாம்.

பொதுவாக நிலைமொழி ஈற்றில் வரும் ஒலியின் அடிப்படையிலும் வருமொழி முதலில் வரும் ஒலியின் அடிப்படையிலும் உருபொலியன் மாற்றம் ஏற்படும். முதலில் பொதுப்படையான உருபொலியனியல் மாற்றங்களையும் அவற்றிற்கான புணர்ச்சி விதிகளையும் பார்ப்போம்.

5.5.1. கூட்டாக்கப் புணர்ச்சிவிதிகள்

கூட்டாக்கப் புணர்ச்சி விதிகளைப் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

1. உயிர்+உயிர்

1.1. இ,ஈ,ஐ என முடியும் உயிரீற்றுப் பெயர்கள் உயிர்த் தொடக்கப் பெயர்களுடன் சேரும்போது ய் என்ற உடன்படுத்தி இடையில் வரும்

எ.கா.

எரி+அம்பு > எரியம்பு, தீ+அடுப்பு > தீயடுப்பு

கலை+ஆர்வம் > கலையார்வம்

1.2. ஆ,ஊ என முடியும் மற்றும் (மெய்)+ குற்றுயிர்+ மெய்+ உ என்ற அசையமைப்புள்ள பெயர்கள் உயிர்த்தொடக்கப்பெயர்களுடன் சேரும்போது வ் என்ற உடன்படுத்தி இடையில் வரும்.

எ.கா.

கடா + ஆடு > கடாவாடு, மா + இலை > மாவிலை, பூ + இனம் > பூவினம், பசு + இனம் > பசுவினம், மது + ஆலை > மதுவாலை, பொது + உடைமை > பொதுவுடைமை

1.3. - நெட்டுயிர் + ட் + உ என்ற அசை அமைப்பில் முடியும் மற்றும் {குற்றுயிர்/நெட்டுயிர்} +ற் + உ என்ற அசையமைப்பில் முடியும் பெயர்கள் உயிர் தொடக்கப் பெயர்களுடன் சேரும் போது உ கெடட், ற் என்பன இரட்டும்.

எ.கா.

காடு + ஆறு > காட்டாறு, மாடு + இனம் > மாட்டினம், கயிறு + ஊஞ்சல் > கயிற்றூஞ்சல், வயிறு + எரிச்சல் > வயிற்றெரிச்சல், வீடு + எண் > வீட்டெண், கயிறு + ஏணி > கயிற்றேணி

1.4., 1.2 மற்றும் 1.3 அசை அமைப்புள்ள பெயர்கள் தவிர்த்த அசை அமைப்புள்ள பெயர்கள் அதாவது மெய் + மெய் + உ என்ற ஈற்றசை அமைப்புள்ளதோ உயிர் நெடில் + {ச்/த்} + உ என்ற ஈற்றசை அமைப்புள்ளதோ மெய் + குற்றுயிர் + மெய் + உ என்ற ஈற்றமைப்புள்ள ஆனால் இரண்டிற்கும் மேற்பட்ட அசை அமைப்புள்ளதோ உயிர் தொடக்கப் பெயர்களுடன் சேரும் போது உகரம் கெடும்.

எ.கா.

வண்டு+இனம் > வண்டினம், மார்பு+அடைப்பு > மார்படைப்பு, காசு+ஓலை > காசோலை, காது+அடைப்பு >காதடைப்பு, மதகு+ஓட்டை > மதகோட்டை, கதவு +அடைப்பு> கதவடைப்பு

2. உயிர்+மெய்

2.1. {குற்றுயிர்/நெட்டுயிர் } + {ட்/ற் } + உ என்ற ஈற்றசை அமைப்புள்ள நிலைமொழிப் பெயரைத் தொடர்ந்து க்,ச்,த்,ப் முதலாயுள்ள வருமொழி வரும்போது நிலைமொழியின் ட்,ற் என்பன இரட்ட வருமொழியின் க்,ச்,த்,ப் என்பன மிகும்.

எ.கா.

ஆடு+கால் > ஆட்டுக்கால், மாடு+சந்தை > மாட்டுச்சந்தை, வீடு+தோட்டம் > வீட்டுத்தோட்டம், ஆறு+பாலம் > ஆற்றுப்பாலம்;

(ஆடு+பால்> ஆட்டும்பால், ஆறு+கரை> ஆற்றங்கரை என்பன விதிவிலக்கான ஒலியனியல் நிலையாக்கம் பெற்ற வடிவுகளாகும்.)

2.2. {குற்றுயிர்/நெட்டுயிர்} + {ட்/ற்} + உ என்ற ஈற்றசை அமைப்புள்ள நிலைமொழிப்பெயரைத் தொடர்ந்து ஞ்,ந்,ம்,ய்,வ் முதலாயுள்ள வருமொழி வரும்போது நிலைமொழியின் இறுதி அசையில் வரும் ட்,ற் என்பன இரட்டும்.

எ.கா.

வீடு+ஞாபகம் > வீட்டு ஞாபகம், சேறு +நண்டு > சேற்றுநண்டு, காடு+மான்>காட்டுமான், காடு+யானை > காட்டு யானை, வயிறு+வலி> வயிற்றுவலி

2.3.,2.1,2.2 தவிர்த்த உயிரீற்று நிலைமொழிப் பெயர்களைத் தொடர்ந்து வரும் வருமொழியின் முதலாய் வரும் க்,ச்,த்,ப் இரட்டும்.

எ.கா.

கடா+கன்று >கடாக்கன்று, பலா+பழம் > பலாப்பழம், தீ+கனல் > தீக்கனல், தீ+சட்டி > தீச்சட்டி, பூ+கடை > பூக்கடை, பூ+செடி >பூச்செடி, பூ+தட்டு > பூத்தட்டு, மத்தாப்பு+பெட்டி > மத்தாப்புப்பெட்டி, படி+கட்டு > படிக்கட்டு, புலி+பால்> புலிப்பால்.

மா என்ற சொல் விதிவிலக்காக க்,ச்,த்,ப் தொடக்கவருமொழியுடன் புணரும்போது அவற்றின் ஓரிட முக்கொலி மிகப் புணரும். எ.கா. மா+காய் > மாங்காய், மா+செடி > மாஞ்செடி, மா+தளிர்> மாந்தளிர், மா+பலகை> மாம்பலகை; இதுபோலவை பூ என்ற சொல் விதிவிலக்காக பூ+காற்று>பூங்காற்று, பூ+சோலை> பூஞ்சோலை, பூ+தளிர்> பூந்தளிர் எனப் புணரும்; மேலும் பசு+பால் > பசும்பால், தென்னை+காய்> தேங்காய், அடுப்பு+கரை> அடுப்பங்கரை என்ற உருபொலியனியல் மாற்றங்களும் சீரான புணர்ச்சி விதியால் விளைந்தனவல்ல; விதிவிலக்கானவைகளாகும். இத்தகைய உருபனியல் மாற்றங்கள் தற்காலத்தில் செயற்பாட்டிலில்லை. இத்தகைய விதிவிலக்கான மாற்றமுற கூட்டாக்கம் செய்யும் ஆக்கங்களை ஒலியனியல் நிலையிலான சொல்நிலையாக்கம் எனலாம்.

2.4. உயிரீற்று நிலைமொழிப்பெயர்களைத் தொடர்ந்து வரும் வருமொழியின் முதலாய் வரும் ஞ்,ந்,ம்,ய்,வ் என்பன மிகவோ திரியவோ கெடவோ செய்யாது.

எ.கா.

அரை+ஞாண் > அரைஞாண், பலி+நாள் > பலிநாள், காலி+மனை>காலிமனை, பூ+மாலை> பூமாலை, மலை+யானை> மலையானை, புலி+வால்> புலிவால்

3. மெய்+உயிர்

3.1. (மெய்) + குற்றுயிர் +மெய் என்ற அசை அமைப்புடைய ன்,ய்,ல்,ழ்,வ் என்பன ஈறாக வரும் நிலைமொழிப்பெயரைத் தொடர்ந்து உயிர் வரும்போது ன்,ய்,ல்,ழ்,வ் என்பன இரட்டும்.

எ.கா.

கண்+ஆடி >கண்ணாடி, நெய்+அப்பம் > நெய்யப்பம், கல்+உப்பு > கல்லுப்பு, முள்+எலும்பு > முள்ளெலும்பு, பொன்+ஓடம் > பொன்னோடம்.

3.2. -அம் ஈற்று வருமொழிப் பெயரைத் தொடர்ந்து உயிர் வரும் போது ம் கெட வ் என்ற உடன்படுத்தி இடையில் வரும்.

எ.கா.

மரம்+அட்டை > மரவட்டை, மனம்+ உளைச்சல் > மனவுளைச்சல், வெள்ளம்+ஓட்டம்> வெள்ளோட்டம், மனம்+ஊஞ்சல் > மனவூஞ்சல். பணம்+ஆசை > பணத்தாசை என்பன விதிவிலக்கான ஒலியனியல் நிலையாக்கம் பெற்ற வடிவுகளாகும்.

3.3. ர்,ழ் ஈற்று நிலைமொழிப்பெயர்கள் மற்றும் 2.3.1. தவிர்த்த ன்,ய்,ள் ஈற்று நிலைமொழிப் பெயர்களைத் தொடர்ந்து உயிர்தொடக்க வருமொழி வரும்போது எந்தவித மாற்றமும் ஏற்படுவதில்லை. இருப்பினும் நிலைமொழி ஈற்று மெய்யும் வருமொழி ஈற்று உயிரும் சேர்ந்து மெய்+உயிர் என்ற அசையை உருவாக்கும்.

எ.கா.

மலர்+அம்பு > மலரம்பு, இதழ்+ஓரம் > இதழோரம், அரண்+ஆக்கம் > அரணாக்கம், பேய்+ஆட்டம் > பேயாட்டம், கால்+உளைச்சல் > காலுளச்சல், தோல்+எலும்பு > தோலெலும்பு, தேன்+ஈச்சை > தேனீச்சை.

4. மெய்+மெய்

4.1. ல்,ள் என முடியும் நிலைமொழிப் பெயர்கள் க்,ச்,ப் எனத் தொடங்கும் வருமொழிப் பெயர்களுடன் சேரும்போது ல்,ள் என்பன ற்,ட் என விருப்பு மாற்றமுறும்.

எ.கா.

கடல்+கரை > கடற்கரை, கடல்கரை

பாடல்+சுவை > பாடற்சுவை, பாடல்சுவை

பால்+குடம் > பாற்குடம், பால்குடம்

முள்+செடி > முட்செடி, முள்செடி

கள்+குடம் > கட்குடம், கள்குடம்

காந்தள்+பூ > காந்தட்பூ, காந்தள்பூ

ஒரு சில இடங்களில் (பெரும்பாலும் ஓரசையாய் வருகையில்) கட்டாயமாகவே மாற்றமுறும். இதை நிலையாக்கம் பெற்ற ஒலியனியல் மாற்றம் எனலாம்.

எ.கா.

நாள் + கூலி > நாட்கூலி, பல் + பொடி > பற்பொடி , பல் + பசை > பற்பசை, கல் + காலம் > கற்காலம்.

4.2. நல் என்ற பெயரடை க் ,ச் ,ப் எனத் தொடங்கும் வருமொழியுடன் நற் என கட்டாய மாற்றமுறவும் ம், ந் எனத்தொடங்கும் வருமொழியுடன் நன் என கட்டாயமாற்றமுறவும் புணரும்.

எ.கா.

நல் + காலம் > நற்காலம், நல் +சுவை > நற்சுவை, நல்+பேறு > நற்பேறு, நல்+ மலை > நன்மலை, நல் + நடத்தை > நன்நடத்தை.

4.2. -ன் என முடியும் ஓரசை நிலைமொழிப்பெயர்கள் க், ச், ப் எனத்தொடங்கும் வருமொழிப்பெயர்களுடன் புணரும் போது ன் என்பது ற் என மாற்றமுறும்.

எ.கா.

பொன் + காலம் > பொற்காலம், பொன் + சங்கிலி > பொற்சங்கிலி, பொன்+ பாதம் > பொற்பாதம்.

4.3. குற்றுயிர் + மெய் என்ற அசை அமைப்புடைய ல் அல்லது ன் ஈற்று நிலை மொழிப்பெயர் அல்லது பெயரடையைத் தொடர்ந்து த் தொடக்க வருமொழிப் பெயர் வரும்போது ல், ன் என்பன ற் - ஆகத் திரிவதோடு வருமொழி முதல் த் - ஆனது ற்- ஆகவும் திரியும்.

எ.கா.

கல்+தாழை > கற்றாழை, பொன் + தாமரை > பொற்றாமரை, நல்+தாழ் > நற்றாழ்.

மேற்கண்ட புணர்ச்சி விதி இலக்கியத் தமிழுக்குத்தான் பொருந்தும். நற்கால அல்லது சாதாரண தமிழில் இவ்விதி பயன்பாட்டில் இல்லை. ஒலியனியல் நிலையாக்கம் பெற்ற ஒருசில வடிவுகள் சாதாரணத் தமிழிலும் பயன்படுத்தப் படலாம் (எ.கா. கற்றாழை); புதிய ஆக்க வடிவுகளில் மேற்கண்ட விதியின் தாக்கம் காணப்படவில்லை (எ.கா. புல்+ தரை > புல்தரை, கடல் + தோணி > கடல்தோணி).

4.4. - அம் என்ற ஈற்றுப் பெயர்களைத் தொடர்ந்து ஞ், ந், ம், ய், வ் தொடக்க வருமொழி வரும் போது ம் கெடும்.

எ.கா.

உலகம் + ஞானம் > உலகஞானம் , மணம் + நாள் > மணநாள், மரம் + மண்டை > மரமண்டை, மதம் + யானை > மதயானை , வீரம் + வாள் > வீரவாள்

4.5. அம் ஈற்றுப் பெயர்களைத் தொடர்ந்து க், ச், த், ப் தொடக்க வருமொழி வரும்போது ம் கெட க், ச், த், ப் என்பன இரட்டும்.

எ.கா.

மரம் + கட்டை > மரக்கட்டை , ஊட்டம் + சத்து > ஊட்டச்சத்து, இதயம் + தாமரை > இதயத்தாமரை, மனம் + பால் > மனப்பால்.

4.6. ய், ர், ழ் ஈற்று நிலைமொழிகளைத் தொடர்ந்து வரும் க், ச், த், ப் தொடக்க வருமொழியின் க், ச், த், ப் என்பன இரட்டும்.

எ.கா.

பொய் + கால் > பொய்க்கால் , தாய் + பால் > தாய்ப்பால், கார் + பருவம் > கார்ப்பருவம் , தமிழ் + பாட்டு > தமிழ்ப்பாட்டு

5.5.2. கூட்டாக்கப் புணர்ச்சி விதியும் தொடராக்கப் புணர்ச்சியும்

சொல்லாக்கப் புணர்ச்சி விதிகள் திரிபு மற்றும் தொடராக்கப் புணர்ச்சிகளிலிருந்து வேறுபடுகிறதா என்பதுதான் நம்முடைய கேள்வி. கூட்டாக்கப் புணர்ச்சி விதிகள் மற்றிரு வகைப் புணர்ச்சி விதிகளிலிருந்து சில சூழல்களில் வேறுபடுவதாய்த் தோன்றுகின்றது.

5.5.2.1. கூட்டுகளில் வலிமிகுதல்

பெயர்+பெயர் கூட்டுப் பெயர்களில் உயிரீற்று மற்றும் ய், ர், ழ் ஈற்று நிலைமொழியைத் தொடரும் வருமொழி முதல் க், ச், த், ப் மிகும்.

எ.கா.

விழா+ கோலம் > விழாக்கோலம், கோழி + கறி > கோழிக்கறி, காட்டு+ தீ > காட்டுத்தீ, தீ+ சட்டி > தீச்சட்டி, காட்டு+பூனை > காட்டுப்பூனை, பூ+சரம் >பூச்சரம், உணவு+பழக்கம் > உணவுப்பழக்கம், தமிழ்+பாட்டு > தமிழ்ப்பாட்டு

மரபிலக்கணங்கள் உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை என அழைக்கும் பெயர்+பெயர் சேர்க்கைகள் இக்கூட்டுகளின் கண்படும்.

நிலை மொழியில் உயிரீற்று மற்றும் ய்,ர்,ழ் ஈறு வருவதை க், ச், த், ப் மிகுவதற்கான சூழல் என்று குறிப்பிடலாம்.

மா, பூ,ஆடு,பசு போன்ற பெயர்கள் ஒரு சில சேர்க்கைகளில் க், ச், த், ப் மிகுவதற்கான சூழலிலும் அவ்வாறு மிகாமல் தொடர்ந்து வரும் வல்லின மெய்யின் இனமெல்லினம் தோன்றப் புணரும்.

எ.கா.

மா+பழம் > மாம்பழம், மா+தளிர் > மாந்தளிர், மா+செடி > மாஞ்செடி, மா+காய் > மாங்காய், பூ+பொழில் > பூம்பொழில், பூ+தளிர் > பூந்தளிர், பூ+சோலை > பூஞ்சோலை, பூ+காற்று > பூங்காற்று, ஆடு+பால் > ஆட்டும்பால், பசு+பால் > பசும்பால்

பூ,ஆடு என்பன வேறு சில சேர்க்கைகளில் க், ச், த், ப் மிகப் புணரும்.

எ.கா.

பூ+சரம் > பூச்சரம், ஆடு+குட்டி > ஆட்டுக்குட்டி

சில சேர்க்கைகளில் க், ச், த், ப் மிகும் சூழலிலும் அவை மிகாது வரும்.

எ.கா.1.

பொன்னி கணவன், கண்ணகி கோவில், அண்ணா சாலை, தாய் கை, தாயார் பெயர், தந்தை பெயர்

எ.கா.2.

மொழிபெயர்ப்பு, கார் காலம்

எ.கா.1 இல் வரும் சேர்க்கைகளுக்கு மரபிலக்கணங்கள் உயர்திணைப் பெயர் நிலைமொழியாய் வரும் நான்காம்

வேற்றுமை மற்றும் ஆறாம் வேற்றுமைத் தொகைகளைத் தொட்டும் க், ச், த், ப் என்பன மிகா என விதி கூறும். ஆனால் வள்ளிக்கணவன் என்பதில் க் மிகுந்து வருகிறது. பொன்னி கணவன் போன்ற சேர்க்கைகளில் க், ச், த், ப் மிகாது வருவதற்கான காரணம் அவை கூட்டாக வராமல் தொடராக வருவது தான் என்று தோன்றுகிறது. பொன்னி கணவன் என்பதற்கும் பொன்னியின் கணவன் என்பதற்கும் வேறுபாடு இல்லை; அதுபோலவே தந்தை பெயர் என்பதற்கும் தந்தையின் பெயர் என்பதற்கும் வேறுபாடு இல்லை. ஆனால் வள்ளிக்கணவன் என்பதற்கும் வள்ளியின் கணவன் என்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. வள்ளிக்கணவன் என்பது ஒரு கூட்டாக முருகனைக் குறித்து நிற்கிறது. ஆனால் வள்ளியின் கணவன் தொடராகவே வருகிறது. கோழிக்கால் என்ற அஃறிணைப்பெயர் + பெயர் கூட்டு கோழியின் கால் என்ற தொடரிலிருந்து வேறுபடுவதை (அதாவது பொருண்மை நிலையாக்கம் பெறுவதை) பின்வரும் வாக்கியங்களை ஒப்பிடுகையில் உணரலாம்.

1.அ.அவன் கோழிக்காலை வெட்டினான்

ஆ.அவன் கோழியின் காலை வெட்டினான்

2.அ. அவன் கோழிக்கால் சாப்பிட்டான்

ஆ. அவன் கோழியின் காலைச் சாப்பிட்டான்

கோழிக்கால் என்பது 'கோழியிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட தனிக்கால்' என்று பொருள்படுவதையும் கோழியின் கால் என்பது 'கோழியோடு சேர்ந்து/இணைந்து இருக்கிற கால்' என்று பொருள்படுவதையும் மேற்கண்ட வாக்கியங்களை ஒப்பிடுகையில் உணரலாம். கோழிக்கால் போலவே தாய்ப்பால் என்ற சேர்க்கையும் கூட்டாக்கம் என்று உணரலாம்.

மொழி பெயர்ப்பு என்ற கூட்டுப்பெயர் மொழி பெயர் என்ற கூட்டு வினையிலிருந்து ப்பு ஒட்டாக்கத்தால் பெறப்பட்டதாகும். போர்க்காலம், இடைக்காலம், போர்க்களம் என்பதில் க் மிகுந்திருக்க கார்காலம் என்பதில்

க் மிகாததன் காரணம் தெரியவில்லை. எனவே கார்காலம் என்பதை ஒலியனியல் நிலையில் நிலையாக்கம் பெற்றதாய் கருதலாம்.

5.5.2.2. தொடர்களில் வலி மிகாமை

பெயர்+பெயர் கூட்டுச் சேர்க்கை அல்லாத பின்வரும் தொடர்களில் க், ச், த், ப் மிகு சூழலிலும் பின்வருவன வருமொழியாக வரும்போது அவை மிகா: (மெய்)-(குற்றுயிர்)-(மெய்)- நெட்டுயிர் என்ற அசை அமைப்பில் அடங்காத இரண்டாம் வேற்றுமைத்தொகை, நான்காம் வேற்றுமைத்தொகை, வினாப்பெயர், விளிப்பெயர், எழுவாய்ப்பெயர், உயிர்-ய்து, உயிர்-ந்து, உயிர்-ன்று, உயிர்-ண்டு என்ற அசையமைப்புள்ள தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம், அ ஈற்று வினையடை, தெரிநிலைப்பெயரெச்சம், ஏவல்வினை, வினைதொகை/வினையடி, உம்மைத்தொகை.

1. இரண்டாம் வேற்றுமைத்தொகைநிலைமொழியாக வரும் தொடர்

எ.கா.

யானை பார்த்தான், கோழி தின்றான், பாய் கடடினான், மலர் சூடினான், இதழ் திறந்தான், புகழ் பாடினாள்

2. நான்காம் வேற்றுமைத்தொகைநிலைமொழியாக வரும் தொடர்

எ.கா.

வீடு சென்றான், திருச்சி போனான்

3. வினாப்பெயர் நிலைமொழித் தொடர்நிலை மொழியாக வரும் தொடர்

எ.கா.

அவனா கண்டான், அவனையா பார்த்தான், அவனுக்கா கொடுத்தான், அவளா சொன்னாள்

4. விளிப்பெயர்நிலைமொழியாக வரும் தொடர்

எ.கா.

தம்பி போ, பொன்னா செல், பிள்ளாய் கேள்

5. எழுவாய்ப்பெயர் நிலைமொழியாக வரும் தொடர்

எ.கா.

அண்ணா பார்த்தார், தம்பி தந்தான், நங்கை சிரித்தாள், தாய் கேட்டாள், பேச்சாளர் பேசினார், அண்ணா படித்தவர், தம்பி கெட்டவன், தீ தீயது,காடு சிறிது, பூ புதிது, யானை பெரிது, பொய் பெரிது, மலர் சிறிது, இதழ் புதிது

6. உயிர் -ய்து, உயிர்-ந்து, உயிர்-ன்று, உயிர்-ண்டு என்ற அசையமைப்பு ஈறாயுள்ள தெரிநிலை வினையெச்சம் நிலைமொழியாக வரும் தொடர்

எ.கா.

செய்து பார், நயந்து கூறு, நின்று போ, கண்டு செல்

7. குறிப்பு வினையெச்சம் நிலைமொழியாய் வரும் தொடர்

எ.கா.

நன்கு பாடினான்

8. அ ஈற்றுப்பெயரடை நிலைமொழியாய் வரும் தொடர்

எ.கா.

நல்ல பாட்டு, பெரிய கடை, சின்ன சேலை, இளைய கன்னி, அழகான பெண், அறிவுள்ள பையன், பல பேர், பல பெண்கள்

9. தெரிநிலைப் பெயரெச்சம்நிலைமொழியாய் வரும் தொடர்

எ.கா.

வந்த பையன், கேட்ட கேள்வி, பார்த்த படம், செய்த செயல்

10. ஏவல்வினைவடிவுநிலைமொழியாய் வரும் தொடர்

எ.கா.

போசாத்தா, வாபூங்கோதை, எடுகண்ணா

11. வினைத்தொகைநிலைமொழியாய் வரும் தொடர்

எ.கா.

எரிகதிர், சுடுசோறு, ஊறுகாய், புதைகுழி, செய்தொழில், வளர்மதி, வீழருவி

12. உம்மைத்தொகை நிலைமொழியாக வரும் தொடர்

எ.கா.

செடிகொடி, காய்கனி, சீர்சிறப்பு, இகழ்புகழ்

5.5.2.3. தொடர்களில் வலி மிகுதல்

இதுவரை நாம் பார்த்த எடுத்துக்காட்டுகள் பெயர்+ பெயர் என்ற கூட்டாக்கத்தில் மட்டுமே தான் க், ச், த், ப் மிகும் சூழலில் அவை மிகும், தொடர்களில் க், ச், த், ப் மிகும் சூழல் இருப்பினும் அவை மிகாது என்ற முடிவுக்கு நாம் வரலாம். ஆனால் இது முழுவதும் சரியல்ல. பின்வரும் தொடர்களிலும் க், ச், த், ப் மிகும் சூழலில் அவை மிகும்.

1. இரண்டாம் வேற்றுமை உருபு - ஐ நிலைமொழி ஈறாய் வரும் தொடர்

எ.கா.

அவனைப் பார்த்தான், அவளைக் கண்டாள், அவளைச் சாந்தி பார்த்தாள்

2. நான்காம் வேற்றுமை உருபு -உக்கு நிலைமொழி ஈறாய் வரும் தொடர்

எ.கா.

பூனைக்குக் கொடுத்தான், ஆனைக்குத் தந்தான், சென்னைக்குச் சென்றான், சாந்திக்குப் பணம் கொடுத்தான்

3. (மெய்) - (குற்றுயிர்) - மெய் - நெட்டுயிர் என்ற அசை அமைப்புள்ள இரண்டாம் வேற்றுமைத்தொகை நிலைமொழியாய் வரும் தொடர்

எ.கா.

பூப் பறித்தான், கனாக்கண்டான், நிலாப்பார்த்தான்

தற்காலத்தமிழ் தரவுகளிலிருந்து இவ்விடங்களில் க், ச், த், ப் பெரும்பாலும் மிகாது வருவது தான் பெரும்பான்மையாய் அமையும் எனத் தோன்றுகிறது. பின்வரும் தொடர்களில் க், ச், த், ப் மிகாது வருவதுதான் பெரும்பான்மையானது என்று தோன்றுகின்றது.

எ.கா.

பூ பூங்கோதை பறித்தாள்

கனா கண்ணன் கண்டான்

நிலா பார்வதி பார்த்தாள்

4. செய்ய என்னும் வாய்பாட்டு வினையெச்சம் நிலைமொழியாக வரும் தொடர்

எ.கா.

நடக்கப்பார்த்தான், செய்யச்சொன்னான், வரத் தூண்டினான், போகக்கண்டான்

5. -த்து , -இ என முடியும் செய்து எனும் வாய்பாட்டு வினையெச்சம் நிலைமொழியாய் வரும் தொடர்

எ.கா.

படித்துப்பார்த்தான், செத்துப்போனான், வாங்கிச் சாப்பிட்டான், பூட்டிப்போட்டான்

மேற்சொன்ன தொடர்களில் காணப்பெறும் க், ச், த், ப் மிகல் கூட்டாக்கச் சந்தியைத் தொடராக்கச் சந்தியிலிருந்து நேராக வேறுபடுத்துவதை இயலாமற் செய்கிறது. இருப்பினும் கூட்டாக்கச் சந்தி தொடராகச் சந்தியிலிருந்து வேறுபடுவதை நாம் பல இடங்களில் உணரமுடிகிறது.

5.5.2.4. அம் ஈற்றுப் பெயர்களின் கூட்டாக்கப்புணர்ச்சியும் தொடராக்கப் புணர்ச்சியும்

அம் ஈற்றுப்பெயர்கள் நிலைமொழியாய் வரும்

கூட்டாக்கச் சந்தியின் போது ம் கெடும்; க், ச், த், ப் என்பன வருமொழி முதலாய் வருகையில் அவை மிகும்; மாறாக தொடர்களில் ம் கெடாது; ஆனால் க் முன் ங் ஆகலாம். பின்வரும் எடுத்துக்காட்டுகள் இப்புணர்ச்சி வேறுபாடுகளை வெளிப்படுத்தும்:

1. கூட்டாக்கச்சந்தி

மரம் + வேலை > மரவேலை, மரம் + தடி > மரத்தடி, படம் + சட்டம் > படச்சட்டம், படம் + காட்சி > படக்காட்சி

2. தொடர்சந்தி

மரம் கண்டான்/மரங்கண்டான், மரம் பார்த்தான், பணம் செலுத்தினான், இன்பம் தந்தான்

3. உம்மைத் தொகைகளில் - ம் இனமெல்லினமாக மாறும்.

எ.கா.

மரஞ்செடிகொடி

ஒட்டுகளின் சந்தியின் போதும் ம் என்பது ங் ஆக மாறும்.

எ.கா.

மரம்+கள்>மரங்கள்

ம் என முடியும் பெயரடைகளும் க், ச், த், ப் தொடக்கப்பெயருடன் சேர்ந்து கூட்டாக்கம் அல்லது தொடராக்கம் செய்யும்போது ம் இனமெல்லினமாக மாறும்.

எ.கா.

பழம்+கஞ்சி> பழங்கஞ்சி, பழம்+சீலை> பழஞ்சீலை, பழம்+துணி > பழந்துணி, பழம்+யானை > பழம்யானை

மரங்கொத்தி (< மரம்+கொத்தி) போன்ற கட்டுகளில் ம் ஆனது ங் ஆக மாறியிருப்பது மேற்கண்ட கூட்டுச்சந்திக்கு விதிவிலக்காய் அமையும். இங்கு நாம் மரங்கொத்து என்ற கூட்டுவினையிலிருந்து ஒட்டாக்கத்தால் மரங்கொத்தி என்ற ஆக்கப்பெயர் விளைந்ததாய்க் கொள்ள வேண்டும்.

5.5.2.5.மீட்டுருவாக்கப் புணர்ச்சி விதிகள்

மரபிலக்கணங்கள் பெயரடை + பெயர் அமைப்பால் விளைந்த ஒரு குழுமக் கூட்டுகளைப் பெயர்+பெயர் என்ற அமைப்பாக மீட்பாக்கம் செய்து புணர்ச்சி விதி கூறுகிறது.

எ.கா.

பெருமை+ஆவல் > பேராவல் (< பேர்+ஆவல்)

நன்மை+காலம் > நற்காலம் (< நல்+காலம்)

ஒன்று+ஆயிரம் > ஓராயிரம் (< ஓர்+ஆயிரம்)

இரண்டு+ஆயிரம் > ஈராயிரம் (<ஈர்+ஆயிரம்)

தெற்கு+கிழக்கு >தென்கிழக்கு(< தென்+கிழக்கு)

வடக்கு+மேற்கு > வடமேற்கு (< வட+மேற்கு)

மரபிலக்கணங்கள் பெயரடை வடிவுகளை அதனோடு தொடர்புடைய பெயர்களின் மாற்று வடிவாகக் கொள்வதே இதன் காரணமாகும். பெயரடைகளைச் சொல்வகைப் பாடுகளின் ஒன்றாய்க் கருதும் போது மேற்கண்ட மீள்வடிவாக்கப் புணர்ச்சி விதிகள் தேவைப்படாது போகும். தமிழில் பெயரடை வடிவம் ஆங்கிலத்தைப் போலல்லாமல் எப்பொழுதும் பெயர்முன் வருவதால் ஏன் பெயரடை வடிவத்தை அதனோடு தொடர்புடைய பெயரின் மாற்று வடிவமாய்க் கொள்ளலாகாது என்ற கேள்வி எழலாம். இது ஓரளவுக்குப் பொருத்தமான வாதம் என்றாலும் இவ்வாறு கொள்ளும்போது பெயரடை அடிப்படையிலான (அல்லது வேர் அடிப்படையிலான) ஆக்கங்களை விளக்க இயலாது போகும். எடுத்துக்காட்டாக நல்/நன் என்ற வேர் அல்லது பெயரடைச் சொல்லிலிருந்து தான் நன்மை, நன்கு, நல்ல, நல்லது, நல்லவன் என்ற ஆக்கங்களை விதியால் பெற இயலும்.

6

சொல்லாக்கத்தில் தொடரியல் மற்றும் பொருண்மையியல் பிரச்சினைகள்

6.1. முன்னுரை

தொடரியலும் பொருண்மையியலும் ஒன்றிலிருந்து ஒன்று விடுவித்துக்கொள்ள இயலாத நிலையில் தொடர்பு கொண்டுள்ளன. சொல்லாக்க ஆய்விலும் ஒரு பிரச்சினை தொடரியலைச் சார்ந்ததா அல்லது பொருண்மையியலைச் சார்ந்ததா என்று அறுதியிட்டுக் கூறுவது கடினம். எனவே தான் இங்கு இரண்டும் ஒரே இடத்தில் பேசப்படுகின்றன. தொடரியல் மற்றும் பொருண்மையியல் காரணிகளை வேறுபடுத்திக் காட்டுவது கடினம். என்றாலும் விளக்கத்திற்காக இரண்டும் வேறுபடுத்திக் காட்டப் பட்டுள்ளன.

6.1.1.பொருண்மையியல் பிரச்சினைகள்

தொடரியல் அணுகுமுறைகளைப் பற்றி விவாதிக்கும் போது முக்கியமான தொடரியல் அணுகுமுறைகளை வேறுபடுத்தி பார்க்க முடியும்; ஏனென்றால் அவை பல வழிகளில் வேறுபட்டு நின்றாலும் அவைகளுக்குள் பொதுவானவைகள் பல உள்ளன. குறிப்பாக அவைகள் பொதுப்படையான தொடரியல் விதிகளைப் பற்றியும்

மாற்றங்களின் பயன்பாடு பற்றியும் கோட்பாட்டுக் கோள்களைப் பங்கிட்டுக் கொண்டுள்ளன. ஆனால் பொருண்மையியல் பகுதியைப் பொறுத்தவரையில் பல அணுகுமுறைகள் இருப்பது மட்டுமன்றி அவைகளுக்குள் கருத்து ஒருமைப்பாடு இல்லை. சொற்பொருண்மையியல், வாக்கிய அடிப்படையிலான பொருண்மையியல் என இரு வேறுபட்ட அணுகுமுறைகள் கூட உள்ளன.

சொற்பொருண்மையியல் அணுகுமுறையில் இரண்டு முக்கியப் பிரச்சினைகள் உள்ளன. முதல் அணுகுமுறைக்கு எடுத்துக்காட்டாக அகராதியைக் கூறலாம். இதில் நெருங்கிய ஒரு பொருள் பன்மொழிகளைத்தருதல், பொருளடங்கு சொற்கள், பொருளடக்கு சொற்கள் தருதல், செயற்பாட்டைக் குறிப்பிடுதல் போன்ற வகைகளில் சொற்பொருள் காட்டப்பெறுகிறது. இரண்டாவது அணுகுமுறை பொருண்மைக்கூறு ஆய்வின் ஏதேனும் ஒரு வடிவமாகும். சொற்பொருளை இந்த வழிகளில் குறிப்பிடுவது சொல்லன்கள் எவ்வழிகளில் வாக்கியங்களில் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தீர்மானிப்பதாகும். முன்னர் சொற்பொருள்களின் கூட்டிணைப்பு வாக்கியத்தின் பொருளை நிர்ணயிக்கப் போதுமானது என்று கருதப்பட்டது; இந்த அணுகுமுறை தற்போது கைவிடப்பட்டுள்ளது. இருப்பினும் காந்தி, காந்தியம்,காந்தியவாதி, காந்தியமாக்கு என்ற எடுத்துக்காட்டுகளில் காந்தி என்பது ஒரு நபரின் பெயர் என்றும், காந்தியம் என்பது காந்தி காட்டிய அஹிம்சை மார்க்கம் என்றும், காந்தியவாதி என்பது காந்தியின் கொள்கைகளை ஆதரிப்பவர் என்றும், காந்தியமயமாக்கு என்பது காந்தியவாதிகளின் கொள்கை கட்டுப்பாட்டிற்கு உள்ளாக்கு என்றும் பொருள் விளக்கம் பெறலாம். இது ஒவ்வொரு சொல்லின் பொருளைக் கூறினாலும் எவ்வாறு இச்சொல்லன்கள் இவற்றைக் குறிப்பிட வந்தன என்பது சொல்லாக்கத்தின் பகுதியாகும்.

சொல்லாக்கத்தைப் பொறுத்தமட்டில் காந்தியவாதி என்பது ஒரு வாக்கியத்தில் பயன்படுத்தப்படுகிறது என்பதை

விட ஏன் மற்றும் எதற்காக ஒரு மனிதப்பெயரைக் குறிக்கிறது என்பது முக்கியமாகும். இந்த அணுகுமுறை சொல் நிலையாக்க வடிவங்களின் பொருளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்றாலும் அவைகள் சொல்லாக்கத்தின் பொருண்மையுடன் தொடர்புடையது என்று நிச்சயமாகக் கூறமுடியாது.

வாக்கியப் பொருண்மையியல் இரண்டு முக்கிய வினாக்களுக்கு விடை தேடுகிறது; முதலாவது வாக்கியப் பொருண்மையில் சொற்பொருளின் செல்வாக்கு என்பதுடன் தொடர்புடையது. இரண்டாவது தொடரியல் எவ்வாறு சொற்களின் பொருள்களைச் சேர்த்து பெரிய அலகுகளின் (தொடர்கள், வாக்கியங்கள்) பொருளைத் தருகிறது என்பதுடன் தொடர்புடையது. தனிமங்கள் சேர்ந்து சொல்லாக்கம் செய்யும் செயற்பாங்கு தனிமங்கள் வாக்கிய உருவாக்கம் அல்லது தொடர் உருவாக்கம் செய்தலோடு சம்பந்தப்படுத்தப் போதுமானது என்றால் இது சொல்லாக்கத்திற்குத் தேவையானது. சொல்லாக்கம் தொடரியல் மற்றும் பொருண்மையியல் அடிப்படையில் வாக்கிய உருவாக்கத்திலிருந்து வேறுபடுகிறது. தொடர் உருவாக்கத்தைப் பொறுத்தவரையில் சில ஆய்வாளர்கள் சில வகைச சொல்லாக்கங்களில் (கூட்டாக்கம், ஒட்டாக்கம்) தலையும் (வரையறுக்கும் பகுதி) மாற்றம் செய்யும் தனிமமும் சேர்ந்து வருகை (collocation) தொடரில் அவை இவ்வாறு சேர்ந்து வருகையை ஒக்கும் என்று கருதுகிறார்கள். பொருண்மையை நிர்ணயிக்கும் என்ற வகையில் சொல்லாக்கத்திற்கும் தொடராக்கத்திற்கும் ஒற்றுமை இருக்கிறது என்பதை இது காட்டுகிறது. இருப்பினும் முக்கியமான வேறுபாடுகளும் இருக்கிறன. சொல்லாக்கத்தில் அடையானது வடிவ வகுப்பு மாற்றத்தை உண்டுபண்ணலாம். தொடராக்கத்தில் (ஒருசில மரபுத்தொடர்களைத் தவிர) இது சாத்தியமில்லை. சொல்லாக்கத்தில் கட்டு வடிவாக்கிகள் உள்ள கட்டுமானங்கள் உட்படுத்தப்படுவதால் தொடரியல் பெயர்ப்புரை (para phrase) பெரும்பாலும் சாத்தியமில்லை. பெரும்பாலும் சொல்லாக்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட

சேர்க்கையின் குறிபடுபொருள் (denotatum) என்னவாய் இருக்கும் என்பதை அது வரும் சூழல் இல்லாமல் சேர்ந்து வரும் தனிமங்களில் இருந்து தருவிப்பது இயலாததாகும்; தொடராக்கத்தில் இது மிக அபூர்வம்.

சொல்லாக்கத்தின் இந்த இயல்பான தெளிவின்மையைச் சில ஆய்வாளர்கள் சொல்லாக்கத்தின் விளைவாக்கத்தைக் கணிக்கும் வகையிலான பொருண்மையியல் கோட்பாடு உருவாக்க இயலாமைக்குக் காரணமாய் குறிப்பிடுவர். இது கூடுதலான எதிர் விளைவாகும். மாறாக இது சொல்லாக்கத்திற்கும் பிற தொடரியல் செயற்பாங்கிற்கும் உள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டும்; வாக்கியங்களும் தொடர்களும் விளக்குவன; சொல்லன்கள் பெயரிடுவன. விளக்கங்களுக்கும் பெயர்களுக்கும் உள்ள வேற்றுமை என்னவென்றால் விளக்கங்கள் இசைவானதாகவோ (முரண்பாடில்லாத தாகவோ) கூட்டமைவானதாகவோ இருக்க வேண்டும்; பெயர்கள் சரியான குறிபடு பொருள்களுடன் இணைக்கப்பட்டால் போதுமானது. புதிய சொல்லன்களின் உருவாக்கத்தைப் புதிய பெயர்களின் உருவாக்கமாகப் பார்த்தால், இதுவரை பொருள் தரப்படாத ஒலியன் வரைமுறைக்குட்பட்ட அங்கொன்றிங்கொன்றான ஒலியன்களின் கோவைகளை உருவாக்குவது தான் சிக்கனமானதாய் அமையும். இம்மாதிரியான சொல் உற்பத்தி அறிவியலுக்கும் வியாபாரப் பெயர்களுக்கும் வெளியே அவ்வளவாக இல்லை. செயல்நோக்கில்லாத சொல்லன்களை உருவாக்குவதை விட செயல்நோக்குள்ள சொல்லன்களை உருவாக்குவது இயற்கை மொழியில் மிகச் சாதாரணமாகும். எனவே தான் செயல்நோக்கான சொல்லன்கள் செயல் நோக்கில்லாத சொல்லன்களை விடச் சிறந்த நினைவுறுத்தும் உபாயங்களாகும் (mnemonic devices) என்பது உறுதியானதாகும்.

கலவைச் சொல்லன்களில் உள்ள பொருண்மைச் செய்தியின் பற்றாக்குறை விவேகமானதாக இருப்பது வரை அவை செயல் நோக்கானதாகக் கொள்ளப்படும். ஒரு விரிவான

விளக்கம் தருவது என்றில்லாமல் குறிபடு பொருளின் முக்கியமான பண்புக்கூறுகளை நினைவுக்குக் கொண்டு வருவது அவற்றின் வேலையாகும். இதனால் தான் சொல்லாக்கப் பயன்பாட்டிற்கு உள்ளுறை மெய்மையாக்கம் (hypostatization) தேவை; அது தெளிவு, சுருக்கம், ஒருமுகப்படல் இவற்றைத் தரும்.

சொல்லாக்கத்தையும் தொடராக்கத்தையும் கணிப்பதற்கு ஒரே வகையான பொருண்மை விதிகள் தேவைப்படும் என்பதற்குக் காரணம் இல்லை என்பதை முன்னர் கூறிய விவாதங்கள் தெரிவிக்கும். சொல்லாக்கத்திற்குக் கட்டாயமாகத் தேவைப்படும் பொருண்மைச் செய்திகளின் வகை தேவையில்லாத வைகளின் வகை என்று பொதுமையாக்கம் செய்யமுடியாது. இந்த இருவகையான செய்திகளைக் குறிப்பிட்டுக் காட்டுதல் ஒரு முழுச் சொல்லாக்கக் கோட்பாட்டின் பகுதியாக எதிர்பார்க்கப்படும். சொல்லாக்கச் செயற்பாட்டில் ஈடுபடும் தனிமங்களுக்கிடையே வரவேண்டிய அல்லது வரும் பொருண்மைத் தொடர்புகளைச் சுட்டிக்காட்டுவது தற்போதைய ஆராய்ச்சி முன்னேற்றத்திற்கான விஷயமாகும்; கூட்டுகளில் வரும் தனிமங்களுக்கிடையேயுள்ள உறவுகள், அடிகளுக்கும் ஒட்டுகளுக்கும் இடையேயுள்ள உறவுகள் என்பன இதன் கண்படும். இம்மாதிரியான பொருண்மைச் செய்திகளைத் தொடரில் ஆய்விலிருந்து வேறுபடுத்திக் கூறுவது மிகக் கடினமாகும்.

6.1.2.தொடரியல் பிரச்சினைகள்

இங்கு சில தொடரியல் வகைபாடுகளும் பண்புக் கூறுகளும் எவ்வாறு சொல்லாக்கச் செயற்பாங்கிற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பது கூறப்படும். சாம்ஸ்கியின் தொடரியல் ஒழுங்குமுறை இங்கு கூறப்படுவதுடன்பிற தொடரியல் மாதிரிகளும் சொல்லப்படும்.வேற்றுமை இலக்கணம் (Case grammar), X -பார் தொடரியல் (xமேல் கோடு தொடரியல்), ஆக்க முறைப் பொருண்மையியல் (Generative Semantics) என்பன இதன் கண்படும்.

இங்கு எடுத்துக் கொண்டுள்ள வேற்றுமை இலக்கணம் பில்மோரின் (1968) வேற்றுமை இலக்கணமாகும். இவ்வேற்றுமை இலக்கணம் சாம்ஸ்கியின் (1965) இலக்கணத்திலிருந்து இரண்டு முக்கிய வழிகளில் வேறுபடுகிறது. முதலாவது சாம்ஸ்கியின் (1965) புற நிலை அமைப்பில் (Surface strucrure) இடைவரிசை நிரலில் (Linear)வரும் உருபன்களுக்கு அகநிலை அமைப்பிலும் (Deep structure) அதற்குத் தகுந்த இடை வரிசை நிரல்தான் தரப்பட்டுள்ளது; எடுத்துக்காட்டாகத் துணைவினையுடன் நெருங்கி இணைந்துதான் காலம் ஆக்கப்பெறும். மாறாக, பில்மோர் ஒரு வாக்கியத்தின் கருத்துரைப் பொருளை (propositional content) அதை மாறுபாடு செய்யும் அலகுகளிலிருந்து திட்டவட்டமாக வேறுபடுத்துகிறார். விமலா இந்தப் புத்தகத்தைப் படிக்க மாட்டாள் என்ற வாக்கியத்தில் விமலா இந்தப் புத்தகத்தைப் படி என்பதுதான் கருத்துரைப் பொருள்; மீதியில் நிகழ் காலம், எதிர்மறை என்பன அடங்கும். இதன்படி பில்மோரின் இலக்கணத்தில் வாக்கியக்கணுவின் கீழான முதல் பிரிவு, கருத்துரை ஒரு பக்கம் வினை நோக்கு மற்றொரு பக்கமாக வருவதாகும்.

இரண்டாவதான வேறுபாடு என்னவென்றால் சாம்ஸ்கி வாக்கியம் ஒரு பெயர்த் தொடராலும் (பெ.தொ.) பயனிலையாலும் (பயனி.) ஆனது என்றும் பயனிலை திரும்பவும் கட்டாயமல்லாத வினையடைகளாலும் (வி.அ.) பெயர்த்தொடர்கள் அடங்கிய வினைத்தொடராலும் (வி.தொ.) ஆனது என்று கொள்கிறார். ஆனால் பில்மோர் கருத்துரை என்பது வினையாலும் வினைக்குரிய அங்கங்களாலும் (arguments) ஆனது என்று கொள்கிறார். ஒவ்வொரு அங்கமும் வினையுடன் பொருண்மை உறவுடைய ஒரு பெயர்த்தொடராகும். இவ்வுறவுகள் வினையின் கர்த்தா (agent), வினைக்குரிய இடம் (location) என்றவாறு அமையலாம். இந்த உறவுகள் புதைநிலை அமைப்பு வேற்றுமைகளின் வரிசைப்படி வினையால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. புதைநிலை வேற்றுமைகளின் புறவெளிப்பாடுகள் தமிழ் போன்ற திரிபுறும் மொழிகளில்

புறநிலை வேற்றுமை உருபுகளாக வருகின்றன. ராமன் பாம்பை அடித்தான் என்ற செய்வினை வாக்கியத்தை எடுத்துக்கொண்டால் ராமன் என்ற கருத்தா வேற்றுமை உருபு பெறாமல் வருகிறது; பாம்பு என்ற செயப்படுபொருள் -ஐ என்ற வேற்றுமை உருபு பெற்று வருகிறது. பாம்பு ராமனால் அடிக்கப்பட்டது என்ற செயற்பாட்டு வினைவாக்கியத்தை எடுத்துக்கொண்டால் கருத்தா-ஆல் என்ற வேற்றுமை உருபு பெற்றும் செயற்படு பொருள் உருபு பெறாததும் வருவதைக் காணலாம்.

இவ்வேற்றுமைகளை எடுத்துக்காட்ட காமாட்சி புத்தகத்தைப் பையில் போட முயலவில்லை என்ற வாக்கியம் இவ்விரு இலக்கணங்களிலும் எவ்வாறு ஆக்கப்படுகிறது என்று பார்ப்போம். இவ்விரு இலக்கணங்களுக்கும் பொருத்தமான புதைநிலை கிளை அமைப்புகள் படம் ஒன்றிலும் இரண்டிலும் தரப்பட்டுள்ளன.



படம் 1



படம் 2

இங்கு கொடுத்திருப்பதை விட வேற்றுமை இலக்கணத்தில் கூடுதல் சொல்லப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படை. ஏன் வேறு வகைகளை எடுத்துக் கொள்ளாமல் ஒரு வகைப்பட்ட இலக்கணத்தை இங்கு எடுத்துக் கொண்டுள்ளோம் என்பதற்கும் எத்தனை வேற்றுமைகள் உள்ளன, அவற்றின் தன்மை என்ன என்பதற்கும் இங்கு காரணம் காட்டப்படவில்லை. இவை ஆர்வமூட்டும் வினாக்கள் என்றாலும் இங்கு இவற்றிற்கான விடை காணத் தேவை இல்லை. இப்போதைய விவாதத்தைப் புரிந்து கொள்வதற்கான முக்கிய காரணி எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ள வேறுபட்ட அமைப்பு வடிவங்களாகும். X பார் தொடரியல் சாம்ஸ்கி 1965 (Chomsky 1965) லிருந்து பல்வேறு வழியில் வேறுபடுகிறது. இது சாம்ஸ்கி 1965 மாதிரியிலிருந்து ஏற்பட்ட முன்னேற்றமாகும். முதல் முதலாக இது சாம்ஸ்கி 1970(Chomsky 1970) இல் விளக்கப்பட்டது. X பார் தொடரியல் ஒரு இலக்கணத்தில் அனுமதிக்கப்பட்ட தொடரமைப்பு அமைப்பு விதிகளுக்கு வரையறை வகுக்கிறது. இவ்வரையறை பின் வருமாறு பணி செய்கிறது. ஒவ்வொரு X

என்ற வகைபாட்டிற்கும் (எ.கா. பெயர், வினை, வினையடை போன்றவை) X இன் நிரப்பியாக (Complent) வரும் வகைப்பாட்டுக் கணு உண்டு. இதன்படி X' என்ற வகைப் பாடு X (+ X-இன் நிரப்பி) என விரித்தெழுதப்படும். ஒவ்வொரு X" என்ற வகைபாடும் (X' -இன் குறிப்பீடு +) X என விரித்தெழுதப்படும். இதன்படி எந்தத் தொடரிலும் X- ஐ இடம் பெயர்க்கும் வகைப்பாடு பொதுமுறைப்படி தொடரின் தலையாக வரும்.

எடுத்துக்காட்டாக அந்த ஆசிரியருடைய பழைய குடை என்ற தொடரை எடுத்துக்கொள்வோம். பழைய முறைப்படி ஆசிரியருடைய என்பது பின்னுருபுத் தொடராகக் கருதப்படலாம். தற்போது இது பெயரின் நிரப்பியாகக் கொள்ளப்படுகிறது. (பெயர்த் தொடரின் குறிப்பீட்டில் இது X -ஐ இடம் பெயர்க்கும்). தொடரின் தலையான பெயர் குடை. பழைய என்பதை மாற்று விதிப்படி உட்படுத்தலாம். அந்த என்பது புதிய ஒழுங்கு முறைப்படி பெ' (பெயர் மேல் கோடு)-இன் குறிப்பீடு. X பார் தொடரியல் ஆய்வு செய்பவர்கள் பொருண்மையியலை இலக்கணத்தின் பொருள் கொள்ளும் பகுதியாகத்தான் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் சில புறநிலை அமைப்புப் பண்புகூறுகள் பொருள் கோளை ஊக்கம் செய்வதை அனுமதிக்கிறார்கள். மேலும் ஆய்வுமூட்டும் பல செய்திகள் X பார் தொடரியலில் உண்டு; குறிப்பாக மாற்று உட்கூறின் (Transformational component) எளிமையாக்கத்தை இந்த இலக்கண மாதிரியின் விளைவாகக் கொள்ளலாம். ஆனால் இம்மாதிரிகள் எவ்வாறு சொல்லாக்கத்தை விளக்கப் பயன்படுகிறது என்பதை அறிந்து கொள்ளும் வகையில் இது தேவையற்றது. காமாட்சி புத்தகத்தைப் பையில் போட முயலவில்லை என்ற வாக்கியத்தை X பார் புறநிலை அமைப்பில் பார்க்கையில் X பார் குறி மானத்தின் மதிப்பு தெளிவாகத் தெரியும்.


வா"
வா'
வா' குறிப்பீடு
வா
இல்லை
பெ"
வி"
வி' குறிப்பீடு
பெ'
வி'
முயல
பெ
வி.நிரப்பி
வி
காமாட்சி
பெ"
போட
பெ' குறிப்பீடு
பெ'
∅
பெ
பெ.நிரப்பி
புத்தகம்
பின்னுருபு'
பெ"
பின்னுருபு
பெ' குறிப்பீடு
பெ'
இல்
∅
பெ
பை

படம் 3

இறுதியாக ஆக்கமுறைப் பொருண்மையியலைப் பற்றிப் பார்ப்போம்; இது சாம்ஸ்கி 1965 மாதிரியிலிருந்து பிரிந்து வந்ததாகும். சாம்ஸ்கியால் கூறப்பட்ட வாதங்கள் ஒரு எல்லைக்கு மேல் அவரால் ஒப்புக்கொள்ளக் கூடிய நிலையைத் தாண்டிய நுண்தொடரியல் ஆய்வுகளுக்கு வழி வகுத்ததால் இது ஏற்பட்டது. குறிப்பாக, காலம், எதிர்மறை, வினைநோக்கு ஆகியன ஆக்கமுறைப் பொருண்மையியலில் உயர் பயனிலைகளாக ஆயப்பட்டது. உருபனியல் படி தனிநிலையாக வரும் அகராதிச் சொற்கள் கூட உள்ளுறைக் கலவை பொருண்மைக் கிளையமைப்பிலிருந்து ஆக்கப் பெற்றதாகக் கொள்ளப்பட்டது. ஆக்கமுறைப் பொருண்மையியலில் உள்ளுறை அமைப்பு பொருண்மை அடிப்படையிலும் தொடரியல் அடிப்படையிலும் அமையும்; சாம்ஸ்கி 1965 -இல் கூறியதைப் போன்ற ஒரு நிலையில் அமைந்த புதைநிலை அமைப்பு இதில் இல்லை. ஆக்கமுறைப் பொருண்மையியல் சட்டகத்தில் ஒரு வாக்கியத்தின் உள்ளுறை அமைப்பு எவ்வாறு இருக்கும் என்று ஒரு திட்டவட்டமான கருத்தைத் தர இயலாது. கிளைப்படம் 4 ஆக்கமுறைப் பொருண்மையியலின் ஒரு சில நெறிகளை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.


வா
வி
அங்(கம்)1
அங்2
அங்3
சொல்
நான்
நீ
வா
வி
அங்
இப்போது
வா
வி
அங்
எதிர்மறை
வா
வி
அங்
முயல்
வா
வி
அங்1
அங்2
விளைவி
காமாட்சி
வா
வி
அங்1
அங்2
செல்
புத்தகம்
வா
வி
அங்1
அங்2
உள்ளே
புத்தகம்
பை

படம் 4

இந்த அமைப்பு முறையைப் பற்றிய விவரங்கள் இங்கு தரப்படவில்லை. இங்கு கருதப்பட்ட அமைப்பு முறைதான் முக்கியமேயன்றி பல । புதைநிலை வினைகளை அடிப்படையாகக் கொள்வதற்கான முக்கிய காரணங்களல்ல.

6.2. சொல்லாக்கத்தில் வாக்கியத்தை மூலமாக எடுத்துக் கொள்வது

சொல்லாக்க நிகழ்வுகளை வாக்கியங்களை உள்ளுறை செய்யும் அதே கோவையிலிருந்து பொருத்தமான விதிகளைப் பயன்படுத்தி உருவாக்க இயலுமா அல்லது வேறுபட்ட இடுபொருள் கோவைகளின் தொகுதி தேவையா என்ற கேள்வி அடிக்கடி எழுப்பப்படுகிற ஒன்றாகும். முதலாவது கூறப்பட்ட 'வாக்கிய மூலக் கருதுகோள்' என்று நெகிழ்வாக அழைக்கப்பட்ட கருதுகோள்தான் ஆரம்ப கால மாற்றிலக்கண அடிப்படையிலான சொல்லாக்க விளக்கங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டது (எ.கா. Lees 1960; Rohrer 1967). கூட்டுகளின் பிறப்பைக் கூறுவதற்கு வாக்கிய மூலமில்லாத கருதுகோள் பல அறிஞர்களால் உட்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது (Hatcher, 1960). (ஆக்கங்களை விளக்க வாக்கிய மூலமில்லாத கருதுகோள் ஏற்றுக்கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை.) அவர்கள் கூட்டுகளைப் பின்னுருபு/முன்னுருபு அல்லது புதைநிலை வேற்றுமை உறவுகளிலிருந்து ஆக்கம் செய்தனர். இப்பிரச்சனையைப் பற்றிக் கூறுகையில் ரோரர் (Rohrer 1974:144) வாக்கிய மூலமில்லா கருதுகோள், சொல்லாக்கத்திற்கென தனிப்பட்ட பகுதி உருவாக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தும் எனக் கவலைத் தெரிவித்தார். ஆனால் அப்படிப் பட்ட விளைவு ஏற்படத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக, பில்மோரின் வினைப்பாங்கின் கீழ் வருவன யாவும் சொல்லாக்கத்தின் போது வருவதில்லை; எனவே சொல்லாக்கத்தைக் (வாக்கியமல்லாமல்) கருத்துரையை உட்படையாகக் கொண்ட ஆக்கமாக எடுத்துக்கொள்ளலாகும். கூட்டுகளில் இவற்றை உள்ளுறையும் பெயர்+ முன்னுருபுத் தொடர்/ பின்னுருபுத் தொடர் என்ற தொடரியலில் ஆக்கப்பெறும்

தோற்றம் (configuration) மூலம் விளக்க முடியும் என்றால் சொல்லாக்கத் திற்கெனத் தனிப்பட்ட பகுதி உருவாக்கப்படத் தேவையில்லை. எனவே ரோரின் கவலை மிகைப்படுத்தப்பட்ட ஒன்று எனத் தோன்றுகிறது. மாறாக, ''கூட்டுகள் எல்லாம் வாக்கியங்களிலிருந்து (அதாவது வாக்கியங்களை உள்ளுறையாகக் கொண்ட கோவைகளிலிருந்து) ஆக்கப்பெற்றால் அவை கட்டாயமாக உட்படையாகவோ வெளிப்படையாகவோ வாக்கியங்களின் எல்லாத் தனிமங்களையும் கொண்டிருக்க வேண்டும்'' என்ற அவர் கருத்து சந்தேகத்திற்கிடமின்றி சரியானதாகும். இந்தத் தொடர்பால்தான் பில்மோர் வினைப்பாங்குப் பகுதியில் அடக்கும் தனிமங்கள் ஆர்வமூட்டுவதாய் அமைகிறது. ரோரர் இவை யாவும் சொல்லாக்கத்தில் பங்கேற்கின்றன என்று வலியுறுத்துகிறார். தமிழ்ப் பெயர்ச் சொற்கூட்டுகளை ஆயும் விஜயவேணுகோபால் (Vijayavenugopal 1979) அவருடைய ஆய்வுக்கு லீஸ் (1960,1970) போத்தா (Botha, 1968), ரெய்பெல் (Reibel, 1963), பில்மோர் (Fillmore 1968) ஆகியவர்களின் கோட்பாட்டுக் கருத்துகள் உதவியதாகக் கூறுகிறார் (Vijayavenugopal 1979:1). இவர் பெயர்க் கூட்டுகளை உள்ளுறை வாக்கியங்களிலிருந்து மாற்றிலக்கண விதிகளால் தருவிக்கிறார்.

இந்த விஷயத்தைப் பற்றிய வாதங்கள் குழப்பத்தை உண்டுபண்ண ஏதுவானதால் இங்கு ஒரு முக்கியமான கருத்தை முதன்முதலில் குறிப்பிடவேண்டும். இதைக் கீழ்வரும் இருவாக்கியங்களில் உள்ள எடுத்துக்காட்டுகள் மூலம் காட்டலாம்.

1. எங்கள் படகு வீடு ஒரு உணவு விடுதியாக மாற்றப்பட்டது.

2. நான் வளர்ந்து ஒரு இயக்குநராக விரும்புகிறேன்.

வாக்கியம் 1-இலும், 2-இலும் வரும் படகு வீடு மற்றும் இயக்குநர் என்ற சொற்களில் காலம் வருவதாய்க் கொள்ளலாம். படகு வீடு என்பதை 'படகாய் இருந்த வீடு'

என்றும் இயக்குநர் என்பதை 'இயக்க இருக்கும் யாரோ ஒருவர்' என்றும் பொருள் கொள்ளலாம். இதைக் காலத்தை வெளியில் பயன்படுத்தல் எனக்கூறலாம். சொல்லாக்க செயற்பாங்கை விளக்க இது முக்கியமல்ல. வீடு என்பதற்கும் படகு என்பதற்கும், இயக்கு என்பதற்கும் -நர் என்பதற்கும் உள்ள உறவு உட்படையாகக் காலமேற்காது. படகுவீடு என்பது வீடாய் பயன்படும் படகு; இயக்குநர் என்பவர் இயக்கவல்ல ஒரு செயலாளி. எடுத்துக்கொள்ளப்பட்ட வகைப்பாடுகளின் அகப்பயன்பாடு தான் தேவையானதாக எடுத்துக் கொள்ளப்படும்.

6.3. வினைப்பாங்கு

இங்கு பில்மோரின் வினைப்பாங்குப் பகுதியில் (modality component) வருபவைச் சொல்லாக்கத்தில் பங்கேற்கிறதா இல்லையா என்ப'தைத் தீர்மானிக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது.

6.3.1. எதிர்மறை

ரோரர் பிரஞ்சு மொழியிலிருந்து எடுத்துக்காட்டுகள் தந்து எதிர்மறை சொல்லாக்கத்தில் பங்கேற்பதைப் பற்றி விவாதிக்கிறார். அவர் n'est pas logique 'is not logical' என்பதும், est illogique 'illogical' என்பதும் ஒரு பொருள் பன்மொழி என்கிறார். இது இந்த இணைகளுக்கேயுரிய தனிப்பட்ட பண்புக்கூறாய் இருக்கலாமேயன்றி பொதுவான விதியாகக் கொள்ள முடியாது.

எடுத்துக்காட்டாகப் பின்வரும் வாக்கியங்களில்

1. அந்த டாக்டர் திறமையானவர் அல்ல.

2. அந்த டாக்டர் திறமையற்றவர்.

திறமையானவர் அல்லர் என்பது திறமையற்றவர் என்பதும் ஒரு பொருள் பன்மொழிகளல்ல என்பதைக் குயினேயின் (Lyons 1977:202) இருவழி நிபந்தனைக்குட்பட்ட தேர்வைப் (biconditional test) பயன்படுத்திக் கூறலாம். கீழ்க்காணும் வாக்கியத்தின் விளைவு உண்மையல்ல:

3. அந்த டாக்டர் திறமையற்றவர் என்றால் தான் அவர் திறமையுள்ளவர் அல்லர் எனக் கூறலாம்.

திறமையுள்ளவர் என்பது சாதாரண ஆற்றல் அல்லது திறமையை விடக் கூடுதலானது என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது; எனவே டாக்டருக்குச் சராசரித் திறமை உண்டு என்றால் வாக்கியம் 1 சரியானது; ஆனால் 3 தவறானது; ஏனென்றால் 3 சராசரித் திறமையை விட மிகக் குறைந்த திறமையை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. ஆக்கப்பெற்ற வடிவம் எதிர்மறைத் தொடரைவிடக் கூடுதலான எதிர்மறைப் பண்புக்கூறைக் கொண்டிருப்பதாய் தெரிகிறது. இவ்வாறான ஒரு பொருள் பன்மொழியக் குறைவு ரோரரின் விவாதத்தை இல்லாததாக்கிவிட்டதாய்க் கூற இயலாது; இருப்பினும் ஆக்க வடிவுக்கும் ஏற்றுக்கொண்ட உள்ளுறைக் கோர்வைக்கும் உள்ள தொடர்பு நேரடியானதல்ல; 1-ஐ விட கூடுதல் செய்தியுள்ள உள்ளுறைக் கோர்வை 2- இற்குத் தேவை.

பின்வரும் வாக்கியங்களை எடுத்துக் கொண்டால்

இராமன் புகைப்பிடிப்பவரைப் பார்க்கவில்லை.

இராமன் புகைப்பிடிக்காதவரைப் பார்த்தான்.

எதிர்மறை வாக்கியத்தை உள்ளுறை செய்யும் கோர்வை ஒரு மாற்றத்தின் அல்லது ஒரு குழும மாற்றத்தின் இடுபொருளாக வருவதில்லையென்பது தெளிவு. இது ஒரு வகை எதிர்மறைப் பொருள் இருப்பதை மறுக்கவில்லை. இருப்பினும் எதிர்மறையின் தகுதியான மூலங்களை எல்லைக்குட் படுத்தவில்லை.

எதிர்மறையுள்ள வடிவுகளின் ஆக்கத்திற்கு இடுபொருளாக எதிர்மறை வாக்கியத்தை உள்ளுறை செய்யும் கோர்வை வராது என்ற உண்மை, இவ்வடிவுகள் உட்படை வாக்கியங்களிலிருந்து (from embedded sentences) ஆக்கப்பெற முடியாது என்று பொருள்படுகிறது. எடுத்துக்காட்டாக முன்னர் கண்ட வாக்கியங்களில் தொக்கி வரும் பொருந்தாமையை (புதிரை) பின்வரும் புதைநிலை அமைப்புக் கோர்வைகள் தந்து சரி செய்யலாம்.

இராமன் ஒருவர் (ஒருவர் புகைபிடி) பார் எதிர்மறை

இராமன் ஒருவர் (ஒருவர் புகைபிடி எதிர்மறை) பார்

ஆனால் இம்மாதிரியான தீர்மானம் எல்லாவற்றிலும் வரும் பிரச்சனைகளைத் தீர்க்காது; ஏனென்றால் இது பின்வரும் வாக்கியங்களில் முதல் வாக்கியம் இரண்டாவது வாக்கியத்தில் அதன் புதைநிலை அமைப்பின் உட்படை வாக்கியமாக வருவதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டும்.

அது பொருள் உள்ளதல்ல

அது பொருளற்றது

இதன் காரணமாக நல்ல தீர்மானம் கிடைப்பதில்லை; மட்டுமல்லாமல் இது பின்வரும் வாக்கியங்களை விளக்குவதற்கு வகை செய்யாது.

அவன் போராடுபவனல்ல

அவன் போராடாதவன்

மேலும், ஆக்க வடிவுகளில் உள்ள எதிர்மறை, வடிவிற்குள் உள்ள எந்த உள் உறவையும் உண்மையில் வெளிப்படுத்துவதில்லை. எடுத்துக்காட்டாக, புகை பிடிக்காதவர் என்பதற்கு 'புகை பிடிக்காத ஒருவர்' என்று பொருள் கூறினாலும், இது மொழியியல் அடிப்படையில் 'புகை பிடி' என்ற பயனிலையின் எதிர்மறையல்ல; ஏனென்றால் இது குறிப்பிடுக்கூறவியலாத யாரோ ஒருவருக்காகப் பயன்படுத்தப்படுகிறது; ஒரு கூட்டம் புகைபிடிப்பவர்களிடமிருந்து வகைப்படுத்திக் காட்டும் உபாயமாக இது பயன்படுகிறது.

எதிர்மறையுள்ள ஆக்க வடிவுகளை உருவாக்கத் தேவையானவை ஒரு அடியும் எதிர்மறை தனிமமுமாகும். புதைநிலை அமைப்பில் இதற்குக் கூடுதலாக உருவாக்கப்படுகிற எதுவும் மிகையானதாகும். இருப்பினும் எங்கிருந்து இந்த எதிர்மறைத்தனிமம் வருகிறது என்பது தான் கேள்வி. மரபிலக்கணப்படி இந்த எதிர்மறைத் தனிமம் ஒரு புதைநிலை வினையடை என்று கொள்ளலாம். இவ்விதம்

எதிர்மறைத் தனிமங்களைச் சொல்லாக்கத்தில் உள்ளடக்கிக் கருத்துரை அமைப்பிலிருந்து சொல்லாக்கங்களை உருவாக்கவியலும்.

6.3.2. காலம்

பின்வரும் வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம்.

எனக்கு அந்தச் சினிமா இயக்குநரைத் தெரியும்.

இதற்குப் பின்வரும் இரண்டுபொருள்கள் இருப்பதாகக் கொள்ளலாம்.

1. எனக்கு அந்தச் சினிமாவை இயக்கியவரைத் தெரியும்.

2. எனக்கு அந்தச் சினிமாவை இயக்குகிறவரைத் தெரியும்.

இதன்படி *இயக்குநர்* போன்ற வடிவாக்கங்கள் காலத்தை உள்ளடக்கியவை என்பது ஒருவகை வாதம்; காலத்தை உள்ளடக்கவில்லை என்பது மற்றொரு வாதம்; இம்மாதிரியான வடிவாக்கங்களில் காலம் ஆக்க வடிவத்திற்குப் புறமாக அமையுமன்றி அகமாக அமையாது. மேலும் முழுப் பெயர்த்தொடரைத்தான் காலங் கொண்டனவாய்க் கருதலாமேயன்றி ஆக்கத்தையல்ல. மொழியியல் மற்றும் மொழியியலல்லாத சூழல்களில் கூட இம்மாதிரியான பெயாகளின் காலப் பொருள்கோளைச் சொல்லாக்கத்தின் செயல்முறையாகக் கொள்வதைவிடப் பயன்வழியியல் பகுதிக்கு (pragmatic component) விட்டுவிடலாம் (Bauer 1983:153). *முன்னாள் அமைச்சர், முன்னாள் தலைமையாசிரியர்* என்ற கூட்டாக்கங்களில் வினையடைகளால் காலம் பெறப்படுவது இங்கு உணரத்தக்கதாகும்.

சொல்லாக்கத்தில் காலம் பங்கேற்கவில்லை என்ற ஆய்வு உள்ளுணர்வால்கூட சரியாகத் தெரிகிறது. *தீயணைப்பான்* என்பதை எடுத்துக்கொண்டால் அதுபேசுகிற இக்கணத்திற்குச் சிறிது முன்னர் தீயை அணைத்தது என்றோ சிறிது பின்னர் தீயைஅணைக்கும் என்றோ கூறமுடியாது; மாறாக வழக்கமாக அல்லது இயல்பாகத் தீயை அணைக்கப்

பயன்படும் ஒன்று என்று கொள்ளலாம். இது போலவே இயக்குநர் என்பதையும் தனியாகப்பார்த்தால் இயக்கும் ஒரு குறிப்பிட்டகாலத்திற்கென்றில்லாமல் இயக்கும் திறனுள்ள ஒருவரைக் குறித்து நிற்கும். அகராதியியலார் சொல்லாக்கத்தில் காலத்தின் முக்கியக் குறைவைக் காட்ட இயன்ற மட்டும்காலம் காட்டும் வடிவுகளைப் பயன்படுத்தாமல் எச்சக் கட்டுமானங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

6.3.3. வினை நோக்கு

பில்மோர் வினைநோக்கு (mood) என்பதை விரித்துக் கூறாததால் அவர் இந்த வகைப்பாட்டை எந்தப் பொருளில் பயன்படுத்துகிறார் என்று தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் இதுபுறநிலை அமைப்பில் வினையின் திரிபுகளாக வரும் உள்ளது கிளத்தல் (indicative) நிபந்தனை என்ற மரபிலக்கணப் பொருள்களில் வருவதாகத் தெரியவில்லை. வினைநோக்கு என்பது பின்வரும் இரண்டு வகைப்பாடுகளை உள்ளடக்குவதாய்க் கொள்வது பொருத்தமாயிருக்கும்: 1.வினைநோக்கு வினைகள், 2. கூற்று, வினா, ஏவல் இவற்றின்குழுமம். வேற்றுமை இலக்கணச் சட்டகத்தில் இவ்வகைபாடுகளைப் பற்றி பில்மோர் பேசவில்லை; அவர் அதை ஆக்கமுறைப் பொருண்மை யியலார் கையாளுவது போல் உயர் பயனிலைகளாகக் கொள்ள விரும்புவதாகத் தெரிகிறது (Bauer 1983:154).

வினைநோக்கு வினைகள் அகநிலையில் சொல்லாக்கச் செயற்பாங்கில் ஈடுபட இயலாது என்பதற்கான மெய்யான விவாதங்களைக் காண்பது கடினம். இருப்பினும் மன உணர்வால் இது சரியெனத் தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக உயர்நிலை என்பது உயரப்போகும், உயரவிருக்கும் அல்லது உயர்ந்துவிட்ட அல்லது உயரலாகும் நிலை என்பதல்ல; ஒருகுறிப்பிட்ட நியமத்தின்படியும் மரபின்படியும் உயரமான நிலை என்பதாம்.

ஆங்கிலத்தில் -able என்ற ஒட்டால் ஆக்கப்பெறும் வடிவங்களை மேற்கண்ட தீர்மானத்திற்கு எதிரான எடுத்துக்காட்டுகளாகக் காட்டுவர். -able விளைவாக்கமாக

வருமிடங்களில் இதை "able to Ved" என்று பெயர்ப்புரை செய்யலாம்; இங்கு "able to" என்பதை "can" என்பதால் இடம் பெயர்க்கலாம். இங்கும் able என்ற ஒட்டைப் பிரித்தாய இயலாத ஒன்றாகக் கருதுவதுதான் நல்லது. புதைநிலைகளில் இதைப் பிரித்தாயலாம். இந்த நோக்கிற்கு உறுதியான எடுத்துக்காட்டுகளில்லை; இலக்கணத்தின்பிறபாகங்களுக்கு இணையான கருத்துத்தான் இது (Baurer 1983:155). வினைப்பாங்கில் வரும்பிற பாகங்கள் சொல்லாக்க நிகழ்வுகளில் உருவாக்கத் தேவையில்லை என்றால் இது ஒரு முக்கியமான பொதுமையாக்கமாகும்; இப்பொதுமையாக்கம் ஒரு ஒட்டு இருக்கிறது என்பதற்காக முழுமையாக மறுக்கப்பட்டுவிடக் கூடாது. எல்லா வினை நோக்குகளிலும் can என்பது சொல்லாக்கத்தில் பங்கு வகிக்கிறது என்பது அறிவுறுத்தலாய்அமைகிறது. வினை நோக்குகள் யாவும் சுதந்தரமாகச் சொல்லாக்கச் செயற்பாங்கில் பங்கேற்பதனால் கட்டாயம் மற்றும் நெறிமுறைக் கட்டாயம் இவற்றைக் காட்டும் ஒட்டுகள் இருக்கவேண்டும்; ஆனால் அவ்வாறில்லை. புதைநிலை அமைப்பில் வினைப்பாங்கு அணுவில் able வருவதை விளக்க வேண்டுமானால் ஒரு இடத்தில் கூடுதலான விதி தேவைப்படுகிறது; அதாவது சொல்லாக்க நிகழ்வில் வினைப்பாங்கு காலியாகவோ can என்பதால் குறிப்பிடப்பட்டோ வரலாம். இச்செயற்பாங்கு able என்பதை அகராதியில் வினைநோக்குப் பொருளில் வருவதாய்க் குறிப்பிடுவதைக் காட்டிலும் சிக்கலானதாகும்.

கூற்று, வினா, ஏவல் என்பனவற்றைப் பொறுத்தமட்டில் உள்ளுணர்வு அடிப்படையில் அவைச் சொல்லாக்கத்தில் பங்கேற்கவில்லை என்பது தெளிவு. எடுத்துக்காட்டாக, *பயிற்றுநர், கருங்கல்* என்ற கூட்டுகளை எடுத்துக்கொண்டால் *அவை அந்த நபர் பயிற்றுகிறாரா? அல்லது அந்தக் கல் கருப்பானதா?* என்று வினவுவதற்கோ *பயிற்றுவிக்க* அல்லது *கருப்பாக* என்று ஏவுவதற்கோ பயன்படுத்தப்படவில்லை. கூற்று என்பதை மட்டும் தான் நாம் பார்க்க வேண்டியுள்ளது.

ரோரர் (Rohrer *1974: 199*) வலியுறுத்தல் (assertion) சொல்லாக்கத்தில் பங்கேற்கிறது என்று கூறுகிறார்.

அவருடைய வாதம் இரண்டு முக்கிய ஊகங்களை அடிப்படையாகக் கொண்டது;

1. வலியுறுத்தல் என்பதை வாக்கியங்களுக்கு இடையிலான, தருக்கவியல் கூற்றில் குறிப்பிடத்தக்கதான உறவு என்று விவரணை செய்யலாம்;

2. கூட்டுகள் உட்படு வாக்கியங்களிலிருந்து ஆக்கப்பெறுகிறது.

முதல் ஊகம் சரியென்றால் அதற்குக் காரணம் ரோரர் தற்போக்காக வலியுறுத்தலை இவ்வாறு வரையறை செய்வது தான். ஆனால் வலியுறுத்தலின் சரியான பொருள்கோள் அது ஒரு செயற்கூற்றுச் செயல் (illocutionary act) என்பதாகும். இரண்டாவது ஊகத்தைப் பொறுத்தமட்டில் இதைத் தான் அவர் நிரூபிக்க விரும்புகிறார்; அதே சமயம் இதைத் தான் ஊகமாகவும் கொள்கிறார்; இதனால் அவருடைய வாதம் சுற்றுவாதமாக அமைகிறது. இவ்வாறு வலியுறுத்தல் என்பது சொல்லாக்கத்துடன் இயைபுடையது என்ற ரோரரின் வாதம் எடுபடாமல் போய்விடுகிறது.

கருங்கல் போன்ற வடிவுகளில் ஒரு வலியுறுத்தல் இருக்கிறது என்றால் அந்த வலியுறுத்தலை அந்த வாக்கியத்திற்குள்ளேயே வினவவோ மறுக்கவோ முடியாது. ஆனால் பின்வரும் வாக்கியங்கள் சரியானவை; அந்தக் கருங்கல் கருப்பா? அந்தக் கருங்கல் சிவப்பாயிருக்கிறது. இம்மாதிரியான வடிவத்தில் வலியுறுத்தல் உண்டென்றால், சொல்நிலையாக்கச் செயல்பாட்டில் எவ்வாறு, ஏன் இவ்வலியுறுத்தல் குறிநீக்கப்பட்டது என்பதற்கு விளக்கம் தரப்பட வேண்டும். கருங்கல் சிவப்பாய் இருக்கிறது என்ற வாக்கியம் கருங்கல் கருப்பு என்பதை முற்கோளாகக் கொள்ளவில்லை. இது வாக்கியமூல ஆய்விற்கு எதிரான கூடுதலான வாதமாகும். ரோரர் கூட (1974:122) அவருடைய முடிவுரையில் காலம் மற்றும் வினைநோக்கு இவற்றிற்காகக் குறிப்பிடப்பட்ட வாக்கியங்களைக் கூட்டுகளாக மாற்றம் செய்ய இயலாது என்று குறிப்பிடுகிறார். பின்னர் எல்லா

சொல்லாக்கங்களையும் இந்தப் பொருண்மையாக்கத்தின் கீழ் அடக்குகிறார். அவர் இங்கே தம்மைத்தாமே மறுப்பதாகத் தெரிகிறது. வினைப்பாங்கு என்ற பகுதி சொல்லாக்கத்தில் தோன்றுகிறது என்று அவர் காட்ட விரும்பினாலும் வினைநோக்கு அதில் வரும் என்று அவர் நம்பவில்லை (Bauer 1983:156).

6.3.4. வினையாற்று வகை

ரோரர் (1974:116) பல ஐரோப்பிய மொழிகளில் வினையாற்று வகை (aspect) சொல்லாக்கத்தில் பங்கேற்பதாகக் கூறுகிறார். ரோரர் ரஷ்ய மொழியிலிருந்து தரும் எடுத்துக்காட்டுகளைப் பார் பொருந்தாது என மறுக்கிறார். (பார்க்க, பார் 1983 : 157).

இருப்பினும் ஒரு கருத்தில் வினையாற்று வகை சொல்லாக்கத்தில் பங்கேற்பதாகக் கருத இடம் உண்டு. காலம் என்பது ஒரு செயல், நிகழ்ச்சி, நிலை (இருப்பு) இவற்றின் காலத்துடன் தொடர்புடையது என்று வருணனை செய்யலாம்; ஆனால் வினையாற்று வகை செயல், நிகழ்ச்சி, நிலை இவற்றின் காலத்துடன் சார்புடையதல்ல; ஆனால் செயல், நிகழ்ச்சி, நிலை (இருப்பு) இவற்றின் உட்படையான கால ஒழுங்கமைப்புடன் சார்புடையது. காலம் ஏற்றுக்கொள்ளப் படாவிடில் (அதாவது செயல் காலமற்றதாய் கொள்ளப்பட்டால்) செயலின் காலம் முக்கியத்துவத்தை இழந்து விடுகிறது; ஆனால் இதன் காரணமாய் உட்படையான கால ஒழுங்கமைப்பு முக்கியத்துவம் அடையும். அதாவது செயல், காலத்தொடர்பில்லாத தற்சார்பான உண்மையில் கொள்ளப்படும். அப்படியென்றால் சொல் ஆக்கத்தில் காலம் தேவையற்ற ஒன்று என்ற தீர்மானம் தன்னிச்சையாக வினையாற்று வகைச் சொல்லாக்கத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று பொருள்படும்.

ஆங்கிலத்தில் madman என்ற கூட்டின் காலமின்மை குயினேயின் இரட்டை நிபந்தனைத் தேர்வின் பகாநிலை விளைவைப் பயன்படுத்தி அறியலாம். கீழ்வரும் வாக்கியங்களில் முதலாவது வாக்கியத்தில் பெயரெச்சத்

தொடரில் காலத்துடன் கூடிய பயனிலை வருவதையும் இரண்டாவது வாக்கியத்தில் கூட்டு வருவதையும் காணலாம்.

1. Raju is a man who is mad

2. Raju is a madman

கீழ் வருவது இரட்டை நிபந்தனையாகும்.

Raju is a man who is mad if and only if Raju is a madman

வாக்கியம் 2 உண்மை என்றால் வாக்கியம் 1-உம் உண்மை; அவைகளுக்குள் ஒருவகைப் பொருளடங்கு (hyponymous) உறவு இருப்பது தெரியும். ப்ரெக்கிள் (Brekle 1970:31) இந்த எடுத்துக்காட்டைப் பற்றி விவாதிக்கையில் madman என்பதற்கும் mad man என்பதற்கும் உள்ள வேறுபாட்டைப் பற்றிப் பேசுகிறார்; madman-ஐ mad man-உடன் ஒப்பிடுகையில் முதலாவதில் வழமை (habitual) பண்புக்கூறை அகநிலை அடைசெய்யும் தனிமத்தில் சீராகப் பயனிலையாக்கம் செய்யலாம் என்கிறார். ப்ரெக்கின் வழமை இம்மாதிரியான கூட்டில் மட்டுமன்றி பிற பல வகைக் கூட்டுகளிலும் எல்லா வகைச் சொல்லாக்கத்திலும் வருவதாய்க் கூறுகிறார். எடுத்துக்காட்டாக வினை முதல் பெயர்களான பயிற்றுநர், இயக்குநர், காதலன் இவற்றில் வழமை பண்புக்கூறு உள்ளது. இங்கு முக்கியமான செய்தி என்னவென்றால் வினையாற்று வகையாக வரும் வழமைப் பண்புக்கூறு பயன்படுத்தப் படுகிறது என்பதாகும். பார் (Bauer 1983:158) HIP (habitual / inherent / permanent) அதாவது வழமையான/இயல்பான/ நிலையான அல்லது 'நிலையான' என்பதை வழமைப் பண்புக்கூறுக்குப் பதிலாகப் பயன்படுத்துகிறார்.

பல ஆய்வாளர்கள் முன்னர் கூறிய வினைமுதல்கள் வாழ்க்கைத் தொழில்களைக் குறிப்பிடுகையில் தான் வழமை பண்புக்கூறாய் வருவதாய்க் கண்டிப்பாய்க் கூற இயலும் என்றும் அவை வழமையின்றியும் வரலாம் என்றும் கூறுகின்றனர்.

எ.கா.

The writer of this letter

The singer of this song

டவுணிங்கும் (Downing 1977) வழமையற்ற ஒற்றை நிகழ்ச்சி மூலமாய் கூட்டுகள் உருவாகுவதைக் காட்ட எடுத்துக்காட்டுகள் தருகிறார். பார் (Bauer 1978) ஒரு தடவை களவாடினால்கூட ஒருவரைக் கள்ளன் என்று குறிப்பிட இயல்வதைச் சுட்டிக் காட்டுகிறார். இவ்வகை ஆக்கங்கள் பேசுபவர் நடந்த செயலை வழமையானதுபோல் கொள்வது தான் காரணமாய் இருக்கும். பேசுபவர் ஒரு நிகழ்ச்சியிலிருந்து பிரித்துக் கருதி அதை வழமையாகப் பார்க்கிறார்கள். மேற்கண்ட வகை வாக்கியங்கள் அவை எவ்வாறு உருவாக்கப் பட்டது என்பதைப் பொறுத்து விதிவிலக்கானதாய் வரலாம்; ஒரு சாத்தியம் என்னவென்றால் இங்கொன்றும் அங்கொன்றுமாக இப்பொருள்கோளை அந்தச் சொல்லன்கள் பயன்படுத்தப்பட்ட சூழலிருந்தான பயன் வழியியல் உய்த்துணர்வாகக் காண்பதாகும். அந்தச் சொல்லன்களுக்கு அம்மாதிரியான பொருள்கோள் வருவதில்லை.

உண்மையான வினையாற்று வகை இருக்கிறதா என்பதைத் தீர்மானிப்பதற்கான சிரமம் என்னவென்றால் இந்த வழமையான/இயல்பான/நிலையான பண்புக்கூறு காலம் குறிக்காமைக்குச் சமமானதா அல்லது அதற்கானதான வேறான ஒன்றா என்பதேயாகும். காலக்கணுவை உருவாக்காமை ஏதோவொன்றை வழமையான/இயல்பான/நிலையான பண்புக்கூறாக உருவாக்கப் போதுமானதா அல்லது அது வினையாற்று வகைக் கணுவில் பிரத்தேகமாக உருவாக்கப் படவேண்டுமா என்பதில் தெளிவில்லை. பார் காலக்கணு உருவாக்காமையே போதுமானது என்கிறார்.

கல்வைச் சொற்களை உருவாக்கத் தேவையான வினையாற்று வகைப் பண்புக்கூறை காலக்கணு குறிப்பிடாமையின் இயற்கையான விளைவாகக் கொள்ளலாம். அல்லது வினைப்பாங்கைக்

குறிப்பிடாமையின் விளைவால் பில்மோரின் வினைப்பாங்கில் வரும் தனிமங்களில் ஒன்றுகூட சொல்லாக்கத்திற்குத் தேவையற்றதாயின என்று வாதிடலாம். சொல்லாக்கத்தைக் கருத்துரையை உட்படுத்தியதன் விளைவாய்ப் பெற்றதாகவும் இதற்கு மாறாக எச்சத் தொடராக்கம் முழு வாக்கியத்தை உட்படுத்தியதன் விளைவால் வந்ததாயும் கொள்ளலாம்.

6.4. கூட்டில் அகநிலைவினை

லீஸ் (Lees, 1960), *காற்றாலை, மாவாலை* போன்ற பெயர்+பெயர் கூட்டுகளை முன்றையே அகநிலை பெயர்த்தொடர்+வினைத்தொடர் கோர்வைகளான ''காற்று ஆலையை இயக்குகிறது'', ''ஆலை மாவை அரைக்கிறது'' என்பனவற்றிலிருந்து ஆக்கினார். கூட்டுகளின் புதைநிலை அமைப்பிலிருந்து புறநிலை அமைப்பைப் பெற எண்ணற்ற வினைகளை நீக்க வேண்டியது வரும் என்பதை இதிலிருந்து புரிந்துக் கொள்ளலாம். இது ஆக்கமுறை மாற்றிலக்கணத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு மாறானதாக அமைகிறது; ஏனென்றால் இது விரும்பத்தகாத ஒழுங்குமுறைக்குக் கொண்டு செல்கின்றது; திரும்பப்பெற இயலாத நீக்கம் ஆக்கமுறை இலக்கணத்தில் இருக்கலாகாது என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட நியமங்களில் ஒன்று.

மூந்தைய பத்தியில் கூறப்பட்டபடி கூட்டுகளை ஆக்கமுறையில் உருவாக்கினால் அவற்றை அவற்றின் புதைநிலை அமைப்பிலிருந்து பெறுவதற்கான நீக்கம் திரும்பிப்பெற முடியாமற்போகும்; ஏனென்றால் எந்தக் கூட்டையும் பெறுவதற்குப் பல வினைகளை நீக்கம் செய்து பெற வேண்டி வரும். எடுத்துக்காட்டாக *போலீஸ் நாய்* என்பதை அகநிலையில் வரும் ''போலீஸ் பயன்படுத்தும் நாய்'', ''போலீசுடன் பணிபுரியும் நாய்'', ''போலீஸ் நாயுடன் பணிபுரிகின்றனர்'' என்ற அமைப்புகளிலிருந்து பெறுவதா அல்லது வேறு ஏதாவது அமைப்பிலிருந்தா என்பது கேள்வியாகும். இக்கேள்விக்கு இடுகுறித்தன்மையில்லாத விடை இல்லை. இது சாம்ஸ்கி (Chomsky,1965) -ஆல்

விளக்கப்பட்ட இலக்கணத்தில் எவ்வளவு சிக்கலானதோ அந்த அளவுக்குச் சிக்கலாக வேற்றுமை இலக்கணச் சட்டகத்திலும் வருகிறது; ஏனென்றால் விளக்கக் குறிப்புகளாகத் தரப்பட்ட வாக்கியங்களில் உள்ள இருபெயர்களின் வேற்றுமைப் பங்குகேற்புகள் (case roles) வேறுபடுவது மட்டுமன்றி வாக்கியங்களின் அண்மை உறுப்புகளும் வேறுபடும்.

இவ்வாதம் முதன்முதலாய் ரோரரால் (Rohrer,1966) எழுப்பப்பட்டதாய்த் தெரிகின்றது; அதன்பிறகு பல தீர்ப்புகள் முன் வைக்கப்பட்டன. லீஸ்(Lees, 1970) ஒரு கூட்டின் பொருளை அதன் தலைப்பெயரிலிருந்தும் பேசுபவரின் உண்மை உலக அறிவிலிருந்தும் மீட்டுருவாக்கம் செய்ய இயலும் என்று எடுத்துக் கூறினார். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இது சரியானது. *ஊர்தி ஓட்டுநர், சாம்பல் தட்டு* போன்ற எடுத்துக்காட்டுகளில் 'ஓட்டுநர் ஊர்தியை ஓட்ட வேண்டும்', 'தட்டு சாம்பலைக் கொள்ள வேண்டும்' என்பது தெளிவானது. இக்கருத்து இரண்டு பெயர்கள் சேர்ந்து வருவது பொருந்தத்தக்க மிகக்குறைந்த வினைகளின் குழுமத்தைத்தான் குறிப்பிட முடியும் என்ற வெண்ட்லரின் (Vendler 1968 : 92) கருத்தைப் போன்றதாகும். ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால் வெண்ட்லர் ஒரு குழுமவினைகள் என்று குறிப்பிடுகிறாரேயன்றி ஒருவினையன்றல்ல. வெண்ட்லர் milk man என்பதை 'பாலை விற்கும்/ வினியோகிக்கும்/கைகாரியம் செய்யும்' ஆள் என்கிறார். இவ்வெடுத்துக்காட்டுகளிலிருந்து லீஸின் பலமான கருத்துகோள் ஏற்புடையதாய் இல்லை என்பதும் வெண்ட்லரின் பலகீனமான கருத்துக்கோள் கோட்பாட்டு அடிப்படையில் திரும்பிப் பெற இயலாத புதைநிலை அமைப்பைத் தருகிறது என்பதும் தெளிவாகிறது.

மோட்ச் மூன்று சாத்தியமான தீர்மானங்களைத் தருவதாகப் பார் (Bauer 1983:160-161) குறிப்பிடுகிறார். மிகக்குறைந்த எண்ணிக்கையிலான வினைகள் கூட்டாக்கத்தில் பங்கேற்கலாம் என்பது மோட்சின் முதல் கருத்துகோளாகும். எடுத்துக்காட்டாகக் கூட்டுரு

வாக்கத்திற்குப் பொருண்மை மூலமுதலானவைகள்(Semanitic premitives) புதைநிலை அமைப்பு வினைகளாக ஏற்றுக்கொள்ளப்படலாம். இவ்வணுகுமுறைதான் லெவி (Levi 1978) ஆல் அடிப்படையாக மேற்கொள்ளப் பட்டுள்ளது. இருப்பினும் எப்பொருண்மை மூலமுதலான வைகள் நீக்கப்பெற்றது என்பதை அறிந்து மீட்பதற்கு வழியில்லாத காரணத்தால் இவ்வணுகுமுறையும் திரும்பிப் பெறவியலாத புதைநிலை அமைப்பிற்குத் தான் கொண்டு செல்லும். லீஸ் (Lees, 1960:143) குறைந்த எண்ணிக்கையான வினைகளை எடுத்துக் கொண்டு எழுவாய்-செயப்படு பொருள் கூட்டுகளைப் போல் விளைவாக்கமுள்ள பெரிதான வகுப்பைக் கையாளும் சாத்தியத்தை முழுவதும் நம்ப மறுக்கிறார்.

மோட்சின் இரண்டாவது கருதுகோள் என்னவென்றால் கலப்புக்குறியீடு (complex symbol) வினைக் கணுவுக்கு அடியில் உருவாக்கப்படவேண்டும்; ஆனால் இக்கலப்புக் குறியீட்டால் விளக்கப்பெறும் வினைக்கு ஒலியனியல் சட்டகம் ஒதுக்கித் தருதல் கூடாது. அதாவது அவ்வினைக்குப் பொருண்மை-தொடரியல் உள்ளடக்கம் இருக்க வேண்டுமேயன்றி ஒலியனியல் உள்ளடக்கம் இருக்கலாகாது; அதாவது அவ்வினை புற அமைப்பில் வரக்கூடாது. முதல் பார்வையில் இது கவர்ச்சியாய் இருந்தாலும் கலப்புக் குறியீட்டின் இயல்பு காரணமாகப் பெரிய சிக்கல்கள் இருக்கத்தான் செய்கிறன. ஒரு குறிப்பிட்ட வினைக்கான உள்வகைப்பாடு (sub categorization) மற்றும் சொல் தேர்வுக்கூறுகள் (selectional features) பற்றிய செய்திகள் உள்ளடங்கியிருந்தாலும் புதைநிலை அமைப்பைப் புறநிலை அமைப்பிலிருந்து மீட்டுப் பெற முடியாது. கலப்புக்குறியீடு முழுவதுமாய்க் குறிப்பிடப்படாவிட்டால், இந்தப் பிரேரணை போதிய அளவில் மாற்றப்பட்டு, மோட்சின் மூன்றாவது கருதுகோளை ஒக்கும்.

மோட்சால் முன்மதிக்கப்பட்ட இத்தீர்மானப்படி, தனித்தனி வினைகள் அல்லாமல் வினை வகுப்புகள் கலப்புக்குறியீட்டின் உள்ளடக்கத்தால் குறிப்பிடப்படும்;

அதாவது கலப்புக்குறியீடு தனித்தனி வினைகளின் எதிர்நீக்கத்தை (neutralization) உருப்படுத்தும். வினை, தனி வினையுடன் ஒக்கத்தக்க விதத்தில் கலப்புக் குறியீட்டால் கூடுதலான பண்புக்கூறுகளைக் குறிப்பீடு செய்வதாகச் சொல் நிலையாக்கத்தைக் காணலாம் என்று மோட்ச் முன்யோசனை கூறுகிறார். ஒரு சொல்நிலையாக்க எடுத்துக்காட்டை (அல்லது அமைப்பு முறைக்கு உட்படுத்தப்பட்ட ஒன்றை) ஒரு தனி வினையால் விளக்கமுடியும். போலீஸ்நாய் எடுத்துக்காட்டு இது அப்படியல்ல என்று தெரிவிக்கிறது. எந்த அளவுக்கு எதிர்நீக்கத்தைக் கலப்புக்குறியீடு உருப்படுத்துகிறது என்பது மோட்சின் விளக்கத்திலிருந்து சரியாகத் தெளிவாகவில்லை. தனிவினைகளின் சிறு வகுப்புகள் மட்டும் தான் தந்துள்ள ஏதாவது கலப்புக் குறியீட்டில் எதிர்நீக்கம் செய்யப்பட்டால் இப்பிரேரணை முன்னர் கூறப்பட்ட வெண்ட்லருடைய பிரேரணையிலிருந்து பெரிதாக மாறவில்லை எனக் கொள்ளலாம். கலப்புக் குறியீடானது ஒரு கூட்டின் முழுவதுமாய் குறிப்பிடப்பட்ட புதைநிலை அமைப்பில் வரத்தக்க எல்லா வினைகளின் நீக்கங்களை உருப்படுத்துவதாய் கொள்ளப்படுமானால், ஒரு கூட்டு அடக்கத்தக்க பொருண்மைப் பரப்பெல்லைக்குள் எவ்வாறு கலப்புக்குறியீடு [+வினை] என்பதைத் தவிர வேறுதனிக் குறியீட்டைக் கொண்டிருக்கும் என்பது கேள்வியாகும்.

இவ்வழியில் கலப்புக்குறியீடு குறைந்த அளவில் தனிக்குறிப்பீடு செய்யப்பட்ட இந்நேர்வில் தான் மீட்க இயலாத நீக்கம் என்ற சிக்கல் தீர்க்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் முற்றிலும் புதிய அலகை உருவாக்கல் அதாவது ஒரு மாற்று வினை உருவாக்கல் என்பதை விட எதிர்நீக்கம் (neutralization) என்று கூறுவது தவறாக வழிகாட்டுவதாய் அமையும். இத்தீர்மானத்தைதான் பார்(Bauer1978d:4.2) முன்வைக்கிறார். இம்மாதிரியான தனிமம் பொருண்மை அடிப்படையில் பின்வருமாறு பொருள்விளக்கம் பெறும்; ஒன்று தனிப்பட்ட குறியீட்டைக் குறித்து நின்று ஆனால் பிறவற்றுடன் தனிப்பட்ட முறையில் அல்லாத குறிப்பீட்டைக் குறித்த உறவைக் குறித்து நிற்கும்; இவ்வுறவு அகராதிப்

பொருளிலிருந்தும் சூழல் செய்திகளிலிருந்தும் உய்த்து உணரப்பட வேண்டும். பல நேர்வுகளில் முதல் தனிமம் நினைவூட்டும் சாதனமாய் அதாவது முழுப்பொருள் உணர்த்தும் பொருட்கள் மற்றும் கருத்துச்சாயல் இவற்றின் இயல்பு(nature) மற்றும் இணைவுகள்(associations) இவற்றை நினைவுறுத்தும் சாதனமாய் அமைகிறது என்ற ஆடமின் (Adam,1973:83) கருத்தைத் தெரிவிப்பதாய் மேற்சொன்ன செய்தி அமைகிறது. லீஸ் (Lees,1960:144) பின்வருமாறு கூறுகிறார்: பொருண்மை இடத்தை நிரப்புகிற பொருத்தமான வினையைக் கண்டுபிடிக்க இயலாததாக இம்மாதிரியான கூட்டுகள் அமையும்; மாற்று வினையுள்ள ஆய்வு ஒரு கூட்டு உருவாகுவதை அனுமதிக்கிறது; ஒரு குறிப்பிட்ட வினையை வேண்டுகிற அல்லது ஒரு குறைந்த எண்ணிக்கையான வினைகளை எதிர்நீக்கம் செய்கிற ஆய்வு ஒரு எடுத்துக் காட்டான உருவாக்கத்தைத் தடைசெய்கிறது. உருபுகளால் அல்லது வினை+உருபுகளால் சாதாரணமாகத் தெரிவிக்கப் படும் உட்பொருளை ஒரு மாற்று வினை உருப்படுத்தும் என்பதால் கூட்டுகளை அகநிலைப்படுத்தும் புதைநிலை அமைப்புகளின் எண்ணிக்கைகளின் கணிசமான குறைப்பை அனுமதிக்கும் என்பது மாற்று வினையைப் பயன்படுத்திய ஆய்வின் மிகப்பெரிய அனுகூலமாகும். இவ்வாறு லீஸ் (Lees,1960) 49 வகைகளை உட்படுத்தப்படும் எட்டு அடிப்படை வகையிலான கூட்டுகளைக் கொண்டு ஆய்கிறார். ஆனால் 100 வகையான கூட்டுகளைத் தரும் 25 வகை கருத்துரைகளைக் கொண்டு பெர்கிள்(Berkle,1970) ஆய்கிறார். பார் (Bauer,1978d) அதிகபட்சம் இரண்டு வகையான கூட்டுகளைக் கொண்டு ஆய்கிறார்; இது மிகப்பெரிய இலகுவாக்கத்தை உருப்படுத்துகிறது என்பதுடன் இது மிகச்சக்தியுள்ள பொதுவாக்கமுமாகும்.

சொல்லாக்கத்தின் போது ஒரு வாக்கியம் உட்படையாக்கப்படுகிறது என்பதை விட ஒரு கருத்துரை உட்படையாக்கப்படுகிறது என்பது வினைப்பாங்கு உட்கூறை (Model component) உருவாக்கத் தேவையில்லை என்று வாதிட உதவும். ஒரு மாற்றுவினையைப் பெயர் + பெயர் கூட்டின்

அகநிலை அமைப்பில் தோற்றுவிப்பது மிகையாகத் தெரியலாம்; இம்மாற்று வினை செய்யவேண்டியது விளக்கப்பட்டது சொல்லாக்கச் செயல்முறை என்பதை வலியுறுத்துவதாகும். கருத்துரை உட்படையாக்கப்பட்ட மற்றும் வினைக்கணு நிரப்பப்படாத நேர்வுகளில் ஒருவகைப்பட்ட மிகைவிதியால் ஒருமாற்று வினைக்குத் தந்துள்ள பொருண்மை விளக்க உரையை இலகுவாகக் குறிப்பீடு செய்ய இயலும்.

பொருண்மைச் செயற்பாங்கு மாத்திரம் இடர்நிலையில் இருந்தால் மேற்சொன்னது சரியானதாகும். ஆனால் தொடரியலும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது இத்தீர்மானத்திற்கு எதிராக வரும். எந்தக் கருத்துரையிலும் வினை கட்டாயமான ஒரு தனிமமாகும்; அதனுடன் வரத்தக்க வேற்றுமைக் கணுக்களுக்கு வேண்டி அடையாளப்படுத்தப் பெற்றிருப்பது அதன் ஒரு செயற்பாடாகும். கூட்டில் உடன் வரும் வேற்றுமைக் கணுக்களுக்கு வரையறை இல்லை என்பது உண்மையென்றால் இவ்வினையின் செயற்பாடை புறக்கணிக்க இயலும். பார் (Bauer,1978d) கூட்டில் வரும் வேற்றுமைக் கணுக்களில் கூடுதல் வரையறைகள் இருக்கும் என்பதையும் இவ்வரையறைகள் ஓர் இலக்கணத்தில் உருவாக்கப்பட பொருத்தமான வேற்றுமை சட்டகத்தால் அடையாளப்படுத்தப் பெற்ற வினை உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் காட்டுகிறார்.

6.5. தொடரியல் வரையறைகள்

ரோபர் மற்றும் சீகல் (Roper & Siegel 1978) அண்மைக்கால மாற்றிலக்கணப் படைப்புகளில் கூறப்பட்டுள்ள சொல்லாக்க விதிகளின் பண்புகளைச் சுருக்கித் தந்துள்ளனர். அவர்கள் அம்மாதிரியான ஆறு பண்புகளைத் தந்துள்ளனர்.

1. சொல்லாக்க விதிகள் தொடர் வகைப்பாடுகளை (phrasal categories) உட்கொண்டிருக்கவில்லை.
2. சொல்லாக்க விதிகள் தொடரியல் வகைப்பாட்டை (syntactic category) மாற்றுகிறது.

3. சொல்லாக்க விதிகள் இடைப்பட்ட மாறிகளை (medial variables) உட்கொள்வில்லை.

4. சொல்லாக்க விதிகளுக்குப் புறநிரலாக்கம் (extrinsic ordering) இல்லை.

5. சொல்லாக்க விதிகள் பொருண்மை இணைப்பாக்கத்தை (semantic compositionability) உட்கொண்டுள்ளது.

6. சொல்லாக்க விதிகள் தற்போக்கான செய்தியின் (idiosyncratic information) மொழிவை அனுமதிக்கிறது.

இப்பண்புகள் சொல்லாக்கத்தில் தொடரியலுக்கும் பொருண்மையியலுக்கும் வலுவான வரையறைகளை முன் வைக்கின்றன. இவற்றில் பல பெருமளவு குறை கூறத்தக்கது என்றாலும் இவற்றைப்பற்றி விரிவாகக் காண்பது தேவையானதாகிறது. (தொடரியல் நோக்கிற்கு எதிரான) சொல்லாக்க நோக்கிலிருந்து குறைநிறை காண எடுத்துக் கொள்ளப்படாத மற்றும் பரந்த அளவு ஏற்றுக்கொள்ளப்பட்ட சில பிரேரணைகளைச் சுருக்கித் தந்துள்ளமையால் ரோபர் மற்றும் சீகலின் கட்டுரை மிக முக்கியமான ஒன்றாகிறது.

6.5.1. தொடர் வகைப்பாடுகள்

சொல்லாக்க விதிகள் தொடர்வகைப்பாடுகளை உட் கொண்டிருக்கவில்லை என்பது முழுவினைத்தொடரான wash slowly என்பதில் -able சேர்ந்து வரும் தொடரான *wash slowlyable என்ற தொடர் இல்லாதிருப்பதிலிருந்து வருவதுரைக்கலாம் என்று ரோபர் மற்றும் சீகல் (Roper & Siegel,1978:202) கூறுகின்றனர். wash slowlyable ஏற்றுக்கொள்ள இயலாத சொல்வடிவு என்றாலும், தொடர் அடிகளால் ஆன சொல்லாக்கம் வருவதில்லை என்று ரோபர் மற்றும் சீகலின் வரையறை மூலம் கூறிவிடமுடியாது. தொடர் அடிகளால் ஆன சொல்லாக்க நிகழ்வுகள் உள்ளன என்பது உண்மை. ரோபர் மற்றும் சீகல் வேர்க்கூட்டுகள் (root compounds) என்று அழைக்கும் கூட்டுகளில் இது சாதாரணமாய்க் காணப்படுகிறது.

எ.கா.

don't-tell-me-what-to-do-look

a pain-in-stomach gesture

பிறவகையான சொல்லாக்கங்களிலும் தொடர்களானது அடியாகளாகச் செயலாற்றுகின்றது.

எ.கா.

stick-to-it-iveness, cut-down-ness

பல தொடர்கள் சொல்லன்களாக மாற்றம் பெற்றுள்ளன.

எ.கா.

love-lies-bleeding, jack-in-the-box

தொடர் அடிகளிலிருந்து ஆக்கப்பெற்றவற்றைப் பொறுத்த மட்டில் மிகச் சில தான் நிலையாக்கம் பெற்றுள்ளன.

எ.கா.

get-at-able, come-uppance

சொல்லாக்க விதிகள் தொடர்வகைப்பாட்டை உட்கொண்டுள்ளன என்பது மட்டுமன்றி அண்மை உறுப்புகள் அல்லாத தொடர்ச்சிகளையும் உட்கொள்ள இயலும் என்று தெரிகிறது.

எ.கா.

culture-to-the-people-idealists

சொல்லாக்க விதிகள் ரோபர் மற்றும் சீகல் அனுமதிப்பதைக் காட்டிலும் சிக்கலானதாகத் தெரிகிறது.

6.5.2. தொடரியல் வகைப்பாட்டு நிலைமாற்றம்

''ஒரு ஒட்டைச் சேர்க்கையில் தொடரியல் வகைப்பாட்டில் நிலைமாற்றம் ஏற்படுகிறது: bake => baker. தொடரியல் வகைபாட்டில் நிலைமாற்றத்தை விளைவிக்கும் தொடரியல் செயன்மை இல்லை. இது சொல் விதிகளின்

சிறப்புப் பண்புக்கூறாகும்''என்று ரோபர் மற்றும் சீகல் (Roper & Siegel, 1978:202) கூறுகின்றனர்.

''ஆக்கப் பின்னொட்டைச் சேர்க்கும் போது தொடரியல் வகைபாட்டில் நிலை மாற்றம் ஏற்படலாம்'' என்பதுதான் மேற்சொன்ன வரைமுறையின் மிகச்சரியான மொழிபாகும். இந்தோ - ஐரோப்பிய மொழிகளில் முன்னொட்டைச் சேர்க்கத் தொடரியல் வகைப்பாட்டில் நிலைமாற்றம் ஏற்படுவ தில்லை; சில பின்னொட்டுச் சேர்க்கை தொடரியல் வகைப் பாட்டில் மாற்றம் விளைவிக்கும். தொடரியல் செயன்மை தொடரியல் வகைபாட்டில் நிலைமாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற நேர்வு இல்லாத வரையில் ரோபர் மற்றும் சீகலின் பொதுவான நுட்பக்கூற்று ஒப்புக் கொள்ளத்தக்கதாய் இருக்கும்.

மேற் சொன்னதைத் தொடர்ந்து நிலைநிறுத்த இயலுமா என்று தெரியவில்லை. சொல்லாக்கத் தேர்வில் driver 'ஓட்டுநர்' என்ற பெயர் 'ஓட்டு' drive என்ற வினையுடன் -er '-நர்' என்ற பின்னொட்டைச் சேர்த்து ஆக்கப்பெறுவது போன்ற எடுத்துக்காட்டுகள் பல உள்ளன. இதைப் பின்வருமாறு எழுதலாம்:

N 2 V + er

பெயர் 2 வினை + நர்

தொடரியல் நேர்வில் run 'ஓட்டு' என்ற வினையும் car 'கார்' என்ற பெயரையும் சேர்த்து drive car 'கார் ஓட்டு' என்ற வினைத்தொடர் உருவாகுதல் போன்ற எடுத்துக்காட்டுகள் உள்ளன. இதைப் பின்வருமாறு எழுதலாம்:

NP 2 V + N

வினைத்தொடர் 2 வினை + பெயர்

ரோபர் மற்றும் சீகல் முதலில் வருவது தொடரியல் வகைப்பாட்டில் நிலைமாற்றம் செய்யும் என்றும் இரண்டாவது வருவது இம்மாதிரி நிலைமாற்றம் செய்யாது என்றும் கூறுகின்றனர். இருப்பினும் வினைத் தொடர் என்பது

வினை என்பதிலிருந்து வேறுபட்ட ஒரு தொடரியல் வகைப்பாடாகும். எனவே ரோபர் மற்றும் சீகலின் கூற்றை உறுதிப்படுத்த இயலுமா என்பது தெளிவாகவில்லை.

''மேற்சொன்ன தொடரியல் நேர்வில், சொற்கள் இணைக்கப்பட்டுள்ளன, ஆனால் சொல்லாக்க நேர்வில் ஒரு சொல் ஒரு கட்டுருபனுடன் இணைக்கப்பட்டுள்ளது; இவ்வாறு இரண்டும் வேறுபடுகின்றன'' என்று மறுப்பு தெரிவிக்கலாம். ஆனால் இந்த மறுப்பும் நிலைநிற்காது. முதலாவது, கூட்டில் சொற்கள் இணைக்கப்பட்டுள்ளன (சொல்லாக்கத்தின் நேர்வு); இது வடிவ வகுப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவோ ஏற்படுத்தாமலோ இருக்கலாம். எடுத்துக் காட்டாக windmill 'காற்றாலை' என்ற பெயர் wind 'காற்று' மற்றும் mill 'ஆலை' என்ற பெயர்களால் ஆனது; இதில் தொடரியல் வகைபாட்டில் நிலைமாற்றம் ஏற்படவில்லை. brownbag என்பது brown என்ற பெயரடையாலும், bag என்ற பெயராலும் ஆக்கப்பெற்ற கூட்டு வினையாகும்; இதில் தொடரியல் வகைபாட்டில் நிலைமாற்றம் ஏற்பட்டுள்ளது. இவற்றைக் கணக்கில் கொள்ள வேண்டுமானால், கூட்டை உருவாக்கும் விதிகள் தொடரியல் வகைபாட்டை நிலை மாற்றம் செய்யும் தொடரியல் விதிகள் என்றோ அல்லது சொற்களை இணைக்கும் சொல்விதிகள் என்றோ எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னால் கூறியதை எடுத்துக்கொண்டால் driver 'ஓட்டுநர்' மற்றும் drive car 'கார் ஓட்டு' என்பதற்கு இடையேயுள்ள முக்கிய வேறுபாடான தொடரியல் விதிகள் தான் சொல் வகைப்பாடுகளை இணைக்கிறது என்பது இல்லாமல் போய்விடுகிறது. இரண்டு நேர்வுகளிலும் வாதங்கள் ரோபர் மற்றும் சீகலின் கருத்துக்கு மாறாக அமைகிறது. மறு தலையான சூழல் Harry's dictionary என்பதிலுள்ள சொல்லாக்கியான 's-ஆல் எடுத்துக்காட்டப் படுகிறது; இது இயற்பெயரான Harry -யை அடைகொளி அடை (determiner) ஆக மாற்றுகிறது. இந்நிகழ்வில் ஒரு கூட்டு ஒரு சொல்லுடன் தொடரியல் விதிப்படிச் சேர்ந்து வகைப்பாட்டு மாற்றத்தை விளைவிக்கிறது. ரோபர் மற்றும் சீகலின் நிலை முரண்படுகிறது.

மாற்றிலக்கணப் படைப்புகளில் ஒரு தொடரியல் வகைப்பாடு வேறொரு தொடரியல் வகைபாட்டின் தனிமங்களிலிருந்து ஆக்கப்பெறுகின்ற பல எடுத்துக் காட்டுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, ஆக்கமுறைப் பொருண்மையியலில் பெரும்பாலும் காலம் புதைநிலை அமைப்புப் பயனிலையிலிருந்து (அதாவது வினையிலிருந்து) ஆக்கப்பெறுவதையும் துணைவினைகள் முதல் வினையிலிருந்து ஆக்கப்பெறுவதையும் கூறலாம். பொருள்கோள் பொருண்மையியல் அடங்கிய X-பார் தொடரியல் அடிப்படையில் தங்கள் வாதங்களை அமைத்துள்ள ரோபர் மற்றும் சீகல் இதை ஆக்கமுறைப் பொருண்மையியல் அணுகுமுறையில் பட்டது என மறுக்கலாம்.

6.5.3. இடைமாறிகள்

ரோபர் மற்றும் சீகல் இடைமாறிகளைப் (medial variables) பற்றி பின்வருமாறு கூறுகின்றனர்: இடைமாறிகள் வரவில்லை என்பது சொல்லாக்க விதிகள் ஒரு ஒட்டை குறிப்பிட்ட அண்மைச்சூழலில் சேர்த்துள்ளது என்று பொருள்படும் (Roper & Siegel,1978:202). அண்மைப்படாத தனிமங்கள் இல்லாத சொற்கள் (கூட்டோ பிறவோ) இல்லை.

மேற்சொன்ன பிரேரணைகள் எல்லாம் அவர்கள் எடுத்துக்கொண்ட அடிப்படைத் தொடரியல் வகையைப் பொறுத்து அமையும்; இக்கோட்பாடு வெற்றிடத்தில் இதைப்பற்றி பேசுவது அறிவுபூர்வமானதல்ல. எடுத்துக் காட்டாக லீஸ் (Lees,1960:146) அகநிலை வாக்கியத்தின் எழுவாயாகவும் செயப்படுபொருளாகவும் வருவன வற்றிலிருந்து ஒரு பகுதி கூட்டுக்களை ஆக்கம் செய்துள்ளார் (எ.கா. windmill 'காற்றாலை', car thief 'கார்த்திருடன்'). லீஸின் மாதிரியில் அகநிலைஅமைப்பின் புதைநிலையில் இவை வினையால் பிரிக்கப்பட்டிருக்கும்; இவ்வினை ஒரு மாறியாகும்; கூட்டை உருவாக்கும் மாற்று விதி இந்த மாறியை நீக்கம் செய்து பிரிக்கப்பட்ட தனிமங்களை எந்தவித இடையூறுமின்றி ஒன்று சேர்க்கிறது. ஆனால் பார் (Bauer,1978)

தரும் இலக்கணத்தில் இதற்கு மாறாக windmill 'காற்றாலை' அல்லது car thief 'கார்த்திருடன்' என்பதன் இரு தனிமங்களும் அகநிலை அமைப்பின் புதைநிலையில் அண்மைப் பட்டிருக்கும்; எனவே கட்டுத்திட்டம் ஒப்புக்கொள்ளக் கூடியதாய் அமையும். மேலும் அடிப்படை நிரலற்றிருந்தால் மேற்சொன்ன கூற்று கருத்தற்றதாய் அமையும். இக்கட்டுப் பாட்டுத் திட்டம் எந்த அளவுக்குச் சொல்லாக்க விதிகளின் முறைமை மீதான கட்டுத்திட்டமாய் இருக்கிறதோ அந்த அளவுக்கு இலக்கண முறைமை மீதான கட்டுத்திட்டமாய் அமைவதாய்த் தெரிகிறது; மட்டுமல்லாமல் சுற்றும் தன்மையாகவும் அமைகிறது. தொடரியலில் இக்கட்டுத் திட்டம் எந்த நிலையில் வரவேண்டும் என்பது பற்றிய குறிப்பீடு நிச்சயமாய்த் தேவை; சொல்லாக்க விதிகள் தொடரியலின் எந்த நிலையில் செயல்படும் என்பது பற்றிய மொழிபு இதிலிருந்து முற்கோள் செய்யப்படும். இம் மாதிரியான தெளிவு வருவது வரையில் மேற்சொன்ன கட்டுத்திட்டத்திற்குக் கூடுதல் முக்கியத்தவம் தர இயலாது. எதிர்காலத்தில் இக்கட்டுத்திட்டம் தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கும் பொருந்தும் என்றுகாட்டப்பெற்றாலும் இது ஒரு உலகப் பொதுக் கட்டுத்திட்டம் எனக் கூறமுடியாது. ஏனென்றால் அரபி போன்ற மொழிகளில் தொடரா உருபன்கள் உள்ளன.

6.5.4.புறநிரலாக்கம் இல்லாமை

ரோபர் மற்றும் சீகல் (1978:203) புறநிரலாக்கம் (extrinsic ordering) பற்றி பின்வருமாறு கூறுகின்றனர்: புறநிரலாக்கம் இயலாததாகும். புறநிரலாக்கம் industrialize மற்றும் organizational ஆகியவற்றைத் தவறென மறுக்கும். ஏனென்றால் -ize-உம் -al உம் எதிரான நிரலில் வருகின்றன.

எடுத்துக்காட்டிய இரு வடிவுகளும் சொல்லாக்க விதிகளில் புற நிரலாக்கம் இல்லை என்று முடிவுகட்டப் போதுமான சாட்சியங்கள் அல்ல. பின்னொட்டுகளின் வேறுபட்ட நிரல்கள் சொல்லாக்க விதிகளின் புறநிரலாக்கத்துடன் கீழே தந்துள்ள ஏதாவது ஓர் நேர்வுடன்

ஒத்தியங்கக்கூடியதாய் அமையும்: (1) சொல்லாக்க விதிகள் சுற்று விதியாகப் (cyclically) பயன்படுத்தப்பட்டால் (2) சொல்லாக்க விதிகள் முன்னரே உருவாக்கப்பட்ட கோர்வைகளுக்கு இடையில் ஒட்டுகளைச் செருக அனுமதித்தால். சொல் அடிப்படையிலான உருபனியல் கருதுகோளைக் கடைபிடிப்பதானால் இரண்டாவது நேர்வு தவறென மறுக்கப்படும். இக்கருதுகோள் மிகவும் தடை வரம்பு (restrictive) உடையதாக இருக்கிறது என்று நம்பத்தகுந்த காரணங்கள் உள்ளன. எனவே புறநிரலாக்கத்திற்கு எதிரான நேர்வு சரியானதல்ல. மொழியியலில் புறநிரலாக்கத்தின் நிலைமை தெளிவானதல்ல. ஒலியனியலில் மட்டுமாவது விதிகள் புறநிரலாக்கம் பெறவில்லை என்று பல மொழியியலார் நம்புகின்றனர். இது உண்மையென்றால் தொடரியல் விதிகளும் நிரலாக்கமின்றி இருக்கலாம். அப்படியானால் தொடரியல் விதிகளுக்கும் சொல்லாக்க விதிகளுக்கும் உள்ள வேறுபாடு இல்லாமல் போய்விடுகிறது.

6.5.5.பொருண்மை இணைப்பாக்கம்

ரோபர் மற்றும் சீகல் (Roper & Siegel 1978:202) பொருண்மை இணைப்பாக்கம் (semantic compositionality) பற்றி பின்வருமாறு கூறுகின்றனர்: உருபனியல் விதிகள் விளைவாக்கமுள்ளதாய் அமையும் இடங்களில் பொருண்மை இணைப்பாக்கம் காணப்பெறும். ஏனென்றால் முறையாகக் கூறிட்டுத்தான் புதிய ஆக்கச் சொற்களைப் புரிந்துக்கொள்ள இயலும்.

இது சொல்லாக்கத்தின் அடிப்படைத் தற்கோளாகத் (basic assumption) தெரிகிறது. இங்கு சொல்லப்பட வேண்டிய முக்கியமான கருத்து என்னவென்றால் சில நேர்வுகளில் சொல்லன்களைக் கூறிட்டுப் பெறத்தக்க பொருள் பொருண்மைத் தன்மையை விட இலக்கணத் தன்மையுடையதாய் இருக்கலாம், அல்லது பொருண்மைத் தன்மையுடையதாய் இருக்கலாம் என்பதாகும்.

6.5.6.தற்போக்குத் தகவல்

ரோபர் மற்றும் சீகல் (Roper & Siegel 1978:215) தற்போக்குத் தகவல் (idiosyncratic information) குறித்துப் பின்வருமாறு கூறுகின்றனர்: விதிகளிலிருந்து விலகிச் செல்லும் அறிவை மொழியியல் தற்போக்குத் தன்மை என்று விளக்கலாம். சொற்களுக்குத் தற்போக்கான பொருள்கள் இருக்குமானால் இம்மாதிரியான தற்போக்குகளை உருப்படுத்த நினைவாற்றலில் ஒரு அகராதி இருக்க வேண்டும்.

கலவைச் சொற்கள் (complex words) காலப்போக்கில் தற்போக்குத்தன்மை பெறும். ஆனால் ''சொல்லாக்க விதிகள் தற்போக்குத் தகவலின் மொழிவை அனுமதிக்கின்றன'' (Roper & Siegel 1978:202) என்று கூறுவது தெளிவற்றிருக்கிறது. இதற்கு மறுதலையான ''தற்போக்குத் தன்மை என்பது விதிகளிலிருந்து (அதாவது சொல்லாக்க விதிகளிலிருந்து) விலகிச் செல்லும் அறிவு'' என்பது சரியாகத் தோன்றுகின்றது. ''விதிகள் ஒழுங்கை விளக்குகிறது, ஒழுங்கற்றவை எல்லாம் விதியால் விளக்கப்படாது அகராதியில் பட்டியலிடப்பட வேண்டும்'' என்பது இங்கு எடுத்துரைக்கப்பட வேண்டிய ஹல்லேயின் (Halle 1973) பிரேரணை ஆகும். ஆனால் மேற் கூறப்பட்ட சொல்நிலையாக்கக் கோட்பாடு (theory of lexicalization) அடிப்படையில் இம்மாதிரியான பிரேரணை சந்தேகத்திற்குரியதாய் இருக்கிறது.

''ஒரு சொல் இருக்கிறது அல்லது இல்லை என்பது அதன் தற்போக்குப் பண்பாகும்'' என்று ரோபர் மற்றும் சீகல் குறிப்பிடுகின்றனர் (1978:216). இது உண்மையாக இருக்கலாம்; ஆனால் இதனால் குறிப்பாகச் சுட்டப்படுவது என்னவென்றால் தற்போக்குத் தன்மையானது என்ற காரணத்தால் இச்சொல் அகராதியில் பட்டியலிடப்பட வேண்டும்; மட்டுமன்றி சொல்லாக்க விதிகளால் உருவாக்கப் பட்ட ஒவ்வொரு புதிய சொல்லும் ஹல்லே(Halle,1973) கூறியது போல் ''வரக்கூடியது'' என்று அடையாளப் படுத்தப்பட வேண்டும். இந்த யோசனை நாம் முன்வைத்த

சொல்நிலையாக்கக் கோட்பாட்டு விளக்கத்தின் படி ஐயத்திற் குரியதாகிறது. முதலாவது, எந்தச் சொல்லன்கள் வரக்கூடியன என்று கோட்பாட்டு அடிப்படையில் கூற முடியுமா என்பது தெளிவில்லை; இரண்டாவது ஒரு மொழியைப் பேசுவோர்-கேட்போரின் அகராதியில் வரக்கூடியது மற்றும் ஒழுங்கானது என்று தெளிவாகக் கூறத்தக்க சொல்லனுக்கும் ஒழுங்கானது ஆனால் வரக்கூடியதில்லை என்று கூறத் தக்க சொல்லனுக்கும் கொள்கை அடிப்படையில் வேறுபாடு இருப்பதாய்த் தெரியவில்லை. ஒரு 'சீரான பேசுவோர்-கேட்போர்' என்று குறிப்பிட்டால் கூட இச்சிக்கலை எளிதில் தீர்க்க இயலாது; ஏனென்றால் உருவாக்கத்தக்க எல்லாச் சொற்களின் பட்டியலும் அன்னாரின் அறிதிறத்தில் (competence) இருக்க வேண்டும். ஆனால், புதிய ஒட்டுகளையும் சொல்லாக்கக் கொள்கைகளையும் ஒரு மொழியின் வளர்ச்சியின் ஒரு காலகட்டத்தில் புகுத்த முடியும் என்ற காரணத்தால் மேற்சொன்னது இயலாததாகும். அகராதியின் முழுப்பதிவுக் கோட்பாட்டின் (Full entry theory of lexicon) (Aronoff,1976;Halle 1973; Roper & Siegel,1978) அதாவது சொல்லாக்க விதிகளின் விடுபொருள் (output) உடனடியாக அகராதியில் சேமிக்கப்படுகிறது என்ற கோட்பாட்டின் சிக்கல் இதுவாகும்.

6.5.7. முதல் சகோதரி நெறி

ரோபர் மற்றும் சீகல் *(1978:208)* வினைக்கூட்டுகளின் தொடரியலில் (syntax of verbal compounds) அவர்களின் கட்டுத்திட்டமான 'முதல் சகோதரி நெறி' (First sister principle) என்பதைப் புகுத்தியுள்ளார்கள். இதன்படி எல்லா வினைக் கூட்டுகளும் வினையின் முதல் சகோதரி இடத்தில் ஒரு சொல்லைக் கூட்டியிணைத்து உருவாக்கப்படும். எடுத்துக் காட்டாக 'She makes peace quickly' என்ற வாக்கியத்தில் வினையின் முதல் சகோதரி peace என்ற சொல்லை make என்ற வினையுடன் கூட்டியிணைத்து peacemaker என்ற சொல்லை உருவாக்கலாம் என்று சுட்டிக்காட்டுகின்றனர். முதல் சகோதரி இடத்தில் வராத பிற தனிமங்களைக் கூட்டிணைக்க இயலாது. எடுத்துக்காட்டாக quick(ly) maker என்ற சொல் வராது.

இக்கொள்கை வினைக்கூட்டுகளுக்கு மட்டும் பொருந்தும்; வேர்கூட்டுகளுக்குப் பொருந்தாது.

இங்கு குறிப்பிடப்படவேண்டிய முதல் கருத்து என்னவென்றால் இது வாக்கியங்களின் புறநிலை அமைப்புக்கு அண்மைப்பட்ட, அவ்வாறு மாறக்கூடிய அகநிலைக் கோர்வையின் ஆய்வை முற்கோள்படுத்துகிறது. இதன்படி கூடுதலான நுண்தொடரியல் ஆய்வு மறுக்கப்படவோ இக்கொள்கையைப் பயன்படுத்தக்கூடிய புதைநிலைத் தொடரியல் நிலையைக் குறிப்பிடத் தேவைப்படவோ செய்யலாம்.

குறிப்பிடத்தக்க இரண்டாவது கருத்து என்னவென்றால் ரோபர் மற்றும் சீகல் வாக்கியங்களை அகநிலைப்படுத்திய கோர்வைகளிலிருந்து கூட்டுகளை ஆக்கும் வகை பற்றித்தான் பேசுகிறார்கள். ஒரே கோர்வைகள் வாக்கியங்களையும் சொல்லாக்க நேர்வுகளையும் அகநிலைப் படுத்தக்கூடாது என்ற வாதமுண்டு. ரோபர் மற்றும் சீகலின் இலக்கணம் காலம், வினையாற்றுவகை, வினைநோக்கு ஆகியன இல்லாத அகநிலைக் கோர்வைகளை உருவாக்க முடிகிறது வரை இது முக்கியமான மறுப்பு என்று கூற இயலாது. X-பார் தொடரியலில் இதைத் திட்டவட்டக் குறிப்பீடு- V -பார் (spec V') (மரபுப்படி துணைவினை) இல்லாத கோர்வையை உருவாக்கியோ $\sum$ க்குச் சமமான X-பார் ஆல் ஆதிக்கம் செய்யப்பட்ட ஏதாவது தனிமங்களிலிருந்து உருவாக்கியோ செய்யலாம். ஆனால் S- உக்கு சமமான X-பார் ஆல் உருவாக்க இயலாது. வாக்கியத்தில் துணைவினை இல்லாத காரணத்தால் இது இறுத்து எடுக்கவேண்டிய மிகப்பல அமைப்புகளை உருவாக்க அனுமதிப்பதால் இதைத் திருப்திகரமான தீர்ப்பு என்று கூற இயலாது என்று பாரால் (Bauer,1978d) சுட்டிக்காட்டப் பட்டுள்ளது; ஆனால் இது ஒரு சாத்தியக்கூறாகும்.

மேற்சொன்ன முன்மொழிவுக்கெதிரான மறுப்பு, வாக்கியங்களை அகநிலைப்படுத்தும் கோர்வைகளிலிருந்து சொற்களை ஆக்கும் நேர்வுகளை முன் மொழியும் எல்லா

மாதிரிகளுக்கெதிரான மறுப்பாகும்; பல கோர்வைகள் சொல்லாக்க விதிகளுக்குப் பொருத்தமற்றதாகும். She makes peace quickly என்ற வாக்கியம் வினைக்கூட்டு உள்ளடங்கிய வாக்கியத்துடன் தொடர்புடையதென்றால் அது peace-maker என்பதைக் காட்டிலும் She is a quick peace-maker என்பதுடன் தான் தொடர்புடையதாகும். இங்கு கேள்வி என்னவென்றால் இவ்விரு வாக்கியங்களுக்குள்ள தொடர்பு தொடரியல் பற்றியதா அல்லது பொருண்மையியல் பற்றியதா என்பதாகும். ஆக்கப் பொருண்மையியல் அணுகுமுறையை (Generative Semantic approach) மேற்கொண்டால், இவ்விரு வாக்கியங்களும் ஒப்பானதாகும். முன்பு கூறியபடி ரோபர் மற்றும் சீகலின் தீர்மானம் ஆக்கமுறைப் பொருண்மையியல் அணுகுமுறை அல்லாத நோக்குகளைப் பொறுத்து அமைகிறது. பொருண்மைப் பகுதிக்குப் பொருள்கோள் பொருண்மையில் அணுகுமுறை (Interpretive Semantic approach) இருந்தால் She makes peace quickly என்பதையும் She is a quick peace-maker என்பதையும் தனித்தனித் தொடரியல் அமைப்புகளிலிருந்து பெறலாம் என்பதிலும் ஒரு பொருள் பன்மொழியத்தைப் பொருள்கோள் பொருண்மையியல் விதிகளிலிருந்து பெறலாம் என்பதிலும் மறுப்பில்லை என்று தோன்றும்; அது வினையை வினையடையால் மாற்றுவதும் பெயரை பெயரடையால் மாற்றுவதும் சமமானது என்று சுட்டிக்காட்டுகிறது; இது நிகழக்கூடியது என்பது மட்டுமன்றி, இந்த வாக்கியத்திற்கும் ஒரு பொதுவான மூலத்தைக் காண்பதால் விரும்பத்தக்கத் தீர்ப்பாகும்.She makes peace quickly என்பது வழமை (habitual) மற்றும் அவளைப் பற்றிக் குறிப்பிடத்தக்க உண்மை என்றபொருளிலும் நடந்து கொண்டிருக்கிற நிகழ்ச்சியைப் பற்றிய விளக்க உரை என்ற பொருளிலும் மயங்கி வருகிறது. She is a quick peace-maker என்பது முதல் பொருளில் மட்டும் வருகிறது.

இவ்விரு வாக்கியங்களும் வேறுபட்ட அகநிலை அமைப்புகளிலிருந்து வந்தவை என்று ஊகம் செய்து கொண்டால், பிற ஊகங்களைச் செய்ய இயலும். எடுத்துக்காட்டாக ஒரு சொல்லாக்க நேர்வை உருவாக்கத்

தேவையான உருபன்கள் மட்டும் தான் கருத்துரையில் உருவாக்கபடவேண்டும் என்று எடுத்துக் கொள்வது தான் சரியானது என்று தோன்றும். She makes peace quickly என்ற வாக்கியத்தை எடுத்துக்கொண்டால், இவ்வாக்கியத்தில் வினைநோக்கம் பற்றிய செய்தி மட்டுமன்றி peace-maker என்ற கூட்டில் இல்லாத இரு துண்டு செய்திகள் இதில் உள்ளன. முதலாவது கருத்தா ஒரு பெண் என்பது இரண்டாவது அச்செயல் விரைவாக நிகழ்ந்தது என்பது. இவ்விரு உண்மைகளும் peace-maker என்ற கூட்டை உருவாக்கத் தேவையானவை அல்ல. அப்படித் தேவை என்றால், peace-maker என்ற கூட்டு வரும் பின்வரும் வாக்கியங்கள் நிகழக்கூடியனவல்ல:

He makes peace quickly.

All the people who work in the Kremlin make peace slowly.

மட்டுமல்லாமல், இம்மாதிரியான ஊகம் சொல்லாக்கத்தில் வரையறுப்பானுக்கு (determiner) என்ன நிகழும் என்ற சிக்கலுக்கான தீர்ப்பைத் தரும். ரோபர் மற்றும் சீகலின் மாற்றப்படி துணிஉலர்த்தி (cloth drier) என்ற கூட்டு பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றிலிருந்து ஆக்கப் பெற்றதாய் விதிமுறை செய்யப்பட்டுள்ளது.

அது துணியை உலர்த்துகிறது.

அது சில துணியை உலர்த்துகிறது.

அவன் துணியை உலர்த்தினான்.

அவள் துணியை உலர்த்தினாள்.

அது என் துணியை உலர்த்துகிறது.

அது அவன் துணியை உலர்த்துகிறது.

இருப்பினும் துணி உலர்த்தி என்ற கூட்டு மொழியில் எத்தனை வரையறுப்பான் வரலாகுமோ அத்தனை விதங்களில் பொருள் மயக்கமானதல்ல.

எப்படியாவது இலக்கணம் கலவைச் சொல்லின் பாகமாக வரத்தக்க பெயருடன் கூட வரையறுப்பான்கள் உருவாக்கப்படுவதைத் தடைசெய்ய வேண்டும். (முன்பு குறிப்பிட்டது போல்) உட்படு கருத்துரைப்படி கூறுவது, எல்லாப் பெயர்களும் வரையறுப்பான் இன்றி இருக்கவேண்டிய சூழ்நிலையை சுலபமான வழியில் கூறுவதை அனுமதிக்கிறது. She makes peace quickly மற்றும் She is a quick peace maker என்ற எடுத்துக்காட்டுகளைத் திரும்பவும் எடுத்துக் கொண்டால் இவ்விரு வாக்கியங்களையும் எந்தக் குறிப்பிட்ட தொடரியல் கோட்பாட்டிற்கும் உட்படாத வேறுபட்ட இரு தொடரியல் அமைப்புகளிலிருந்து ஆக்கலாம். கீழ் தந்துள்ள படங்கள் இதைத் தெளிவுபடுத்தும்.



படம் 1



படம் 2

இம்மாதிரியான பொது வகைக் கிளைப்படங்கள் பாரால் (Bauer 1978d) முன்மொழியப்பட்டுள்ளது. இக்கிளைப் படங்களில் உள்ளுறைகிற கொள்கைகள் எல்லா வகையான சொல்லாக்கத்திற்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக விரிவுபடுத்தலாம். இம்முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப் பட்டால் இது முதல் சகோதரி கொள்கைக்குப் பேர் விளைவை ஏற்படுத்தும். தேவையான உருபன்கள் மட்டும் கலவைச் சொற்கள் ஆக்கப்பெறும் கருத்துரையிலிருந்து உருவாக்கப் படுவதால் இரண்டு பாகங்களால் உண்டாக்கப்பட்ட அமைப்புள்ள எல்லாக் கலவைச் சொற்களிலிலும் கிளை அமைப்பிலும் தானாகவே முதல் சகோதரிகளாக இரண்டு உருபன்கள் இருக்கும். கூட்டுகளைப் பொறுத்தவரையில் இதுபற்றிய எழுத்தாண்மைகளில் (literature) அவை பெரும் பாலும் அடிப்படையில் எல்லாப் படிநிலைகளிலும் இரண்டு பாகங்களால் உண்டாக்கப்பட்டவை என்று கூறப் பட்டுள்ளன. மிக நீண்ட கூட்டுகள் கூடப் பெரும்பாலும் இரண்டிரண்டாகப் பகுக்கத்தக்கனவாய் இருக்கும்; இவ்விரண்டு பாகங்களும் கூடக் கலவை நிலையில் இருந்தால் இரண்டாகப் பகுப்பாயத்தக்க தனிமங்களால் உண்டாக்கப் பட்டவையாய் இருக்கும். இதற்கு விதிவிலக்கானவைகள்

ஒரேபடி நிலையில் பல தனிமங்கள் வரத்தக்க உம்மைத்தொகைக் கூட்டுகள் (dvandva compound) ஆகும். ஆக்கச் சொற்களைப் பொறுத்தவரையில், இக்காரியம் அவ்வளவு தெளிவானதல்ல; இருப்பினும் பெரும்பாலான ஆக்கச் சொற்கள் இரண்டு தனிமங்கள் உள்ள அமைப்புகளிலிருந்து உருவாக்கப்படும் சாத்தியம் உள்ளதாய்த் தோன்றுகிறது; இத்தனிமங்களில் சில மேலும் பகுப்பாய்வு செய்யத்தக்கதாயும் இருக்கலாம். இக்கட்டுப்பாடுகளின் கீழ் முதல் சகோதரிக்கொள்கை குறிப்பிட்ட சொல்லாக்க விதியின் உறுதியான வரையறையாக இல்லாமல் தெளிவான மொழிபாக மாறும். கூட்டில் அருவ மாற்றுவினை (abstract pro-verb) பற்றிய தற்கோளுடன் (assumption) முதல் சகோதரிக் கொள்கை ரோபர் மற்றும் சீகல் விலக்கி வைத்த ஒரு குழுமக்கூட்டுகளுக்கும் சரியாகப் பொருந்தும். ஆனால் சொல்லாக்கத்தை உள்ளுறை செய்யும் தொடரியல் அமைப்புகள் பற்றி நம்மால் கட்டாயப் படுத்தப்படும் பிற தற்கோள்கள் தரப்படும் போது முதல் சகோதரிக்கொள்கை முழுவதும் கருத்தற்றதாகும்.

இருப்பினும் ரோபர் மற்றும் சீகல் எவ்விதத்திலும் கருத்தற்றதாகாத வினைக்கூட்டுக்களின் இலக்கணத்தன்மை பற்றி வருவதுரைக்க முதல் சகோதரி கொள்கையையே பயன்படுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக அவர்கள் quick-owner, fool-looker என்பனவற்றைப் பொறுத்தமற்றதென தள்ளி வைக்கின்றனர். இவை முதல் சகோதரிக்கொள்கையால் தள்ளி வைக்கப்படாவிடில் வேறு ஏதாவது வரையறை அவை உருவாக்குவதைத் தடைசெய்ய வேண்டும். பின்னால் இவை உள்வகைப்பாடு (subcategorization) சம்பந்தப்பட்டதாய் பிரேரணை செய்யப்படும்.

6.5.8. சொல் அடிப்படையிலான உருபனியல்

ஆரனோப் (1976:21) "எல்லா ஒழுங்கான சொல்லாக்கச் செயற்பாங்கும் சொல் அடிப்படையானதாகும்" என்ற சொல் அடிப்படையிலான உருபனியல் கோட்பாட்டை (theory of word-based morphology) அறிமுகப்படுத்துகிறார். இதன்படி

ஏற்கனவே இருக்கும் ஒரு தனிச்சொல்லின் மேல் ஒரு ஒழுங்கான விதியைப் பயன்படுத்திப் புதிய சொல்லை ஆக்கலாம்; இங்கு சொல் என்பது சொல்லன் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது. இது மிகக் கவர்ச்சியான கோட்பாடாகும். இது பல சொல்லாக்க நடைமுறைகளில் உள்ளுறைந்துள்ளது. மிகப் பல நேர்ச்சிகளில் பயன்படுத்தத் தக்கதாய் இருப்பதாலும் சொல்லாக்கத்திற்கான அடிகளில் கொள்கை அடிப்படையிலான வரையறை செய்வதாலும் இது கவர்ச்சியானதாய் அமைகிறது; துரதிருஷ்டவசமாக இம்மாதிரியான வரையறை அளவுக்கு மீறியதாகும் (மிகக் கடுமையானதாகும்).

இவ்வரையறை மிகக் கடுமையானது என்பதைப் பல வழிகளில் காட்டலாம். முதலாவதாகத் தொடர் அடியிலிருந்து (phrasal base) உண்டாக்கப்பட்ட சொற்கள் எல்லாம் சொல்லை விட பெரிய அலகிலிருந்து விதியைப் பயன்படுத்திச் சொற்களைப் பெற இயலும் என்று காட்டுவதால் அவை இதற்கு எதிரான எடுத்துக்காட்டுகளாய் அமைகிறன. பிரச்சனை வெளியில் தெரிவதை விட மிகச் சிக்கலானதாகும். எடுத்துக்காட்டாகக் கருத்தாவைக் குறிக்கும் -er என்ற வடிவாக்கியைப் பெயர்த் தொடர்களுடன் ஒழுங்கு முறையாகச் சேர்க்க முடியும் (எ.கா. hot mooner). பெயர்த்தொடர்களிலிருந்தும் தொடர் அடிகளிலிருந்தும் ஆக்கங்களைப் பெற முடியும் (எ.கா.far-outer). இம்மாதிரியான தொடர்கள் இன மாதிரியாக மரபுப் பொருளைத் தந்தாலும் அவற்றை ஒரு சொல்லன் என்று கூற இயலாது. சம்பந்தப்பட்ட தொடர்கள் மரபுப் பொருளைத் தரவேண்டிய கட்டாயமில்லை (எ.கா.I feel particularly sit-around-and-do-nothing-ish-today).

இரண்டாவதாகச் சொல்லைவிடச் சிறிய அலகுகளின் மேல் விதிகளைப் பயன்படுத்திப் புதிய சொல்லன்களை உருவாக்கலாம். இப்புதிய மரபுச் சொல்லாக்கத்தின் அலகுகள் ஒட்டு என்பதன் விளக்கத்திற்குப் பொருந்தினாலும் முன்னொட்டு, பின்னொட்டு, வேர் என்ற கலைச்சொல்

விளக்கங்களுக்குப் பொருந்தாது. Anglo-, bio-, electro-, Euro-, Franco-, homo-, -crat, -phile என்பன எடுத்துக் காட்டுகளாய் அமையும். Eurocrat, Francophile, Anglophile, biocrat, homophileஎன்ற சொல்லன்கள் விளைவாக்கச் செயற் பாங்கால் உருவாக்கப்பட்டதாகும்; ஆனால் ஏற்கனவே உள்ள சொல்லன்கள் அடிப்படையில் அவற்றை உருவாக்க முடியாது.

மூன்றாவதாகச் சொல் அடிப்படையான முற்கோளுக்கு எதிரான விவாதம் ஆரனோப்பின் கலைச்சொற்களின் பொருள் கோளைப் பொறுத்து அமையும். இது பின்னாக்கத்தில் (back-formation) உட்படும் அடியுடன் தொடர்புடையது. ஒட்டு இருக்கக்கூடியதுஎன்று எடுத்துக்கொள்ளக்கூடிய ஆனால் ஒட்டில்லாத வடிவாய் வரஇயலாத சொல்வடிவம் இருந்தால் தான் பின்னாக்கம் நிகழக்கூடியதாய் அமையும். மரபான எடுத்துக்காட்டு peddlar > peddle என்பதாகும்; இதில் சொற் பிறப்பியல் அடிப்படையிலான -er என்ற ஒட்டு இல்லை. இங்கு முக்கியமானது உண்மையான ஒட்டுள்ள நேர்ச்சியாகும். unflappable என்பதை எடுத்துக்காட்டாய் எடுத்துக் கொள்வோம். சொல் அடிப்படையிலான முற்கோளைக் கொண்டால் இச்சொல் ஏற்கனவே இருக்கிற flappable என்பதுடன் un -ஐ முன்னொட்டாய்ச் சேர்த்து ஆக்கப்பட்டிருக்கும். இருப்பினும் flappable என்பது unflappable என்பதிலிருந்து பின்னாக்கத்தால் ஆக்கப்பட்டதாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. ஆரநோப்பின் வாதமான சொல்லாக்க விதிகள் ''ஏற்கனவே இருக்கும் தனிச்சொல்'' மேல் பயன்படுத்தப்படுகிறது என்பது ''அடி ஒரு சாத்தியமுள்ள சொல்லாக இருக்க வேண்டும்'' என்று பொருள்பட்டால் அதாவது மொழி பேசுபவர் அது இருக்கலாகும் என்று எண்ணினால் இம்மாதிரியான எடுத்துக்காட்டு எதையும் நிரூபிக்காது. ஆனால் ''ஏற்கனவே இருக்கும்'' என்பது ''நிலைப்படுத்தப்பட்டது'' என்று கொள்ளப்பட்டால் அம்மாதிரியான பின்னாக்கத்தில் உட்படும் அடிகள், சொல்அடிப்படை முற்கோளுக்கு எதிரான எடுத்துக்காட்டாக அமையும்.

கடைசியாக, அதிக முக்கியத்துவமில்லாத நேர்வு என்னவென்றால் பல சொற்கள் சொல்லன்களிலிருந் தல்லாமல் சொல்லன்களின் கத்தரிப்பு வடிவுகளிலிருந்து (clipped forms) உருவாக்கப்படும் என்பதாகும். எடுத்துக் காட்டாக, புதிய சொல்லாக்கமான commitology 'study of committees' என்பது committee என்ற சொல்லனிலிருந்து tee என்ற அசை நீக்கப்பெற்று கிடைப்பதாகும்.

சில வடிவாக்கங்களில் வினைமுனையாய் வரும் ate மட்டமழுக்கம் (truncation) அடைவது மிகஒழுங்குமுறையான எடுத்துக்காட்டாகும். இது எவ்வளவுக்கு ஒழுங்கானது அல்லது ஒழுங்கற்றது என்று தெரியவில்லை. இது ஒழுங்கானது என்றால் இதைச் சொல்லாக்கத்தில் ஒருவகைச் சந்தி நடப்பாகக் (sandhi phenomenon) கொள்ளலாம்; இது ஒழுங்கற்றது என்றால் சொல் அடிப்படையிலான கோட்பாட்டை ஒறுக்குவதாய் அமையும்.

6.5.9. தேற்றப்பாடு

அண்மைக்கால மாற்றிலக்கண எழுத்தாண்மைகளில் சொல்லாக்க விதிகளின் மேல் இடப்பட்டுள்ள வரை முறைகளைப் பற்றி ரோபர் மற்றும் சீகல் (1978) தந்துள்ள சுருக்கம் எடுத்துக் கொள்ளப்பட்டு ஆயப்பட்டுள்ளது. இந்த ஆறு வரன் முறைகளில் ''பொருண்மை இணைப் பாக்கம்'' மட்டும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாய் இருக்கிறது. ரோபர் மற்றும் சீகலின் முதல் சகோதரிக்கொள்கை திறனாய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த வரன்முறைகள் தவறாய்த் தெரிவதற்குக் காரணம் இவை எந்த அளவுக்குச் சொல்லாக்க விதிகளின் வரையறைகளாக உள்ளனவோ அந்த அளவுக்கு அல்லது அதற்கு மேல் தொடரியல் வரன் முறைகளுக்கான பிரேரணைகளாக இருப்பதாகத் தோன்றுவதாகும்.

6.6. தொடரடி வகைப்பாடு

6.6.1. தொடரடி வகைப்பாட்டுச் சட்டங்களின் அமைப்பொழுங்கு

ரோபர் மற்றும் சீகல் (Roper & Siegel 1978:202-3) ஆக்கங்கள் அவற்றின் அடிப்படையாக அமையும்

சொற்களிலிருந்து அவை எவ்வாறு இலக்கண ரீதியாகத் தொடரடி வகைப்பாடு செய்யப்படுகின்றன என்பதைப் பொறுத்து வேறுபடுகின்றன என்று சுட்டிக்காட்டுகின்றனர். அவர்கள் சொல்லன்களை அவை எவ்வாறு சாம்ஸ்கியின் தேர்வு (Selectional) மற்றும் தளராத் தொடரியல் வகைப்பாடு (Strict subcategorization) விதிகளில் குறிப்பிடப்பட்ட தொடரியல் அல்லது பொருண்மையியல் சூழல் வகையில் வருகிறது என்று காண்கிறார்கள். எடுத்துக்காட்டாகக் கொல் என்ற வினை [பெ.தொ. பெ.தொ —] மற்றும் [— + விலங்கு] என்று குறிப்பிடப்பட்ட சூழலில் வரும் அடிகளிலிருந்து சொல்லாக்கங்களை உருவாக்கும் செயற்பாங்குகள் சட்டகங்களில் மாற்றத்தை உண்டுபண்ணலாம். இவைகள் ஒவ்வொன்றையும் ரோபர் மற்றும் சீகல் தொடர்பு வகைப்பாட்டுச் சட்டகங்கள் என்கின்றனர். சொல்லாக்கச் செயற்பாங்குகளை இச்சட்டகங்கள் உள்ளார்ந்தனவா (inherent), நீக்கப்பட்டனவா (deleted), சேர்க்கப்பட்டனவா (added) என்பதன் அடிப்படையில் பாகுபாடு செய்யலாம்.

6.6.1.1. உள்ளார்ந்த சட்டகங்கள்

நேர்ச் செயப்படுபொருள் அடிச்சொல்லனுடன் கொண்டுள்ளது போல் அல்லது வினைக்கும் அதன் பெயராக்கத்திற்கும் ஒரே முன்னுருகுறி இருப்பது போல் ஆக்கங்களுடன் அதே பொருண்மை உறவில் இருக்கும் of உடன் கூடிய முன்னுருபுத் தொடர்களைச் செயப்படுபொருள் குன்றாவினைகளின் பெயராக்கங்கள் (nominalizations) அனுமதிக்கின்றன.

He criticized this book

His criticism of this book

He qualified for the new job

His qualification for the new job

தொடரடி வகைப்பாட்டுச் சட்டகங்கள் பெரும்பாலும் கலவைச் சொற்களால் அவற்றின் அடிகளிலிருந்து இதே

வழியில் தான் உள்ளார்ந்தனவாயின. எடுத்துக்காட்டாக மரபுத் தொடரல்லாத (non- idiomatic) உள்வட்ட பெயர்+பெயர் கூட்டுகள் அவற்றின் தலைப்புப் பெயர்களைப் போலவே எண்ணத்தக்கவை; பால், உயிர்மை (animacy), பருமை போன்ற வகைப்பாட்டுகளுக்கான குறிகளைப் பெறும்; LIONESS போன்ற ஆக்கங்கள் அதன் அடியான LION என்பதன் பொருண்மைப் பண்புக்கூறுகளை உள்ளடக்கிக் கொண்டதோடு பாலுக்கான பண்புக்கூறையும் சேர்த்துக்கொண்டுள்ளது. இவையாவும் நேரடியான நேர்ச்சிகள். பிறவற்றில் சிறிது மாறுபாடான விதத்தில் சட்டகம் உள்ளார்வுறும். ரோபர் மற்றும் சீகல் (1978:204 -5) -able என்ற ஒட்டால் வினையிலிருந்து ஆக்கப்பெற்ற ஆக்கங்களின் எழுவாய் மீதான தேர்வுக்கட்டுத்திட்டம் போலவே வினையடிகளின் செயப்படுபொருள் மீதான தேர்வுக்கட்டுத்திட்டம் இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

John ate the meat

The meat was eatable

*John ate the love

*The love was eatable

எந்த நேர்ச்சிகளில் இது பொருந்தவில்லையோ அவற்றைச் சொல்நிலையாக்கத்தின் விளைவாகக் கொள்ள இயலும் எனத் தோன்றுகிறது; ஏனென்றால் இப்பொதுமையாக்கம் விளைவாக்க நேர்ச்சிகளில் உண்மை போல் தோன்றுகின்றது. பொதுமையாக்கமாக எடுத்துக்கொள்ள இயலாத பின்வரும் நேர்ச்சிகளை எடுத்துக்கொள்வோம்.

John kissed her

She was kissable

John kissed her hand

? Her hand was kissable

He kissed the rod

* The rod was kissable

The rod was kissable என்ற தொடரை ஏற்றுக்கொள்ள முடியாமையை kiss the rod என்பதன் மரபுத்தன்மையுடன் தொடர்புப்படுத்தலாம்; ஆனால் Her hand was kissable என்பதற்கு இது சரியாகப் பொருந்தாது. இந்த ஏற்புடையாமை குறித்த உள்ளுணர்வு சரியானதென்றால் -able என்ற பின்னொட்டுடன் கூடிய உள்ளார்வுற்ற சட்டகங்களின் பொதுவிதிக்கு விதிவிலக்காக இது வருவதால் இது அகராதியில் குறிப்பிடப்பட வேண்டும்.

பின்வருவனவற்றையும் எடுத்துக்கொள்வோம்.

He kissed the bishop's ring

? The bishop's ring was kissable

இவற்றிலிருந்து மக்களைத் (மற்றும் உதடுகளைத்) தான் முத்தமிட இயலும் என்ற கட்டுப்பாட்டை எளிதில் கூறலாம்.

6.6.1.2. நீக்கப்பட்ட சட்டகங்கள்

சில நேர்ச்சிகளில் ஒரு வினைச் சொல்லனைத் தனியாகப் பயன்படுத்துகையில் அதற்கு ஒரு பெயரோ அல்லது வாக்கியச் செயப்படுபொருளோ வரலாம்; ஆனால் re- என்ற முன்னொட்டு வருகையில் வாக்கியச் செயப்படு பொருள் வரஇயலாது என்று ரோபர் மற்றும் சீகல் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வாறு அவர்கள் பின்வரும் ஏற்புடைமையின் அமைப்பொழுங்கை வருவதுரைக் கின்றனர்.

I told her the story

I retold her the story

I told her that Lucy was coming

* I retold her that Lucy was coming

இந்த அமைப்பொழுங்கு பொதுமையாக்கம் செய்யத்தக்க விதத்தில் எல்லாச் சொல்லன்களுக்கும் வருவதில்லை. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதை உறுதிப்படுத்தும்.

The president affirmed his love for her

The president reaffirmed his love for her

The president affirmed that he would stand for re-election

The president reaffirmed that he would stand for re-election

ரோபர் மற்றும் சீகல் *(1978:254)* EAT என்ற வினை over- என்ற முன்னொட்டு பெறுகையில் வேறுபடுவதையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

I ate

I ate the potato

* I overate the potato

விளைவாக்கமாக வரும் இத்தகைய நேர்ச்சிகள் ரோபர் மற்றும் சீகலால் சொல்லாக்கச் செயற்பாங்கால் ஏற்படும் சட்டக நீக்கமாகக் கொள்ளப்படுகிறது. ஒருசில விதிவிலக்குகள் இருந்தாலும் பொதுவாக அவர்கள் ஒட்டாக்கம் தொடரியல் சட்டகங்களை நீக்குவதாகக் குறிப்பிடுகின்றனர். தொடரியல் சட்டகம் நீங்குவது ஒரு குறிப்பிட்டச் சொல்லாக்கச் செயற்பாங்கின் ஒழுங்காக உடனியங்குகிற ஒன்றாக இருக்குமானால், இதை அச்செயற்பாங்கை ஆளுகை செய்யும் விதியின் ஒரு பாகமாகக் குறிப்பிடலாம். மாறாக, தொடரியல் சட்டக நீக்கம் ஒழுங்கற்று (தொடர்ச்சியற்று) வருவதுரைக்க இயலாதவாறு வருமானால், அச்சட்டக நீக்கம் தொடரியல் சொல்நிலையாக்கத்தோடு சமன் செய்யப்படவேண்டும் என்று தோன்றுகிறது (Bauer, 1983:179).

6.6.1.3. சேர்க்கப்பெற்ற சட்டகங்கள்

ஆக்கத்தின் தொடரியல் வகுப்பை மாற்றும் எந்த முன்னொட்டும் புதிய வகுப்பிற்கென்று கொள்ளத்தக்க ஒழுங்குமுறைக்குப் பொருந்தும்படியாக தொடரியல் வகைப்பாட்டை மாற்றவேண்டும். எடுத்துக்காட்டாக DEPEND என்பது ஒரு எழுவாயையும் on என்பதால் உட்படுத்தப்படும் விருப்புத்தொடரையும் எடுக்கும். ஆனால் DEPENDABLE என்பது ஒரு பெயர்ச்சொல்லை விவரிக்கலாம்

அல்லது இணைவினைக்குப் (copula verb) பிறகு பயனிலையின் இடத்தில் பயன்படுத்தப்படலாம்.

He depends on her

He is a dependable worker

He is dependable

ஆக்கமல்லா வடிவுகளை விட ஆக்கவடிவுகள் பரந்த அளவில் பங்கெடுப்பாளர்களை (arguments) அனுமதிக்கும் retell மற்றும் overeat என்பனவற்றிற்கு மறுதலையாய் அமையும் நேர்ச்சிகளும் உள்ளன. பின்வரும் எடுத்துக்காட்டைக் கூறலாம்.

He grew

* He overgrew

* He grew his electric train set

He outgrew his electric train set

பின்வருவது வேறு எடுத்துக்காட்டாகும்.

* He supposed the answer

He supposed that the answer would not come in time

He presupposed the answer

He presupposed that the answer would not came in time

மேலும், இம்மாதிரியான சட்டகச்சேர்க்கை ஒரு குறிப்பிட்ட சொல்லாக்கச் செயற்பாட்டின் ஒழுங்கான பண்புக்கூறாக இருந்தால் தான் அதைச் சொல்நிலையாக்கத்துடன் சமன்பாடு செய்ய இயலும் (Bauer, 1983:180).

6.6.2. தொடரடி வகைப்பாடும் முதல்சகோதரிக் கொள்கையும்

முதல் சகோதரிக்கொள்கை சில வகைச் சொல்லாக்க விதிகளை வரையறை செய்வதைப் பற்றி முன்னர் பார்த்தோம். சொல்லாக்கத்தைப் பற்றிய முழுமையான இலக்கணம்

விரிவாக்கப்பட்டால் இம்மாதிரியான கொள்கைகள் கருத்தற்றதாகும். இங்கு முதல்சகோதரிக்கொள்கை காட்ட விரும்பிய பொதுமையாக்கங்களைத் தொடரடி வகைப் பாட்டுச் சட்டகங்களைப் பயன்படுத்தி காட்ட முயற்சி எடுக்கப்படும்.

முதல்சகோதரிக் கொள்கைப் படி வினைக்கு வலதுபக்கத்தில் உள்ள முதல்சகோதரி, வினைக்கு இடது பக்கத்திற்கு மாற்றத்தால் (transformation) நகர்த்தப்படும்; மட்டுமன்றி கூட்டுவினைகள் உருவாக்கப்பெற்றால் வினைக்கு வலமாக ஒரு ஒட்டு சேர்க்கப்படும்; வினை செயப்படுபொருள் குன்றாவினையாகக் கட்டாயச் செயப்படுபொருளுடன் வந்தால், வினைக்கு வலமாக வரும் முதல்சகோதரி வினையின் நேரடிச் செயப்படுபொருளாக வரும். பல N+V+er கூட்டுகளில் N- இன் தடத்தில் (slot) நேரடி செயப்படுபொருள் ஏன் வருகிறது என்ற உண்மை இதனால் தெளிவுறும். ஆனால் இதை ஆழமிலா அமைப்பில் (shallow structure) வினையோடு சம்பந்தப்பட்ட கணுவின் இடத்தை பொறுத்திருக்கிறது என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. இவ்வினைகள் பெயர்ச் செயப்படுபொருளுடன் (nominal object) கூடிய செயப்படுபொருள் குன்றாவினையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என்ற உண்மையுடனும் தொடர்புபடுத்த இயலும். இம்மாதிரியான மாற்றத்தில் (transformation) வாக்கியச் செயப்படுபொருளுடன் கூடிய (sentential object) செயப்படுபொருள் குன்றாவினை பங்கெடுக்க இயலாது என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

I want to see him

* A see-wanter

* A to-see-him-wanter

I helped wash up

* A wash-up-helper

தனித்தியங்கும் (absolute) வழக்குள்ள செயப்படு பொருள் குன்றாவினை (அதாவது செயப்படு

பொருள் இல்லாத Simith drinks, Do you smoke? போன்ற வழக்குகள்) மற்றும் செயப்படுபொருள் குன்றிய வினைகள் ஒரு வினையடையை அதன் முதல்சகோதரி இடத்தில் அனுமதிக்கும். ரோபர் மற்றும் சீகல் (Roeper & Siegel 1978:294ff) முழுமையாகப் பயன்படுத்தப்படும் செயப்படு பொருள் குன்றாவினைகள் வினையடைகளுடன் கூட்டாக்கத்தை அனுமதிக்காது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர்; எடுத்துக்காட்டாக * clearly hearer என்பது சாத்தியமான வினைக்கூட்டு அல்ல. அவர்கள் இதைப் பின்வரும் விவாதமாகக் காண்கின்றனர்: தனித்தியங்கப் பயன்படுத்தப்படும் செயப்படுபொருள் குன்றாவினை அதன் அகஅமைப்பில் நேர்ச் செயப்படுபொருளுக்காகப் பூஜியக் குறியைக் கொண்டிருக்கும்; ஆனால், எல்லாச் செயப்படு பொருள் குன்றாவினைகளும் ஒரே மாதிரியாகப் பாவிக்கப் படும் என்றும் அவைகள் நேர்ச் செயப்படுபொருளாக வருவனவற்றுடன் வினைக்கூட்டை உருவாக்கும் என்றும் பொருள் படலாம். வினையடைத் தொடர் ஒரு வினையடைச் சொல் அல்ல, மாறாக ஒரு முன்னுருபுத் தொடர் என்ற எதிரிடையான எடுத்துக்காட்டுகள் உள்ளன.

vaccum cleaner வெற்றிடத்தைச் சுத்தப்படுத்தாது; town crier நகரத்தை அழாது; breech-loader துப்பாக்கியின் பின் பகுதிகூ.ஏ சுமை ஏற்றாது; school-teacher பள்ளியைக் கற்பிப்பதில்லை, பள்ளியில் கற்பிற்கிறார். மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் எல்லாம் நிலை நிறுத்தம் பெற்றவை; இந்த அமைப்பொழுங்கு விளைவாக்கம் உள்ளனவா என்று சரியாகத் தெரியவில்லை. அவைகள் விளைவாக்கம் அற்றவை என்றால், இங்கு எடுத்துக்கொண்ட அணுகுமுறைப்படி, அவைகள் அகராதியில் பட்டியலிடப்படவேண்டும்; அவை எந்தச் சிக்கலையும் தராது; ஆனால் ரோபர் மற்றும் சீகல் அவர்கள் அணுகுமுறைப்படி இதற்கு விளக்கம் தரவேண்டும்; அவை விளைவாக்கமுள்ளவை என்றால் வலப்புறம் வரும் முதல் சகோதரி இவ்வினைகளுடன் கூட்டாக்கம் செய்ய முடியும் என்பது பொதுமையாக்கமல்ல என்றுதோன்றுகிறது; மாறாக ஒரு பெயர் இம்மாதிரியான செயப்படுபொருள்

குன்றா வினையுள்ள வினைக்கூட்டு ஆக்கத்தில் பயன்படுத்தப்படலாம் என்பது பொதுமையாக்கமாகும். ஒரு செயப்படுபொருள் குன்றாவினை தனித்தியங்கும் வழக்கை அனுமதிக்காவிட்டால், கூட்டில் வரும் பெயர் வினையின் நேர்ச்செயப்படுபொருளாக இருக்க வேண்டும்; ஆனால் செயப்படுபொருள் குன்றாவினை தனித்தியங்கும் வழக்கை அனுமதிக்குமானால், பெயர் இவ்வாறு மட்டுப்படுத்தப் படுவதில்லை.

செயப்படுபொருள் குன்றிய வினைகளுக்கு நேர்ச் செயப்படு பொருளுக்கான இடம் இருப்பதில்லை. எனவே முதல் சகோதரி வினையடை போன்றவையாக இருக்க வேண்டும். ரோபர் மற்றும் சீகல் -ly இல்லாத வினையடைகள் (எ.கா. slow burner, late bloomer) மற்றும் பெயராக வரும் வினையடைகள் (எ.கா.church-goer, city-dweller)உள்ள செயப்படுபொருள் குன்றிய வினைகளிலிருந்து ஆக்கப் பெறும் கூட்டுகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருகின்றனர். அவர்கள் வினையடைகள் வந்தால் கூட்டாக்கம் தடை செய்யப்பட்டு அவ்விடத்தில் பெயரடை+பெயர் என்ற தொடர் உருவாக்கப்பெறுவதைக் காட்டுகின்றனர்; அவர்கள் beautiful dancer மற்றும் smart dresser என்ற எடுத்துக் காட்டுகளைத் தருகின்றனர். எந்த அணுகுமுறையிலும் இம்மாதிரியான எடுத்துக்காட்டுகள் விதிவிலக்காக வரலாம்; ஆனால் இம்மாதிரியான கூட்டில் பிற வினையடைகளை உள்ளடக்கும் சாத்தியக்கூறு வினைக்கு, செயப்படுபொருள் குன்றிய வினைக்கான குறியிடுவதின் தானியங்கு விளைவு என்று ஏன் கொள்ளக்கூடாது என்பதற்குக் காரணம் இல்லை. இம்மாதிரியான கூட்டில் வினையடை எப்பொழுதும் இடப்பொருளில் வரும் என்று ரோபர் மற்றும் சீகலின் எடுத்துக்காட்டுகளிலிருந்து தீர்மானிக்கலாம். இது தனித்தியங்கு செயப்படுபொருள் குன்றா வினைகளில் வரும் வினையடைகளுக்கும் பொருந்துவதாகத் தெரிகிறது; ஆனால் இக்கூட்டுகளில் இடப்பொருள் கணு எப்பொழுதும் கட்டாயமாக ஒரு புறப்பெயருக்கு மேம்பட்டு நிற்கும். இதற்கு மாறாகத் தனித்தியங்கு வழக்கை அனுமதிக்காத

செயப்படுபொருள் குன்றாவினையுடன் கூட்டின் பாகமாக ஆக்கப்பட்ட பெயர் எப்பொழுதும் செயப்படுபொருள் வேற்றுமையாகவே வரும். அதாவது செயப்படுபொருள் வேற்றுமையாக வராத நேர்ச்செயப்படுபொருள் உள்ள வினை இம்மாதிரியான கூட்டாக்கத்தில் பயன்படுத்தப்படாது (எ.கா. She reached London, * London-reacher; She inhabits the city, * city-inhabiter); dog-fetcher என்பது 'யாருக்காவது நாயைக் கொணரும் ஆள்' என்று பொருள்படுமேயன்றி, 'நாய்க்கு வேண்டி எலும்பைக் கொணரும் ஆள்' என்று பொருள்படாது. ரோபர் மற்றும் சீகலின் முதல்சகோதரிக் கொள்கை இம்மாதிரியான குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை விளக்கத் தவறி விட்டது. ஆனால் இங்கு கூறப்பட்ட முன்மொழிவுக்குப் பிற அனுகூலங்களும் உண்டு; இது அகராதியில் குறிப்பிடப்படவேண்டிய இலக்கண வகைப்பாட்டைப் பயன்படுத்துகிறது; இதைப் புதைநிலை வேற்றுமை என்ற கருத்துச்சாயலை விளக்கிவைக்கத்தக்க விதத்தில் திரும்பி முறைப்படுத்தப்பட இயலும் என்பதால் இது குறைந்த கோட்பாட்டுத் திட்டவட்டமுள்ளது. ரோகர் மற்றும் சீகல் ஆதரித்துக்கூறும் தொடரடி வகைப்பாட்டின் பயன்பாட்டை விரிவாக்கி அவர்களின் முதல்சகோதரி கொள்கைக்குப் பதிலான உகந்ததொன்றை விவரிக்கலாம் (Bauer. 1983:180-182).

6.7. சொல்லாக்கத்தில் பொருள் திட்டவட்டம்

சொல்லாக்கத்தின் விதிகள் எவ்வளவு நெருக்கமாக ஒரு கலைவச் சொல்லனின் பொருளைத் திட்டவட்டமாகக் கூறவேண்டும் என்பது சொல்லாக்கம் பற்றிய ஆய்வில் அடிக்கடி வரும் சிக்கலாகும். இதை ஆங்கில முன் ஒட்டான ish-ஐ எடுத்துக்காட்டாகக் கொண்டு விளக்கலாம். இப்பின்னொட்டின் சரியான பொருள் இது சேர்க்கப்படும் பெயரடை அடியுடன் இதற்குள்ள தொடர்பின் அடிப்படையில் பெறப்பட வேண்டும்.oldish என்பது 'பெயரடை அடியைக் காட்டிலும் இளமையானது' என்று மட்டும் பொருள் படும்; அதே சமயம் youngish என்பது 'பெயரடை அடியைக் காட்டிலும் முதுமையானது' என்று

மட்டும் பொருள் தரும். -ish என்பது தரப்படுத்தத்தக்க ஒரு ஜோடி எதிர்ச்சொற்களின் ஒரு அங்கத்தின் அடியுடன் சேர்க்கப்பட்டால், -ish ஆக்கச்சொல் எப்போதும் 'பெயரடை அடியால் மட்டும் காட்டப்பெறும் ஒரு அளவையின் இறுதி இடத்திலிருந்து கூடுதலானது, ஆனால் எதிரிடையான இறுதி இடத்தைக்காட்டிலும் பெயரடை அடியால் காட்டம் பெறும் இறுதி இடத்திற்கு நெருங்கினது' என்று பொதுமையாக்கம் செய்தால் இவ்விரண்டின் முரண்பாட்டினை நீக்கலாம். இது எதைக் குறிப்பிடுகிறது என்றால் பின்னொட்டு -ish உடன் இணைந்த சொற்பொருள், அகராதி வகையிலான விளக்கத்தைக் காட்டிலும் திட்டவட்டம் குறைந்தது என்பதாகும் (எ.கா.oldish, youngish). ஆனால் -ish தரும் சிக்கல் மேலும் கடினமானது. -ish வேறு வகைப் பெயரடைக் குழுமத்துடனும் சேரும் (எ.கா.fortyish). fortyish என்பது 'நாற்பதின் இரு வசத்தையும் சார்ந்த (அதாவது ஒரு வசத்தை மட்டும் சாராத) என்று பொருள்படுவதாய் தோன்றுகிறது. இச்சிக்கலைத் தீர்க்கும் வழி என்னவென்றால் ish - க்கு முழுவதும் தனிப்பட்ட இரண்டாவது அர்த்தம் தருவதாகும்; ஆனால் இந்நேர்ச்சியில் அம்மாதிரியான தீர்வு பொதுமையாக்கத்தை இழக்கும். forty ஒரு வயது அளவையில் நாற்பதுக்கு முன்னாலிருந்து பின்னால் வரை நீளும் இடக்குறிப்பைக் காட்டும்.

40

…———|———…

மாறாக young மற்றும் old என்பன ஒரு இணை அளவையில் (parallel scale) இறுதிகளைக் காட்டும்.

young old

|——— … ———|

மேலும் 'younger than young' என்றும் 'older than old' என்றும் இருக்க முடியாது; இரண்டும் ஒரு துல்லியமான இடத்தைக் காட்டாது; ஒவ்வொன்றையும் மேலும் விஷேடனம் செய்ய இயலும் (எ.கா.very young, fairly old) இதன் விளைவாக fortyish

என்பது 'பொருத்தமான அளவையில் நாற்பதுக்கு அண்மையிலான' என்று பொருள்படும்; அதாவது உண்மை வாசகத்தில் 'கூடக்குறைய நாற்பது' என்று பொருள் கொள்ளப் படும்; ஆனால் youngish என்பதற்குப் 'பொருத்தமான அளவையில் young என்பதற்கு அண்மையானது' என்பது 'not as old as old' என்று மட்டும் பொருள் தரும்; இதுபோல oldish என்பதற்கு 'பொருத்தமான அளவையில் old என்பதற்கு அண்மைப்பட்டது' என்பது 'not as old as old' என்று மட்டும் பொருள் தரும். இப்படி -ish என்பதன் அர்த்தத்தைப் 'பொருத்தமான அளவையில் பெயரடை அடிக்கு அண்மைப் பட்ட' என்று கொண்டால், fortyish, oldish மற்றும் youngish என்பவற்றில் காட்டப்பெறும் பொருள்களை ஒற்றைச் சொற்பதிவால் கூறலாம். ஆனால் சொற்பதிவில் குறிப்பிட்ட அர்த்தம் குறைந்த அளவில் தான் துல்லியமானதாகும்; ஏனென்றால் இதை ஒரேயடியாகத் திட்டவட்டப் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் பெயர்ப்புரை செய்ய இயலாது; ஆனால் அடிக்குத் தகுந்தவாறு மாறும் ஒரு பொருத்தமான ஒரு அளவையைக் குறிப்பிட இயலும்.

கூடுதலான எடுத்துக்காட்டுகள் பெயர் + பெயர் வடிவுள்ள கூட்டுப் பெயர்களால் தரப்படுகின்றன. இம்மாதிரியான கூட்டுப் பெயர்களில் பல பகுப்பாய்வு களின்படி அதிக எண்ணிக்கையுள்ள (அல்லது எண்ணிக்கை யில்லாத) வேறுபட்ட அகநிலை அமைப்புகள் (எனவே வேறுபட்ட அர்த்தங்கள்) இப்புறநிலை அமைப்புடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. ஏற்றமைவாகக் கொள்ளப் பட்ட (postulated) அக அமைப்புகளின் எண்ணிக்கை பெரும்பாலும் கூட்டில் இருப்பதாகக் கருதப்படும் பயனிலைகளின் எண்ணிக்கைகளின் அடிப்படையில் அமையும். முன்னர் கூறப்பட்ட அணுகுமுறையைக் (6.4.-ஐ) கைக்கொள்வதனால் இவ்வடிவிலான எல்லாப் பெயர்க் கூட்டுகளும் இப்புறநிலை அமைப்புடன் தொடர்புடைய ஏகப்பொருள்தான் பெறும். இந்த ஏகப்பொருள் பொதுவாகத் தரப்படும் பொருளிலிருந்து குறைந்த திட்டவட்டமுள்ளதாய் இருக்கும்; மட்டுமன்றி குறிப்பிட்ட பொருண்மைக்

கூறுகளின் குழுமத்தால் திட்டவட்டப் படுத்த இயலாது என்பதற்காக இது பயன்வழியியல் காரணிகளுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இங்கு குறிப்பிடப் படவேண்டியது என்னவென்றால் மிகப் பொதுப்படையான வாசகத்தில் சொல்லாக்கச் செயற்பாடுகளின் பொருள்களைத் திட்டவட்டப்படுத்த இயலும் என்பதாகும். மேலும் இவ்வகையிலான அணுகுமுறை, உள்ளன்கள் (entities), செயல்கள், பண்புகள் இவை பற்றிய ஒருவித அறிவுமின்றி கலவைச் சொல்லன்களைப் பெயர்ப்புரை செய்ய இயலும் என்று துல்லியத்தைக் குறைத்துக் கூறுகையில், ஒரு சொல்லாக்கவிதியின் பொருண்மைத் திட்டவட்டப் படுத்தலில் கூடுதலான எளிமையைக் கொண்டு வர இயலும்.

வகுப்பு மாற்றத்தை ஏற்படுத்தும் சொல்லாக்கச் செயற்பாங்குகளின் விவாதங்களில் சொல்லாக்கச் செயற்பாங்கின் பொருண்மைத் திட்டவட்டப் படுத்துதலில் காட்டப்படவேண்டிய துல்லியம் முக்கியத்துவம் பெறுகிறது. இதை இரண்டு செயற்பாங்குகளில் எடுத்துக்காட்டலாம்; அவை பெயரடையாக்கம் மற்றும் பெயராக்கம் என்பனவாகும். லெவி (Levi,1973,1978) traumatic event, musical comedy, national resource, salivary gland, floral wreath, marine life, industrial equipment போன்ற கட்டுமானங்களில் வரும் பெயர்ப் பெயரடைகள் பொருத்தமான (ஏற்புடைய) பெயர்களிலிருந்து (trauma, event, music, comedy) உருபனியல் பெயரடையாக்க மாற்றத்தால் ஆக்கப்பெறும் என்றும், இக்கலவைப் பெயர்களின் ஆக்கத்தின் முந்தைய நிலை பொருத்தமான பெயர் + பெயர் கூட்டு (tuauma event, music comedy போன்றவை) என்று வாதிடுகிறார். பெயரடையாக்க மாற்றம் பொருளைப் பாதிக்காமல் சொல்லனின் வடிவ வகுப்பில் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது இவ்வாதத்திற்குரிய முக்கியக் குறிப்பாகும். அதாவது உருபனியல் பெயரடையாக்கம் பொருளைத் தக்க வைத்துக்கொள்ளும் ஒரு தொடரியல் விதி.

இந்நிலைமையைப் பெயராக்கத்தைப் பற்றிக் கூறும் ஆய்வுகளுடன் ஒப்பிட்டால் இது மேலும் தெளிவுறும். முதலாவதாக அகராதிகளைப் பார்த்தால், தரமுள்ள அகராதிகள் கூட பெயராக்கத்திற்கு அதிகப்படியான பொருள் விளக்கங்களைத் தருகிறது. பெரும்பாலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்கோள்களில் மயக்கம் (அல்லது தெளிவின்மை) தெரிகிறது. இம்மாதிரியான பொருள் விளக்கங்களின் பரப்பெல்லையை எடுத்துக்காட்ட -ation என்ற பின்னொட்டால் பெயராக்கம் பெற்ற ஆக்க வடிவுகளின் பட்டியல் மாதிரிக்காகக் கீழே தரப்பட்டுள்ளது (Bauer, 1983:185).

i. Act of Ving: His CLASSIFICATION of the materials took years

ii. State of being Ved: CIVILIZATION is a recent stage in the history of mankind

iii. Process of being Ved: The COAGULATION of the blood was well advanced

iv. Place where one is Ved: His ACCOMODATION was a luxurious flat in the city

v. The uncountable result of (i): The CONDENSATION on the inside of the windows impaired my view

vi. The countable result of (i): There have been several CONFRONTATIONS between students and the Minister of Education

vii. Something used in carrying out (i) I received ample COMPENSATION for the trouble I had been put to

viii. System for carrying out (i): This Library uses Dewey decimal CLASSIFICATION for books

ix. Means of Ving: COMMUNICATIONS with the capital have been restored

x. Object which Vs someone or something: This monument is a COMMEMORATION of the signing of the peace treaty

xi. Something Ved: I have received a brief COMMUNICATION from her

xii. Measure of the degree to which something is Ved: What is the CONCENTRATION of salt in this solution?

முதல் மூன்றும் பொதுவாக (சாதாரணமாக) நிகழ்வது என்றாலும், பொருள் விளக்கங்களில் ஒன்று கூட ஒரு குறிப்பிட்ட பெயராக்கத்திற்கென்ற தனித்தன்மையானதல்ல. இப்பொருள் விளக்கம் ஒவ்வொன்றும் பெயராக்கத்திற்கு ஒரு சிறப்புப் பொருளைப் பாவிப்பதனால், பெயராக்கத்தில் காணப்படும் அர்த்தங்களின் பரப்பெல்லையைக் காட்ட குறைந்தது 12 அக நிலை அமைப்புகளாவது தேவைப்படும். இம்மாதிரியான அகநிலை அமைப்புகளின் பரப்பெல்லை பெயராக்கம் பற்றிய ஆய்வுகளில் விவாதிக்கப்படவில்லை. சொல்லாக்க ஆய்வுகளில் வாதிக்கப்பட்ட வேறுபட்ட வகையான பெயராக்கங்கள் மிகச் சிலவே: எ.கா. கருத்தா பெயராக்கம்(agentive nominalization), 'செயல்' மற்றும் 'உண்மை' பெயராக்கங்கள் ('act' and 'fact' nominalizations), (Fraser, 1970, Lakaff, 1970, Lees, 1960, Newmayer, 1971,), 'விளைபொருள்' மற்றும் 'நிலை' பெயராக்கங்கள் ('Product' and 'state' nominalizations) (Levi,1978) 'முறை' பெயராக்கங்கள்' ('manner' nominalizations) (Newmayer, 1970,1971). பெயராக்கங்கள் ஆக்கப்படுகிற ஒழுங்கமைவுகளின் (configurations) சரியான விவரங்கள் நிபுணர்களுக்கிடையில் வேறுபடுகின்றன. இருப்பினும் பொதுவான ஒழுங்கமைவு பின்வருமாறு அமையலாம் (Bauer, *1983:186*).



கணுக்கள் X மற்றும் Y வெவ்வேறு கணிப்புகளில் வேறுபடும்: X ஃபராசரால் (Fraser, 1970) பெயர்த்தொடராகக் (NP-ஆக)

கணிக்கப்படுகின்றது, ஆனால் லெவியால் (Levi, 1978) பெயராகக் (N-ஆக) கணிக்கப்படுகின்றது: Y ஃபராசரால் S ஆகக் கணிக்கப்படுகின்றது; ஆனால் லெவியால் (Levi,1978) வினையாகக் (V-ஆக) கணிக்கப்படுகின்றது; ''..... வி .....'' என்ற கருத்துச்சாயல் (வேறு ஏதாவது இதில் உள்ளடக்கப் பட்டாலும் படாவிட்டாலும்) வினை இந்த அமைப்பின் கட்டாயத் தேவையான பாகமாகும் என்பதைக் காட்டுவதற்காகும்.

கீழே தந்துள்ள வாக்கியங்களின் பெயராக்கங்களுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளைக் கண்டு கொள்ளத்தான் இம்மாதிரியான குறிமானம் உருப்படுத்தப்பட்டுள்ளது.

1.His condemnation of the government lasted for hours (Act)

His condemnation was a bitter blow for the government (Fact)

His condemnation of the government was verbose (Manner)

His behaviour was sufficient condemnation (Reason)

இருப்பினும் இம்மாதிரியான அணுகுமுறையை எடுத்துக் கொண்டால் தனி நிலைப் பெயர்களையும் உள்ளுறை செய்ய இது போன்ற வேறுபட்ட அக அமைப்புகள் தேவைப்படும். கீழே தந்துள்ள வாக்கியங்களை எடுத்துக்கொள்வோம்.

2.a. His joy caused others great heartache (Fact)

b. The joy of being Prime Minister is overestimated (State)

c. His children are a great joy to him (Reason)

3.a. The sudden noise made him jump (Act)

b. The noise is causing people to move away from the airport (Fact)

c. There's so much noise in here I can hardly hear myself think (State)

d. The noise near the airport is horrifyingly loud (Manner)

பிற சான்றால் உத்திரவாதம் செய்யப்பட்டதை விடக் கூடுதல்

சிக்கல் வாய்ந்த அக அமைப்புக்கு ஒவ்வொரு பெயர்த் தொடரும் கொண்டு செல்லும் என்பதால் இம்முடிவு முற்றிலும் விருப்பத்தகாததாகும். குறிப்பாக மேற்கண்ட 2 மற்றும் 3 - இல் உள்ள வாக்கியங்களில் வரும் பெயரின் கொள்கருத்து பெயர் வரும் வாக்கியத்தின் பண்புக்கூறே தவிர பெயரில் உள்ள உண்மையான மயக்கமல்ல. அதாவது பெயர்கள் மயக்கத்தைக் காட்டுகின்றன என்பதை விட தெளிவின்மையைக் காட்டுகின்றன என்பதுதான் சரி.

சரிநிகரை அடிப்படையாகக் கொண்ட நீக்கத்தின் கீழ்வரும் தாண்டல் கொள்கருத்தின் (cross reading) இல்லாமை தான் மயக்கத்தை அறிய உதவும் மரபுச்சோதனை ஆகும். எடுத்துக்காட்டாக

4. George likes questioning linguists

என்பது (உள்உணர்வின்படி) 'George' கேள்வி கேட்கிறான் மற்றும் 'linguist' கேள்வி கேட்கின்றனர் என்ற இருகொள் கருத்துக்களைத் தந்து மயக்கத்தைத் தருகிறது.

5. George likes questioning linguists and so does Jim

அல்லது

6. George and Jim like questioning linguists

என்ற வாக்கியங்கள்

7.George likes questioning linguists and Jim likes questioning linguists

என்ற உள்ளுறை அமைப்பிலிருந்து வந்தவை; இவை இரண்டு கொள்கருத்துகளைக் கொண்டுள்ளன. ஒன்றில் George மற்றும் Jim என்ற இருவரும் கேள்வி கேட்சின்றனர். மற்றொன்றில் இருவரும் கேள்வி கேட்கவில்லை. George linguists -ஐ கேள்வி கேட்க விரும்புகிறான் மற்றும் Jim கேள்வி கேட்கும் linguists -ஐ விரும்புகிறான் என்ற தாண்டல்கொள் கருத்துகள் வரஇயலாது. இவ்வாறு வாக்கியம் 4 தெளிவின்மையைக் காட்டுகிறது என்பதை விட மயக்கத்தைக் காட்டுகிறது என்று நிரூபிக்கலாம்.

எதிரிடையாக உண்மையில் மயக்கமில்லாத ஆனால் குறிப்பீடு இல்லாத 5 மற்றும் 6 ஆவது வாக்கியங்களுக்கு இணையான தாண்டல் கொள்கருத்தை ஏற்கத்தக்க வாக்கியங்கள் உருவாக்க இயலும். எடுத்துக்காட்டாக

8. Ian went to Rome

என்பது அண்மை இறந்த காலமாகவோ சேய்மை இறந்த காலமாகவோ இருக்கலாம். கீழ்வரும் வாக்கியங்களில்

9. Ian went to Rome and Ken to Salzburg

அல்லது

10. Ian and Ken went to Rome

Ian அண்மை இறந்த காலத்தில் சென்றார்; Ken சேய்மை இறந்த காலத்தில் சென்றார் (அல்லது இவற்றின் மறுதலை) என்ற கொள்கருத்தில் வரலாம்; எனவே 8 ஆவது வாக்கியம் மயக்கத்தைக் காட்டுகிறது என்பதை விடக் குறிப்பீடு செய்யப்படாதது என்பதுதான் சரி.

இந்தத் தெளிவின்படி, மீண்டும் 1-3-இல் வரும் வாக்கியங்களை எடுத்துக்கொள்வோம்.

11. The noise near the airport is horrifyingly loud and is causing people to move away

என்பது ஏற்கத்தக்க வாக்கியமாகும். மட்டுமன்றி noise என்பது முதல் இணைப்பில் முறையையும் இரண்டாவதில் உண்மையையும் தாண்டல்கொள் கருத்தாக அவசியப் படுகிறது; எனவே noise என்பது மயக்கத்தைக் காட்டுகிறது என்பதை விட குறிப்பீடு இல்லாதது என்பது தான் சரியானதாகும். இதுபோல்

12. His condemnation of the government was verbose and lasted for hours

என்ற வாக்கியம் தாண்டல்கொள் கருத்தை அவசியப் படுகிறது; எனவே இது மயக்கம் காட்டவல்லதல்ல. இம்மாதிரியான பெயராக்கம் மயக்கம் தருவனவல்ல என்றால்

அவைகளுக்குச் செயல், உண்மை, நிலை போன்ற கொள்கருத்துகளுக்கு இணையான வேறுபட்ட அகஅமைப்புகள் இருக்க வேண்டியதில்லை. இப்பெயராக்கங்களின் பொருண்மை இதன் விளைவாக மிகக் குறைந்த அளவுக்குக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பெயராக்கத்தின் துல்லியமான பொருண்மை என்ன என்ற கேள்வி எளிதில் சோதனை செய்யத்தக்கதான விடை வைத்திருப்பதாய் தெரியவில்லை. பெயராக்கம் என்பதன் அடிப்படைப் பொருண்மை பெயராக்கம் என்ற தலைச் சொல்லிலேயே உள்ளார்ந்திருப்பதாகக் (இயல்பாய் இருப்பதாக) கொள்ளலாம்; அதாவது வினையிலிருந்து பெயராக்கம் செய்வதை வடிவவகுப்பு மாற்றமாகக் கொள்ளலாம். பெயராக்கம் செய்யும் பின்னொட்டுகள் இந்நிலைமாற்றத்தின் வடிவுக்குறிகளாகும். (ஒரு பெயருக்குச் சாத்தியமுள்ள பொருண்மைப் பரப்பு போல்) தந்துள்ள பெயராக்கத்திற்கான பொருள்விளக்கப்பரப்பு இலக்கண விஷயமாகக் கருதப்படாமல் மொழியியல் மற்றும் மொழியியல் அல்லாத சூழலில் வரும் பெயராக்கத்தைச் சார்ந்த பயன்வழியில் விஷயமாகக் கருதப்படவேண்டும். இவ்வாறு பெயராக்கம் கீழே தரப்பட்டுள்ள ஒழுங்கமைப்பிலிருந்து ஆக்கப்பட்டதாகக் கொள்ளலாம். இதில் பெ.ஆ.(பெயர் ஆக்கம்) என்ற கணு (சொல் குறிப்பையும் சேர்த்து) தகுந்த காரணிகளைப் பொறுத்துப் பொருத்தமான பின்னொட்டாக உருப்பெறும்.



இந்த அமைப்பு 4.3.3. இல் முன்னிலைப்படுத்தப்பட்ட அமைப்புடன் ஒவ்வாதிருந்தாலும் அங்கு தரப்பட்ட விவாதங்களுடன் இணையொத்திருக்கிறது. மட்டுமன்றி பின்னொட்டாக்கமும் ஆக்கமும் முழுவதும் தனித்தனி செயற்பாங்கு என்று பியர்ட் (Beard, 1977, 1981) வாதாடும்

சொல்லாக்கத்தின் பொது அணுகுமுறையுடனும் இணையொத்திருக்கிறது. இவ்வகையிலான தீர்மானம் பல பெயராக்கப் பின்னொட்டுகளுக்கிடையில் பொருண்மை வேறுபாடு இல்லை என்பதை மறைமுகமாய்க் குறிப்பிடுவதை உணரலாம். இருப்பினும் சில பெயராக்கப் பின்னொட்டுகள் மாறாத் தன்மையாகப் பெயராக்கத்திற்கான கொள்கருத்துகளின் குழுமத்தின் குறிப்பிட்ட உட்குழுமத்தை வேண்டவோ தள்ளிவைக்கவோ செய்வதாய்க் காட்ட முடியுமானால் இவ்வணுகுமுறை கணிசமான அளவு மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

சொல்லாக்கச் செயற்பாங்கின் இலக்கணப் பொருண்மை என்றும் சொற் பொருண்மை என்றும் வேறுபடுத்துவது சொல்லாக்க ஆய்வின் பயனுள்ள அணுகுமுறையாகத் தெரிகிறது. திரு- மூலமான முன்னொட்டாக்கத்திற்கு (எ.கா. திருநீறு, திருவோடு) சொற்பொருள் இருக்கிறது. பெரும்பான்மையானவைகளுக்கு இருவகையான பொருளும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக - நர் மூலமான பெயராக்கத்தில் (எ.கா. ஓட்டுநர், இயக்குநர்) சொல்லன்கள் பெயர்களை உருவாக்குகிறது என்பதனால் இலக்கணப் பொருள் இருப்பதாயும் 'அடியாகப் பயன்படுத்தப்படும் வினையின் எழுவாயாக வரும் ஒரு நபர்' என்று பொருள் விளக்கம் தர முடிவதால் சொற்பொருள் இருப்பதாயும் கொள்ளலாம்.

இலக்கணம் மற்றும் சொற்பொருண்மையைக் கணக்கிலெடுப்பது சொல்லாக்கச் செயற்பாங்கிற்கு ஒரு ஒற்றைப் பொருண்மைப் பலனின் அடிகோண்மையைக் கூடுதல் நம்பத்தகுந்த மற்றும் பயனுள்ள பகுப்பாய்வுக் கருவியாகச் செய்வதோடு பெரும்பாலும் ஒரு ஒட்டின் வெளிப்படையான பொருண்மை வகைகளை விளக்கவும் பயன்படுகிறது (Bauer, *1983:182-189*).

6.8 சொற்பதிவுகள்

பார் (Bauer, 1983:190-200) சொற்பதிவுகள் பற்றிக் கூறியுள்ள செய்திகள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன.

6.8.1. அகராதி

அகராதி ஒரு மொழியின் சொல்லன்களின் பட்டியலை ஒவ்வொரு சொல்லனைப் பற்றிய செய்திகளுடன் தருகின்றது. ஒரு தரமான அகராதி, சொல்லனின் மேற்கோள் வடிவின் (Citation form) அடிப்படையில் சொல்லன்களை அகர வரிசைப் படுத்துகிறது. ஆனால் ஒரு மொழியியலாரின் அகராதியில் சொல்லன்கள் வரிசைப்படுத்தப்படுவதில்லை; அளவீடாகப் பயன்படுத்த எழுத்து வடிவு இல்லையென்றால் சொல் பதிவுகளை வரிசைப்படுத்தித் தருவதெற்கென்றுள்ள வெளிப்படையான நெறிகள் இல்லை எனலாம். அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லன்களைப் பற்றியும் உள்ள செய்திகள் தற்போக்கான செய்திகளாகும். அதாவது பொது விதிகளால் வருவதுரைக்க முடியாதனவாகும். சொல்லன்களைப் பற்றிய கூடுதலான தற்போக்கான விஷயம் உச்சரிப்புக்கும் பொருளுக்குமுள்ள உறவாகும். இவ்வுறவு சில ஒலிக்குறிப்பு வெளிப்பாடுகளைத் தவிர இடுகுறித்தன்மையானதாகும்; புத்தகம் என்பது ஆங்கிலத்தில் book என்றும், இந்தியில் kitaab என்றும் அழைக்கப்படுவதற்குச் சொற்பிறப்பாக்க அடிப்படையைத் தவிர வேறு ஒரு காரணமும் கூற இயலாது. சொல்லன்களுடன் தொடர்புடைய பலவகைப்பட்ட தற்போக்கான செய்திகள் உள்ளன. சொற்திரிபு உள்ள மொழிகளில் ஒரு பெயரோ பெயரடையோ எவ்வாறு திரிபாக்கமுறும் என்று வருவதுரைக்க இயலாதிருக்கலாம். எங்கே இவற்றைப் பொது விதிகளால் வருவதுரைக்க முடியாதோ (எடுத்துக்காட்டாக, ஒரு அகராதியில் ஒலியனியல் வடிவு அடிப்படையில்) இந்த உருபனியல் செய்தி அகராதியில் பட்டியலிடப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, தல்/ த்தல் பின் ஒட்டால் ஆக்கப்பெற்ற வினையடிப்பெயர்கள் பிற பின் ஒட்டுகளால் ஆக்கப் பெற்ற வினையடிப் பெயர்களிலிருந்து பின்வருமாறு வேறுபடும்:

1. தல் / த்தல் அல்லாத பிற பின்னொட்டாக்க வினையடிப் பெயர்களை பெயரடை, பெயரெச்சம்

இவற்றால் விஷேடணம் செய்யலாம்; தல்/த்தல் பின்னொட்டாக்க வினையடிப் பெயர்களை இவ்வாறு விஷேடணம் செய்ய இயலாது.

எ.கா.

நல்ல உணவு

* நல்ல உண்ணுதல்

சமைத்த உணவு

* சமைத்த உண்ணுதல்

2. தல் / த்தல் அல்லாத பிற பின்னொட்டக்க வினையடிப் பெயர்களைப் பன்மையொட்டால் பன்மையாக்கம் செய்யலாம்; ஆனால் தல் / த்தல் பின்னொட்டாக்க வினையடிப் பெயர்களை இவ்வாறு பன்மையாக்கம் செய்ய இயலாது.

செய்கைகள்

*செய்தல்கள்

இவ்வகையிலான உருபனியல், தொடரியல் செய்திகள் அகராதியில் பட்டியலிடப்பட வேண்டும்.

6.8.2. ஒரு சொல்லனுக்கான சொற்பதிவு

எந்தத் தனிநிலைச் சொல்லனுக்கும் குறைந்தது உச்சரிப்பும் பொருளும் அகராதியில் பட்டியலிடப்பட வேண்டும். நிலைபெறு ஆக்கமுறை மாற்றிலக்கணத்தில் இவை இரண்டும் பண்புக்கூறுச் சட்டகங்களின் வழி தரப்பட்டுள்ளன. ஒலியனியல் வடிவைச் சுட்டிக் குறிப்பிடுவது இங்கு வாதப்பொருள் அல்ல; மற்றும் இதில் கூடுதலான அக்கறை காட்டத் தேவையுமில்லை. எங்கு ஒலியனியல் குறிப்பீடு தேவையோ எளிமைக்காக வேண்டி (எழுத்துத் தமிழ் அடிப்படையிலான) ஒலியனியல் எழுதுமுறை பயன்படுத்தப்படும். பொருளைக் குறிப்பீடு செய்வதுதான் கூடுதல் பொருத்தமானது.

சொல்லன்களின் பொருள்களைப் பற்றிய விவாதங்களில் கூறாய்வின்(componential analysis) ஏதோ ஒரு முறை மிகச் சாதாரணமாகக் காணப்பட்டாலும், அதில் பல குறைபாடுகள் உள்ளன. இருமை (binarism) மற்றும் பொருண்மைக் கூறுகளின் இயல்பு இவற்றின் கோட்பாடு ஏற்புடைமையுடன் தொடர்புடைய பல கோட்பாட்டுக் குறைபாடுகள் உள்ளன (பார்க்க Lyons 1977); மட்டுமன்றி கூடுதலான குறிப்பிட்ட நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன. கூறாய்வு சில பொருண்மைக் களங்களின் விளக்கத்திற்கு மட்டும்தான் பொருந்துவதாகத் தோன்றுவது இச்சிக்கல்களில் ஒன்றாகும். எடுத்துக்காட்டாகப் பன்றி, குதிரை, கழுதை போன்ற மிருகங்களின் பெயர்களை விளக்கக் கூறாய்வு ஓரளவுக்குபட பயன்படும்; ஆனால் எலுமிச்சை, நாரத்தை, சாத்துக்குடி, பம்பளிமாசு, ஆரஞ்சு போன்ற எலுமிச்சை இனப் பழங்களை விளக்கக் கூறாய்வு அவ்வளவாகப் பயன்படாது. இப்பழங்களுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளைச் சாதாரண மொழியில் விளக்க இயலும். ஆனால் அவைகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளைக் காட்டப் பயன்படும் பொதுப் பண்புக்கூறுகளைக் கண்டுபிடிப்பது கடினம். இதோடு தொடர்புடைய வேறு சிக்கல் என்னவென்றால், ஒரு சொல்லனின் முழுமையான பொருண்மைக் குறிப்பீட்டைத் தரப் பண்புக்கூறுகள் போதுமானதா என்பது ஐயத்திற் குரியதாகும். காட்ஸ் மற்றும் பாடர் (Katz & Fodor 1963) BACHELOR என்ற சொல்லனின் ஒரு பொருளாக 'one having the academic degree conferred for completing the first four years of college' என்ற பொருண்மைக் குறிகளைப் பயன்படுத்துகின்றனர். இக்குறிகளின் ஒரு பகுதியைக் கூடுதலான பொதுப்பண்புக்கூறுகளாக மாற்ற இயலும் என்றாலும், குறைந்தது சில சொற்களுக்காவது, எப்பொழுதும் ஏதாவது பாகம் மாற்றப்பட இயலாது எஞ்சி நிற்கும் என்று தெரிகிறது.

இக்காரணங்களுக்காகக் குறைந்தது மிக ஒருங்கிணைந்த பொருண்மைக் கோட்பாடு கிடைப்பது வரைச் சொற்களின் பொருள்களைச் சாதாரண தமிழில் அதாவது கருவி

மொழியியல் பண்புக்கூறுகளால்(metalinguistic features) அல்லாமல் சாதாரண சொல்லன்களால் விளக்குவது திருப்திகரமாய் அமையும். இது பண்புக்குறிமானம் (feature notation) அனுமதிப்பதைவிடக் கூடுதலாக ஒரு பொருளின் துல்லியமான குறிப்பீட்டை அனுமதிக்கிறது; அதே சமயம் ஒருபடித்தான (homogeneous) வகையிலான வரைவிலக்கணத்தைத் தருகிறது. இத்தீர்மானம் கோட்பாட்டு அடிப்படைகளால் அல்லாமல் நடை-முறை அடிப்படைகளால் செயல்நோக்குப் படுத்தப்பட்டதாகும். பொருளை இவ்வழியில் வெளிப்படுத்துவது எளிமையானதாகும். ஆனால் கோட்பாடு நோக்கில் ஒரு சொல்லனின் பொருளைப் பிற சொல்லன்களால் வெளிப்படுத்துவது சிறப்பானது என்பது இதன் வாதமல்ல. எந்த நிறைவான பொருண்மைக் கோட்பாடும் சொல்லன்களால் ஆக்கப்பட்ட வாக்கியங்கள் மற்றும் தொடர்களின் பொருளைக் கணிக்க வேண்டும்; எனவே இவ்வகையிலான பொருள் விளக்கங்களையும் பொருள்கோள் செய்ய இயலவேண்டும். பொருளை உருப்படுத்தம் செய்வதற்கு ஒரு கோட்பாட்டு நிலை எடுத்துக் கொள்ளப்படாததற்கான காரணம் எவ்வகையிலான பொருண்மைச் செய்திகள் தேவையானது, இச்செய்தியின் எவ்வகையிலான உருப்படுத்தம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றிய இலக்கியங்களில் உள்ள வாதங்களின் குறைவு அல்ல. பொருண்மைச் செய்தியின் துல்லியமான வாய்பாட்டாக்கம் (formulation) கோட்பாடு அடிப்படையில் இங்கு இயைபுடையதல்ல.

உச்சரிப்பைப் பொருத்தவரையில், கூறாக்கப்பட்ட வடிவு பட்டியலிடப்படுவதோடு மீக்கூறு வடிவமும் பட்டியலிடப்படவேண்டும். சுர மொழியில் (tone language) இது சுர ஒலியன்களை உட்படுத்தும்; பெரும்பாலான அசையழுத்தத்தை வருவதுரைக்க இயலுமானால், வருவதுரைக்க இயலாத சொல்லன்களின் அசை மட்டும் தான் அகராதியில் தரப்படவேண்டும்; இருப்பினும் மீக்கூறு செய்திக்கென்று சொற்பதிவில் இடம் இருக்க வேண்டும்.

கடைசியாக, தற்போக்கான உருபனியல் செய்தி பட்டியலிடப்பட வேண்டும். பெயர்த்திரிபாக்கம், வினைத்திரிபாக்கம், (பொருளாலோ ஒலியனியல் வடிவாலோ வருவதுரைக்க இயலாத) பால், ஒழுங்கில்லாத பன்மைகள் போன்ற செய்திகள் இதில் உள்ளடங்கும்.

லையான்ஸ் தந்துள்ள (Lyons,1977:517) சொற்பதிவின் திட்டவரைவு உருப்படுத்தம் (schematic representation) கீழே தரப்பட்டுள்ளது; இதுபோன்ற எடுத்துரை மில்லராலும் (Miller 1978:62) தரப்பட்டுள்ளது.

(1) பகுதி (கள்)
(2) திரிபு வகுப்பு
(3) தொடரியல் பண்புகள்
(4) பொருண்மைக் குறிப்பீடு(கள்)

அகராதியைப் பற்றிய இலக்கியங்களிலுள்ள பெரும்பாலான விவாதங்கள் சொற்பதிவின் மொத்தத் தோற்றத்தைவிட படத்திலுள்ள நான்கு அறைகளுள் ஒன்றின் உள்ளடக்கத்தைப் பற்றிக் கூடுதல் அக்கறை காட்டும். அறை ஒன்று ஒலியனியல் (கூறு மற்றும் மீக்கூறு) குறிப்பீடுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும்; அறை இரண்டு திரிபு பற்றிய எல்லாச் செய்திகளையும் உள்ளடக்கியிருக்கும்; அறை நான்கில் பிறையடைப்புக்குள் உள்ள (-கள்) பல பொருள்களில் சொல் வருவதை அனுமதிக்கும்.

6.8.3.ஒட்டிற்கான சொற்பதிவு

பொதுவாக, ஒட்டிற்கான சொற்பதிவு சொல்லனுக்கான சொற்பதிவைப்போல் அமைய வேண்டும்.ஒட்டின் வடிவு அல்லது வடிவங்கள் குறிப்பிடப்பட வேண்டும்; ஒட்டால் ஆக்கப்பெற்ற ஆக்கத்தின் உருபனியல் வகுப்பு குறிப்பிடப்பட வேண்டும்; ஆக்கத்தின் தொடரியல் பண்பு அந்த வடிவவகுப்பின் பிற எல்லா அங்கங்களுக்கும் உரியதாக இல்லாதிருந்தால் கூறப்படவேண்டும்; ஒட்டின் பொருள் கூறப்பட வேண்டும். இருப்பினும் சில மாற்றங்கள்

செய்யப்படவேண்டும். முதலாவதான மாற்றம் பொருண்மை குறிப்பீட்டுடன் தொடர்புடையது. 6.7.-இல் தரப்பட்டுள்ள கருத்துப் பிரேரணையை எடுத்துக்கொண்டு சில ஒட்டுகளுக்குப் பயன் வழியியல் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட பொருள் இருப்பதாகக் கொண்டால், நான்காவது அறை இந்த ஒட்டுகளுக்காகக் காலியாக இருக்க வேண்டும்; இலக்கணப் பொருள் அறை இரண்டில் கூறப்பட்ட வடிவ வகுப்பு நிலை மாற்றத்தால் (form class shift) குறிப்பீடு செய்யப் படும். இரண்டாவதாக, ஒட்டுகள் எந்த அடிகளுடன் இணைந்து வர இயலும் என்பதன் அடிப்படையிலான ஒரு ஒட்டின் எல்லை வரையறை (கட்டுப்பாடு) தேவைப்படும். இச்செய்தியைத் தனியான ஒரு அறையில் தரலாம்; இது அறை இரண்டின் ஒரு பகுதியாக எடுத்துக் கொள்ளப்படலாம்.

கடைசியாக, சில ஒட்டுகள் நடையியல் அடிப்படையில் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றை நடையியல் விளைவு தரத்தக்க விதத்தில் பயன்படுத்த இயலும். அடிகள் தனியாகவோ வேறு அண்மைப்பட்ட ஒரே பொருள் தருகிற ஒட்டுடனோ பயன்படுத்தப்பட்டால் இந்நடையியல் விளைவு இருக்காது; இச்செய்தி கூட அகராதியில் தேவைப் படும்; இது நிச்சயமாக வேறு அறையில் தரப்படவேண்டும். இவ்வறையும் மேற்சொல்லப்பட்ட சொற் பதிவில் சேர்க்க வேண்டும். ஏனென்றால் சில தனிநிலைச் சொல்லன்களுக்குக் கூடக் குறிக்கப்பட்ட நடையியல் விளைவு உண்டு.

6.8.4. சொல்நிலையாக்கம் பெற்ற கலவை வடிவின் சொற்பதிவு

விளைவாக்க விதியால் உருவாக்கப்பட்ட கலவை வடிவுக்குத் தனிப்பட்ட சொற் பதிவு தேவையில்லை. அடி மற்றும் ஒட்டு இவற்றிற்கான பதிவுகளுடன் சேர்ந்த இவ்விதிகள், பொருண்மையையும் புதிய வடிவின் பண்பையும் குறிப்பீடு செய்யப் போதுமானதாய் இருக்க வேண்டும். மாறாக, சொல்நிலையாக்கம் பெற்ற கலவை வடிவுகளுக்குத் தனிப்பட்ட சொற் குறிப்பு கட்டாயம் தேவை.

இரண்டு வழிகளில் இதைச் செய்ய முடியும்; ஒவ்வொரு புதிய கலவைச் சொல்லனையும் தனித்தனியே பட்டியலிடுவது முதல் வழியாகும்; அடிகள் அல்லது ஒட்டுகள் இவற்றின் சொற் பதிவுகளில் ஒழுங்கின்மைகளைப் பட்டியலிடுவது இரண்டாவது வழியாகும்; எடுத்துக்காட்டாக, சொல் நிலையாக்கம் பெற்ற கலப்பு வடிவான படுக்கை என்பதை எடுத்துக் கொள்வோம்; இது பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் பெற்று 'மெத்தை போன்ற விரிப்பு' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. முதல் வழியில் படுக்கை என்பது தனியாகப் பட்டியலிடப் பட்டு, பொருண்மை அறையில் இது 'மெத்தை போன்ற விரிப்பு' எனப் பொருள்படும் என்று குறிப்பீடு செய்யலாம். இரண்டாம் வழியில் தேவைப்படும் போது படுக்கை என்பது படு+க்கை என்பதிலிருந்து உருவாக்கப்படும்; ஆனால் படு என்பதன் கீழ் இது க்கை என்பதுடன் சேர்ந்து 'மெத்தை போன்ற விரிப்பு' என்ற பொருளையும் தரும் என்று குறிப்பீடு செய்யப்படும். இரண்டில் ஏதாவது ஒன்றைக் கைக்கொள்ளலாம்.

முதல் நெறிமுறையின் அனுகூலம் என்னவென்றால் ஒவ்வொரு அகராதிச் சொல்லுக்கும் அதற்குரிமையான சொற் பதிவு இருக்கும்; ஒலியனியல் மற்றும் பொருண்மையியல் மாற்றங்கள் இதை இதன் சொற்பிறப்பியல் அடியுடன் (etymological base) தொடர்புபடுத்த இயலாதவாறு பாதித்திருக்கும்; எனவே ஒரு சொல்லின் தற்போதைய பொருளைக் கண்டுபிடிக்க அதன் சொற்பிறப்பியல் செய்திகளைச் சுற்றி வரத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக, எண்ணெய் என்பதை எள் மற்றும் நெய் என்ற சொற்களிலிருந்து உருவாக்கத் தேவையில்லை; அதற்கென்று தனியான சொற்பதிவு இருக்கலாம். இரண்டாவது நெறி முறையின் அனுகூலம் என்னவென்றால், தொடர்புள்ள சொல்லன்களைத் தொடர்புபடுத்தலாம். எடுத்துக்காட்டாக நீச்சல் என்பது இருப்பதை நீந்து என்ற சொல்லனின் பதிவிலிருந்து அறியலாம்.

இரண்டாவது நெறிமுறையைப் பயன்படுத்தி முதல் நெறிமுறையின் அனுகூலத்தைக் கைக்கொள்ள முடியாது என்றாலும், முதல் நெறிமுறையைப் பயன்படுத்தினால் இருவழி அனுகூலமுண்டு. இதற்குத் தேவை சொல் பதிவில் கூடுதலான அறையாகும்; இதில் எடுத்துக் கொண்ட சொல்லன் வேறு எந்தச் சொல்லன்களுடன் தொடர்புடையது என்று கூறஇயலும். எடுத்துக்காட்டாக நீந்து என்பதன் கீழ் இது நீச்சல் என்பதுடன் தொடர்புடையது என்ற குறிப்பு இருக்கும்; மற்றும் நீச்சல் என்பதன் அடியில் இது நீந்து என்பதுடன் தொடர்புடையது என்று குறிப்பு இருக்கும். லையான்ஸ் (Lyons, 1977:516) யோசனை கூறியது போல் ஒவ்வொரு சொல்லனுக்கும் ஒரு முகவரி தருவதானால் அதன் இருப்பிடத்தைக் கண்டுகொள்ள இயலும். ஒவ்வொரு சொல்லனுக்கும் முறைமையின்றி தரப்படும் எண்கள் இந்த நோக்கத்தை நிறைவேற்றும். எடுத்துக்காட்டாக, கீழ் என்ற சொல்லனுக்குத் தரப்படும் 222 என்ற எண் கிழக்கு என்ற சொல்லனுக்குத் தரப்படும் 444 என்ற எண்ணுடன் தொடர்புபடுத்தப்படும்.

இந்நெறிமுறையை ஏற்றுக்கொண்டால் ஒவ்வொரு சொல் நிலையாக்க வழிவிற்கும் தனியான சொற்பதிவு இருக்க வேண்டும். இருப்பினும் ஒரு சொற் பதிவில் தரப்படத்தக்க எல்லாச் செய்திகளும் தற்போக்கானதாக இருக்கத் தேவையில்லை. எடுத்துக்காட்டாகப் படுக்கை என்பதன் சொற் பதிவில் பொருத்தமான பொருண்மைச் செய்தியைக் குறிப்பீடு செய்ய வேண்டியிருக்கும்; ஆனால் ஒலியனியல் மற்றும் உருபனியல் செய்திகளைப் படுக்கை என்பது படு+க்கை என்பதால் ஆனது என்ற

செய்தியால் நன்றாகக் குறிப்பீடு செய்யலாம். இதுபோல் நீச்சல் என்பதன் உருபனியல் மற்றும் பொருண்மையியல் செய்தியை இது நீந்து+அல் என்பதால் ஆக்கப்பட்டது என்ற செய்தியால் கூடுமான அளவு குறிப்பீடு செய்யலாம். இதனால் சொல்லனின் பகுதியின் ஒழுங்கமைப்பைப் பற்றிய உருபனியல் செய்தி தவிர சொற்பதிவின் சிறு பகுதியைக் காலியாக விட முடியும். 3.5-இல் விவாதிக்கப்பட்ட எல்லா வகையான சொல் நிலையாக்கத்தையும் குறிப்பீடு செய்யச் சொற்பதிவில் இடம் வேண்டும். அதாவது, ஒழுங்கற்ற கூறாக்கப்பட்ட வடிவு, மீக்கூறு வடிவு, இணைக்கும் தனிமங்கள், உருபனியல் காரணிகள் போன்ற செய்திகளை ஒவ்வொரு பகுதிக்கும் (stem) குறிப்பீடு செய்ய இடம் தரப்பட வேண்டும்.

இச்செய்திகளைக் கொண்டு முன்னர் சொன்ன அதே திட்ட வரைவு உருப்படுத்தத்தைப் பயன்படுத்திச் சொற்பதிவின் விளக்கமான படத்தை இப்போது தரலாம். இவ்வகையான சொற்பதிவில் எந்த அறையும் காலியாக இருக்கலாம், அல்லது குறைந்த அளவில் குறிப்பீடு செய்யப்படலாம். கீழ்வரும் படத்திலுள்ள அறை எண் 7 ஒட்டுகளுக்காக மட்டும் பயன்படுத்தப்படும். பதிவு ஒரு ஒட்டிற்காக இருக்குமானால், அறை 2-இல் உள்ள செய்தி அந்த ஒட்டு அடங்கியுள்ள கலவை வடிவைச் சார்ந்திருக்கும். அறை 2-இல் உள்ள பதிவுகள் எல்லாம் எல்லா மொழிகளுக்கும் பொருந்துவதில்லை; வேறு பதிவுகள் பிற மொழிகளுக்குப் பொருந்தலாம்; எடுத்துக்காட்டாகப் பெயர்ச்சொல் எடுக்கத்தக்க வகைப்படுத்தி (classifier) வகைப்படுத்திகள் உள்ள சில மொழிகளுக்குப் பொருந்தலாம்.

(1) ஒலியனியல் குறிப்பீடு

பகுதி எண்	கூறு வடிவு	மீக்கூறு வடிவு
1		
. . . .		
n		

(2) உருபனியல் பண்புகள்

பகுதி எண்	வடிவ வகுப்பு	பெயர்த்திரிபாக்கம்/ வினைத்திரிபாக்கம்	பன்மை/ இறந்தகாலம்	பால்	இணைப்புத் தனிமம்
1					
. . .					
n					

(3) தொடரியல் பண்புகள்

(4) பொருண்மையியல் குறிப்பீடு(கள்)

(5) நடையியல் குறிப்பீடு(கள்)

(6) தொடர்புள்ள சொல்லன்(கள்)

(7) அடியின்மீதான வரையறை எல்லைகள்

6.8.5. சில எடுத்துக்காட்டுகள்

பிரத்தேகமான சொல்லன்களுக்குச் சொற்பதிவுகளின் முழு எடுத்துக் காட்டுகளும் தரத் தேவையில்லை; அது இயலக்கூடியதும் அல்ல; இருப்பினும் கலவைச் சொல்லன்களுக்கான தகவல்கள் சொற்பதிவில் எவ்வாறு தரப்படவேண்டும் என்பதற்கான சில எடுத்துக்காட்டுகள் தருவது இந்நிலையில் பயனுள்ளதாய் அமையும்.

சுவையுள்ள என்ற கலவைச் சொல்லனை எடுத்துக்கொண்டால், 4-ஆவது அறையில் சுவை+உள்ள

என்று குறிப்பு தந்தால் போதுமானது; அல்லது லையானைப் (Lyons 1977;531) பின்பற்றி 320+530 (320 சுவை என்பதற்கும் 530 உள்ள என்பதற்குமான முகவரிகள்) சுவையுள்ள பற்றிய எல்லா உருபனியல் மற்றும் தொடரியல் தகவல்களை மேற்சொன்ன தகவல்மூலம் பெற முடியுமாதலால், 2-ஆவது மற்றும் 3-ஆவது அறைகளுக்கும் இது போதுமான தகவலாகும். 6-ஆவது அறையில் 350-க்கு ஒரு கட்டுக்குறிப்பு தரப்படும்; 7-ஆவது அறை தேவையற்றதால் காலியாக விடப்படும்.

அழிவு என்ற கலவைச் சொல்லை எடுத்துக்கொண்டால் 6-ஆவது அறையில் இது அழி என்ற வினையுடனும், அழிதல், அழிகை, அழியாமை, அழியல் என்ற வினையடிப் பெயர்களுடனும் தொடர்புடையது என்ற தகவல் தரலாம். 4-ஆவது அறையில் அழிவு என்பதின் சொல்நிலையாகப் பொருண்மை தரலாம். 3-ஆவது அறையில் அழிவு என்பதன் தொடரியல் பண்புகள் தரலாம். 2-ஆவது அறையில் அழிவு, அழி+வு எனப்பிரிக்கப்படும் உருபனியல் தகவல் தரலாம். -அம் ஒரு வகுப்பு வினைகளுடன் சேர்ந்து பெயராக்கம் செய்கிறது (எ.கா. ஆழம், உயரம், பிடித்தம்). இங்கு கேள்வி என்னவென்றால் -அம் என்பதற்குத் தனியான பதிவு தந்து பிடித்தம் என்பதைப் பிடி+அம் என்று பதிவு செய்யலாமா அல்லது பிடித்தம் என்பதைப் பிரிக்க இயலாத சொல்லாகத் தரலாமா என்பது தான். நிலைபெறு பெற்ற ஆக்கமுறை மாற்றிலக்கணம் -அம் என்பதற்கு அதற்கான பதிவைத் தந்து பொதுமையாக்கம் செய்யும். இதன்படி -அம் என்பதைப் பற்றிய தகவல் ஒரு தடவை குறிப்பீடு செய்யப்பட்டால் போதுமானது; அது பெயராக்கப் பின்னொட்டாக வரும் எல்லா இடத்திலும் குறிப்பீடு செய்யத் தேவையில்லை. சொல்நிலையாக்கக் கருத்துச்சாயல் விளைவாக்கமில்லாத வடிவுகளுக்கு அவற்றிற்கான பதிவு இருக்க வேண்டும் என்று வேண்டுகிறது. இச்சிக்கலை ஒரு கேள்வியாகத் திரும்ப மாற்றிக் கேட்பதனால் அறை ஒன்றின் கூறுவடிவு பகுதியில் இதன் பதிவை ஒழுங்கற்ற பதிவாகத் தந்தால் போதுமானதா தனியான பதிவு தேவையா என்பது தான்.

எந்தப் பிரத்தேகமான காரணிகள் மிக முக்கியமாகக் கருதப்படவேண்டும் என்பதைப் பொறுத்து இந்த இரு அணுகுமுறையும் சரி என நிரூபிக்கலாம். இரண்டிற்கும் பொதுவான ஒரு தீர்மானம் கூற இயலும். அது என்னவென்றால் அறைகள் 1-இல் இருந்து 4-வரை பிரத்தேகமான இப்பின்னொட்டைக் குறிப்பிடலாகாது; ஆனால் இதன் வடிவு பெயராக்கம் என்று குறிப்பிடப்பட வேண்டும். இவ்வாறு பதிவு மிடி+பெயராக்கம் என்ற அமையும். இது 4-ஆவது அறைக்குத் தேவையான பொருண்மைக் குறிப்பீட்டைத் தரும்; வேறுநிலையான (contrasting) பின்னொட்டு புதிய பொருண்மைக்காகப் பயன்படுத்தப்பட்டால் மேலும் கூடுதல் குறிப்பீடு தேவைப்படலாம்.

7

தமிழில் சொல்வகைப்பாடு

தமிழில் சொல்லாக்கம் பற்றி விரிவாக ஆயும்முன் தமிழுக்கு எத்தனைச் சொல் வகுப்புகள் தேவை என்பதை நாம் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது. ஒரு மொழியின் சொற்கள் சொல்லியல் அடிப்படையிலும் தொடரியல் அடிப்படையிலும் வகைப்பாடு செய்யப்படலாம். சொற்கள் எந்த இலக்கணக் கூறுக்காகத் திரிபுறும், வாக்கியத்தில் எங்கு, எவ்வாறு இடம் பெறுகின்றன, அவற்றின் தொடரியல் செயற்பாடுகள் யாவை என்பதன் அடிப்படையில் அவை ஒரு சொல் வகுப்பைச் சார்ந்தன என்று நிர்ணயிக்கலாம். ஆங்கிலத்தில் 'Parts of Speech' என்று சொற்களை எட்டு வகுப்புகளாகப் பிரிப்பர்: (1)பெயர் (noun), (2)பெயரடை (adjective), (3) மாற்றுப்பெயர் (pronoun), (4)வினை (verb),(5)வினையடை(adverb),(6)முன்னுருபு(preposition), (7)இணைப்புக்கிளவி (conjunction), (8)வியப்புச்சொல் (interjection) என்பன. தற்காலத் தமிழ் இலக்கணத்தை ஆங்கில இலக்கணக் கண்ணோட்டத்தோடு எழுதிய இலக்கண நூல்களில் ஆங்கிலச்சொல் வகைப்பாட்டின் தாக்கத்தைக் காணலாம். பழந்தமிழுக்காக எழுதப்பட்ட மரபிலக்கணங்களின் சொல் வகைகள் தற்காலத் தமிழுக்காக

மாற்றி அமைக்கப்பட வேண்டும் என மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இருப்பினும் தற்காலத் தமிழுக்கு எத்தனைச் சொல் வகுப்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதில் அவர்களிடையே ஒருமித்த மனக்கருத்து இல்லை.

7.1. மரபிலக்கணச் சொல் வகுப்புகள்

மரபிலக்கணங்கள் தமிழ்ச் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகுப்புகளாகப் பிரிக்கும். பெயரும் வினையும் முக்கியமான வகுப்புகளாகக் கருதப்பட்டு இடையும் உரியும் துணை வகுப்புகளாகக் கருதப்பட்டன. காலம் காட்டாமல் வேற்றுமை உருபுகளை ஏற்கும் சொற்கள் பெயர்ச் சொற்களாகவும் வேற்றுமை உருபுகளை ஏற்காது காலம் காட்டுபவை வினைச்சொற்களாகவும் தீர்மானிக்கப்பட்டன. தனித்து இயங்கும் ஆற்றலின்றி பெயர்களையும் வினைகளையும் இடமாகக் கொண்டு அவற்றின் இடையே முன்னும் பின்னும் வரும் வேற்றுமை உருபுகள், விகுதிகள், சுட்டெழுத்துகள், வினாவெழுத்துகள் ஆகியவையும் இவை போன்ற பிறவும் இடைச்சொல் எனப்பட்டன. பெயர்ச்சொல், வினைச்சொல் போலத் தனித்து நின்று பொருளை உணர்த்தாமல் பெயர்ச்சொல்லையோ வினைச்சொல்லையோ சார்ந்து நின்று அவற்றின் குணத்தை 'மிகுதி' என உணர்த்தவல்லன உரிச்சொல்லாகக் கொள்ளப்பட்டன.

மரபிலக்கணத்தார் சொற்பகுப்பை ஆராய்ந்தால் அவர் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல் என்று முக்கிய இரு பெரும் பிரிவுகளாயும் அவற்றைச் சார்ந்து வரும் மூன்றாவது வகைச்சொற்களை இடைச்சொல் என்றும் உரிச்சொல் என்றும் பிரிப்பது தெரிய வரும். மரபிலக்கணங்கள் உரிச்சொற்களைப் பெயர், வினை இவற்றிற்கு அடையாகக் கொள்கின்றன. இவ்வாறு மரபிலக்கணங்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், அடைச்சொல் என நான்கு வகைச் சொல் வகைகளை அடையாளம் காட்டுகின்றன. முற்காலத் தமிழை மரபிலக்கண வழி ஆய்கையில் இந்நால் வகைச்

சொல்வகைகள் அதை விளக்கப் போதுமானது என்று தெரிய வரும் (பார்க்க சண்முகம், 1984,1986).

7.2.தற்காலத் தமிழுக்கான சொல்வகுப்புகள்

தற்காலத்தமிழ் புதிய இலக்கணக் கூறுகளைத் தன்னகத்தே வளர்த்துக் கொண்டுள்ளமையால் சொற்களைப் புதிதாக வகைபடுத்த வேண்டும் என்று மொழியியல் அறிஞர்கள் வாதிட்டு அவ்வாறு வகைப்படுத்தியும் உள்ளனர். (Asher, 1982; கோதண்டராமன், 1986; Lehman, 1989).

லேமன் சொல் வகைகளைப் பற்றி விரிவாக ஆராய்கிறார் (Lehman 1989;9-11). தற்காலத் தமிழில் எல்லா அகராதி அல்லது வேர் உருபன்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். பெயர் வேர்கள், வினை வேர்கள் என்ற இரு பெரும் பிரிவுகளில் பெரும்பாலான வேர்கள் அடங்கும். இரு சிறு பிரிவுகளில் பெயரடை வேர்களும் வினையடை வேர்களும் அடங்கும். வடிவ அடிப்படையில் எல்லாச் சொல் வகுப்புகளிலும் அடங்கும் சொற்களையெல்லாம் பெயர், வினை, பெயரடை அல்லது வினையடை இவற்றின் வேர்களிலிருந்து திரிபுற்ற அல்லது திரிபுறாத சொல் வடிவங்களாகக் கொள்ள முடியும். பெயர்கள் பெயர் வேர்களையும், வினைகள் வினை வேர்களையும் கொண்டிருக்கும். ஆனால் பின்னுருபுகள், பல வினையடைகள், அளவையடைகள், இணைப்புச்சொற்கள் என்பனவற்றை வடிவ அடிப்படையில் பெயர் அல்லது வினைவேர்களின் திரிபுற்ற அல்லது திரிபுறாத வடிவங்களாகக் கொள்ளலாம். பழந்தமிழில் சொல் வகுப்புகள் குறைந்திருந்த காரணத்தினால் தற்காலத் தமிழில் பல திரிபுற்ற மற்றும் திரிபுறாத வடிவுகள் பெயரடைகள், அளவடைகள் போன்ற பல சொல் வகுப்புகளாய் மீள் ஆய்வு செய்யப்பெற்றன. நாம் அறிந்தபடி தற்காலத்தமிழில் சொல்வகுப்புகளில் இரண்டு சொல் வகுப்புகள் தான் திரிபுகளை ஏற்கவல்லன; அவைகள் பெயர்களும் வினைகளுமாகும். முன்னார் கூறப்பட்டது போல பெயர்கள் வேற்றுமையுருபு, எண் இவற்றிற்காக திரிபுறும். வினைகள் காலம், இடம், எண், பால் மற்றும்

சிலவற்றிற்காகத் திரிபுறும். சொல் வகுப்புகளைப் பொறுத்தவரையில் பெயர்கள் சொல்லாக்கத்தைக் காட்டுகின்றன. பெயர்களை வினைகளிலிருந்து பெறலாம்.

ஆஷர் (Asher 1982:101-102) Operational definitions for Word Classes என்ற தலைப்பில் தமிழ்ச்சொற்களை 1)பெயர்ச்சொல், 2)மாற்றுப்பெயர், 3)வினைச்சொல், 4)பெயர்அடை, 5)பின்னுருபு (Postposition), 6)எண்/அளவை அடை(numeral /quantifier), 7) இடைச்சொற்கள் (particles) என்று ஏழு வகைகளாகப் பிரித்துத் தருகிறார். கோதண்டராமன் (1989) ''தனியே இயங்கவல்ல சொற்களை'' தலைமை இலக்கணக்கூறுகளாகக் கொண்டு 1)பெயர், 2)வினை, 3)பெயரடை, 4)வினையடை, 5)வல்லடை, 6)இணைப்பான், 7)உணர்ச்சி வெடிப்புச்சொல், 8) உணர்வு குறிப்புச்சொல், 9)விளிப்புச்சொல், 10)விளிஏற்புச்சொல் எனப் பத்து வகுப்புகளாகப் பாகுபடுத்துகின்றார். ''விகுதி ஒட்டு'' முதலான சார்பு நிலைக்கிளவிகளைத் துணைமை இலக்கணக் கூறுகளாகக் கொண்டு அவற்றின் ''வடிவுக்கும் இயல்புக்கும் ஏற்ப'' 1)விகுதி (suffix), 2)சொல்லுருபு (postposition), 3)வினைசார்கிளவி (verbal participle), 4)ஒட்டு (clitic), 5)சாரியை அல்லது நிரப்பி (fillers) என ஐந்து வகுப்புகளாக வகைபடுத்துகின்றார். லேமன் (1989:9). உருபனியல் மற்றும் தொடரியல் இலக்கண இயல்புகள் அடிப்படையில் தற்காலத்தமிழ்ச்சொற்களை 1)பெயர்கள், 2)வினைகள், 3)பின்னுருபுகள், 4)பெயரடைகள், 5)வினையடைகள், 6)அளவடைகள்(quantifiers), 7)வரையறு அடைகள்(determiners), 8)இணைப்புக்கிளவிகள்(conjunctions) என எட்டு சொல் வகுப்புகளாகப் பிரிக்கின்றார். மூவரும் பெயர், வினை, பெயரடை என்ற சொல் வகுப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் உடன்படுகிறார்கள். கோதண்டராமனும் லேமனும் வினையடையைச் சொல்வகுப்பாகக் கொண்டு ஆஷரிடமிருந்து வேறுபடுகின்றனர். இணைப்பான் என்று கோதண்டராமனும் இணைப்புக்கிளவிகள் (conjunctions) என்று லேமனும் குறிப்பிடும் சொல்வகுப்பை ஆஷர் சொல்வகுப்பாகக் குறிப்பிடவில்லை. ஆஷரும் லேமனும்

பின்னுருபுகளைச் சொல் வகுப்புகளாகக் கொள்ள, கோதண்டராமன் பின்னுருபுகளைச் சொல்லுருபுகள் எனக் குறிப்பிட்டுச் சார்புநிலைக் கிளவியாக வகைப்படுத்து கின்றார். ஒவ்வொரு சொல்வகுப்பையும் எந்தெந்த இலக்கண இயல்புகளைக் கொண்டு இவர்கள் வரையறுத்துள்ளனர் என்பதைக் காண்பது உகந்ததாயிருக்கும்.

7.2.1.பெயர்ச்சொல்

ஆஷர் பெயர்ச்சொல் பிரிவை உருபனியல் மற்றும் தொடரியல் அடிப்படையில் சொல் வகுப்பாக நிறுவுகின்றார். பெயர்ச்சொற்கள் உருபனியல் அடிப்படையில் வேற்றுமை ஒட்டுகளையும் பன்மை ஒட்டு -கள் என்பதனையும் ஏற்கவல்லன. தொடரியல் அடிப்படையில் பெயர்கள் பின்னுருபுத் தொடரின் தலைச்சொல்லாகவும் ஒரு வாக்கியத்தின் எழுவாயாகவோ செயப்படு பொருளாகவோ செயல்படவல்லன. எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லின் இடம் -எண் - பாலுக்குத் தகுந்தார்போல் வினையின் இடம் - எண்-பால் ஒட்டின் தேர்வு அமையும். வேற்றுமை உருபுகளையும் ஆக, ஆனமுதலான கிளவிகளை ஏற்பனவும், எழுவாயாகவும் பயனிலையாகவும் தொழில் பட வல்லனவும் பெயர்கள் என்று கோதண்டராமன் குறிப்பிடுகின்றார். லேமன் வேற்றுமைப் பின்னொட்டு களையும் ஆக/ஆய் பின்னொட்டுகளையும் ஏற்பன பெயர்கள் என்று விளக்கம் தருகின்றார். குறை உருபனியல் உள்ள பல பெயர்கள் எல்லா வேற்றுமைப் பின் ஒட்டுகளையும் ஏற்கா என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார். பெயரைச் சொல்லை வகுப்பாகக் கொள்வதில் மூவருக்கும் அடிப்படை பேதம் இருப்பதாகத் தெரியவில்லை. லேமன் மாற்றுப்பெயர், அளவுப்பெயர், எண்ணுப்பெயர் இவற்றைப் பெயர்ச் சொல்லின் கீழ் துணைப்பிரிவுகளாக வகைப்பாடு செய்கிறார்.

7.2.1.1. மாற்றுப் பெயர்

பெயர்ச் சொல்லுக்குப் பதிலாக அல்லது மாறாக வரும் சொல் மாற்றுப் பெயர் எனப்படும். மாற்றுப்பெயர்

முக்கியமாகப் பொருட்குறிப்பு (signification) அடிப்படையில் பெயரிலிருந்து வேறுபடும். ஒன்றையோ ஒருவரையோ பெயர்ச்சொல் குறிக்கும். ஆனால் மாற்றுப்பெயரோ சூழ்நிலைக்குத் தக்கவாறு வெவ்வேறு ஆட்களையோ பொருளையோ குறிக்கும். இதன் காரணமாய் ஒருமொழியின் பெயர்ச்சொற்களின் எண்ணிக்கை ஏராளமாயிருந்தாலும் மாற்றுப் பெயர்கள் குறைவாகவேயுள்ளன.

ஆஷர் மாற்றுப்பெயர்களைத் தனிச்சொல் வகுப்பாகக் கொள்கிறார். பெயர்ச்சொற்களின் வரையறைகளில் பல இயல்புகளைக் கொண்ட ஒரு நெருங்கிய குழுமத்தைச் சார்ந்தவை மாற்றுப்பெயர்கள். பெயர்ச்சொற்கள் ஏற்கும் அதே வேற்றுமைப் பின்னொட்டுகளை அவற்றுடன் சேர்க்கலாம்; அவைப் பின்னுருபுத் தொடரின் தலைச்சொல்லாக வரலாம்; எழுவாயாகவும் செயப்படு பொருளாகவும் செயற்படலாம்; ஒரு வாக்கியத்தில் முற்று வினையின் இட-எண்-பால் ஒட்டைத் தேர்வு செய்யலாம்.

லேமன் பெயர்த்தொடரில் அடை எடுக்காது தனித்துவரும் பெயர்வகைகளின் ஒன்றாக மாற்றுப் பெயர்களைக் கொள்கிறார். மாற்றுப்பெயர்களைத் தனிநிலை மாற்றுப்பெயர்கள் என்றும் (எ.கா. நான், அவன்) ஆக்க மாற்றுப்பெயர்கள் (எ.கா. யாரோ, யாரும்) என்றும் வகை செய்யலாம். மூவிடப்பெயர்கள் (Personal pronouns), சுட்டுப்பெயர்கள் (demonstrative pronouns), வினாப்பெயர்கள் (interrogative pronouns), தன்வயப்பெயர்கள் (reflexive pronouns) என மாற்றுப்பெயர்கள் பலவகைப்படும். பல வகையான மாற்றுப்பெயர்களைக் குறிப்பு (referential), உறுதி (definiteness), குறிப்பீடு (specificity) என்றப் பொருண்மைக் கருத்துகள் அடிப்படையில் வகைப்பாடு செய்யலாம் (லேமன், 1989:93).



மூவிடப்பெயர்கள் காலத்தோடும் இடத்தோடும் தொடர்புடையன. பேசுபவரைத் தன்மை இடம் என்றும், கேட்பவரை முன்னிலை இடம் என்றும், பேசப்படுபவரை படர்க்கை இடம் என்றும் வகைசெய்யலாம். சில கூடுதலான பாகுபாடுகளைக் கொண்டு படர்க்கையிடம் தன்மை, முன்னிலை இடங்களிலிருந்து வேறுபடுகின்றன. தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றும் எண் அடிப்படையில் ஒருமைப்-பன்மை என வேறுபட வல்லன. முன்னிலை இடப்பெயர்களும் படர்க்கை இடப்பெயர்களும் தகுதி அடிப்படையில் உயர்வு, உயர்வின்மை என வேறுபடவல்லன. படர்க்கை இடப்பெயர்கள் மட்டுமே பால் அடிப்படையில் ஆண், பெண் என்றும், சுட்டு அடிப்படையில் அண்மை, சேய்மை என்றும் வேறுபடும். பின்வரும் அட்டவணை இதைத் தெளிவுபடுத்தும்.

இடம்	ஒருமை	பன்மை
தன்மை	நான்	நாம்
		நாங்கள்

முன்னிலை	நீ	நீங்கள்
	நீர்	
படர்க்கை	அவன்	
	இவன்	
	அவள்	
	அவர்	அவர்கள்
	இவர்	இவர்கள்
	அது	அவை/அவைகள்
	இது	இவை/இவைகள்

தான், தாம், தாங்கள் என்ற தன்வயப்பெயர்கள் நான்காவது இடத்தைச் சாரும். எழுவாயால் வரும் படர்க்கைச் சொல்லுக்கு மாறாய் அல்லது பதிலாய்த் தன்வயப்பெயர்கள் வரும்.

வினாப் பெயர்களுக்குத் தீர்மானிக்கப்பட்ட குறிப்பு (reference) இல்லை. வினாப்பெயர்களைக் குறிப்பீடு பெற்ற (specified) வினாப்பெயர், குறிப்பீடு பெறாத (non-specified) வினாப்பெயர் என இரு வகைகளாகப் பிரிக்கலாம். குறிப்பீடு பெறாத வினாப்பெயர்கள் உயர்திணை, அஃறிணை வேறுபாட்டை வடிவத்தில் காட்டுகின்றன (எ.கா. *யார், என்ன*).குறிப்பீடு பெற்ற வினாப்பெயர்கள் படர்க்கையிடம், எண், பால் இவற்றின் வேறுபாட்டை வடிவத்தில் காட்டுகின்றன (எ.கா. *எவன், எவள், எவர், எது, எவை*). - *உம்* என்ற குறைச்சொல் சேர்ந்த வினாப்பெயர்களான *யாரும், எதுவும்* என்பன பொதுமைக் குறிப்பு மாற்றுப்பெயர்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். குறைச்சொல் -*ஓ* சேர்ந்த வினாப்பெயர்களான *யாரோ, ஏதோ, என்னவோ* என்பன குறிப்பீடு பெறாத உறுதியற்ற மாற்றுப்பெயர்களுக்கு எடுத்துக்காட்டுகளாய் அமையும்.

7.2.1.2. அளவுப்பெயர்

சில, பல, எல்லாம், எல்லோரும் என்ற பெயர்கள்

அளவுப்பெயர்கள் பிரிவைச்சாரும். இவை பெயர் அடைகளாகச் செயல்படவல்லன (எ.கா. சிலமனிதர்கள்); பெயர்களுக்குப் பின்னர் வந்து வேற்றுமை ஒட்டுகள் எடுக்கவல்லன (எ.கா. பேனாக்கள்சிலவற்றை வாங்கினேன்). சில, பல என்பவைகளைப் பெயரடைகளாகக் கொண்டு முறையே சிலவை, பலவை என்பனவற்றை மாற்றுப் பெயரொட்டாக்கம் பெற்ற பெயர்களாக ஆயலாம் (எ.கா. சில+அவை =சிலவை).

7.2.1.3. எண்ணுப்பெயர்

எண்ணுப்பெயர்கள் ஆதார எண் (cardinal number), முறைமை எண் (ordinal number) என இருவகைப்படும். முறைமை எண் ஆதார எண்ணிலிருந்து -ஆவது அல்லது -ஆம் என்ற குறைச்சொல்லின் (clitics) சேர்க்கையால் ஆக்கப்படும். ஆதார எண்களிலிருந்து மாற்றுப்பெயரொட்டாக்கம் பெற்ற எண்ணுப்பெயர்களைப் (pronominalized cardinal numerals) பெறலாம் (எ.கா. ஒருவன், ஒருத்தி, ஒருவர்).

7.2.2. வினை

வினையைச் சொல்வகுப்பாகக் கொள்வதில் மொழியியல் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு இல்லை. வினைகள் காலப்பின்னொட்டுகளையும் இடம்-எண்-பால் பின்னொட்டுகளையும் பிற பின்னொட்டுகளையும் எடுக்கவல்லன. சில வினைகள் குறை உருபனியல் உடையன; அதாவது எல்லா வினைப் பின்னொட்டுகளையும் அவை ஏற்பதில்லை. இணைப்பு வாக்கியங்கள் (copular sentences) (எ.கா. அவன் மாணவன்) தவிர்த்த பிற வாக்கியங்களில் கட்டாயமாக வரும் பகுதி வினையாகும். வினைகளை உருபனியல், பொருண்மையியல் இவற்றின் அடிப்படையில் வெவ்வேறு வகையாய்ப் பாகுபாடு செய்யலாம். காலம் மற்றும் பிற வினைப்பின்னொட்டுகளுடன் சேரும் போது ஏற்படும் உருபஒலியனியல் மாற்றங்கள் அடிப்படையில் வினைகளை மெல்வினை, இடைவினை, வல்வினை என்ற மூன்று வகைகளாகவும் அதற்கு மேற்பட்ட வகைகளாகவும் பிரிக்கலாம். வடிவ மற்றும் செயற்பாடு அடிப்படையில்

வினையை முற்று வினை(finite verb) (எ.கா. வந்தான்) மற்றும் எச்ச வினை (non-finite verb) (எ.கா. வந்த, வந்து) என்று பிரிக்கலாம். எச்ச வினை பெயரின் அடையாக வருமா அல்லது வினையின்அடையாக வருமா என்பதன் அடிப்படையில பெயரெச்சம் (adjectival or relative participle form) (எ.கா. வந்த பையன்) என்றும் வினை எச்சம் (adverbial or verbal participle form) (எ.கா. வந்துபோனான்) என்றும் வகைபடுத்தலாம். தன்வினை (எ.கா. ஆடு) பிறவினை (எ.கா. ஆட்டு) என்ற பாகுபாடு பொருண்மையியல் அடிப்படையில் அமைந்தது. வினையைத் தான் செய்யின் தன் வினை என்றும் பிறர் செய்யின் அது பிறவினை என்றும் விளக்கப்பட்ட பொருண்மை வேறுபாடு அவ்வளவு பொருத்தமானதல்ல (பரமசிவம், 1983:2-2). அடிப்படையான வினைகளைத் தன்வினைகள் என்றும் (எ.கா. ஓடு, காண்) அவற்றினின்றும் ஒட்டாக்கத்தால் ஆக்கப்பெற்ற வினைகளை (எ.கா. ஓட்டு, காட்டு) பிறவினைகள் என்றும் கொள்ளலாம். வாக்கியத்தில் பயன்படுத்துகையில் செயப்படுபொருளை எடுக்குமா எடுக்காதா என்பதன் அடிப்படையில் வினைகள் செயப்படுபொருள் குன்றியவினை (எ.கா. போ, வா), செயப்படுபொருள் குன்றாவினை (எ.கா. படி, அடி) எனப் பாகுபடுத்தப்படும். வினைக்கும் பெயருக்குமுள்ள காரக உறவுகளைக் (case relations) கொண்டும், இணைதிறன் (valency) கொண்டும் வினைகளை வகைப்பாடு செய்யலாம்.

7.2.3. பின்னுருபுகள்

ஆஷர் பின்னுருபைச் சொல்வகுப்புகளில் ஒன்றாகக் கூறுகின்றார். வேற்றுமைப் பின்னொட்டுகளால் திரிபுற்ற பெயர்களுக்குப் பின்வந்து பின்னுருபுத் தொடராக வினையுடன் ஒரு செயற்பாட்டு உறவில் நிற்கும் சொல் பின்னுருபு என்று தொடரியல் விளக்கம் தரலாம். பின்னுருபுகள் இந்நிலையில் தனித்து நிற்கும் என்பதில் நந்து கட்டுப்பட்டே நிற்கும் என்பது வரையுள்ள பலதரப்பட்ட அங்கங்கள் சேர்ந்த ஒரு சொல்வகுப்பாய் அமையும் (ஆஷர், 1982:102). கோதண்டராமன் (1989) சார்புநிலைக் கிளவி வகை என்ற துணைமைச் சொல் வகையின் கீழ்

பின்னுருபைச் சொல்லுருபு எனக் குறிப்பிட்டு வகைப்பாடு செய்கிறார். பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் காலப்போக்கில் வேற்றுமைப் பின்னொட்டுகள் போல் சொல்லுருபுகளாய்ப் பயன்படுத்தப்படுகின்றன. லேமேனும் (1989) பின்னுருபுகளைத் தனி சொல் வகுப்பாகக் கொள்கின்றார். திரிபுற்ற மற்றும் திரிபுறாத பெயர் வடிவுகளும் வினை எச்ச வடிவுகளும் தான் பின்னுருபுகளாகும். எடுத்துக்காட்டாக, தமிழ் பல இடப்பொருள் செயற்பாடுகளைக் குறிப்பிட இடத்தைக் குறிக்கும் பெயர்களைத் தான் பயன்படுத்துகின்றது (எ.கா. இல், உள், முன், மேல், கீழ், அடியில்). ஒரு குறிப்பிட்ட சொல்லைப் பெயராகக் கருதுவதா பின்னுருபாகக் கருதுவதா என்பதில் ஒருமித்த கருத்தில்லை. பின்னுருபுகளாக எடுத்தாளப்படும் பெயர்கள் எல்லாம் உருபனியல் அடிப்படையில் குறை உள்ளவை; அதாவது அவை எல்லா வேற்றுமை உருபுகளையும் எடுப்பதில்லை. பல பின்னுருபுகளாய் வரும் பெயர் வடிவங்கள் தொடரியல் அடிப்படையில் குறைபாடுள்ளவை. அதாவது அவை வாக்கியத்தில் பெயர் வரும் எல்லா இடங்களிலும் வருவதில்லை. எல்லாப் பெயர்களைப் போலவும் அவற்றின் இலக்கணச் செயற்பாடுகள் வருவதில்லை. எடுத்துக்காட்டாக, நடு, இடை என்ற பெயர்கள் 'மையம்' என்ற பொருளில் -இல் என்ற இடவேற்றுமை பின்னொட்டு எடுத்து நடுவில், இடையில் எனப் பின்னுருபுகளாக மட்டும் வருகின்றன. ஆனால் அவை எழுவாயாகவோ செயப்படு பொருளாகவோ பயனிலை யாகவோ வருவதில்லை. இப்பெயர் வடிவங்களில் மிகப் பெரும்பான்மையானவையாய் வரும் நெருங்கிய பெயர் மற்றும் வினை வடிவங்களின் குழுமம் பெயர்த்தொடருக்குப் பின்வந்து பின்னுருபுத் தொடராய் அமையும். பின்னுருபாய் வரும் பல பெயர், வினை வடிவங்கள் முறையே தங்கள் பெயர், வினை தொடரியல் இயல்புகளை இழந்து விடுகின்றன. பின்னுருபுகளை அவற்றின் வடிவ மற்றும் அவை எந்தப் பெயர்த்திரிபுக்குப் பிறகு வருகின்றன என்பதின் அடிப்படையில் வகைப்பாடு செய்யலாம். எடுத்துக்காட்டாக

-இல் ஒட்டு எடுத்துவரும் நடுவில், இடையில் என்பன -உக்கு வேற்றுமைக்குப் பின்னர் வரும் (எ.கா. அவர்களுக்கு நடுவில்/இடையில்). வினைவழிப் பின்னுருபுகளை இறந்தகால வினை எச்ச வடிவில் வருவன (எ.கா. கொண்டு, சுற்றி), எதிர்மறை வினை எச்ச வடிவில் வருவன (எ.கா. இல்லாமல், அல்லாமல்), காலங்காட்டா வினை எச்ச வடிவில் வருவன (எ.கா. தவிர, போல, விட) என வகைப்படுத்தலாம்.

7.2.4. பெயரடைகள்

ஆஷர், லேமன், கோதண்டராமன் ஆகிய மூவருமே பெயரடையை ஒரு சொல் வகுப்பாகக் கொள்கின்றனர். பெயரடையை ஒரு சொல் வகுப்பாய்க் கொள்வதில் மொழியியல் அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை. பெயரடைக்கு ஒரு செயல்முறை வரையறை செய்வது எளிதானதல்ல. பெயரடை, தொடரியல் அடிப்படையிலான ஒரு சொல்வகையாகும். பெயரடை, பெயர்த்தொடரில் தலைப்பெயருக்கு முன்னதாக அதன் அடையாக வரும். (எ.கா. பெரிய பெண்); வரையறு அடை (determiner) பெயரடைக்கு முன் வரலாம் (எ.கா. இந்தப் பெரிய பெண்). பயனிலை இடத்தில் பெயரடை வருவதானால் அது மாற்றுப்பெயர் ஒட்டாக்கம் பெற்று வர வேண்டும் (எ.கா. அந்தப் பெண் பெரியவள்). சொல் வகுப்புகளில் பெயரடை குறைச்சொல் எடுப்பதில்லை. பெயரடைகளைத் தனிநிலைப் பெயரடை (simple adjective) (எ.கா. நல்ல, பெரிய), கூட்டுநிலைப் பெயரடை (compound adjective) மற்றும் ஆக்கப்பெயரடை (derived adjective) (எ.கா. அழகான, உயரமான) என வகைப்படுத்தலாம். தனிநிலைப் பெயரடைகள் மரபிலக்கணத்தில் குறிப்புப் பெயரெச்சங்களாகக் கொள்ளப்படுகின்றன. பெயருக்குப்பின் வந்து அவற்றைப் பெயரடைகளாகச் செயலாற்றச் செய்யும் ஆன, உள்ள, அற்ற, இல்லாத (எ.கா. அழகான, [illegible]கற்ற, அழகில்லாத) என்ற பின்னுருபுகளைப் பெயரடையாக்கப் பின்னொட்டுகளாகக் கொள்வதா அல்லது பெயரெச்சங்களாகக் கொள்வதா என்பது இலக்கணப் பிரச்சனை. பெயரடைகளும் (தெரிநிலைப்) பெயரெச்சத்

தொடர்களும் செயற்பாடு அடிப்படையில் பெயருக்கு அடையாய் வருவன (எ.கா. அந்த நல்ல பெண், அந்த படித்த பெண்). ஆனால் (தெரிநிலைப்) பெயரெச்சங்கள் உடன், பின், பிறகு, போது, முன், மட்டும், வரைக்கும் முதலான உருபுகளுடன் வினையடைத் தொடர்களை உருவாக்கும் (எ.கா. வந்தவுடன், வந்தபின், வரும்முன், கூடியமட்டும்). பெயரடைகள் (குறிப்புப் பெயரெச்சங்கள்) இவ்வாறு செயல்படுவதில்லை (பரமசிவம் 1983:194). பரமசிவம் மரபிலக்கணங்கள் பெயரெச்சங்கள் எனக்குறிப்பிடும் தெரிநிலைப்பெயரெச்சம் (எ.கா. பாடினபெண்), குறிப்புப் பெயரெச்சம் (எ.கா.நல்ல பெண்), எதிர்மறைப் பெயரெச்சம் (எ.கா. படிக்காத பெண்) என்ற மூன்றையும் ஆன-ஒட்டாக்கப் பெயரடைகளையும் (எ.கா. அழகான பெண்) பெயரடைகளாகக் கொண்டுஅவற்றில் தெரிநிலைப் பெயரெச்சத்தையும் எதிர்மறைப் பெயரெச்சத்தையும் தொடர் என்று குறிப்பிட்டு ஒரு வகையாகவும் குறிப்புப் பெயரெச்சத்தையும் ஆன-ஒட்டாக்கப் பெயரடையையும் தனிச்சொல்லாகக் கொண்டு மற்றொரு வகையாகவும் பிரிக்கிறார்.

7.2.4.1. பெயரடை பற்றிய மூன்று வகையான கருத்துகள்

சொல்வகைபாட்டில பெயரடையின் இடம் குறித்து பொதுவான அளவில் மூன்று வகையான கருத்துக்களைக் காணலாம்: (1) பெயரடை ஒரு சொல் வகைப்படாகும் (2) பெயரடை ஒரு சொல் வகைப்பாடல்ல, பெயரின் உள்வகுப்பாகும் (3) பெயரடை ஒருசொல் வகைப்பாடல்ல, வினையின் உள் வகுப்பாகும். பெயரடை ஒரு சொல்வகைபாடு என்று கருதுவோர் பெயரடை வேற்றுமையுருபு ஏற்காத்தையும், பன்மை ஒட்டு -கள் ஏற்காததையும் காரணங்களாய்க் கூறுவர். பெயரடைகள் பெயரின் உள்வகுப்பிற்படும் என்று கருதுவோர் பெயரடை வடிவங்களை அவற்றுடன் தொடர்புடைய பெயர்களின் (முழுப் பெயர்களின்) மாற்று வடிவங்களாகக் (மாற்றுருபன்களாகக்) கொள்வர். எடுத்துக்காட்டாக,

பேர்+ஆபத்து=பேராபத்து என்ற தொடரில் (அல்லது சொல்லில்) வரும் பேர் என்ற வினையடையை பெருமை என்ற பண்புப்பெயரின் மாற்று வடிவாகக் கொண்டு பேராபத்து என்பதைப் பெருமை+ஆபத்து என்று பிரிப்பர். மரபிலக்கணங்களும் பெயரடைகளை இவ்வாறு தான் பார்க்கின்றன. இவ்வித மீட்பு வடிவாக்கங்களில் சீரான போக்கு இல்லை. எடுத்துக்காட்டாக இருமொழி என்பதை இரண்டுமொழி என்றும், மும்மூர்த்தி என்பதை மூன்று மூர்த்தி என்றும் மீட்பாக்கம் செய்வர்; ஏன் இவற்றை முறையே இருமை+மொழி என்றும் மும்மை+மூர்த்தி என்றும் மீட்பாக்கம் செய்யக்கூடாது என்பதற்கு நேரடியான பதில் இருப்பதாய்த் தெரியவில்லை. எனவே இவ்வாறு பெயர் மீட்பு வடிவுகளுடன் தொடர்புபடுத்தி பெயரடை வடிவுகளை மாற்றுருபுகளாகக் கொள்வது நிறைவாக இல்லை. பெருமை, சிறுமை, நன்மை என்பன முறையே பேர், சிற், நல் என்ற பெயரடைகளிலிருந்து (அல்லது வேர்ச் சொற்களிலிருந்து) -மை விகுதி பெற்று பெயராக்கங்களாக ஆனவை என்று ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்கு நேரடியான விடை இருப்பதாய்த் தெரியவில்லை. பொதுமையாக்கத்தைக் கருத்தில் கொண்டால் பேர், சிற், நல் என்பனவற்றைப் பெயரடைகளாக அல்லது பெயரினின்றும் வேறுபட்ட சொல்வகைபாடாகக் கருதுவது சிறந்ததாய்த் தெரிகின்றது. மரபிலக்கணங்கள் நல்லன் போன்ற குறிப்பு வினைமுற்றுகளில் வரும் நல் போன்ற சொற்களை குறிப்பு வினையாக, அதாவது காலம் ஏற்காத வினைகளாகக் கருதுவதாகத் தெரிகின்றது. லேகோப் (Lekoff,1970) பெயரடைகளை ஒரு வினையாகவே கருதுவார். ஆங்கிலம் போன்ற மொழிகளில் பெயரடை பெயர் முன் அடையாகவும் 'இரு'-வினையின் (be verb) பின் பெயரின் பயனிலை அடையாகவும் வரும். தமிழ்லும் குறிப்பு வினைமுற்று எனக் குறிப்பிடப்படும் ஒரு குழுவிற்படும் இடம்-எண்-பால் ஒட்டுகள் பெற்ற சொற்கள் பயனிலை இடத்தில் வரும். குறிப்பு வினைகளைப் பெயரடையாகக் கொள்வோரும் உளர். எடுத்துக்காட்டாக, அவன் சிறுவன், அது சிறிது என்ற

தொடர்களில் வரும் சிறுவன், சிறிது என்பன பயனிலைப் பெயரடைகளாகக் கொள்ளப்படும்.

ஆங்கிலத்தில் இரு-வினையைத் (be-verb-ஐ) தொடர்ந்து பயனிலையாக வந்து எழுவாய்ப் பெயருக்கு அடையாக வரும் அடைகளையும் பெயரடைகளாய்க் கொள்வர் என்று குறிப்பிட்டோம். எடுத்துக்காட்டாக The girl is beautiful, She is a beautiful girl என்பதில் இரு -வினைக்குப் பின்வரும் beautiful என்பதையும் girl என்பதற்கு முன்வரும் beautiful என்பதையும் பெயரடையாகக் கொள்வர். தமிழிலும் இரு-வினைக்கு முன்வந்து எழுவாய்ப் பெயருக்கு அடை போல் செயல்படும் சொல்வடிவுகளையும் ஏன் பெயரடையாகக் கொள்ளலாகாது என்ற ஐயம் எழுகிறது. எடுத்துக்காட்டாக

1.அவள் அழகான பெண்

2.அந்தப் பெண் அழகாக/ அழகாய் இருக்கிறாள்

என்ற வாக்கியங்களில் முதல் வாக்கியத்தில் வரும் அழகான என்பதைப் பெயரடையாகக் கொள்வதில் அதிக மறுப்பு எழாது. ஆனால் இரண்டாவது வாக்கியத்தில் வரும் அழகாக, அழகாய் என்பனவற்றைப் பெயரடைகளாய் கொள்வதில் மறுப்பு எழலாம். ஏனென்றால் அழகாக, அழகாய் என்பன பின்வரும் வாக்கியத்தில் வினையடையாக வருகிறது.

3.அவள் அழகாகப்/அழகாய்ப் பாடினாள்

-ஆக, ஆய் என்பன வினையடை ஒட்டுக்களாய்க் கருதப்பெறுவதால் (பார்க்க.9.5.5.2.2.1.) மேற்கண்ட 2 -ஆவது வாக்கியத்தில் வரும் அழகாக/அழகாய் என்பதையும் இரு என்ற வினையின் வினையடையாகக் கொள்வர்.

பின்வரும் வாக்கியங்களில் வரும் ஆக/ஆய் ஒட்டிய வடிவங்களும் எழுவாய்ப் பெயரை அடை செய்து வருகின்றன.

அவள் கோபமாக/கோபமாய் இருக்கிறாள்.

அவள் கோபமாக/கோபமாய் உள்ளாள்.

இரு, உள் போன்ற நிலையை உணர்த்தும் இரு-வினைகள் முன்வரும் ஒரு குறிப்பிட்ட வகுப்பிற்படும் பெயர்களிலிருந்து ஆக்கப்பட்ட -ஆக/ஆய் ஒட்டிய வடிவங்களை பெயரடைகளாய்க் கொள்ளலாகாதா என்ற கேள்விக்கு நேரடியான விடை இருப்பதாய்த் தெரியவில்லை. கோதண்டராமன்(1973:94-100) ஆக என்பதை வேற்றுமை உருபாய்க் கொள்கின்றார். அவர் பின்வரும் வாக்கியங்களில் ஓடு என்ற வேற்றுமையுருபும் ஆக என்பதும் ஒருபொருள் பன்மொழி போல் வருவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

எ.கா.

அவர் என்னிடம் அன்பாகப் பழகினார்.

அவர் என்னிடம் அன்போடு பழகினார்.

-இல் என்ற வேற்றுமையுருபு இடப்பொருளை உணர்த்துவது போல் ஆக என்பது நிலைப்பொருளை உணர்த்தி நிற்கும் என்று வாதாடுகிறார்.

எ.கா.

வளவன் வீட்டில் இருந்தான்.

பன்றி குழியில் விழுந்தது.

வளவன் அரசனாக இருக்கிறான்.

வளவன் கோபமாக இருக்கிறான்.

வளவன் அன்பாகப் பழகுகிறான்.

இரண்டாம் வேற்றுமைப் பெயரானது பெயரெச்சத்தொடரில் தலைமைப்பெயராக வருவதையும் அதுபோலவே -ஆக ஒட்டிய பெயரானது பெயரெச்சத்தொடரில் தலைமைப் பெயராக வருவதையும் சுட்டிக்காட்டித் தன்கருத்துக்கு பக்கபலம் சேர்க்கிறார்.

1. கண்ணன் பாடம் படித்தான் - கண்ணன் படித்த பாடம்.

2. கண்ணன் வேகமாக வந்தான் - கண்ணன் வந்த வேகம்.

இருப்பினும் பொருண்மை மாற்றத்தாலும் சொல்நிலை

யாக்கத்தாலும் அகராதிப் படுத்தப்பட்ட -ஆக ஒட்டிய ஒரு குழுவிற்படும் சொற்களை அடிப்படையில் வினையடைகளாகவும் இரு-வினைகள் முன் பெயரடைகளாகவும் கொள்வதற்கு எதிர்வாதம் இருப்பதாய்த் தெரியவில்லை.

7.2.4.2. பெயரடைகளைக் கண்டுகொள்வதற்கான சோதனைகள்

கோபால் (Gopal 1981:88-93) குர்க் மற்றும் பிறரையும் (Quirk, et al, 1976:231-34) நத்கர்னியையும் குறிப்பிட்டு பெயரடைகளைக் கண்டுபிடிக்க நான்கு தொடரியல் சோதனைகளைத் தருகின்றார்.

1. ரொம்ப என்ற செறிவுச்சொல் சோதனை
2. ஒப்புச்சோதனை
3. 'எப்படிப்பட்ட' என்ற சோதனை
4. வியப்புச்சொல் சோதனை

7.2.4.2.1. ரொம்ப என்ற செறிவுச்சொல் சோதனை

செறிவுச்சொல் ரொம்ப பெயரடையுடன் சேர்ந்து ஒப்புக்கொள்ளத்தகுந்த தொடரை உருவாக்கும்; ஆனால் வேறு அடைகளுடன் ஒப்புக்கொள்ளத்தகுந்த தொடரை உருவாக்காது.

எ.கா.

ரொம்ப நல்ல பையன்

* ரொம்ப வந்த பையன்

* ரொம்ப மரப்பெட்டி

* ரொம்ப அந்தப் பையன்

* ரொம்ப சில மனிதர்கள்

* ரொம்ப இரண்டு பறவைகள்

* ரொம்ப இரண்டுமடங்கு கடிதம்

* ரொம்ப ஆசிரியர் கண்ணன்

இச்சோதனையால் நல்ல என்பது பெயரடை என்றும் வந்த, மர(ம்), அந்த, சில, இரண்டு, இரண்டுமடங்கு, ஆசிரியர் என்பன பெயரடைகளல்ல என்பதும் உணர்த்தப்பெறும்.

7.2.4.2.2. ஒப்புச்சோதனை

ஒப்பைப் பெயரடையுடன் மட்டும் தான் பயன்படுத்தி ஒப்புக்கொள்ளத்தக்க தொடரை உருவாக்கலாம். பிற அடைகளுடன் ஒப்புக்கொள்ளத்தகுந்த தொடரை உருவாக்க இயலாது.

எ.கா.

அவனை விட இவன் நல்ல பையன்

அவனை விட இவன் நல்லவன்

*அவனை விட இவன் வந்த பையன்

*அவனை விட இவன் வந்தவன்

*அதை விட இது மரப்பெட்டி

*அதை விட இது மரம்

*அவனை விட இவன் அந்தப் பையன்

*அவனை விட இவன் அந்த

* அவர்களை விட இவர்கள் சில மனிதர்கள்

* அவர்களை விட இவர்கள் சிலர்

*அவைகளை விட இவைகள் இரண்டு பறவைகள்

* அவைகளை விட இவைகள் இரண்டு

* அதை விட இது இரண்டுமடங்கு கட்டிடம்

*அதைவிட இது இரண்டு மடங்கு

*அவரை விட இவர் ஆசிரியர் கண்ணன்

*அவரை விட இவர் ஆசிரியர்

இந்தச் சோதனையால் நல்ல, நல்லவன் என்பன பெயரடைகள்

என்றும் வந்த, வந்தவன், மர(ம்), அந்த, சில, சிலர், இரு, இரண்டு, இரண்டுமடங்கு, ஆசிரியர் என்பன பெயரடை அல்லாத பிற அடைகள் என்றும் உணரலாம்.

7.2.4.2.3. 'எப்படிப்பட்ட' என்ற சோதனை

'எப்படிப்பட்ட' என்ற சோதனையும் பெயரடைகளுக்குத் தான் பொருந்தும். பிற அடைகளுக்குப் பொருந்தாது. 'எப்படிப்பட்ட' என்ற கேள்விக்கு விடையாகப் பெயரடையைத் தான் தரவியலும். பிற அடைகளைத் தரவியலாது.

நல்ல மனிதர்கள்

அழகான மனிதர்கள்

* வந்த மனிதர்கள்

*அந்த மனிதர்கள்

*ஆசிரியர் மனிதர்கள்

*சில மனிதர்கள்

* இரண்டு மனிதர்கள்

நல்ல பெட்டி

பளுவான பெட்டி

* மரப்பெட்டி

இச் சோதனையால் நல்ல, அழகான, பளுவான என்பன பெயரடைகள் என்றும் வந்த, அந்த, ஆசிரியர், சில, இரண்டு, மர(ம்) என்பன பெயரடை அல்லாத பிற அடைகள் என்றும் உணரலாம்.

7.2.4.2.4. வியப்புச்சொல் சோதனை

வியப்புச்சொல் சோதனை பின்வருமாறு அமையும்.

1. எவ்வளவு அழகான பையன்!

2. எவ்வளவு வேகமான குதிரை!

3. எவ்வளவு சிறந்த பையன்!

4. எவ்வளவு பழுத்த பழம்!

ஆனால் இது 'செய்த' என்ற பெயரெச்சங்களுக்கும் அளவை அடைகளுக்கும் நேரியைபு எச்சத்தொடர்களுக்கும் (appositional clauses) மற்றும் பிற பெயர்த்தொடர்களுக்கும் பொருந்தாது.

* எவ்வளவு வந்த பையன்

* எவ்வளவு அந்த பையன்

* எவ்வளவு சில பேர்

* எவ்வளவு இரண்டு பேர்

* எவ்வளவு இரண்டுமடங்கு கடிதம்

* எவ்வளவு ஆசிரியர் கண்ணன்

இருப்பினும் இது பெயர்களுக்கும் கூட்டுப் பெயர்களுக்கும் பொருந்தும்.

எவ்வளவு பையன்கள்!

எவ்வளவு மரப்பெட்டிகள்!

மேற்சொன்ன சோதனைகள் எல்லாவகையிலான பெயரடைகளையும் கண்டு கொள்ளப் பயன்படாது; ஒரு குறிப்பிட்ட வகையிற்படும் பெயரடைகளைக் கண்டு கொள்ளப் பயன்படலாம்.

7.2.4.3. பெயரெச்சம் பெயரடையா?

பெயரெச்சங்கள் பெயர்களின் அடைகள் என்பதில் யாதொரு ஐயமில்லை. அவைகளைப் பெயரடை என்ற புதிய சொல்வகைப்பாட்டில் உள்ளடக்க வேண்டுமா ளல்லது அவற்றில் சிலவற்றைப் பெயரடைகளாகக் கருதவேண்டுமா என்று நமக்குள் கேள்வி எழுவது இயற்கை. எல்லாப் பெயரெச்சங்களும் பெயரடைகள் என்றால் பெயரெச்சங்களுக்கும் பெயரடைகளுக்கும் வேறுபாடு இல்லை; ஒரு சொல் வகைபாட்டிற்குத் தரப்பட்ட

இருபெயர்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டிவரும். மரபிலக்கணங்கள் பெயரடைகள் என்ற சொல் வகைப்பாட்டை எடுத்துக் கொள்ளவில்லை. அவை முன்னர் கூறியதுபோல் பெயரடைகளை வினையின் திரிபாக்கங்களாகக் குறிப்புப் பெயரெச்சமாகவும், தெரிநிலைப் பெயரெச்சமாகவும் கருதுவதாகத் தோன்றுகிறது. இருப்பினும் பெயருக்குமுன் வரும் எச்சங்களைப் பெயரெச்சங்கள் என்றும் வினைக்குமுன் வரும் எச்சங்களை வினையெச்சங்கள் என்றும் விளக்கும்சொல் விளக்கப்படும் தலைப்புச் சொல்லின் அடிப்படையில் வேறுபடுத்தப் படுவதால் தொடரியல் அடிப்படையில் மரபிலக்கணங்கள் பெயரெச்சம் அதாவது பெயரடை என்றும் வினையெச்சம் அதாவது வினையடை என்றும் இரு சொல் வகைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதாகக் கருத இடமுண்டு. எல்லாப் பெயரெச்சங்களையும் அகராதியில் பட்டியலிடுவது சிக்கனமானது அல்ல என்பது மட்டுமன்றி தேவையில்லாததும் கூட; வினையிலிருந்தான பெயரெச்சத்திரிபுகளைத் திரிபாக்க விதிகளால் பெற இயலும் என்பதால் எல்லாப் பெயரெச்ச வடிவுகளையும் அகராதியில் தருவது தேவையற்றது. கிரியா அகராதி தற்போக்குப் பொருண்மை காரணமாய்ச் சொல் நிலையாக்கம் பெற்ற பெயரெச்சங்களைத் தான் பெயரடை என்ற சொல்வகைப்பாட்டில் அடக்கிப் பட்டியலிட்டுள்ளது. பெயரெச்சங்களை எல்லாம் பெயரடைகளாகக் கொள்ள வேண்டுமா என்ற கேள்விக்கு நேரடியான விடை தருவது கடினமென்றாலும் எடுத்துக் கொண்ட இலக்கணக் கோட்பாடுகளின் அடிப்படையில் இத்தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று மட்டும் அறுதியிட்டுக் கூறலாம். கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியைப் பொறுத்தவரையில் பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் பெற்ற பெயரெச்சங்கள் பெயரடைகளாக அதில் பட்டியலிடப் பட்டுள்ளன (பார்க்க 9.5.1.). கிரியாவில் பட்டியலிடப் பட்டுள்ள எல்லாப் பெயரெச்சப் பெயர்களும் முன்னர்கூறிய பெயரடைத் தேர்ந்தெடுப்புத் தேர்வுகளில் தேர்வுறா. கிரியா பொருண்மையியல் சொல்நிலையாக்கம் அடிப்படையில்

தான் பெயரடை வகைப்பாட்டை நிர்ணயிக்கின்றது என்று தோன்றுகின்றது.

7.2.5. வினையடைகள்

ஆஷர் (Asher, *1982:101-102)* "Operational Definition for word Classes" என்ற தலைப்பின் கீழ் சொல் வகுப்புகளில் ஒன்றாக வினையடையைத் தராவிடிலும் சொல்லாக்க உருபனியலைப் பற்றிப் பேசுகையில் அவர் (Asher, *1982:199-205)* வினையடைகளின் ஆக்கம் பற்றிக் குறிப்பிடுகிறார். வாக்கியத்தில் அவை வரும் இடம் பற்றிக் கூறுகையில் இடவாக்கியங்கள் (locative sentences) மற்றும் உள்ளமைவாக்கியங்கள் (existential sentences) அல்லாத பிற வாக்கியங்களில் வினையடை பொதுவாக எழுவாய்மற்றும் அயல் செயப்படுபொருளைத் தொடர்ந்தோ நேர்ச் செயப்படுபொருளுக்கு முன்னரோ வரும் என்று குறிப்பிடுகிறார். ஒரே வாக்கியத்தில் வேறுபட்ட வினையடைகள் வந்தால் அவை வரும் நிரலைச் சரியாகக் கூற முடியாது; பொதுவாகக் காலவினையடைகள் இடவினை யடைகளுக்கு முன்னர் வரும். இடவாக்கியங்கள் உள்ளமை வாக்கியங்கள் இவற்றில் வினையடை எழுவாய் முன்னர் வரும். கோதண்டராமனும் லேமனும் வினையடையைச் சொல் வகுப்பாகக் கொள்கின்றனர். வினையடைகளைத் தனிநிலை வினையடை (simple adverbs) (எ.கா. நன்கு, உரக்க), கூட்டுநிலை வினையடை அல்லது ஆக்க வினையடை (derived adverbs) (எ.கா. அழகாக, அழகாய்) எனப் பகுக்கலாம். திரிபுற்ற அல்லது திரிபுறாத பல பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொல் வடிவங்களை தொடரியல் அடிப்படையில் நெருங்கிய ஒரு குழும வினையடையாக மீள் ஆட்சு செய்யலாம். பின்னுருபுகளாக வரும் பல சொல் வடிவுகள் வினையடைகளாகவும் வரலாம் (எ.கா. முன். முன்னால், பிறகு). திரிபுறாத ஆனால் குறைச்சொல் ஏ-ஐ விருப்பாக ஏற்றுவரும் பெயர்ச்சொல் வடிவுகள் (எ.கா. அப்பாலே, உள்ளே, அப்புறம்), இட வேற்றுமைக்காகத் திரிபுற்ற பெயர்ச்சொல் வடிவுகள் (எ.கா. இடையில், நடுவில்), இறந்தகால வினை எச்ச

வடிவங்கள் (எ.கா. பார்த்து, பிந்தி, முந்தி) என்பன வினையடைகளாகவும் பின்னுருபுகளாகவும் செயல்பட வல்லன. பெயரல்லாத வேறுசில சொல்வடிவுகளும் வினையடையாகச் செயல்பட வல்லன. எடுத்துக்காட்டாகச் சுட்டு மற்றும் வினாச் சுட்டுருபுகள் கொண்ட அப்படி, எப்படி, அப்போது, எப்போது, இங்கு, எங்கு, இன்று, என்று என்பனவற்றையும் பொதுவாக வினையடைகளாகக் கொள்ளலாம்; சில இடங்களில் இவை வினையடையல்லாது பெயர் போல் செயற்பாடு செய்யலாம் (எ.கா. இன்று நல்ல நாள்). பல திரிபுற்ற மற்றும் திரிபுறாத பெயர் மற்றும் வினை வடிவங்கள் தொடரியல் அடிப்படையில் வாக்கிய நிலை வினையடைகள் அல்லது வினையடை இணைப்பான்கள் என மீள்ஆய்வு செய்யப்படலாம். இவை வாக்கியத்தின் முன்னிடத்தில் வந்து இரண்டு வாக்கியங்களின் பொருண்மை உறவைக் கூறி நிற்கின்றன (எ.கா. அவன் நன்றாகப் படித்தான். ஆனால் வெற்றி பெறவில்லை). அப்படியும், ஆனால், இருந்தாலும், எதற்கும் என்பன வாக்கிய நிலை வினையடைகளாகும்.

பெயர்ச்சொல்லுடன் ஆகு என்ற வினைச்சொல்லின் காலமிலா வினையெச்ச வடிவான ஆக அல்லது ஆய் சேர்ந்து கிடைக்கும் சொல்வடிவங்களை ஆஷரும் கோதண்டராமனும் வினையடைகளாகக் கொள்கின்றனர். ஆனால் லேமேன் ஆக/ஆய் என்பது வினையடையாக்கம் செய்வது மட்டுமன்றி பிற செயற்பாடுகளிலும் வருவதைச் சுட்டிக்காட்டி ஆக/ஆய் என்பதைக் கட்டுநிலைப் பின்னுருபு அல்லது குறைச்சொல் என்று ஆயலாம் என்கிறார்.

பொருண்மை அடிப்படையில் வினையடைகளைக் கால வினையடைகள் (எ.கா. இன்று, நாளை) இட வினையடைகள் (எ.கா. இங்கு, அங்கு) முறைமை வினையடைகள் (எ.கா. மெல்ல, நன்கு), செயல்தொடர் வினையடைகள் (எ.கா. அடிக்கடி, மறுபடியும்), அளவு வினையடைகள் (எ.கா. மிக, வெகு) என்று பகுக்கலாம். அளவு வினையடைகள் ஆஷர், லேமன் இவர்களால் அளவு

அடைகள் என்று தனி வகுப்பாகக் கொள்ளப்படுகிறது. பரமசிவம் (1983) வினையெச்சங்களையும் ஒருவகை வினையடையாகக் கொள்கிறார். வினையெச்சங்கள் காலக்குறிப்பினைக் கொண்டு விளங்குவதால் இவற்றை வினையடைகளாக எல்லோரும் கொள்வதில்லை.

7.2.6. அளவடைகள்

ஆஷரும் லேமானும் அளவடைகளைச் சொல் வகுப்பாகக் கொள்கின்றனர். அளவடைகளுக்கு உருபனியல் அடிப்படையில் ஒட்டுமொத்தமான வரையறை தர இயலாது. நெருங்கிய ஒரு குழுமச் சொல்வடிவுகள் (எ.கா. சற்று, முழு, கொஞ்சம், இத்தனை, அத்தனை, எத்தனை, இவ்வளவு, அவ்வளவு, எவ்வளவு, நிரம்ப, நிறைய, மிகவும்) பெயர் அடையாக வரவல்லன; ஆனால் இவை வருமிடங்கள் ஒன்றானதல்ல; முழு என்ற அளவடை எப்பொழுதும் தலைப்புப் பெயருக்கு முன் அதனை அடுத்து வரும் (எ.கா. அந்த முழுத் தொகை). சற்று பொதுவாகக் காலப்பெயர்கள் முன் வரும் (எ.கா. சற்று நேரம்); பெயருடன் ஆக, ஆன, இல்லாத, உடைய சேர்ந்த சொல் வடிவங்களின் முன்னர் மிகவும் வரும் (எ.கா. மிகவும் அழகாக, மிகவும் அழகான, மிகவும் அழகில்லாத). பிற அளவடைகள் பெயரடை+பெயர் என்ற தொடரின் முன் வரும் (எ.கா. கொஞ்சம் பெரிய பாத்திரம்). முழு, இத்தனை, அத்தனை, எத்தனை, மிகவும் தவிர்த்த பிற அளவடைகள் வினையின் அடையாக வினை முன்னிடத்தில் வரும் (எ.கா. சற்று மறந்தான், நிறைய சாப்பிட்டான்). கொஞ்சம், இவ்வளவு, எவ்வளவு, நிரம்ப, மிகவும் என்பன பெயரடையின் அடையாக வந்து பெயரடைத் தொடரின் கண் படும் (எ.கா. கொஞ்சம் சின்னக்கை). கோதண்டராமன் மிகவும் என்பது போன்ற பெயர், வினை, பெயரடை, வினையடை ஆகிய நான்கினுக்கு முன் அடையாக வரும் சொற்களை வல்லடை என்ற தனிச்சொல் வகுப்பில் அடக்குகிறார் (எ.கா. மிகவும் கருப்பு, மிகவும் பிடிக்கும், மிகவும் நல்ல, மிகவும் வேகமாக).

7.2.7. வரையறை அடைகள்

பெயருக்குப் பின்னர் வரும் இந்த, அந்த என்ற சுட்டுப்பெயரடைகள் வரையறை அடைகளாகும். அவைகள் சுட்டப்படும் பொருள் அல்லது குறிப்புப்பொருள் (referent) பேசுபவர்களிடமிருந்து எவ்வளவு அண்மைப்பட்டு அல்லது சேய்மைப்பட்டு இருக்கிறது என்பதைக் குறிக்கவல்லன (எ.கா. இந்தப் பையன், அந்தப்பெண்). கிரியாவின் தற்காலத் தமிழகராதியில் இவைகள் சுட்டுப் பெயரடைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

7.2.8. இணைப்பான்கள்

கோதண்டராமனும் லேமானும் இணைப்பான்களைச் சொல்வகுப்பாகக் கொள்கின்றனர். ''இரண்டு சொற் றொடர்களை அல்லது சொற்களை இணைப்பதாகவும் ஒரு முழுத்தொடரைத் தன்னோடு இணைப்பதாகவும் அமைந்த சொற்கள் இணைப்பான்கள்'' எனக் கோதண்டராமன் விளக்குகிறார். தமிழில் பொதுவாகக் குறைச்சொற்கள்(clitics) இருப்பினும் பல வினை வடிவங்களைத் தொடரியல் அடிப்படையில் இணைப்புச் சொற்களாகக் கொள்ளலாம் (எ.கா. ஆனால், அல்லது, இல்லையென்றால்). இணைப்புச் சொற்கள் இரு பெயரடைகளையோ பெயர்களையோ இணைக்கப் பயன்படும் (எ.கா. பழைய ஆனால் நல்ல புத்தகம், உமா இல்லையென்றால் ரமா வருவாள்). கிரியாவின் தற்காலத் தமிழகராதி இவற்றை இணைப்பு இடைச்சொற்கள் என்று குறிப்பிடுகின்றது.

7.2.9. குறைச் சொற்கள்

குறைச்சொற்கள் பற்றி ஆரோக்கியநாதன் (1982) விரிவாக ஆராய்ந்துள்ளார். கோதண்டராமன் குறைச்சொற்களை துணைமைச்சொல்வகையாகச்சார்புநிலைக்கிளவி வகையின் கீழ் ''ஒட்டு'' என்று குறிப்பிட்டு வகைப்படுத்துகிறார். அவர் ''தொடரில் பல்வேறு இடங்களில் நின்று தொடர்ப் பொருளில் நிலைமாற்றம் ..'' செய்யும் மற்றும் ''பெயர் விகுதியாகவோ வினை விகுதியாகவோ'' கொள்ள இயலாத தான், உம், ஆ முதலான கிளவிகளை ஒட்டுகள் என்று

குறிப்பிடுகிறார். லேமான் குறைச்சொற்களைப் பற்றிப் பேசும் போது உருபனியல் அடிப்படையில் அல்லாமல் இலக்கணத்தின் ஒலியனியல் விதிகளின் படி சொற்களுள் ஒட்டப்பெறும் கட்டுவடிவங்கள் குறைச்சொற்கள் எனக் குறிப்பிடுகின்றார். அவை திரிபு அல்லது ஆக்கக்கூறுகளின் பிரதிபலிப்பல்ல; திரிபு அல்லது ஆக்கப்பின்னொட்டுகளைப் போல் அவை ஒரு குறிப்பிட்ட சொல்வகுப்பை மட்டும் சார்ந்து வருவன அல்ல. தமிழில் எல்லாக் குறைச்சொற்களும் பின்குறைச் சொற்களாகும். பெயரடை அல்லது பெயரின் அடையாய்ச் செயல்படும் பெயர்கள் தவிர பிறதொடரியல் வகைப்பாடுகளின் தலைமைச்சொற்களுடன் குறைச்சொற்கள் ஒட்டப்பெறலாம். ஒரு குறிப்பிட்ட ஒலியனியல் வடிவம் கொண்ட குறைச்சொல்லுக்குப் பல பொருண்மைச் செயல்பாடுகள் இருக்கும். உம், ஓ, ஏ, தான், ஆ என்பன குறைச் சொல் வகுப்பின் பாற்படும். ஆஷர் ஏ, தான் ஆகிய தேற்றக் குறிகளையும் (emphatic markers) ஆ என்ற வினாக்குறியையும் (interrogative marker) உம், ஓ ஆகிய இணைப்பான்களையும் பலதரப்பட்ட முக்கியமான வாக்கிய உறுப்புகளுடன் ஒட்டத்தகுந்த மாற்றம் கொள்ளாத கட்டு வடிவங்கள் எனக் குறிப்பிட்டு அவற்றை இடைச்சொற்கள் (particles) என்ற சொல் வகுப்பில் அடக்குகிறார். கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி இவற்றை இடைச்சொற்கள் எனக் குறிப்பிடுகின்றது.

7.2.10. வினைசார் கிளவி

கோதண்டராமன் வந்த பின், வந்த போது, வந்த உடன் ஆகியவற்றில் காணும் பின், போது, உடன் ஆகிய கிளவிகளை வினைசார் கிளவி எனத் துணைமைச் சொல் வகையாகச் சார்புநிலைக் கிளவி வகையின் கீழ் தருகிறார். ''பெயர்த்தன்மை திரிந்து பெயரெச்சத்தின் பின் விகுதி போல நின்று வினை எச்சங்களை அமைக்கும் கிளவிகளும் வினையிலிருந்து திரிந்து வினையெச்சத்தின் பின் விகுதி போல நின்று பெயரெச்சங்களை அமைக்கும் கிளவிகளும் வினைசார் கிளவிகள் ...'' என்று குறிப்பிடுகிறார். செய்யத்தக்க, செய்யக்கூடிய, செய்ய வேண்டிய முதலான

கூட்டுநிலைப் பெயரெச்சங்களில் காணும் தக்க, கூடிய, வேண்டிய என்பனவற்றையும் வினைசார் கிளவிகளாகக் கொள்ளத்தகும் என்கிறார். கிரியாவின் தற்காலத் தமிழகராதி இவற்றையும் இடைச்சொல் என்றே குறிப்பிடுகின்றது.

7.2.11. உணர்ச்சி வெடிப்புச் சொல்

கோதண்டராமன் ஐயோ! அம்மா! அப்பா! என வரும் சொற்களை உணர்ச்சி வெடிப்புச்சொல் என்ற வகுப்பில் தருகிறார். கிரியாவின் தற்காலத் தமிழகராதியின் படி இவை இடைச்சொற்களாகும்.

7.2.12. உணர்வுக் குறிப்புச்சொல்

கலகலவென்று, பளபளவென்று, சப்பென்று, கமகமவென்று, வழவழவென்று, திடீரென்று என்ற தொடர்களில் வரும் கலகல, பளபள, சப், வழவழ, திடீர் முதலான உணர்வுக் குறிப்புகளை வெளிப்படுத்தும் சொற்களைக் கோதண்டராமன் உணர்வுக் குறிப்புச்சொல் என்ற சொல் வகுப்பில் அடக்குகிறார்.

7.2.13. விளிப்புச்சொல்

ஏனுங்க, என்னங்க, ஏய், அடே என வரும் சொற்களை கோதண்டராமன் விளிப்புச்சொற்களாகக் கொண்டு இச்சொல் வகுப்பின் கீழ் தருகிறார்.

7.2.14. விளிஏற்புச்சொல்

ஏனுங்க, என்னங்க என்ற சொற்கள் விளிக்கும் போது எதிர்தரவாகக் கிடைக்கும் சொற்களாதலால் இவற்றை விளிஏற்புச்சொல் என்ற வகுப்பில் கோதண்டராமன் தருகிறார்.

7.2.15. விகுதி

விகுதி (suffix) எனக் குறிப்பிட்டுப் பின்னொட்டுகளைச் சார்புநிலைக்கிளவி வகையின் கீழ் கோதண்டராமன் வகைப்பாடு செய்கிறார். வேற்றுமைப்பின்னொட்டுகளையும் (எ.கா. ஐ, ஆல், கு) , அன், ஆன், அள், ஆள் முதலான பால் இட ஒட்டுகளையும் ஆன, ஆக என வரும் பெயரடை, வினையடை விகுதிகளையும் இந்த வகுப்பில் அடக்குகிறார்.

7.2.16. சாரியை அல்லது நிரப்பி

''தமக்கென்று அகராதிப் பொருளோ இலக்கணப் பொருளோ இல்லாதனவாய்ச் சொற்கள் ஒன்றோடொன்று சேரும் போது சொற் சேர்க்கைக்கு இசைவாக நின்று சொல் அமைப்புக்கு உதவுவனவாய் அமைந்த கிளவிகள் சாரியை அல்லது நிரப்பி என்று பெயர் பெறும்'' என்று கோதண்டராமன் இச்சொல் வகுப்பை வரையறை செய்கிறார். *வீட்டினை, ஊரினை* என்பனவற்றில் உள்ள இன் என்பதையும் *வந்தனன், சென்றனன்* என்பனவற்றிலுள்ள அன் என்பதையும் சாரியை கிளவிக்கு எடுத்துக்காட்டுகளாகக் காட்டுகிறார்.

7.3. முடிவுரை

சொல் வகுப்புகளைப் பொறுத்தமட்டில் இலக்கணம் எழுதுபவர் அவர்கள் கைக்கொள்ளும் இலக்கண நெறிகளை அடிப்படையாகக் கொண்டு சொற்களைச் சொல் வகுப்புகளாகப் பாகுபாடு செய்து இலக்கண விளக்கம் தருகின்றனர். ஒரு வகைப் பாகுபாட்டில் இருக்கும் சொல்வகுப்பு மற்றொரு வகைப்பாகுபாட்டில் இல்லா திருப்பது இக்காரணத்தால் தான். இக்காரணத்தால் தான் ஒருவகைப் பாகுபாட்டில் உள்வகுப்பாக இருக்கும் சொல் வகுப்பு மற்றொரு வகைப் பாகுபாட்டில் தனி வகுப்பாகக் கொள்ளப் படுகிறது; ஒரு சொல் வகுப்பு மற்றொரு வகைப் பாகுபாட்டில் ஓர் உயர்மட்டச் சொல்வகுப்பின் கீழ் அடக்கப்படுகின்றது. கோதண்டராமன் சொல்வகைகளை அல்லது இலக்கணக் கூறுகளை இரு வகைகளாகத் தலைமை இலக்கணக்கூறு, துணைமை இலக்கணக்கூறு என்று பிரித்து விடுவதால் அவர் வகைபாட்டின் படி பின்னொட்டுகளையும் (விகுதிகளையும்) சாரியை அல்லது நிரப்பி என்பவைகளையும் சார்நிலைக் கிளவி வகையின் கீழ் தருவது பொருந்தும். பெயரடை, வினையடை என்ற இரு வகைகளைச் சொல் வகுப்புகளாகக் கொள்வதில் தகுந்த இலக்கண நியாயங்கள் இருக்கின்றன. ஆனால் (தெரிநிலை) பெயரெச்சங்களையும் (தெரிநிலை) வினையெச்சங்களையும் முறையே பெயரடை, வினையடை என்ற வகுப்புகளில்

அடக்குவதில் பிரச்சனை வருகிறது. எச்சங்களை அடை வகுப்புகளாகக் கொள்வதனால் காலத்துடன் கூடிய எச்ச ஒட்டுகளைச் சொல்லாக்க ஒட்டுகளாகக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் திரிபு ஒட்டுகளான கால எச்ச ஒட்டுகளை ஆக்க ஒட்டுகளாக எடுக்க வேண்டி வரும். திரிபு ஒட்டுகள் பெற்ற சொல் வடிவுகளைச் சொல் வகுப்பு மாறாத திரிபு வகுப்புகளாகக் கொள்வது தான் உருபனியல் அடிப்படைக்கு உகந்தது. எனவே திரிபு ஒட்டுகள் பெற்ற எச்ச வடிவுகளை வினை வகுப்பின் கீழ் வினைகளின் திரிபு வடிவங்களாகக் கொள்வது தான் நல்லது. அகராதிச் சொல் வகுப்புகளின் அடிப்படைக்கும் இது ஏற்புடையது. கோதண்டராமன் குறிப்பிடும் உணர்ச்சி வெடிப்புச் சொல், உணர்வு குறிப்புச் சொல், விளிப்புச் சொல், விளி ஏற்புச் சொல் என்பன தற்காலத் தமிழுக்குத் தேவைப்படும் சொல் வகுப்புகளாகும்.

பரமசிவத்தின் (1983:98) பின்வரும் கூற்று சிந்தனைக்குரியது. ''சொற்களைப் பாகுபாடு செய்வதற்குரிய திட்டவட்டமான அடிப்படைக் கொள்கை இன்னும் உருவாகவில்லை. இலக்கண நூலாரின் முறையைப் பின்பற்றினாலும் சில விதிவிலக்குகள் அமையும். விதிவிலக்குகளே தோன்றாத வகையில் சொற்களைப் பாகுபாடு செய்வதற்கேற்ற அடிப்படைக் கொள்கை இன்னும் உருவாகவில்லை. இனியேனும் உருவாகுமா என்பது ஐயப்பாடாகவே இருக்கிறது.'' சொல் (word) என்பதைச் சரியாக வரையறை செய்வது பிரச்சனைக்குரியதாய் இருப்பது போல் சொற்களை வகுப்புகளாகச் சரியாகப் பாகுபடுத்துவதும் பிரச்சனைக்குரியதாய் இருப்பதில் ஆச்சரியமில்லை. பயன்படுத்தும் வகையில் அல்லது தேவைக்குத் தகுந்த வகையில் சொல் வகுப்புகளை வரையறை செய்து சொல் பாகுபாடு செய்யலாம்.

8
தமிழில் சொல்லாக்க வகைப்பாடு

தமிழில் சொல்லாக்க வகைகளைப் பற்றிய சுருக்கமான ஒரு வருணனை தர இங்கு முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. முக்கியமாக வகைப்பாட்டியலை அடிப்படையாகக் கொண்டு தமிழில் உள்ள சொல்லாக்க வகைகளைக் கூறுவது நோக்கமாக இருப்பினும், தர்க்கரீதியான விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. பாரைப் (1983:201) பின்பற்றி பொதுவாகச் சொல்லாக்கத்தைப் பின்வருமாறு பகுக்கலாம்: 1)கூட்டாக்கம், 2)முன்னொட்டக்கம், 3)பின்னொட்டாக்கம், 4)மாற்றம், 5)பின்வடிவாக்கம், 6)கத்தரிப்பாக்கம், 7)கலப்பாக்கம், 8)தலைப்பெழுத்தனாக்கம், 9)சொல் உருவாக்கம்.

8.1.கூட்டாக்கம்

கூட்டாக்கங்களை மரபிலக்கணப்படி தொகையாக்கம் எனக் கூறலாம். பொதுவாகக் கூட்டாக்கங்களை அவை வாக்கியத்தில் பங்குபெறும் செயற்பாடு அடிப்படையில் பெயர்கள், வினைகள், பெயரடைகள், வினையடைகள் என்று வகைப்படுத்தலாம். கூட்டுகளின் உள்வகைப்பாடுகள் பலவழிகளில் செய்யப்படுகின்றன: 1)கூட்டுகளை உருவாக்கப் பயன்படுத்தப்படும் சொற்களின் வடிவ

வகுப்புகளின் அடிப்படையில், 2) பொருண்மைப் பகுப்புகள் அடிப்படையில், 3)கூட்டுகளாக வரும் சொற்களை இணைப்பவைகளாகக் கருதப்படும் சூழ்நிலை இயக்கிகளின் அடிப்படையில், 4)ஆழ்நிலை தொடரியல் செயற்பாடு அடிப்படையில், 5)உருப ஒலிபனியல் அடிப்படையில் மற்றும் பிற வழிகளில். மேற்சொன்ன ஏதாவது ஒரு வழியில் கூட்டக்கங்கள் வகைப்படுத்தப்பட்டுத் தரப்பட்டுள்ளன. தமிழில் பெரும்பான்மையான கூட்டாக்கங்களும் பெயர்களாகும்; அதற்கு அடுத்தபடியாக வினைகள் அமையும். இரண்டிற்கு அதிகமான சொற்களைக் கொண்ட கூட்டாக்கங்களை ஈரிணைக் கூட்டுகளாகப் பகுப்பாய்வு செய்யலாம்.

8.1.1.கூட்டுப்பெயர்கள்

கூட்டுப்பெயர்களை அவற்றை உருவாக்கப் பயன்படுத்தப்படும் சொற்களின் வடிவ வகுப்புகளின் அடிப்படையில் பின்வருமாறு பாகுபாடு செய்து ஆயலாம்.

8.1.1.1.பெயர்+பெயர்

இது பெரு அளவிலான கூட்டாக்கங்களின் உள்வகைப்பாடாக அமையும். பல மாதிரியான பொருண்மை உறவுகள் மற்றும் வேறுபட்ட தொடரியல் அமைப்பொழுங்குகளை இந்த வகைப்பாட்டில் காணலாம். இவ்வாக்கங்களைப் பொருண்மை உறவுகள் மற்றும் உருபன்-தொடரியல் அளவீடு அடிப்படையில் வகைப்பாடு செய்யலாம்.

8.1.1.1.1.உள்வட்டக் கூட்டுகள்

ஒரு கூட்டு அதன் தலைப்புச் சொல்லின் உள்ளடங்குச் சொல்லாக வருவது உள்வட்டக்கூட்டாகும். எடுத்துக் காட்டாக மாம்பழம் என்பது பழம் என்பதில் அடங்குவதால் அது ஓர் உள்வட்டக் கூட்டாகும். உள்வட்டக் கூட்டுகள் இரண்டு பொதுப் பெயர்களின் கூட்டாகவோ ஒரு சிறப்புப் பெயர் மற்றும் பொதுப்பெயர் இவற்றின் கூட்டாகவோ அமையலாம்.

8.1.1.1.1.1.பொதுப்பெயர்+பொதுப்பெயர்

இவ்வாக்கம் கூட்டாக்கங்கள் எல்லாவற்றிலும் வினைவாக்கம் மிகுந்ததாகக் காணப்படுகிறது. இந்தச் சொல்லாக்கம் செய்தித்தாள்கள், காலவாரியான இதழ்கள், அகராதிகள் போன்றவற்றில் மிகுதியாகப் பயன்படுத்தப் படுகின்றன. கூட்டாக வரும் சொற்களுக்கிடையே உள்ள உறவுகள் பலவிதமாக அமையும். பின்வரும் எடுத்துக்காட்டு களிலிருந்து இதை உணரலாம். (எ.கா. திரைப்படம், பகல் கனவு, மனசாட்சி, வீரப்பதக்கம், இதயநோய், தீப்பெட்டி, சமாதானப்பேச்சு, பெரிய இடத்துப்பெண், குற்றவாளிக் கூண்டு, புகார் கடிதம், பயணச்சீட்டு, இராணுவ வீரர், மரணச்செய்தி, சாதிக்கலவரம், கள்ளக்காதலன், கால்பந்து, கழிவறை).

8.1.1.1.1.2.சிறப்புப்பெயர்+பொதுப்பெயர்

இவ்வகையில் அமையும் கூட்டுகளில் வரும் சொற்களுக்கிடையேயும் பலவிதமான உறவுகள் காணப்படும். பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதை உணர்த்தும். எ.கா.ராஜீவ் நகர், காந்திவழி, அண்ணாநடை.

8.1.1.1.2.நேரியைபுக்கூட்டுகள்

இவ்வகையான கூட்டாக்கம் விளைவாக்கம் உள்ளதாகும். நேரியைபுக் கூட்டு அதை உருவாக்கும் இரு சொற்களுக்கும் பொருளடங்குச் சொல்லாக அமையும். எடுத்துக்காட்டாக பெண் டாக்டர் என்ற கூட்டு பெண் என்பதன் பொருளடங்குச் சொல்லாகவும் டாக்டர் என்பதன் பொருளடங்குச் சொல்லாகவும் வரும். அதாவது பெண் டாக்டர் என்பதை ஒருவகை பெண் என்றும் ஒருவகை டாக்டர் என்றும் குறிப்பிடலாம்.

8.1.1.1.3.உம்மைத் தொகைக் கூட்டுகள்

இது அவ்வளவு விளைவாக்கம் உள்ளதல்ல. இருப்பினும் இத்தகைய கூட்டுகள் ஆங்காங்கே ஆக்கம் பெறுகின்றன. இதில் வரும் ஆக்கச் சொற்களில் எது தலையாயது என்று கூற இயலாது. மற்றும் இக்கூட்டு அதை

உருவாக்கும் சொற்கள் இரண்டிற்கும் பொருளடங்குச் சொல்லாக வருவதில்லை. (எ.கா. செடிகொடிகள், புல்பூண்டுகள், ஆடுமாடுகள், மேசை நாற்காலிகள், ஏற்ற இறக்கம், வளைவுசுழிவு).

8.1.1.1.4.வெளிவட்டக் கூட்டுகள்

இந்த வகையான கூட்டுகள் அவற்றில் அடங்கியுள்ள சொற்களால் பெறப்படாத ஒரு பொருண்மைத் தலைப்பின் பொருளடங்குச் சொல்லாக வரும். எடுத்துக்காட்டாக 'முட்டாள்' எனப் பொருள்படும் மரமண்டை என்ற கூட்டை மண்டை என்ற தலைச்சொல்லின் பொருளடங்குச் சொல்லாக கூற இயலாது. இம்மாதிரியான வெளிவட்டக் கூட்டுகள் விளைவாக்கம் உள்ளனவல்ல. (எ.கா.கால்நடை, பள்ளிக் கூடம், வேலைப்பாடு).

8.1.1.2.வினை+பெயர்

வினையடி + பெயர் கூட்டுகளை மரபிலக்கணங்கள் வினைத்தொகைகள் என்று கூறும். வினையடியில் கால உருபுகள் தொக்கி வந்து அவை வினைத்தொகையாகின்றன என்று கொள்ளும். வினையடியை வினைப் பெயராகக் கொள்வாரும் உளர். செயற்பாடு அடிப்படையில் தலைப்புப்பெயர்களின் முன்வரும் வினையடிகளைப் பெயரடைகளாகக் கொள்ளவும் இடமுண்டு. தற்காலத் தமிழில் இது விளைவாக்கம் உள்ளது. இக்கூட்டுகளில் தலைப்பாக வரும் பெயர்கள் முதல்வரும் வினையடிகளுடன் எழுவாய் உறவிலோ செயப்படுபொருள் உறவிலோ அல்லது பிற உறவிலோ வரும் (எ.கா. சுடுசோறு, சுற்றறிக்கை, ஆடுசதை, ஊறுகாய், தொற்றுநோய், தொடு உணர்வு, சுடுதண்ணீர், வெட்டுகத்தி). மேற்சொன்ன கூட்டுகள் உள்வட்டக் கூட்டுகளாகும். திருப்புமுனை என்பதை வெளிவட்டக் கூட்டுக்கு எடுத்துக்காட்டாய்க் கூறலாம். பகுத்தறிவு என்ற கூட்டை வினையெச்சத்துடன் பெயர் சேர்ந்துவரும் கூட்டுப்பெயருக்குச் சான்றாய்க் கூறலாம்.

8.1.1.3. பெயர்+வினை

பெயரும் வினையும் சேர்ந்து பெயராக அமையும்

கூட்டுகள் தமிழில் விளைவாக்கம் பெறவில்லை என்று சொல்வதே பொருத்தமாய்த் தோன்றுகிறது. கால்கட்டு, தாலிகட்டு என்பனவற்றில் வரும் கட்டு என்ற தலைப்புச் சொல்லை வினையாகவும் வினையடிப் பெயராகவும் கொள்ளலாம்.

8.1.1.4. வினை+வினை

வினையடியும் வினையடியும் சேர்ந்து பெயராய் அமைவதும் தமிழில் விளைவாக்கம் பெறவில்லை. அடிபிடி, இழுவலி, இழுபறி என்ற கூட்டுப் பெயர்களை வினை+வினை என்ற கூட்டுக்கு உதாரணங்களாகக் கூறலாம் என்றாலும் அடி, பிடி, இழு, பறி என்பனவிற்றை தத்தம் வினைகளின் பெயராக்கங்களாகக் கொள்ளவும் இடமுண்டு.

எடுத்துக்காட்டு என்ற கூட்டை வினையெச்சத்துடன் வினையடி சேர்ந்து வரும் கூட்டுப் பெயருக்குச் சான்றாகக் கூறலாம். எடுத்துக்காட்டு என்ற கூட்டுப்பெயரை எடுத்துக் காட்டு என்ற கூட்டுவினையின் மாற்றமாகவும் கொள்ளலாம்.

8.1.1.5.பெயரடை+பெயர்

நன்கொடை, பெரும்பாம்பு, கருங்குருவி, சிறுசேமிப்பு போன்ற கூட்டுகளை நன்மை+கொடை, பெருமை+பாம்பு, கருமை+குருவி, சிறுமை+சேமிப்பு என்று மரபிலக்கணப்படி விரித்துப் பண்புப் பெயர் + பெயர் தொகைகளாகக் கொள்ளலாம் என்றாலும், நன், பெரும், கரும், சிறு என்பனவற்றைப் பெயரடைகளாகக் கொண்டு மேற்சொன்ன கூட்டுகளைப் பெயரடை+பெயர் என்ற கூட்டாக்கமாகக் கருதுவது சிறப்பாகத் தெரிகிறது. (இதைப்பற்றிய விளக்கம் பெயரடையாக்கம் என்ற தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளது.) பேராசிரியர், நல்லபாம்பு, நறுமணம், புனரமைப்பு, புன்சிரிப்பு என்பனவற்றை பெயரடை+பெயர் என்ற கூட்டாக்கத்தின் மாதிரி எடுத்துக்காட்டுகளாகத் தயக்கமின்றி கூறலாம். பெயரடை+பெயர் என்ற கூட்டாக்கத்தில் விளையும் பொருள் தலைப்புச் சொல்லில் அடங்கும் பொருளைத் தருவதோடு தலைப்புப் பெயரின் ஒரு வகையாகவும் பொருள் மாற்றம் பெறுவதால் இத்தகைய

ஆக்கங்களை உள்வட்டக் கூட்டாக்கங்களாகக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

8.1.1.6.இடைச்சொல்+பெயர்

மரபிலக்கணங்கள் இடைச்சொற்கள் என்று கூறும் பின்னுருபுகளான பின், முன் என்பன பெயர்களின் முன்வந்து கூட்டுப்பெயர்களாக ஆக்கம் பெறுவதும் உண்டு. முந்தானை, முன்னுரை, முன்னேற்றம், பின்னுரை, பின்னேற்றம், பின்குறிப்பு, இல்வேற்றுமை, குவேற்றுமை என்பனவற்றை இதற்கு மாதிரி எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம். முன், பின் என்பனவற்றைப் பெயர்களாகக் கொள்ளவும் வழியுண்டு; இவற்றை வேர்ச் சொற்களாகக் கொள்ளலாம் என்ற விளக்கம் பின்னால் தரப்பட்டுள்ளது.

8.1.1.7.வினையடை+பெயர்

அமைப்பொழுங்கு கட்டுத் திட்டத்தின்படி முன்னேற்றம், பின்னேற்றம் என்பனவற்றில் முன், பின் என்ற சொற்களை வினையடைகளாகக் கொள்ளவும் இடம் உண்டு. முன்னர் கூறிய கூட்டாக்கத்திற்கும் இதற்கும் வெளிப்படையான வேற்றுமையொன்றுமில்லை என்றாலும் இவ்வாக்கத்தில் தலைச்சொல் எப்போதும் வினையடிப் பெயராகவே வரும்.

8.1.1.8.தொடர்க்கூட்டுகள்

ஒரு தொடரே கூட்டாக்கத்தில் சம்பந்தப்படும் தொடர்க்கூட்டுகளின் கீழ் பலவகைப்பட்ட கூட்டுகள் வரும். சில சமயங்களில் இப்படிப்பட்ட ஆக்கங்களை உண்மையிலேயே கூட்டுகளாகக் கருதலாமா அல்லது தொடர் அமைப்பின் அகராதிச் சொல் வடிவமாகக் கருதலாமா என்ற ஐயம் எழுவதுண்டு. இந்த வகுப்பில் படும் கூட்டுகளை உள்வட்டக்கூட்டு, வெளிவட்டக்கூட்டு, உம்மைக்கூட்டு என வேறுபடுத்தலாம்.

உள்வட்டத் தொடர்க் கூட்டில் படும், தற்போது விளைவாக்கமில்லாத ஒரு குழுமக் கூட்டுகளின் தலைப்புச் சொல்லிற்கு முன்வரும் சொல்லோடு சேர்ந்துவரும் உருபைப்

பகுப்பாய்வு செய்து பெறலாம் (எ.கா. பாறாங்கல் < பாறை ஆம்கல், கூழாங்கல் < கூழ் ஆம்கல்). சில கூட்டுகள் வேற்றுமையுருபு தொகாதனவாய் அமையும் (எ.கா. பழிக்குப்பழி, வட்டிக்குவட்டி, ஆயிரத்தில் ஒருவன்). உள்வட்டத் தொடர்க் கூட்டுகளில் மிகச் சாதாரணமான விளைவாக்கமுள்ள கூட்டுகள், ஒரு தலைப்புச் சொல்லும் அதன் முன்னர் ஒரு தொடரோ வாக்கியமோ வருவதாய் அமையும். (எ.கா. முடிசூடா மன்னன், கண்டதும் காதல், பழம் நழுவிப் பாலில் விழும் எதிர்பார்ப்பு, ஊதினால் பறந்து விடும் உடம்பு, போனால் போகட்டும் போடா மனம், தொட்டதெல்லாம் துலங்கும் கை).

உம்மைத் தொடர் கூட்டுகள் -உம் என்ற உருபை வெளிப்படையாகக் கொண்டு உம்மைத் தொகைக் கூட்டுகளிலிருந்து வேறுபடுகின்றன. இவைகளை ஒரு கூட்டாக்கமாகவும் தொடர்நிலைத் தொடராகவும் காணலாம். (எ.கா. நகமும் சதையும், பாலும் தண்ணீரும், நீரும் நெருப்பும்).

வெளிவட்டத் தொடர்க் கூட்டுகள் பலதரப்பட்ட வையாகும் (எ.கா. தொட்டால் வாடி, தொட்டால் சுருங்கி, வெளுத்ததெல்லாம் பால், வெட்டொன்று துண்டிரண்டு).

8.1.1.9. இரட்டிப்புக் கூட்டுப் பெயர்கள்

பெயர்கள் இரட்டித்து வந்து கூட்டுப் பெயர்களாக வருவது விளைவாக்கமானதாகும். இந்த இரட்டிப்பிலும் ஒருவித அமைப்பொழுங்கைக் காணலாம். (எ.கா. அரிசிகிரிசி, மேஜைகீஜை, புலிகிலி, பாம்புகிம்பு, சம்பளம்கிம்பளம்).

8.1.2. கூட்டு வினைகள்

கூட்டுவினைகளை அவற்றை உருவாக்கப் பயன்படுத்தப்படும் வடிவ வகுப்புகளின் அடிப்படையில் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்.

8.1.2.1. பெயர்+வினை

தமிழில் பல பெயர்ச் சொற்கள் சில பொது வினைகளுடன் (வினையாக்கிகளுடன்) சேர்ந்து

வினையாக்கம் பெறுகின்றன. இத்தகைய ஆக்கம் விளைவாக்கம் மிகுந்ததாகும். அடை (எ.கா. நாசமடை), அடி (எ.கா. வெள்ளையடி), அளி (எ.கா. பரிசளி), ஆகு (எ.கா. பாழாகு), ஆக்கு (எ.கா. வீணாக்கு), ஆடு (எ.கா. போராடு), ஆற்று (எ.கா. பணியாற்று), இடு (எ.கா. கட்டளையிடு), உறு (எ.கா. நோயுறு), உறுத்து (எ.கா. பயமுறுத்து), ஊட்டு (எ.கா. ஊக்கமூட்டு), செய் (எ.கா. விசாரணை செய்), சொல் (எ.கா. கோள்சொல்), படு (எ.கா. பாடுபடு), படுத்து (எ.கா. உற்சாகப்படுத்து), பண்ணு (எ.கா. தயார் பண்ணு), பார் (எ.கா. வைத்தியம் பார்), புரி (எ.கா. வருகை புரி), போடு (எ.கா. மனுப்போடு), போ (எ.கா. சோரம்போ), விடு (எ.கா. மூச்சு விடு) போன்ற வினைகள் வினையாக்கிகளாகச் செயல்புரிகின்றன. கூட்டுவினைகளையும் உள்வட்டக் கூட்டுகள் (எ.கா. துண்டாக்கு, நாணமடை, விசாரணை செய்), வெளிவட்டக்கூட்டுகள் (எ.கா. மொட்டையடி, மன்றாடு, தலையிடு) எனப் பிரிக்கலாம்.

8.1.2.2. வினை+வினை

இத்தகைய கூட்டு வினைகள் தமிழில் தாராளமாய் உள்ளன. இக்கூட்டுவினைகளின் முதல் வினைப்பகுதி வினையடியாகவோ (எ.கா. ஒப்புக்கொள், பறிகொடு), செய்து வினைஎச்சமாகவோ (எ.கா. சொல்லிக்கொடு, கண்டுபிடி), செய்ய வினை எச்சமாகவோ (எ.கா. ஆறப்போடு,சாகடி) அமையலாம். வினையடி+ வினை கூட்டுகள் மிகக்குறைவே. அவற்றில் வரும் வினையடிகளைத் தொழில்பெயர்களாகக் கொள்ளவும் இடமுண்டு. செய்து வினை எச்சம்+வினை மற்றும் செய்ய வினை எச்சம்+வினை கூட்டுகள் பல உள்ளன. வினை+வினை கூட்டுகள் உள்வட்டமாகவோ (எ.கா. பிடித்துக்கொடு, தூக்கிஎறி), வெளிவட்டமாகவோ (கட்டிக்கொடு 'மணம் செய்வி', தட்டிக்கேள் 'கண்டி') அமையலாம்.

8.1.2.3. பெயரடை/வினையடை+வினை

புன்னகை, புன்சிரி, புனரமை என்ற கூட்டு வினைகளைப் பெயரடை+வினை கூட்டுகள் என்ற வடிவ

அடிப்படையில் கருத இடமிருந்தாலும் செயற்பாடு அடிப்படையில் வினையடை+வினை என்றும் கொள்ளலாம். இத்தகைய கூட்டு வினைகள் தமிழில் மிகக் குறைவு.

8.1.2.4. இடைச்சொல்+வினை

முன்னர் கூட்டுப்பெயர்களின் கீழ் கண்டது போல் பின்னேறு, முன்னேறு, வெளியேறு என்ற கூட்டு வினைகளை இடைச்சொல்+வினை என்றோ பெயர்ச்சொல்+வினை என்றோ வினையடை+வினை என்றோ அல்லது எல்லாவற்றிற்கும் பொதுவாக வேர்ச்சொல்+ வினை என்றோ கொள்ளலாம்.

8.1.3. கூட்டுப்பெயரடைகள்

கூட்டுப்பெயரடைகளைப் பல்வேறுபட்ட அமைப் பொழுங்கு மூலம் பெறலாம் என்றாலும் இக்கூட்டுகளைக் கூட்டுப்பெயரடைகளாகக் கொள்ளலாமா என்ற ஐயம் எழ இடம் உண்டு

8.1.3.1. பெயர்+பெயரடை

இந்த வகையான பெயரடைக் கூட்டுகள் மிக அரிதானவை. இரத்தச்சிவப்பான, நிலாவட்டமான, சூரியப்பிரகாசமான என்பனவற்றை எடுத்துக்காட்டுகளாய்க் கூறலாம்.

8.1.3.2. பெயரடை+பெயரடை

இந்த வகையான பெயரடைக் கூட்டுகளும் மிக அரிதானவை. இளஞ்சிவப்பான, பெருஞ்சிறப்பான, பெரும்பாலான, பெருவாரியான, முழுநிறைவான என்பனவற்றை எடுத்துக்காட்டுகளாய்க் காட்டலாம்.

8.1.3.3. பெயர்+பெயர்

இத்தகைய கூட்டுகள் செயற்பாட்டால் பெயரடையாக வந்தாலும் இவற்றின் இரண்டாவது அல்லது தலைப்புச்சொல் பெயரடையல்ல. இக்கூட்டுகள் வெளிவட்டக்கூட்டுகளாக அமையும். பெரும்பாலும் இவற்றைப் பெயரடை எனக் குறிப்பிடுவது தவறானதாக அமையலாம். ஏனென்றால்

இத்தகைய கூட்டுப்பெயரடை மற்றொரு பெயரின் பெயரடையாக வருவது என்பது மூன்று பெயர்கள் சேர்ந்து கூட்டாக வருவதை ஒக்கும். இம்மாதிரியான அடையாக வரும் கூட்டுகள் அவற்றின் உறுப்புகளாக வரும் சொற்களிலிருந்து தன்னிச்சையாக நிறுவப்பெற்று சொல் நிலைப்பெயராக்கம் பெறுகின்றன என்பது இதற்கு எதிரான வாதமாகும். இத்தகைய கூட்டுப்பெயரடைகளில் சில அடையாக மட்டுந்தான் பயன்படுத்தப்படுகின்றன. மற்றும் சில கூட்டுக்கள் அடையல்லாத கூட்டுப்பெயர்களிலிருந்து வேறுபட்ட அர்த்தம் உடையனவாக அமைகின்றன. பின்வரும் கூட்டுப்பெயரடைகள் இந்த வகுப்பில் படும் சிக்கல்களைத் தெளிவுபடுத்தும்:

இலைப்பச்சை (நிறம்), வாயாடிப் (பெண்), தெருபொறுக்கிப் (பயல்), பொன்மனச்(செம்மல்), திரைமறைவு(கூட்டம்), அட்டைக்கத்தி(வீரன்)

8.1.3.4. வினை+பெயர்

இத்தகைய கூட்டுகள் வெளிவட்டக்கூட்டுகளாக அமையும். இந்த வகுப்பில் படும் கூட்டுகளும் முந்தைய வகுப்பைப் போன்று பெயரின் முன்னர் பெயரடையாகத்தான் செயல்படுகின்றன. (எ.கா. தூங்கு மூஞ்சி (வாத்தியார்), அரிவாள்(மீசை), அழுமூஞ்சிப் (பயல்)).

8.3.1.3.5. பெயரடை + பெயர்

இக்கூட்டுப் பெயரடைகளும் வெளிவட்டக் கூட்டுகளாகும். இவற்றில் பெரும்பாலானவை அடையாகப் பயன்படுகையில் மாத்திரமே பெயரடையாக வருகின்றன. அல்லாவிடில் பெயராகத்தான் செயல்படுகின்றன. (எ.கா. கருங்கல்(மனசு), பசும்பொன் (உள்ளம்), செஞ்சோற்றுக் (கடன்).

8.3.1.6. இடைச்சொல்+பெயர்

இவ்வகையான கூட்டுக்களில் இடைச்சொற்கள் அல்லது வேர்ச்சொற்கள் பெயரைத் தொடர்ந்து வந்து மற்றொரு பெயரின் அடையாக அமையும். முன்னேற்றப்

(பாதை), வெளியுலகச் (செய்தி), பிற்போக்கு (வாதி), முன்னாள் (அமைச்சர்) என்பனவற்றை இதற்கு எடுத்துக் காட்டுகளாய்க் கூறலாம். இத்தகைய கூட்டுகளும் வெளி வட்டக் கூட்டுகளாகவே வரும்.

8.1.3.7. பெயர்+வினை

இவைகளும் வெளிவட்டக் கூட்டுகளாகவே வரும் (எ.கா. குடுமிப்பிடி(சண்டை), கல்எறி(தூரம்), கூப்பிடு (தூரம்).

8.1.3.8. வினை+வினை

அடிபிடி(சண்டை), தட்டுமுட்டு(சாமான்), எடுபிடி (வேலை) இவற்றை இக்கூட்டுப் பெயரடைகளுக்கு எடுத்துக் காட்டுகளாக்கக் கூறலாம்.

8.1.3.9. பெயரடை/வினையடை+வினை

திருநிறை(செல்வி), புன்னகை(மன்னன்) போன்ற கூட்டுப் பெயரடைகளை இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

8.1.4. கூட்டு வினையடைகள்

ஒரு கூட்டுப்பெயரின் முன் வினையடைப் பின்னொட்டுகளான ஆக, ஓடு, இல் போன்றவை சேரும்போது கூட்டு வினையடையாக்கம் நடைபெறும். (எ.கா. உறுதுணையாக, படுவேகமாக, ஏற்ற இறக்கத்தோடு, கழிவிரக்கத்தோடு, அசுரவேத்தில்).

இவை தவிர இசைக்காக அடுக்கி அல்லது இரட்டித்து வரும் கூட்டுவினையடைகளும் உண்டு. அவை பல விதமான அமைப்பொழுங்கில் வரும். (எ.கா. ஆறஅமர, போயும் போயும், வரவர, பேச்சோடுபேச்சாக, தெள்ளத்தெளிவாக, ஏடாகூடமாக, விறுவிறுப்பாக, தாறுமாறாக, கலகல வென்று).

8.2. முன்னொட்டாக்கம்

தமிழில் முன்னொட்டுகள் இல்லை என்றே கூறலாம். சமஸ்கிருத மொழியிலிருந்து கடன் வாங்கப் பெற்ற சில

சொற்களில் முன்னொட்டுகள் காணப்படும் (எ.கா. அ+சுத்தம் > அசுத்தம், அ+சாதாரணம் > அசாதாரணம்). அ-என்ற எதிர்மறைப்பொருளாக்கம் தரும் முன்னொட்டு தமிழில் விளைவாக்க ஒட்டாகப் பயன்படுத்தப்படவில்லை.

8.3. பின்னொட்டாக்கம்

தமிழில் பின்னொட்டாக்கம் பரவலாகக் காணப்படும் சொல்லாக்க முறையாகும். பல பின்னொட்டுகள் தமிழில் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு சொல்லாக்கத்தால் பெறப்படும் சொற்களின் வடிவவகுப்பு அடிப்படையில் பின்னொட்டாக்கம் வகைப்படுத்தப்பட்டுத் தரப்பட்டுள்ளன.

8.3.1. பெயராக்கம்

ஆக்கப்பெயர்களை அவற்றின் அடிப்படையாய் அமையும் சொற்களின் வடிவ வகுப்பு அடிப்படையிலும் ஆக்க ஒட்டுகள் அடிப்படையிலும் வகைபடுத்தி ஆயலாம்.

8.3.1.1. பெயரிலிருந்து பெயர்கள்

தமிழில் பின் ஒட்டுகளை அவற்றின் தன்மை கருதி இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். எடுத்துக்காட்டாக, சமையல்காரர் என்ற சொல்லில் வரும் காரர் என்ற சொல்லை ஒரு கட்டு வடிவம் என்ற காரணத்தால் ஒட்டு என்று எடுத்துக் கொண்டாலும், இவ்வொட்டைக் காரணம் போன்ற கட்டற்ற வடிவத்துடன் தொடர்புடைய ஒரு வடிவாகக் கொள்ள இடமிருப்பதாலும் பொருண்மை அடிப்படையில் (இலக்கண வடிவத்திற்கு மாறான) ஒரு பொருள் வடிவமாக இருப்பதாலும் இதையும் இது போன்றவற்றையும் பிற ஒட்டுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது வருணனைக்கு உகந்ததாகப்படுகிறது. இவற்றைப் பேரொட்டுகள் என்று குறிப்பிடலாம்.

உயர்திணைப் பெயராக்கம்

-காரன், -ஆளன், -ஈனன், -சீலன், -சந்தன், -வந்தன் என்பன ஆண்பால் ஒருமை பேரொட்டுகளாகவும் -காரி, -ஆட்டி, -கை, -வதி என்பன பெண்பால் ஒருமை பேரொட்டுகளாகவும் -ஆள், -ஆளி, -சாலி, -வாதி, -மானி,

-மான், -தாரி, -ஏறி என்பன பெண்பாலுக்கும் ஆண்பாலுக்கும் பொதுவான பேரொட்டுகளாகவும் *-காரர், -ஆளர், -ஈனர், -சீலர், -வந்தர்* என்பன உயர் ஒருமைப் பேரொட்டுகளாகவும் பெயர்களோடு இணைந்து பெயராக்கம் செய்கின்றன. மேற்சொன்ன பேரொட்டுகளை ஒரே இனத்தைச் சார்ந்த மூன்று வகைப் பெயரொட்டுகளாகப் பிரிக்கலாம்: 1) ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று திரிபுகள் பெறும் உயர்திணைப் பெயரொட்டுகள், 2) ஆண்பால், பலர்பால் என இரு திரிபுகள் பெறும் உயர்திணை ஒட்டுகள், 3) திரிபுபெறா உயர்திணைப் பேரொட்டுகள். கீழ்காணும் அட்டவணையில் தந்துள்ள எடுத்துக்காட்டுகள் மேற்சொன்ன செய்திகளைத் தெளிவுபடுத்தும்.

பெயரடி	ஆண்பால் பெயராக்கம்	பெண்பால் பெயராக்கம்	பலர்பால் பெயராக்கம்	திரிபுறாப் பெயராக்கம்
வேலை	வேலைக்காரன்	வேலைக்காரி	வேலைக்காரர்	—
பேச்சு	பேச்சாளன்	—	பேச்சாளர்	—
மணம்	மணவாளன்	மணவாட்டி	மணவாளர்	—
மதி	மதிஈனன்	—	மதிஈனர்	—
சத்தியம்	சத்தியசீலன்	—	சத்தியசீலர்	—
சத்தியம்	சந்தியசந்தன்	—	சத்தியசந்தர்	—
தனம்	தனவந்தன்	—	தனவந்தர்	—
சத்தியம்	சத்தியவந்தன்	சத்தியவதி/ சத்தியவதை	சத்தியவந்தர்	—
சமையல்	—	—	—	சமையலாள்
நோய்	—	—	—	நோயாளி
புத்தி	—	—	—	புத்திசாலி
சமயம்	—	—	—	சமயவாதி
நீதி	—	—	—	நீதிமான்
பட்டம்	—	—	—	பட்டதாரி
சோம்பு	—	—	—	சோம்பேறி

ஆளி, வாதி, தாரி, ஏறி என்பன முறையே *ஆள், வாதி, தரி, ஏறு* என்ற வினைகளின் கர்த்தாப் பெயராக்கங்களாகும்.

பேரொட்டுகள் அல்லாத பிற ஒட்டுகளும் உயர்திணைப் பெயர்களை ஆக்கவல்லன. *-அன், ஆன், -ஓன்* என்பன ஆண்பால் ஒருமைக்கும் *-அள், -ஆள், -அத்தி, -அச்சி, -அட்டி, -த்தி, -ச்சி, -இ, -ஐ* என்பன பெண்பால் ஒருமைக்கும் *-அர், -ஆர், -ஓர்* என்பன உயர் ஒருமைக்கும் ஒட்டுகளாக வந்து பெயர்களோடு சேர்ந்து பெயராக்கம் செய்கின்றன. இவ்வொட்டுகள் இணைக்கப்பெறும் பெயர்ப்பகுதிகளை முழுச்சொல், வேர்ச்சொல் என இருவகைகளாகப் பிரிக்க வேண்டியதிருக்கிறது. *அரசு* என்ற முழுச்சொல்லுடன் திணை-இடம்-எண்-பால் ஒட்டுகள் சேர்ந்து *அரசன், அரசி, அரசர்* என பெயராக்கம் செய்ததாய்க் கொள்ளலாம். ஆனால் *புலவன், புலவர், புலமை* என்ற சொற்களைப் *புலம்* 'அறிவு' என்ற சொல்லோடு தொடர்புபடுத்தி *புலம்+அன் > புலவன், புலம்+அர் > புலவர், புலம்+ஐ > புலமை* எனப் பெயராக்கம் செய்யவேண்டுமா அல்லது *புலவன், புலவர், புலமை, புலம்* என்ற நான்கு சொற்களையும் *புல* என்ற வேர்ச்சொல்லிலிருந்து பின்னொட்டாக்கத்தால் பெற வேண்டுமா என்பது விவாதத்திற்குரியது. இதுபோலவே *கணவன், கணவர்* என்ற சொற்களை *கண* என்ற வழக்கிலில்லாத வேர்ச் சொல்லிலிருந்து பின்னொட்டாக்கத்தால் பெறவேண்டுமா அல்லது அவற்றை ஒருபன் சொற்களாகக் கொள்வதா என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று. மேற்கண்ட எல்லா ஆக்கச்சொற்களும் அகராதிச் சொற்களாகச் சொல் நிலையாக்கம் பெற்றுள்ளமையால் அவற்றை ஆக்கச்சொற்களாகக் கருதாது திணை-இடம்-எண்-பால்அடையாளப்படுத்தப்பட்ட ஒருபன் சொற்களாகக் கொள்ளலாம். இப்படிச் செய்வதால் ஒரே வேர்ச் சொல்லிருந்து பெறப்பட்ட பல ஆக்கச்சொற்களைப் பொருண்மை அடிப்படையில் தொடர்புபடுத்த இயலாது போகும்.

மேற்சொன்ன ஆக்கங்களின் பகுதிகளை (stems) ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்று திரிபுகளை ஏற்கும் பகுதிகளாகவும் ஆண்பால், பெண்பால் என்ற இரண்டையும் ஏற்கும் பகுதிகளாகவும் ஆண்பால், பலர்பால் என்ற இரண்டையும் ஏற்கும் பகுதிகளாகவும், பலர்பால் மாத்திரம் ஏற்கும் பகுதிகளாகவும் பெண்பால் மாத்திரம் ஏற்கும் பகுதிகளாகவும், கீழ்வரும் அட்டவணையில் தந்துள்ளபடி பிரித்துப் பகுப்பாய்வு செய்யலாம்.

பெயரடி	ஆண்பால்	பெண்பால்	பலர்பால்	ஒட்டுக்கள்
தலை	தலைவன்	தலைவி	தலைவர்	-அன் : -இ : -அல்
குற	குறவன்	குறத்தி	குறவர்	-அன் : -த்தி : -அர்
இடை	இடையன்	இடைச்சி	இடையர்	-அன் : -ச்சி : -அர்
செம்பட	செம்படவன்	செம்படவத்தி	செம்படவர்	-அன்:-அத்தி: -அர்
தமிழ்	தமிழன்	தமிழச்சி	தமிழர்	-அன் : -அச்சி : -அர்
ஆசிரி-	ஆசிரியன்	ஆசிரியை	ஆசிரியர்	-அன் : -ஐ : -அர்
புல-	புலவன்	—	புலவர்	-அன் : – : -அர்
கலை	கலைஞன்	—	கலைஞர்	-ஞன் : – : -அர்
மக-	மகன்	மகள்	—	-அன் : -அள் : –
கண-	கணவன்	—	கணவர்	-அன் : – : -அர்
மனை	--	மனைவி	—	– : -இ : –
கிராமம்	கிராமத்தான்	கிராமத்தாள்	கிராமத்தார்	-ஆன் : -ஆள்: -ஆர்
வண்	வண்ணான்	வண்ணாத்தி	வண்ணார்	-ஆன் : -ஆத்தி : -ஆர்
பிர்	பிரான்	பிராட்டி	—	-ஆன் : -ஆட்டி : –
மச்-	மச்சான்	மச்சாள்	—	-ஆன் . -ஆள் : –
தட்டச்சு	—	—	தட்டச்சர்	– : – : -அர்

மேற்கண்ட ஒட்டுகள் தவிர -இ என்ற ஒட்டு சில பெயர்களுடனும் சேர்த்து உயர்திணைப் பெயர்களை ஆக்கவல்லன. இவ்வொட்டு பெண்பால் வேறுபாட்டை

காட்டாத ஒட்டாகும் (எ.கா. பாவம்+இ > பாவி, விவசாயம்+இ> விவசாயி, உபகாரம்+இ> உபகாரி).

8.3.1.2. வினையிலிருந்து பெயர்கள்

இது மிகப் பொதுவாகவும் பரவலாகவும் காணப்படும் சொல்லாக்க வகையாகும். வினையிலிருந்து பின்னொட்டால் ஆக்கப்பெறும் பெயர்களை இரண்டு பெரிய வகுப்புகளாகப் பிரிக்கலாம்: (1)வினையடிகளிலிருந்தான பெயராக்கம், (2) காலங்காட்டும் அல்லது எதிர்மறை காட்டும் பெயரெச்சப் பகுதிகளிலிருந்தான பெயராக்கம்.

8.3.1.2.1. வினையடிகளிலிருந்து பெயர்கள் அல்லது வினையடிப்பெயர்கள்

வினையடிப் பெயராக்கத்தை இரண்டாகப் பிரிக்கலாம்: (1) எல்லா வினையடிகளுடனும் சேர்ந்து வரும் ஒட்டுருபன்களாலான பெயராக்கம், (2) எல்லா வினையடிகளடனும் சேராத ஒட்டுருபன்களாலான பெயராக்கம். இந்த இரு பிரிவின் கீழ் வரும் ஒட்டுகள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

எல்லா வினைகளுடனும் சேரும் ஒட்டுருபன்கள்	எல்லா வினைகளுடனும் சேராத ஒட்டுருபன்கள்
1. -தல் ~ -த்தல்	-வு, -பு, -ப்பு, -சி,
2. -அல் ~ -கல் ~ -க்கல்	-ச்சி, -அம், -இ,
3. –கை ~ –க்கை	–ச்சல், –தி, –வி, –ஐ,
4. –ஆமை ~ –காமை ~ –க்காமை	–த்தை, –ச்சு போன்றன.

முதல் வகுப்பில் தந்துள்ள ஒவ்வொரு உருபனின் மாற்று வடிவங்களின் துணைநிலை வருகையை தமிழ் வினைகளின் கால ஒட்டு அடிப்படையிலான வகுப்புகளின் அடிப்படையில் விளக்கலாம். கீழ் வரும் அட்டவணை கால ஒட்டுகள் அடிப்படையிலான ஏழு வகுப்புகளாகும்.

வரிசை எண் மற்றும் எடுத்துக்காட்டுகளாகத் தந்துள்ள கால ஒட்டால் திரிபுற்ற மாதிரி வினை வடிவுகள்	இறந்தகால ஒட்டு	நிகழ்கால ஒட்டு	எதிர்கால ஒட்டு
1. செய்: செய்தான், செய்கிறான், செய்வான்	-த்-	-கிற்-	-வ்-
2. புகழ்:புகழ்ந்தான் புகழ்கிறான், புகழ்வான்	-ந்த்-	-கிற்-	-வ்-
3. ஓடு:ஓடினான் ஓடுகிறான், ஓடுவான்	-இன்-	-கிற்-	-வ்-
4. கல்:கற்றான், கற்கிறான், கற்பான்	-த்-	-கிற்-	-ப்-
5. நில்:நின்றான், நிற்கிறான், நிற்பான்	-ந்த்-	-கிற்-	-ப்-
6. படி:படித்தான் படிக்கிறான், படிப்பான்	-த்த்-	-க்கிற்-	-ப்ப்-
7. நட:நடந்தான், நடக்கிறான், நடப்பான்	-ந்த்-	-க்கிற்-	-ப்ப்-

1,2,3 ஆகிய வகுப்புகளின் மற்றும் 4-ஆம் வகுப்பின் ஒரு பகுதியில் படும் வினைகள் -தல், -அல், -கை, -ஆமை என்ற மாற்று வடிவுகளை எடுக்கும்; 4-ஆம் வகுப்பின் மீதிப் பகுதியில் படும் வினைகள் மற்றும் 5-ஆம் வகுப்பில் படும் வினைகள் -தல், -கல், -கை, -காமை ஆகிய மாற்று வடிவுகளை எடுக்கும். இவ்வகையிலான பெயராக்கம் வினைப் பொருளையும் பங்கெடுப்பாளர் அமைப்பையும் (argument structure) தக்க வைக்கும் பெயராக்கம் ஆகும் (எ.கா. அதிகாலையில் எழுந்து மாணவர் தம் பள்ளிப் பாடங்களைப் படித்தல் நல்லது.) இந்நிகழ்வுகளில் சில பொருள்நிலை யாக்கம் பெற்றும் வரும்.

கீழ்க்காணும் அட்டவணை மாற்றுவடிவுகளின் வருகை முறையைக் காட்டும்.

மாற்றுவடிவு களின் குழுமங்கள்	அவைகள் ஒட்டாக வரும் வினைவகுப்புகள்	ஒட்டாக்க வடிவு களின் எடுத்துகாட்டுகள்
1.தல்/அல்/ கை/ஆமை	1,2,3 ஆகிய வகுப்பு களிலும், 4 ஆம் வகுப்பின் ஒரு பகுதி யிலும் வரும்	செய்தல், செய்யல், செய்யாமை
2.தல்/கல்/ கை/காமை	4 ஆம் வகுப்பின் மீதிப் பகுதியிலும், 5 ஆம் வகுப்பிலும் வரும் வினைகள்	கற்றல், கற்கல், கற்கை, கற்காமை
3.த்தல்/க்கல்/ க்கை/க்காமை	6 ஆம், 7 ஆம் வகுப்பில் வரும் வினைகள்	படித்தல், படிக்கல் படிக்கை,படிக்காமை

எல்லா வினையடிகளுடனும் சேராத ஒட்டுக்களின் ஆக்கங்கள் விளைவாக்கமற்றதாய்த் தோன்றினாலும், அவற்றில் சில ஒட்டாக்கங்கள் (ஒலியனியல் அடிப்படையிலோ சொல்லியல் அடிப்படையிலோ தொடரியல் அடிப்படையிலோ) விதிமுறைக்குட்பட்டவை என்று தோன்றுகிறது. இருக்கிற வடிவுகளை மட்டும் எடுத்துக்கொள்ளாமல் வரத்தக்கதான வடிவுகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் விளைவாக்கம் பற்றிப்பேச வேண்டும். மேலும் ஒலியனியல், சொல்லியல், தொடரியல், பொருளியல், பயன்வழியியல் கட்டுப்பாடுகளைக் கணக்கில் கொள்ள வேண்டும். வினையடிகளின் உள்வகுப்புகள் (எடுத்துக்காட்டாக காலத்திரிபு அடிப்படையிலான ஏழு வகுப்புகள்), ஏற்கனவே இருக்கும் வடிவு (அல்லது வடிவுகள்) புதிய வடிகள் உருவாகுவதைத் தடுத்தல் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். விளைவாக்கம் ஒரு எளிய செயற்பாடல்ல; இது சிக்கலான காரணிகளை உள்ளடக்கியதாகும். பின்வரும் செய்திகள் வினையடிகளிலிருந்தான ஒட்டுப்பெயராக்கங்களை விதிகளில் கொண்டு வரத்தக்கதான தற்காலிகத் தன்மையான (ஒரு சில மாற்றங்கள் வரத்தக்கதான) கூற்றுகளாகும்:

1. -ப்பு ~ பு 6-ஆம் 7-ஆம் வகுப்புகளில் படும் ஒரு உள் வகுப்பில் அடங்கும் வினைகளுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யும்.

எ.கா.

படி+ப்பு > படிப்பு

நட+ப்பு > நடப்பு

2. -வு 2-ஆம் வகுப்பின் பாற்படும் ஒரு உள்வகுப்பில் அடங்கும் வினைகளுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யும்.

எ.கா.

அறி+வு > அறிவு

வாழ்+வு > வாழ்வு

3. -சி ~-ச்சி 2-ஆம் வகுப்பின் கீழ் அடங்கும் ஒரு உள் வகுப்பில் வரும் ழ், ள் ஈற்று வினைகளுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யும்.

எ.கா.

புகழ்+ச்சி > புகழ்ச்சி, ஆள்+சி > ஆட்சி

4. -ச்சல் இரண்டாம் வகுப்பின் பாற்படும் -உயிர்நெடில் -ய் என முடியும் அசை அமைப்புள்ள வினைகளுடனும், -ஐ என முடியும் வினைகளுடனும் சேர்ந்து பெயராக்கம் செய்யும்.

எ.கா.

காய்+ச்சல் > காய்ச்சல்

அலை+ச்சல் > அலைச்சல்

5. -அம் மூன்றாம் மற்றும் ஆறாம் வகுப்பில் அடங்கும் ஒரு உள்வகுப்பில் வரும் வினைகளுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யும். இது மேலும் இரண்டு உள்வகுப்புகளாக வேறுபடும்.

அ. -கு/டு/று என முடியும் வினைகளுடன் -அம் சேர்ந்து

-க்கம்/ட்டம்/ற்றம் எனப் பெயராக்கம் செய்யும்.

எ.கா.

பெருகு+அம் > பெருக்கம்

ஓடு+அம் > ஓட்டம்

கூடு+அம் > கூட்டம்

மாறு+அம் > மாற்றம்

ஆ. உயிர் - ஓரிட மூக்கொலி - ஓரிட அடைப்பொலி -உ என முடியும் அசை அமைப்புள்ள வினைகளுடன் -அம் சேர்ந்து உயிர்-ஓரிட அடைப்பொலி -ஓரிடஅடைப்பொலி -அம் எனப் பெயராக்கம் செய்யும்.

எ.கா.

தூங்கு+அம் > தூக்கம்

அஞ்சு+அம் > அச்சம்

6. -இ என்ற ஒட்டு 3-ஆம் வகுப்பின் பாற்படும் ஒரு உள்வகுப்பு வினைகளுடன் சேர்ந்து கருவிப்பெயராக்கமும் கர்த்தாப் பெயராக்கமும் செய்யும்.

எ.கா.

காட்டு+இ > காட்டி அளவு+இ > அளவி

ஓட்டு+இ > ஓட்டி நக்கு+இ > நக்கி

இவ்வகையிலான பெயராக்கம் வினைப் பொருளையும் பங்கெடுப்பாளர் அமைப்பையும் தக்க வைக்காது. ஆக்கப்பொருள் ஊகிக்க இயலாததாய் அமையும். இவை சொல்நிலையாக்கம் பெற்றவை. எ.கா. படிப்பு, படுக்கை, முயற்சி, நாற்றம்.

8.3.1.2.2. பெயரெச்சப் பகுதிகளிலிருந்து பெயர்கள்

இவ்வகைப் பெயராக்கத்தை (1) அது-தொழிற் பெயராக்கம், (2) வினையாலணையும் பெயராக்கம் என இரண்டாகப் பகுக்கலாம்.

8.3.1.2.2.1. அது– தொழிற்பெயராக்கம்

-தல்~-த்தல் என்ற தொழிற்பெயர் ஒட்டுக்கிணையான -அது காலங்காட்டும் ஒட்டுகள் அடங்கிய வினைப் பகுதிகளோடு சேர்ந்து பெயராக்கம் செய்கின்றது. இது வினைப்பொருளைத் தக்க வைக்கும் பெயராக்கமாகும் எ.கா. நான் நேற்று புத்தகம் படித்தது. இது விளைவாக்கம் மிகுந்ததாய் காணப்படுகிறது.

எ.கா.

படித்த+அது > படித்தது, படிக்கிற+அது >படிக்கிறது, படிப்ப+அது> படிப்பது, படிக்காத + அது> படிக்காதது.

8.3.1.2.2.2. வினையாலணையும் பெயராக்கம்

இடம்-எண்-பால் குறிக்கும் கலவை ஒட்டுகள் பெயரெச்சப் பகுதிகளுடன் சேர்ந்து வினையாலணையும் பெயராக்கம் செய்யும். எ.கா. வந்த+அவன் > வந்தவன், படித்த+அவன் > படித்தவன், கண்ட+அவன் > கண்டவன், கொடுத்த+அது> கொடுத்தது.

இவ்வகையிலான பெயராக்கம் வினைப்பொருளையும் பங்கெடுப்பாளர் அமைப்பையும் தக்கவைக்கும் பெயராக்கம் ஆகும் (எ.கா. அவன் நேற்று நடந்த கொலையைப் பார்த்தவன்.). வினையாலணையும் பெயர்கள் தத்தம் வினைகளுடன் வேறுபட்ட செயற்பாடு உறவுகள் கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக, கண்டவன்என்பது காண் என்ற வினையுடன் எழுவாய் உறவோ செயற்படுபொருள் உறவோ கொண்டிருக்கலாம். கொடுத்தது என்பது கொடு என்ற வினையோடு எழுவாய் உறவோ செயப்படுபொருள் உறவோ கொடை உறவோ கொண்டிருக்கலாம். சில வினையாலணையும் பெயர்கள் சொல்நிலையாக்கம் பெற்றுள்ளன (எ.கா. படித்தவர், படிக்காதவர்).

8.3.1.3.பெயரடையிலிருந்து பெயர்கள்

திணை-இடம்-எண்-பால் குறிக்கும் கலவை ஒட்டுகள் (ஐம்பால் விகுதிகள்) பெயரடைகளுடன் சேர்ந்து பெயராக்கம்

செய்யும். எ.கா. பெரிய+அவன்> பெரியவன், நல்ல+அவன் > நல்லவன், அழகான+அவன் > அழகானவன், மானமுள்ள+அவன்> மானமுள்ளவன்.

8.3.1.4.இடைச்சொற்களிலிருந்து பெயர்கள்

மரபிலக்கணத்தார் நிறப்பண்பு, சுவைப்பண்பு, வடிவப்பண்பு, அளவுப்பண்பு என நால்வகைப் பண்புப் பெயர்களையும் அவற்றின் விகுதிகளையும் பின்வருமாறு தந்துள்ளனர்: நன்மை: மை, தொல்லை: ஐ, மாட்சி: சி, மாண்பு: பு, மழவு: உ, நன்கு : கு, நன்றி: றி, நன்று: று, நலம்: அம், திட்பம்: அம்.

பண்புப் பெயர் விகுதிகள் வரும் பகுதிகள் எந்தச் சொல் வகுப்பைச்சார்ந்தவை என்பது தெளிவாக இல்லை. நாம் நன், தொல், மாட், மான், முழு, நன், நல், திட் என்பவைகளைப் பண்புப் பெயராக்கப் பகுதிகளாகக் கொள்ளலாம். இப்பகுதிகள் பெயர், வினை, இடை, உரி என்ற மரபிலக்கணச் சொல் வகுப்புகளுள் எந்த வகுப்பைச் சார்ந்தவை என்பதில் ஐயப்பாடு வருகிறது. இவைப் பலவகைச் சொல்லாக்கங்களுக்குப் அடியாக வருவதால் நாம் இவற்றை இடைச்சொற்கள் என்று குறிப்பிடுகிறோம். மேற்கண்ட பண்புப் பெயர்களைப் பகுக்க இயலாத ஒருபன் சொற்களாக எடுப்பதில் தடையேதுமில்லை. ஏனென்றால் அவைகள் அகராதிச் சொற்களாக சொல் நிலையாக்கம் பெற்றுவிட்டன. எனவே மேற்சொன்ன பண்புப் பெயர் விகுதிகளை ஒட்டுகளாகப் பகுதிகளிலிருந்து பிரித்துப் பார்ப்பது தேவையில்லாதது போலிருந்தாலும் சொற்களின் பொருள் தொடர்புகளைச் சொல்லாக்கங்கள் மூலம் தொடர்புபடுத்திக்காட்டுவது சிறந்ததாகத் தோன்றுகின்றது. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதை நமக்கு தெளிவாக்கும்.









மரபிலக்கணப்படி நற்றமிழ் என்பதை நன்மை+தமிழ் என்றும், பெரியர் என்பதை பெருமை+அர் என்றும் முத்தமிழ் என்பதை மூன்று+தமிழ் என்றும் பிரிக்கலாம். சந்திவிதிகளின்படி நன்மை என்பது நல் என்றும் பெருமை என்பது பெரி என்றும் மூன்று என்பதை மு என்றும் மாறியதாகக் கொள்ளவேண்டும். இவ்வாறு கொள்வது நன்/நல், பேர், மு போன்ற வேர்ச்சொற்களிலிருந்து (வடிவ அடிப்படையில்) அல்லது பெயரடைச் சொற்களிலிருந்து (செயற்பாடு அடிப்படையில்) வேறு ஆக்கச் சொற்கள் பெறுவதையொக்கும்.

இதுபோலவே முன், பின் என்பதையும் வேர்ச் சொற்களாகக் கொண்டு பின்வரும் சொல்லாக்கங்களை விளக்கலாம்.





இது போலவே வடதிசை தென்திசை கீழ்திசை, மேல்திசை, வடகிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு என்ற கூட்டுப்பெயர்களில் வரும் வட, தென், கீழ், மேல் என்ற வேர்ச்சொற்களுடன் க்கு ~ கு என்ற ஒட்டு சேர்த்து வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு எனப் பெயராக்கம் பெற்றதாய்க் கொள்ளலாம். இவ்வாறல்லாமல் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற முழுச் சொற்களிலிருந்து வடக்கு+திசை > வடதிசை, தெற்கு+திசை > தென்திசை, கிழக்கு+திசை > கீழ்திசை, மேற்கு+திசை > மேல்திசை, வடக்கு+கிழக்கு> வடகிழக்கு, தெற்கு+கிழக்கு> தென்கிழக்கு, வடக்கு+மேற்கு> வட மேற்கு, தெற்கு+மேற்கு> தென்மேற்கு எனக் கூட்டுப் பெயராக்கங்கள் நடைபெற்றதாய்க் கொண்டால்

'திசையொடு திசையும் பிறவும் சேரின்

நிலையீற்(று) உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்

றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற'

என்ற நன்னூல் சூத்திரம் தரவேண்டியதிருக்கும்.

8.3.2.வினையாக்கம்

8.3.2.1.பெயர்களிலிருந்து

பெயர்களிலிருந்தான பின்னொட்டாக்க வினையாக்கம் விளைவாக்கமானதல்ல. சமஸ்கிருத மொழியிலிருந்து கடன்வாங்கப் பெற்ற சில பெயர்கள் -இ உருபு பெற்று வினையாக்கம் அடைகின்றன. எ.கா. விசார(ணை)+இ> விசாரி, ஆரம்ப(ம்)+இ>ஆரம்பி, ஜீரண(ம்)+இ>ஜீரணி, பாவ(ம்)+இ>பாவி.

தற்கால ஜனரஞ்சகக் கதையாசிரியர்கள் பெயர்களை வினைகளாக மிகச் சிறிய அளவில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்கள். அவைகள் பொதுமக்களால் பயன்படுத்தப்படாமையால் வழக்கிழந்து விடுகின்றன. (எ.கா. உயிர்>உயிரி 'உணர்வுபெறு', பெயர்>பெயரி 'பெயர் கூறு', நகைச்சுவை >நகைச்சுவை 'நகைச்சுவை கூறு', ஆபரணம்>ஆபரணி 'ஆபரணங்கள் அணிவி').

8.3.2.2.வினைகளிலிருந்து

பிற வினைகள் தன் வினைகளிலிருந்து ஒட்டுக்களைப் கொண்டோ ஒலியன்மாற்றம் பெற்றோ அல்லது தம்மைத் தொடர்ந்துவரும் கால இடநிலை ஒட்டுக்களை வேறாகத் தேர்ந்தேடுத்தோ ஆக்கம் பெறுகின்றன. ஒட்டுப் பெறா பிற வினையாக்கங்களையும் 'X' என்ற ஆழ்நிலை ஒட்டால் ஏற்பட்ட மாற்றங்களாகக் கொள்ளலாம்.(எ.கா. ஆகு+ X> ஆக்கு, அடங்கு+ X >அடக்கு, சேர்+ X >சேர்).

பிற வினை ஒட்டுக்களான -பி, -வி, -கு, -சு, -டு, -து, -பு, -று என்பன ஒரு குழும தன்வினைகளுடன் சேர்ந்து பிறவினையாக்கம் செய்கின்றன. எ.கா. உண்+பி > உண்பி, செய்+வி > செய்வி, போ+ கு > போக்கு, பாய்+சு > பாய்ச்சு, உருள்+டு > உருட்டு, காண்+டு > காட்டு, நட+து > நடத்து, எழு+பு > எழுப்பு, அகல்+று > அகற்று.

ஒரு குழும தன்வினைகளின் ஈற்றயல்வல்லின மெய் இரட்டித்து பிற வினையாக்கம் பெறுகின்றன (எ.கா. ஆகு> ஆக்கு, ஓடு > ஓட்டு, மாறு > மாற்று)

ஒரு குழும தன்வினைகளின் ஈற்றயல் மெல்லின மெய் வல்லின மெய்யாகத் திரிந்து பிறவினையாக்கம் பெறுகின்றன. (எ.கா. திருந்து > திருத்து, அடங்கு > அடக்கு, திரும்பு > திருப்பு).

ஒரு குழும தன் வினைகள் தம்மைத் தொடர்ந்து வரும் கால இடைநிலை ஒட்டுக்களை வேறாகத் தேர்ந்தெடுத்து பிறவினையாக்கம் செய்கின்றன. (எ.கா. சேர்ந்தான்- சேர்த்தான், சேர்கிறான்- சேர்க்கிறான், சேர்வான்- சேர்ப்பான்).

8.3.3. பெயரடையாக்கம்

பெயரடைகளைத் தமிழில் ஒரு சொல்வகையாக ஏற்றுக்கொள்வதில் பல தமிழ் இலக்கண வல்லுநர்களுக்குத் தயக்கம் இருக்கிறது என்பதை முன்னர் பார்த்தோம். இருப்பினும் கோதண்டராமன் (1989) போன்றோர் தற்காலத் தமிழுக்குச் சொல்வகை அல்லது இலக்கணக்கூறுகள் வகுக்கையில் பெயரடைகளையும் ஒரு சொல்வகையாகக்

குறிப்பிடுகின்றனர். தற்காலத் தமிழுக்குப் பெயரடை மறுக்க இயலாத சொல்வகையாகும்.

8.3.3.1. வேர்ச்சொற்களிலிருந்து

வேர்ச்சொற்களிலிருந்து பெயர்கள் என்ற பகுதியில் வேர்ச்சொற்கள் பல பெயரடைகளாகப் பயன்படுத்தப் படுவதை நாம் கண்டோம். (எ.கா. நன்கொடை, இன்றமிழ், சிற்றூர், பழஞ்செருப்பு). இத்தகைய நன், இன், சிற், பழம் என்ற வேர்ச்சொல் வடிவ பெயரடைகளை மூன்று வகையாக ஆராயலாம்: 1) அவற்றை நல்ல, இனிய, சிறிய, பழைய என்ற முழு வடிவப் பெயரடைகளின் மாற்றுருவாகக் (சுருங்கிய உருவாகக்) கொள்ளலாம். 2) நன்மை, இனிமை, சிறுமை, பழமை என்ற பண்புப் பெயர்களின் தொகை வடிவமாகவோ மாற்றுவடிவமாகவோ சுருங்கிய வடிவமாகவோ கொள்ளலாம். 3) நன், இன், சிற், பழம் என்று வேர்ச்சொல் வடிவப் பெயரடைகளாகக் கொள்ளலாம். மூன்றாவது கருத்தைத்தான் நாம் தெரிவு செய்கிறோம். அதன்படி நல்ல, இனிய, சிறிய, பழைய என்ற பெயரடைகளை முறையே நல், இன், சிற், பழம் என்பதிலிருந்து -அ (~ -இய~ -ஐய) என்ற பெயரடை ஒட்டைச் சேர்த்து ஆக்கப்பெற்றவைகளாகக் கொள்ளலாம். சுடு (எ.கா. சுடுசோறு), குளிர் (எ.கா. குளிர்காற்று), ஊறு (எ.கா. ஊறுகாய்) என்ற வினையடிகளும் (வினைத்தொகைகளும்) பெயரடைகளாக வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

8.3.3.2. பெயர்களிலிருந்து

-ஆன (ஆகு என்ற வினையின் பெயரெச்ச வடிவம்) மற்றும் உள்ள (உண்டு என்ற வினையின் பெயரெச்ச வடிவம்) என்ற பேரொட்டுகள் பெயர்களுடன் சேர்ந்து பெயரடையாக்கம் செய்கின்றன. (எ.கா. அழகு+ஆன > அழகான, அழகு+உள்ள > அழகுள்ள, சத்து+ஆன > சத்தான, சத்து+உள்ள > சத்துள்ள)

-ஆம், -ஆவது என்ற பேரொட்டுகள் எண்ணுப் பெயரொட்டுக்களுடன் சேர்ந்து பெயரடையாக்கம் செய்யும். (எ.கா. ஒன்றாம், ஒன்றாவது, இரண்டாம், இரண்டாவது)

8.3.3.3. வினைகளிலிருந்து

சில பெயரெச்சங்கள் பெயரடைகளாகச் சொல் நிலையாக்கம் அடைந்துள்ளன. (எ.கா. போன(வாரம்), கெட்ட(பையன்), அடுத்த (வீடு), இருண்ட(வீடு), போகும்(இடம்).)

8.3.4. வினையடையாக்கம்

வினையடையாக்கங்களை விளைவிலா ஆக்கம் விளைவாக்கம் என இரு வகையாகப் பிரித்து வருணனை செய்வது நல்லதாகத் தோன்றுகிறது.

8.3.4.1. விளைவிலா ஆக்கம்

திரிபு பெற்ற மற்றும் திரிபு பெறாத பெயர்களும், வினைகளும் வினையடைகளாகச் செயலாக்கம் பெறுகின்றன. இவ்வாக்கங்கள் விளைவாக்கமில்லாததாலும் இவ்வாக்கச் சொற்கள் வினையடைகளாகச் சொல் நிலைபேறாக்கம் பெற்றுவிட்டமையாலும் நாம் இவற்றை இயற்சொற்களாகக் கருதவேண்டி இருக்கிறது. மெல்ல, நன்கு, மீண்டும், இனியும், இன்னும், அடிக்கடி, மறுபடியும் போன்ற வினையடைகளை முறையே மெல்+அ(வினையடி+ எச்சஒட்டு), நன்+கு, மீண்டு+உம் (வினைஎச்சம் +உம்), இனி+உம், இன்+உம், அடிக்கு+அடி, மறுபடி+உம் என்று பிரித்துச் சொல்லாக்கங்களை விவரிக்க முடியும் என்றாலும், இவ்வாக்கங்கள் விளைவாக்கமில்லா ததாலும், இவ்வாக்கச் சொற்கள் சொல் நிலைபேறாக்கம் பெற்றுவிட்டதாலும் இவற்றை ஆக்கச் சொற்களாகக் கருதாது இயற்சொற்களாகக் கருதுவதே சிறந்தது. இவை தவிர கீழ்வரும் ஆக்கச் சொற்களையும் இதே காரணத்திற்காகப் பிரிக்கத் தேவையில்லாத சொற்களாகக் கருதுவதே சிறந்தது.

8.3.4.1.1. பெயர்களிலிருந்து

முன், பின், மேல், வெளி, உள், எதிர், இடை, நடு போன்ற வேர்ப் பெயர்ச் சொற்கள் -ஏ என்ற உருபேற்று முன்னே, பின்னே, மேலே, வெளியே,.உள்ளே, எதிரே, இடையே, நடுவே என வினையடைகளாகச் செயலாக்கம் பெறுகின்றன. மேலும் வெளி, எதிர், இடை, நடு என்பன இல்

வேற்றுமையுருபு ஏற்று வெளியில், எதிரில், இடையில், நடுவில் எனவும், முன், பின் என்பன ஆல் உருபேற்று முன்னால், பின்னால் எனவும் வினையடைகளாகச் செயலாக்கம் பெறுகின்றன.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற திசைப் பெயர்கள் -ஏ என்ற உருபேற்று கிழக்கே, மேற்கே, வடக்கே, தெற்கே என வினையடைகளாகச் செயலாக்கம் பெறுகின்றன.

8.3.4.1.2. வினைகளிலிருந்து

சில வினைகளின் வினையெச்ச வடிவங்கள் வினையடைகளாகச் செயலாக்கம் பெறுகின்றன. எ.கா. பார்த்து (பார்+த்து 'எச்சரிக்கையாக'), பிந்தி (பிந்து+இ), 'பின்னே' முந்தி (முந்து+இ) 'முன்னே', விரைந்து (விரை+ந்து 'விரைவாக').

8.3.4.1.3. சுட்டு மற்றும் வினா அடிகளிலிருந்து

அ,இ என்ற சுட்டு அடிகளும், எ என்ற வினா அடியும் படி, போது, பொழுது என்ற பெயர்களுடன் சேர்ந்து அப்படி, இப்படி, எப்படி, அப்போது, இப்போது, எப்போது, அப்பொழுது, இப்பொழுது, எப்பொழுது என வினையடையாக்கம் செய்கின்றன. மேற்சொன்ன பெயர்களின் குழுமத்தில் ஆறு, விதம் என்பனவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம் (எவ்வாறு, எவ்விதம்).

மேற்சொன்ன சுட்டு மற்றும் வினா அடிகள் -ங்கு என்னும் இட உருபுடனும் -ன்று என்னும் கால உருபுடனும் சேர்ந்து அங்கு, எங்கு, இங்கு எனவும் அன்று, இன்று, என்று எனவும் வினையடையாக்கம் செய்கின்றன.

8.3.4.2 விளைவாக்கம்: பெயரிலிருந்து

ஆக, ஆய் (ஆகு என்ற வினையின் வினையெச்ச வடிவங்கள்) என்ற பெயரொட்டுகள் பெயர்களுடன் சேர்ந்து வினையடையாக்கம் செய்வது விளைவாக்கமானதாகும். எ.கா. அழகு+ஆக > அழகாக, அழகு+ஆய் > அழகாய், இனிமை + ஆக > இனிமையாக, இனிமை + ஆய் > இனிமையாய்.

8.4. மாற்றம்

ஒரு சொல் வடிவ வகுப்பு எந்தவித வடிவ மாற்றமும் அடையாமல் வேறு ஒரு சொல் வடிவ வகுப்பாக ஆக்கம் அடைவது மாற்றமாகும். இந்தச் சொல்லாக்கத்தை ஒட்டாக்கங்களிலிருந்து வேறுபடுத்த வேண்டுமா என்பதில் ஐயம் உள்ளது. மாற்றத்தையும் ஒருவித ஒட்டாக்கமாகக் கருத இடமுண்டு. மாற்றத்தைப் பூஜ்ய ஒட்டாக்கம் என்றும் கூறலாம்.

சில வேர்ச்சொற்கள் பெயர்களாகவும் வினையடைகளாகவும் பின்னிலைச் சொல்லுருபுகளாகவும் (எ.கா. பின், முன், வெளி, உள்), பல பெயர்கள் எந்தவித ஒட்டையும் பெறாது பெயரடைகளாகவும் (எ.கா. ஆண் (குழந்தை), பச்சைப் (புடவை), இரண்டு (பெட்டிகள்)), வினையடைகளாகவும் (எ.கா. நன்கு (படித்தான்), ஆறுமணி நேரம் (தூங்கினாள்)), சில வினைகள் எந்தவித ஒட்டையும் பெறாது பெயர்களாகவும் (எ.கா. அடி, உதை, பிடி), வினை எச்ச வடிவங்கள் வினையடைகளாகவும் (எ.கா. பிந்தி, முந்தி, விரைந்து) மாற்றம் பெறுவதைப் பார்த்தோம். பல இடங்களில் இத்தகைய மாற்றம் எளிதாகவும் முறையானதாகவும் இருப்பதால் இம்மாற்றங்களைச் சொல்லாக்கம் என்பதற்குப் பதிலாகத் தொடரியல் அடிப்படையிலான செயற்பாடு மாற்றம் எனக் கூறலாம்.

தமிழில் எல்லாச் சொற்களையும் பெயர், வினை என்ற இரு சொல் வடிவ வகுப்புகளில் அடக்கிவிடலாம் என்பர். சிலர் ஒரு படி மேல் சென்று எல்லாத் தமிழ்ச் சொற்களும் பெயர்களே என்று வாதிடுவர். இச்செய்திகள் இங்கு நினைவுகூறத்தக்கவை.

8.5. பின்னாக்கம்

ஆங்கிலத்தில் editor என்ற பெயரிலிருந்து edit என்ற வினையும் contraception என்ற பெயரிலிருந்து contracept என்ற வினையும் ஆக்கப்படுவதைப் பின்னாக்கம் (back-formation) என்பர். தமிழில் இத்தகைய மாதிரிப் பின்னாக்கங்கள் இல்லையென்றாலும் சமஸ்கிருதத்திலிருந்து

கடன் வாங்கப்பட்ட சில பெயர்களிலிருந்து வினைகள் ஆக்கப் பெறுவதை ஒருவித பின்னாக்கம் எனக் கூறலாம். (எ.கா. விசாரணை (பெ) > விசாரி (வி), போதனை (பெ) > போதி (வி).) விசாரணை, போதனை என்பன விசார, போத எனப் பின்னாக்கம் பெற்று -இ என்ற வினையாக்கி மூலம் வினையாக்கம் பெற்றன எனக் கொள்ளலாம். மரபிலக்கணத்தார் கருத்தை ஏற்றுக்கொண்டால் ஓர், இரு என்பன ஒன்று, இரண்டு என்பதிலிருந்து பின்னாக்கத்தால் (சந்தியால் -ன்று, -ண்டு என்பன கெட்டு) விளைந்ததாயும் நல், பெரு என்பன நன்மை, பெருமை என்பதிலிருந்து பின்னாக்கத்தால் (சந்தியால் மை கெட்டு) விளைந்ததாயும் வட, கீழ், மேல், தென் என்பன முறையே வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்பனவற்றிலிருந்து (கு கெட) பின்னாக்கத்தால் விளைந்ததாகவும் கொள்ளலாம். இத்தகைய ஆக்கங்களைப் பின்னாக்கங்களாகக் கொள்ளலாகாது என்று நாம் முன்னர் பார்த்தோம்.

8.6. கத்தரிப்பாக்கம்

ஒரு அகராதிச் சொல் (தனி அல்லது கலப்பு) குறுகி அதே சமயம் அதன் பொருண்மையும் வடிவ வகுப்பும் மாறாது வருவது கத்தரிப்பாக்கமாகும் (எ.கா. mimeograph > mimeo, pornography>pron). தமிழில் இம்மாதிரி கத்தரிப்பாக்கங்கள் இல்லையென்றாலும் எளிமை கருதிய பல எளிமையாக்கங்களைக் காணலாம். எ.கா. ஆட்சியாளர் > ஆட்சியர், முதலமைச்சர்> முதல்வர், செயலாளர்> செயலர், உயிரினங்கள் > உயிரிகள், வெப்ப அளவு கருவி > வெப்ப அளவி. இடச் சிறப்புப் பெயர்கள் ஒருவிதமான கத்தரிப்பாக்கம் பெறுகின்றன. எ.கா. புதுக்கோட்டை > புதுகை, புதுச்சேரி > புதுவை, திருநெல்வேலி > நெல்லை, கோயம்புத்தூர் > கோவை, தஞ்சாவூர் > தஞ்சை. பின்னாக்கத்தையும் ஒருவித கத்தரிப்பாக்கமாகக் கொள்ளலாம்.

8.7. கலப்பாக்கம்

ஒரு சொல்லின் ஒரு பாகமும் மற்றொரு சொல்லின் ஒரு

பாகமும் சேர்ந்து ஒரே சொல்லாக ஆக்கம் பெறுவது கலப்பாக்கமாகும். (எ.கா. baloon+parachute >ballute, breakfast+lunch > brunch). தமிழில் இத்தகைய கலப்பாக்கம் இல்லை. ஆனால் ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதச் சொல்லுடன் தமிழ்ச் சொல்லோ விகுதியோ சேர்ந்து ஆக்கம் பெறும் கடன் கலப்புகள் தமிழில் காணப்படுகின்றன. (எ.கா. ரயில் நிலையம், போலீஸ்+ஆர் > போலீசார், பிரதம்+அர் > பிரதமர்).

8.8. தலைப்பெழுத்தனாக்கம்

ஒரு தலைப்பு அல்லது தொடரில் வரும் சொற்களின் முதல் (தலைப்பு) எழுத்துக்களைக் கொண்டு ஆக்கப்பெறும் சொல்லைத் தலைப்பெழுத்தன் என்பர் (எ.கா. திராவிட முன்னேற்றக் கழகம் > தி.மு.க., ஐக்கிய நாடுகள் > ஐ.நா., கிறிஸ்து பிறந்த பின் > கி.பி.). ஆங்கிலத் தலைப் பெழுத்தன்கள் தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றன. (எ.கா. யுனஸ்கோ, டி.வி., கி.மீ., கி.கி.)

8.9. சொல் உருவாக்கம்

எந்தவித உருபனியல், ஒலியனியல் அல்லது எழுத்தியல் காரணமும் இல்லாமல் சொற்களை உருவாக்குதல் சொல் உருவாக்கங்கள் ஆகும். ஆங்கிலச் சொல் Kodak என்பது இத்தகைய சொல் உருவாக்கமாகும். இத்தகைய சொல் உருவாக்கம் தமிழில் இல்லை எனலாம்.

8.10. முடிவுரை

தமிழில் சொல்லாக்கங்களில் மிகவும் பரவலானவை கூட்டாக்கங்களும் பின்னொட்டாக்கங்களுமாகும். பலபுதிய சொற்கள் கூட்டாக்கங்களால் பெறப்படுகின்றன. பெயர்+பெயர் கூட்டாக்கம் விளைவாக்கம் மிகுந்ததாகும். புதிய வினைகள் பெயர் + வினை என்ற கூட்டாக்கத்தால் பெறப்படுகின்றன. பல நுண்மைப் பெயராக்கங்களுக்கு வினையடிகள் காரணமாகின்றன. ஆரனோப் (1976:35) சொல்லாக்க விதிகளெல்லாம் விருப்பு விதிகள் என்பார். சொல்லாக்கத்திற்குப் பதிலாக ஒரு வருணனையைப்

பயன்படுத்தலாம் (எ.கா. மூதாட்டி = முதுமை அடைந்த பெண்). பெயர்களைப் பொறுத்தமட்டில் பல இடங்களில் சொல்லாக்கம் நிகழாவிடினும் பெயர்த்தொடர்கள் சொல்நிலையாக்கம் பெறுகின்றன (எ.கா. புதுப்பெண், நல்லநாள், கெட்ட பெண்). சொல்லன்கள் வரலாற்று அடிப்படையில் எந்தச் சொல்லாக்கச் செயற்பாங்குமின்றி உருவாகலாம் என்ற உண்மையையும் சொல்லாக்கத்தை தவிர்க்கலாம் என்ற உண்மையையும் சொல்லாக்கம் பற்றி ஆராயும்போது மறக்கலாகாது (Bauer.L. 1983:241).

9

தமிழ்ச் சொல்லாக்கத்தின் பரிமாணம்

9.1.முகவுரை

முதல் ஆறு பகுதிகளிலும் விவாதிக்கப்பட்ட பொதுவான தகவல்கள் எல்லாம் எடுத்துக்காட்டுகளால் விளக்கப்பட்டாலும், அவை பெரும்பாலும் கோட்பாட்டைப் பற்றியவை தான். பகுதி எட்டு தமிழ்ச்சொல்லாக்கத்தின் வகைப்பாட்டில் கவனம் செலுத்தியதேயன்றி தமிழச்சொல்லாக்கத்தின் பலவிதப்பட்ட பரிமாணத்தில் கவனம் செலுத்தவில்லை. இந்தப் பகுதியில் சொல்லாக்கத்தைப் பற்றி விரிவாகக் காண்பதில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்பது மட்டுமல்லாமல் கோட்பாட்டு அடிப்படையான சிறப்புக்கூறுகள் எவ்வாறு நடைமுறைக்குப் பொருந்துகிறது என்பதிலும் அதிக அழுத்தம் தரப்படும். உண்மைத் தகவல்கள் அடிப்படையில் மேலும் கோட்பாடு அடிப்படையிலான சிறப்புக்கூறுகள் வெளி வரலாம்.

இந்தப் பகுதியில் ஒவ்வொரு பிரிவும் சொல்லாக்க நிகழ்வுகளின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டது மட்டுமன்றி சொல்பதிவுகளின் விரிவுபடுத்தத்திற்காகச் சான்றாயமையும் தகவல்கள் எழுப்பிய சிக்கல்கள்

விவாதிக்கப்படும். குறிப்பிட்ட சொல்லாக்கத்தின் விளைவாக்கத்தின் வரையறையின் அளவெல்லையைக் காட்ட எடுத்துக்காட்டுகள் தரப்படும். அண்மைக்காலப் புதுச்சொல்லாக்கங்கள் ஒரு செயற்பாங்கின் விளைவாக்கத்தைக் காட்ட எடுத்துக்காட்டுகளாய்த் தரப்படும்.

இந்தப் பகுதியில் சொல்லப்படும் சொல்லாக்க செயற்பாங்குகளின் விவரணைகளின் வடிவமைப்பு (format) பற்றிய விளக்கங்கள் தேவைப்படும். ஆக்கமுறை இலக்கணத்தார் பயன்படுத்தும் 'விதி' என்ற கலைச்சொல்லின் கண்டிப்பான அர்த்தத்தில் இங்கு விதிகள் குறிப்பீடு செய்யப்படுவதில்லை. ஒட்டுகளை அறிமுகப்படுத்தும் விதிகள் தொடர் அமைப்பு விதிகளா மாற்று விதிகளா அல்லது ஏதாவது வேறு குறிப்பிட்ட குறிமானம் தேவைப்படுமா என்பது குறித்த வினாக்கள் இங்கு எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. மாறாக 6.8 இல் தரப்பட்டுள்ள அமைப்பு ஒழுங்கைப் பின்பற்றி சொற்பதிவுகள் தர வேண்டி செய்யப்படும் குறிப்பீட்டின் தன்மை அடிப்படையிலான விஷயங்களை மையமாக்கியே விளக்கங்கள் தரப்படும். சொல் விளைவாக்கத்தின் வரையறை எல்லையைப் பற்றிய விஷயங்களும் எவ்வளவு சரியாக ஒட்டுகளின் வெளிப்படையான பொருண்மைகளைக் குறிப்பீடு செய்ய இயலும் என்பதும் விவாதிக்கப்படும். சொல்லாக்கத்தின் பரிமாணம் இங்கு பெயராக்கம், வினையாக்கம், பெயரடையாக்கம், வினையடையாக்கம் என்று நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

9.2. பெயராக்கம்

பெயர்கள் ஒட்டாக்கத்தாலும் கூட்டாக்கத்தாலும் ஆக்கப்படுகின்றது. ஒட்டாக்கத்தில் முன்னொட்டாக்கம் தான் விளைவாக்கம் உள்ளது; பின்னொட்டாக்கம் விளைவாக்க முள்ளது அல்ல. கூட்டாக்கம் முன்னொட்டாக்கத்தை விட கூடுதல் விளைவாக்கமுள்ளது. சொற்பண்புள்ள சில கட்டுருபன்களும் பெயராக்கம் செய்யும். ஒட்டுகளுக்கும் விகுதியாக வரும் கட்டுருபன்களுக்கும் செயற்பாடு அளவில்

வேறுபாடு இல்லாத காரணத்தால் ஒன்றெனக் கொள்ள இயலும்.

9.2.1. பின்னொட்டாக்கம்

பின்னொட்டுப் பெயராக்கம் பற்றிய வகைப்பாட்டியல் விளக்கம் 8.3.1. -இல் தரப்பட்டுள்ளது. அங்கு விரிவாகக் கூறப்படாத சில செய்திகள் இங்கு தரப்பட்டுள்ளன. பின்னொட்டுப் பெயராக்கிகள் அடிப்படையில் விளக்கம் தரப்பட்டுள்ளது. ஒரு சில விளைவாக்கமுள்ள பின்னொட்டுப் பெயராக்கங்களே விவரிக்கப்பட்டுள்ளது.

9.2.1.1. காரன்/ காரி/ காரர்

இவைப் பெயருடன் சேர்ந்து பெயராக்கம் செய்யும் விகுதிகளாகும். *காரன், காரி, காரர்* என்ற ஒரு குழுவில் படும் இம்மூன்று விகுதிகளும் முறையே ஆண்பால், பெண்பால் இருபாற் பொதுப்பெயர்களை ஆக்க வந்தவையாகும் (எ.கா: வேலை+காரன்>வேலைக்காரன், வேலை+காரி > வேலைக்காரி, வேலை+காரர்>வேலைக்காரர்). இவை மிகுந்த விளைவாக்கமுள்ள விகுதிகளாகும். இவை 'நபர்' என்ற பொருளில் தாம் சேர்ந்து வரும் பெயருக்கு ஏற்ப ''உடைமை, உரிமை, உறவு அல்லது தொடர்பு, தொழில் அல்லது ஆகுதல்'' (மறைமலை, 1984: 83) ஆகியவற்றைக் குறிப்பீடு செய்யும். ''ஆட்சித்துறைச் சொற்கோவையில் உடைமையைக் குறிக்கும் வகையில் - *காரன், காரி, காரர்* விகுதிகள் பயன்படுத்தப்படவில்லை. -*காரி* விகுதியைப் பயன்படுத்தி உருவாக்கிய சொற்களும் ஆட்சித்துறை சொற்கோவையில் இடம்பெறவில்லை'' என்று மறைமலை (1984: 83) குறிப்பிடுகிறார். கலைச்சொல்லாக்கமல்லாமல் இவ்வாக்கச் சொற்கள் பேச்சு வழக்கிலும் சாதாரண எழுத்து வழக்கிலும் செல்வாக்கு பெற்றவை. இந்தப் பெயராக்கிகளுக்கும் அவை சேரும் பெயர்களுக்கும் இடையில் பல விதமான உறவுகள் நிறுவப்படுப்படலாம். இருப்பினும் சூழல் அடிப்படையில் இவற்றில் ஒன்று கவனக்குவிப்பு செய்யப்படும்.

எ.கா.

வண்டிக்காரன் - 'வண்டிக்கு உரிமையாளன்'

'வண்டியை ஓட்டுபவன்'

'வண்டியில் உட்கார்ந்திருப்பவன்'

சில ஆக்கங்கள் சொல் நிலையாக்கம் பெற்றவை.

எ.கா.

வேலை+காரி > வேலைக்காரி

சமையல்+காரன் > சமையல்காரன்

பின்வரும் சொற்பதிவு தற்காலிகமானதாகும் (tentative):

1. ஒலியனியல் குறிப்பீடு:

கூறு வடிவு: காரன்

2. உருபனியல் பண்புகள் :

விகுதி சேர்ந்த சொல்லாக்க வடிவு பெயர்ச் சொல்வகையைச் சாரும்.

ஆக்கப்பெற்ற சொற்கள் வேற்றுமைக்கு வேண்டி திரிபாக்கமுறும்.

ஆக்கப்பெற்ற சொற்கள் ஆண்பாலை உணர்த்தும்.

[+மனித இனம், +ஆண்பால்] என்ற பொருளுணர்த்தும் பெயர் வடிவங்கள் விளையும்.

3. தொடரியல் பண்புகள்:

ஆக்கப்பெற்ற சொற்கள் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பன வாக்கியத்தில் வரும் இடங்களில் வரும். அவை வினையின் எல்லாப் பங்கெடுப்பாள ராகவும் உருப்படுத்தம் பெறும்.

4. பொருண்மையியல் குறிப்பீடு:

5. நடையியல் பண்புகள்:

6. தொடர்புள்ள சொல்லன்கள்:

-காரர், -காரி என்ற விகுதிகளுடன் தொடர்புடையது. காரன் என்பதால் ஆக்கப்பட்ட எல்லாப் பெயர்களுடனும் தொடர்புடையது.

7.அடியின் வரையறை எல்லை:

பெரும்பாலும் பொதுப் பெயர்ச்சொற்களுடனேயே சேர்ந்து சொல்லாக்கம் செய்யும்.

9.2.1.2. ஆளர்/ ஆள்/ஆளி

இவ்விகுதிகளும் முன்னர் கண்ட மூவிகுதிகள் போன்று பெயர்களுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யவல்லன. ஆனால் இவை மூன்றுமே இருபாற் பொதுப் பெயர்களை ஆக்கவல்லன. இவை சேர்ந்து வரும் பெயருக்குத் தகுந்தவாறு செய்தல், செயலாற்றல், பணியாற்றல், கையாள்தல், இயக்குதல், உரிமை, உடைமை இவற்றைக் குறிப்பீடு செய்யும். (எ.கா. செயலாளர், கண்காணிப்பாளர், மேற்பார்வையாளர், தயாரிப்பாளர், விற்பனையாளர், காசாளர், பொருளாளர், பொறியாளர், உரிமையாளர், பண்பாளர்). -ஆள் பெரும்பாலும் கடைநிலைப் பணிகளை குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது (எ.கா. கையாள், காவலாள்). ஒரே பெயருடன் -ஆள், -ஆளர் விகுதிகள் சேர்க்கப்பட்டாலும் -ஆள் கடைநிலைப் பணிகளைக் குறிக்கவும், ஆளர் உயர்நிலைப் பணிகளைக் குறிக்கவும் பயன்படுத்தப் படுகின்றன.

எ.கா.

-ஆள்	-ஆளர்
உதவியாள்	உதவியாளர்
காப்பாள்	காப்பாளர்
மேலாள்	மேலாளர்

ஆளி உயர்நிலை, கடைநிலை என்ற சிக்கல் எழாத பொதுத்தன்மை வாய்ந்த பெயர்ச் சொற்களை உருவாக்கப்

பயன்படுகிறது. (எ.கா. குற்றவாளி, கொலையாளி, கூட்டாளி, முதலாளி, தொழிலாளி, நெசவாளி, நோயாளி, பங்காளி)

9.2.1.3. தாரர்/ தாரி

தாரர், தாரி என்ற விகுதிகளும் 'நபர்' என்ற பொருளில் பெயர்களுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யவல்லன. இவை இரண்டும் இஸ்லாமியர் தொடர்பால் தமிழை வந்தடைந்தவை.

எ.கா. ஜமீன்தார், ஜமேதார், ஜாகீர்தார், சுபேதார், தாசில்தார், மிராசுதார், வேடதாரி, பட்டதாரி

-தார் என்பது தமிழின் -அர் விகுதி பெற்று தாரர் என ஆயிற்று. (எ.கா. அடைமானதாரர், ஆயக்கட்டுதாரர், குடிவாரதாரர், தாவாதாரர், பங்குதாரர், பாத்தியதாரர், பிணைதாரர், மனுதாரர், விண்ணப்பதாரர்). தாரர் என்ற ஒட்டு புதிய கலைச் சொற்களை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

9.2.1.4. –நர்

நர் என்பதும் 'நபர்' என்ற பொருளில் வரும் விகுதியாகும். இது வினையுடன் சேர்ந்து பெயராக்கம் செய்கிறது. இது வினையடியுடன் நேராகச் சேர்வது போல் இருந்தாலும், உண்மையில் செய்யும் என்னும் வாய்ப்பாட்டு பெயரெச்சத்துடன் (எ.கா. ஓட்டும், திருத்தும், நடத்தும், பயிற்றும், விளக்கும்) சேர்ந்து பெயராக்கம் செய்வதாகும் (எ.கா. ஓட்டுநர், திருத்துநர், நடத்துநர், பயிற்றுநர், விளக்குநர்) என்று மறைமலை கருதுகிறார். ஆக்கப்பெற்ற மனிதப்பெயர் வினையடிக்கு எழுவாயாக வருவதாகும். வினையும் செயப்படுபொருள் குன்றாவினையாக (செ.பொ.கு.ஆ.வி.) அமையும். அதாவது இவ்வாக்கத்திற்கான வரையறை எல்லை பின்னால் தந்துள்ளது போன்றமையும்.

$$\left(\begin{array}{l} + \quad \text{வினை} \\ + \quad \text{செ.பொ.கு.ஆ.வினை} \\ + \left[\begin{array}{l} +\text{பெயர்} \\ +\text{மனிதவினம்} \end{array}\right] \quad \text{எழுவாய்} \end{array}\right)$$

9.2.1.5. ஞர்

-ஞர் என்ற பின்னொட்டும் 'நபர்' என்ற பொருளில் வரும். ஞர் என்ற பின்னொட்டு ஐ, இ என முடியும் பெயர்ச்சொற்களுடன் இணைந்து பெயராக்கம் செய்யும். ஆக்கப்பட்ட பெயர்கள் மனிதப்பெயர்கள் ஆகும் (எ.கா. கலைஞர், கவிஞர், வழிஞர், ஆய்வினைஞர், செயற்பொறிஞர்). இவ்வொட்டும் புதிய கலைச்சொற்களை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

9.2.1.6. இ

இவ்வொட்டு ஒரு குழுமப் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து பெண்பாற் பெயரைக் குறிப்பீடு செய்யும். (எ.கா. குருடி, மலடி, அரசி). இத்தகைய ஒட்டுகளால் ஆக்கப்பெற்ற எல்லாப் பெண்பாற் பெயர்களும் சொல்நிலையாக்கம் பெற்றவையாய்த் தோன்றுகிறது; -இ பெண்பாற் பெயராக்க ஒட்டாய் புதிய சொற்களை ஆக்குவதாகத் தெரியவில்லை. இவ்வொட்டு -வி, -த்தி, -ச்சி, -அத்தி, -ஐ, -அள், -ஆத்தி, -ஆட்டி, -ஆள் என்பன போன்ற பெயராக்க ஒட்டுகளுடன் ஒருவித துணைநிலை வருகை முறையில் இருப்பதாய்த் தோன்றுகிறது (பார்க்க 8.3.1.1.).

வேறு சூழலில் இது பெண்பாலைக் குறிப்பீடு செய்யாது 'நபர்' என்ற பொருளில் வரும். இச்சூழலில் இது பெயருடனோ (எ.கா. நிர்வாகம்+இ > நிர்வாகி, பயணம்+இ> பயணி, பதில்+இ > பதிலி) வினையுடனோ (எ.கா. நொண்டு+இ > நொண்டி, தெண்டு+இ > தெண்டி, தூங்கு+இ > தூங்கி) சேர்ந்து நபராக்கம் அல்லது கருத்தாவாக்கம் செய்யும்.

மற்றொரு சூழலில் இது கருவிப் பெயராக்க ஒட்டாய் வரும். இச்சூழலில் இதன் அடி வினையாயும் (எ.கா. வெட்டு+இ > வெட்டி, தூக்கு+இ > தூக்கி, இடுக்கு+இ > இடுக்கி, இயக்கு+இ> இயக்கி, உயர்த்து+இ > உயர்த்தி, ஊக்கு+இ > ஊக்கி) தொழிற்பெயராயும் (எ.கா. அளவு+இ > அளவி, சுரப்பு+இ > சுரப்பி, செயல்+இ > செயலி) வரலாம்.

-இ கருவிப் பெயராக்க ஒட்டாக விளைவாக்கமுள்ளதாய்த் தெரிகிறது.

9.2.1.7. –இயல்

-இயல் என்ற உருபன் தனி வருகை நிலையிழந்து ஒரு குழுமப் பெயர்களுடன் கட்டுருபனாகச் (பின்னொட்டாக) சேர்ந்து 'கல்வி' என்ற பொருளில் பெயராக்கம் செய்கிறது (எ.கா. அறிவு+இயல்> அறிவியல், புவி+இயல்> புவியியல், மொழி+இயல் > மொழியியல்). இவ்விகுதி மிகுந்த விளைவாக்கமுள்ளதாய்த் தெரிகிறது.

9.2.1.8. –அகம்

-அகம் என்ற உருபனும் தன் தனிவருகை நிலையிழந்து கட்டுருபனாக 'இடம்' என்ற பொதுப்பொருளில் பெயருடன் சேர்ந்து பெயராக்கம் செய்கிறது (எ.கா. அச்சு+அகம் > அச்சகம், நூல்+அகம் >நூலகம், உணவு+அகம் > உணவகம், தூதர்+அகம்>தூதரகம்). இவ்விகுதி இடங்கள், நிறுவனங்கள், செயலகங்கள் இவற்றிற்கான பெயராக்கம் செய்ய பயன்படுகிறது. இது மிகுந்த விளைவாக்கமுள்ள விகுதியாகும்.

9.2.1.9. –தல் ~ த்தல்

-தல், -த்தல் என்ற துணைநிலை வருகை முறையில் வரும் வினைமூலப் பெயராக்க ஒட்டுகள் எல்லா வினைகளுடனும் சேர்ந்து பெயராக்கம் செய்வன என்று முன்னர் பார்த்தோம். இவ்வாக்கச் சொற்களில் பல பொருண்மையளவில் சொல் நிலையாக்கம் அடைந்துள்ளன (எ.கா. தேர்தல், மாறுதல், ஒம்புதல், கூடுதல், கெடுதல்).

9.2.1.10. –அல் ~ –கல் ~ –க்கல்

-அல், -கல், -க்கல் என்ற துணை நிலை வருகை முறையில் வரும் வினைமூலப் பெயராக்க ஒட்டுகள் மேற்கண்ட ஒட்டுகள் போலவே எல்லா வினைகளுடனும் சேர்ந்து பெயராக்கம் செய்யவல்லன. இவ்வாக்கச் சொற்களில் சில பொருண்மையளவில் சொல்நிலையாக்கம் பெற்றுள்ளன (எ.கா. ஆடல், பாடல், ஊடல், கூடல், மோதல், குவியல், பொரியல், வற்றல்).

9.2.1.11. –கை ~ –க்கை

இவ்வொட்டுகளும் துணைநிலை வருகை முறையில் வினையடியுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யவல்லன. இவ்வாக்கச் சொற்களிலும் சில பொருண்மை அடிப்படையில் சொல் நிலையாக்கம் அடைந்துள்ளன (எ.கா. படுக்கை, வருகை, இருக்கை, அறிக்கை, சேர்க்கை).

9.2.1.12. –ஆமை ~ –காமை ~ –க்காமை

இவ்வொட்டுகளும் துணைநிலை வருகை முறையில் வினையடியுடன் சேர்ந்துப் பெயராக்கம் செய்யும். இவ்வாக்கச் சொற்களிலும் பொருண்மைச் சொல்நிலையாக்கச் சொற்களைக் காணலாம் (எ.கா. பொறாமை, தள்ளாமை, போதாமை, ஒவ்வாமை, தீண்டாமை).

9.2.1.13. –ப்பு

இவ்வொட்டும் வினைகளுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யும். இவ்வாக்கச் சொற்களில் பொருண்மை அளவிலான பல சொல் நிலையாக்கங்களை காணலாம் (எ.கா. படிப்பு, அமைப்பு, அரிப்பு, அறிவிப்பு, இருப்பு, உழைப்பு, இணைப்பு, நினைப்பு). முன்னர் கூறியதுபோல் ஒட்டாக்க வினைகள் உருவாகாத பட்சத்தில் -ப்பு என்பதன் ஆக்கப்பரப் பெல்லையும் வரையறுக்கப்பட்டுவிடப்படுவதால் -ப்பு என்ற ஒட்டை விளைவாக்கமாய்க் கொள்ள இயலுமா என்ற ஐயம் எழுகிறது. புதிய கூட்டாக்க வினைகள் உருவாக்கப் பெறும் காரணத்தால் புதிய வினை மூலப் பெயர் வடிவுகள் உருவாக வாய்ப்புண்டு. -ப்பு புதிய கலைச்சொற்கள் உருவாக்கத்தில் பயன்படுத்தப்படுகின்றது (எ.கா. ஒப்பளிப்பு, ஒருமிப்பு).

9.2.1.14. –வு

-வு என்ற ஒட்டும் வினையுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யவல்லது. இவ்வாக்கச் சொற்களில் சில பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் அடைந்துள்ளமையால் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ளன (எ.கா. ஈவு, ஆய்வு, அளவு, இசைவு, துணிவு, நினைவு, சாவு, தொய்வு, வாழ்வு,

சோர்வு). வு என்பதும் புதிய கலைச்சொற்கள் உருவாக்கத்தில் பயன்படுத்தப்படுகின்றது (எ.கா. அகழ்வு, அலைவு).

9.2.1.15.–வை

-வை என்ற ஒட்டும் விளையுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யவல்லது. இவ்வாக்கச் சொற்களில் சில பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கமடைந்து அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ளன (எ.கா. தீர்வை, போர்வை, பறவை, மிதவை, கலவை). -வை என்பதும் புதிய கலைச் சொல்லாக்கத்தில் பெயராக்கியாகப் பயன்படுத்தப் படுகின்றது (எ.கா. அரைவை, இழுவை, கொடுவை).

9.2.1.16. –மானம்

-மானம் என்ற ஒட்டு வினைகளுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யவல்லது. இதனால் ஆக்கப்பெற்ற சொற்களும் பொருண்மை சொல்நிலையாக்கம் பெற்று அகராதியில் இடம் பெற்றுள்ளன (எ.கா. தேய்மானம், வருமானம், தீர்மானம், சேர்மானம், பெறுமானம்). -மானம் என்பதும் புதிய கலைச் சொல்லாக்கத்தில் பெயராக்கியாகப் பயன்படுத்தப்படுகின்றது (எ.கா. அரிமானம், அழிமானம், செய்மானம்).

9.2.1.17. –அம்

இவ்வொட்டு பெயர்ச்சொற்களுடனும் வினைச் சொற்களுடனும் சேர்ந்து பெயராக்கம் செய்யவல்லது. வினைச்சொற்களுடன் சேர்ந்து ஆக்கப்பெற்ற பெயர்கள் பல பொருண்மைச் சொல்நிலையாக்கம் பெற்றுள்ளன (எ.கா. அழுத்தம், இயக்கம், ஏக்கம், நோக்கம், தேக்கம், வீக்கம், வழக்கம், தூக்கம், வணக்கம், எண்ணம், ஊக்கம், தொடக்கம், நாட்டம், விருப்பம், நீக்கம், நெருக்கம்). பெயர்ச்சொற்களுடன் பெயராக்கம் செய்த ஆக்கச் சொற்களுக்கு எடுத்துக்காட்டுகளாய் பின்வருவன அமையும் (எ.கா. ஆணையம், பச்சையம், கரியம்). இவ்வொட்டு காட்டும் பொதுப் பொருண்மைக் குறிப்பீட்டைக் காண்பது கடினம். கலைச் சொல்லாக்கத்தில் -அம் விளைவாக்கமுள்ள பெயராக்கியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

9.2.1.18. –மம்

-மை ஒட்டாக்கப் பண்புப்பெயர்களின் (எ.கா. உரிமை, குடிமை, தனிமை, நுண்மை, பெருமை) அடிகளுடன் -மம் சேர்ந்து பெயராக்கம் செய்யும் (உரி+மம்> உரிமம், குழு+மம்> குழுமம், தனி+மம் > தனிமம், நுண்+மம் > நுண்மம், பெரு+மம்> பெருமம்).

இவ்வொட்டு ஒரு குழுமக் கட்டுருபுச் சொற்களுடனும் பெயர்களுடனும் வினைகளுடனும் சேர்ந்து பெயராக்கம் செய்யவல்லது (எ.கா. மின்+மம் > மின்மம், கனி+மம் > கனிமம், கரை+மம்> கரைமம்).

-மம் கலைச்சொல்லாக்கத்திற்குத் துணைபுரியும் விளைவாக்கமுள்ள ஒட்டாகும். கலைச்சொற்களெல்லாம் பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் பெற்று அகராதியில் பட்டியலிடப்படும்போது இம்மாதிரியான ஒட்டுகளை விளைவாக்கமுள்ளவை என்று கூற இயலுமா என்ற ஐயம் எழலாம். கலைச்சொல்லாக்கம் என்பது சொல்நிலையாக்கம் என்று பொருள்படும் போது கலைச்சொல்லாக்கத்தை விளைவாக்கம் என்று கூறத் தயக்கம் வரலாம். பொருண்மைச் சொல் நிலையாக்கத்தைக் கணக்கில் கொள்ளாத பட்சத்தில் இவ்வாக்கங்களை விளை வாக்கங்களாய்க் கொள்ள இயலும். எனவே ஒரு ஆக்கம் விளைவாக்கமுள்ளதா என்னும் போது வடிவாக்கங்களைத் தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அது பொருண்மை அடிப்படையில் சொல் நிலையாக்கம் அடையத்தக்கது என்பது இரண்டாவது பட்சமானது. இங்கு கூறப்பட்ட வாதம் இதற்கு முன் நாம் கண்ட வினைமூலப் பெயராக்கங்களுக்கும் பொருந்தும்.

9.2.1.19. பாடு

படு என்ற வினையிலிருந்து பெயராக்கம் செய்யப்பெற்ற பாடு தன் தனித்தன்மை இழந்து கட்டுருபு போலச் (விகுதி போலச்) செயலாற்றுகிறது. இது பெயர்ச்சொற்களுடன் சேர்ந்து பெயராக்கம் செய்கிறது.

இதற்கும் பொதுப்பொருள் தருவது சிரமமானது. (எ.கா. இடர்பாடு, உடன்பாடு, கடன்பாடு, பயன்பாடு, வகைப்பாடு). இவ்வாக்கங்களை இவற்றிற்கிணையான கூட்டு வினைகளிலிருந்து (எ.கா. இடர்படு, உடன்படு, கடன்படு, பயன்படு, வகைபடு) ஆக்கப்பெற்ற பெயராக்கங்களாகவும் கொள்ள இயலும்.

9.2.1.20. ஈடு

இடு என்ற வினையிலிருந்து பெயராக்கம் செய்யப்பெற்ற ஈடு தன்தனித்தன்மை இழந்து கட்டுருபன் போலச் (விகுதி போலச்) செயலாற்றுகிறது. இதுவும் பாடு போன்று பெயர்ச்சொற்களுடன் சேர்ந்து பெயராக்கம் செய்கிறது. இதற்கும் பொதுப்பொருள் தருவது சிரமமானது (எ.கா. குறிப்பீடு, வெளியீடு, குறுக்கீடு, ஒதுக்கீடு, முறையீடு, மதிப்பீடு). இவ்வாக்கங்களையும் இவற்றிற்கு இணையான கூட்டுவினைகளிலிருந்து (எ.கா. குறிப்பிடு, வெளியிடு, குறுக்கிடு, ஒதுக்கிடு, முறையிடு, மதிப்பிடு) ஆக்கப்பெற்ற பெயராக்கங்களாகக் கொள்ள இயலும்.

9.2.1.21. தனம்

தனம் என்ற கட்டுருபன் ஒரு குழுமப் பெயர்ச்சொற்களுடன் சேர்ந்து பெயராக்கம் செய்யவல்லது. இது குணம் அல்லது தன்மை என்ற பொருளை ஆக்கப் பொருண்மையாகத் தரவல்லது (எ.கா. மடத்தனம், போக்கிரித்தனம், முட்டாள்தனம்). இது அவ்வளவு விளைவாக்கம் இல்லாதது போன்று தோன்றினாலும் அவசரத் தேவைகளுக்கு ஆக்க விகுதியாகக் கை கொடுக்கிறது (எ.கா. ரவுடித்தனம், குரங்குத்தனம்).

9.2.2. முன்னொட்டாக்கம்

முன்னொட்டாக்கம் தமிழில் இல்லை என்றும் சமஸ்கிருதத்தில் இருந்து கடன் வாங்கப்பெற்றுச் சொல்நிலையாக்கம் அடைந்த ஒரு சில சொற்களில் முன்னொட்டு இருப்பதாயும் (எ.கா. அநாகரீகம், அநீதி) ஆனால் இது விளைவாக்கமிழந்து விட்டது என்றும் கூறினோம் (பார்க்க 2.2). நாம் வேர்ச்சொற்கள் என்று

குறிப்பிட்ட முன் (~ முற்), தன் (~தற்), புத்(~புது) போன்ற சொற்கள் பல சொல்லாக்க செயற்பாடுகளில் பங்கேற்கவல்லன என்று கண்டோம் (பார்க்க 8.3.1.4.). இவைப் பெயர் முன் வந்து பல புதிய பெயராக்கங்களை உருவாக்கவல்லன (எ.கா. முன்னெச்சரிக்கை, முற்பகல், பின்பலம், பிற்பட்டோர், மேலதிகாரி, மேன்மக்கள், மேம்பாலம், மேநிலை, கீழ்மட்டம், நல்லூர், நற்றமிழ், நன்மொழி, தற்காலம், தற்புகழ்ச்சி, தன்னிறைவு, புத்தாண்டு, புதுப்பெண்). இவ்வேர்ச் சொற்களை முன்னொட்டுகளாகக் கொள்ளவியலும் என்று மறைமலை (1980:69-76) வாதாடுகிறார். ஆனால் இவற்றில் சில தனியாக வரவல்லன; மட்டுமன்றி இவைப் பல சொல்லாக்கங்களுக்குப் பகுதியாக (அல்லது அடையாக) வரவல்லன (எ.கா. முன்னாள், பின்னாள், மேலே, கீழே, நன்மை, புதுமை). எனவே இவ்வேர்ச் சொற்களால் ஆக்கப்பெற்ற முற்காலம், தற்காலம் போன்ற ஆக்கங்களை முன்னொட்டாக்கங்கள் என்று கொள்வதா அல்லது கூட்டாக்கம் என்று கொள்வதா என்பதைத் தீர்மானிக்க இயலவில்லை. இவ்வாக்கங்களில் பல சொல்நிலையாக்கம் பெற்று விட்டமையால் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ளன (எ.கா. முற்காலம், முற்பகல், பிற்காலம், பிற்பகல், மேனாடு, மேம்பாலம், கீழ்நாடு, கீழ்மட்டம், நல்லுறவு, நன்னெறி, தற்காலம், தன்னிறைவு, புத்தாண்டு, புதுப்புனல்).

'சிறப்பு' என்ற பொருள்தரும் திரு என்ற சொல்லையும் மேற்சொன்ன பட்டியலில் சேர்க்க இயலும் என்று தோன்றுகிறது (எ.கா. திருநீறு, திருமறை, திருமனசு, திருப்பாதம்). அல் என்ற சொல்லையும் வ.சுப.மாணிக்கம் போன்றோர் (முத்துவீரப்பன், 1982) முன்னொட்டுபோல் பயன்படுத்துகின்றனர் (எ.கா. அல்சங்கநடை, அல்தமிழர், அல்நாகரிகம், அல்நெறி).

9.2.3. கூட்டுப்பெயராக்கம்

கூட்டுப்பெயராக்கம் பற்றிக் கூறும் போது தமிழில் மரபிலக்கணத்தார் இவற்றை எவ்வாறு அணுகுகின்றனர்

என்பது பற்றி விரிவாகக் காண்பது முக்கியமானதாகும். கூட்டுப்பெயராக்கக் கோட்பாடு பற்றி ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு இது ஏதுவாக அமையும். விஜயவேணுகோபால் தம் நூலின் பின்னிணைப்பு அட்டவணையில் (Vijayavenugopal, 1979:210-237) தொகை பற்றிய மரபிலக்கணங்கணத்தாரின் அணுகுமுறைகளைக் குறித்து விரிவாகப் பேசுகிறார்.

9.2.3.1. தொல்காப்பியரின் அணுகுமுறை

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் எச்சவியலில் ஆறு வகையான தொகைகளைப் பற்றிக் கூறுகிறார். இத்தொகைகளை (சில விதிவிலக்கானவற்றைத் தவிர்த்து) நாம் எடுத்துக்கொண்ட கோட்பாட்டு அடிப்படையிலான கலைச்சொல்லின்படி 'கூட்டுகள்' என அழைக்கலாம் என்று தோன்றுகின்றது. அவர் ஆறு வகையான தொகைகளைப் பற்றிப் பேசுகிறார். அவையாவன (1) வேற்றுமைத்தொகை, (2) உவமைத்தொகை, (3) வினையின் தொகை, (4) பண்பின் தொகை, (5) உம்மைத்தொகை, (6) அன்மொழித்தொகை என்பன (சூத்திரம் 406). இவை ஒவ்வொன்றைப் பற்றிய தொல்காப்பியர் கருத்துகளைப் பார்ப்போம்.

9.2.3.1.1. வேற்றுமைத் தொகை

சூத்திரம் 407-இலிருந்து தொகைகளைப் பற்றி தொல்காப்பியர் ஒவ்வொன்றாகக் கூறுகிறார். அவர் வேற்றுமைத்தொகை என்பதை '....வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல்' (சூத்திரம் 407) என்கிறார். அவர் கருத்துப்படி வேற்றுமைத் தொகைக்கு அடிப்படை வேற்றுமைத் தொடர் என்பதாகும். அவர் இவ்வேற்றுமைத் தொடர்களை அறு வகைப்படுத்துகிறார். அவையாவன: (1) இரண்டாம் வேற்றுமையுருபு (-ஐ) தொக்க வரும் இரண்டாம் வேற்றுமைத் தொகை (எ.கா. நீர் சிந்தினான் < நீரைச்சிந்தினன்), (2) மூன்றாம் வேற்றுமையுருபு (ஓடு என்பன) தொக்க வரும் மூன்றாம் வேற்றுமைத்தொகை (எ.கா. தாய் மூவர் < தாயொடு மூவர்), (3) நான்காம் வேற்றுமை உருபு (-உக்கு) தொக்க வரும் நான்காம் வேற்றுமைத்தொகை

(எ.கா. கரும்பு வேலி < கரும்புக்கு வேலி), (4)ஐந்தாம் வேற்றுமையுருபு (-இன் என்பன) தொக்க வரும் ஐந்தாம் வேற்றுமைத் தொகை (எ.கா. கருவூர்க்கிழங்கு < கருவூரின் கிழங்கு), (5) ஆறாம் வேற்றுமையுருபு (அது என்பன) தொக்க வரும் ஆறாம் வேற்றுமைத் தொகை (எ.கா. முருகன் புகழ் < முருகனது புகழ்), (6) ஏழாம் வேற்றுமையுருபு (-கண் என்பன) தொக்க வரும் ஏழாம் வேற்றுமைத் தொகை (எ.கா. மன்றப் பெண்ணை<மன்றின்கண் பெண்ணை).

9.2.3.1.2. உவமைத்தொகை

'உவமத் தொகையே உவம இயல்' (சூத்திரம் 408) என உவமைத்தொகை பற்றித் தொல்காப்பியர் கூறுகிறார். அவர் கருத்துப்படி உவமை உருபு வரத்தக்க விதத்தில் விரிந்து பொருள்படத்தக்க உவமைத்தொடர் தான் உவமைத் தொகைக்கு அடிப்படையாகும். (எ.கா. மழை வண்கை < மழை அன்ன வண்கை, மலர் முகம் < மலர் போல முகம்).

9.2.3.1.3. வினைத்தொகை

'வினையின் தொகுதி காலத்தியலும்' என்று வினைத்தொகை பற்றி தொல்காப்பியர் கூறுகிறார். இவர் கருத்துப்படி வினைத்தொடர் காலம் விரியப் பொருள் தரும். (எ.கா. புணர் பொழுது < புணர்ந்த பொழுது/புணர்கின்ற பொழுது/புணரும்பொழுது).

9.2.3.1.4. பண்புத்தொகை

தொல்காப்பியர் பண்புத்தொகை குறித்து பின்வருமாறு கூறுகிறார்.

'வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்
றன்ன பிறவும் அதன்குணம் நுதலி
இன்ன திதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே'

இவர் கருத்துப்படி விஷேடிக்கப்படும் சொல்லும் வண்ணம், வடிவு, அளவு, சுவை இவை போன்ற பிற பண்புகளின் அடிப்படையிலான இதன் விஷேடணமும் பண்புருபு தொக்க வருவது பண்புத் தொகையாகும். இதன்படி 'கருமையான

குதிரை' எனப்பொருள் கொள்ளத்தக்கக் கருங்குதிரை வண்ணப் பண்புத்தொகைக்கும் 'வட்டமான பலகை' எனப் பொருள் தரும் வட்டப்பலகை என்பதை வடிவப் பண்புத் தொகைக்கும் 'குறுகலான கோல்' எனப் பொருள்படும் குறுங்கோல் என்பதை அளவுப் பண்புத்தொகைக்கும், 'தித்திப்பான கரும்பு' எனப் பொருள் தரும் தீங்கரும்பு என்பதைச் சுவைப் பண்புத் தொகைக்கும் எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

9.2.3.1.5. உம்மைத்தொகை

உம்மைத்தொகைப் பற்றி தொல்காப்பியர் பின்வருமாறு கூறுகிறார்:

'இருபெயர் பலபெயர் அளவின் பெயரே
எண்ணியர் பெயரே நிறைபெயர்க் கிளவி
எண்ணின் பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே'

இவர் கருத்துப்படி இருபெயர், பல்பெயர், அளவுப்பெயர், எண்ணியர் பெயர், நிறைபெயர், எண்ணின் பெயர் என்பன உம் தொக நிற்பது உம்மைத் தொகையாகும். 'உவ்வாவும் பதினான்கும்' என விரிவும் உவாப்பதினான்கு இருபெயர் உம்மைத்தொகைக்கும், 'புலியும் வில்லும் கெண்டையும்' என விரியும் புலவிற்கெண்டை என்பது பல்பெயர் உம்மைத்தொகைக்கும், 'தூணியும் பதக்கும்' என விரியும் தூணிப்பதக்கு என்பது அளவின் பெயர் உம்மைத்தொக்கும், 'பதின்மரும் ஐவரும்' என விரியும் பதினைவர் என்பது எண்ணியர் பெயர் உம்மைத்தொகைக்கும், 'தொடியும் அரையும்' என விரியும் தொடியரை என்பது நிறைபெயர் உம்மைத்தொகைக்கும், 'பத்தும் ஒன்றும்' என விரியும் பதினொன்று என்பது எண்ணின் பெயர் உம்மைத் தொகைக்கும் எடுத்துக்காட்டுகளாகும்.

9.2.3.1.6. அன்மொழித்தொகை

தொல்காப்பியர் அன்மொழித்தொகை பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

பண்புத்தொகை வருஉங் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே.

இதன்படி பண்புத்தொகை வரும் சொல்லிலும் உம்மைத் தொக்க பெயரிடத்தும் வேற்றுமை தொக்க பெயரிடத்தும் இறுதிச் சொல்லிடத்தும் நின்று அன்மொழித்தொகை வரும்.

எடுத்துக்காட்டாக, 'வெண்மையான ஆடை' எனப் பொருள்படும் பண்புத்தொகையான வெள்ளாடை 'வெண்மையான ஆடையுடுத்திய பெண்' என்ற பிறிதொரு பொருளை உணர்த்தவல்லதானால் அதுபண்புத்தொகைக்கண் வரும் அன்மொழித்தொகையாகும்; 'தகரமும் ஞாழலும்' எனப் பொருள்படும் தகர ஞாழல் என்ற உம்மைத்தொகை 'தகரமும் ஞாழலும் உடையாள்' என்ற பிறிதொரு பொருளை உணர்த்தவல்லதாததால் அது உம்மைத்தொகைக்கண் வரும் அன்மொழித்தொகையாகும். 'பொன்னாலான தாலி' எனப் பொருள்படும் பொற்றாலி என்ற வேற்றுமைத்தொகைப் 'பொன்னால் ஆன தாலி அணிந்தவள்' என்ற பிறிதொரு பொருளை உணர்த்தவல்லதானால் அது வேற்றுமைத் தொகைக் கண் வரும் அன்மொழித் தொகையாகும். தொல்காப்பியர் இங்கு வினைத்தொகைக் கண் வரும் அன்மொழித்தொகையைப் பற்றியும் உவமைத்தொகைக் கண் வரும் அன்மொழித்தொகையைப் பற்றியும் பேசவில்லை எனக் குறிப்பிட வேண்டியதாகிறது.

9.2.3.1.7. தொகைச்சொற்களில் பொருள் சிறக்குமிடம்

தொகைச் சொற்களில் பொருள் சிறக்குமிடங்களைப் பற்றித் தொல்காப்பியர் பின்வருமாறு கூறுகிறார்.

முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையா தன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருள்நிலை மரபே.

தொகைச் சொற்களின் பொருள் (வலமிருந்து பார்க்கையில்) முன்வரும் சொல்லினின்று பெறப்படவோ பின்வரும் சொல்லினின்று பெறப்படவோ இரண்டினின்றும் பெறப்படவோ இரண்டினுமின்றி பிறிதொரு சொல்லினின்று பெறப்படவோ செய்யலாம் என்ற நால்வகைத் தொகைப் பொருள்களைத் தொல்காப்பியர் கூறுகிறார். எடுத்துக் காட்டாக வேங்கைப்பூ என்பதன் பொருள் முதற்சொல்லாகிய பூவினின்று பெறப்படும். பெண்ணணங்கு என்பதன் பொருள் 'அணங்கு போலும் பெண்' என பின்வரும் பெண் என்ற சொல்லினின்று பெறப்படும்; உவாப் பதினான்கு, புலிவிற்கெண்டை போன்ற உம்மைத் தொகைகளின் பொருள் முன்வரும் சொற்களினின்றும் பெறப்படும். வெள்ளாடை, தகரஞாழல், பொற்றொடி போன்ற அன்மொழித் தொகைகளின் பொருள் முன்பின் என அமையும் சொற்களிலிருந்தல்லாது பிறவற்றாற் பெறப்படும்.

9.2.3.1.8. தொகைச்சொற்கள் ஒருசொல் தன்மைய

சூத்திரம் 414-இல் தொல்காப்பியர் பின்வருமாறு கூறுகிறார்.

'எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய'

இதன்படி தொகைச்சொற்கள் எல்லாம் ஒருசொல்லாய் நிற்கும் என பொருள் கொள்ளலாம். இது மிக முக்கியமாய் கவனிக்க வேண்டிய சூத்திரமாகும். இதன் அடிப்படையிலான வாத விளக்கங்களைப் பின்னர் பார்ப்போம்.

9.2.3.2. தொல்காப்பிய உரையாசிரியர்களின் பார்வை

தொல்காப்பியத்தின் உரையாசிரியர்களின் கருத்து களையும் நாம் ஆய்ந்து பார்க்க வேண்டியதிருக்கிறது.

9.2.3.2.1. இளம்பூரணர் பார்வை

தொல்காப்பிய உரையாசிரியர்களில் நமக்கு முதலாவதாக அறிமுகமாகிறவர் இளம்பூரணராவர். இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். அதாவது தொல்காப்பிய சூத்திரங்களின் உரை கிட்டத்தட்ட 15 நூற்றாண்டுகளுக்குப் பின் இவரால் நமக்குக் கிடைக்கப்

பெறுகின்றது. எனவே இவரால் பல இடங்களில் சரியான விளக்கம் தரஇயலாமல் இருப்பது இயற்கையே. தொகை பற்றிய இவரது பார்வையை இரண்டு பெரிய தலைப்புகளில் காணலாம். (1) தொகைகளின் உருவாக்கம், (2) தொகைகளின் பொருள்படுத்தம்.

தொகைகளின் உருவாக்கம்

இளம்பூரணர் தொகைகளை மூவகைச் சேர்ந்து வருகையின் ஒரு வகையாகக் கொள்கிறார். இவர் ஏதேனும் இரு சொற்கள் சேர்ந்து வருகையில் அவை தொகையாகவோ உம்மைத் தொடராகவோ செயப்படுபொருள் பயனிலை உறவிலோ வரும் என்கிறார் (பார்க்க: இளம்பூரணரின் தொல்காப்பியச் சூத்திரம் 1-இன் விளக்கம்).

தமிழில் பெரும்பாலும் தொகைகள் பெயரையும் பெயரையும் சேர்க்கையிலோ பெயரையும் வினையையும் சேர்க்கையிலோ உருவாகிறது. எடுத்துக்காட்டாக நிலம் கண்டான் என்பது பெயரும் வினையும் சேர்ந்த தொகை. ஆனால் சேனாவரையர் இதைத் தொகையாகக் கொள்வதில்லை. பிறர் இதை எழுவாய்ப் பயனிலைத் தொடராக அதேசமயம் வேற்றுமை மறைந்திருக்கிற தொகையாகக் கொள்வர்.

இளம்பூரணர் கருத்துப்படி சில வினை, பெயர் இவற்றின் இணைப்பைத் தொகையாகக் கொள்ளலாம் (தொல்காப்பியச் சூத்திரம் 68-இன் உரை). இவருடைய தீர்மானம் வினைத்தொகை பற்றிய இவரின் பார்வையைப் பொறுத்து அமைகிறது; இவர் கருத்துப்படி வினைத்தொகையில் பெயரெச்சம் உள்ளது. சேனாவரையர் கருத்துப்படி வினைத்தொகை என்பது வினைவேர், பெயர் இவற்றின் இணைப்பாகும்; வினைவேர் ஏவல் வினை நோக்கைக் காட்டாதபோது வினைப்பெயராகும்; ஆனால் தொகையின் வலியால் தொகை காலத்தைக் காட்டும். இவர் பார்வையில் வினைப் பெயர்+பெயர் இவற்றின் இணைப்பு மட்டும் தான் உண்டு; பெயரெச்சமில்லை. வேறு தொல்காப்பிய உரையாசிரியரான நச்சினார்க்கினியர்

கருத்துப்படி பெயரெச்சமிருக்கிறது, ஆனால் பெயரெச்சப் பொருளிருந்தாலும் பெயரெச்ச வடிவு இல்லை.

இளம்பூரணர் தொகைகளுக்கும் அவற்றிற்கிணையான தொடர்களுக்குமுள்ள உறவைத் தெளிவாக அடையாளம் காண்கிறார். மட்டுமன்றி தொகைகள் சம்பந்தப்பட்ட தொடரிலிருந்து பெறப்பட்டவை என்றும் கொள்கிறார். எடுத்துக்காட்டாகக் குதிரைத்தேர், குதிரையாற் பூட்டப்பட்ட தேர் என்பவற்றுள் முதலாவது இரண்டாமதிலிருந்து ஆல் என்ற உருபும் பூட்டப்பட்டது என்ற உருபல்லாத ஒன்றும் தொகப் பெறப்பட்டது என்றும், இரண்டாவது முதலாவதிலிருந்து விவரிக்கப்பட்டு பெறப்பட்டது என்றும் கூறுகிறார் (தொல்காப்பிய சூத்திரம் 79-இன் விளக்கம்). மேலும் இளம்பூரணர் தன் தொல்காப்பிய சூத்திரம் 407-இன் விளக்க உரையில் ஒரு சாரார் நிலங்கடந்தான், தாய்மூவர் போன்ற வேற்றுமைத் தொகைகளில் வேற்றுமையுருபு புலப்படாது நிற்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று கூறுகிறார். இவர்கள் கருத்துப்படி வேற்றுமை உருபுகளின்றி பெயர்கள் இணைந்து தொகை வருகிறது; தொகை தகுந்த இலக்கண உறவை வெளிப்படுத்துகிறது. சிலர் இதை ஒத்துக்கொள்வதில்லை என்கிறார் இவர். ஆனால் அவர்களின் கருத்தை விளக்கவில்லை. சேனாவரையர் முதற்கூறிய கருத்தைக் கொண்டவர்.

தொகைகளின் பொருட்படுத்தம்

இளம்பூரணர் வேற்றுமைத்தொகைகளைப் பொறுத்த மட்டில் அவை வேற்றுமை உருபுகள் வருகையில் பெறும் பொருளைப் பெறுவதாகக் கூறுகிறார். தொகை உருவாகுகையில் வேற்றுமை உருபுகள் நீக்கப்படும் என்று கொள்கிறார் (பார்க்க: தொல்காப்பியச் சூத்திரம் 407-இன் உரை).

உவமைத்தொகைகளின் பொருட்படுத்தம் பற்றிப் பேசுகையில் அவர் ஆர்வத்தைத் தூண்டும் கேள்வியைக் கேட்சிறார். இவ்வகையான தொகைகளை விரிக்கையில் இவை உவமவுருபுகளை மட்டுமன்றி வேற்றுமை

உருபுகளையும் வெளிப்படுத்துவதைச் சுட்டிக்காட்டுகிறார். எடுத்துக்காட்டாகத் துடிநடு என்பது 'துடியை ஒக்கும் நடு' என விரியும். இவ்வாறு விரிக்கையில் இதில் வேற்றுமை உருபு வெளிப்படுகிற காரணத்தால் இதை வேற்றுமைத் தொகை என்பதா அல்லது ஒக்கும் என்ற உவமவுருபு வெளிப்படுகிற காரணத்தால் இதை உவமைத்தொகை என்பதா என்ற சிக்கல் வருவதைக் குறிப்பிடுகிறார். வேற்றுமையுருபு, உவமையுருபு இரண்டும் மறைந்து தொகை வரப்பெற்றாலும், தொகைக்கு உவமைப் பொருளே சிறப்புடையதாதலின் இத்தொகையை உவமைத் தொகை என்பதே பொருத்தம் என்று ஒருசாரார் கருதுவர் என்று கூறுகிறார் (பார்க்க : தொல்காப்பிய சூத்திரம் 408-இன் உரை). ஆன போன்ற உவம உருபுகள் பலவிடங்களில் இரண்டாம் வேற்றுமை பெற்ற பெயருடன் சேர்ந்து வருவதில்லை. எனவே இவ்விடங்களில் உவமையுறவு இருக்கிறதேயன்றி வேற்றுமையுறவு இல்லை என்று சேனாவரையர் சுட்டிக்காட்டுகிறார்.

ஆனால் நச்சினார்க்கினியர் இத்தீர்மானத்திலிருந்து பெரிதும் மாறுபடுகிறார். உவமை இடைச்சொற்கள் யாவும் எச்சமாகச் செயல்படுவதால் செயப்படுபொருளின் பயனிலையாகச் செயப்படுகின்றன. அவர் கருத்துப்படி வேற்றுமை உறவு இருக்கிறது; இருப்பினும் அதற்குப் பிறகு உவமை அல்லது இவ்வகையான தொகைகளை வேறு பிரிக்கும் உவமை உறவு உள்ளது.

வினைத்தொகை பற்றிய இளம்பூரணரின் கொள்கையை முன்னரே பார்த்தோம். இளம்பூரணர் இத்தொகை உருவாகும் போது வினையில் ஏற்படும் முழுமையற்ற நீக்கத்தைப் பற்றிப் பேசுகிறார். எடுத்துக் காட்டாகக் கொல்யானை என்ற தொகையில் (கொல்லும் என்ற மூல வினையிலிருந்து) கொல் நிறுத்தி வைக்கப் பெற்று -உம் என்ற ஒட்டு நீக்கப்படுகிறது என்கிறார்.

பண்புத்தொகை உருவாகுகையில் அடையாய் வரும் சொல்லின் (அதாவது தொகையின் முதல் அங்கத்தின்) ஒரு பாகம் நிறுத்தி வைக்கப் பெற்று மீதி பாகம் நீக்கப்பெறுகிறது

என்று இளம்பூரணர் வாதாடுகிறார்(பார்க்க: தொல்காப்பிய சூத்திரம் 410- இன் உரை). 'கரியது குதிரை' என விரியும் கருங்குதிரை என்பதை எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். கரியது குதிரை என்பதிலிருந்து தொகை உருவாகப்படுகையில் அது என்ற ஒட்டு கரியது என்பதிலிருந்து நீக்கப்பெற்று, கர் (உம்) என்பது நிறுத்தி வைக்கப்பெறுகிறது. எனவே இது பண்புத்தொகை என அழைக்கப்பெறுகிறது என்கிறார்.

உம்மைத் தொகை பற்றிய இவரது கருத்து முக்கியமானதாகும். கபிலன், பரணன் என்ற இயற்பெயர்கள் உம்மைத்தொகையாக வரும்போது அது கபிலபரணன் என்று -ன் ஈறாக அமைய வருவதில்லை; ஏனென்றால் -ன் வருவதனால் சம்பந்தப்பட்ட வினைமுற்றும் ஒருமை குறியீடான -ன் ஈறாக அமைய வரவேண்டியது வரும்; எனவேதான் தொல்காப்பியர் இம்மாதிரியான உம்மைத் தொகைகள் பன்மை ஒட்டு ஈறாக அமைய வரும் (அதாவது கபிலபரணர் என்று வரும்) என்று விளக்குவதைக் குறிப்பிடுகிறார். இளம்பூரணர் பயனிலையாக்கம் தொகையின் இரண்டு உறுப்புகளையும் பொறுத்து அமையும் என்று சரியாக அனுமானித்துள்ளார்.

அன்மொழித் தொகை பற்றி பேசுகையில் இவர் இசையோட்ட அமைப்பொழுங்கைப் பற்றிப் பேசுகிறார். இந்த வகையான தொகைகளில் பொருள் (தலைப்புச் சொல்) அதன் உறுப்புகளில் கிடக்காமல் பிறிதோர் சொல்லில் கிடக்கின்ற காரணத்தால் தொகை படுத்தலோசையால் உச்சரிக்கப்பெறும் என்கிறார்(பார்க்க: தொல்காப்பிய சூத்திரம் 412-இன் உரை). தொல்காப்பியர் வேற்றுமைத் தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை என்பவற்றின் பின்னணியில் தான் அன்மொழித் தொகை வரும் என்கிறார். ஆனால் இளம்பூரணர் பிற இரு தொகைகளான உவமத்தொகை, வினைத்தொகை என்பவற்றின் பின்னணியிலும் அன்மொழித்தொகை வரும் என்று சுட்டிக்காட்டுகிறார்.

9.2.3.2.2. சேனாவரையர் பார்வை

இளம்பூரணருக்கு அடுத்தபடியாக வைத்துக் கருதப்படும் சிறந்த உரையாசிரியர் சேனாவரையராவர். இவர் தர்க்கவியல் மாணவர். தமிழிலும் சமஸ்கிருத மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவர். இவருடைய உரையில் இவரது சமஸ்கிருத மொழி அறிவின் தாக்கத்தைக் காணலாம். பிற உரையாசிரியருடன் ஒப்பிடுகையில் இவர் தொகையின் கோட்பாடுகள் பற்றியும் விளக்கம் பற்றியும் கூடுதலாக வாதங்கள் தருகிறார். பிற உரையாசிரியர்களான நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் என்பார் இளம்பூரணரையோ சேனாவரையரையோ பின்பற்று கிறார்கள். (எனவே ஒரே மாதிரியான விவாதங்களை முன்வைப்பதைத் தவிர்க்க தெய்வச்சிலையார் மற்றும் கல்லாடர் உரைகள் பற்றி இங்கு பேசப்படவில்லை; சில விவாத காரணங்களுக்காக நச்சினார்க்கினியர் பற்றி சிறிது பேசப்படும்.) சேனாவரையர் பார்வையில் தொகைகள் ஒட்டுக்களின் (உருபுகளின்) நீக்கத்தால் உருவானவையல்ல.

சேனாவரையர் தொகை பற்றிய இருவகையான கோட்பாடுகளைக் குறிப்பிடுகிறார். இரண்டு குழுக்களாக இலக்கணவியலார்கள் உள்ளதைச் சுட்டிக்காட்டுகிறார். ஒரு குழுவைச் சார்ந்தவர் தொகைகள் வேற்றுமை ஒட்டுகள், உவமை இடைச்சொற்கள், -உம் என்ற பின்குறைச்சொல், வினைமுற்றின் ஒட்டு, பண்புப்பெயரில் வரும் ஒட்டு இவற்றின் நீக்கத்தால் ஆக்கப்பெற்றவை என்று கூறுகின்றனர்; பிற குழுவைச் சார்ந்தவர் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்கள் இடைவெளியோ விட்டிசையோ இன்றி இணைந்து பின்னிப் பிணைந்த ஒரு அலகாகப் பொருத்தமான பொருளை உணர்த்துவதாகக் கூறுகின்றனர். சேனாவரையர் பின்னால் கூறப்பட்ட குழுவின் பார்வையை ஏற்றுக்கொள்கிறார். வேழக்கரும்பு, கேழர்பன்றி என்ற எடுத்துக்காட்டுகளில் ஒட்டுகள் நீக்கப்படவில்லை என்றாலும் அவை தொகைகளாய்ச் செயலாற்றுகின்றன என்று குறிப்பிடுகிறார். அவர் தொல்காப்பியரும் இதே

கருத்தைத்தான் கொண்டிருப்பதாய் வாதாடுகிறார். தொகையாக வரும் சொற்கள் ஒரு சொல்லாகச் செயலாற்றுவதாகக் கூறுகிறார். இருப்பினும் சொற்களின் சேர்க்கையாலான தொடர்களும் ஒரு இலக்கண அலகாகச் செயலாற்றலாம் என்றும் கூறுகிறார். எனவே தான் இவர் ஒரு தொகையாக வரும் சொற்களுக்கிடையே விட்டிசை இருக்கவேண்டியதைக் கூடுதலான பண்புக்கூறாக வற்புறுத்துகிறார். (தொல்காப்பியர் சூத்திரம் 420-இல் 'எல்லாத்தொகையும் ஒருசொல் நடைய' என்று குறிப்பிடுவது இங்கு நினைவுகூறத்தக்கது.)

கேளர்பன்றி போன்ற இருபெயரொட்டுப் பண்புத் தொகைகளில் ஒருசொல்லும் நீக்கப்பெறவில்லை என்று குறிப்பிட்டுத் தொகையாக்கத்தில் ஒட்டுகள் போன்றவை நீக்கம் பெறுவதாகக் கூறுவது ஒப்புக்கொள்ள இயலாது என்று வாதாடுகிறார்; மாறாகத் தொகைகளின் உறுப்புகளே வேற்றுமை ஒட்டுகள் போன்றவற்றின் பொருளைத் தருவதாகக் கூறுகிறார். (பார்க்க: தொல்காப்பியர் சூத்திரம் 412-இன் உரை). சேனாவரையர் பொருண்மைநிலை மாற்றம் அடைந்து ஒருவகைப் பறவையைக் குறிக்கும் செம்போட்டு போன்ற தொகைகளைத்தான் உண்மையான தொகைகளாக (அதாவது கூட்டுகளாக) ஒத்துக்கொள்வதாய்த் தெரிகிறது; இங்கு செம் என்பது வரையறை செய்யும் அடையாகப் பயன்படாது விஷேடணை செய்யும் அடையாகப் பயன்படுகிறது செம்போட்டு என்பது ஒரு கூட்டாகச் சிவந்த நிறப் பறவையைக் குறிப்பிடாமல் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்த பறவையைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு இது ஒரு வகையான மரபுப்பொருளாக மாறியுள்ளது.

9.2.3.2.3. நச்சினார்க்கினியரின் பார்வை

சேனாவரையருக்குப் பின்வரும் நச்சினார்க்கினியர் சேனாவரையரின் ஆட்சேபணைகளுக்கு விடையளிக்கத்தக்க விதத்தில் எதிரிடையான கோட்பாட்டைச் சீர்படுத்தியுள்ளார். இவர் எல்லாத் தொகைகளிலும் ஒன்றோ அதற்கு மேற்பட்ட ஒட்டுகள், பின்குறைச் சொற்கள்,

சொற்கள் ஆகியன குன்றி (நீக்கம் பெற்று) வரலாம் என்று கொள்கிறார். வேற்றுமை உருபுகள், பின்குறைச் சொல்லாகிய -உம் மற்றும் வினைத்தொகை மற்றும் பண்புத்தொகையில் விரியும் ஒட்டுகள், அன்மொழித் தொகையில் விரியும் சொற்கள் என்பன தொகைகளில் நீங்கி அல்லது மறைந்து வரும் என்று இருவரும் ஒத்த கருத்தைக் கொள்கின்றனர். இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் (எ.கா. சாரைப்பாம்பு) ஒரு உருபனோ சொல்லனோ நீக்கம் பெறவில்லை என்று சுட்டிக்காட்டுகிறார். இங்குகூட இம்மாதிரியான தொகைகளின் இரு சொற்களுக்கிடையே ஆகியஎன்ற உருபு இச்சொற்கள் இரண்டும் வரையறுப்பான் -வரையறை செய்யப்படுவான் (determiner-determined) என்ற தொடர்பைக் காட்ட வரும் என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார் (பார்க்க: தொல்காப்பியச்சூத்திரம் 412-இன் உரை). தொல்காப்பியச் சூத்திரம் 412-இல் வரும் தொக என்பதைச் சேனாவரையர் 'தொகையாகவரும்' என்று பொருள் கொள்கிறார். ஆனால் பிறர் இதை 'உருபனோ சொல்லோ நீங்கும் போது' எனப் பொருள் கொள்கின்றனர். நச்சினார்க்கினியர் வட்டப்பாறை என்ற எடுத்துக்காட்டில் வட்டம் என்பதன் ஈற்றில் வரும் -ம் என்ற எழுத்து நீங்க வட்டம்>வட்ட என மாறும்என்று குறிப்பிடுகிறார். இவர் இந்தப் புணர்ச்சி அடிப்படையிலான கெடுதலைக் கூட தொகையில் வரும் நீக்கமாகக் கொள்கிறார் என்பது புதுமையானதாகும் (பார்க்க : தொல்காப்பிச் சூத்திரம் 416-இன் உரை). இவர் கருத்தைப் புரிந்து கொள்ள நாம் தொகைகளில் பங்குபெறும் சொற்களை நன்றாகப் பின்னப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட இடைவெளியில்லாத சொற்களாகக் கொள்ள வேண்டியதிருக்கிறது. இந்த எடுத்துக்காட்டில் கூட அவர் கொள்கைப்படி வரையறுப்பான் - வரையறை செய்யப்படுவான் உறவைக்காட்டும் ஆகிய என்பது சம்பந்தப்பட்ட சொற்களுக்கிடையிலிருந்து நீக்கப் பெற்றுள்ளதாகக் கொள்ள வேண்டியிருக்கிறது.

9.2.3.2.4. தொகைகளின் பொருள் விளக்கம் குறித்த ஒட்டுமொத்தமான பார்வை

தொகைகளைப் பற்றிய மேற்சொன்ன கோட்பாடு தொகைகளின் பொருள் விளக்கம் குறித்தும் விளக்கம் தருகிறது. தொகைகள் ஒரு பெயர்ச்சொல் போல் செயல்படுகிறது. தொகையாக்கம் தமிழ் போன்ற ஒட்டு நிலை (agglutinative) மொழிகளில் ஒரு உருபனியல் செயற்பாங்கு போல் நிகழ்வுறுகிறது. தொகைகளை ஆய்ந்தால் அவற்றையாக்கும் சொற்கள் ஒரு உறுப்பி (constitute) ஆக இருந்த போதிலும் எப்பொழுதும் அண்மை உறுப்புகளாக (immediate constituents) இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தொல்காப்பியரின் 83-ஆவது சூத்திரம் தொகைகள் எவ்வாறு பொருள் தருகின்றன என்பதை விளக்குவதாகக் கருதப்படுகிறது.

'வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றுநின் றியலுந் தொகைவயின் பிரிந்து
பல்லா றாகப் பொருள் புணந் திசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய வென்ப' (சூத்திரம் 83)

வேற்றுமைத்தொகையை விரித்துக் கூறுகையில் அன்மொழித்தொகையை வேண்டிய சொற்களைக் கொண்டு விரிக்குமாறு போல விரித்துக்கூற வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். எடுத்துக்காட்டாகத் தாழ்குழல், பொற்றொடி என்னும் அன்மொழித்தொகைகளைத் 'தாழ்குழலையுடையாள்', 'பொற்றொடியை அணிந்தாள்' என்று விரிப்பது போலவே கருங்குழற்கன்னி, பொற்றொடி நங்கை என்னும் வேற்றுமைத் தொகைகளைக் 'கருங்குழலையுடைய நங்கை', 'பொற்றொடியை அணிந்த நங்கை' என்று விரித்துப் பொருள் காணல் வேண்டும் என்று இவர் கருதுவதாய்க் கொள்ளலாம். இவர் குறிப்பாக வேற்றுமைத் தொகைகளைப் பற்றிக் கூறினாலும் இது எல்லாத் தொகைகளுக்கும் பொருந்துவதாகக் கொள்ளப்படுகிறது. தற்கால இலக்கணவியலாரின் அக அமைப்பு (deep structure), புற அமைப்பு (surface structure) என்ற கருத்துரு அடிப்படையில் கூறினால் பொருண்மையானது அக அமைப்பிலிருந்து பெறப்படுவதாய்

இவர் கருதுவதாய் எடுத்துக் கொள்ள இடம் உண்டு. தொல்காப்பியர் தொகைகளின் பொருளை விரித்துணர ஒரு மாறாத (நிலையான) பொருண்மை வாய்ப்பாடு இல்லையென்று கருதுவதாய்த் தெரிகிறது. ஒரு தொகையின் பொருண்மை அமைப்பில் அத்தொகையின் பொருளைப் புரிந்து கொள்ளத் தேவையான செய்திகள் இருக்கவேண்டும் என்று இவர் குறிப்பிடுவதாய்த் தெரிகிறது. உரையாசிரியர்களான இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இக்கூடுதல் சொற்கள் (மற்றும் உருபுகள்) தொகையாக்கம் செய்யும் சொற்களுக்கு இடையிலோ கடையிலோ தரப்படவேண்டும் என்று கருதுகின்றனர். அன்மொழித் தொகையில் இக்கூடுதல் சொற்கள் தொகையின் இறுதியில் இணைக்கப்படவேண்டும்; அதாவது தொகையாக்கச் சொற்களுக்கிடையில் வரவேண்டும்; வேற்றுமைத் தொகைகளைப் பொறுத்தவரையில் தொடர்புள்ள வேற்றுமைத் தொடர்களாக விரிய வேண்டும். வெள்ளை வாரணர் (1984) ''...இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர் பலரும் கூறிய உரைகள் ஒன்றுக்கொன்று தம்முள் தொடர்பில்லாதன போற் காணப்பட்டாலும் அவர்கள் தம் உரையகத்துக் காட்டிய உதாரணங்களையும் விளக்கங்களையும் ஒப்பவைத்து நோக்குங்கால், ''வேற்றுமைத் தொகைச் சொற்களை விரித்துப் பொருள் கொள்ளுமிடத்து உருபேயன்றி அவ்வுருபினை முடித்தற்கு இன்றியமையாதனவாய்ப் பலவாற்றானும் பொருள் தொடர்புடையனவாய் வந்து இயையும் எல்லாச் சொல்லும் விரித்தற்குரியன'' என்பதே இவ்வுரைகளின் பொதுக்கருத்தாக அமைந்து வேற்றமைத் தொகைகளின் உருபும் பொருளும் உடன்தொக்கத் தொகையின் இயல்பினை விளக்கி நிற்றல் காணலாம்''என்று விளக்குகிறார்.

சொற்கள் தொகைகளாக இணைக்கப் பெறுவதுடன் தொகைகளாகச் செயல்படும் சொற்களும் மீண்டும் தொகைகளாய் இணைக்கப்பெறுகின்றன எடுத்துக்காட்டாகப் பவள வாய்போர் அமர்க்கண் பொற்றொடி என்பதில் வேற்றுமைத் தொகையினின்றும் அன்மொழித் தொகை பெறப்பட்டுத் தலைப்புச் சொல்லாக நிற்கிறது; பவளவாய்

என்பது ஒரு உவமைத்தொகை; பேர் அமர்க்கண் என்பது பேர்க்கண் என்றும் அமர்க்கண் என்றும் பிரிக்கப் பெறலாம்; முதலாவது ஒரு பண்புத்தொகை; இரண்டாவது வினைத்தொகை; பவளவாய் ஒரு அலகாகவும் பேர் அமர்க்கண் பிறிதொரு அலகாகவும் பொற்றொடி மூன்றாவது அலகாகவும் ஒரு உம்மைத்தொகைக் கூட்டை உருவாக்குகின்றன. இதைப் 'பவளவாயையும் பேர் அமர்க்கண்ணையும் பொற்றொடியையும் உடைய பெண்' என்று விரித்தால் இரண்டாம் வேற்றுமை உருபு -ஐ -உம், -உம் என்ற குறைச் சொல்லும் உடைய என்ற சொல்லுருபும் (பின்னுருபும்) குன்றி வருவது தெளிவுறும்.

சேனாவரையர் கருத்துப்படி ஒரு தொகையின் பொருளைப் புரிந்துகொள்ள வேண்டித்தான் அத்தொகையில் இல்லாத மிகைச் சொற்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன, என்பதன்றி, இம்மிகைச் சொற்கள் முன்னரே தொகையில் வந்திருந்து பின்னர் நீக்கம் செய்யப்பெற்றன என்பதல்ல; இது தொகையாக்கத்தின் இயல்பின் (வலியின்) பாற்படும். (பார்க்க: தொல்காப்பியச் சூத்திரம் 416-இன் உரை). உரையாசிரியர்கள் தொகையைத் தொகையின் வடிவ நிலை (தொகையாக்க நிலை), பொருண்மை நிலை (பொருள்கோள் நிலை) என்ற இரு நிலைகளில் காண்கின்றனர் என்பது தெளிவு. ஆய்வு அடிப்படையில் தொகை வடிவினைப் புரிந்துகொள்ள வேண்டித்தான் பொருண்மை நிலை தனியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது; இந்நிலை உண்மையில் முன்னரே உள்ளது என்பதல்ல. சேனாவரையரின் வாதம் இது தான்.

பிற உரையாசிரியர்கள் ஒரு பொருண்மை நிலை உள்ளது என்றும் அது தொடர்நிலை என்றும் அதினின்றும் தொகைகள் நீக்கத்தாற் பெறப்படும் என்றும் கருத்துரை செய்கின்றனர். அவர்கள் இடமாற்றத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. நச்சினார்க்கினியர் வினைத்தொகையைப் பற்றி பேசுகையில் அத்தொகையின் முதல் சொல்லாகிய வினைவேரானது எச்சப்பெயர் என்ற காரணத்தால் அதற்குப் பிறவிடங்களில்

வருவதைப் போன்று எச்சஇயல்பு (வலு) இருக்கிறது என்கிறார் (பார்க்க: தொல்காப்பியச் சூத்திரம் 415-இன் உரை). *சாத்தன்கரியன்* என்பது *கரியன்சாத்தன்* என்று வரலாகும்; *கரியன்சாத்தன்* என்பது *கரியசாத்தன்* என்பதைக் குறிப்பிட்டு நிற்கலாம். மரபிலக்கணங்கள் இத்தகைய இடமாற்றத்தைப் பற்றிக் கூறுகின்றன. நச்சினார்க்கினியரும் இவர் கருத்தைப் பங்கிடுவோரும் தொகை பற்றிய அவர்தம் விளக்கங்களில் இடமாற்றம் பற்றி பிரத்தேகமாகக் குறிப்பிடவில்லை. சேனாவரையர் தன்னுடைய நிலைமையை நியாயப்படுத்தத் தொல்காப்பியச் சூத்திரம் 94-இல் உயர்திணைப்பெயரும் உறவுப்பெயரும் தொகையாக வந்து விரிகையில் வேற்றுமை ஒட்டான -அது இழப்புற -கு வருவதைக் குறிப்பிடுகிறார்.

"அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகையின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே"(சூத்திரம்: 94).

தொகையான *சேத்தன்மகன்* விரிகையில் கிழமை வேற்றுமை ஒட்டான -அது இழப்புற கு வருவது உருவக வழக்கு என்பது சேனாவரையரின் கருத்தாகும். இந்த நிலையில் கூட -அது வழுவான காரணத்தால் கு -ஆல் இடப்பெயர்ச்சியுற வேண்டி அங்கு வரத்தேவையில்லை என்கிறார். விளக்கத்திற்கு வேண்டி -அது கருதிக் கொள்ளப்பட்டு பின்னர் -கு ஆல் இடப்பெயர்ச்சி செய்யப்படுகிறது. எனவே விளக்கநிலை தொகைநிலைக்கு முன்னதாக இருக்க இயலாது. சில தொகைகள் தொல்காப்பியரால் கூடக் குறிப்பிட்ட சொற்களால் பிரிக்க இயலாதவையாய்க் கருதப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறார். எடுத்துக்காட்டாக வினைத்தொகையில் முதல் சொல்லான வினைவேர் அல்லது வினைப்பெயர் மூன்று காலங்களில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பிடலாம். *கொல்யானை* என்பது 'கொல்லும் யானை அல்லது கொன்ற யானை' எனப் பொருள்படலாம்; இது இப்படியென்றால் எவ்வாறு அவற்றைத் திட்டவட்டமாக இரண்டு சொற்களாகப் பிரிக்கலாம் என்பது ஐயத்திற்கிடமாகும். விளக்க நிலையில் தான் சொற்கள் திட்டவட்டமாகப் பிரிக்கப்படலாமேயன்றி அதற்கு முன்பல்ல என்பது சேனாவரையரால் சுட்டிக்காட்டப் படுகிறது.

தொல்காப்பியர் பயன்படுத்திய கெட என்ற சொல்லின் வலுவை உணர்ந்து கொள்ள சேனாவரையர் தவறிவிட்டார் என நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார். அது என்ற வேற்றுமை ஒட்டை பொறுத்தவரையில், சேத்தனது என்ற தொடரில் 'கெடுதல்' என்பது முந்தைய நிலையைக் குறிப்பதாகும்.

கூட்டுகளை உள்வட்டக்கூட்டு, வெளிவட்டக்கூட்டு எனப் பிரிக்கலாம் என்று முன்னர் பார்த்தோம். அம்மொழித்தொகை வெளிவட்டக்கூட்டின் கண்படும். உள்வட்டக்கூட்டானது பணிநிலை உள்வட்டக்கூட்டாகவோ (subordinate construction) சமநிலை உள்வட்டக் கூட்டாகவோ (Co-ordinate construction) வரலாம். பணிநிலை உள்வட்டக்கூட்டு இருமைக்கூறுகளாகக் கூறுபடும்; அதாவது இரண்டிரண்டாகக் கூறுபடும். ஆனால் சமநிலை உள்வட்டக்கூட்டு (இரண்டோ இரண்டிற்கு மேற்பட்ட) பல கூறுகளாகக் கூறுபடும். தொல்காப்பியரின் பார்வையில் இந்த வேறுபாடு இருப்பது தெரிகிறது; உரையாசிரியர்கள் இதை உம்மைத்தொகை பற்றி விளக்குகையில் குறிப்பிடுகிறார்கள். பிற தொகைகளில் இரண்டிற்கும் மேற்பட்ட சொற்கள் வந்தாலும் அவைகள் இரண்டு அலகுகளாக, அதாவது அடையாகவும் தலைச்சொல்லாகவும் கூறுபடும். சமநிலை உள்வட்டக்கூட்டில் இரண்டிற்கும் மேற்பட்ட அலகுகள் இணையலாம். கூட்டாக்க நிலையில் முன்னர் வரும் சொற்களின் ஒருமை ஒட்டு இழப்புற இறுதியில் வரும் சொல்லில் ஒருமை ஒட்டு பன்மை ஒட்டால் இடப்பெயர்ச்சி செய்யப்படும் (எ.கா. கபிலரும் பரணரும் > கபிலபரணர்). இங்கு ஆரம்ப நிலையிலிருந்த ஒருமை ஒட்டுகள் கூட்டுநிலையில் இழப்புற்று பன்மைஒட்டு புதிதாய் ஏற்படுத்தப்படுகிறது.

மரபிலக்கணத்தார் தொகைகளைத் தொகுப்புகளாய்க் காண்பதாய்த் தெரிகிறது. முதல் வகைத் தொகைகளைச் சமநிலை உள்வட்டக் கூட்டுகள் என்றும் இரண்டாம் வகைக் கூட்டுகளை மரபிலக்கணத்தார் நோக்கில் வேற்றுமைத் தொகைக்கூட்டு, வினைத்தொகைக்கூட்டு, பண்புத்தொகைக்

கூட்டு, உவமைத்தொகைக்கூட்டு என்று வகைப்படுத்தலாம். மூன்றாம் வகைத்தொகைகளை வெளிவட்டக்கூட்டுகள் என்று கூறலாம். அன்மொழித்தொகைக்கூட்டுகள் வெளிவட்டக் கூட்டுகளின் கண்படும்.

9.2.3.3. நன்னூலின் அணுகுமுறை

நன்னூலின் ஆசிரியரான பவணந்தி நன்னூல் என்ற பிரசித்தி பெற்ற இலக்கணத்தைப் பதிமூன்றாம் நூற்றாண்டில் எழுதினார். அவர் இளம்பூரணரின் தொல்காப்பிய உரையைப் பின்பற்றி இந்த இலக்கண நூலை எழுதியுள்ளதாய்த் தெரிகிறது. தொகை பற்றிய இவரது சூத்திரங்கள் சொல்லதிகாரத்தில் பொதுவியலில் கூறப்பட்டுள்ளது. (சூத்திரம் 316 இல் இருந்து 373 வரை).

சூத்திரம் 361-இல் இவர் தொகைகளைப் பற்றி விளக்கம் தருகிறார்.

"பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை
ஏழிய விரண்டு முதலாத் தொடருந்தொரு
மொழிபோ டைப்பனதொகைநிலைத் தொடர்ச்சொல்"

'பெயர்ச்சொல்லொடு பெயர்ச்சொல்லும், பெயர்ச் சொல்லொடு வினைச்சொல்லும் வேற்றுமை வினை பண்பெனப் பின்னர் வகுத்துக்கூறும் அறுவகைப் பொருட் புணர்ச்சிக் கண் அவற்றின் உருபுகள் இடையே தொக்கு நிற்ப இரண்டு முதலிய பல சொற்கள் தொடர்ந்து, ஒரு மொழி போல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொற்கள்' என்பது பவணந்தியின் தொகை பற்றிய விளக்கமாகும். இவர் கருத்துப்படி ஒரு தொடரில் நிலைமொழியும் (முதலில் நிற்கும் சொல்) வருமொழியும் (வந்து சேரும் சொல்) சேர்கிறபோது, இரண்டுக்கும் இடையில் வேற்றுமை உருபுகளோ பண்பு, வினை, உவமை முதலியவற்றின் உருபுகளோ மறைந்து நிற்குமானால் அத்தொடர்களைத் தொகைநிலைத்தொடர் எனலாம் என்று அறிகிறோம். 'சொற்கள் தொடர்ந்து நிற்கும் சொற்றொடர்களின் சொற்களின் இடையில் வரும் 'உருபுகள்' நீக்கமுறும் போது தொகைப்

பெறப்படுகின்றது என்று 'நீக்கம்' அடிப்படையிலான தொகையாக்கத்தை முன்வைக்கும் இலக்கண ஆசிரியர் குழுவைச் சார்ந்தவராய் இவரும் இருக்கிறார்.

இவரும் தொல்காப்பியரைப் பின்பற்றி

'வேற்றுமை வினைபண் புபவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையாறாகும்'

என்று ஆறு வகையான தொகைகளைக் குறிப்பிடுகிறார்.

• 'இரண்டு முதலா விடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே'
(சூத்திரம் 863)

என்றும்,

'காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை'

என்றும்,

'பன்மை விளக்கு மொழிதொக் கனவும்
'ஒருபொருட் கிருபெயர் ஏற்கவுங் குணத்தொகை'

என்றும்,

'உவம் வருபில துவமத் தொகையே'

என்றும்,

'போல புரைய வொப்பவுறழ
மான கடுப்ப வியைய வேய்ப்ப
நேர நிகரவன்ன வின்ன
என்பவும் பிறவு முவமுத்துருமே'

எனவும்,

'எண்ணலெடுத்தன் தன்முகத்தனீட்டல்
எனுநான் களவுள் உம்மில தத்தொகை'

எனவும்,

'ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி,

எனவும் ஆறு தொகைகளுக்கும் விளக்கம் தருகிறார்.

வேற்றுமையுருபுகள் வெளிபட வராத தொடர்கள் வேற்றுமைத்தொகை எனக் கூறும் இவர் இளம்பூரணரின்

'நீக்கக்கொள்கையை' ஆதரிக்கிறார். இவரது வினைத்தொகை பற்றிய விளக்கமும் 'காலமில்லாத பெயரெச்சம் வினைத்தொகை' என்று இளம்பூரணர், நச்சினார்க்கினியர் கருத்தைப் பின்பற்றியே அமைகிறது. இதன்படி வினைத்தொகையில் காலம்காட்டும் ஒட்டும் பெயரெச்ச ஒட்டும் மறைந்து வரும் என்று கொள்ளவேண்டும். பவணந்தி இளம்பூரணரைப் பின்பற்றி பண்புத்தொகை இருவகைப் படும் என்கிறார்.

1. ஒருவகைப் பண்புத்தொகையில் பண்பை விளக்கும் 'மொழிதொக்க வரும்'
2. பிறிதொன்றில் இரண்டு பெயர் வந்து ஒரு பொருளைத் தரும்

இதை மரபிலக்கணத்தார் இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர். பவணந்தி இளம்பூரணரைப் போலவே உவமை உருபில்லாது வருவது உவமைத்தொகை என்று குறிப்பிட்டு மேலும் மறைந்து வரும் உவம உருபுகளாகப் போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, வேய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன போன்றவைகளைக் குறிப்பிடுகிறார். உம் இல்லாது வரும் தொகை உம்மைத்தொகை என்று குறிப்பிடும் பவணந்தி எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்களவையின் போது -உம் வராது வருவது உம்மைத்தொகை என்பதை 'வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகை நிலைத்தொடர் மொழிகட்கும் புறத்த அவையல்லாத பிற மொழிகளாகிய உருபுகள் தொகுதல்' என்று விளக்குகிறார். தொல்காப்பியர் மூன்று வகை அன்மொழித்தொகையைக் குறிப்பிடும்போது பவணந்தி இளம்பூரணரைப் பின்பற்றி ஐவகை அன்மொழித்தொகை பற்றிப் பேசுகிறார்.

தொகைப் பொருள் சிறப்பு

தொல்காப்பியரைப் போலவே இவரும் நான்கு இடங்களில் தொகைப் பொருள் சிறப்பதைப் பற்றிக் கூறுகிறார்:

'முன்மொழி பின்மொழி பன்மொழி பிறமொழி
எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப் பொருள்''
(சூத்திரம் 370)

தொகைகளில் உருபொனியல் மாற்றம்

இவர் இளம்பூரணரைத் தொடர்ந்து தொகைகளில் உருபொனியல் விதிகளைப் பற்றிப் பேசுகிறார்.

'வல்லொற்று வரினே யிடத்தொகையாகும்
மெல் லொற்று வரினே பெயர்த் தொகையாகும்'
(சூத்திரம் 371)

இக்கருத்துப்படி பெயர்கள் சேர்ந்து வரும் போது இருவகையான மாற்றங்கள் விளையலாம்: ஒரு நேர்வில் வருமொழியின் முதலில் வரும் புறவுயிர்ப்பு அடைப்பொலி (plosive) இரட்டி இடத்தொகையெனக் காட்டும். பிறிதொரு நேர்வில் இரட்டிப்பதற்குப் பதில் நிலைமொழியின் ஈற்றில்வரும் மூக்கொலி வருமொழியின் புறஉயிர்ப்பு அடைப்பொலியைப் பொறுத்து உறுப்பொன்று மூக்கொலியாய் (homarganic nasal) மாறும்.

எ.கா.

வடுக+கண்ணன்> வடுகக் கண்ணன்

'வடுக நாட்டைச் சார்ந்த கண்ணன்'

வடுகன்+கண்ணன்> வடுகங்கண்ணன்

'வடுக இனத்தைச் சார்ந்த கண்ணன்'

தொகை நிலைத்தொடர்களின் பொருள் மயக்கம்

நன்னூலார் சூத்திரம் 373-இல் தொகைநிலைத் தொடர்கள் பொருள் மயக்கமுறுவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

'தொக்குழி மயங்குற வீரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கு மென்ப'

'தொகைநிலைத் தொடர்கள் உருபு தொக்கு நின்றமையினால் பொருளின் மயங்கும்' என்கிறார் ஆசிரியர். எடுத்துக்காட்டாக, தெய்வ வணக்கம் என்பது 'தெய்வத்தை வணங்கும் வணக்கம்' என்றும் 'தெய்வத்திற்கு வணக்கம்' என்றும் விரிந்து

பொருள்படலாம். தொல்காப்பியரும் வேற்றுமை மயங்கியலில் பொருள் மயங்கி வரும் கட்டுகளைப் பற்றிக் கூறுகிறார். இவ்வாறு பயணந்தி தொல்காப்பியரை இளம்பூரணரின் பார்வையில் கண்டு இலக்கணம் கூறுகிறார்.

9.2.3.4. விஜயவேணுகோபால் பார்வையில் கூட்டுப்பெயராக்கம்

விஜயவேணுகோபால் (Vijaya Venugopal, 1979) 'Nominal Composition in Tamil' என்ற தமது நூலில் தமிழில் கூட்டுப்பெயராக்கம் பற்றி விரிவாக ஆய்கிறார். இவர் 1960-களில் நிலவிய ஆக்கமுறை மாற்றிலக்கணச் சட்டகம் அடிப்படையில் தமிழ்க்கூட்டுகளை ஆய்கிறார். இவருடைய கோட்பாட்டு உள்நோக்குகள் லீஸ் (Lees,1960,1970), போத்தா (Botha,1968), ரெய்பெல்(Reibel,1963), பில்மோர் (Fillmore,1968) ஆகியோரால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இக்கோட்பாட்டின்படி கூட்டுகள் எல்லாம் அகஅமைப்புகளிலிருந்து மாற்று விதிகளால் ஆக்கப்பட்ட புற அமைப்புகளாகும்; சொற்கள் அடுத்து வருவதால் உருவாகும் இணைப்பாக்கப் பெயர்ச்சொற்கள் என்பது சரியான விளக்கமல்ல. இதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாகக் கூட்டுகளை இணைப்பாக்கங்களாய் எடுத்துக்கொண்டால், அதாவது பெயர்+பெயர் அலகுகளாய் எடுத்துக்கொண்டால், பெட்டி மரம் போன்ற கூட்டுகள் உருவாகலாம்; இதை விட்டிசையில்லாது உச்சரித்தால் எந்தப் பொருளும் தராது; ஆனால் மரப்பெட்டி என்ற இணைப்பு, பொருள் அடிப்படையிலும் இலக்கண அடிப்படையிலும் சரியானதாகும். இது பின்வரும் கருத்துக்களைக் காட்டுகிறது: இரண்டு பெயர்களை அடுத்தடுத்து வைப்பதால் அவைக் கூட்டாகி விடாது; அந்த இணைப்பு இலக்கண அடிப்படையில் சரியாக இருக்கவேண்டும்; அதாவது இந்த இணைப்பாக்கங்கள் முறையானதாக இருக்க வேண்டும். இயல் மொழி பேசுபவர்களுக்குத்தான் இணைப்புப் பெயர்களில் எது முறையில்லாதது என்பது தெரியும். இயல்மொழி பேசுபவரின் அறிதிறன் (competence) இலக்கணவிதிகளால் தான் முறைப்படுத்த இயலும் அல்லது

வாய்ப்பாட்டின் கீழ் கொண்டுவர இயலும். இவ்விதிகள் கூட்டுகளுக்கு இலக்கண அமைப்புகள் தரும். நல்லாக்க இணைப்புப் பெயர்கள் அல்லது இலக்கண வடிவுகளில் உள்ளடங்கிய கூட்டுகள் மற்றும் அவைகளுக்கிடையேயுள்ள தொடரியல் உறவுகள், இலக்கண அடிப்படையில் உள்ளுறையும் வெளிப்பாட்டில் நிகழ்வதைப் பிரதிபலிக்கும். புற அமைப்புகளாக எடுத்துக் கொள்ளப்படும் கூட்டுகளும் அவற்றில் வெளிப்படுத்தப்படும் சொற்களும் அவைகளுக் கிடையேயுள்ள இலக்கண உறவுகளும் வெளிப்படையாகக் குறிப்பீடு செய்யப்படும் அகஅமைப்புகளிலிருந்து மாற்று விதிகளால் ஆக்கப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக காட்டு யானை என்ற கூட்டு யானை காட்டில் வாழ்கிறது என்ற வாக்கியத்திலிருந்து ஆக்கப்பெறும். கூட்டில் வரும் உறுப்புகளான யானைக்கும் காட்டுக்கும் இடையேயுள்ள உறவு இதன் அகஅமைப்பாய் வரும் வாக்கியத்தில் காணப்பெறும் இவ்விரு சொற்களுக்கிடையேயுள்ள உறவாகும்; அதாவது பயனிலை- இடப்பொருள் உறவாகும். இம்மாதிரியான கூட்டுகளைப் புற அமைப்புகளாய்க் கருத பல பொருண்மை மற்றும் தொடரியல் காரணங்கள் உள்ளன. பொருண்மையைப் பொறுத்தவரையில் புற அமைப்புகள் பொருள்கோளுக்குத் தேவையான தகுந்த உறவுகளைக் காட்டுவதில்லை என்று வாதிடலாம். காட்டு யானை என்ற அமைப்பாய் வரும் கூட்டு இதன் உறுப்புகளுக் கிடையேயுள்ள தொடரியல் உறவை வெளிப்படையாகக் காட்டவில்லை. பொருண்மையியல் நிலையில் பொருத்தமான பொருள்கோளுக்குத் தொடரியல் செய்தி தேவையானதாகும். அகஅமைப்புகளிலிருந்து கூட்டுகள் ஆக்கம் பெறாவிட்டால் புற அமைப்பிலும் அக அமைப்பிலும் காணப்பெறும் இலக்கண உறவுகள் கணிக்கப்பெறாது போய்விடும்.

இரண்டாவதாகப் பல கொள்கருத்துகளின் (readings) அடிப்படையிலான மாற்நிலக்கண அணுகுமுறையை ஏற்றுக்கொண்டால் சில கூட்டுகளில் காணப்பெறும் பன்முனைப் பொருள்மயக்கத்தைத் தெளிவிக்க இயலும்.

இவ்வாறு வேறுபட்ட கொள்கருத்துகளிலிருந்து பொருள் மயக்கத்தைக் கண்டுகொண்டு அவற்றை இலக்கணப்படி விளக்குவது, மொழி பேசுபவர்களின் உருசார்ந்த பண்பாடு (material culture) பற்றிய அறிவு போன்ற மொழியியலுக்குப் புறம்பான காரணிகளில் தேவையில்லாமல் புகலிடம் தேடுவதிலிருந்துத் தப்பலாம். எடுத்துக்காட்டாகத் துணிப்பை என்ற கூட்டை எடுத்துக்கொண்டால் அது 'துணியாலான பை' அல்லது 'துணி வைப்பதற்கான பை' என்று பொருள்பட்டு பொருள் மயக்கம் காட்டலாம். சரியான பொருளைத் தீர்மானிக்கப் பொருத்தமான அக அமைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டி வரும். கூட்டுகளை எளிதாகப் பெயர்+பெயர் என்ற இணைப்பு வடிவங்களாகும் என்பது பொருள் மயக்கத்தைத் தெளிவிக்காது; மட்டுமன்றி விளக்கத்திற்காக மொழியியலுக்குப் புறம்பான காரணிகளைச் சார்ந்திருக்க வேண்டி வரும். அவ்வாறல்லாமல், பொருத்தமான அக அமைப்பிலிருந்து ஒரு கூட்டை ஆக்குவதாயிருந்தால், அது பொருள் மயக்கத்தைத் தெளிவிப்பதோடு, மொழியியலுக்குப் புறம்பான காரணிகளைத் துணை ஆதாரமாகக் கொள்வதைத் தவிர்க்கச் செய்யும். மேலும் புற அமைப்புகள் மற்றும் அக அமைப்புகள் இவற்றின் அங்கங்களுக்கு இடையே காணப்படும் உண்மையானதும் சமமானதுமான உறவுகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவ்வழியால் தனிப்பட்ட அமைப்புகளை மெய்யாகக் கொள்வதைத் தவிர்க்கலாம்.

தொடரியல் காரணத்தை எடுத்துக்கொண்டால் மாற்றிலக்கணச் செயற்பாடுதான் மரப்பெட்டி, பணப்பெட்டி என்ற கூட்டுகளுக்கிடையேயுள்ள வேறுபாட்டை விளக்கும். இந்த இரு கூட்டிலும் பெட்டி என்ற சொல் இரண்டாவது அங்கமாகவும் ஒரு பெயர்ச்சொல் முதல் அங்கமாகவும் இருந்தாலும், அவைகளுடைய தொடரியல் பண்புகள் பெரிதும் வேறுபட்டனவாகும். எடுத்துக்காட்டாக, மரப்பெட்டி என்பதை மரத்தால் ஆன பெட்டி என்று பெயரெச்சத்தொடராக மாற்ற முடியும். ஆனால் பணப்பெட்டி என்பதைப் பணத்தால் ஆன பெட்டி என்று மாற்ற இயலாது. மாறாக பணத்துக்குள்ள பெட்டி என்று மாற்ற முடியும்.

ஆனால் மரத்துக்குள்ள பெட்டி என்று மாற்ற இயலாது. இதுபோலவே பெட்டியில் பணத்தை வைத்தான் என்பது இலக்கணத்தன்மையானது. பெட்டியில் மரத்தை வைத்தான் என்பது வழுவாகும். மரப்பெட்டி என்ற கூட்டு ஒருவன் மரத்தால் பெட்டியைச் செய்தான் என்ற மூல வாக்கியத்திலிருந்து ஆக்கப்பட்டதாகும்; இங்கு மரத்திற்கும் பெட்டிக்கும் இடையேயுள்ள தொடரியல் உறவு 'கருவி-செயப்படுபொருள்' ஆகும். ஆனால் பணப்பெட்டி என்பது ஒருவன் பணத்திற்காகப் பெட்டியைச் செய்தான் என்ற மூல வாக்கியத்திலிருந்து ஆக்கப்பெற்றதாகும். பணத்திற்கும் பெட்டிக்கும் இடையேயுள்ள உறவு பொருட்டு-செயப்படுபொருள் உறவாகும். இந்த ஆழ்ந்த தொடரியல் உறவு பெயர்+பெயர் என்று கூட்டுச் சொற்களாய் வரும் புற அமைப்பு நிலையில் பிரதிபலிக்கவில்லை (வெளிப்பட வில்லை). எனவே தான் மாற்றியலக்கண அணுகுமுறை விரும்பத்தக்கதாகும்.

9.2.3.4.1.கூட்டாக்கம்

கூட்டுகளை உருவாக்கும் விதிகள் வாக்கியங்களையும் உருவாக்கும் விதிகள் என்ற காரணத்தால், அவைகள் ஒரு கூட்டின் உறுப்புகளுக்கிடையேயுள்ள உறவுகளை விளக்குவதோடு மட்டுமன்றி, ஆக்கப் பெற்ற கூட்டுகளை வாக்கியத்தின் பொருத்தமான இடத்தில் வைக்கவும் பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக, சமநிலைக் கட்டின் கூட்டான கபிலபரணர் என்பது பன்மைப் பெயர்; இது பன்மைப் பெயர் வரும் இடத்தில்தான் வரும்; இவ்வாறு விதிகள் கூட்டு வரும் தலைமை வாக்கியத்திற்கும் கூட்டு ஆக்கப்படும் உட்படு வாக்கியத்திற்கும் பொருந்தும். இவ்வாறு ஆய்வின் விளக்க ஆற்றலை அதிகரிக்கப் பொதுவான விதியைக் கைக்கொள்ள இயலும்.

வாக்கியத்தின் உறுப்புகளிலிருந்து கூட்டை ஆக்கவும் தலைமை வாக்கியத்தில் மாற்றீடு செய்வதையும் கீழ்வரும் படத்தால் விளக்கலாம்.



இதில் S_1 என்பது கூட்டு ஆக்கப்பெற்ற உறுப்பு வாக்கியத்தைக் குறித்து நிற்கிறது. NP_1 என்பது தலைமை வாக்கியத்தில் பெயரைக் குறித்து நிற்கிறது. சில நேர்வுகளில் ஒன்றிற்கும் மேற்பட்ட உறுப்புகள் வாக்கியங்களில் பங்கெடுக்கலாம்; இந்த நேர்வுகளில் மாற்று விதிகள் வாக்கியத்தின் மிகஆழமான உறுப்பு வாக்கியத்தில் பயன்படுத்தப்படும். பின்னர் அதற்கு அடுத்த உயர்ந்த உறுப்பு வாக்கியத்தில் பயன்படுத்தப்படும்; இப்படிப் பயன்பாடு தொடரலாம். பகுப்பாய்வு பற்றி விளக்குகையில் பின்வரும் நெறிமுறை பின்பற்றப்படும். முதலாவது கூட்டின் உறுப்புகளுக்கு இடையே உள்ள உறவின் வகை தரப்படும். பின்னர் தகுதியுள்ள மூலவாக்கியம் குறித்தும் அகஅமைப்பு குறித்தும் விவாதிக்கப்படும். பொருத்தமான மூலவினைகளும் பரிந்துரைக்கப்படும். இதன் பின்னர் அடித்தொடர் வடிவம் (base phrase marker) மற்றும் தலைமை வாக்கியத்தின் பெயர்த்தொடர் (NP) இவற்றை விளக்கும் கிளைப்படத்தில் தொடங்கி ஆக்கச்செயற்பாடுகள் விரிவாக விளக்கப்படும். பின்னர் ஆக்கத்திற்கான பல மாற்று விதிகள் கூறப்பட்டு ஆக்கம் படிப்படியாக விளக்கப்படும். இம்மாற்று விதிகள் முறையான செயன்மைகளை (formal operations) பின்வருமாறு குறிப்பீடு செய்யும்: *(1)* இச்செயன்மைகள் பயன்படுத்தப் படும் அடிப்படைத் தொடரியல் வடிவங்களின் குழுமத்தைக் (set of phrase markers) கூறும் ஒரு அமைப்பு விளக்கம் (structural description), *(2)* முறையான செயன்மைகளின் விளைவான அமைப்பு மாற்றம் (structural change), *(3)* ஒரே மாதிரியான பெயர்த் தொடர்களில் ஒன்றை நீக்கம் செய்யும் சமநிகர் பெயர்த்தொடர் நீக்கம் (equi noun phrase deletion); இது தலைமை வாக்கியத்தில் பொருத்தப்படும்; இச் சமநிகர் பெயர்த்தொடர் நீக்கம் கடைசி நிலையில் தான் பிரயோகிக்கப்பட வேண்டும்; ஆரம்ப நிலையில் செய்தால்

அது சிக்கலான நிலையை உண்டுபண்ணும்; எனவே மேலும் மாற்றங்களைச் செய்ய அனுமதி கிடைக்காது போகும்.

9.2.3.4.2. சிக்கல்கள்

(1) கூட்டாக்கத்தில் சந்திக்கக்கூடிய சிக்கல்களில் ஒன்று சீரற்ற வினை அவாய் நிலையாகும் (verbal ellipsis). உறுப்புகளுக்குள் ஒரே உறவுகளைக் காட்டும் கூட்டும் இதன் கீழ் வரும். எடுத்துக்காட்டாக, பால்மாடு என்ற கூட்டின் மூல வாக்கியமான மாடு பால் தருகிறது என்பதில் காணப்படும் தருகிறது என்ற மூலவினை கூட்டாக்கச் செயற்பாங்கின் போது நீக்கப்படும். தகுந்தவினை புறஅமைப்பில் காணப்படாத காரணத்தால் ஏன் பால்மாடு என்ற கூட்டு தருகிறது என்ற வினையுள்ள மூல வாக்கியத்தில் மட்டுமிருந்து ஆக்கப் பெறுகிறது, ஏன் முறையான வாக்கியங்களான மாடு பாலை வைத்திருக்கிறது, மாடு பாலைச் சொரிகிறது அல்லது முறையற்ற வாக்கியங்களான மாடு பாலைக் கேட்கிறது என்பவற்றிலிருந்து ஆக்கப்பெறவில்லை என்ற கேள்விகள் எழும். பலவினைகள் வருவதற்குத் தகுந்தாற்போல் கூட்டுகள் பலவழிகளில் பொருள்மயக்கம் உள்ளதாய் இயல்மொழி பேசுவோர் புரிந்துக் கொள்வதாய் நாம் எடுத்துக்கொள்ளலாம்; அல்லது ஒரு மொழியின் இலக்கணமானது இலக்கண வகைபாடுகளுடன் கூடிய பொருத்தமான வினைகளை வெளிப்படையாகத் தகுந்த ஒட்டுகளுடன் தொடர்பு படுத்துகிறது. இம்மாதிரியான பல நேர்வுகளில் வினைப்பொருள்கள் (அர்த்தங்கள்) தலைப்பெயர்களின் பொருண்மை விளக்கத்துடன் தொடர்புடையதாய் இருக்கிறது. இவற்றுள் இரண்டாவதான தற்கோள் உண்மை எனத் தோன்றுகிறது. இவ்வாறு கூட்டுகளின் பொருள்களுக்கும் அவற்றின் அகத்தொடரியல் அமைப்புக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு அறியப்படுகிறது. இதனால் கூட்டுகளை எல்லையில்லா அளவிலான பொருள் மயக்கம் உள்ளன என்று இனம் காண்பதைத் தவிர்க்கலாம். பெ.தொ+பெ.தொ+இணைப்பு வினை (NP+NP+Copula Verb) என்ற அமைப்பொழுங்கு உள்ள வாக்கியங்களில்

உள்ளது போன்று இவ்வகை வினைத்தொடர்பு இல்லாத சில கூட்டுகள் உள்ளன.

(2) ஆக்கச் செயற்பாங்கில் சந்திக்கும் பிறிதொரு சிக்கல் என்னவென்றால் ஒரு அகஅமைப்பு இரு புற அமைப்புகளாக விளைவுறலாம். எடுத்துக்காட்டாக, காட்டுயானை, யானைக்காடு என்ற கூட்டுகளை எடுத்துக்கொண்டால், இந்தப் புற அமைப்புகள் யானை காட்டில் இருக்கிறது என்ற உள்ளுறை வாக்கியத்திலிருந்து ஆக்கப்பெறலாம். தலைமை வாக்கியத்தின் பெயர்த்தொடரால் ஏவப்பட்ட புற அமைப்புகளைப் பெற இரண்டு வேறுபட்ட ஆக்கச்செயற் பாங்குகள் தேவை. காட்டு யானை என்பது இடப்பொருள் பெயரெச்சப்படுத்தத்தை உட்படுத்துகிறது. யானைக்காடு என்பது எழுவாய்ப் பெயரெச்சப்படுத்தத்தை உட்படுத்துகிறது. இதன்படி காட்டுயானை என்பதன் ஆக்கம் பின்வருமாறு அமையும்:

யானை காட்டில் உள்ளது ----> காட்டிலுள்ள யானை ----> காட்டுயானை

யானைக்காடு என்பதன் ஆக்கம் பின்வருமாறு அமையும்:

யானை காட்டில் உள்ளது ----> யானை உள்ள காடு ----> யானைக்காடு

(3) பெயர்+பெயர் கூட்டை ஒரு தனிநிலைப்பெயரால் இடப்பெயர்ச்சி செய்யலாம் என்ற பொதுக்கொள்கையானது சமநிலை உள்வட்டக்கூட்டால் வரம்பு மீறப்படுகிறது. இத்தகைய கூட்டுகள் பன்மையைக் காட்டக் கூடுதலான உருபனை அவசியப்படுத்துகிறது. உயர்திணை உறவைத் தெரிவிக்கும் கூட்டுகளின் நேர்வுகளில் பன்மை உருபு கட்டாயமாகத் தேவை என்பது மூலவாக்கியங்களில் பன்மை எழுவாய் இருப்பதை அவசியப்படுத்துகிறது. இத் தனித்தன்மைக்கு (வழக்கம் மீறிய பண்புக்கு) மாறாக ஒருங்கிணைக்கருத்துச் சாயலைச் (unified notion) சமநிலை உள்வட்டக்கூட்டுகள் தெரிவிக்கின்றன.

(4) உவம உருவகக் கூட்டுப்பெயர்களும் (figurative nominal compounds) மரபுக்கூட்டுப்பெயர்களும் வேறு வகையான சிக்கலைத் தருகின்றன. உருவக கூட்டுப் பெயர்களை ஆக்கும் உறுப்புகளுக்கு இடையே உள்ள ஒத்த பண்புக்கூறுகளின் அடிப்படையில் இவற்றின் அக அமைப்புகள் அமையும்.

உவம உருவகக்கூட்டுப் பெயர்கள் பின்வரும் இரு அமைப்பொழுங்குகளில் ஒன்றாக அமையும்:

1. ஒப்புமைப்படுத்தப்படும் பொருள் (உவமானம்)+
ஒப்புமைப்படுத்தப்பட்ட பொருள் (உவமேயம்)

2. ஒப்புமைபடுத்தப்பட்ட பொருள் (உவமேயம்)+
ஒப்புமை படுத்தப்படும் பொருள் (உவமானம்)

முதல் வகையான பெயர்களை உவமக் கூட்டுப்பெயர்கள் என்றும் இரண்டாவது வகையானவற்றை உருவகக் கூட்டுப்பெயர்கள் என்றும் கூறலாம் என்று தோன்றுகிறது. முதலாவது வகையான உவமக்கூட்டுப் பெயர்களை ஒற்றுமை வகைகருதி வடிவ அடிப்படையிலோ (எ.கா. துடியிடை விற்புருவம்), வண்ண (நிற) அடிப்படையிலோ (எ.கா. பால் முகம், பவளவாய்) செயல் அடிப்படையிலோ (எ.கா. புலிப் பாய்ச்சல், உடும்புப்பிடி) மேற்சொன்ன மூன்றும் அல்லாத பண்புக்கூறுகளின் அடிப்படையிலோ (எ.கா. சர்க்கரைப் பேச்சு, கல்நெஞ்சு) ஒன்றுக்கு மேற்பட்ட பண்புக்கூறுகளின் அடிப்படையிலோ (எ.கா. குவளைக்கண், அரிசிப்பல்) மேலும் வகைப்பாடு செய்யலாம். உவமக்கூட்டுகளுக்கும் உருவகக்கூட்டுகளுக்கும் அக அமைப்புகளைக் கண்டு கொள்வதும் பிறவகைக் கூட்டுகளைப் போலச் சிக்கலானதாகும்.

மரபுக் கூட்டுகள் உவம உருவகக் சுட்டுகளிலிருந்து வேறுபடுகிறது. மரபுக் கூட்டுகளின் தலைச்சொல் கூட்டின் உறுப்புச் சொற்களுக்குப் புறம்பாக அமைவதால் இவற்றை வெளிவட்டக் கூட்டுகள் எனலாம். எடுத்துக்காட்டாக, முந்திரிக்கொட்டை என்ற கூட்டு மரபிலாக் கூட்டாக

(உள்வட்டக் கூட்டாக) முந்திரி மரத்தின் கொட்டையைக் குறிக்கும், மரபுக்கூட்டாக (வெளிவட்டக்கூட்டாக) 'எதற்கும் முந்திக் கொண்டு நிற்கும் நபர்' என்பதைக் குறித்து நிற்கும். மரபுக்கூட்டுகள் மரபிலாக் கூட்டுகளிலிருந்து அக அமைப்புகளில் வேறுபடுகின்றன. மரபுக் கூட்டுகள் உவம உருவகக்கூட்டுகளினின்றும் வேறுபடுகின்றன. மரபுக்கூட்டு களுக்கான அக அமைப்பைக் காண்பதும் சிக்கல் நிறைந்த வேலையாகும்.

கூட்டாக்கச் செயற்பாட்டின போது நீக்கப் பெற்ற அலகுகள் ஏதாவது நிலையில் மீளப் பெற வேண்டும். இந்தச் சிக்கலானது சிக்கல் ஒன்றுடன் தொடர்புடையது. புற அமைப்பு பெறும் முன்பே மூல வினை மீளப் பெற வேண்டியதாகும். இந்தத் திரும்பப்பெறுகை (மீளப்பெறுகை) நிகழக்கூடியதென நிரூபிக்கலாம் என்று தோன்றுகிறது.

9.2.3.4.3.கூட்டுகளைப்பாகுபாடு செய்தல்

கூட்டுகளை அவற்றின் அங்கங்களின் அக அமைப்புகளின் வருகையில் பெறும் தொடரியல் உறவுகள் அடிப்படையில் பாகுபாடு செய்யலாம். கீழே இப்பாகுபாட்டின் பட்டியல் எடுத்துக்காட்டுகளுடனும் அவற்றின் மூல வாக்கியங்களுடனும் தரப்பட்டுள்ளது.

1.இரண்டாம் அங்கம் செயப்படுபொருளாய் வரும் கூட்டுகள்

1. எழுவாய் + செயப்படுபொருள்

எ.கா.

காக்காய் கூடு

மூல வாக்கியம் : காக்காய் கூடு கட்டியது

2. கருவிப் பொருள்+செயப்படு பொருள்

எ.கா.

மண்பொம்மை

மூல வாக்கியம் : ஒருவன் பொம்மையை மண்ணால் செய்தான்

3. நீக்கல் பொருள் +செயப்படு பொருள்

எ.கா.கரும்புச்சாறு

மூல வாக்கியம் : ஒருவன் கரும்பிலிருந்து சாற்றை எடுக்கிறான்

4. பொருட்டுப் பொருள்+செயப்படுபொருள்

எ.கா.ரசவாளி 'ரசம் உள்ளவாளி/ ரசம் வைக்கும் வாளி'

மூல வாக்கியங்கள்:1. ரசம் வாளியில் இருக்கிறது
2. ஒருவன் ரசம் வைத்துக் கொள்வதற்காக வாளியை வைத்திருக்கிறான்

5. இடப்பொருள்+செயப்படுபொருள்

எ.கா. நெற்றிச்சுட்டி

மூலவாக்கியம் : ஒருத்தி நெற்றியில் சுட்டியைக் கட்டுகிறாள்

6. காலப்பொருள்+செயப்படுபொருள்

எ.கா. மதிய உணவு

மூல வாக்கியம் : அவர்கள் மதியத்தில் உணவைக் கொடுக்கிறார்கள்

7. வினையடை+செயப்படுபொருள்

எ.கா. தப்புக்கணக்கு

மூல வாக்கியம் : ஒருவன் கணக்கு தப்பாகப் போட்டான்

8. வினை (பயனிலை)+செயப்படுபொருள்

எ.கா. குடிதண்ணீர்

மூல வாக்கியம் : ஒருவன் தண்ணீரைக் குடிக்கிறான்

2.இரண்டாம் அங்கம் கேண்மைச் செயப்படு பொருளோடு (as cognate object) வரும் கூட்டுகள்

1. எழுவாய்+கேண்மைச் செயப்படுபொருள்

எ.கா. கரடிப்பிடி

மூல வாக்கியம் : கரடி பிடித்தது

2. செயப்படுபொருள்+கேண்மைச் செயப்படுபொருள்

எ.கா. தேனீ வளர்த்தல்

மூல வாக்கியம் : அவன் தேனீயை வளர்க்கிறான்

3. கருவிப்பொருள் + கேண்மைச் செயப்படுபொருள்

எ.கா. உடல் உழைப்பு

மூல வாக்கியம் : அவன் உடலால் உழைக்கிறான்

3. இரண்டாவது அங்கம் எழுவாயாய் வரும் கூட்டுகள்

1. செயப்படுபொருள் + எழுவாய்

எ.கா. பால்மாடு

மூல வாக்கியம் : மாடு பால் தரும்

2. உடனிகழ்ச்சிப் பொருள் + எழுவாய்

எ.கா. நாட்டுப்பற்று

மூல வாக்கியம் : பற்று நாட்டோடு உண்டு

3. கொடைப்பொருள் + எழுவாய்

எ.கா. தேள் கொடுக்கு

மூல வாக்கியம் : கொடுக்கு தேளுக்கு உண்டு

4. நீங்கல்பொருள் + எழுவாய்

எ.கா. குழாய்த்தண்ணீர்

மூல வாக்கியம் : தண்ணீர் குழாயிலிருந்து வருகிறது

5. இடப்பொருள் + எழுவாய்

எ.கா. கடல்மீன்

மூல வாக்கியம் : மீன் கடலில் வாழ்கிறது

6. காலம் + எழுவாய்

எ.கா. காலை வெயில்

மூல வாக்கியம் : வெயில் காலையில் அடிக்கும்

7. வினையடை + எழுவாய்

எ.கா. தெளிநீர்

மூல வாக்கியம் : நீர் தெளிவாக இருக்கிறது

8. காரணப்பொருள் + எழுவாய்

எ.கா. பசிமயக்கம்

மூல வாக்கியம் : பசி ஏற்பட்டதால் மயக்கம் வந்தது

9. பயனிலை + எழுவாய்

எ.கா. ஆடு சதை

மூல வாக்கியம் : சதை ஆடும்

5. இடப்பொருள் இரண்டாவது அங்கமாய் வரும் கூட்டுகள்

1. எழுவாய் + இடப்பொருள்

எ.கா. பாம்பு புற்று

மூல வாக்கியம் : பாம்பு புற்றில் உள்ளது/இருக்கிறது/தங்குகிறது

2. செயப்படுபொருள் + இடப்பொருள்

எ.கா. மிட்டாய்க்கடை

மூல வாக்கியம் : ஒருவன் மிட்டாயைக் கடையில் விற்கிறான்

6. காலம் இரண்டாவது அங்கமாய் வரும் கூட்டுகள்

1. எழுவாய் + காலம்

எ.கா. மழைக்காலம்

மூல வாக்கியம் : மழை ஒரு குறிப்பிட்ட காலத்தில் பெய்யும்

2. செயப்படுபொருள் + காலம்

எ.கா. சாப்பாட்டு நேரம்

மூல வாக்கியம் : ஒருவன் குறிப்பிட்ட நேரத்தில் சாப்பிட்டான்

7. பிற வகைகள்

1. குறிப்பானது + பொதுப்படையானது

எ.கா. தென்னை மரம்

மூல வாக்கியம் : இந்த மரம் தென்னை ஆகும்

2. வினையின் பங்கெடுப்பாளர்கள் அங்கங்களாய் வரும் கூட்டுகள்

1. செயப்படுபொருள் + வினை + இ அல்லது

செயப்படுபொருள் + வினை + (எழுவாய்)இ

எ.கா. ஊர் சுற்றி

மூல வாக்கியம் : ஒருவன் ஊரைச் சுற்றுகிறான்

2. இடப்பொருள் + வினை + (எழுவாய்) இ

எ.கா. தெருப்பொறுக்கி

மூல வாக்கியம் : ஒருவன் தெருவில் பொறுக்குகிறான்

3. செயப்படுபொருள் + வினை+ (கருவிப்பொருள்) இ

எ.கா. மண்வெட்டி

மூல வாக்கியம் : ஒருவன் ஒரு கருவியால் மண்ணை வெட்டுகிறான்

8. சமநிலை உள்வட்டக்கூட்டுகள்

எ.கா. கபிலபரணர்

மூல வாக்கியம் : அவர் கபிலர் ஆவர். அவர் பரணர் ஆவர்

எ.கா. செடிகொடிகள்

மூல வாக்கியம் : அது செடியாகும். அது கொடியாகும்

9. உவம உருவகப் பெயர் கூட்டுகள்

எ.கா. விற்புருவம்

மூல வாக்கியம் : புருவம் வில்லைப் போல உள்ளது

எ.கா. முகமதியம்

மூல வாக்கியம் : மதியம் முகம் ஆகும்

10. மரபுப்பெயர் கூட்டுகள்

எ.கா. முந்திரிக்கொட்டை

மூல வாக்கியம் : முந்திரிக்கொட்டை போலப் பேச்சில் முன்னால் இருக்கிறவன், முந்திரிக் கொட்டை ஆவான்

11. பல்பெயர் கூட்டுகள்

எ.கா. மாம்பழச்சாறு

மூல வாக்கியம் : மாம்பழத்தில் சாறு இருக்கிறது

எ.கா. வடபெருங்கோவில்

மூல வாக்கியம் : வடக்கே பெரிய கோவில் உள்ளது

9.2.3.5. சொற்சேர்க்கை குறித்த மறைமலையின் அணுகுமுறை

மறைமலை (1984) ஆட்சித்துறைச் சொற்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சொல்லாக்கத்தை ஆய்கிறார். மறைமலை சொற்களை அவற்றின் அமைப்புகளின் அடிப்படையில் பாகுபடுத்துகிறார். சொற்களின் சேர்க்கைகளை அவர் மூன்று வகையாகப் பிரிக்கிறார்: (1) இருபெயர்த் தொகைச் சொல்லாக்கம், (2) பல்பெயர்த் தொகைச் சொல்லாக்கம், (3) கூட்டுச்சொல்லாக்கம். இவரும் பெயராக்கம் குறித்தே பேசுகிறார்.

9.2.3.5.1. இருபெயர்த்தொகைச் சொல்லாக்கம்

இவர் மரபிலக்கணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைச்சொல்லாக்கத்தின் வழிநின்று இவ்வாக்கத்தை விளக்கலாம் என்கிறார். மேலும் ஆட்சித்துறைச் சொற் கோவையில் வேற்றுமை, பண்பு, வினை என்பதன் தொகைச் சொற்கள் பெரும்பான்மையாகவும் உவமை, உம்மை என்பதன் தொகைச்சொற்கள் மிகச் சிறுபான்மையாகவும்

காணப்படுகின்றன என்றும் அன்மொழித்தொகைச் சொல்லாக்க உத்தியைக் கொண்டு சொற்கள் படைக்கப் பெறவில்லை என்றும் குறிப்பிடுகிறார்.

எ.கா.

மகரந்தப்பை 'மகரந்தத்தை உடைய பை' -

இரண்டாம் வேற்றுமைத் தொகை

மணல்மேடு 'மணலால் அமைந்த மேடு'-

மூன்றாம் வேற்றுமைத்தொகை

மக்கள் கல்வி 'மக்களுக்குக் கல்வி' -

நான்காம் வேற்றுமைத்தொகை

மழை அளவு 'மழையது அளவு' -

ஆறாம் வேற்றுமைத்தொகை

மரப்புழு 'மரத்தின் கண்வாழும் புழு' -

ஏழாம் வேற்றுமைத்தொகை

கருங்கல் -பண்புத்தொகை

குழல் விளக்கு - உவமைத்தொகை

வரவு செலவு - உம்மைத்தொகை

பொதுநிலையில் நோக்கினால் தொகைச்சொற்கள் எல்லாமே பொருள்மயக்கம் தருவன என்று குறிப்பிட்டு கீழ்வரும் எடுத்துக்காட்டு தருகிறார்.

> கண்ணன் பாட்டு 'கண்ணனைப் பற்றிய பாட்டு/ கண்ணனால் பாடப்பெற்ற பாட்டு/கண்ணனுடைய பாட்டு'

தொகைச்சொற்களை இடத்திற்கேற்ப விரித்தால் உரிய பொருள் கிடைக்கும் என்ற மரபுக்கொள்கையைப் பின்வரும் எடுத்துக்காட்டால் விளக்குகிறார்.

எ.கா.

கப்பல் வணிகம்

கப்பல் விளக்கு

மேற்கண்ட தொகைச்சொல்லுக்கு இன்னது தான் பொருள் என்று வரையறுத்தல் இயலாது. சூழலுக்கேற்றபடி தொகைச் சொல்லுக்குப் பொருள் உரைக்கப்படுகிறது.

தொகைச் சொல்லின் உறுப்புச் சொற்கள்

இவர் தொகைச் சொற்களை ஆக்கும் உறுப்புச் சொற்களின் அடிப்படையில் தொகைச் சொற்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பாகுபாடு செய்கிறார்:

1. பெயர்+ பெயர் என்ற அமைப்பொழுங்குள்ள தொகைச்சொற்கள்

எ.கா.

பாசனத்திட்டம்

2. வினையடி + பெயர் என்ற அமைப்பொழுங்குள்ள தொகைச்சொற்கள்

எ.கா.

எரிபொருள்

முதல் பெரும் பிரிவில் கீழ்வரும் உள்பாகுபாடுகள் வரும்:

1. தனிச்சொல் + தனிச்சொல்

எ.கா.

புயல் காற்று

போர்க்கருவி

2. தனிச்சொல் + ஒட்டுவழிச்சொல்

எ.கா.

தொழிற்பயிற்றுநர்

களஉதவியாளர்

ஆவணக்காப்பாளர்

3. ஒட்டுவழிச்சொல் + தனிச்சொல்

எ.கா.

அரசினர் மாளிகை

தொழிலாளர் சட்டம்

4. ஒட்டுவழிச்சொல் + ஒட்டுவழிச்சொல்

எ.கா.

அஞ்சலகக் கண் ..ாணிப்பாளர்

அலுவலக உதவியாளர்

இரண்டாவது பெரும் பிரிவில் பின்வரும் உள்பாகுபாடுகள் வரும்:

1. தனிவினையடி + பெயர்

எ.கா.

எரிபொருள்

2. கூட்டுவினையடி + பெயர்

எ.கா.

கருவுறுவீதம்

ஆக தொக்கி நிற்கும் தொகை

பொற்கோவைப் (1973) பின்பற்றி மறைமலை (1984) -ஆக என்பதை நிலைப்பொருளில் வரும் ஏழாம் வேற்றுமை உருபென்று கொண்டு பின்வரும் கூட்டுகளை ஏழாம் வேற்றுமைத் தொகைகளாகக் கருதுவதாகத் தெரிகிறது.

அடிப்படைக் கல்வி < அடிப்படை ஆக விளங்கும் கல்வி

அழைப்பிதழ் < அழைப்பாக விளங்கும் இதழ்

தடுப்புச்சுவர்< தடுப்பாக விளங்கும் சுவர்

தடைச்சுவர்< தடையாக விளங்கும் சுவர்

குறுக்குச்சட்டம்< குறுக்காக அமைந்த சட்டம்

வினைத்தொகை ஒரு பெயரே

மறைமலை (1984) பொற்கோவைப் பின்பற்றி பின்வரும் கருத்தைக் கொண்டிருக்கிறார். வினைத்தொகைகள் காலங் கரந்த பெயரெச்சம் + பெயர் என்ற அமைப்பிற்பட்டதல்ல; ஏனென்றால் வினைத்தொகைகள் எச்சமாக வராது வினைப்பெயராக வருகின்றன; எனவே வினைத்தொகைக் கூட்டுகள் வினைப்பெயர் + பெயர் என்ற அமைப்பைச் சார்ந்தன. வினைத்தொகையின் முதல் உறுப்பு ஒரு வினைப் பெயர் என்பதற்கு பொற்கோ (1981, 1-10) பின்வரும் வாதங்களை முன்வைக்கிறார்.

1. வினைத்தொகையின் முதல் உறுப்பு காலங்கரந்த பெயரெச்சமல்ல; கொல்யானை என்பது 'கொல்லவல்ல யானை' அல்லது 'கொல்லும் இயல்பினை உடைய யானை' என்று பொருள்படுமேயன்றி 'கொன்ற யானை' என்றோ 'கொல்லும் யானை' என்றோ பொருள்படாது. கொல்லும் யானை என்பது கொல்யானை என்று தொகைப்பட்டது என்று கொண்டால் நடக்கும் யானை என்பது 'நடயானை' என்று ஏன் தொகைபட இயலவில்லை என்பது நோக்கத்தக்கது. எனவே வினைத்தொகையின் முதல் உறுப்பு பெயரெச்சமல்ல.

2. வினைத்தொகையின் முதல் உறுப்பு வினைவேர் அல்ல; எல்லா வினைவேர்களும் வினைத்தொகையின் முதல் உறுப்பாக அமையாது. எடுத்துக்காட்டாக சா, பார் முதலாய வினைவேர்கள் வினைத்தொகைகளை அமைப்பதில்லை. வருத்து தொழில், பயிற்று திறன் என்னும் தொகைச் சொற்களில் முதல் உறுப்பாக வரும் வருத்து, பயிற்று முதலிய சொற்கள் வேர்களலல்ல. எனவே வேர்கள் அல்லாதவையும் வினைத்தொகையின் முதல் உறுப்பாக அமையும்.

மறைமலை (1984) ஆட்சித்துறை கோவையை அடிப்படையாகக் கொண்டு வினைத்தொகை பற்றி பின்வரும்

செய்திகளைத் தருகிறார்:

1. வினைத்தொகையின் முதல் உறுப்பு காலம்கரந்த பெயரெச்ச அல்ல. எடுத்துக்காட்டாக, எரிபொருள் என்பது 'எரிந்த பொருள்', 'எரிகிற பொருள்', 'எரியும் பொருள்' என முக்காலத்தையும் காட்டுவதாய்க் கூறஇயலாது. 'எரிந்த பொருள்' என்ற பொருளில் 'எரிந்த சாம்பலையோ மிச்சத்தையோ' குறிக்கவில்லை. 'எரிதலாகிய தன்மை உடைய பொருள்' அல்லது 'எரியும் ஆற்றலை உடைய பொருள்' எனப் பொருள்படும். இழுகம்பி, இழுகயிறு, இழுபாலம், இழுவலை, ஏறுகுடல் என்பதும் காலம் கரந்ததால் ஆனவை அல்ல என்பது பொருள் விரிக்கப் புலப்படும்.

2. வேற்றுமை உருபுகளை ஏற்காமல் வேற்றுமைப் பொருளை உணர்த்துகிறது.

எ.கா.

உறிஞ்சு குழாய் – உறிஞ்சுவதற்குப் பயன்படும் குழாய்

ஊதுகுழல் – ஊதுவதற்குப் பயன்படும் குழல்

எழுதுபொருள் – எழுதுவதற்குப் பயன்படும் பொருள்

ஓடுபாதை – ஓடுவதற்குப் பயன்படும் பாதை

ஆடலரங்கு – ஆடுவதற்குப் பயன்படும் அரங்கு

நீராடுதுறை – நீராடுவதற்கு உரிய துறை

கலந்தறிகட்டணம் – கலந்தறிதற்குக் கட்டணம்

சுரண்டு கருவி – சுரண்டுவதற்கு உதவும் கருவி

3. செயப்பாட்டு வினைப்பொருளை உணர்த்துவது போலத் தோற்றமளிக்கிறது.

எ.கா.

கைப்பற்று நிலம் – கைப்பற்றப்படும் நிலம்

தள்ளு வண்டி – தள்ளப்படும் வண்டி

உதைபந்து – உதைக்கப்படும் பந்து

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளின் புதைநிலை பின்வருமாறு அமையலாம்.

எ.கா.

நிலத்தைக் கைப்பற்றுகிறார்கள்> கைப்பற்று நிலம்

வண்டியைத் தள்ளுகிறான்> தள்ளு வண்டி

பந்தை உதைக்கிறான்> உதைபந்து

எறிபந்து, நுகர்பொருள், புதைபொருள் என்பன இது போன்ற மேலும் பல எடுத்துக்காட்டுகளில் சில.

4. வினைத்தொகையானது பண்புத்தொகையோடு சில இடங்களில் ஒத்து விளங்குகிறது.

எ.கா.

சாய்கூரை – சாய்வான கூரை

சாய்தளம் – சாய்வான தளம்

அடர் கரைசல் – அடர்த்தியான கரைசல்

அகல் சாலை – அகலமான சாலை

இருபெயரொட்டு பண்புத்தொகையின் காலத்திற் கேற்ற மாற்றம்

ஆட்சித்துறை சொற்கோவையில் இருபெயரொட்டு பண்புத்தொகை அமைப்பு காலத்திற்கேற்ப மாறுதல் அடைந்துள்ளன எனக் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக மருத்துவக்கல்லூரி, பொறியியற்கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, கால்நடைக்கல்லூரி, சமையற்கல்லூரி என்ற சொற்களில் கல்லூரி எனும் பொதுப்பெயர் அதன் முன்னதாக இடம்பெறும் பெயர்ச்சொல்லால் தனது பொதுத்தன்மை நீங்கிச் சிறப்புப்பொருள் பயத்தலைக் கூறி இவை சிறப்புப்பெயர் + பொதுப்பெயர் என்னும் அமைப்பில் வருவதைக் குறிப்பிடுகிறார். இவை மரபு இலக்கண இருபெயரொட்டு பண்புத்தொகையான 'சாரை ஆகிய பாம்பு'

என்று விரியும் சாரைப்பாம்பு போன்ற எடுத்துக் காட்டுகளிலிருந்து வேறுபடுகின்றன.

வேறு வகையான சொற்களான பெக்மடைட் பாறை, பெர்சீம்புல், பெர்மியின் காலம், பிட்யூட்டரி சுரப்பி, பாக் வளைகுடா, மன்னார் வளைகுடா, ஹார்ன்பிலெண்ட் தகடு, லம்பரா வலை என்பன 'சிறப்புப் பெயர்களாக விளங்கும் பிறமொழிச் சொற்கள் + பொதுப்பெயர்கள்' என்னும் அமைப்பில் அடங்குவதையும் குறிப்பிடுகிறார். எனவே, 'சிறப்புப்பெயர் + சிறப்புப்பெயர்' என்னும் அமைப்பையும் 'சிறப்புப்பெயர்களாக விளங்கும் பிறமொழிச்சொற்கள் + பெ துப்பெயர்கள்' என்னும் அமைப்பையும் காலத்தை ஒட்டிய வளர்ச்சியாகக் கருதி இருபெயரொட்டுப் பண்புத்தொகைகளில் சேர்க்க வேண்டும் என்கிறார்.

9.2.3.5.2. பல்பெயர்த்தொகைச் சொல்லாக்கம்

மறைமலை தொல்காப்பிய உரையாசிரியர்களான நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் தொகைச் சொற்களை இருமொழித்தொடர் என்றும் பன்மொழித் தொடர் என்றும் பிரிப்பதையும், நன்னூல் விருத்தியுரை ஆசிரியர் தொகைச்சொற்களை ஒரு தொடர்த் தொகைச்சொல் என்றும் பல தொடர்த் தொகைச்சொல் எனவும் பிரித்துப் புலிகொல்யானை, குரங்கெறி விளங்காய் என்பனவற்றை மூன்று பொருளால் மயங்கிய பலதொடர்த் தொகைச் சொற்களுக்கு உதாரணமாய்த் தருவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

ஆண்டியப்பன் பல்பெயர்த் தொகைச் சொற்களை நான்காகப் பிரிப்பதை மறைமலை (1984) குறிப்பிடுகிறார்.

1. பெயர் + பெயரெச்ச மூலம் + பெயர்

எ.கா.

வான் ஊர் மதியம்

ஆள் அமர் செல்வன்

சினை அலர் வேம்பு

நெஞ்சு அழி துயர்

2. பெயர்+பெயரெச்சமூலம்+(பெயரடை)+பெயர்

எ.கா.

புரி அவிழ் நறும் நிலம்

மறம் கொல் இரும் புலி

அன்பு கொல் மடப்பெடை

மகிழ் செய் தேம் மொழி

3. பெயர் +பெயரெச்சமூலம்+பெயரெச்சமூலம்+பெயர்

எ.கா.

தோடு அவிழ் கமழ் கண்ணி

நலம் பெறு கமழ் செல்வி

4. X+பெயரெச்ச மூலம் + பெயர்

எ.கா.

திரிந்து வீழ் தாடி

புலவர் வாடு நா

இனிது அமர் காதலன்

மூற்றிய முழங்கு அழல்

முதல்வாய்ப்பாடு வேற்றுமை சார் வினைத்தொகையாக பெயர்+வினையடி+பெயர் என்னும் வாய்பாட்டில் அமையும். பல்பெயர்த்தொகை என்னும் பிற வாய்பாட்டின் கீழ் வருவன பல்பெயர்த் தொகைகள் அல்ல என்றும் வாதிடுகிறார்.

உம்மைத்தொகை தவிர பிற பல்பெயர்த்தொகைச் சொற்கள் அனைத்தையும் இரு சொல் தொகை என்னும் கூட்டமைப்புக்குள் அடக்கி விடலாம் என்று தெரிகிறது. ஆட்சித்துறைச் சொற்கோவையில் இடம் பெற்றுள்ள பல்பெயர்த் தொகைகளையும் அவற்றின் வகை பாட்டினையும் தன்மையும் மறைமலை விரிவாகத்

தந்துள்ளார். பின்வருமாறு பல்பெயர்த் தொகைகளை வகைபாடு செய்கிறார்.

1. பல்பெயர் வேற்றுமைத்தொகை

1.1 தொகைச்சொல் + பெயர்ச்சொல்

1.1.1. பண்புத்தொகை + பெயர்

எ.கா.

நெளி குழாய்த் துடைப்பான் - நெளிகுழாய்க்கு உரிய துடைப்பான்

ஊட்ட உணவுத் திட்டம் - ஊட்ட உணவுத் திட்டம்

நடுத்தர வருவாய் வகுப்பு - நடுத்தர வருவாய் உடைய வகுப்பு

1.1.2. வேற்றுமைத்தொகை + பெயர்

எ.கா.

காட்சிக்கூடக்காவலர் - காட்சிக்கூடத்தினுடைய காவலர்

கால்நடைமருத்துவக் கல்லூரி - கால்நடை மருத்துவத்தைப் பயிற்றுவிக்கும் கல்லூரி

கோழிப்பண்ணை உதவியாளர் - கோழிப்பண்ணையில் பணியாற்றும் உதவியாளர்

1.1.3. வினைத்தொகை + பெயர்

புதையுயிர்த்தடம் - புதையுயிரினுடைய தடம்

சுழல்வேகமானி - சுழல் வேகத்தை அளக்கும் மானி

வெடிபொருள் கிடங்கு - வெடிபொருளுக்குரிய கிடங்கு

1.1.4. பெயர் + பண்புத்தொகை

எ.கா.

நிறம் அடர் படலம் - நிறத்தினது அடர் படலம்

நிறுவன விளக்கப் படம் - நிறுவனத்தைப் பற்றிய விளக்கப் படம்

1.1.5. பெயர் + வேற்றுமைத்தொகை

எ.கா.

வணிகத் தூதுக்குழு - வணிக நிமித்தம் தூதுக்குழு

மாவட்டச் சம்பளச்சுருக்கம் - மாவட்டத்தினுடைய சம்பளச் சுருக்கம்

1.1.6. பெயர் + வினைத்தொகை

எ.கா.

நெக்கடி ஒதுக்கு நிதி

இயந்திரச் செய்முறை

1.2. தொகைச்சொல் + தொகைச்சொல்

1.2.1. வினைத்தொகை + வினைத்தொகை

எ.கா.

உறிஞ்சு குழாய்த் திருகுகோல் - உறிஞ்சிக் குழாயினுடைய திருகுகோல்

தொற்றுநோய் ஒதுக்கிடம் - தொத்து நோய்க்கு உரிய ஒதுக்கிடம்

1.2.2. வேற்றுமைத்தொகை + வேற்றுமைத்தொகை

எ.கா.

வேலைவாய்ப்புத் தகவலகம் - வேலைவாய்ப்பு பற்றிய தகவலகம்

மருத்துவச்செலவுப்பதிவேடு - மருத்துவச் செலவு பற்றிய பதிவேடு

1.3. பெயர் + பெயர் + பெயர்

எ.கா.

விடுப்புக் கணக்குப் படிவம்

வட்டாரப் போக்குவரத்து அலுவலர்

நிதிவிதித்தொகுப்பு

1.4. தொகை + பெயர் + பெயர்

1.4.1. வேற்றுமைத்தொகை + பெயர் + பெயர்

எ.கா.

ஓய்வூதிய உரிமை மாற்றம்

நீதிமன்றக் கட்டண வில்லை

1.4.2. வினைத்தொகை + பெயர் + பெயர்

எ.கா.

எழுதுபொருள் கோப்பு அட்டை

செய்பணி நினைவுக் குறிப்பு

1.5. பெயர் + தொகை + பெயர்

1.5.1. பெயர் + வேற்றுமைத்தொகை + பெயர்

எ.கா. வடக்குப் பணிமனைக் காப்பாளர்

1.5.2. பெயர் + வினைத்தொகை + பெயர்

எ.கா.

விசை மிதிவண்டி முன்பணம்

வாடகை மிதிவண்டி நிலையம்

நகரக மக்குரத் திட்டம்

2. பல்பெயர் பண்புத்தொகை

எ.கா.

கூர் கோபுர சாரம்

வட்டத் தகரக் கலன்

வளைவு நீர்க்குழாய்

நேர்வரைமுறைத் தேர்வு

நேர்வீத சமம்

நடுத்தர ஊர்தி வகைகள்

தற்காலிக அரசுப் பணியாளர்

சிறப்பு அணிவகுப்பு

சிறுதொகைக் குறிப்பேடு

3. பல்பெயர் வினைத்தொகை

3.1. வினையடி + தொகைச்சொல்

எ.கா.

சுழல் கண்காட்சி

இயங்குபடக் காட்சி

ஒட்டு முத்திரைத்தாள்

சுழல் அச்சுப்பொறி

3.2. வினையடி + கூட்டுச்சொல்

எ.கா.

உறிஞ்சு காற்றுப்போக்கி

மிதி காற்றாடி

3.3. பெயர் + வினையடி + பெயர் (வேற்றுமைசார் வினைதொகை)

(வேற்றுமைப் பொருள்) (பெயரடை)

நாடாளுமன்றம் - நாட்டை ஆளும் மன்றம்

தீவனப் பெருக்கு அலுவலர் - தீவனத்தைப் பெருக்கும் அலுவலர்

ஆட்கொணர் ஆணை - ஆளைக் கொணதற்குரிய ஆணை

நீதிவழங்கு வங்கி - நீதியை வழங்குவதற்குரிய வங்கி

மை ஒற்று தாள் - மையை ஒற்றும் தாள்

ஐய விளை நிலம் - ஐயத்தால் விளையும் நிலம்

(இவை பெயர் + வினைத்தொகை என்னும் அமைப்பிலிருந்து வேறுபட்டவை; பெயர் + வினைத்தொகை அமைப்பில்

வினைத்தொகை தனித்து வழங்கப்படுகிறது (எ.கா. இலவச எழுதுபொருள், இயந்திரச் செயல்முறை, காப்புச் சுழல் ஏணி))

3.3.1. பெயர் + கூட்டுவினை + பெயர்

எ.கா.

ஆவி உண்டாக்கு கருவி - ஆவியை உண்டாக்கும் கருவி

தொழில் விரிவாக்கு அலுவலர் - தொழிலை விரிவாக்கும் அலுவலர்

தீர்வை கணக்கிடு கருவி - தீர்வையைக் கணக்கிடும் கருவி

கால்நடைக்கருவூட்டு நிலையம் - கால்நடைக்குக் கருவூட்டும் நிலையம்

3.3.2. கூட்டுப்பெயர் + வினை + பெயர்

எ.கா.

ஓய்வூதிய வழங்கு ஆணை - ஓய்வூதியத்தை வழங்குவதற்கு ஆணை

நேர்கோடு வரை கருவி

உணவுப்பொருள் வழங்கு துறை

குடிசைப்பகுதி மாற்று வாரியம்

நுரையீரல் உறை சீழ்

நிழற்பட ஒட்டு பசை

3.3.3. கூட்டுப்பெயர் + கூட்டுவினை + பெயர்

எ.கா.

ஊராட்சி விரிவாக்கு அலுவலர்

3.3.4. பெயர் + வினையடி + கூட்டுப்பெயர்

எ.கா.

நீர் வாழ் உயிரினம்

மலைவாழ் பழங்குடி

3.3.5. பெயர் + வினையடி + வினைத்தொகை

எ.கா.

நீர் பிடி வடிகால்

3.3.6. வினைத்தொகை + வினையடி + பெயர்

எ.கா.

மக்கு எருப்பெருக்கு அலுவலர்

எரிபொருள் ஊட்டு இதழ்

4.1. பல்பெயர் உம்மைத்தொகை

எ.கா.

சேர சோழ பாண்டியர்

இயல் இசை நாடகம்

4.2. வேற்றுமைசேர் உம்மைத்தொகை

உம்மைத்தொகை + பெயர்

எ.கா.

ஒலி ஒளி கல்வி -ஒலியாலும் ஒளியாலும் அளிக்கப்படும் கல்வி

இருபெயர் உம்மைத் தொகை + பெயர்

எ.கா.

வரவு செலவுத் திட்டம் - வரவையும் செலவையும் பற்றிய திட்டம்

தட்பவெட்பக் கட்டுப்பாடு - தட்பத்தின் மீதும் வெப்பத்தின் மீதும் செலுத்தப்படும் கட்டுப்பாடு

நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை - நெடுஞ்சாலைக்கும் ஊரகப்பணிக்கும் உரிய துறை

நகராட்சிமன்ற உள்ளாட்சிக்கழக ஆய்வாளர் - நகராட்சி மன்றத்திற்கும் உள்ளாட்சிக் கழகத்திற்கும் உரிய ஆய்வாளர்

பால் உற்பத்திக் கால்நடை மேம்பாட்டு ஆணையர் - பால் உற்பத்திக்கும் கால்நடை மேம்பாட்டிற்கும் உரிய ஆணையர்

இலவசக்கட்டாயக்கல்வி - இலவசமாகவும் கட்டாயமாகவும் அளிக்கப்படும் கல்வி

4.3. இதர அமைப்புகள்

4.3.1. வேற்றுமைசேர் உம்மைத்தொகை + பெயர் சொல்/ சொற்கள்

எ.கா.

இந்திய கணக்கு தணிக்கைப் பணியாளர் தொகுதி-

இந்திய அரசினுடைய கணக்கிற்கும் தணிக்கைக்கும் உரிய பணியாளரது தொகுதி

மக்கள் பிறப்பு இறப்பு புள்ளி விவரங்கள் -

மக்களினுடைய பிறப்பையும் இறப்பையும் பற்றிய புள்ளி விவரங்கள்

தமிழ் நாடு தரை கடல் விமானப் படைவீரர் நலக்கழகம்-

தமிழ் நாட்டுக்குரிய தரையிலும் கடலிலும் விமானத்திலும் பணியாற்றும் படை வீரர்களுடைய நலத்திற்கென அமைந்த கழகம்

4.3.2. வினைபெயர் + வினைப்பெயர் + பெயர்

எ.கா.

வளர்சிதைமாற்றம் - வளர்ச்சியாலும் சிதைவாலும் ஏற்படும் மாற்றம்

ஏற்று இறக்கு நிதி - ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் உரிய நிதி

9.2.3.5.3. கூட்டுச்சொல்லாக்கம்

கூட்டுச்சொல்லைப் பிற சொல் இணைப்பாக்கங் களிலிருந்து மறைமலை (1984:149) வேறுபடுத்திக் காண்கிறார்.

ஒட்டுவழிச் சொல்லாக்கம், தொகைச் சொல்லாக்கம் என்னும் இரண்டு வகையிலும் சேராது சில சொற்கள் உருவாக்கப் படுகின்றன.

எ.கா.

. பற்றாக்குறை

கூட்டுசேராக்கொள்கை

வட்டியில்லாக்கடன்

தொலைநோக்கி

இவற்றைத் தொடர்கள் என்றழைத்தால் பொருந்தாது. ''எச்சச்சொற்கள் பெயர்களுடன் சேர்வதாலும் பெயர்ச்சொற்கள் வினையடிகளுடனும் 'இ' கர விகுதியுடனும் சேர்வதாலும் உருவாகும் இவ்வகைச் சொற்களைக் கூட்டுச்சொல் எனப் பெயரிட்டு ஒட்டுவழிச்சொல், தொகைசொல் என்னும் இரு பிரிவுக்குள் அடங்காத மூன்றாவது பிரிவாகக் கொள்ளுதல் பொருந்தும்'' (மறைமலை 1984:149). எதிர்மறைப்பெயரெச்சம் +பெயர் என்ற அமைப்பில் அமையும் சொற்கள் பிரித்துப் பார்க்கக் கூடாத வகையில் ஒன்றுபேறு பெற்றுவிட்டன. (எ.கா. வாழாவெட்டி, அடங்காப்பிடாரி, விடியாமூஞ்சி). இவை வினைத்தொகைக்கு (எ.கா. தூங்குமூஞ்சி) எதிர்நிலையாக விளங்குகின்றன. இவ்வகையிலான சொற்களைத் தான் கூட்டுச்சொற்கள் என மறைமலை குறிப்பிடுகிறார்.

அ. ''பற்றாக்குறை'' போன்ற சொற்கள்

1. தனிவினையின் செய்யா எனும் எச்சம் + பெயர்

எ.கா.

பகாக்காரன்

பற்றாக்குறை

ஈட்டா விடுப்பு

தொடரா மானியம்

தொடராச் செலவு

இயங்காக் கப்பி

காணாக் குறியீடு

2. கூட்டுவினையின் செய்யா என்னும் எச்சம் + பெயர்

எ.கா.

எதிர்பாராச் செலவுநிதி

எதிர்பாராச் செலவுக்கணக்கு

முடிவுறா வேலைகள்

முடிவாகாச் சட்டமூலம்

இடம்பெயராச் சொத்து

உதவிபெறாப்பள்ளி

ஒளிமாறாத் தன்மை

உடன்சேராப் பாறைவெளி

எதிர்பாராச்சம்பளம்

இயற்கையகலா இருப்பு

ஏற்புறாத்தொகை

திட்டமிடா ஆய்வு

பதனிடாத்தோல்

பதிவுறா நிறுவனம்

தீராப்பிழைக்குறி

3. எதிர்மறைச் செயப்பாட்டு வினைப்பெயரெச்சம் + பெயர்

எ.கா.

உடுக்குறி இடப்படா வினா

பயன்படுத்தப்படாக் காரணி

கொடுக்கப்படாச்சம்பளப் பதிவேடு

ஆ. ''கூட்டுசேராக் கொள்கை'' போன்ற சொற்கள்

4. பெயர் + செய்யா எனும் எச்சம் + பெயர்

எ.கா.

அரசிதழ் பதிவுறா அலுவலர் -அரசிதழின் கண் பதிவுறா அலுவலர்

உள்நாட்டு வற்றா நீர்நிலை - உள்நாட்டில் அமைந்த வற்றா நீர்நிலை

அளவு விஞ்சா விளைவு - அளவினை விஞ்சா விளைவு

ஒப்புதல் பெறா வராமை - ஒப்புதலைப் பெறா வாராமை

இ. ''வட்டியில்லாக்கடன்'' போன்ற சொற்கள்

5. பெயர் +இல்லா + பெயர்

எ.கா.

வட்டியில்லாக் கடன்

நாளமில்லாச்சுரப்பி

கம்பி இல்லாத்தந்தி

ஆளில்லாச்சொத்து

சம்பளமில்லா விடுப்பு

(சுருக்கம் கருதி இல்லா என்பது இலா என்றாகியுள்ளது)

அரசிதழ்ப் பதிவிலா அலுவலர்

சுங்கவரியிலா வணிகம்

வரம்பிலா உரிமை

வங்கியில்லாக் கருவூலம்

ஈ. ''தொலைநோக்கி'' போன்ற சொற்கள்

6. பெயர் + வினையடி + இ

எ.கா.

பளுதூக்கி - பளுவைத் தூக்கும் கருவி

வெப்பம்தாங்கி - வெப்பத்தைத் தாங்கும் கருவி

திசைகாட்டி - திசையைக் காட்டும் கருவி

படிபெருக்கி - படியைப் பெருக்கும் கருவி

புகைபோக்கி

பூச்சிக்கொல்லி

மின் இயக்கி

பால் வடிகட்டி

மின் கடத்தி

மின் தூண்டி

சீர் வெட்டி - சீராக வெட்டும் கருவி

சம செதுக்கி - சமமாக செதுக்கும் கருவி

காற்றழுத்தி

கூட்டுப்பெயர் + வினையடி +இ

மின்னாற்றல் மாற்றி

மின்னோட்ட மாற்றி

காந்த இசை இயக்கி

மின்னாற்றல் சுருக்கி

இடைநில நீர்த்தாக்கி

மின்சாரக் குப்பி குறுக்கி

9.2.4. பெயராக்கத்தின் சுருக்கம்

- பெயராக்கத்தைப் பெயர்கள் ஆக்கப்படும் சொல் வகைப்பாடுகளின் அடிப்படையில் மூன்றாகப் பகுக்கலாம்:

1. பெயரிலிருந்தான பெயராக்கம்
2. வினையிலிருந்தான பெயராக்கம்
3. பெயரடைகளிலிருந்தான பெயராக்கம்

- இவற்றுள் வினையிலிருந்தான பெயராக்கம் முக்கியமாகக் கருதத்தக்கது.

• பெயராக்கத்தை பெயர்கள் ஆக்கப்படும் செயற்பாடு அடிப்படையில் மூன்றாகப் பகுக்கலாம்.

1. பின்னொட்டுப் பெயராக்கம்

2. முன்னொட்டுப் பெயராக்கம்

3. கூட்டாக்கம்

• இவற்றுள் கூட்டுப் பெயராக்கம் முக்கியமாகக் கருதத்தக்கது.

• முன்னொட்டாக்கம் விளைவாக்கமுள்ளது அல்ல.

• பெயரிலிருந்தான பெயராக்கத்தில் பின்வருவன முக்கியமான ஆக்க வகைகள்:

உயர்திணைப்பெயராக்கம்

1. காரன்/காரி/காரர் ஆகிய ஒரு குழும ஒட்டுக்களாலான ஆக்கம்

2. ஆளர்/ஆள்/ஆளி ஆகிய ஒரு குழும ஒட்டுக்களாலான ஆக்கம்

3. தார்/தாரி ஆகிய ஒரு குழும ஒட்டுக்களாலான ஆக்கம்

உயர்திணை அல்லாப்பெயராக்கம்

4. அகம், இயல் ஆகிய கட்டுருபன்களாலான ஆக்கம்

• வினைப்பெயராக்கங்களில் அல்/தல்/கை ஒட்டாக்கப் பெயராக்கமும் பெயரெச்ச வடிவுகளின் மீதான ஒட்டாக்கங்களும் வினையின் பங்கெடுப்பாளர் அமைப்பைத் (argument structure) தக்க வைப்பன. இவை வினையடிகளின் தொடரியல் பண்புகளையும் தக்க வைக்கும். எல்லா வினையடிகளும் சீரான ஒட்டுக்களை ஏற்கும். இவ்வொட்டுக்களால் ஆக்கப்பட்ட பெயர்களின் பொருண்மையை முன்கணிப்பு செய்யலாம்.

• வினையிலிருந்து பெயர்களை ஆக்கும் செயல்பாட்டைப் பின்வருமாறு கிளைப்படமாகக் காணலாம்.


வினையிலிருந்து பெயராக்கம்
காலஒட்டாலோ எதிர்மறை ஒட்டாலோ அடையாளப்படுத்தப்படாத பெயரெச்ச வடிவமல்லாத வினைப்பகுதியில்
காலத்தாலோ எதிர்மறை ஒட்டாலோ அடையாளப்படுத்தப்பட்ட பெயரெச்ச வடிவ வினைப்பகுதிகளில்
அல், தல் கை என்ற ஒட்டுகளால் ஆன சீரான ஆக்கம் (எ.கா. படிக்கல், படித்தல், படிக்கை)
நர் ஒட்டாக்கம் (எ.கா. ஒட்டுநர்)
அம் பு,வு போன்ற ஒட்டு களால் ஆன சீரற்ற ஆக்கம் (எ.கா. படித்தம் படிப்பு விடிவு)
ஒலியன் மாற்றத் தினால் ஆன சீரற்ற ஆக்கம் (எ.கா. சுடு>சூடு, வழங்கு> வழக்கு, பெருகு> பெருக்கு)
வடிவமாற்ற மில்லா ஆக்கம் (எ.கா.அடி, பிடி, குடி)
அது ஒட்டாக்கம் (எ.கா. படித்தது)
மை ஒட்டாக்கம் (எ.கா. படித்தமை, படிக்காமை)
அவன்,அவள்,அவர்,அது அவை போன்ற மாற்றுப் பெயர் ஒட்டுகளால் ஆன ஆக்கம் (எ.கா. படித்தவன் படிக்காதவன், படித்தவள் படிக்காதவள், படித்தவர், படிக்காதவர், படித்தது, படித்தவை)

சீரற்ற ஆக்கங்கள் (அதாவது அம், வு, பு போன்ற ஒட்டுக்களின் ஆக்கங்களும் ஒலியன் வடிவு மாற்ற ஆக்கங்களும் வடிவுமாறா மாற்ற ஆக்கங்களும்) பங்கெடுப்பாளர் அமைப்பைத் தக்க வைக்காதவை. மேலும் இவை வினையடிகளின் தொடரியல் பண்புகளையும் தக்க வைக்காது. சீரற்ற ஒட்டுகள் எல்லா வினையடிகளுடனும் சேராது. இதனால் ஆக்கப்பட்ட பெயர்களின் பொருண்மையை முன்கணிப்பு செய்ய இயலாது.

9.3.வினையாக்கம்

வினையாக்கத்தை பின்னொட்டாக்கம், கூட்டாக்கம் என இரண்டாகப் பகுக்கலாம்.

9.3.1.பின்னொட்டு வினையாக்கம்

விளைவாக்கமில்லாத பின்னொட்டு வினையாக்கம் பற்றி 8.3.2-இல் கூறப்பட்டுளது.

9.3.2. கூட்டு வினையாக்கம்

தமிழில் கூட்டு வினைகளைப் பற்றிய ஆய்வுகளில் மிக முக்கியமானவைகளாய் அகஸ்தியலிங்கம் (1981 : 15-60) மற்றும் கார்த்திகேயன் (1983) என்பாரின் ஆய்வுகளைக் கருதலாம். ராஜேந்திரனின் (Rajendran,1978) ஆய்விலும் கூட்டுவினைகளின் பொருண்மை பற்றி பேசப்படுகிறது. பின்வரும் விவாதங்கள் பொதுவாக இம்மூன்று ஆய்வுகளின் பின்னணியில் அமையும். கிரியாவின் தமிழ் - ஆங்கில அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள எல்லாக் கூட்டு வினைகளும் பொறுக்கி எடுக்கப்பட்டு, பாகுபடுத்தப்பட்டு, தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கூட்டுவினை யாக்கத்தைச் சொல்லாக்க விதிகளாய்த் தர இயலுமா, அதை விளக்கமாய்க் கொள்ள இயலுமா என்ற வினாக்களுக்கும் விடைகாணும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

ஒரு அடியும் அதை வினையாக்கம் செய்யும் வினையும் (வினையாக்கியும்) சேர்ந்து ஒரு சொல்லாக வருவது கூட்டுவினையாகும். பெரும்பாலும் இவ்வடி பெயராக அமையும். வினையும் வினையும் சேர்ந்து கூட்டுவினையாக வரும் நிகழ்வுகள் குறைவானதாகும். புதிய வினைகளை ஆகத் தமிழ் கூட்டாக்கத்தைத்தான் பயன்படுத்துகிறது. புதிய வினையை ஆக்கும் ஒட்டு தமிழில் இல்லை என்றே சொல்ல வேண்டும். -இ என்ற ஒட்டின் பயன்பாடு விளைவாக்க மானதாக இல்லை (எ.கா. வருணனை + இ > வருணி, சயனம் + இ > சயனி, பயணம்+இ > பயணி). எனவே தமிழ் புது வினையாக்கத்திற்குக் கூட்டாக்கச் செயற்பாட்டையே பயன்படுத்துகின்றது என்று பொதுப்படையாகக் கூறலாம்.

எல்லாப் பெயர் அடிகளுடனும் எல்லா வினையாக்கிகளும் சேரும் என்று கூற இயலாது. ஒவ்வொரு வினையாக்கியும் ஒரு குறிப்பிட்ட குழுமத்தில் அடங்கும் பெயரடிகளுடன் சேர்ந்து தான் வினையாக்கம் செய்யும். ஆனால் இக்குழுமங்களில் வரும் அங்கங்களில் சில ஒன்றாய் இருப்பதன் காரணமாய் இவை மேலுறல் குழுமங்களாக வருதல் சாத்தியமானது. ஒரு திறந்த குழுமத்தின் பாற்படும் அடிகளோடு சேர்ந்து ஆக்கங்களை உருவாக்கினால் அவற்றை விளைவாக்கங்களாய்க் கொள்வது எளிது. ஆனால் அடைபட்ட ஒரு குழுமத்தின் பாற்படும் அடிகளோடு சேர்ந்து ஆக்கங்கள் செய்தால் அவற்றை விளைவாக்கமாய்க் கொள்ள இயலுமா என்ற ஐயம் எழுகிறது. ஒரு அடைபட்ட குழுமத்திலும் புதிய அங்கத்தினர் வருதல் சாத்தியம். ஒரு பொருள் பன்மொழியம் இந்தச் சாத்தியத்திற்குத் துணை நிற்கிறது. எனவே அடைபட்டக் குழுவில் வரும் அங்கங்களுடன் மட்டும் சேர்ந்து ஆக்கம் செய்வதையும் அந்தக் குழுமத்திற்குட்பட்ட விளைவாக்கமாய்க் கொள்ள இயலும் எனத் தோன்றுகிறது. பெயரடிகளின் குழுமம் என்பதை விட ஒருகுழுமப் பெயரடிகளின் பொருண்மைப் பரப்பு என்று கூறுவது பொருத்தமாய் இருக்கும் என்று தோன்றுகின்றது.

9.3.2.1. கூட்டு வினைகளைத் தொடர்களிலிருந்து வேறுபடுத்தி அறிதல்

பெயர் + வினை கூட்டுகளை பெயர் + வினை என்ற தொடரிலிருந்து பிரித்தறிய கார்த்திகேயன் (1983: 21-32) சில சோதனைகளைத் தருகிறார்.

9.3.2.1.1. செருகல் சோதனை

கூட்டு வினையின் பகுதிகளாக வரும் அடிக்கும் வினையாக்கிக்கும் இடையில் வேறு எந்த அலகையும் சொருக இயலாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். எடுத்துக்காட்டாக, கீழே தந்துள்ளது போன்று கூட்டு வினைகளின் பகுதிகளான பெயருக்கும் வினையாக்கிக்கும் இடையில் இரண்டாம் வேற்றுமை உருபு வர இயலாது.

எ.கா.

குணப்படுத்து * குணத்தைப்படுத்து

சண்டையிடு * சண்டையை இடு

தூய்மையாக்கு * தூய்மையையாக்கு

ஆனால் தொடராக வரும் பெயர் + வினை இணைப்புகளில் இரண்டாம் வேற்றுமை உருபைச் செருக இயலும்.

எ.கா.

பானை செய் பானையைச் செய்

வீடு கட்டு வீட்டைக்கட்டு

எனவே இவை கூட்டு வினைகளல்ல.

கூட்டு வினைகளின் இரு பகுதிகளுக்கிடையில் ஒரு அடையையோ அல்லது பெயர்த்தொடரையோ செருக இயலாது.

எ.கா.

டாக்டர் நோயைக் குணப்படுத்தினார்

அவர்கள் சண்டை போட்டார்கள்

* டாக்டர் நோயை குணம் முழுவதும் படுத்தினார்

* அவர்கள் சண்டை காலையில் போட்டார்கள்

வினா இடைச்சொல்லான ஆ மற்றும் தேற்ற இடைச்சொற்களான தான், ஒன்றும் என்பனவற்றை வினைக்கூட்டின் இரு பகுதிகளுக்கிடையே செருக இயலும்.

அவர்கள் சண்டையா போட்டுக் கொண்டார்கள்

அவர்கள் சண்டை தான் போட்டார்கள்

அவர்கள் சண்டை ஒன்றும் போடவில்லை

கார்த்திகேயனின் இந்தச் சோதனையில் ஒரு சிக்கல் இருக்கிறது. வேற்றுமைத்தொடரும் வினையாக்க வினையும்

தொடர்ந்து வந்து பொருண்மை நிலையாக்கத்தால் கூட்டு வினையாகச் செயலாற்றும் நிகழ்வுகள் பல உள்ளன (எ.கா. உயிரைக்கொடு, கழுத்தைக்கொடு, காணவில்லை, நட்டாற்றில் விடு).

9.3.2.1.2. ஒரு பொருள் பன்மொழிச் சோதனை

கூட்டு வினைகளுக்கு ஒருபொருள்பன்மொழியாய் அமையும் தனிநிலை வினை அதே மொழியிலோ அல்லது அயல் மொழிகளிலோ வரலாம். குறிப்பிட்ட ஒரு பெயர் + வினைச்சேர்க்கை கூட்டா இல்லையா என்பதைத் தீர்மானிக்க இது ஒரு சாட்சியாய் அமையும்.

எ.கா.

கொலை பண்ணு - கொல்

காதல் செய் - காதலி

உரையாடு - பேசு

வாதாடு - argue

கூறிடு - divide

மாறாக, ஒரு பெயர் + வினைத்தொடருக்குத் தனிநிலை வினை ஒரு பொருள் பன்மொழியாக வராது.

எ.கா.

பானை செய் - make pot

வீடு கட்டு - construct a house

9.3.2.1.3. அடைச்சோதனை

கூட்டு வினையில் வரும் பெயரை பெயரடை, பெயரெச்சம், கிழமை வேற்றுமை இவற்றால் வருணனை செய்ய இயலாது. எடுத்துக்காட்டாக உரையாடு என்ற கூட்டு வினையில் வரும் பெயரை (உரை-ஐ) பெயரடை, பெயரெச்சம் கிழமை வேற்றுமை என்பனவற்றால் விரிக்க இயலாது.

* நல்ல உரையாடினார்

* இரண்டு உரையாடினார்

* என்னுடைய உரையாடினார்

வினையடைகள் கூட்டு வினைகளுக்கு முன்னர் வந்து வினைப்பொருளை விரிக்கலாம்.

நன்றாக உரையாடினார்

இரண்டு முறை உரையாடினார்

சிரித்து உரையாடினார்

மாறாக, உரை என்ற பெயர் கூட்டு வினையின் பாகமாக வராத போது பெய்ரெச்சம், கிழமை வேற்றுமை என்பன இதை விரிக்கலாம்.

நல்ல உரை

என்னுடைய உரை நன்றாக இல்லை

ஒரே பெயர் + வினைச்சேர்க்கை சில சமயங்களில் கூட்டாகவோ தொடராகவோ செயற்படலாம். இந்நிலையில் தொடர் பெயருக்கு அடையாக வருபவைகளாலும் கூட்டுவினை வினையடைகளாலும் விரிக்கப்படலாம்.

அவள் நல்ல சமையல் செய்தாள்

அவள் நன்றாக சமையல் செய்தாள்

நல்ல என்ற பெயரடையால் விவரிக்கப்படும் பெயர் + வினைச்சேர்க்கைத் தொடராகும்; நன்றாக என்ற வினையடையால் விவரிக்கப்படும் பெயர்+ வினைச்சேர்க்கை கூட்டு வினையாகும்.

பெயர் + வினைச்சேர்க்கை தொடராக வரும் முதல் வாக்கியத்தின் அண்மை உறுப்புகளின் அமைப்பு (உள் அமைப்பு) பின்வருமாறு அமையும்:



ஆனால் பெயர் + வினைச்சேர்க்கை கூட்டு வினையாக வரும் இரண்டாவது வாக்கியத்தின் அண்மை உறுப்புகளின் அமைப்பு (உள்ளமைப்பு) பின்வருமாறு அமையும்.



9.3.2.1.4. சமநிலை இணைப்புச் சோதனை

சாதாரணமாக இரண்டு பெயர்த் தொடர்களைச் சமநிலை இணைப்பு செய்யலாம்.

எ.கா.

நான் ராமனை அடித்தேன்

நான் கண்ணனை அடித்தேன்

நான் ராமனையும் கண்ணனையும் அடித்தேன்

ஆனால் கூட்டு வினைகளின் முதல் பாகமாக வரும் பெயர்களை இவ்வாறு சமநிலை இணைப்பு செய்ய இயலாது.

எ.கா.

அவன் தந்தியடித்தான்

அவன் டைப் அடித்தான்

* அவன் தந்தியும் டைப்பும் அடித்தான்

கூட்டு வினைகளைத் தான் பின்வருமாறு சமநிலை இணைப்பு செய்யலாம். கூட்டு வினைகளிலிருந்து பெயர்களைப் பிரித்து சமநிலை இணைப்பு செய்ய இயலாமலிருப்பது அவை ஒரே அலகாகச் செயலாற்றுவதை உறுதிப்படுத்தும்.

எ.கா.

அவன் தந்தி அடிக்கவும் டைப் அடிக்கவும் கற்றுக் கொண்டான்

?அவன் தந்தியும் டைப்பும் அடிக்கக் கற்றுக் கொண்டான்

9.3.2.1.5. பதிலீட்டு முறைச் சோதனை

தனிநிலை வினைகளை என்ன செய் (வினாச் சொல் + செய்) என்ற தொடரால் பின்வருமாறு பதிலீடு செய்யலாம்.

எ.கா.

குமார் பணத்தை வீணடித்தான்

குமார் பணத்தை என்ன செய்தான்

ஆனால் கூட்டின் பாகமாக வரும் வினையை (அடி, ஓ) என்ன செய் என்பதால் பதிலீடு செய்ய இயலாது.

* குமார் பணத்தை வீண் என்ன செய்தான்

எனவே கூட்டுவினை ஒரு அலகாகச் செயல்படுகிறது என்பது இதன் மூலம் உறுதிப்படுகிறது.

மேற்சொன்ன எல்லாச் சோதனைகளும் கூட்டு வினை நிலைமையை நிறுவப் பயன்படும் என்பதில்லை. ஏதாவது ஒரு சோதனை சரியாகப் பொருந்தி வந்தால் போதுமானது.

9.3.2.1.6. பற்றாசு அளவு

கூட்டு வினைச்சொற்களின் இரு பாகங்களுக்கிடையில் எதையும் செருக இயலாது என்று பொதுப்படையாகக் கூறினாலும், சில கூட்டு வினைகளின் பாகங்களுக்கிடையில் செருகல் நடைபெறக்கூடும் என்பதே உண்மை. இதிலிருந்து சில கூட்டுவினையின் பாகங்கள் கூடுதல் பற்றாசு உடையனவாயும் வேறு சில கூட்டு வினைகளின் பாகங்கள் குறைவான பற்றாசு உடையனவாகவும் இருப்பது தெரிகிறது.

சில கூட்டுவினைகளில் வரும் பெயர்களைப் பெயரெச்ச வடிவாக்கம் செய்யலாம்.

எ.கா.

துன்பப்படு > பட்ட துன்பம்

கஷ்டப்படு > பட்ட கஷ்டம்

உதவி செய் > செய்த உதவி

தீர்மானம் செய் > செய்த தீர்மானம்

இதிலிருந்து மேற்கண்ட கூட்டு வினைகளின் பாகங்கள் குறைந்த பற்றாக அளவு உடையனவாய்த் தெரிகிறது.

மாறாக, சில நிகழ்வுகளில் மேற்கண்ட மாதிரியான பெயரெச்ச வடிவாக்கம் அடிப்படையிலான வரிசை மாற்றம் சாத்தியமானதல்ல.

சாத்தியப்படு > *பட்ட சாத்தியம்

குணப்படுத்து > *படுத்திய குணம்

காலி செய் > *செய்த காலி

பெயரெச்சப்படுத்தம் ஏற்றுக்கொள்ள முடியாத இம்மாதிரியான கூட்டு வினைகள் கூடுதல் பற்றாசு அளவு உடையனவாய்த் தெரிகிறது.

9.3.2.2. கூட்டு வினைகளின் அமைப்பு

கூட்டு வினைகள் பின்வரும் அமைப்பொழுங்கில் வரும்.

அடி + வினையாக்கி

9.3.2.2.1. அடிகள்

கூட்டு வினையின் முதற் பாகமாக வருவது அடியாகும். கூட்டு வினைகள் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்ய ஆக்கப்பெறுவதால் அடிகள் தமிழ் மூலத்திலிருந்து மட்டுமல்லாமல், சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற பிற மொழி மூலத்திலிருந்தும் தேவையைப் பூர்த்தி செய்ய எடுக்கப்பட்டுள்ளன. தற்காலத் தமிழில் ஆங்கில மூல அடிகள் படித்தவர் பேச்சு வழக்கில் தாராளமாய்ப் பயன்படுத்தப் படுகின்றன.

எ.கா.

தமிழ் மூல அடிகள் வரும் கூட்டு வினைகள்

அடிகள்	கூட்டுவினைகள்
பயிற்சி	பயிற்சியளி
விடை	விடை கொடு
நீச்சல்	நீச்சலடி

சமஸ்கிருத அடிகள் வரும் கூட்டு வினைகள்

அடிகள்	கூட்டு வினைகள்
கோபம்	கோபப்படு
சந்தோஷம்	சந்தோஷம் அடை
பூசை	பூசை செய்

ஆங்கில அடிகள் வரும் கூட்டு வினைகள்

அடிகள்	கூட்டு வினைகள்
அரேஞ்	அரேஞ் பண்ணு

அவுட்	அவுட் ஆகு
அட்மிட்	அட்மிட் செய்

கடன் வாங்கப்படும் அடிகள், குறிப்பாக ஆங்கிலத்திலிருந்து கடன் வாங்கப்படுபவை, மூலமொழியில் எந்த இலக்கணவடிவவகுப்பைச் சார்ந்தவையாக இருந்தாலும் தமிழில் பெயராகவே கடன் வாங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஆக்ட் (act) என்ற ஆங்கில வினை தமிழில் பெயராகக் கடன் வாங்கப்படும். (எ.கா. ஆக்ட்பண்ணு); ஆப் (off), ஆன் (on), இன் (in) என்ற ஆங்கில முன்னுபுகளும் தமிழில் பெயராகக் கடன் வாங்கப்பெறும் (எ.கா. ஆப் பண்ணு, ஆன் பண்ணு, இன் பண்ணு).

அடிகள் பெயராகவோ இடைச்சொல்லாகவோ (particle) ஒலிக்குறிப்புச் சொல்லாகவோ (onomatopoeic word) வரலாம். பெயர்கள் தனிநிலைப் பெயராகவோ ஆக்கப்பெயராகவோ கூட்டுப் பெயராகவோ அமையலாம். எ.கா.

தனிநிலைப் பெயர் அடிகள்

அடிகள்	கூட்டு வினை
அரட்டை	அரட்டையடி
உறுதி	உறுதியளி
வழக்கு	வழக்காடு
சூறை	சூறையாடு

ஆக்கப்பெயரடிகள்

அடிகள்	கூட்டு வினை
ஆறுதல்	ஆறுதல் அளி
செலவு	செலவழி
தொடர்பு	தொடர்புபடுத்து
வெறுப்பு	வெறுப்பூட்டு

வெற்றி	வெற்றிபெறு
தோல்வி	தோல்வியுறு

கூட்டுப் பெயரடிகள்

அடிகள்	கூட்டுவினை
பெயர் + பெயர்	
வாக்குறுதி	வாக்குறுதி கொடு
பெயர் + ஆக்கப்பெயர்	
மொழிபெயர்ப்பு	மொழிபெயர்ப்பு செய்
உருமாற்றம்	உருமாற்றம் அடை
ஆக்கப்பெயர் + பெயர்	
நடைமுறை	நடைமுறைப்படுத்து
வினையெச்சம் + பெயர்	
பரிந்துரை	பரிந்துரை செய்
வினையடி + பெயர்	
பறிமுதல்	பறிமுதல் செய்
ஏற்றுமதி	ஏற்றுமதி செய்

இடைச்சொல் அடிகள்

அடிகள்	கூட்டுவினை
பின்	பின்பற்று
முன்	முன்னேறு
வெளி	வெளியாகு
மேல்	மேலோங்கு
சரி	சரிப்படுத்து
கீழ்	கீழிறங்கு

ஒலிக்குறிப்புச் சொல்லடிகள்

அடிகள்	கூட்டு வினைகள்
பளிச்	பளிச்சிடு
கிறீச்	கிறீச்சிடு
வீர்	வீரிடு
திடுக்	திடுக்கிடு

9.3.2.2.2. வினையாக்கிகள்

தமிழில் முப்பதுக்கும் மேற்பட்ட வினைகள் வினையாக்கிகளாகச் செயல்படுகின்றன. இவைகள் மேற்சொன்ன வகையான அடிகளுடன் சேர்ந்து வினையாக்கம் செய்கின்றன.

வினையாக்கிகள்	எடுத்துக்காட்டான கூட்டுவினைகள்
1. அடி	கண்ணடி, போரடி
2.அடை	குணமடை, மயக்கமடை
3.அளி	பரிசளி, ஆறுதலளி
4.ஆகு	வெளியாகு, திருமணமாகு
5.ஆக்கு	சோறாக்கு, குணமாக்கு
6.ஆடு	விளையாடு, கூத்தாடு
7..ஆற்று	பணியாற்று, தொண்டாற்று
8.இடு	தூக்கிலிடு, முறையிடு
9.உறு	இன்புறு, திகைப்புறு
10.உறுத்து	துன்புறுத்து, வற்புறுத்து
11.ஊட்டு	நினைவூட்டு, மகிழ்வூட்டு
12.எடு	ஓய்வெடு, ஓட்டமெடு
13.எய்து	மரணமெய்து, பூப்பெய்து
14.ஏல்	பழிஏல், தலைமையேல்
15.ஏறு	சூடேறு, வெளியேறு

16.ஏற்று	வெளியேற்று
17.கட்டு	ஈடுகட்டு, கப்பம் கட்டு
18.காட்டு	ஆசைகாட்டு, பயம்காட்டு
19.கூறு	புறங்கூறு, அறிவுரை கூறு
20.கொடு	மரியாதை கொடு, பேச்சுக்கொடு
21.கொள்	கைக்கொள், நம்பிக்கைக் கொள்
22.செய்	விசாரணை செய், வாதம் செய்
23.சொல்	பொய் சொல், கோள் சொல்
24.தட்டு	மட்டம் தட்டு, அசடு தட்டு
25.படு	வேதனைப்படு, வெட்கப்படு
26.படுத்து	துன்பப் படுத்து, வசப்படுத்து
27.பண்ணு	யோசனை பண்ணு, கல்யாணம் பண்ணு
28.பார்	வழி பார், நோட்டம் பார்
29.பிடி	அடம் பிடி, கடைபிடி
30.புரி	போர் புரி, மணம் புரி
31.பெறு	நலம் பெறு, பரிசு பெறு
32. போ	சோரம் போ, துணை போ
33.போடு	தூக்கம் போடு, சத்தம் போடு
34.மூட்டு	தீ மூட்டு, எரிச்சல் மூட்டு
35.வா	வலம் வா, குடி வா
36.வாங்கு	வேலை வாங்கு, மூச்சு வாங்கு
37.விடு	தூது விடு, கதை விடு
38.விழு	குழி விழு, அடி விழு
39.வை	அன்பு வை, நம்பிக்கை வை

மேற்கண்ட வினையாக்க வினைகள் அடிப்படையில் முதல் வினையாகச் செயல்படுவன என்பது இங்கு குறிப்பிட வேண்டியதாகின்றது. இவையாவும் தமிழ்ச் சொற்களாகும்.

9.3.2.2.3. வினையாக்கிகளின் தொடரியல் பண்புக்கூறுகள்

வினையாக்கிகள் அவைச் சேர்ந்து வருகிற அடிகளுக்குத் தகுந்தவாறு தொடரியல் மற்றும் பொருண்மையியல் பண்புகளைப் பெறுகின்றன. எடுத்துக் காட்டாக, அச்சடி, கொள்ளையடி, வீணடி என்ற கூட்டு வினைகள் அதன் வினையாக்கியின் மூல முதல் வினையைப் போன்று செயப்படு பொருள் குன்றா வினையாக வருகின்றன; ஆனால் நீச்சலடி, பெருமையடி, அரட்டையடி என்ற கூட்டு வினைகள் மூலமுதல் வினையைப் போல அல்லாமல் செயப்படு பொருள் குன்றிய வினைகளாக வருகின்றன. மாறாக மூல முதல் வினையான ஆடு செயப்படு பொருள் குன்றிய வினையாகும்; ஆனால் கூட்டு வினையாக வரும்போது சேர்ந்து வரும் அடிகளுக்குத் தக்கவாறு செயப்படு பொருள் குன்றா வினையாகவோ குன்றிய வினையாகவோ செயல்ற்றும். எடுத்துக்காட்டாகச் சூன்றயர்டு, வேட்டையாடு என்பன செயப்படு பொருள் குன்றாக் கூட்டு வினைகள்; ஆனால் உரையாடு, வாதாடு, தள்ளாடு என்பன செயப்படு பொருள் குன்றிய கூட்டு வினைகளாகும்.

வினையாக்க வினைகள் தங்கள் மூல முதல் வினையி லிருந்து தொடரியல் பண்புகளாலும் வேறுபடுகின்றன. அவற்றின் பங்கெடுப்பாளர் அமைப்பும் (argument structure) வேறுபடும். எடுத்துக்காட்டாக, யோகமடி என்ற கூட்டுவினை மூலமுதல் வினையான அடி போல ஈரிட வினையாக்கமாக இல்லாமல் ஓரிட வினையாகக் கொடை எழுவாய்பெற்று வருகிறது.

எ.கா.

அவன் அவளை அடித்தான்

அவளுக்கு யோகம் அடித்தது

இதுபோல ஏறு என்ற மூல முதல் வினையும் சூடேறு என்ற கூட்டு வினையாக வரும்போது ஓரிட வினையாக வருகிறது.

எ.கா.

குரங்கு மரத்தில் ஏறியது

நீர் சூடேறியது

வினையாக்க வினைகள் சேர்ந்து வரும் அடிகள் காரணமாகச் சமப்பொருளை உணர்த்தி ஒருபொருள் பன்மொழிகளாகச் செயலாற்றவல்லன.

எ.கா.

போடு - இடு

சண்டையிடு - சண்டை போடு

படு - உறு - அடை

துன்பப்படு - துன்பமுறு - துன்பம் அடை

ஆக்கு - படுத்து

குணமாக்கு - குணப்படுத்து

வினையாக்கிகள் ஒரே அடியுடன் வந்து பொருளை வேறுபடுத்தவல்லன. எடுத்துக்காட்டாக வெளியிடு, வெளிப்படு, வெளியேறு, வெளியேற்று, வெளிப்படுத்து என்ற கூட்டு வினைகளில் வெளி என்ற அடியுடன் இடு, படு, ஏறு, ஏற்று, படுத்து என்ற வினையாக்கிகள் சேர்ந்து பொருள் வேறுபடச் செய்கின்றன.

வினையாக்கிகள் ஒரே அடியுடன் சேர்ந்து வந்து அடியின் பல் பொருளொரு சொல் தன்மையை வெளிப்படுத்த வல்லன.

எ.கா.

ஈடு கொடு, ஈடுபடு, ஈடுவை

9.3.2.3. கூட்டு வினையாக்கத்தின் செயல்நோக்கம்

கூட்டு வினையாக்கத்தின் நோக்கமாக கார்த்திகேயன்

(1983) நான்கு காரணங்களைக் கூறுகிறார்:

1. தேவையைப் பூர்த்தி செய்தல்

2. பொருண்மை வேறுபாட்டை உணர்த்தல்

3. பகுநிலைத் தன்மை பெறுதல்

4. நடையில் வேறுபாடு உணர்த்தல்

9.3.2.3.1. தேவையைப் பூர்த்தி செய்தல்

மொழி பேசுவோர் புதிய கருத்துக்களையும் அனுபவங்களையும் வெளியிடப் புதிய சொற்களை உருவாக்குதல் இயல்பு. அயல்மொழி வழி புதிய கருத்துக்களுக்கும் அனுபவங்களுக்கும் ஆட்பட்ட தமிழ்மொழி பேசுபவர் அயல்மொழி அடிகளைக் கடன் வாங்கி தமிழ் வினைகளை வினையாக்கிகளாகப் பயன்படுத்தி புதிய வினைகளை ஆக்கினர்.

எ.கா.

அமுல்படுத்து (அமுல்-இந்தி மொழி அடி)

ஓட்டுபோடு (ஓட்டு- ஆங்கில அடி)

சிபாரிசு செய் (சிபாரிசு- உருது அடி)

விவாகரத்து செய் (விவாகரத்து-சமஸ்கிருத அடி)

மட்டுமன்றி ஏற்கனவேயுள்ள தமிழ் பெயர் மற்றும் இடைச்சொற்களை அடிகளாகக் கொண்டும் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டனர்.

எ.கா.

அச்சடி, திட்டம்போடு, வாக்களி, வெளியிடு, மறியல்செய்.

9.3.2.3.2. பொருண்மை வேறுபாட்டை உணர்த்தல்

ஒரே பொருண்மைப் பரப்பில் அடங்கும் கருத்துகளை வேறுபடுத்திக் காட்டவும் கூட்டுவினைகள் ஆக்கப்பட்டன. கார்த்திகேயன் (1983) ஒன்பது பொருண்மை வேறுபாடுகளைப் பட்டியலிட்டுள்ளார்.

1. நிலை – நிலைமாற்றம்

2. தொடக்கப்பொருள்

3. பருமை – அருவம்

4. நேரடி – மறைமுகம்

5. உய்ர்வின்மை – உயர்வு

6. பொது – குறிப்பீடு

7. தனியொருவரைக் குறித்தல் – தனியொருவரைக் குறிக்காமை

8. ஒரு பொருள் பன்மொழிக்காக உருவாக்கம்

9. தன்நோக்கு – பிறநோக்கு

9.3.2.3.2.1. நிலை – நிலை மாற்றம்

தனிநிலை வினை உணர்ச்சியை நிலையாகக் குறிப்பிடும் போது அதோடு தொடர்புள்ள கூட்டுவினை உணர்ச்சியை நிலைமாற்றமாகக் காட்டும்.

எ.கா.

அவள் வருந்தினாள்

அவள் வருத்தம் அடைந்தாள்

9.3.2.3.2.2. நேரடி – மறைமுகம்

தனிவினை நேரடிச் செயலைக் குறிப்பிடும்போது அதற்கு இணையான கூட்டுவினை மறைமுகமான செயலைக் குறிக்கும்.

எ.கா.

அவள் அவனை அழைத்தாள்

அவள் அவனுக்கு அழைப்பு விடுத்தாள்

அவன் அவளை ஆதரித்தான்

அவன் அவளுக்கு ஆதரவு கொடுத்தான்

9.3.2.3.2.3. உயர்வின்மை – உயர்வு

தனிவினை எழுவாயின்/செயப்படுபொருளின் உயர்வின்மையைக் குறித்து நிற்கும் போது அதற்கு இணையான கூட்டு வினை எழுவாயின்/செயப்படு பொருளின் உயர்வைக் குறித்து நிற்கும்.

எ.கா.

அவர்கள் அவனைப் புதைத்தார்கள்

அவர்கள் அவனை அடக்கம் செய்தார்கள்

அவன் ஒரு விபத்தில் இறந்தான்

அவன் ஒரு விபத்தில் மரணமடைந்தான்

9.3.2.3.2.4. பொது – குறிப்பீடு

கூட்டுவினை குறிப்பிடு பொருளைத் தரும்போது அதற்கு இணையான தனிநிலை வினை பொதுப் பொருளைத் தரும்.

எ.கா.

அவன் அவளை விசாரித்தான்

போலீஸ் அவளை விசாரணை செய்தது

9.3.2.3.2.5. தொடக்கப்பொருள்

கூட்டு வினை தொடக்கப் பொருளைத் தரும்போது அதற்கு இணையான தனிநிலை வினை தொடக்கப் பொருளை உணர்த்தாதிருக்கும்.

எ.கா.

தனிநிலை வினை		கூட்டு வினை
பய	–	பயமெடு
நடுங்கு	–	நடுக்கமெடு
பசி	–	பசியெடு
நோ	–	நோவெடு
வலி	–	வலியெடு

கூட்டுவினை தனிநிலை வினையிலிருந்து தொடரியல் பண்பிலும் வேறுபடுகின்றது.

எ.கா.

கண்ணன் பயந்தான்

கண்ணனுக்குப் பயமெடுத்தது

அவனுக்கு வயிறு பசிக்கிறது

* அவனுக்கு வயிறு பசியெடுக்கிறது

9.3.2.3.2.6. பருமை – அருவம்

தனிநிலை வினை பருமைச் செயலைக் குறிப்பிடும்போது, அதற்கு இணையான கூட்டு வினை அருவச் செயலைக் குறித்து நிற்கும்.

எ.கா.

அவன் கையைத் தடுத்தான்

* அவன் கையைத் தடை செய்தான்

* அரசு சினிமாவைத் தடுத்தது

அரசு சினிமாவைத் தடை செய்தது

அவன் பூவை மோந்தான்

போலீஸ் நாய் மோப்பம் பிடித்தது

அவன் அதை ஆராய்ந்தான்

அவன் அதுகுறித்து ஆராய்ச்சி செய்கின்றான்

அவன் அவள் கையை விட்டான்

அவன் அவளைக் கைவிட்டான்

9.3.2.3.2.7. தனியொருவரைக் குறித்தல் – தனியொருவரைக் குறிக்காமை

தனிநிலை வினை தனியொருவரின் செயலைக் குறிப்பிடுகையில், அதற்கு இணையான கூட்டு வினை தனியொருவரின் செயலைக் குறிக்காது நிற்கும்.

எ.கா.

அரசு விலையை நிர்ணயித்தது

விலை நிர்ணமாயிற்று

அவன் புத்தகம் பிரசுரித்தான்

புத்தகம் பிரசுரமாயிற்று

9.3.2.3.2.8. ஒரு பொருள் பன்மொழிக்காக உருவாக்கல்

கார்த்திகேயன் (1983) தந்துள்ள காரணங்களில் இது வலுவில்லாத வாதமாய்த் தெரிகிறது. அவர் கருத்துப்படி கட்டளையிடு, ஆணையிடு, உத்தரவிடு என்ற ஒரு பொருள் தரும் கூட்டு வினைகள் ஒரு பொருள் பன்மொழி உருவாக்கும் நோக்கத்தில் உருவானவை. கூட்டு வினை ஒரு பொருட்பன் மொழிகளுக்கு வழி வகுக்கிறது என்பது உண்மை; ஆனால் ஒரு பொருள் பன்மொழிகளுக்காகக் கூட்டு வினைகள் உருவாக்கப்படுகிறது என்ற வாதம் அவ்வளவாகப் பொருந்தவில்லை.

9.3.2.3.2.9. தன்நோக்கு – பிற நோக்கு

ஒரே அடியுடன் வெவ்வேறான வினையாக்க வினைகளைப் பயன்படுத்தி ஒரு செயலில் தன் நோக்கு – பிற நோக்கு வேறுபாட்டை வெளிப்படுத்தலாம்.

எ.கா.

நான் ஆறுதலடைந்தேன்

நான் அவனுக்கு ஆறுதலளித்தேன்

அவள் திருப்தி அடைந்தாள்

அவள் அவனுக்குத் திருப்தி அளித்தாள்

9.3.2.3.3. பகுநிலைத் தன்மை பெறல்

ஒரு மொழி காலப்போக்கில் பகுநிலைத்தன்மை (analytic) பெறவோ கூட்டிணைவு (synthetic) தன்மை பெறவோ செய்யலாம். பழந்தமிழைப் பார்க்கிலும் தற்காலத் தமிழ்

கூடுதல் பகுநிலைத் தன்மையடைந்துள்ளதாய்த் தோன்றுகின்றது. எனவே தான் ஒரு தனிநிலை வினைக்கு இணையாக ஒன்றோ அதற்கு மேற்பட்டோ கூட்டுவினைகள் ஆக்கப் படுவதாய்த் தெரிகிறது.

எ.கா.

தனிவினை	அதற்கிணையான கூட்டுவினை
உதவு	உதவி செய்
சமை	சமையல் செய்
முயற்சி	முயற்சி செய்
முழங்கு	முழக்கம் செய்
பிரயோகி	பிரயோகம் செய்
விமர்சி	விமர்சனம் செய்
யோசி	யோசனை செய்
கோபி	கோபப்படு
வருந்து	வருத்தப்படு
வெட்கு	வெட்கப்படு

9.3.2.3.4. நடையியல் வேறுபாடு உணர்த்தல்

கூட்டு வினைகள் நடையியல் வேறுபாட்டை உணர்த்தி நிற்கின்றன.தற்காலத் தமிழில் இலக்கியத் தமிழ், பேச்சுத்தமிழ் என இருநடைகளுக்கென வேறுபட்ட வினைகள் பயன்படுத்தப்படுவதைக் கார்த்திகேயன் (1983: 87- 89) குறிப்பிடுகிறார். இவ்வேறுபாட்டை அவை தேர்ந்தெடுக்கும் வினையாக்கிகளிலும் காணலாம்.

எ.கா.

இலக்கியத்தமிழ்	பேச்சுத்தமிழ்
ஆள்	ஆட்சி செய்
இரங்கு	இரக்கப்படு

முயல்	முயற்சி செய்
அஞ்சு	பயப்படு
இகழ்	அவமானப்படுத்து
மகிழ்	சந்தோஷப்படு
சின	கோபப்படு
ஐயப்படு	சந்தேகப்படு
அல்லல்படு	அவதிப்படு
பயன்பாடு	உபயோகப்படு
ஆதரவளி	ஆதரவு கொடு
உத்திரவிடு	உத்தரவு போடு
கலவரமுறு	கலவரப்படு
குறைகூறு	குறை சொல்
புகழ்பெறு	புகழடை
ஆட்சிபுரி	ஆட்சி செய்
அதிகாரம் செய்	அதிகாரம் பண்ணு

9.3.2.4. கூட்டுவினையாக்கமும் விதிகளும்

இதுவரை கூட்டுவினை எவ்வாறு தொடர்களிலிருந்து வேறுபடுகின்றது, அவற்றின் அமைப்பு, பண்புக்கூறுகள், ஆக்கப்பெறுவதன் நோக்கம் இவை குறித்து பார்த்தோம். சொல்லாக்கத்தைப் பொறுத்தவரையில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது மூன்று: (1) கூட்டு வினைகளை ஆக்க விதிகள் உள்ளனவா? (2) இவ்விதிகள் விளைவாக்கம் உள்ளனவா? (3) இவற்றின் சொல்நிலையாக்கம் எவ்வகையில் அமைகிறது?

ராஜேந்திரன் (Rajendran, 1979) வினையாக்கிகள் எவ்வாறு தொடர்புள்ள முதல் வினைகளிலிருந்து பொருள் அடிப்படையில் வேறுபடுகின்றன என்பதோடு கூட்டு வினைகளின் பொருள் அடிப்படையிலான வகைப்பாடையும்

ஒவ்வொரு முதல் வினைகளின் கீழ் தந்துள்ளார். கார்த்திகேயன் (1983) கூட்டு வினைகளின் சேர்ந்து வருகையை (collocation) விரிவாகத் தந்துள்ளார். இவர் விவாதம் விவரணை முறையிலும் பட்டியலிடும் முறையிலும் அமைகிறதேயன்றி விதி முறையில் அமையவில்லை இவர் சொல் நிலையாக்கமுற்று அகராதிப்படுத்தப்பட்ட கூட்டு வினைகளையும் நிலையாக்கமுறாத புதிய வினைகளையும் வேறுபடுத்தி ஆயவில்லை. கார்த்திகேயன் (Karthikeyan, 1983) மற்றும் ராஜேந்திரன் (Rajendran, 1979) என்பாரின் தகவல்களையும் வருணனைகளையும் வைத்துக்கொண்டு கூட்டு வினையாக்க விதிகளைக் கூற இங்கு முயற்சி எடுக்கப்படும்.

9.3.2.5. கூட்டு வினையாக்கத்தின் விளைவாக்கமும் சொல்நிலையாக்கமும்

கூட்டு வினையாக்கத்தைப் பின்வரும் பொதுவிதியால் காட்டலாம்.

அடி + வினையாக்கி ---> கூட்டு வினை

இவ்வடிகள் பெயர்ச்சொல்லாகவோ இடைச்சொல்லாகவோ வரும் என்ற காரணத்தால் பின்வரும் விதிகள் பொது விதியைக் குறிப்பீடு செய்து வரும்.

பெயர் + வினையாக்கி ---> கூட்டு வினை

இடைச்சொல் + வினையாக்க வினை---> கூட்டு வினை

பெயர்ச்சொல், இடைச்சொல் தவிர செய்து எனும் வாய்ப்பாட்டு வினை எச்சம் + வினை என வரும் தொடரும் (எ.கா. காட்டிக்கொடு, சுட்டிக்காட்டு, ஆட்டிப்படை, கண்டுபிடி) செய எனும் வாய்ப்பாட்டு வினை எச்சம் + வினை என வரும் தொடரும் (எ.கா. தவறவிடு, தோற்கடி, சாகடி, நாறடி) வேற்றுமைத்தொடர் + வினை என வரும் தொடரும் (எ.கா. உடைப்பில் போடு, தூக்கில் போடு, கிடப்பில் போடு) பின்னுருபுத் தொடர் + வினை என வரும் தொடரும் (எ.கா. கைக்குள் போடு) பொருண்மை நிலையாக்கத்தால் கூட்டு வினை போல் செயற்படும். பொருண்மை

நிலையாக்கம் காரணமாய்த் தொடராக வரும் இவைக் கூட்டாகச் செயலாற்றுவதன் காரணமாக இவ்வாக்கங்களைக் கூட்டு வினையாக்க விதியால் விளைந்ததாய்க் கருத வேண்டுமா என்ற ஐயம் ஏற்படுகிறது.

கார்த்திகேயனின் (1983) பட்டியலில் படும் பெரும்பாலான கூட்டு வினைகள் பொருண்மை அடிப்படையில் சொல் நிலையாக்கம் பெற்று, அதாவது தனிப்பண்பு அல்லது தனிப்பொருள் பெற்று அகராதியில் இடம் பெற்றுள்ளன. கூட்டுவினையின் தகுதியாய், அது தொடரியல் மற்றும் பொருண்மை அடிப்படையில் மூல முதல் வினையிலிருந்து விலகி இருக்கும் பண்புகளைச் சுட்டிக்காட்டினோம். இவ்வாறு தனிப்பண்பு மற்றும்/அல்லது தனிப்பொருள் பெறும் சொற்கள் அகராதியில் பட்டியலிடப்படுவது இயல்பு. அகராதியில் பட்டியலிடப்படும் சொற்களுக்கு ஆக்கவிதிகள் தரவேண்டியதில்லை. அப்படியென்றால் கூட்டு வினையாக்கங்களை விதிகளுக்குட்படாத விளைவாக்கம் இல்லாதனவாய்க் கருத வேண்டுமா என்ற வினா எழுகிறது. வினையாக்கிகள் புதிய கூட்டு வினைகளை உருவாக்கவல்லன என்றும் புதிய ஆக்க வினைகளின் பொருளை முன்னறிவிக்கவோ ஊகிக்கவோ இயலும் என்றும் நாம் நிரூபிக்க இயலுமானால் இத்தகைய ஆக்கங்களை விதிகளால் கூறவும் விளைவாக்கமாய்க் கொள்ளவும் இயலும். ஆக்கங்கள் விளைவாக்கங்களாய் இல்லாத போது அவற்றின் ஆக்கத்திற்கு விதி தேவையா என்ற வினா ஏழலாம். கூட்டு வினையாக்கங்கள் பல சொல் நிலையாக்கம் பெற்றாலும் அவைகளுக்கிடையே காணப்படும் ஒருபொருள் பன்மொழியமும் (எ.கா. துன்பமுறு, துன்பப்படு) ஒரு கூட்டாக்க வினைக்குப் பதிலாக வேறொரு கூட்டாக்க வினையைப் பயன்படுத்துவதால் விளையும் நுண்மையான பொருள் வேறுபாடுகளும் (எ.கா. கோபமுறு, கோபமடை, கோபப்படு) அகராதியில் தரப்பட வேண்டும். இக்கூட்டுகள் எல்லாம் அடி + வினையாக்கி என்று பிரித்து ஆயப்பட்டு பொதுவிதிகள் தரப்பட வேண்டும்.

தமிழைப் பொறுத்தவரையில் விளைவாக்க வினைகள் இயல் வினைகளாகும். (native verbs). அவைகள் நாற்பதுக்கு அண்மையில் வரும் எண்ணிக்கையிலானவை. கார்த்திகேயன் (Karthikeyan,1983) 31 வினைகளை வினையாக்கிகளாகப் பட்டியலிட்டுள்ளார். கீழ்வரும் அட்டவணையில் கார்த்திகேயனின் கூட்டுவினைகளின் பட்டியலின்படியும் கிரியாவிலிருந்து எடுக்கப்பட்ட கூட்டு வினைகளின் பட்டியலின் படியும் ஒவ்வொரு வினையாக்க வினையின் கீழும் எத்தனைக் கூட்டு வினைகள் வருகின்றன என்ற கணக்கீடு தரப்பட்டுள்ளது.

கூட்டு வினைகள்	கூட்டுவினைகளின் எண்ணிக்கை	
	கார்த்திகேயன் பட்டியலின் படி	கிரியா அகராதியின் பட்டியலின் படி
1. அடி	27	37
2. அடை	80	5
3. அளி	26	7
4. ஆகு	45	36
5. ஆக்கு	21	24
6. ஆடு	16	33
7. ஆட்டு	–	5
8. ஆற்று	7	3
9. இடு	42	50
10. உறு	43	6
11. உறுத்து	6	5
12. ஊட்டு	24	5
13. எடு	17	18

14. எய்து	–	4
15. ஏல்	6	3
16. ஏறு	8	10
17. ஏற்று	8	13
18. கட்டு	–	23
19. காட்டு	–	20
20. கூறு	7	1
21. கொடு	24	19
22. கொல்	15	18
23. செய்	197	36
24. சொல்	6	–
25. தட்டு	–	13
26. படு	65	71
27. படுத்து	81	64
28. பண்ணு	90	12
29. பார்	10	14
30. பிடி	14	16
31. புரி	18	1
32. பெறு	12	9
33. போ	6	10
34. ஓடு	24	47
35. மூட்டு	–	2
36. வா	–	16
37. வாங்கு	–	10

38. விடு	8	18
39. விழு	-	5
40. வை	7	19

கார்த்திகேயனின் பட்டியலின் படி செய் மிகுந்த விளைவாக்கமுள்ளதாயும் பண்ணு அதற்கு அடுத்தபடியாயும் பின்னர் படுத்து, படை, படு, ஆகு, உறு, இடு, அடி, அழி, கொடு, ஊட்டு, போடு, ஆக்கு என்பன எண்ணிக்கையின் இறங்கு வரிசையிலும் விளைவாக்கத்தைக் காட்டுகின்றன. ஆக்கச்சொற்களின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு விளைவாக்கத்தைக் கணக்கிடுவது தவறு என்று ஆரொனோப் Aronoff (1976) வாதிடுகிறார். விளைவாக்கத்தைக் கணக்கிடுவது அவ்வாறு எளிதல்ல என்றும் இதைப் பல காரணிகள் தீர்மானிக்கின்றன என்றும் அவர் கூறுவார். அடிகளின் வகுப்பைப் பொறுத்து வரும் ஆற்றலுள்ள ஆக்கங்களுக்கும் ஆக்கப்பட்ட ஆக்கங்களுக்கும் உள்ள விகித அடிப்படையில் தான் விளைவாக்கம் கணிக்கப்பட வேண்டும் என்பார். கிரியா அகராதி கார்த்திகேயனின் பட்டியலில்படும் பெரும்பாலான எல்லாக் கூட்டு வினைகளையும் சொல்லன்களாகப் பட்டியலிட்டுள்ளது. கிரியா அகராதிப்படி இக்கூட்டுவினைகள் எல்லாம் சொல்நிலையாக்கம் பெற்றவை. ஏனென்றால் அவைத் தனிப்பொருளைத் தந்து நிற்கின்றன. கூட்டு வினைகள் தனிப்பொருளைப் பெற்று அகராதியில் பட்டியலிடப்படும் நிலைபெறுகின்றன என்பது உண்மை. இருப்பினும் புதிய தேவைகளைப் பூர்த்தி செய்ய கூட்டுவினைகள் ஆக்கப்படுகின்றன என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. அப்படியானால் வினையாக்கிகளில் பல விளைவாக்கமாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதிலும் ஐயமில்லை. ஒப்புமை (analogy) இவ்வாக்கங்களில் பெரும்பங்கு வகிப்பதாய்த் தோன்றுகிறது. ஒவ்வொரு விளைவாக்க வினையும் எவ்வாறு அடிகளுடன் சேர்ந்து வினையாக்கம் செய்கின்றன என்பதைப் புரிந்து கொண்டால் தான் அவற்றின் விளைவாக்கம் குறித்து பேசமுடியும்.

9.3.2.6. வினையாக்கிகள் அடிப்படையிலான கூட்டாக்க ஆய்வு

இங்கு கூட்டு வினையாக்கம் ஒவ்வொரு வினையாக்கியையும் எடுத்துக் கொண்டு விரிவாக ஆயப்பட்டுள்ளது.

9.3.2.6.1. அடி

அடி முதல் வினையாக வருகையில் ஈரிட வினையாக 'தாக்கம்' என்ற பொருண்மைக் களத்தில் வரும். (பார்க்க Rajendran *1979:431*). சேர்ந்து வரும் பெயர்/இடைச்சொல் அடிப்படையில் இது புதிய பொருள் பெறும். இந்தப் புதியபொருளை முன்கூட்டியே ஊகிக்க இயலுமா? என்பது தான் கேள்வி: இந்தப் பெயருடன்/இடைச்சொல்லுடன் வரும் போது இந்தப் பொருள்பெறும் என்று நம்மால் ஊகிக்க இயலுமானால் இவ்வாக்கங்களில் ஒருவித பொருண்மைப் பற்றாசு (semantic coherence) இருப்பதாய்க் கூறலாம். இத்தகைய பொருண்மைப் பற்றாசு புதிய கூட்டு வினைகளை ஆக்கக் காரணமாய் அமையுமானால் இவ்வாக்கங்களை விளைவாக்க வடிவுகள் எனக் கொள்ளவும் சொல்லாக்க விதிகள் பற்றிப் பேசவும் வகையுண்டு. சொல்லாக்க விதியின் படி விளைவாக்கங்களாய்க் கருத இயலாதனவற்றை அகராதி வடிவுகள் என்று கூறவும் வழியுண்டு. சேர்ந்து வருகையால் (collocation) விளையும் கூட்டாக்கப் பொருள்கள் அடிப்படையில் கூட்டுவினைகளைப் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்:

1. பதித்தல் அல்லது பூசுதல்

எ.கா.

முத்திரை அடி, அச்சடி, வெள்ளையடி, சாயமடி

2. சட்டென்று நிகழ்த்தும் உடல் சார்ந்த செயல்

எ.கா.

கர்ணம் அடி, கண் அடி, சலாம் அடி, சல்யூட் அடி

3. உந்தல் செயல்

எ.கா.

காற்றடி, மருந்து அடி

4. கை கால்களை உதைத்தல்

எ.கா.

நீச்சல் அடி

5. கடுமையான அல்லது விரும்பத்தகாத அல்லது எதிர்பாராத செயல்

எ.கா.

கொள்ளையடி, அரட்டையடி, கிண்டலடி, பெருமையடி, போரடி, கூத்தடி, கும்மாளமடி, வாயடி, மொட்டையடி, காப்பியடி, கதையடி, தண்ணியடி, விஷமடி, தம்பட்டம் அடி, கொட்டமடி, கோட்டடி, லாட்டரி அடி, ஷாக் அடி

எந்த அளவுக்கு மேற்கண்ட பெயர் + வினைச் சேர்க்கைகளைக் கூட்டு வினைகள் என்று கூற முடியும் என்பது சந்தேகமாய் இருக்கிறது. மூல முதல் வினையிலிருந்து தொடரியல், பொருண்மையியல் அடிப்படையில் விலகிச் செல்வது காரணமாக கூட்டு வினை அமையும் என்றால் கீழ்வரும் சொல்லடி வகைபாடுகளையும் கூட்டுகளாகக் கருத வேண்டும்.

மணம் அடி (மணம் வீசு), நாற்றம் அடி (நாற்றம் வீசு), சாரல் அடி, மழை அடி, வெயில் அடி, நிலவு அடி, காற்று அடி (காற்று வீசு), புயல் அடி (புயல் வீசு), குளிர் அடி.

ஆனால் மேற்கண்டவை கூட்டு வினைகள் அல்ல. சேர்ந்து வரும் பெயர்களை எழுவாயாகத்தான் கொள்ள இயலும்.

அடி சேர்ந்து வருகை காரணமாகத் தன் அடிப்படைப் பொருளை இழந்து இரு பொருள்களில் வருகிறது; ஒன்று 'செய்' என்ற பொருள்; இன்னொன்று 'நிகழ்' என்ற பொருள்.

இப்பொருள்கள் சேர்ந்து வரும் பெயருக்குத் தகுந்தபடி ஆக்கம் பெறும். எடுத்துக்காட்டாக, முத்திரையடி என்பது 'பதி' என்ற பொருளும் காற்றடி என்பது சூழலுக்கு ஏற்றவாறு 'ஏற்று' அல்லது 'வீசு' என்ற பொருளும் தண்ணியடி என்பது 'குடி' அல்லது 'பாய்ச்சு' என்ற பொருளும் பெறும். 'நிகழ்' என்ற பொருளில் வரும் சேர்க்கைகளைக் கூட்டு வினையாகக் கொள்ளத் தயக்கமாய் இருகிறது; 'செய்' என்னும் பொருளில் வரும் சேர்க்கைகளைக் கூட்டு வினைகளாய்க் கொள்ள இயலும். பெயர் + வினை சேர்க்கைகளை ஏன் கூட்டுச் சொல்லாகக் கருத வேண்டும், இவ்விதமான சேர்க்கையின் போது பொருள் மாற்றம் ஏற்பட்டுப் புதிய பொருள் வருவதைப் பொருண்மையியல் நிலையில் பொருள்கோளின் போது கூறினால் போதாதா என்ற கேள்விக்குத் தற்போது விடை தருவது கடினம். அடி என்பதை ஒரு வினையாக்க வினை என்று கொண்டு அது கூட்டு வினைகளை உருவாக்குகிறது என்று கொள்வதாயிருந்தால், அது புதிய கூட்டு வினைகளை உருவாக்கும் விதியை ஒப்புமையாக்கம் (analogical formation) என்று தான் குறிப்பிட வேண்டும். ஏற்கனவேயுள்ள கூட்டு வினைகளின் அமைப்பின்படியும் பொருள்கோளின்படியும் புதிய வினைகள் உருவாக்கப்படலாம் எ.கா. டெலிபோன் அடி (டெலிபோனில் பேசு), பீயர் அடி (பீயர் குடி), போதை மருந்தடி (போதை மருந்து சாப்பிடு).

9.3.2.6.2. அடை

அடை முதல் வினையாக 'உடைமை மாற்றம்' என்ற பெரும் பொருண்மைக் களத்தில் கீழ் 'பெறுதல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் வருகிறது. சேர்ந்து வருகையால் பெறப்படும் ஆக்கப் பொருள்களின் அடிப்படையில் அடை-ஆல் ஆக்கப்பெறும் கூட்டு வினைகளை மூன்றாகப் பகுக்கலாம்:

1. உளவியல் சம்பந்தப்பட்ட நிலையைக் குறிக்கும் உணர்ச்சி, மனக்கிளர்ச்சி தொடர்பான பெயர்களுடன் சேர்ந்து சம்பந்தப்பட்ட 'உணர்ச்சியை அல்லது மனக்கிளர்ச்சியை பெறு' என்ற பொருளில் வருவன

எ.கா.

சந்தோஷம் அடை, மகிழ்ச்சியடை, ஆனந்தம் அடை, களிப்படை, உவகையடை, குதூகலம் அடை, பூரிப்படை, வருத்தமடை, சங்கடமடை, துக்கம் அடை, வேதனையடை, கலக்கம் அடை, குழப்பம் அடை, சலிப்படை, வெட்கம் அடை, நாணம் அடை, கூச்சம் அடை, தயக்கம் அடை, பயம் அடை, அச்சம் அடை, மிரட்சியடை, பீதியடை, வெறுப்படை, அருவருப்படை, பொறாமையடை, கோபம் அடை, எரிச்சல் அடை, இரக்கம் அடை, பரிதாபம் அடை, அதிசயம் அடை, வியப்படை, திகைப்படை, மலைப்படை, பிரமிப்படை, துணிவடை, தைரியம் அடை, ஊக்கம் அடை, உற்சாகம் அடை, ஆர்வம் அடை, ஆவல் அடை, ஒக்கம் அடை, பக்குவம் அடை, நிம்மதியடை.

2. உடல் அல்லது பருப்பொருள் சார்ந்த நிலையிலிருந்து மாறுதல் பெறு' என்ற பொருளில் வருவன

எ.கா.

ஊனமடை, சிதைவடை, செழிப்படை, சேதமடை, ஈரமடை, வரட்சியடை, குளிர்ச்சியடை, வெப்பமடை, உஷ்ணமடை, வீக்கமடை, நீட்சியடை, வளர்ச்சியடை, மயக்கமடை, மரணமடை, தளர்ச்சியடை, நிறைவு அடை, சின்னபின்னமடை, பொலிவடை, வலிமையடை, பலமடை

3. மதிப்பான நிலையைப் பெறுதல் என்ற பொருளில் வருவன

எ.கா.

வெற்றியடை, புகழ் அடை, பெயரடை, பதவி அடை

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளிலிருந்து அடை வினையாகியாக அடி என்ற வினையாக்கியிலிருந்து கூடுதல் தெளிவாகவும் (transparent) பொருண்மை அடிப்படையில் பற்றாசு உள்ளதாயும் இருப்பதுடன் கூட்டுவினையின்

கூட்டுப்பொருள் ஊகிக்கக் கூடியதாயும் வேறு எந்த அடிகளுடன் இதைச் சேர்க்கலாம் என்று ஊகம் செய்யக்கூடியதாகவும் இருக்கிறது. எனவே இதை விளைவாக்கமுள்ள வினையாக்கியாகக் கருத இயலும்.

9.3.2.6.3. அளி

அளி முதல் வினையாக 'உடைமை மாற்றம்' என்ற பெரும் பொருண்மைக் களத்தில் 'கொடுத்தல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் வருகிறது. இது பின்வருமாறு கூட்டு வினைகளாக வரும்: *பரிசளி, பட்டமளி, தீர்ப்பளி, தண்டனையளி, வாக்களி, பதிலளி, சந்தோஷமளி, சங்கடமளி, ஊக்கமளி, ஆதரவளி, பயனளி, தோற்றமளி, உத்திரவாதமளி, காட்சியளி, பதிலளி, வரவேற்பளி, விடையளி, விளக்கமளி.*

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து அளி வினையாக்கியாக அடை -ஐப் போலவே தெளிவாகவும் பொருண்மை அடிப்படையில் பற்றாசு உள்ளதாயும் இருப்பதுடன் கூட்டு வினையின் கூட்டுப்பொருள் ஊகிக்கக்கூடியதாயும் வேறு எந்த அடிகளுடன் இதைச் சேர்க்கலாம் என்று ஊகம் செய்யக்கூடியதாயும் இருக்கிறது. எனவே இதை விளைவாக்கமுள்ள வினையாக்கியாகக் கருத இயலும். கிரியாவின் அகராதியில் அளி-ஆல் ஆக்கப்பட்ட ஏழு கூட்டு வினைகள் தான் பட்டியலிடப் பட்டுள்ளன என்பதை நாம் இங்கு குறிப்பிட வேண்டியதாகிறது. இதிலிருந்து அளி புதிய கூட்டு வினைகளை உருவாக்கவல்லது என்பது தெளிவாகின்றது.

9.3.2.6.4. ஆகு

'நிலை மாற்றம்' என்ற பொருண்மைப்பரப்பில் ஆகு முதல் வினையாக வரும். ஆகு மூன்று வகையான சேர்ந்து வருகை முறையில் ஈடுபடுவதாய் கார்த்திகேயன் (Karthikeyan 1983:107-116) குறிப்பிடுகிறார்: *(1)* உடல் அல்லது பருப்பொருள் நிலையைக் குறிக்கும் பெயர்களுடன் சேர்தல் *(2)* செலவு வகையைக் குறிப்பிடும் பெயர்களுடன் சேர்தல் *(3)* வெளிவரும் நிலையைக் குறிப்பிடும் பெயர்களுடன்

சேர்தல். ஆக்கப்பொருள் அடிப்படையில் 'ஆகு' கூட்டு வினைகளைப் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்:

1. உடல் அல்லது பருப்பொருள் நிலையைக் குறிக்கும் பெயர்களுடன் சேர்ந்து 'ஆகு' என்ற பொருள் தருவன

எ.கா.

குணமாகு, பலவீனமாகு, இருட்டாகு, கறுப்பாகு, தெளிவாகு, மூளியாகு, பழுதாகு, பாழாகு

2. செலவு வகையைக் குறிப்பிடும் பெயர்களுடன் சேர்ந்து 'நிகழ்' என்ற பொருள் தருவன

எ.கா.

செலவாகு, செல்லுபடியாகு, விரயமாகு, வீணாகு

3. வெளிவரும் நிலையைக் குறிக்கும் பெயர்களுடன் சேர்ந்து தனிப் பொருள்களைத் தருவன

எ.கா.

அம்பலமாகு, ஜனனமாகு, பயணமாகு, பிரசுரமாகு, விடுதலையாகு, வெளியாகு

இம்மூன்று வகைச் சேர்ந்து வருகையில் முதலாவதான சேர்ந்து வருகையில் பொருண்மைப்பற்றாசு உள்ளதாயும் தெளிவானதாகவும் சேர்ந்து வரும் அடிகள் ஊகிக்கக்கூடியதாயும் இருப்பதால் இவ்வகையான ஆக்கங்களை விளைவாக்கமாகக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. பிற இரு வகைச் சேர்ந்து வருகைகளும் முதலாவதைவிட பொருண்மைப்பற்றாசு குறைவானதாயும் தெளிவு குறைவானதாயும் சேர்ந்து வரும் அடிகள் ஊகிக்க இயலாதனவாயும் இருப்பதால் இவ்வகை ஆக்கங்கள் சொல்நிலையாக்கம் பெறும் சாத்தியம் கூடுதலாய் உள்ளது.

9.3.2.6.5. ஆக்கு

இது முதல் வினையாக 'உருவாக்கம்' என்ற பொருண்மைக் களத்தின் கீழ் வரும். ஆக்கு பெயர்களுடன் சேர்ந்து 'உண்டுபண்ணு' என்ற பொருளில் பொதுவாக

வருவதாய்த் தெரிகிறது. இதனால் ஆக்கப்பெறும் கூட்டு வினைகள் பொருண்மைப்பற்றாசு உள்ளதாயும் தெளிவானதாயும் தொடர்ந்து வரும் அடிகள் ஊகிக்கக் கூடியதாயும் இருக்கின்றது.

எ.கா.

அதிகமாக்கு, அழகாக்கு, அறிமுகமாக்கு, உயரமாக்கு, உருவாக்கு, காணிக்கையாக்கு, குழப்பமாக்கு, சிக்கலாக்கு, சூடாக்கு, செழிப்பாக்கு, சொந்தமாக்கு, தூய்மையாக்கு, தெளிவாக்கு, நீளமாக்கு, பாழாக்கு, முழுமையாக்கு, மூளியாக்கு, விரயமாக்கு, வீணாக்கு, விரிவாக்கு

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து ஆக்கு விளைவாக்கமுள்ள வினையாக்கியாக வரத்தக்கதான சாத்தியக்கூறுகள் கூடுதலாய் இருப்பது தெரிகிறது.

9.3.2.6.6. ஆடு

இருப்புநிலை மாற்றம் (அல்லது சலனம்) என்ற பொருண்மைக் களத்தில் திசைசாரா இருப்புநிலை மாற்றம் என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் ஆடு முதல் வினையாக வரும். ஆடு அது சேர்ந்து வரும் பெயர்களையொட்டி குறைந்தது மூன்று பொருளில் வரும்:

1. ஆடு

எ.கா.

ஆட்டம் ஆடு, சதிராடு, நடனமாடு, நாட்டியமாடு, கூத்தாடு

2. விளையாடு

எ.கா.

சூதாடு, சீட்டாடு, நீராடு

3. ஈடுபடு

எ.கா.

களவாடு, சூறையாடு, போராடு, வேட்டையாடு, உரையாடு, வழக்காடு, வாதாடு

4. பிற சேர்க்கைகள்

எ.கா.

திண்டாடு, திக்குமுக்காடு, கொண்டாடு, தள்ளாடு

ஆடு 'விளையாடு' என்ற பொருளில் கிரிக்கெட் ஆடு, புட்பால் ஆடு, டென்னிஸ் ஆடு, பாட்மின்டன் ஆடு என்று விளையாட்டைக் குறிக்கும் பெயர்களுடன் சேர்ந்து வரலாம். ஆனால் இவற்றைக் கூட்டு வினைகளாய்க் கொள்ள இயலுமா என்று தெரியவில்லை. எப்படியாயினும் ஆடு 'விளையாடு' என்றபொருளில் விளைவாக்கமுள்ளதாய்க் கூட்டு வினைகளை உருவாக்கலாம் என்று தெரிகிறது. இது போலவே ஆடு முதற்பொருளில் பாரதநாட்டியமாடு, குச்சுப்பிடி ஆடு, கதகளி ஆடு என்ற பெயர்+வினை சேர்க்கைகளை ஆக்குவதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

9.3.2.6.7. ஆட்டு

ஆடு என்பதற்கு இணையான செயப்படுபொருள் குன்றா வினையான (பிற வினையான) ஆட்டு பின்வரும் கூட்டாக்கங்களை உருவாக்குகின்றது: குளிப்பாட்டு, உறக்காட்டு, பாராட்டு, சீராட்டு, தாலாட்டு, வாலாட்டு, மாவட்டு. ஆட்டுகார்த்திகேயனால் வினையாக்க வினையாகத் தரப்படவில்லை. ஆட்டு விளைவாக்கமில்லாத வினையாக்கியாகத் தெரிகிறது.

9.4.2.6.8. ஆற்று

'செய்தல்' என்று பொதுப்பொருள் தரும் வினைகள் உள்ளடங்கிய பொருண்மை களத்தில் இது முதல் வினையாக வரும். இலக்கியத் தமிழில்/ எழுத்துத் தமிழில் மட்டும் பயன்படுத்தப்படும் இவ்வினை பெரும்பாலும் பெயர்களுடன் சேர்ந்தே வருகிறது. செய், பண்ணு, புரி என்பன இதனுடன் குறை ஒருபொருள் பன்மொழிகளாகத் தொடர்புடையன. இது 'செய்' என்ற பொருளில் வந்து பின்வரும் கூட்டுவினைகளை உருவாக்கும்: கடமையாற்று, செயலாற்று, பணியாற்று, தொண்டாற்று, உரையாற்று, சொற்பொழிவாற்று, விரிவுரையாற்று. ஆற்று விளைவாக்கமுள்ள வினையாக்கியாகத் தெரியவில்லை.

9.3.2.6.9.இடு

இடு என்பது 'உடமை மாற்றம்' என்ற பெரும் பொருண்மைக் களத்தில் இழத்தல்/கைவிட்டுப்போதல் என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் 'விழவிடுதல்' என்ற பொருளில் போடு என்ற வினையின் இலக்கிய நடை/எழுத்து நடையின் பாற்படும் ஒருபொருள் பன்மொழியாக வரும். சேர்ந்து வருகையால் பெறப்படும் ஆக்கப் பொருள்களின் அடிப்படையில் 'இடு' கூட்டுகளைப் பின்வருமாறு பகுக்கலாம்:

1. கையில் உள்ளதைப் போடுதல்

எ.கா.

பிச்சையிடு, காணிக்கையிடு, அன்னமிடு, பணமிடு, வித்திடு, மருந்திடு, எண்ணையிடு, மையிடு, பொட்டிடு

2. உடம்பிலிருந்து வெளியில் கொண்டு வந்து போடுதல்

எ.கா.

முட்டையிடு, சாணமிடு, எச்சமிடு, பிழுக்கையிடு

3. உண்டாக்குதல்/ஆக்குதல்

எ.கா.

துளையிடு, ஓட்டையிடு, பங்கிடு, கூறிடு, வேலியிடு

4. வாய் மூலம் கொடுத்தல்/போடுதல்

எ.கா.

கட்டளையிடு, ஆணையிடு, ஆஞ்ஞையிடு, உத்தரவிடு, சாபமிடு, நிபந்தனையிடு, சப்தமிடு, முறையிடு, முத்தமிடு

5. சப்தம் உண்டாக்குதல்

எ.கா.

கூச்சலிடு, சப்தமிடு, கூப்பிடு, கிரீச்சிடு, ஓலமிடு, கோஷமிடு, ஊளையிடு

6. ஈடுபடுதல்

எ.கா.

வழக்கிடு, சண்டையிடு, போட்டியிடு, கொள்ளையிடு

7. பிற சேர்க்கைகள்

எ.கா.

முட்டுக்கட்டையிடு, வரையிடு, வட்டமிடு, முட்டுக்கண்ணியிடு, வெளியிடு, எண்ணமிடு, கணக்கிடு, ஒப்பிடு, ஒப்பமிடு, அளவிடு, செலவிடு, செப்பமிடு, குறுக்கிடு, தலையிடு, பொங்கலிடு, ஜில்லிடு, பார்வையிடு.

இடு முதல் பொருளில் விளைவாக்கமுள்ள கூட்டுகளை ஆக்கவல்லது என்று தோன்றுகின்றது. நான்காவது பொருளிலும் விளைவாக்கங்கள் உருவாக்கலாகும். பிற பொருள்களில் ஒப்புமையாக்கத்தால் புதிய கூட்டுகள் உருவாகலாம்.

9.3.2.6.10. உறு

உறு 'அடைதல்' என்னும் பொருள்படும் வினைகள் அடங்கும் பொருண்மைக் களத்தில் வரும். இது இலக்கிய/எழுத்து நடைக்குரியது. பெரும்பாலும் தனித்து வராது. பெயருடன் சேர்ந்து கூட்டு வினையாகவே வரும். இது அடை என்ற வினையாக்க வினையோடு ஒருபொருள் பன்மொழியம் அடிப்படையில் பொருண்மைத் தொடர்புள்ளது. அடை-ஐப் போலவே 'உறு' - கூட்டுக்களைச் சேர்ந்து வருகையால் விளையும் ஆக்கப்பொருள்களின் அடிப்படையில் மூன்றாகப் பகுக்கலாம்:

1. உளவியல் சம்பந்தப்பட்ட நிலையைக் குறிக்கும் உணர்ச்சி, மனக்கிளர்ச்சி தொடர்பான பெயர்களுடன் சேர்ந்து சம்பந்தப்பட்ட உணர்ச்சியை அல்லது மனக்கிளர்ச்சியை அடைதல் என்ற பொருளில் வருவன.

எ.கா.

அச்சமுறு, அதிர்ச்சியுறு, அல்லலுறு, அவதியுறு,

இன்புறு, எரிச்சலுறு, கலக்கமுறு, கலவரமுறு, களிப்புறு, குதூகலமுறு, குழப்பமுறு, கோபமுறு, சலிப்புறு, சிறுமையுறு, சீற்றமுறு, சோர்வுறு, திருப்தியுறு, துணுக்குறு, பங்கமுறு, பயமுறு, பரிவுறு, மகிழ்ச்சியுறு, வியப்புறு, விரக்தியுறு, வெட்கமுறு, வெறுப்புறு.

மேற்சொன்ன எல்லா கூட்டுவினையில் வரும் உறு-வை அடை என்ற வினையால் இடம் பெயர்த்து அதே பொருள்களைப் பெறலாம்.

2. உடல் அல்லது பருப்பொருள் சார்ந்த நிலையிலிருந்து மாறுதல் அடைதல் என்ற பொருளில் வருவன.

எ.கா.

ஊனமுறு, சிதைவுறு, செழிப்புறு, சேதமுறு, தளர்ச்சியுறு, நவீனமுறு, நிறைவுறு,சின்னபின்னமுறு, பொலிவுறு, வலிமையுறு, வளர்ச்சியுறு, மயக்கமுறு.

மேற்சொன்ன எல்லாக் கூட்டு வினையில் வரும் உறு -வை அடை என்ற வினையால் இடம் பெயர்த்து அதே பொருளைப் பெறலாம்.

3. பிற சேர்க்கைகள்

எ.கா.

கேள்வியுறு, தோல்வியுறு

9.3.2.6.11. உறுத்து

உறுத்து 'அடையச் செய்' என்ற பொருளில் வந்து பின்வரும் கூட்டுகளை உருவாக்குகின்றது: தெளிவுறுத்து, துன்புறுத்து, பயமுறுத்து. படுத்து இக்கூட்டுகளில் வரும் உறுத்து - வை இடம் பெயர்த்து அதே பொருள்களைத் தரும். உறுத்து என்பது படுத்து என்பதன் இலக்கிய வழக்காகும். இவை மட்டுமன்றி பின்வரும் சொல்நிலையாக்கம் பெற்ற கூட்டுகளையும் உருவாக்கும்.

எ.கா.

வற்புறுத்து, வலியுறுத்து

9.3.2.6.12. ஊட்டு

'உடைமை மாற்றம்' என்ற பொருண்மைக் களத்தில் வரும் 'விட்டுப்போதல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் இது முதல் வினையாக வரும்.

1. இது மனநிலையைக் குறிக்கும் பெயர்களுடன் சேர்ந்து 'உண்டாக்கு' என்ற பொருளில் வரும்.

எ.கா.

ஆர்வமூட்டு, ஆத்திரமூட்டு, இன்பமூட்டு, எரிச்சலூட்டு, எழுச்சியூட்டு, களிப்பூட்டு, கிலியூட்டு, கிளர்ச்சியூட்டு, கோபமூட்டு, நம்பிக்கையூட்டு, நினைவூட்டு, வெறியூட்டு, வெறுப்பூட்டு.

2. 'உண்டாக்கு' என்ற பொருளில் பின்வரும் கூட்டுகளையும் உருவாக்கும்.

எ.கா.

மணமூட்டு, தீயூட்டு, வலுவூட்டு, வளமூட்டு

ஊட்டு மேற்கண்ட அமைப்புகளின் அடிப்படையில் (ஒப்புமையாக்கப்படி) புதிய கூட்டுகளை உருவாக்கலாம்.

9.3.2.6.13. எடு

'உடைமை மாற்றம்' என்ற பொருண்மைக் களத்தில் 'வந்து சேரல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் இது முதல் வினையாக வரும்.

1. எடு பின்வரும் கூட்டுகளில் 'தொடங்கல்' பொருளில் வருகிறது:

எ.கா.

ஓட்டம் எடு, நடுக்கம் எடு, நோவு எடு, நாற்றமெடு, மணமெடு, ஊரலெடு, பசியெடு, பேச்சு எடு, முயற்சி எடு, வலி எடு

2. 'எடு' என்ற பொருளில் பின்வரும் கூட்டுகளில் வரும்:

பிச்சையெடு, தத்தெடு, சுவீகாரமெடு, அளவெடு,

ஓய்வெடு, குறிப்பெடு, சபதமெடு, பங்கெடு, முடிவெடு, உருவெடு, பிறப்பெடு, வடிவெடு

3. பின்வரும் கூட்டுகளிலும் எடு வரும்:

வாந்தியெடு, விக்கல் எடு, படையெடு, தலையெடு, குழியெடு

எடு-வை விளைவாக்கமுள்ள வினையாக்கியாகக் கருதவியலும்.

9.3.2.6.14. எய்து

'உடைமை மாற்றம்' என்ற பொருண்மைக் களத்தில் கீழ் 'வந்து சேரல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் இது முதல் வினையாக வரும். இது 'அடை' என்ற பொருளில் பின்வரும் கூட்டுகளை ஆக்கும்:

இயற்கையெய்து, இறும்பூதெய்து, பருவமெய்து, பூப்பெய்து.

எய்து இலக்கியத்தமிழ்/செந்தமிழ் நடையின் கண்படும். இது விளைவாக்கம் உள்ள வினையாக்கியல்ல.

9.3.2.6.15. ஏல்

'உடைமை மாற்றம்' என்ற பொருண்மைக் களத்தில் 'வந்து சேரல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் இது முதல் வினையாக வரும்.

இது 'ஏற்றுக்கொள்' என்ற பொருளில் பொறுப்பைக் குறிக்கும் பெயர்களுடனும் வேறு சில பெயர்களுடனும் சேர்ந்து வந்து கூட்டாக்கம் செய்யும்.

எ.கா.

தலைமையேல், பதவியேல், பொறுப்பேல், பழியேல்

பின்வரும் கூட்டுகளிலும் ஏல் வரும்:

பங்கேல், வரவேல்

9.3.2.6.16. ஏறு

'இருப்பு மாற்றம்' என்ற பொருண்மைக் களத்தில்

'மேல் நோக்கு'என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் இது முதல் வினையாக வரும்.

ஏறு 'போ' என்ற பொருளில் பின்வரும் கூட்டாக்கங்களை உருவாக்குகின்றது:

குடியேறு, முன்னேறு, வெளியேறு

இது 'ஆகு/அடை' என்ற பொருளில் பின்வரும் கூட்டாக்கங்களை உருவாக்குகின்றது:

சூடேறு, அழுக்கேறு, கரியேறு, துருவேறு, பழுப்பேறு, சிவப்பேறு, மெருகேறு, நிறைவேறு, வலுவேறு, முறுக்கேறு

பின்வரும் கூட்டாக்கங்களையும் ஏறு உருவாக்கும்:

அரங்கேறு, கரையேறு, ஒப்பேறு, புரையேறு, மலையேறு, மேடையேறு

9.3.2.6.17. ஏற்று

ஏற்று முன் கண்ட ஏறு என்ற வினையாக்கியின் பிற வினைவடிவாகும். ஏறு சேர்ந்து வரும் பெரும்பாலான பெயர்களுடனும் இடைச்சொற்களுடனும் ஏற்று-வும் சேர்ந்து வரும்.

1. 'போகச்செய்' என்ற பொருளில் பின்வரும் கூட்டுகளை உருவாக்கும்:

குடியேற்று, முன்னேற்று, வெளியேற்று

2. 'ஆக்கு/அடையச்செய்' என்ற பொருளின் பின்வரும் கூட்டுகளை உருவாக்கும்:

எ.கா.

சூடேற்று, மெருகேற்று, நிறைவேற்று, வலுவேற்று, முறுக்கேற்று

3. பின்வரும் கூட்டாக்கங்களையும் ஏற்று உருவாக்கும்:

அரங்கேற்று, மேடையேற்று, கரையேற்று, விளக்கேற்று, நாணேற்று, அச்சேற்று, ஈடேற்று, ஒப்பேற்று, உருவேற்று

'ஆக்கு/அடையச்செய்' என்ற பொருளில் ஏற்று விளைவாக்கமுள்ள வினையாக்கியாய்த் தெரிகின்றது.

9.3.2.6.18. கட்டு

கட்டு 'இணை' என்ற பொருளிலும் 'செலுத்து' அல்லது 'அடை' என்ற பொருளிலும் வரும். கீழ்வருவன இதனால் ஆக்கப்பெறும் கூட்டுவினைகள் ஆகும்.

> களைகட்டு, களரிகட்டு, கச்சை கட்டு, மல்லுக்கட்டு, கங்கணம் கட்டு, வேஷம் கட்டு, கட்டுகட்டு, ஓரம் கட்டு, கட்டம் கட்டு, ஏர் கட்டு, எடை கட்டு, மூட்டை கட்டு, முளை கட்டு, நெரிகட்டு, கொண்டை கட்டு, தூர் கட்டு, வடிகட்டு, சீட்டுக்கட்டு, கப்பம் கட்டு, பந்தயம் கட்டு, சரிகட்டு, ஈடுகட்டு, முடிவு கட்டு, கோட்டை கட்டு

9.3.2.6.19. காட்டு

காட்டு 'ஐம்பொறிகளால் அறிதல்' என்ற பொருண்மை களத்தின் பாற்படும். காட்டு பின்வரும் கூட்டுகளை உருவாக்குகிறது:

> தலைகாட்டு, கை காட்டு, கண் காட்டு, ஆக்காட்டு, அழுகுகாட்டு, சாடைகாட்டு, வழிகாட்டு, கோடிகாட்டு, அருந்தத் காட்டு, தண்ணீர் காட்டு, மூச்சு காட்டு, இனங்காட்டு, கிச்சுக்கிச்சு காட்டு, சிரிப்பு காட்டு, விளையாட்டு காட்டு, பயம் காட்டு, பூச்சாண்டி காட்டு, பூச்சி காட்டு, ஆசை காட்டு, பிரியங்காட்டு, ஆர்வங்காட்டு, படம் காட்டு, பழிப்பு காட்டு, கருணை காட்டு, இரக்கங்காட்டு, எச்சரிக்கை காட்டு, போக்கு காட்டு

9.3.2.6.20. கூறு

கூறு 'கருத்துப்பரிமாற்றம்' என்ற பொருண்மைக் களத்தில் வரும். கூறு இலக்கிய/எழுத்து நடைக்குத் தன்னைச் சுருக்கிக்கொண்டு சொல் என்பதுடன் ஒருபொருள் பன்மொழியத் தொடர்பு கொண்டுள்ளது. பின்வருவன வற்றைக் கூறு என்பதன் கூட்டாக்கங்களாகத் தரலாம்.

ஆசி[illegible]ன்றி கூறு [illegible]எக்கம் கூறு, யோசனை

கூறு, உறுதி கூறு, குறை கூறு, குற்றம் கூறு, சமாதானம் கூறு, பதில் கூறு, பொய் கூறு, விடை கூறு.

கார்த்திகேயனால் மரபுத்தொடர் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட புறங்கூறு என்ற மரபுச்சொல் மட்டும்தான் கிரியாவின் அகராதியில் தரப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் கூறு-ஆல் ஆக்கப்பெறும் பிற கூட்டுகள் பொருண்மை அடிப்படையில் தெளிவாகவும் பற்றாசு உள்ளதாயும் இருப்பதுதான் என்று தோன்றுகிறது. இதன் காரணமாய் மேற்கண்ட சேர்க்கைகளைக் கூட்டுகளாகக் கருத வேண்டுமா என்ற ஐயம் எழுகிறது. கூறு என்பதன் கூட்டாக்கங்கள் சொல் நிலையாக்கம் பெறவில்லை என்று தோன்றகின்றது. எனவே கூறு என்பதை விளைவாக்கமுள்ளதாய்க் கருத இடமுண்டு.

9.3.2.6.21. கொடு

'உடைமை மாற்றம்' என்ற பொருண்மைக் களத்தில் 'விட்டுப்போதல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் கொடு முதல் வினையாக வருகிறது. கொடு பெரும்பாலும் கருத்துப் பரிமாற்றம் சம்பந்தப்பட்ட பெயர்களுடன் சேர்ந்து பின்வரும் கூட்டுகளைத் தரும்:

அறிக்கை கொடு, அனுமதி கொடு, உத்திரவாதம் கொடு, உத்தரவு கொடு, பேட்டி கொடு, உறுதி கொடு, ஒப்புதல் கொடு, ஒப்புக்கொடு, சம்மதம் கொடு, பதில் கொடு, பயிற்சி கொடு, பேச்சுக்கொடு, வாய்கொடு, குரல் கொடு, தீர்ப்பு கொடு, வரவேற்பு கொடு, வாக்கு கொடு, வாக்குறுதி கொடு, விளக்கம் கொடு, விடை கொடு, தந்தி கொடு

கொடு-வுடன் ஒருபொருள் பன்மொழியத் தொடர்புடைய அளி என்ற வினையாக்கி ஒப்புக்கொடு, வாய்கொடு, பேச்சுக்கொடு, குரல்கொடு, தந்தி கொடு தவிர பிற கூட்டுகளிலுள்ள கொடு-வை இடமாற்றம் செய்து அதே பொருளைத் தரவல்லது. கொடு 'காணல்' சம்பந்தப்பட்ட பெயர்களுடன் சேர்ந்து பின்வரும் கூட்டுகளைத் தரும்.

தரிசனம் கொடு, தோற்றம் கொடு.

இங்கும் அளி கொடு-வை இடமாற்றம் செய்யலாம்.

பின்வரும் கூட்டுகளும் கொடு-ஆல் ஆக்கப்பெற்றவை யாகும்:

> அடைக்கலம் கொடு, ஆதரவு கொடு, கை கொடு, தோள் கொடு, கைலாகு கொடு, பாதுகாப்பு கொடு, செல்லம் கொடு, இடங்கொடு, சிகிச்சை கொடு, ஷாக் கொடு, பெண் கொடு, சாவி கொடு, சிறப்பிடம் கொடு, ஈடு கொடு, பறிகொடு, காவு கொடு

இவற்றில், கைகொடு, தோள் கொடு, கைலாகு கொடு, செல்லம் கொடு, இடங்கொடு, ஷாக் கொடு, பெண் கொடு, சாவி கொடு, ஈடு கொடு, பறி கொடு, காவு கொடு என்பது தவிர பிறவற்றில் அளி, கொடு -வை இடம் பெயர்க்க இயலும். அளி-ஆல் இடம் பெயர்க்க இயலாதன பொருண்மை அடிப்படையில் சொல் நிலையாக்கம் பெற்றனவாய்த் தெரிகிறது. அளி-யால் இடம் பெயர்க்க இயலும் கொடு-வால் ஆக்கப்பட்ட கூட்டு வினைகள் தெளிவாகவும் பொருண்மைப்பற்றாசு உள்ளனவாகவும் தெரிகிறது. இவற்றை விளைவாக்கங்களாய் கொள்ள வேண்டுமா சொல் நிலையாக்கம் அடைந்தனவாய்க் கொள்ள வேண்டுமா அல்லது இரண்டாம் வேற்றுமை உருபான -ஐ தொக்கி வரும் வினைத்தொடராகக் கொள்ள வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது. இக்கூட்டுகளில் பெரும்பாலானவை ஒரு விதத் தனிப்பொருளைப் பெற்று அகராதியில் இடம்பெறும் தகுதியைப் பெற்றுள்ளன.

கிரியா அகராதியில் பின்வரும் கொடு-ஆக்கக் கூட்டுகள் இடம் பெற்றுள்ளன:

> இடம் கொடு, ஈடு கொடு, ஒப்புக்கொடு, காட்சி கொடு, காவு கொடு, குரல் கொடு, கை கொடு, கைலாகு கொடு, சாவி கொடு, தந்தி கொடு, தோள் கொடு, பறி கொடு, பிடி கொடு, பெண் கொடு, பேச்சு கொடு, முண்டு கொடு, வாய் கொடு, விடை கொடு.

இவை தவிர -ஐ தொகாத கூட்டுகளும் (எ.கா. உயிரைக்கொடு, கழுத்தைக் கொடு), 'செய்து' எனும்

வாய்பாட்டு வினையெச்சம் + கொடு என வரும் தனிப்பொருள் தந்து பொருண்மை நிலையாக்கம் பெற்ற தொடர்களும் (எ.கா. கட்டிக்கொடு, காட்டிக்கொடு, கூட்டிக்கொடு, கையில் பிடித்துக்கொடு, சொல்லிக்கொடு, தட்டிக்கொடு, தூக்கிக்கொடு, போட்டுக்கொடு, விட்டுக்கொடு) இடம் பெற்றுள்ளன. கூட்டாக்கங்களில் ஒருவிதப் பொருண்மைப் பற்றாசு, ஊகிக்கத்தக்க பொருண்மை மாற்றம், பொது விதியால் விளக்கத்தக்க தனிப்பொருண்மை என்பன இருக்குமானால் அவற்றை விளைவாக்கங்களாய்க் கொண்டு அகராதியில் பட்டியலிடாமல் விதிப்படுத்தலாம். மேற்சொன்ன பண்புகள் இல்லாதவற்றை அகராதிப்படுத்துதல் நல்லது. வினை கூட்டுகளை விளைவாக்கங்களாகக் கொள்வதிலுள்ள சிக்கல் என்னவென்றால் எவ்வெவ்வடிகளுடன் அதாவது எந்த பொருண்மை வகுப்பில் படும் அடிகளுடன் ஒரு குறிப்பிட்ட வினையாக்கி சேர்ந்து கூட்டாக்கம் செய்யும் என்பதை நிர்ணயிப்பதுதான். நாம் கொடு வருவதாகத் தந்துள்ள 'கருத்துப் பரிமாற்றம்' சம்பந்தப்பட்ட பெயர்கள்', 'காணல் சம்பந்தப்பட்ட பெயர்கள்' என்ற பொருண்மை பரப்பெல்லைகள் உறுதியானதல்ல. எல்லாக் கருத்துப் பரிமாற்றம் தொடர்பான பெயர்களுடனும் காணல் தொடர்பான பெயர்களுடனும் கொடு சேர்ந்து கூட்டு வினையாக்கம் செய்யும் என்று கூற இயலாது. கொடு சேர்ந்து வினையாக்கம் செய்யும் பெயர்கள் அடங்கிய குழுமம் திறந்த குழுமம் என்று கூற இயலாது; அது ஒரு அடைக்கப்பட்ட குழுமமாகும். இவ்வடைக்கப்பட்ட குழுமத்தை எந்தப் பொருண்மைப் பரப்பில் அடைக்கலாம் என்று கூற இயலுமானால் கொடு-வின் கூட்டாக்கங்களை நாம் பட்டியலிடத் தேவையில்லை; இல்லாவிடில் நாம் கொடு-ஆக்கக் கூட்டுகளைப் பட்டியல் தான் இடவேண்டியது வரும். பெயர்களின் பொருண்மைக் கூறு ஆய்வு (Componential analysis of meaning) இருக்குமானால் கொடு வினையாக்கம் செய்யும் பெயர்களின் பொருண்மைப் பரப்பைச் சரியாகக் கூற முடிந்திருக்கும். முன்னர் கூறிய படி பெரும்பான்மையான

புதிய கூட்டு வினையாக்கங்களும் ஒப்புமையாக்கங்கள் என்று கூறுவது பொருத்தமாயிருக்கும் என்று தோன்றுகிறது.

9.3.2.6.22. கொள்

'உடைமை மாற்றம்' என்ற பொருண்மைக் களத்தில் வரும் கொள் பெரும்பாலும் பெயர்களுடன் சேர்ந்தோ பிற வினைகளுடன் (செய்து என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சங்களுடன்) சேர்ந்தோ வரும். கொள்-ஆனது அடை என்ற வினையாக்க வினை போல உளவியல் சம்பந்தப்பட்ட நிலையைக் குறிக்கும் உணர்ச்சி, மனக்கிளர்ச்சி தொடர்பான பெயர்களுடன் சேர்ந்து 'சம்பந்தப்பட்ட உணர்ச்சியை அல்லது மனக்கிளர்ச்சியைப் பெறு' என்ற பொருளில் வரும். (அடை ஆக்கம் மனக்கிளர்ச்சி/உணர்ச்சி என்பன வெளிக்காரணியால் ஏற்படுவதைக் குறிக்கும் போது கொள் தனக்குத்தானான காரணியைக் குறிக்கும்.)

எ.கா.

அச்சம் கொள், அமைதி கொள், ஆசை கொள், ஆர்வம் கொள், ஆவல் கொள், ஆவேசம் கொள், எழுச்சி கொள், கவலை கொள், காதல் கொள், கோபம் கொள், சந்தோஷம் கொள், சீற்றம் கொள், துணிவு கொள், துயரம் கொள், பரவசம் கொள், மகிழ்ச்சி கொள், வெறுப்பு கொள்

பின்வரும் கூட்டுகள் கிரியா அகராதியில் இடம் பெற்றுள்ளன:

ஆட்கொள், இருப்பு கொள், உட்கொள், உருக்கொள், எதிர்கொள், ஒப்புக்கொள், கருக்கொள், காவு கொள், குடிகொள், கைக்கொள், கொள்ளைகொள், தொடர்பு கொள், நிலைகொள், பங்குகொள், பள்ளிகொள், மனங்கொள், மேற்கொள், மையம்கொள்

பின்வரும் 'செய்து' என்னும் வினையெச்சம் + கொள் என்ற வினைத்தொடர்களும் கிரியா அகராதியில் தனிப்பொருள் பெற்று பொருண்மை நிலையாக்கம் பெற்றனவாய்த் தரப்பட்டுள்ளன:

அடித்துக்கொள், அழைத்துக்கொள், ஆண்டுகொள், எடுத்துக்கொள், தெரிந்துகொள், ஒத்துக்கொள், கட்டிக்கொள், கண்டுகொள், கடிந்துகொள், கலந்துகொள், காட்டிக்கொள், கேட்டுக்கொள், கொட்டிக்கொள், சொல்லிக்கொள், தற்காத்துக்கொள், தெரிந்துகொள், தொட்டுக்கொள், நான்றுகொள், நேர்ந்துகொள், நொந்துகொள், பகிர்ந்துகொள், பல்லைக்கடித்துக்கொள், பார்த்துக்கொள், பிய்த்துக் கொள், புரிந்துகொள், முட்டிக்கொள், முடியைப் பிய்த்துக்கொள், முறைத்துக்கொள், விழித்துக்கொள், வைத்துக்கொள்

பெயர் + கொள்என்ற செயற்பாடு வினைவாக்க முள்ளதா என்ற கேள்விக்கு விடை காண வேண்டுமானால் புதிய ஆக்கங்களை அது எந்த அளவுக்கு ஆக்கியுள்ளது என்பதற்கான விடை தெரிய வேண்டும். இத்தகைய தரவு இல்லாத காரணத்தால் இதற்கு முடிவான ஒரு விடை தற்போது இல்லை. 'செய்து' எனும் வினையெச்ச வாய்பாடு + கொள் என்ற செயற்பாடு பல பொருண்மை நிலையாக்கக் கூட்டுகளை ஆக்கியுள்ளமையை இங்கு கவனிக்க வேண்டும். இவ்வகையான வினையெச்சம் + கொள்என்ற தொடரமைப்பு புதிய பொருள் அடையும்போது அவை சொல் நிலையாக்கம் பெற்று அகராதிப்படுத்தப்படும். வினையெச்சம் + கொள் என்ற அமைப்பு இத்தகைய ஆக்கங்களுக்கு மூல காரணமாய் அமைவதால் இந்த அமைப்பை ஏன் கூட்டுவினையின் விளைவாக்க அமைப்பாக அல்லது விதியாகக் கொள்ளலாகாது என்ற வினா எழுகிறது.

9.3.2.6.23. செய்

கூட்டு வினையாக்க வினைகளில் மிகவும் விளைவாக்கமுள்ள வினை செய் என்பது தான். பெரும்பாலும் புதிய ஒரு கருத்தை வினையாக்கம் செய்ய வேண்டுமானால் நமக்கு கை கொடுப்பது செய் தான். பிற மொழிகளிலிருந்து கடன் வாங்கிய கருத்துக்களிலிருந்து அவற்றோடு தொடர்பான வினைகளைப் பெற செய் தான் கை கொடுக்கும்.

(எ.கா. பிரயாணம் செய், சவாரி செய், நிச்சயம் செய், சிகிச்சை செய், கட் செய், அரேஞ் செய்).

'செயல்' என்னும் பொருண்மைக் களத்தில் வரத்தக்கதான பெரும்பாலான எல்லாப் பெயர்களுடனும் செய் சேர்ந்து வினையாக்கம் செய்யும்.

எ.கா.

ஆராய்ச்சி செய், இடஞ்சல் செய், ஊழியம் செய், உற்பத்தி செய், ஏற்றுமதி செய், சமையல் செய், தடை செய், பணிசெய், மணம் செய், தொண்டு செய், புரட்சி செய், புன்னகை செய், மாறுதல் செய், முடிவு செய், முயற்சி செய், விடுதலை செய், விற்பனை செய்,வேலை செய்.

படுத்து என்ற வினையாக்கி சேரும் பெயர்களுடனும் செய் சேர்ந்து கூட்டு வினையாக்கம் செய்யும்.

எ.கா.

ஒழுங்கு செய், தெளிவு செய், பாழ் செய், முழுமை செய், நிறைவு செய்

9.3.2.6.24. சொல்

'கருத்துப்பரிமாற்றம்' என்ற பொருண்மைக் களத்தில் 'தெரிவித்தல்' என்ற உட்பொருண்மை களத்தின் கீழ் சொல் என்ற முதல் வினை வரும். 'சொல்லுதல்' சம்பந்தப்பட்ட பெயர்களுடன் சேர்ந்து பின்வரும் கூட்டுகளை உருவாக்கும்.

அறிவுரை சொல், உறுதி சொல், குறை சொல், பதில் சொல், பொய் சொல், விடை சொல்.

சொல் இவ்வாக்கங்களில் தெளிவாகவும் பொருண்மைப் பற்றாசு உள்ளதாகவும் இருக்கிறது. இருப்பினும் சொல் விளைவாக்கமுள்ளதாய்ப் புதிய கூட்டு வினைகளை ஆக்கவல்லனவா என்பதற்கு தெளிவான பதில் தற்போது இல்லை. மேற்கண்ட கூட்டுகளையும் ஏன் செயப்படு பொருள்+ வினை என்ற தொடராக எடுக்கலாகாது என்பதற்கும் அறுதியான பதில் கூற இயலவில்லை. இலக்கிய/எழுத்து

நடையிற்படும் கூறு என்ற வினை மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் சொல்-ஐ இடம் பெயர்க்கலாம்.

9.3.2.6.25. தட்டு

'தாக்கம்' என்ற பொருண்மைக் களத்தில் வரும் தட்டு பின்வரும் கூட்டுகளைத் தருகிறது:

கை தட்டு, ஜால்ரா தட்டு, பறை தட்டு, மார் தட்டு, தொடை தட்டு, மட்டம் தட்டு, சாணி தட்டு, கிழடு தட்டு, கரை தட்டு, உருத்தட்டு, அசடு தட்டு, குடல் தட்டு.

ஜால்ராதட்டு, பறைதட்டு, மார்தட்டு, தொடைதட்டு, மட்டம் தட்டு என்பன மரபுத் தொடர்களாகும். தட்டு வினையாக்கியாகப் புதிய ஆக்கங்களில் பயன்படுத்தப் படுகின்றது.

9.3.2.6.26. படு

'மன உணர்ச்சி மற்றும் மனக்கிளர்ச்சி' தொடர்பான வினைகளடங்கிய பொருண்மைக் களத்தில் படு-வால் ஆக்கப்பெற்றபல கூட்டு வினைகள் இடம்பெறும்.

1. மன உணர்ச்சிகளின்/மனக் கிளர்ச்சிகளின் வெளிப்பாட்டைக் கூறுவதாய் அமைந்து இது கொள், அடை இவற்றிலிருந்து வேறுபடுகின்றது.

எ.கா.

அச்சப்படு, அசூகைப்படு, அபிப்பிராயப்படு, அவமானப்படு, ஆச்சரியப்படு, ஆசைப்படு, இரக்கப்படு, கவலைப்படு, சந்தோஷப்படு, திருப்திப்படு, பெருமிதப்படு, பெருமைப்படு, வருத்தப்படு, விசனப்படு, வேதனைப்படு.

2. பின்வரும் கூட்டுகளிலும் படு வரும்:

களங்கப்படு, காயப்படு, பழுதுபடு, பாழ்படு, மிச்சப்படு, வலுப்படு, விகாரப்படு, உபயோகப்படு, சம்பந்தப்படு, வெளிப்படு, புறப்படு, அகப்படு, கீழ்ப்படு.

மேற்கண்ட எதுவும் புதிய ஆக்கங்கள் என்று சொல்லுதற்கில்லை. எந்த அளவுக்கு படு புதிய கூட்டு வினைகளை ஆக்கவல்லன என்று புதிய தரவுகளைப் பார்த்துத்தான் உறுதியாகக் கூற இயலும்.

9.3.2.6.27. படுத்து

படு என்பதன் பிறவினை (செயப்படுபொருள் குன்றா வினை) படுத்து என்பதாகும். பெரும்பாலும் இது பெயர்களுடன் சேர்ந்தே வரும். இது 'அடையச்செய்' என்ற பொருளில் வரும். இது பெரும்பாலும் படு சேர்ந்து வரும் மன உணர்ச்சி நிலை சம்பந்தப்பட்ட பெயர்களுடன் சேர்ந்து 'அடையச் செய்' என்ற பொருள் தரும்.

எ.கா.

அவமானப்படுத்து, இழிவுபடுத்து, உற்சாகப்படுத்து, கோபப்படுத்து, சமாதானப்படுத்து, சாந்தப்படுத்து, திருப்பதிப்படுத்து, நினைவுப்படுத்து, பயப்படுத்து, பெருமைப்படுத்து, தெளிவுபடுத்து.

பின்வரும் கூட்டுகளையும் உருவாக்கும்:

அழகுபடுத்து, அலட்சியப்படுத்து, கட்டாயப்படுத்து, கோரப்படுத்து, சினைப்படுத்து, திடப்படுத்து, தூய்மைப்படுத்து, தொடர்புபடுத்து, பலவீனப்படுத்து, வலுப்படுத்து, வலிமைப்படுத்து, வளப்படுத்து

அழகு, அலட்சியம், கட்டாயம், கோரம், திடம், தொடர்பு என்ற பெயர்களுடன் படு சேர்ந்து கூட்டு வினையாக்கம் செய்யாது.

9.3.2.6.28. பண்ணு

பண்ணு என்ற வினை செய் என்பதன் பேச்சு வழக்கு ஒருபொருள் பன்மொழியாகும். இலக்கிய நடையில் சொல்நிலையாக்கம் பெற்றுவிட்ட. சில கூட்டுகளில் வரும் செய் என்பதை இது இடம் பெயர்க்காது. (எ.கா. *மணம் பண்ணு, *இடர்பண்ணு, *தொண்டு பண்ணு, *போர்பண்ணு).

9.3.2.6.29. பார்

'புலனுணர்வுகள்' என்ற பொருண்மைக் களத்தின் பாற்படும் 'கண்ணால் அறிதல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் பார் வரும். கவனம் சம்பந்தப்பட்ட பின்வரும் கூட்டுகளை ஆக்கம் செய்யும்:

உளவு பார், எதிர்பார், குறிபார், வேடிக்கைபார்

அறிந்து கொள்ள வேண்டிய காரியத்தைக் குறிப்பிடும் பெயர்களுடன் இணைந்து பின்வரும் ஆக்கங்களைச் செய்யும்:

ஆழம் பார், பதம் பார், ஜாதகம் பார், நேரம் பார், முகூர்த்தம் பார், பொருத்தம் பார், ருசி பார்.

செய் என்ற பொருளில் பின்வரும் கூட்டுகளை உருவாக்கும்.

பழுது பார், சரி பார், வைத்தியம் பார், வேலை பார், உத்தியோகம் பார்

பின்வரும் கூட்டுகளிலும் பார் வரும்.

பெண் பார், மாப்பிள்ளை பார், இரக்கம் பார், பாவம் பார்.

9.3.2.6.30. பிடி

உடைமை மாற்றம் என்ற பொருண்மைப்பரப்பின் கீழ் வரும் 'வந்துசேரல்' என்ற உட்பொருண்மைப்பரப்பின் கீழ் பிடி வரும்.

பிடி ஒரு வினையாக்கியாக (நோய் மற்றும் பிற உபாதைகள்) வந்து சேரல், (வேண்டாத சில நிலை மாற்றம்) எய்தல், (ஒரு சில செயல்களில்) ஈடுபடல் என்ற பொருள்களில் வரும்.

1. நோய் மற்றும் பிற உபாதைகள் வருதல்

எ.கா.

தடுமல் பிடி, ஜலதோஷம் பிடி, சளி பிடி, நோய் பிடி, சயம் பிடி, பிரமை பிடி, பைத்தியம் பிடி, பித்து பிடி,

கிறுக்கு பிடி, வெறி பிடி, மதம் பிடி, பேய் பிடி, பேன் பிடி, கஷ்டகாலம் பிடி, சுளுக்கு பிடி

2. (வேண்டாத) சில நிலைமாற்றம் எய்தல்

எ.கா.

அழுக்குப் பிடி, கரி பிடி, கறை பிடி, பாசி பிடி, கரையான் பிடி, பச்சை பிடி

3. வேண்டாத சில மனநிலை எய்தல்

எ.கா.

அடம் பிடி, பிடிவாதம் பிடி, முரண்டு பிடி, கவலை பிடி

4. ஒரு சில செயல்களில் ஈடுபடல்

எ.கா.

சண்டை பிடி, பழக்கம் பிடி, காக்காய் பிடி, கைபிடி, கடைபிடி, மோப்பம்பிடி, படம்பிடி, போட்டோபிடி, புகைப்படம்பிடி, புகைபிடி, சிகரெட்பிடி, ஏலம்பிடி, ஆவிபிடி, ஏர்பிடி, சரக்குபிடி, சிறைபிடி, சீட்டுப்பிடி, சாணைபிடி, தாக்குப்பிடி, ஓட்டம்பிடி.

கிரியா தமிழகராதியில் ஆவிபிடி, ஏர்பிடி, ஓட்டம் பிடி, கடைபிடி, காக்காய்பிடி, கைபிடி, சரக்குபிடி, சாணைபிடி, சிறைபிடி, சீட்டுப்பிடி, தாக்குப்பிடி, பச்சைபிடி, படம்பிடி, பிரமைபிடி, மிச்சம்பிடி, மோப்பம்பிடி என்ற கூட்டு வினைகள் சொல்நிலையாக்கமுற்றவைகளாய்க் கருதப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளன.

பிடி ஒரு விளைவாக்கமுள்ள வினையாக்கியாக 'நோய் மற்றும் பிற உபாதைகள் வருதல்' என்ற பொருளிலும் '(வேண்டாத) சில நிலைமாற்றம் எய்தல்' என்ற பொருளிலும் வரலாம். பிடி ஒப்புமையாக்கச் செயற்பாங்கில் மேற்கண்ட 3 ஆவது வகை 4 ஆவது வகைப்பொருள்களில் விளைவாக்க வினையாக்கியாக வரலாம்.

9.3.2.6.31. புரி

இந்த வினையாக்கி 'செய்' என்ற பொருளில் செய்,

பண்ணு, ஆற்று என்ற வினைகளின் ஒருபொருள் பன்மொழியாய் வரும். புரி என்பது செய் என்ற வினையாக்கியின் செயற்பாட்டில் வரலாம். புரி செந்தமிழ் அல்லது இலக்கிய நடையைச் சார்ந்தது. எனவே இதை விளைவாக்கமுள்ள வினையாக்கியாகக் கருத இயலாது. கார்த்திகேயன் பின்வரும் கூட்டு வினைகளை இதன் ஆக்கமாகத் தருகிறார்.

அருள்புரி, ஆட்சிபுரி, இடர்புரி, உதவிபுரி, ஊழியம்புரி, காதல்புரி, குற்றம்புரி, கேளிக்கைபுரி, சாதனைபுரி, சேவைபுரி, தர்க்கம்புரி, தியாகம்புரி, துணைபுரி, தொண்டுபுரி, புன்னகைபுரி, போர்புரி, மணம்புரி, வாதம்புரி

கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பணிபுரி என்ற கூட்டுவினையை மட்டும் தான் அகராதியில் சேர்த்துள்ளது.

9.3.2.6.32. பெறு

உடைமை மாற்றம் என்ற பொருண்மைக் களத்தில் 'வந்து சேரல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் பெறு வரும். இது அடை என்ற வினையுடன் ஒருபொருள் பன்மொழியம் உறவில் தொடர்பு கொண்டுள்ளது. வினையாக்கிய இது அடை-ஐ ஒரு சில சந்தர்ப்பங்களில் இடம் பெயர்க்கலாம். பெறு எழுத்து வழக்கில் 'கிடைத்தல்' என்ற பொருளில் விளைவாக்கமுள்ள வினையாக்கியாகப் பயன்படுத்தப்படுகிறது. சாதாரண நடையில் 'பிரசவி, குட்டி போடு' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. கார்த்திகேயன் (1983: 191-193) பின்வரும் கூட்டுகளை பெறு -வினால் ஆக்கப்பெற்றதாய்ப் பட்டியலிடுகிறார்.

கீர்த்தி பெறு, உருப்பெறு, ஓய்வு பெறு, தேர்ச்சி பெறு, நடைபெறு, பங்கு பெறு, பயிற்சி பெறு, பிரசித்தி பெறு, புகழ் பெறு, முடிவு பெறு, வலுப்பெறு, வெற்றி பெறு

கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பின்வரும் கூட்டுகளை பெறுவின் ஆக்கக்கூட்டுகளாகப் பட்டியலிடுகிறது:

இடம்பெறு, ஓய்வு பெறு, நடைபெறு, நிலைபெறு, பங்குபெறு, முற்றுப்பெறு, வலுப்பெறு, வாபஸ் பெறு, விடைபெறு

9.3.2.6.33. போ

சலனம் அல்லது இடமாற்றம் என்ற பொருண்மைக் களத்தின் கீழ் வரும் போ என்பது வினையாக்கியாக 'சம்பவி' என்ற பொருளில் வருகிறது. கார்த்திகேயன் (1983: 193-195) பின்வரும் ஆறு கூட்டுகளைப் பட்டியலிடுகிறார்:

களவு போ, கொள்ளை போ, சோரம் போ, திருடு போ/ திருட்டுப்போ, துணை போ, மோசம் போ.

கிரியாவின் தற்காலத்தமிழ் அகராதியில் போ என்பதன் ஆறு வகையான கூட்டுகள் தரப்பட்டுள்ளன. ஒரோர் வகையின் கீழும் வருகிற கூட்டு வினைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. பெயர் + போ

உயிர்போ, களவுபோ, குடிபோ, கொள்ளைபோ, சோரம்போ, திருடுபோ, திருட்டுப்போ, துணைபோ, பறிபோ, பொழுதுபோ, மோசம்போ, விலைபோ.

2. பெயர் + உக்கு + போ

இரண்டுக்குப்போ, ஒன்றுக்குப்போ, வெளிக்குப்போ

3. செய்து எனும் வாய்ப்பாட்டு வினையெச்சம் + போ

ஆடிப்போ, ஒத்துப்போ, ஓடிப்போ, கெட்டுப்போ, கொண்டுபோ, தட்டிப்போ, தள்ளிப்போ, தவறிப்போ, தாழ்ந்துபோ, நொடித்துப்போ, விட்டுப்போ

4. பெயர் + செய்து எனும் வாய்பாட்டு வினையெச்சம் + போ

அடிபட்டுப்போ, கைவிட்டுபோ, நாசமாய்ப்போ, நாக்குசெத்துப்போ, முகம் செத்துப்போ.

5. ஒலிகுறிப்பு + என்று + போ

சீ என்று போ

6. செய்து எனும் வாய்பாட்டு வினையெச்சம் + கொண்டு + போ

அரவணைத்துக்கொண்டு போ, அள்ளிக்கொண்டு போ, கொத்திக்கொண்டு போ

மேற்சொன்ன வகைகளில் முதல் வகையான பெயர் + போ அவ்வளவு விளைவாக்கம் உள்ள செயற்பாங்காகத் தெரியவில்லை. மூன்றாவது வகைச் செயற்பாங்கு விளைவாக்கமுள்ளது என்று கூற இயலாவிட்டாலும், செய்து எனும் வாய்பாட்டு வினையெச்சம் + போ என்று வரும் தொடர்கள் பொருண்மை நிலையாக்கம் பெற்று கூட்டாக வருவதற்கான சாத்தியக்கூறுகள் மொழியில் இருப்பதாகத் தோன்றுகிறது. இவ்வாறு விளைவாக்கமுள்ள தொடரமைப்பு பொருண்மை நிலையாக்கத்தினால் கூட்டுகளாக மாற இயலும் சாத்தியக்கூறை விளைவாக்கம் எனக் கூற இயலுமா என்று தெரியவில்லை.

9.3.2.6.34. போடு

'உடைமை மாற்றம்' என்ற பெரும் பொருண்மைக் களத்தில் 'விட்டுச்செல்லுதல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் போடு 'விழ விடுதல்' என்ற தலைமைப் பொருளில் வருகிறது. இடு என்ற வினையாக்கியுடன் ஒரு பொருள் பன்மொழியத் தொடர்புடையதாய் இடு வருமிடங்களில் எல்லாம் போடு என்பதும் வரும். இடு இலக்கிய வழக்கில் மட்டும் பயன்படுத்தப்பட போடு பேச்சு வழக்கிலும் பயன்படுத்தப்படுகிறது.

போடு என்பதன் கூட்டுவினைகளைப் பின்வருமாறு பொருள் அடிப்படையில் வகைப்படுத்தலாம். போடு என்பது செய், பண்ணு, படு என்பன போன்ற விளைவாக்கமுள்ள, தனக்கென்று தனி வினைப் பொருளில்லாத, சேர்ந்து வரும் பெயரைப் பொறுத்து பொருள் தருகிற வினையாக்கியாகும்.

1. விழவிடுதல்

பாம் போடு, குண்ணு போடு, விதை போடு

2. வெளிக்கொணர்ந்து விழ விடுதல்

குட்டி போடு, கன்று போடு, சாணம் போடு, விட்டை போடு, பிழுக்கை போடு, எச்சம் போடு

3. கொடுத்தல்

பிச்சை போடு, காணிக்கை போடு, பரிசம் போடு, சோறு போடு, ஓட்டு போடு, மனுப்போடு, மார்க் போடு

4. தெரிவித்தல்

கட்டளை போடு, உத்தரவு போடு, நிபந்தனை போடு, சபதம் போடு

5. மரியாதை தெரிவித்தல்

கும்பிடு போடு, வணக்கம் போடு, சலாம் போடு

6. பூசுதல்/தேய்த்தல்

பசை போடு, சோப்பு போடு, மருந்து போடு, பாலிஷ் போடு, எண்ணை போடு, மை போடு, பொட்டுப்போடு

7. அணிதல்

சட்டை போடு, கண்ணாடி போடு, வளையல் போடு, மாலை போடு

8. உண்டாக்குதல்/உருவாக்குதல்

(1) பப்படம் போடு, சப்பாத்தி போடு, காப்பி போடு, வெண்ணீர் போடு, ஊறுகாய் போடு

(2) வட்டம் போடு, வரை போடு, பூப்போடு, குறி போடு

(3) துளை போடு, துவாரம் போடு

(4) வீடு போடு, கட்டிடம் போடு, ரோடு போடு, தளம் போடு, கூரை போடு, வேலி போடு

(5) ஜடை போடு, கொண்டை போடு

9 ஆக்குதல்

கூறு போடு, துண்டு போடு, பங்கு போடு

10. முடுக்குதல்/தொடங்குதல்

விளக்கு போடு, சுவிட்ச் போடு, டிவி போடு, சினிமா போடு

11. சப்தம் உருவாக்குதல்

கூச்சல் போடு, சப்தம் போடு, ஆமா போடு, தண்டரா போடு, கோஷம் போடு

12. பயிரிடுதல்

தோட்டம் போடு, பதியம் போடு

13. சேர்த்தல்/இணைத்தல்

முடிச்சுப்போடு, கட்டுப்போடு, தையல் போடு

14. நடத்துதல்

கூட்டம் போடு, நாடகம் போடு

15. வேலை தவிர்த்தல்

மட்டம் போடு, கள்ளம் போடு

16. பெரிதாதல்

சதை போடு, ஊத்தம் போடு, தொந்தி போடு

17. புதிய உருவம் தரித்தல்

வேஷம் போடு, மாறு வேஷம் போடு, வெளி வேஷம் போடு

18. செயலில் ஈடுபடல்

முழுக்குப்போடு, அசைபோடு, ஆட்டம் போடு, குதிபோடு, கும்மாளம் போடு, எதிர்நீச்சல் போடு, தூக்கம் போடு, கொள்ளை போடு, சண்டை போடு, அடி போடு, குட்டிகரணம் போடு, நடைபோடு, உருப்போடு, கஜகர்ணம் போடு

19. பிற

தும்மல் போடு, முட்டிக்கால் போடு, முட்டி போடு, கணக்கு போடு, தப்புக்கணக்கு போடு, எடை போடு, குடைவண்டி போடு, சூடு போடு, தூபம் போடு, ஊதல் போடு, புகை போடு, கொட்டை போடு, குல்லாய் போடு, இலை போடு, இடம் போடு, அம்மை போடு, இஸ்திரி போடு, பெட்டி போடு, கொள்ளி போடு, ஊசி போடு, கடை போடு, கண் போடு, கிட்டி போடு, தாளம் போடு, நாமம் போடு, பட்டினி போடு, புடம் போடு, பூஜை போடு, முழம் போடு, ஜால்ரா போடு

போடு வினைவாக்கமுள்ள வினையாக்கி என்று குறிப்பிட்டோம். ஒரு சில வகையான சேர்க்கைகளில் போடு

புதிய வினைப்பொருள் அடைந்தது போன்று மிகுந்த விளைவாக்கமுள்ளதாய்ப் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக் காட்டாகச் சட்டை போடு போன்ற வகையான சேர்க்கைகளில் போடு என்பதற்கு 'அணி/தரி' என்ற புதிய பொருள் தர வேண்டுமா என்ற ஐயம் எழுகிறது.

பின்வரும் பெயர் +வேற்றுமையுருபு (பின்னுருபு)+ போடு என்ற அமைப்புள்ள கூட்டுகள் கிரியாவில் இடம் பெற்றுள்ளன:

தூக்கில் போடு, கிடப்பில் போடு, உடைப்பில் போடு, மண்ணைப்போடு, கைக்குள் போடு.

பின்வருவன செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் + போடு என்ற அமைப்பில் படும் கூட்டுகளாகும். இவை கிரியாவில் இடம் பெற்றுள்ளன. இவற்றில் சில மரபுத் தொடர்களாகும்.

எட்டிப்போடு, சக்கைப்போடு, தள்ளிப்போடு, சுற்றிப்போடு, ஒத்திப்போடு, தூக்கித்தூக்கிப்போடு, குண்டைத்தூக்கிப்போடு, மண்ணை அள்ளிப்போடு

9.3.2.6.35. மூட்டு

மூட்டு என்பது முதல் வினையாக 'உண்டாக்கு' என்ற பொருளில் வரும். இதை உண்டாக்கு, ஊட்டு என்ற வினைகளின் ஒருபொருள் பன்மொழியாய்க் கருதலாம். ஊட்டு என்பது இலக்கிய நடைக்குரியதாய் வர மூட்டு சாதாரண நடைக்குரியதாய் வருகிறது. இருப்பினும் ஊட்டு வரும் எல்லாச் சேர்க்கைகளிலும் மூட்டு வரும் என்று கூற இயலாது. மூட்டு என்பதை ஒரு வினையாக்கியாகக் கருத வேண்டுமா என்ற ஐயம் வருகிறது. கார்த்திகேயன் (1983) மூட்டு என்பதை வினையாக்கியாகக் கருதவில்லை. இருப்பினும் மூட்டு என்பது ஊட்டு என்பதை சில இடங்களில் இடம் பெயர்க்க இயலும் என்ற காரணத்தால் இதையும் வினையாக்கியாகக் கொள்ள வேண்டியதிருக்கிறது. பின்வருவன மூட்டு வரும் கூட்டு வினைகளாகும்.

எரிமூட்டு, தீமூட்டு, நெருப்புமூட்டு, எரிச்சல்மூட்டு, ஆசைமூட்டு, கோபம் மூட்டு, கிசுகிசு மூட்டு, கோள்மூட்டு

9.3.2.6.36. வா

வா என்பதை ஒரு வினையாக்கியாகக் கருத இயலுமா என்பதிலும் ஐயம் வருகிறது. கார்த்திகேயன் (1983) வா-வை தன் பட்டியலில் சேர்க்கவில்லை. பின்வரும் கூட்டுவினைகள் கிரியா அகராதியில் இடம்பெற்றுள்ளன.

1.பெயர் + வா

வெளி வா, முன் வா, குடி வா, வலம் வா, மனம் வா, கை வா

2.பெயர் + உக்கு + வா

வழிக்கு வா, வயதுக்கு வா

3.செய்ய வினையெச்சம் + வா

வளைய வா

4.செய்து வினையெச்சம் + வா

கூடி வா, கட்டி வா, ஒத்து வா, அழைத்து வா, கொண்டு வா

5.பெயர்+(உக்கு)+ செய்து வி.எ. + வா

முன்னுக்குக் கொண்டு வா, வழிக்குக் கொண்டு வா, வெளிக்கொண்டு வா

6. செய்து வி.எ.+ செய்து வி.எ. + வா

பற்றிக்கொண்டு வா, பரிந்துகொண்டு வா, போய்விட்டு வா, பொத்துக்கொண்டு வா

9.3.2.6.37. வாங்கு

இதுவும் முதல் வினையாக 'உடைமை மாற்றம்' என்ற பொருண்மைக் களத்தில் 'வந்து சேரல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ்வரும். இதை வினையாக்கியாகக் கொள்ள இயலுமா என்ற ஐயம் எழத்தான் செய்கிறது. கார்த்திகேயன் (1983) இதை ஒரு வினையாக்கியாய்

எடுத்துக்கொள்ளவில்லை. கிரியாவில் பட்டியலிடப் பட்டுள்ள கூட்டுகள் வாங்கு என்பதை ஒரு வினையாக்கியாகக் கருத இடமளிக்கின்றது. பின்வருவன வாங்கு என்பதன் ஆக்கங்களாகும்.

1.பெயர் + வாங்கு

அடி வாங்கு, ஏச்சு வாங்கு, பேச்சு வாங்கு, உள் வாங்கு, காற்று வாங்கு, பழி வாங்கு, பின் வாங்கு, மூச்சு வாங்கு, வக்காலத்து வாங்கு, வாபஸ் வாங்கு, வெளி வாங்கு, வேலை வாங்கு, பெயர் வாங்கு

2.பெயர் + ஐ + வாங்கு

உயிரை வாங்கு, தலையை வாங்கு, மானத்தை வாங்கு

3.செய்து வினையெச்சம் + வாங்கு

பிய்த்து வாங்கு, வெளுத்து வாங்கு

வாங்கு என்பதை ஒரு விளைவாக்க வினையாக்கியாகக் கொள்ளலாமா என்பதற்கு உறுதியான பதில் தர இயலவில்லை. புதிய தரவுகளைப் பார்த்துத்தான் ஒரு முடிவுக்கு வர இயலும்.

9.3.2.6.38. விடு

விடு முதல் வினையாக 'உடைமை மாற்றம்' என்ற பொருண்மைக் களத்தில் 'விட்டுப்போதல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் வரும். இதன் முதன்மைப் பொருள் 'போக அனுமதித்தல்' என்பதாகும். இது பெயர்ச்சொற்களுடன் சேர்ந்து புதிய பல வினைகளை ஆக்கவல்லது. சில பொருட்பரப்பின் கீழ் வரும் பெயர்களுடன் விளைவாக்கமாகச் சேர்ந்து வினையாக்கம் செய்வதால், அத்தகைய சேர்க்கைகளில் விடு என்பதற்குத் தனி பொருள் இருப்பது போல் தோன்றும். எடுத்துக்காட்டாக, சைக்கிள் விடு, ஸ்கூட்டர் விடு போன்ற சேர்க்கைகளில் விடு என்பதற்கு 'ஓட்டு' என்று பொருள் வருவது போலத் தோன்றும். விடு என்பது பொருண்மை அடிப்படையில் நிலையாக்கம் பெற்று 'ஓட்டு' என்ற புதிய பொருள் பெற்று விட்டதாகவும் கருத இடமுண்டு. எடுத்துக்காட்டாக

சைக்கிளை விடு, ஸ்கூட்டரை விடு என்பது முறையே 'சைக்கிளை விலக்கு' , 'ஸ்கூட்டரை விலக்கு' என்றும் 'சைக்கிளை ஓட்டு', 'ஸ்கூட்டரை ஓட்டு' என்றும் பொருள் தரலாம். பின்வருவன விடு என்பதன் கூட்டுச் சேர்க்கைகளாகும்.

அ. பெயர் + விடு என்ற சேர்க்கை பின்வரும் பொருண்மை வகுப்புகள் அடிப்படையிலான கூட்டுகளை விளைவிக்கும்:

1. போகச் செய்தல் (எய், ஏவு)

அம்பு விடு, இராக்கெட் விடு, வாணம் விடு

2. காற்று, சத்தம், கண்ணீர் இவற்றை வெளிவரச் செய்யும் உடற்கூறு சம்பந்தப்பட்ட செயல்கள்

கொட்டாவி விடு, குரட்டை விடு, ஏப்பம் விடு, மூச்சு விடு, குசு விடு, கண்ணீர் விடு

3. பேச்சுப் பரிவர்த்தனை அடிப்படையான செயல்கள்

அழைப்பு விடு, அறிக்கை விடு, சவால் விடு, நோட்டீஸ் விடு, தூது விடு, ஆள்விடு, டூப்பு விடு, டூ விடு, கரடி விடு, கதை விடு, காய் விடு, பழம் விடு

4. வாகனங்கள் ஓட்டுதல் தொடர்பான செயல்கள்

சைக்கிள் விடு, ஸ்கூட்டர் விடு, குதிரை விடு, கார் விடு

5. விளையாட்டு சம்பந்தப்பட்டவை

பம்பரம் விடு, காற்றாடி விடு, பட்டம் விடு

6. தாவர வளர்ச்சி சம்பந்தப்பட்ட நிகழ்வுகள்

தளிர் விடு, குருத்து விடு, இலை விடு, கிளை விடு, நாற்று விடு, முளை விடு

7. முடிவுக்கு வருதல்

உயிர் விடு

8. பிற

கை விடு, கோட்டை விடு, நோட்டம் விடு, வழிவிடு

ஆ. பெயர் + உக்கு + விடு என்ற சேர்க்கை பின்வரும் கூட்டு வினைகளைஆக்கும்:

1. கீழ் வருவனவற்றில் விடு என்பது கொடு என்பதன் ஒருபொருள் பன்மொழியாய் வரும்:

குத்தகைக்கு விடு, பாட்டத்திற்கு விடு, வாடகைக்கு விடு

2. போட்டிக்கு விடு, பந்தயத்திற்கு விடு

இ. பெயர் + இல் + விடு என்னும் சேர்க்கை பின்வரும் கூட்டு வினைகளை ஆக்கும்:

நட்டாற்றில் விடு, திராட்டில் விடு

ஈ. செய்ய என்றும் வாய்பாட்டு வினையெச்சம்+ விடு எனும் சேர்க்கை பின்வரும் கூட்டை விளைவிக்கும்.

தவற விடு

உ. செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் + விடு என்னும் சேர்க்கை பின்வரும் கூட்டுகளை விளைவிக்கும்:

எடுத்துவிடு, கொண்டுவிடு, தள்ளிவிடு, பார்த்துவிடு, முடுக்கிவிடு, தூண்டிவிடு, கைதூக்கிவிடு, தண்ணீர் தெளித்துவிடு

மேலே பட்டியலிடப்பட்டுள்ள விடு என்ற வினையின் கூட்டுச்சேர்க்கைகள் எல்லாவற்றையும் கூட்டுவினைகள் என்று கூற இயலாது. இருப்பினும் இப்போக்கு விடு புதிய கூட்டுகளை ஆக்கும் ஒரு விளைவாக்கமுள்ள வினையாக்கியாகும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

9.3.2.6.39. விழு

விழு என்பது 'இடமாற்றம்/சலனம்' என்ற பொருண்மைக் களத்தில் 'கீழ்நோக்கு இடமாற்றம்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் முதல் வினையாக வரும். இது 'மேலிருந்து கீழே போதல்' என்ற முதன்மைப்பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. இதையும் ஒரு வினையாக்கியாகக் கொள்ள இயலுமா என்பதில் ஐயம் உள்ளது. கார்த்திகேயன் (1983) இதை ஒரு வினையாக்கியாகக் கொள்ளவில்லை. கிரியா

பெயர் + விழு என்ற அமைப்பாக்கமாக ஐந்து கூட்டுகளையும், இறந்த கால எச்ச வினை+ விழு என்ற அமைப்பாக்கமாக இரு கூட்டுகளையும் பட்டியலிட்டுள்ளது. ராஜேந்திரனில் (Rajendran 1979:148-154) விழு என்பது பல சேர்க்கைகளில் வந்து பல கூட்டுப் பொருண்மைகளைத் தருவது பட்டியலிடப்பட்டுள்ளது. இந்த பட்டியலைப் பார்க்கையில் இச்சேர்க்கைகளைக் கூட்டுகளாகக் கொள்ளவேண்டுமா அல்லது விழு என்பதை ஒரு நடுநிலை வினையாகக் கொண்டு பெயர்களின் சேர்க்கை மூலம் புதிய பொருள் வருவதாய் எடுத்துக் கொள்ள வேண்டுமா என்ற ஐயம் எழுகிறது. பின்வரும் சேர்க்கைகளும் பொருள்வகைகளும் இதைத் தெளிவுபடுத்தும்.

அ. பெயர் + விழு

1.உருவாகுதல்

துளை விழு, ஓட்டை விழு, கீறல் விழு, பள்ளம் விழு, குழி விழு, தழும்பு விழு, தடிப்பு விழு, அச்சு விழு, சொத்தை விழு, சிவப்பு விழு, கறுப்பு விழு, வெள்ளை விழு, பூ விழு, கூனல் விழு, கூன் விழு, மடிப்பு விழு, முடிச்சு விழு, சிக்கல் விழு, சடை விழு, குலை விழு, மொட்டு விழு, காய் விழு, வழுக்கை விழு, சொட்டை விழு, நரை விழு, ஆசை விழு, ஐயம் விழு, பொறாமை விழு, அபிப்பிராயம் விழு,

2.கிடைத்தல்

ஓட்டு விழு, மார்க் விழு, லாட்டரி விழு, அறை விழு, வெட்டு விழு

3.சம்பவித்தல்

சண்டை விழு, கொலை விழு, போட்டி விழு

ஆ. பெயர் + இல் + விழு

நோயில் விழு, காய்ச்சலில் விழு, கிடப்பில் விழு, படுக்கையில் விழு, காதலில் விழு

இ. இறந்த கால வினையெச்சம் + விழு

எரிந்து விழு, தூங்கி விழு

மேற்கண்ட விழு-வின் சொற்சேர்க்கைகள் எல்லாம் கூட்டாக்கங்கள் அல்ல. இருப்பினும் இப்போக்கு விழு ஒரு விளைவாக்க வினையாக்கி என்பதைத் தெளிவு படுத்துகின்றது.

9.3.2.6.40. வை

'உடைமை மாற்றம்' என்ற பொருண்மைப்பரப்பின் கீழ் 'விட்டுப்போதல்' என்ற உட்பொருண்மைக் களத்தின் கீழ் வை முதல் வினையாக வரும். வை ஒரு வினையாக்கியாகச் சேர்ந்து வரும் பெயர்களின் பொருண்மைப்பரப்பைக் கணிப்பது சிரமம். பின்வருவன இதனால் ஆக்கப்பெற்ற கூட்டுகளாகும்:

அ. பெயர் + வை

1. உரிமை மாற்றம் குறித்தவை

அடகு வை, பணயம் வை, அடமானம் வை, ஈடு வை, ஒற்றி வை

2. கண், கை கால் சேர்க்கையில் விளையும் கூட்டுகள்

கண் வை, ஒரு கண் வை, கை வை, கால் வை, அலக்கால் வை

3. கொளுத்துதல் தொடர்பானவை

வெடி வை, வேட்டு வை, கொள்ளி வை, வத்தி வை

4. பிற

உலை வை, கன்னம் வை, குடி வை, குறி வை, சிறை வை, செலவு வை, பத்திரிகை வை, பந்தயம் வை, பெயர் வை, போட்டி வை, மருந்து வை, மனம் வை, முன் வை, வரவு வை, வேலை வை

ஆ. பெயர் + இல் + வை

காவலில் வை

இ. பெயர் + இல் + பெயர் + ஐ + வை

மூக்கில் விரலை வை

ஈ. செய்ய எனும் வாய்பாட்டு வினையெச்சம் + வை

தக்க வை, படிக்க வை, பற்ற வை

உ. இறந்த கால வினையெச்சம் + வை

அடியெடுத்து வை, ஆட்டி வை, உரித்துவை, எழுதி வை, ஒத்தி வை, ஒதுக்கி வை, காதில் போட்டு வை, கொடுத்து வை, கட்டி வை, சேர்த்து வை, சொல்லி வை, தள்ளி வை, திறந்து வை, துவக்கி வை, தொடங்கி வை, பிட்டு வை, போட்டு வை, விட்டு வை, விலக்கி வை

வை எந்தப் பொருண்மைப்பரப்பில் படும் பெயர்ச்சொற்களுடன் சேர்ந்து கூட்டுவினைகளை விளைவாக்கம் செய்யும் என்பதை மேற்கண்ட சொல்நிலையாக்கம் பெற்று அகராதியில் இடம்பெற்றுள்ள கூட்டுகளைக் கொண்டு கணிப்பது சிரமமாகும். புதிய தரவுகள் இதற்கு உதவலாம். இறந்த கால வினையெச்சம் + வை என்ற அமைப்பாக்கம் பொருண்மை நிலையாக்கத்தால் புதிய கூட்டுகளை உருவாக்கலாம்.

9.3.3. முடிவுரை

ஒரு அடியும் அதை வினையாக்கம் செய்யும் வினையும் சேர்ந்து ஒரு சொல்லாக வருவது கூட்டு வினையாகும். பெரும்பாலும் இவ்வடி பெயராக அமையும். பெயர் +வினை கூட்டுகளை பெயர் + வினை தொடர்களிலிருந்து வேறுபடுத்தி அறியலாம். இந்த வேறுபாடு அவ்வளவு திட்டவட்டமானது என்று கூற இயலாது. அடி,அடை, அளி, ஆகு, ஆக்கு, ஆடு, ஆற்று, இடு, உறு, உறுத்து, ஊட்டு, எடு, எய்து, ஏல், ஏறு, ஏற்று, கட்டு, காட்டு, கூறு, கொடு, கொள், செய், சொல், தட்டு, படு, படுத்து, பண்ணு, பார், பிடி, புரி, பெறு, போ, போடு, மூட்டு, வாங்கு, விடு, விழு, வை என்பன வினையாக்கிகளாகும்.

9.4. பெயரடையாக்கம்

இதுவரைப் பார்த்த சொல்லாக்கங்கள் பெயராக்கமும் வினையாக்கமுமாகும். தமிழ் மரபிலக்கணங்கள் பெயரைப் பற்றியும் அவற்றின் திரிபுகளையும் பற்றியும் வினையைப் பற்றியும் அவற்றின் திரிபுகளையும்

ஆக்கங்களையும் பற்றித்தான் கூடுதலாகப் பேசுகின்றன. பெயரடையையும் வினையடையையும் அவைச் சொல் வகைபாடுகளாகக் கருதவில்லை. மரபிலக்கணங்கள் பெயரடைகளைக் குறிப்புப் பெயரெச்சம், தெரிநிலைப் பெயரெச்சம் என வினையின் திரிபுகளாகக் கருதுகின்றன; பெயரின் பண்பை விவரிக்கும் பண்புப் பெயரடைகள் பண்புப் பெயர்களாக மீள் வடிவாக்கம் செய்யப்படுகின்றன. (எ.கா. நற்றமிழ் < நன்மை + தமிழ்). வினையடைகள் குறிப்பு வினையெச்சம், தெரிநிலை வினையெச்சம் என வினையின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன. பெயரடையோ வினை யடையோ தனிச்சொல் வகையாகக் கருதப்படவில்லை. ஆனால் தற்காலத் தமிழுக்குப் பெயரடை, வினையடை என்ற சொல் வகைகளைப் புதிய சொல் வடிவுகளாய் எடுத்துக் கொள்ள வேண்டிஇருக்கின்றது என்று முன்னர் பார்த்தோம். பெயரடைகளும் வினையடைகளும் பெயர்கள் மற்றும் அவற்றின் திரிபுகள், வினைகள் மற்றும் அவற்றின் திரிபுகள் பொருண்மை மாற்றம் மற்றும் செயற்பாடு மாற்றம் அடைந்தமையால் விளைந்தனவாகும் என்று பொதுப் படையாகக் கூறலாம். பெயரடைகளும் வினையடைகளும் சில தமிழ் மொழியியலாரால் (Lehman, 1989) தொடரியல் அடிப்படையிலான சொல் வகைபாடுகளாகத் தான் எடுத்துக் கொள்ளப்படுகின்றன; பெயரும் வினையும் தான் உருபனியல் அடிப்படையிலான சொல் வகைபாடுகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

பெயரடைச் சொல் வகைப்பாட்டில் ஒன்றா என்ற கேள்வி குறித்து நாம் ஏற்கனவே பார்த்தோம். இங்கு கிரியாவில் பெயரடைகள் என்று பட்டியலிடப்பட்டுள்ள சொற்கள் ஆயப்பட்டு பெயரடைகளின் ஆக்கம் பற்றி விரிவான விளக்கம் தர முயற்சி எடுக்கப்பட்டள்ளது.

பெயரடைகளை அவற்றின் அமைப்பு மற்றும் ஆக்கச்செயற்பாடு அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

1. பெயர்ப் பெயரடைகள்

2. வேராலான பெயரடைகள்

3. தெரிநிலைப் பெயரெச்சத்தாலான பெயரடைகள்

4. வினையெச்சப் பெயரடைகள்

9.4.1. பெயர்ப்பெயரடைகள்

பெயர்முன் அடையாக வந்து பெயரடையாகச் செயற்பாடு செய்யும் பெயர்களைப் பெயர்ப்பெயரடைகள் என்று இங்கு குறிப்பிடுகின்றோம். பெயர்ப்பெயரடைகளை மாற்றமுறாப் பெயர்ப் பெயரடைகள் என்றும் மாற்றமுற்ற பெயர்ப்பெயரடைகள் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம்.

9.4.1.1. மாற்றமுறாப் பெயர்ப் பெயரடைகள்

இதன் கீழ் வரும் பெயர்கள் மாற்றமுறாது வந்து பெயரடையாகச் செயற்பாடு செய்வனவாகும். இப்பெயரடைகளை அதன் அமைப்புப்படி பின்வருமாறு வகைபடுத்தலாம்:

1. தனி நிலை

அக்கரை, அனைத்து, உறை, ஊமை, இணை, கனம், குண்டு, கொள்ளை, தலைமை, திருட்டு, தீ, துணை

2. கூட்டுநிலை

ஈற்று+அயல் > ஈற்றயல், உடன்+அடி > உடனடி, கீழ்+தட்டு > கீழ்த்தட்டு, தான்+இயங்கி > தானியங்கி, தினம்+சரி > தினசரி, தினம்+படி > தினப்படி, பூஜியம்+ஸ்ரீ >பூஜியஸ்ரீ, மறை+திரு > மறைதிரு, முன்+நாள்> முன்னாள், மேல்+படி > மேற்படி

தமிழில் பெயர்களானது பெயர்கள் முன்வந்து தலைமைப் பெயரை விளக்குவதாய் அமையும். இவ்வருகையும் விவரிப்பும் கூட்டாக்க நோக்கிலோ அடை நோக்கிலோ அமையலாம். பெயருக்கு முன் வரும் பெயர்கள் பல பெயரடைகளாகச் செயற்பாடு செய்யவல்லன. எண்ணுப்பெயர்கள், நிறப்பெயர்கள் போன்றவை மரபாகவே பெயர்களின் அடைகளாக வருகின்றன (எ.கா. பச்சைச் (சேலை), சிவப்புத்(துணி), இரண்டு(ஆள்), ஏழைப்(பெண்)).

கிரியாவில் பெயரடைகளாகப் பட்டியலிடப்பட்டுள்ள மேற்கண்ட பெயர்கள் பொருண்மை அடிப்படையிலான

சொல்நிலையாக்கத்தால் பெயரடைகளாக மாற்றம் பெற்றவை. தமிழில் பெயர்கள் முன் பெயர்கள் பெயரடைகளாக வருவது விளைவாக்கமான ஒரு செயற்பாங்காகும். பெயர்கள் பெயரடைகளாக மாறும் தகுதியும் திறனுமுள்ள மூலாதாரம் என்பதை இங்கு நாம் கருத்திற்கொள்ள வேண்டியதாகின்றது.

9.4.1.2. மாற்றமுற்ற பெயர்ப்பெயரடைகள்

மாற்றமுற்ற பெயர்ப்பெயரடைகளை இரண்டாக வகைபடுத்தலாம்: (1) ஈற்றயல் மெய் இரட்டித்தப் பெயரடைகள் (2) அம்/அன்/அர் என முடியும் பெயர்களின் ஈற்று ம்/ன்/ர் கெட்டு உருவான பெயரடைகள்.

9.4.1.2.1. ஈற்றயல் மெய் இரட்டித்த பெயரடைகள்

இவ்வகையிலான பெயரடைகளை பின்வருமாறு வகைபடுத்தலாம்.

1. தனிநிலை

நாடு > நாட்டு, வேறு > வேற்று

2. கூட்டு நிலை

பன்+நாடு > பன்நாடு > பன்நாட்டு

கிரியாவில் தரப்படாத பின்வரும் ஈற்றயல் மெய் இரட்டித்த பெயரடைகளும் வழக்கில் உள்ளன. (எ.கா. அசடு> அசட்டு, குருடு > குருட்டு, செவிடு > செவிட்டு, முரடு > முரட்டு, காடு > காட்டு). இவ்வகையிற்படும் சொற்களை வினையடைகளா அல்லவா என்பதை அறிந்து கொள்ள பின்வரும் சோதனை பயன்படலாம்.

அசட்டுப்பையன் – அசடாக இருக்கின்ற பையன்

குருட்டுப்பையன் – குருடாக இருக்கின்ற பையன்

செவிட்டுப்பையன் – செவிடாக இருக்கின்ற பையன்

முரட்டுப்பையன் – முரடாக இருக்கின்ற பையன்

காட்டுப்பன்றி – * காடாக இருக்கின்ற பன்றி

நாட்டுப்பண் – * நாடாக இருக்கின்ற பண்

மேற்கண்ட சோதனையால், அசட்டு, குருட்டு, செவிட்டு, முரட்டு என்பன பெயரடை என்றும் காட்டு, நாட்டு என்பன பெயரடை அல்ல என்றும் முடிவுக்கு வரலாம். இருப்பினும் நாட்டு என்பது தற்போக்கான பொருண்மை பெற்று சொல்நிலையாக்கமடைந்து பெயரடையாக கருதப்பட்டு அகராதிப்படுத்தப்பட்டுள்ளது. காட்டு என்பது கிரியாவில் பெயரடையாகத் தரப்படாவிடினும் இதனையும் பொருண்மை அடிப்படையிலான சொல்நிலையாக்கம் கருதிப் பெயரடையாகக் கொள்ளலாம். மேற்சொன்ன சோதனை ஒரு அடைபட்ட குழுமத்திற்படும் பெயர்ப் பெயரடைகளுக்கு மட்டும்தான் பொருந்தும்; இத்தகைய பெயர்கள் பண்புப்பெயர்களாகத் தெரிகின்றன. எனவே பண்புப் பெயர்ப்பெயரடைகளை மட்டும் பெயரடைகளாகக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வருவது அவ்வளவு சரியல்ல. பொருண்மை அடிப்படையிலான சொல் நிலையாக்கமும் ஒருவகையான ஆக்கச் செயற்பாடு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

9.4.1.2.2. அம்/அன்/அர் என முடியும் பெயர்களின் ஈற்று ம்/ன்/ர் கெட்டு வருவான பெயரடைகள்

இதன் கீழ்வரும் பெயரடைகளைப் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்:

1. ம் ஈறு கெட்டுஉருவான பெயரடைகள்

1.1. தனிநிலை

அகிலம் > அகில, ஆதர்சம் > ஆதர்ச, ஏகம் > ஏக, கனம் > கன, கள்ளம் > கள்ள, கனிஷ்டம் > கனிஷ்ட, கிராமியம் > கிராமிய, கௌரவம் > கௌரவ, சாஸ்திரியம் > சாஸ்திரிய, சுயம் > சுய, சிரேஷ்டம் > சிரேஷ்ட, சீமந்தம் > சீமந்த, சுத்தம் > சுத்த, சொந்தம் > சொந்த, தர்மம் > தர்ம, தார்மீகம் > தார்மீக, பௌதிகம் > பௌதிக, நிகரம் > நிகர, நித்தியம் > நித்திய, பண்டிதம் > பண்டித, பிரமம் > பிரம, பிரதமம் > பிரதம, பூர்வம் > பூர்வ, மத்தியம் > மத்திய, மர்மம் > மர்ம, மூடம் > மூட, ராஜியம் > ராஜிய, விசேஷம் > விசேஷ, ஜேஷ்டம் > ஜேஷ்ட

1.2. கூட்டுநிலை

1.2.1. பெ+பெ

அன்று+ஆடம் > அன்றாடம் > அன்றாட

ஊர்+அகம் > ஊரகம் > ஊரக

குணம்+சித்திரம் > குணச்சித்திரம் > குணச்சித்திர

சர்வம்+தேசம் > சர்வதேசம் > சர்வதேச

பகுதி+நேரம் > பகுதிநேரம் > பகுதிநேர

நடு+தரம் > நடுத்தரம் > நடுத்தர

மத்தியம்+தரம் > மத்தியதரம் > மத்தியதர

வெகு+ஜனம் > வெகுஜனம் > வெகுஜன

1.2.2. பெ.அ.+பெ.

பன்+முகம் > பன்முகம் >பன்முக, முழு+நேரம் > முழுநேரம் > முழு நேர, முழு+நீளம் > முழுநீளம் > முழுநீள

1.2.3. பெ.+ஆ +பெ.

மாதம்+ஆ+அந்திரம் > மாதாந்திரம் > மாதாந்திர

வருடம்+ஆ+அந்திரம் > வருடாந்திரம் > வருடாந்திர

வாரம்+ஆ+அந்திரம் > வாராந்திரம் > வாராந்திர

1.2.4. பெ.அ.+ஆ+பெ

நால்+ஆ+விதம் > நாலாவிதம் > நாலாவித

நான்+ஆ+விதம் > நானாவிதம் > நானாவித

2. ன்/ர் ஈறுகெட்டு உருவான பெயரடைகள்

அசுரர் > அசுர, இஸ்லாமியர் > இஸ்லாமிய, கத்தோலிக்கர் > கத்தோலிக்க, சண்டாளர் > சண்டாள, சகோதரர் > சகோதர, ராட்சசர் > ராட்சச, ராட்சதர் > ராட்சத

-அம்/அன்/அர் என முடியும் பெயர்கள் பெயரின் முன்

அடைகளாக வருகையில் ம்/ன் / ர் கெட் அவை பெயரடைகளின் பொது வடிவான -அ ஈற்று வடிவுகளை அடைந்து ஒப்புமையாக்கத்தால் பெயரடையாகச் செயற்பாடு செய்யும். கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள மேற்கண்ட ஆக்க வடிவுகள் ஒப்புமையாக்கத்தால் பெயரடையாக்கம் பெற்றவையாகும். இவை தற்போக்குப் பொருண்மை காரணமாகச் சொல்நிலையாக்கம் அடைந்தமையால் அகராதிப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய பெயரடையாக்கம் விளைவாக்கமுள்ளதா என்பது நாம் இங்கு எழுப்ப வேண்டிய கேள்வி. முன்னர் நாம் கூறியது போல ஒப்புமையாக்கம் தமிழைப் பொறுத்தவரையில் விளைவாக்கமுள்ள செயற்பாங்காகும். எந்த விதியாக்கத்திற்கும் ஒப்புமையாக்கம் காரணம் என்பதை நாம் இங்கு குறிப்பிட வேண்டியதாகிறது. -அம் என முடியும் பெயர்கள் -அன்/அர் ஏன முடியும் பெயர்களை விடக் கூடுதல் எண்ணிக்கையான பெயரடைகளை ஆக்கியுள்ளமை நாம் இங்கு கவனிக்க வேண்டிய ஒன்று. கிரியாவில் தரப்படாத இம்மாதிரி ஆக்கப்பட்ட பல பெயரடைகள் பயன்பாட்டில் உள்ளன.

எ.கா. அவம் > அவ

(அவமரியாதை, அவதூறு, அவமானம், அவப்பெயர், அவமதிப்பு, அவநம்பிக்கை)

சுகம் > சுக

(சுகக்கேடு, சுகப்பிரசவம், சுகபோகம், சுகவீனம், சுகஜீவனம், சுகவாசி, சுகஜீவி)

கபடம் > கபட

(கபட நாடகம், கபட சாமியார், கபடதாரி, கபட பேச்சு, கபட செயல்)

நிரந்தரம் > நிரந்தர

(நிரந்தர வேலை, நிரந்தர சந்தோஷம், நிரந்தர துக்கம்)

துரிதம் > துரித

(துரித வண்டி, துரித இரயில், துரித பஸ்)

சுத்தம் > சுத்த

(சுத்த மனசு, சுத்த கை, சுத்த சைவம்)

அதிசயம் > அதிசய

(அதிசய ராகம், அதிசய மனிதன், அதிசயச் செயல்)

அபூர்வம் > அபூர்வ

(அபூர்வ ராகம், அபூர்வ மனிதன், அபூர்வ நிகழ்ச்சி)

இவ்வெடுத்துக்காட்டுகள் -அம் ஈற்றுப்பெயர்கள் தேவை கருதி -ம் கெட பெயரடைகளாய் பயன்படுத்தத் தகுதி உள்ளவை என்றும் இத்தகைய ஆக்கச் செயற்பாடு விளைவாக்க முள்ளது என்றும் நமக்குத் தெரியப்படுத்துகின்றன. இந்த முடிவு -அன்/அர் ஈற்றுப் பெயர்களுக்கும் பொருந்தும்.

9.4.2. வேர்ச்சொல்லாலான பெயரடைகள்

இப்பெயரடைகளைக் குறிப்புப் பெயரெச்சத்தாலான பெயரடைகள் என்று மூன்றாவது வகைத் தெரிநிலைப் பெயரெச்சப் பெயரடைகளுக்கு இணையாகக் கருத இயலும். என்றாலும், குறிப்பு வினைகளிலிருந்தான பெயரடைகள் என்று குறிப்பிட இயலாத சொற்களும் இதில் உட்படுத்தப்பட்டுள்ளமையால் இதற்கு அந்தத் தலைப்பு கொடுக்கப்படாமல், வேர்ச்சொல் அடிப்படையிலான பெயரடைகள் என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தெரிநிலைப் பெயரெச்சங்களைப் பின்பற்றி இவ்வகையிலான பெயரடைகளைப் பின்வருமாறு பிரிக்கலாம்:

1. 'பேர்' என்னும் வாய்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள் அல்லது வேர்ப்பெயரடைகள்
2. 'பெரு' என்னும் வாய்பாட்டுக் குறிப்பு பெயரெச்சப் பெயரடைகள் அல்லது 'பெரு' குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள்

3. 'பெரும்' என்னும் வாய்பாட்டுக் குறிப்பு பெயரெச்சப் பெயரடைகள் அல்லது 'பெரும்' குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள்

4. ஐ பின்னொட்டிய பெயரடைகள்

5. ஏ பின்னொட்டிய பெயரடைகள்

6. 'பெரிய' என்னும் வாய்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள் அல்லது 'பெரிய' குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள்

இதன் கீழ் அடங்கத்தக்க எல்லாப் பெயரடைகளையும் சேர்த்து ஆய்வது தான் சிறப்பாயிருக்குமாகையால் அவ்வாறே செய்யப்பட்டுள்ளது.

9.4.2.1. 'பேர்' என்னும் வாய்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள் அல்லது வேர்ப் பெயரடைகள்

குறிப்பு வினையடிகளும் பிற சொல்வகைபாட்டில் சேர்க்கவியலாத சொற்களும் இதன் கண் வரும். கிரியாவிலிருந்து எடுக்கப்பெற்ற இவ்வகையிலான சொற்களைப் பின்வருமாறு வகைபடுத்தலாம்:

1. மெய்யீற்றுப் பெயரடைகள்

இன், ஈர், ஏழ், எண், ஓர், கார், சாட்சாத், தென், திடீர், தொல், நல், நால், நுண், புனர், பேர்

2. உயிரீற்றுப் பெயரடைகள்

2.1. தனிநிலை

இதர, உப, சதா, சாதா, மகா, மா, மாஜி, மூ, வட, வேதி

2.2. கூட்டுநிலை : இரட்டிப்பு

தொள+தொள> தொளதொள

நல், பேர் போன்ற பெயரடைகளை மரபிலக்கணங்கள் காலங்கரந்த பெயரெச்சம் அல்லது வினைத்தொகை என்று குறிப்பிடும் பெயரெச்சங்களாலான பெயரடைகளுக்கு இணையானதாய்க் கருதலாம்.

9.4.2.2. 'பெரு' என்னும் வாய்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள் அல்லது 'பெரு' குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள்

இப்பெயரடைகளை மரபிலக்கணங்கள் காலங்கரந்த பெயரெச்சம் அல்லது வினைத்தொகை என்று குறிப்பிடும் பெயரெச்சங்களாலான பெயரடைகளுக்கு இணையானதாய்க் கருதலாம். கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள இவ்வகையிலான பெயரடைகளைப் பின்வருமாறு பகுத்தாயலாம்.

1. தனிநிலை

ஓர்+உ>ஒரு, ஈர்+உ>இரு, சிற்+உ> சிறு, மற்+உ> மறு, முழ்+உ> முழு, வெற்+உ> வெற்று

2. கூட்டு நிலை

2.1. இரட்டிப்பு நிலை

ஒவ்+ஒரு> ஒவ்வொரு

சின்னம்+சிறு> சின்னஞ்சிறு

2.2. இரட்டா நிலை

இன்+ஒரு> இன்னொரு

ஓர்+இரு> ஓரிரு

மற்+ஒரு> மற்றொரு

9.4.2.3. 'பெரும்' என்னும் வாய்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள் அல்லது 'பெரும்' குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள்

கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள இவ்வகையிலான பெயரடைகளைப் பின்வருமாறு பகுத்தாயலாம்.

1. தனிநிலை

அரு+ம் > அரும் , இள+ம் > இளம், கரு+ம் > கரும், குறு+ம் > குறும், கொடு+ம் > கொடும், செ+ம் > செம், தீ+ம் > தீம், நெடு+ம் > நெடும், பசு+ம் > பசும், பழ+ம்>

பழம், பாழு+ம் > பாழும், பெரு+ம் > பெரும், வெறு+ம்> வெறும்

2. கூட்டுநிலை

2.1. பெ+பெ.அ

கட்டு இளம் > கட்டிளம்

2.2. பெ.அ+பெ.அ

பழம்+பெரும் > பழம்பெரும்

முது+பெரும் > முதுபெரும்

9.4.2.4. ஐ பின்னொட்டிய பெயரடைகள்

கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள இவ்வகையிலான பெயரடைகளைப் பின்வருமாறு பகுத்தாயலாம்.

பண்ட்+ஐ > பண்டை

மேல்+ஐ > மேலை

கீழ்+ஐ > கீழை

9.4.2.5. ஏ பின்னொட்டிய பெயரடை

கிரியா பட்டியலிட்டுள்ள இவ்வகையிலான ஒரே பெயரடையைப் பின்வருமாறு பகுத்தாயலாம்.

ஒரு+ஏ > ஒரே

9.4.2.6. 'பெரிய' என்னும் வாய்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள் அல்லது 'பெரிய' குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள்

இதன் கண்படும் (சுட்டு, வினா தவிர்த்த) பெயரடைகளை 'செய்த' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சங்கள் என்று மரபிலக்கணங்கள் குறிப்பிடும் பெயரெச்சங்களிலிருந்தான பெயரடைகளுக்கு இணையானதாய்க் கருதலாம். இவற்றை அ-வின் மூன்று மாற்று வடிவங்களின் அடிப்படையில் மூன்றாகப் பகுக்கலாம்:

1. அ பின்னொட்டிய பெயரடை

2. இய பின்னொட்டிய பெயரடை

3. ஐய பின்னொட்டிய பெயரடை

1. அ பின்னொட்டியப் பெயரடை

1.1. தனிநிலை

அந்த்+அ > அந்த, இந்த்+அ > இந்த, எந்த்+அ > எந்த, இன்+அ > இன்ன, என்+அ > என்ன, உள்+அ > உள்ள, சின்+அ > சின்ன, தக்+அ > தக்க, தீய்+அ > தீய, தூய்+அ > தூய, நல்+அ > நல்ல, மிக்+அ > மிக்க

1.2. கூட்டுநிலை

அன்+ஓர்+அன்+அ > அன்னோரன்ன, இன்+அ+(பிற்+அ) > இன்னபிற, சிற்+(சில்+அ) > சிற்சில, (அரு+மருந்து)+(அன்+அ) > அருமருந்தன்ன > அருமந்த

2. இய பின்னொட்டிய பெயரடை

அர்+இ+அ > அரிய, அழக்+இ+அ > அழகிய, உயர்+இ+அ > உயரிய, இன்+இ+அ > இனிய, கொட்+இ+அ > கொடிய, சிற்+இ+அ > சிறிய, சீர்+இ+அ > சீரிய, திண்+இ+அ > திண்ணிய, நுண்+இ+அ > நுண்ணிய, நெட்+இ+அ > நெடிய, நேர்+இ+அ > நேரிய, பச்+இ+அ > பசிய, புத்+இ+அ > புதிய, பெர்+இ+அ > பெரிய, முதல்+இ+அ > முதலிய, முத்+இ+அ > முதிய, மெல்+இ+அ > மெல்லிய, வற்+இ+அ > வறிய

(2.2) கூட்டுநிலை

அளப்பு+(அர்+இய) > அளப்பரிய

(புத்+அம்) (புத்+இ+அ) > புத்தம் புதிய

(செயல்+கு) (அர+இ+அ) > செயற்கரிய

3. ஐய பின்னொட்டிய பெயரடை

அன்ற்+ஐ+அ > அன்றைய

இத்தக்+ஐ+அ > இத்தகைய

இன்ற்+ஐ+அ > இன்றைய

ஏன்+ஐ+அ > ஏனைய

நாள்+ஐ+அ > நாளைய

நேற்று+ஐ+அ > நேற்றைய

பண்ட்+ஐ+அ > பண்டைய

பழ்+ஐ+அ > பழைய

தற்போத்+ஐ+அ > தற்போதைய

பிந்த்+ஐ+அ > பிந்தைய

முந்த்+ஐ+அ > முந்தைய

முன்+ஐ+அ > முன்னைய

4. அத்திய பின்னொட்டிய பெயரடை

கிழக்கு+அத்து+இய > கிழக்கத்திய

சமீபம்+அத்து+இய > சமீபத்திய

தெற்கு+அத்து+இய > தெற்கத்திய

மேற்கு+அத்து+இய > மேற்கத்திய

வடக்கு+அத்து+இய > வடக்கத்திய

9.4.2.7.வேர்ச்சொல் பெயரடைகள் குறித்த விவாதம்

இங்கு நாம் வேர்ச்சொற்கள் என்று குறிப்பிடுவது தற்காலத்தமிழ்ச் சொல்வகைபாட்டில் பெயராகவோ வினையாகவோ வகைபடுத்தத் தயங்குகிற அல்லது வகைபடுத்த இயலாத வேர்களையாகும். மரபிலக்கணங்கள் குறிப்பு வினை என்று குறிப்பிடுகின்ற வேர்ச்சொற்களும் அதன் பெயரெச்ச வடிவுகளும் இதன்கண் அடங்கும். பேர், பெரு, பெரும் வகைகளிலான பெயரடைகள் மரபிலக்கணங்களால் பண்புப்பெயராக மீள் வடிவமாக்கப் படும் (எ.கா: பெரும்பாம்பு < பெருமை+ பாம்பு, நற்காலம் < நன்மை+காலம்). முன்னர் நாம் குறிப்பிட்டது போல

மரபிலக்கணங்கள் இப்பெயரடைகளை ஒருவித பின்னாக்கங்களாகக் கருதுவதாகத்தான் தோன்றுகின்றது. மரபிலக்கணங்கள் பெயரையும் வினையையும் தான் முக்கிய சொல் வகைகளாய்க் கருதுவதாலும் பெயரடைகளை ஒரு சொல் வகுப்பாக ஏற்றுக்கொள்ளாததாலும் இவை இவ்வடை வடிவங்களை அவற்றுடன் தொடர்புடைய பெயர்களிலிருந்து புணர்ச்சியால் ஈற்று விகுதி கெட்ட வடிவங்களாகக் கொள்கின்றன.

ஒன்று+ஆயிரம் > ஓராயிரம் (< ஓர்+ஆயிரம்)

வடக்கு+திசை > வடதிசை (< வட+திசை)

தெற்கு+திசை > தென்திசை (< தென்+திசை)

நுண்மை+உயிர் > நுண்ணுயிர் (< நுண்+உயிர்)

ஒரு அடைபட்ட குழுமத்திற்படும் பெயர்கள் அவற்றின் ஈற்றசை (ஈற்றுவிகுதி) கெட பெயரடைகளை உருவாக்கும் என்ற சொல்லாக்க விதியின்படி பெயர்களிலிருந்து பெயரடைகளை ஆக்கலாம் என்றாலும் மீளாக்க விதியைவிட ஒட்டாக்க விதி உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவதாயும் சீர்மையாகவும் கூடுதல் விளைவாக்கமுள்ளதாயும் அமைகின்றது.

கிரியாவிலிருந்து எடுக்கப்பெற்ற குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகள் மரபு வழியில் பெயரடைகளாகச் சொல் நிலையாக்கம் பெற்றனவாகும். இன் என்ற கட்டுருபுப் பெயரடை இனிய என்ற தனியுருபுப் பெயரடையின் மாற்று வடிவு போல அமையும். (எ.கா. இன்சுவை, இனிய சுவை); இது இனிமை என்ற பண்புப் பெயருடன் தொடர்புடையது. ஈர், எண், ஏழ், ஓர் என்பன முறையே இரண்டு, எட்டு, ஏழு, ஒன்று என்ற எண்ணுப் பெயர்களுடன் தொடர்புடைய பெயரடை வடிவங்களாகும்.

இரு, ஒரு என்பன முறையே ஈர், ஓர் என்பதன் மாற்றுப் பெயரடை வடிவங்கள் எனலாம் (எ.கா. ஈர்+இழை > ஈரிழை, ஈர்+உருளை > ஈருருளை, இரு+நூறு > இருநூறு, இரு பெண்கள், ஓர் ஊர், ஓர் ஆசை, ஒரு நாள், ஒரு பையன்). கரு,

கரும், கரிய என்பனவற்றைக் கார் என்பதன் மாற்று வடிவங்களாகக் கொள்ளலாம். (எ.கா. கார்குழல், கார்மேகம், கருமணல், கருமணி, கரும்பூனை, கரும்பலகை, கரிய கூந்தல், கரிய சுவர்). தென் என்ற பெயரடை தெற்கு என்ற திசைப் பெயருடனும், தொல், நல், நுண், பேர் என்ற பெயரடைகள் முறையே தொன்மை, நன்மை, நுண்மை, பெருமை என்ற பண்புப்பெயர்களுடன் தொடர்புடைய பெயரடை வடிவுகளாகும். நல்ல, நுண்ணிய, பெரிய என்பன முறை நல், நுண், பேர் என்ற பெயரடைகளின் மாற்று வடிவுகள் எனலாம். அரும், இளம், கரும், குறும், கொடும், செம், நெடும், பசும், பழம், பாழும், பெரும், வெறும், என்பன முறையே அருமை, இளமை, கருமை, குறுமை, கொடுமை, செம்மை, நெடுமை, பசுமை, பழமை, பெருமை, வெறுமை என்ற பண்புப் பெயர்களுடன் தொடர்புடையன. அரும், இளம், கடும், கொடும், நெடும், பசும், பழம், பெரும் என்பன முறையே அரிய, இளைய, கரிய, கொடிய, நெடிய, பசிய, பழைய, பெரிய என்ற பெயரடை வடிவுகளின் மாற்று வடிவுகள் போன்று அமையும்.

சிறு என்ற பெயரடை சிற், சின், சிறிய என்ற மாற்று வடிவுகளுடன் சிறுமை என்ற பண்புப்பெயர் வடிவுடனும் தொடர்புடையது. பெரு என்ற பெயரடைக்கு பேர், பெரும், பெரிய என்ற மாற்றுப் பெயரடை வடிவுகள் உண்டு. மறு என்பதற்கு மற் என்ற வடிவுண்டு; இது மறுமை என்ற பெயருடன் தொடர்புடையது. முழு என்பது முழுமை என்ற பண்புப் பெயருடன் தொடர்புடையது. வெற்று என்பதற்கு வெறும் என்ற மாற்று வடிவமுண்டு; இது வெறுமை என்ற பண்புப் பெயருடன் தொடர்புடையது. மூ என்பது மூன்று என்ற எண்ணுப் பெயரின் பெயரடை வடிவாகும்; மு என்பது இதன் மாற்று வடிவாகும். (எ.கா. மூவேந்தர், முத்தமிழ், முன்னூறு). வட என்பது வடக்கு என்ற திசைப் பெயரின் பெயரடை வடிவாகும் (எ.கா. வடதிசை, வட நாடு).

ஐ ஈற்றுப் பெயரடைகள் ஒரு சிலவே. -ஐ ஒரு ஆக்க ஒட்டாக இருந்தாலும் அது எப்பொழுதும் வேருடன் சேர்ந்து பெயரடை ஆக்கம் செய்யும் என்று கூற இயலாது. ஐ

பெயராக்கமும் செய்யும் (எ.கா. திறம்/ திறன்+ஐ > திறமை, கடம்/கடன்+ஐ > கடமை, மடம்+ஐ > மடமை, வளம்/ வளன்+ஐ > வளமை, புலம்/புலன்+ஐ > புலமை, நாள்+ஐ> நாளை, வெள்+ஐ > வெள்ளை, கால்+ஐ > காலை). சில வினையடைகளில் ஐ சாரியை போலவும் வரும் (எ.கா. நாள் +ஐ+உக்கு > நாளைக்கு, இன்று+ஐ+உக்கு > இன்றைக்கு, நேற்று+ஐ+உக்கு > நேற்றைக்கு). சில -அ பின்னொட்டிய பெயரடைகளிலும் இவ்வாறே வரும் (எ.கா. நேற்று+ஐ+அ> நேற்றைய, இன்று+ஐ+அ > இன்றைய, நாள்+ஐ+அ> நாளைய). பண்டை என்பது பண்டைய என்பதின் குறுகிய மாற்று வடிவாகும் என்று கூறலாம். ஆனால், மேலைய, கீழைய என்ற பெயரடை வடிவுகள் இல்லை.

கிரியாவில் ஏ பின்னொட்டிய பெயரடை ஆக்கம் ஒரே என்பது மட்டுமே. -ஏ ஒரு தேற்றக்குறி என்பதை அறிவோம். இது ஒரு என்ற பெயரடையுடன் சேர்ந்து ஒரே என்ற வடிவு பெற்று தற்போக்குப் பொருண்மை காரணமாக பெயரடையாக வரும். ஏ-ஐ ஒரு பெயரடை ஒட்டாகக் கருத இயலாது.

அந்த, இந்த என்பன சுட்டுப் பெயரடைகளாகும்; எந்த வினாப் பெயரடையாகும். இவற்றிற்கிணையான கட்டுருபு வடிவங்கள் மரபிலக்கணங்கள் சுட்டெழுத்துக்கள் என அழைக்கப்படும் அ, இ என்பனவும் வினா எழுத்து என அழைக்கப்படும் எ என்பதுமாகும். (எ.கா. அ+பையன் > அப்பையன், இ+பையன் > இப்பையன், அந்தப் பையன், இந்தப் பையன்). இதுபோலவே மூன்றாக வரத்தக்க அன்ன, இன்ன, என்ன என்பனவற்றுள் அன்ன அகராதிப்படுத்தப் படவில்லை; இன்ன பெயர் அடையாகவும் என்ன வினாப் பெயரடையாகவும் அகராதிப்படுத்தப்பட்டுள்ளன. அந்த, இந்த, அன்ன, இன்ன என்பன முன்னர் குறிப்பிட்ட பெயரடைக்கான சோதனையில் தேறா. உள்ள, உரிய என்பனவும் பெயரடைக்கான சோதனையில் தேறா. உள்ள என்பதுடன் தொடர்புடைய உண்மை தற்போக்கு பொருண்மை காரணமாக உள் என்ற அடியுடன்

தொடர்பில்லாதது போன்று சொல்நிலையாக்கம் அடைந்துள்ளது. உள்ள என்பது ஆன போன்று பெயர்களுடன் சேர்ந்து பெயரடையாக்கம் செய்யும். (எ.கா. அழகு+உள்ள> அழகுள்ள, அறிவு+ உள்ள > அறிவுள்ள, திறமை+உள்ள> திறமையுள்ள, மணம்+உள்ள> மணமுள்ள, சுவை+உள்ள > சுவையுள்ள). உரிய என்பது உரி என்ற வேர்ச்சொல்லுடனும் உரிமை என்ற பெயருடனும் தொடர்புடையது. உரிய என்பது உள்ள என்பதுபோல் பெயரடையாக்கியாகவும் வரும்; இது நான்காம் வேற்றுமை -உக்கு என்ற திரிபு ஒட்டுக்குத் திரிபுற்ற பெயர்களுடன் சேர்ந்து பெயரடை ஆக்கம் செய்யும் (எ.கா. சிந்தனை+உக்கு+உரிய > சிந்தனைக்குரிய, மதிப்பு+உக்கு+உரிய > மதிப்புக்குரிய, வணங்குதல்+ உக்கு+உரிய > வணங்குதற்குரிய). உள்ளம், உள்ளமை, உண்டு என்பன உள் என்ற வேருடன் தொடர்புடைய பெயராக்கங்களாகும்; உரித்து என்பது உரி என்ற வேருடன் தொடர்புடைய பெயராக்கமாகும்.

சின்ன என்பது சின், சிற், சிறு என்ற வேர்ச்சொற்களுடன் தொடர்புடையது; சிற், சிறு, சிறிய, சின்ன என்பன இதனுடன் தொடர்புடைய போட்டிப் பெயரடைகளாகும். (எ.கா. சிற்+ ஆம்பல்> சிற்றாம்பல், சிற்+ஆடை> சிற்றாடை, சிற்+ஊர்> சிற்றூர், சிறு பையன், சிறு பெண், சிறிய வீடு, சிறிய யானை, சின்னப் பையன், சின்ன இடம்). சேர்ந்து வருகை அடிப்படையில் இவ்வடைகளை வேறுபடுத்தலாம். சிறு என்பது தெரிநிலை வினையாகவும் செயற்பாடு செய்கிறது. (எ.கா.முகம் சிறுத்தது, கண் சிறுத்தது). சிறு என்ற வினையின் 'செய்த' பெயரெச்ச வடிவமான சிறுத்த பொருண்மை அடிப்படையில் சிறிய என்ற குறிப்புப் பெயரெச்சத்திலிருந்து வேறுபட்டதாகும். சின்ன, சிறு, சிறிய என்பன நடை அடிப்படையிலும் பொருண்மை அடிப்படையிலும் சிறிது வேறுபட்டாலும், ஒருபொருள் பன்மொழிகளாக வரும் சூழல்களும் உள்ளன. (எ.கா. சின்ன விரல், சிறுவிரல், சிறிய விரல்). தக்க என்ற பெயரடை தக் என்ற வேர்ச்சொல்லுடன் தொடர்புடையது. தக் என்பதன் தெரிநிலை வினைவடிவங்கள் தகு, தகை என்பனவாகும் (எ.கா. இந்தத்

தண்டனை தகும், அவனுக்கு பெண் தகையவில்லை). தகைமை, தகுதி என்பன பெயராக்க வடிவங்களாகும். தகு என்ற வினையின் 'செய்த' பெயரெச்ச வடிவமான தகுந்த 'ஏற்ற/உரிய' பெயரடையாக அகராதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தக்க என்ற குறிப்புப் பெயரெச்சப் பெயரடையின் போட்டிப் பெயரடையாகவும் வரும். (எ.கா. தக்க/தகுந்த தண்டனை, தக்க/தகுந்த வசதி). தீய என்பதன் வேர்ச்சொல்லும் பெயரடையாகச் செயற்படுகின்றது (எ.கா. தீ+ செயல் > தீச்செயல்). தீமை என்பது தீ என்பதன் -மை ஒட்டிய பண்புப் பெயராகும். தீய் 'கருகு' என்பது இதனோடு தொடர்புடைய வினையாகும். (எ.கா.பால் தீய்ந்து விட்டது). தூய என்பது தூய் என்ற வேர்ச்சொல்லுடன் தொடர்புடையது; தூய் என்பது பெயரடையாகச் செயற்பாடு செய்யவில்லை. தூய்மை என்பது தூய் என்பதின் -மை பின்னொட்டியபண்புப்பெயராகும். நல்ல என்பது நல், நற், நன் என்ற வேர்களோடு தொடர்புடையது. நல், நற், நன் என்பன இதன் போட்டிப் பெயரடைகளாகும். (எ.கா.நல்+ ஊர் > நல்லூர், நல்+ஆட்சி > நல்லாட்சி, நல்+காலம் > நற்காலம், நல்+தமிழ் > நற்றமிழ், நன்+நூல் > நன்னூல், நன்+நாறி > நன்னாறி, நல்ல பையன், நல்ல வீடு).நன்மை என்பது நன் என்பதன் -மை ஒட்டிய பண்புப் பெயராகும்; நன்றி, நன்று என்பனவும் நன் என்பதன் பெயராக்கங்களாகும். நல்கு என்பது இதனோடு தொடர்புடைய வினைவடிவம் எனலாம். பழைய என்பது பழ என்ற வேரில் -ஐ ஒட்டிய பெயரடை வடிவாகும். இதனுடன் தொடர்புடைய பழ, பழம் என்பனவும் பெயரடை வடிவுகளாகும் (பழ+ஊர் > பழவூர், பழம்+பேச்சு > பழம்பேச்சு, பழம்+சோறு > பழஞ்சோறு). பழமை என்பது பழ என்பதன் மை ஒட்டியபெயராகும்.

மிக்க என்பது மிக் என்பதன் அ ஒட்டிய பெயரடையாகும். மிகை என்பது இதனோடு தொடர்புடைய (மிக்+ஐ > மிகை) பெயராகும்; மிகு என்பது தொடர்புடைய வினையாகும். மிகுந்த என்பது மிகு என்பதன் 'செய்த'பெயரெச்ச வடிவாகும்; மிகுதி என்பது மிகு என்பதன் பெயராக்கமாகும்; மிகுதியான என்பது மிகுதி+ஆன

என்பதிலிருந்து ஆக்கப்பெற்ற பெயரடையாகும். மிக்க, மிகுந்த, மிகுதியான என்பன ஒரு பொருள் பன்மொழிகளாகவும் வரலாம் (எ.கா. மிக்க மகிழ்ச்சி, மிகுந்த மகிழ்ச்சி, மிகுதியான மகிழ்ச்சி). மிக என்ற வடிவு மிகு என்ற வினையின் 'செய்ய' வினையெச்ச வடிவாகும்; இது மிக்க, மிகுந்த என்பனவற்றுடன் ஒருபொருள் பன்மொழியாகவும் வரும் (எ.கா. மிகுந்த மகிழ்ச்சி, மிக்க மகிழ்ச்சி, மிக மகிழ்ச்சி). தீய, தூய, நல்ல, பழைய, என்பன எல்லாப் பெயரடைச் சோதனையில் தேறுவனவாகும். மிக்க என்பது 'ரொம்ப' சோதனையிலும் 'ஒப்பிடுதல்' சோதனையிலும் தேறாது; 'எப்படிப்பட்ட' சோதனையில் தேறும்.

சில, பல என்பன பெயரடைகளாகத் தரப்பட்டாலும் இவைப் பெயராகக் கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன. இவை அடிப்படையில் அ ஒட்டிய பெயரடைகளாகவும் செயற்படும். (எ.கா. சில பையன், சில பேர், பல பையன், பல பேர்). ஒத்த ஒலியனியல் வடிவமுள்ள சில, பல என்ற பெயர்கள் ஒன்றன்பால் அ ஒட்டிய பெயர்களாகும். சில என்பதன் வேறான சில் பெயரடையாகப் பயன்படுத்தப்படா விடினும், பல என்பதன் வேறான பல்/பன் பெயரடையாகப் பயன்படுத்தப்படுகிறது. (எ.கா. பல்லாயிரம், பல்லாண்டு, பன்நாடு, பன்முகம்). பன்மை என்பது பன் என்பதன் மை ஒட்டிய பண்புப் பெயராகும். 'மிகு/அதிகமாகு' என்று பொருள்படும் பல்கு என்ற வினை பல் என்பதோடு தொடர்புடையதாகும். அரிய என்ற பெயரடை அரும், அரிதான (<அரிது+ஆன) என்ற பெயரடைகளுடனும், அரிது என்ற குறிப்பு வினைமுற்றுப் பெயருடனும், அருமை என்ற பண்புப் பெயருடனும், அருகு 'குறை' என்ற வினையுடனும் தொடர்புடையது. அரும், அரிய, அரிதான என்பன ஒரு பொருள் பன்மொழிகளாக வரலாம் (எ.கா. அருஞ்செயல், அரிய செயல், அரிதான செயல்). அழகிய என்பது அழகு என்ற பெயருடனும் அழகான என்ற பெயரடையுடனும் தொடர்புடையது. அழகிய, அழகான என்பன ஒருபொருள் பன்மொழிகள். (எ.கா. அழகிய பெண், அழகான பெண்). உயரிய என்பது உயர் என்ற வினையுடனும் அதன் பெயராக்க

வடிவான உயர்ந்த என்பதுடனும் ஆன ஒட்டிய பெயரடை வடிவான உயர்வான (< உயர்வு+ஆன) என்பதுடனும் தொடர்புடையது. உயரிய, உயர்ந்த, உயர்வான என்பவைகளுக்குள் நடை அடிப்படையிலும் பொருண்மை அடிப்படையிலும் வேறுபாடுகள் இருந்தாலும், அவைகள் ஒருபொருள் பன்மொழிகளாக வரும் சூழல்களும் உள்ளன. (எ.கா. உயரிய பண்பு, உயர்ந்த பண்பு, உயர்வான பண்பு, உயரிய எண்ணம், உயர்ந்த எண்ணம், உயர்வான எண்ணம்).

இனிய என்பதன் வேர் வடிவமான இன் என்பதும் பெயரடையாகும். இனிது குறிப்பு வினைமுற்றுப் பெயராகும்; இனிமை பண்புப் பெயராகும்; இனி என்ற வினையும் இனிப்பு (<இனி+ப்பு) என்ற இதன் பெயராக்கமும், இனிப்பான (<இனிப்பு+ஆன) என்ற பெயரடையும் இனிக்கும் என்ற 'செய்யும்' பெயரெச்ச வடிவும் இதனோடு தொடர்புடையனவாகும். இன், இனிய, இனிப்பான, இனிக்கும் என்ற பெயரடைகள் நடை அடிப்படையிலும் பொருள் அடிப்படையிலும் வேறுபட்டாலும் அவைகள் ஒருபொருள் பன்மொழிகளாக வரும் சூழலும் உள்ளன. (எ.கா. இன்சுவை, இனிய சுவை, இனிப்பான சுவை, இனிக்கும் சுவை). இன் ஒரு முன்னொட்டு போல வரும். பின்வரும் சூழலில் இன் பெயரடையாக வராது. (எ.கா. இனிய நினைவுகள், இனிப்பான நினைவுகள், இனிக்கும் நினைவுகள், *இன் நினைவுகள்). இனி என்ற வினையின் 'செய்த' பெயரெச்ச வடிவான இனித்த 'இனிப்புச் சுவை தந்த' என்ற சொற் பொருண்மை அடிப்படையில் மேற்கண்ட இன் அடிப்படையிலான பெயரடைகளிலிருந்து வேறுபட்ட தாகும். கொடிய, கொடு, கொடும் என்பன ஒரே உருபனின் மாற்று வடிவங்கள் எனலாம். இவற்றுடன் (கொடுமையான > கொடுமை + ஆன) என்ற பெயரடையும் சேர்க்கலாம்; கொடுமை என்பது கொடு என்பதன் மை ஒட்டாக்கப் பெயராகும்; கொடிது குறிப்பு வினைமுற்றுப் பெயராகும். கொடு, கொடிய, கொடும், கொடுமையான என்பன ஒருபொருள் பன்மொழிகளாகவும் வரலாம். (எ.கா. கொடு வாள், கொடிய வாள், கொடும் வாள்,

கொடுமையான வாள்). கொடு, கொடும் என்பன முன்னொட்டுகள் போன்ற கட்டுருபன்களாய் வரும். (எ.கா. கொடு+வாள் > கொடுவாள், கொடும்+காற்று > கொடுங்காற்று). கொடிய, கொடுமையான என்பன சுதந்திரமான சொல்லன்களாய் தொடராக்கம் செய்யும். (எ.கா. கொடிய விலங்கு, கொடுமையான விலங்கு). சீரிய என்பதன் வேரான சீர் பெயராகச் செயல்படுகிறது. சீர்மை என்பது சீர் என்பதன் மை பின்னொட்டாக்கப் பண்புப் பெயராகும். சீரான (< சீர்+ஆன) என்பதும் இதனுடன் தொடர்புள்ள பெயரடையாகும். சீரிய என்பது உயர் வழக்கிற்குரியதாகும். சீரிய, சீரான என்பன ஒரு பொருள் பன்மொழிகளாக வரலாம் (எ.கா. சீரிய சிந்தனை, சீரான சிந்தனை).

திண் என்ற வேரிலிருந்தான திண்ணிய என்ற பெயரடை திண்மை என்ற மை ஒட்டாக்கப்பெயருடனும் திண்ணம் என்ற அம் ஒட்டாக்கப்பெயருடனும் திரள் என்ற வினையுடனும் தொடர்புடையது. திண்ணமான (<திண்ணம்+ஆன) என்ற பெயரடையும் திரள் என்ற வினையிலிருந்தான 'செய்த' பெயரெச்சமான திரண்ட என்ற பெயரடையும் இதனோடு தொடர்புடைய ஒரு பொருள் பன்மொழி எனலாம். திண்ணிய உயர் வழக்கின் கண்படும். (எ.கா. திண்ணிய தோள்கள், திண்மையான தோள்கள், திரண்ட தோள்கள்). திண் என்ற வேர் பெயரடையாகச் செயற்பாடு செய்யவில்லை. நுண்ணிய என்பது நுண் என்ற வேர்ச்சொற் பெயரடையுடனும் நுண்மை (<நுண்+மை) என்ற பண்புப் பெயருடனும் தொடர்புடையது. இதனுடன் தொடர்புடைய நுண்மையான (<நுண்மை+ஆன) என்ற ஆன ஒட்டாக்கப் பெயரடையும் நுண், நுண்ணிய என்பனவும் பொருள் அடிப்படையில் சிறிது வேறுபட்டாலும் ஒரு பொருள் பன்மொழிகளாகவும் வரும் (எ.கா. நுண்கிருமி, நுண்ணிய கிருமி, நுண்மையான கிருமி). நுண் என்ற பெயரடை நுண்கிருமி போன்ற கூட்டுகளை ஆக்கும். நுண்ணிய, நுண்மையான என்பன தொடர்களை உருவாக்கும். நெடு, நெடும், நெட்டையான (< நெட்டை+ ஆன) என்பன நெடிய என்பதுடன் தொடர்புடைய

பெயரடைகளாகும்; நெட்டை(< நெட்+ஐ), நெடிது (< நெடி+து), நெடுமை (< நெடு+மை) என்பன இதனுடன் தொடர்புடைய பெயர்களாகும். நெடு/நெடும், நெடிய, நெட்டையான என்பனவற்றுக்குள் நடை மற்றும் பொருள் அடிப்படையில் வேறுபாடு இருந்தாலும் ஒருபொருள் பன்மொழிகளாயும் வரலாம். (எ.கா. நெடுமரம், நெடிய மரம், நெட்டையான மரம்). நேர் என்பது நேரிய என்ற பெயரடை பெயருடனும், நேர்மை என்ற மை பின்னொட்டாக்கப் பண்புப் பெயருடனும் தொடர்புடையது. நேர், நேரிய, நேரான (<நேர்+ஆன), நேர்மையான (< நேர்மை+ஆன) என்பன நடை மற்றும் பொருள் அடிப்படையில் வேறுபட்டாலும் ஒரு பொருள் பன்மொழிகளாகவும் வரலாம். (எ.கா. நேர்ப்பண்பு, நேரிய பண்பு, நேரான பண்பு, நேர்மையான பண்பு).

பச் என்ற வேரிலிருந்தான பசிய என்ற பெயரடை பசுமை (<பசு+மை), பச்சை(<பச்+ஐ) என்ற பெயர்களுடனும் பசும், பசுமையான (< பசுமை+ஆன), பச்சையான (< பச்சை+ ஆன) என்ற பெயரடைகளுடனும் தொடர்புடையது. பசிய, பசும், பச்சை, பசுமையான, பச்சையான என்பன பொருள் மற்றும் அடித்தொடர்புடைய பெயரடை-களாக வந்தாலும் அவைகளுக்குள் நடை, பொருள் மற்றும் சேர்ந்து வருகை அடிப்படையிலான வேறுபாடுகள் உள்ளன. (எ.கா. பசிய தென்னை ஓலை, பசுஞ்செடிகள் (<பசும்+செடிகள்), பசும்புல், பசும்பொன், பச்சைத்தண்ணீர், பச்சைப் பொய், பச்சைச்சேலை, பசுமையான மேய்ச்சல் நிலங்கள், பசுமையான நினைவுகள்).

புத் என்ற வேரிலிருந்தான புதிய என்ற பெயரடை புதிது என்ற குறிப்பு வினைமுற்றுப் பெயருடனும், புதுமை என்ற பண்புப் பெயருடனும், புதுப்பி என்ற வினையுடனும், புது, புதுமையான (< புதுமை+ஆன) என்ற பெயரடைகளுடனும் தொடர்புடையது. புத், புதிய, புது, புதுமையான என்பன நடை, பொருண்மை மற்றும் சேர்ந்து வருகை அடிப்படையில் வேறுபடும். (எ.கா. புத்+ஆடை > புத்தாடை, புத்+உணர்வு> புத்துணர்வு, புத்+உயிர் > புத்துயிர், புதிய ஆடை, புதிய உணர்வு, புதிய வேலை, புதுமுகம், புதுமனை, புதுப்பேனா,

புதுமையான உடை, புதுமையான வேலை, புதுமையான முயற்சி).

பெரிய என்ற பெயரடை பெருமை (< பெரு+மை) என்ற பண்புப்பெயருடனும் பெரிது என்ற குறிப்பு வினைமுற்றுப் பெயருடனும் பெரு என்ற வினையுடனும் பேர், பெரு, பெரும் என்ற பெயரடைகளுடனும் தொடர்புடையது. பேர், பெரு, பெரும், பெரிய என்பன ஒரு உருபனை உணர்த்தும் மாற்றுருபன்கள் என்று தோன்றுகின்றது. (எ.கா. பேர்+ஆபத்து > பேராபத்து, பேர்+ஊர்> பேரூர், பெரு+மூச்சு> பெருமூச்சு, பெரு+நகர் > பெருநகர், பெரும்+பாம்பு > பெரும்பாம்பு, பெரும்+காற்று > பெருங்காற்று, பெரிய பையன், பெரிய வேலை). பேர், பெரு, பெரும் என்பன முன்னொட்டு போல் கட்டுருபன்களாய் வந்து கூட்டாக்கம் செய்கின்றன. பெரிய தனித்து வந்து தொடராக்கம் செய்கின்றது. முதலிய பொருண்மை அடிப்படையில் தன் வேரான முதல் என்பதனின்றும்அதன் பண்புப்பெயரான முதன்மை (<முதல்+மை) என்பதினின்றும் வேறுபட்டு நிற்கின்றது. (எ.கா.இயந்திரம், காகிதம் முதலிய பொருள்கள், இலங்கை முதலிய நாடுகள்). முதிய என்ற பெயரடை முதுமை (<முது+மை) என்ற பண்புப் பெயரோடும் மூ, முதிர் என்ற வினைகளோடும் தொடர்புடையது. முது என்பதும் பெயரடையாகச் செயல்படலாம். முதிய என்ற பெயரடைச் சொல்லின் கட்டுருபு வடிவம் முது எனலாம் (எ.கா. முது மொழி, முதிய பெண்). முது விளைவாக்கமுள்ள பெயரடையல்ல. கிரியாவிலும் பெயரடையாகத் தரப்படவில்லை. முதிர்ந்த, மூத்த என்பன முறையே முதிர், மூ என்ற வினைகளில் 'செய்த' பெயரெச்ச வடிவங்களாகும். மூத்த கிரியாவில் பெயரடையாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. முதிய, முதிர்ந்த, மூத்த என்பன பொருண்மை, நடை மற்றும் சேர்ந்து வருகை அடிப்படையில் வேறுபட்டவை என்றாலும் சில இடங்களில் ஒருமொழி பன்மொழிகளாகவும் வரும் (எ.கா. முதிய பெண்மணி, முதிய ஆட்டக்காரர், முதிர்ந்த அதிகாரி, முதிர்ந்த ஆட்டக்காரர், மூத்த மகள், மூத்த தலைவர், மூத்த ஆட்டக்காரர்).

மெல் என்ற வேரிலிருந்தான மெல்லிய என்ற பெயரடை மென்மை (மெல்/மென்+மை) என்ற பண்புப் பெயருடனும் மெல்லிசு (< மெல்+இசு) என்ற பெயருடனும் அதினின்றும் ஆக்கப்பெற்ற மெல்லிசான என்ற பெயரடையுடனும் மெலி என்ற வினையுடனும் அதனின்றும் ஆக்கப்பெற்ற 'செய்த' பெயரெச்சமான மெலிந்த என்பதுடனும் தொடர்புடையது. மெல், மென் என்பன மாற்றுருபன்களாக பின்வரும் சேர்ந்து வருகை முறையில் வரும் (எ.கா. மெல்+இசை> மெல்லிசை, மெல்+இனம் > மெல்லினம், மென்+குரல் > மென்குரல், மென்+கை > மென்கை). மெல்லிய, மென்மையான, மெல்லிசான, மெலிந்த என்பன நடை, பொருண்மை மற்றும் சேர்ந்து வருகை இவற்றில் வேறுபடும் (எ.கா. மெல்லிய துணி, மெல்லிய சிரிப்பொலி, மெல்லிய குரல், மென்மையான உதடு, மென்மையான இசை, மென்மையான மனம், மெல்லிசான நூல், மெல்லிசான ஆணி, மெல்லிசான துணி, மெலிந்த கைகள், மெலிந்த உடல், மெலிந்த குரல்); மெல்லிய, மெல்லிசான, மெலிந்த என்பன ஒருபொருள் பன்மொழிகளாக வரும் சூழல்களும் உள்ளன (மெல்லிய குரல், மெல்லிசான குரல், மெலிந்த குரல்).

வற் என்ற வேரிலிருந்தான வறிய என்ற பெயரடை வறுமை (<வறு+மை) என்ற பண்புப்பெயருடன் தொடர்புடையது. வற் என்ற வேரோடு தொடர்புடைய வறு, வற்று என்ற வினைகள் வறுமை என்பதினின்று பெரிதும் மாறுபட்ட பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் 'செய்த' பெயரெச்சங்களான வறுத்த, வற்றிய என்பனவும் பெயரடைகளாகச் சொல்நிலையாக்கம் பெறவில்லை.

இய ஒட்டாக்கப் பெயரடைகள் பெரும்பாலும் பண்புப்பொருள் அடிப்படையிலானவை (எ.கா. இனிய, பெரிய). ஆனால் ஐய ஒட்டாக்கப் பெயரடைகளில் பெரும்பான்மையானவை காலப்பொருள் அடிப்படையிலானவை (எ.கா. நாளைய, நேற்றைய). அத்திய ஒட்டாக்கப் பெயரடைகள் இடப்பொருள் அடிப்படையிலானவை (எ.கா. வடக்கத்திய, தெற்கத்திய).

-அ, -இய, -ஐய, -அத்திய என்ற ஒட்டுகளாலான பெயரடையாக்கம் விளைவாக்கமுள்ளதா என்பது இங்கு எழுப்பப்படவேண்டிய கேள்வி. இவை விளைவாக்கம் இல்லாதவை என்ற முடிவுக்கு தான் வர முடிகிறது. இருப்பினும் சொற்களஞ்சியத்தில் ஒருகுழுமத்திற்படும் வேர்சொற்களுடன் மேற்கண்ட ஒட்டுகள் சேர்ந்து எவ்வாறு பெயரடைகள் ஆக்கப்படுகின்றன என்ற சொல்லாக்க விதிகளும் இவ்வேர்ச்சொற்கள் வேறு எந்த ஆக்கச் சொற்களுடன் தொடர்புடையன என்ற செய்திகளையும் தர வேண்டியது அவசியமாகிறது.

கோதண்டராமன் (1973:26-33) -மை என்ற பண்புப்பெயர் விகுதியை ம்+ஐ என இரு ஒட்டுகளின் சேர்க்கையால் விளைந்ததாய்க் கொள்ள வேண்டும் என்கிறார். அம், அ, உ என்பனவைகளையும் ஒட்டுகளாகக் கொண்டால் வேர்ப்பெயரடை வடிவுகளையும் அ/இய ஒட்டாக்கப் பெயரடைகளையும் விளக்கலாம் என்று தோன்றுகிறது.

1. இள்+அ > இள

இள+அம் > இளம்

இள்+ஐ > இளை

இளை+அ > இளைய

இளம்+ஐ > இளமை

2. பெர் > பேர்

பெர்+உ > பெரு

பெரு+ம் > பெரும்

பெர்+இய > பெரிய

பெரும்+ஐ > பெருமை

3. நல்+அ > நல்ல

நல்+அம் > நலம்

நல்+ம் > *நல்ம் > *நன்ம் > நன்

நன்ம்+ஐ > நன்மை

4. தீ+இம் > தீம்

தீம்+ஐ > தீமை

கோதண்டராமன் (1973 : 68-77) கருத்துப்படி கிழக்கத்திய, மேற்கத்திய, வடக்கத்திய, தெற்கத்திய என்பன பின்வருமாறு ஆயப்பெறலாம்.

கிழக்கு+அம் >* கிழக்கம்

மேற்கு+அம் >* மேற்கம்

வடக்கு +அம் >* வடக்கம்

தெற்கு+அம் >* தெற்கம்

* கிழக்க(ம்)+அத்து+இய > கிழக்கத்திய

*மேற்க(ம்) +அத்து+இய > மேற்கத்திய

*வடக்க(ம்) +அத்து +இய > வடக்கத்திய

*தெற்க(ம்) +அத்து+இய > தெற்கத்திய)

9.4.3. பெயரெச்சத்தாலாகிய பெயரடைகள்

பெயரெச்சத்தாலாகிய பெயரடைகளை இரண்டாகப் பிரிக்கலாம்:

1. பெயரெச்சம் பின்னொட்டியபெயரடைகள்

2. பெயரெச்சப் பெயரடைகள்

9.4.3.1. பெயரெச்சம் பின்னொட்டிய பெயரடைகள்

இவற்றை பின்னொட்டு அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கலாம்:

1. -ஆன பின்னொட்டிய பெயரடைகள்

2. -என்ற பின்னொட்டிய பெயரடைகள்

9.4.3.1.1. ஆன பின்னொட்டிய பெயரடைகள்

ஆகு என்ற வினையின் 'செய்த' பெயரெச்ச வடிவான ஆன பெயரடையாக்கப் பின்னொட்டாக்கப் பெயரின் பின்வந்து பெயரடையாக்கம் செய்யும். பின்வருவன

கிரியாவில் பட்டியலிட்டுள்ள ஆன பின்னொட்டிய பெயரடைகளாகும். இவை அவற்றின் அமைப்பொழுங்கு அடிப்படையில் வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன.

1. தனிநிலைப் பெயரடை

பெயர்+ஆன

அப்பட்டம்+ஆன > அப்பட்டமான, அமுக்கம்+ஆன > அமுக்கமான, உண்டு+ஆன> உண்டான, உரித்து+ஆன> உரித்தான, உருப்படி+ஆன > உருப்படியான, எடுப்பு+ஆன> எடுப்பான, கணக்கு+ஆன> கணக்கான, கணிசம்+ஆன > கணிசமான, கமுக்கம்+ஆன > கமுக்கமான, கூர்+ஆன > கூரான, சரி+ஆன > சரியான, செமத்தி+ஆன > செமத்தியான, செழிப்பு+ஆன> செழிப்பான, தங்கம்+ஆன > தங்கமான, திருத்தம்+ஆன> திருத்தமான, துடி+ஆன> துடியான, தொடர்பு+ஆன > தொடர்பான, நீளம்+ஆன > நீளமான, பக்கா+ஆன > பக்காவான, பட்டவர்த்தனம்+ஆன > பட்டவர்த்தனமான, பரவல்+ஆன > பரவலான, பொன்+ஆன > பொன்னான, போதும்+ஆன > போதுமான, மகத்து+ஆன >மகத்தான, மலிவு+ஆன > மலிவான, மாறு+ஆன> மாறான, மீது+ஆன> மீதான, முதல்+ஆன > முதலான, முரண்+ஆன > முரணான, மெத்தனம்+ஆன > மெத்தனமான, மெது+ஆன> மெதுவான, மெய்+ஆன > மெய்யான, மேல்+ஆன> மேலான, மொண்ணை+ஆன > மொண்ணையான, மோகம்+ஆன > மோகமான, ரம்மியம்+ஆன > ரம்மியமான, ருசி+ஆன> ருசியான, லட்சணம்+ஆன> லட்சணமான, லேசு+ஆன> லேசான, வக்கணை+ஆன> வக்கணையான, வன்மை+ஆன > வன்மையான, வசதி+ஆன >வசதியான, வலு+ஆன > வலுவான, விசித்திரம்+ஆன >விசித்திரமான, விசேஷம்+ஆன > விசேஷமான, வித்தியாசம்+ஆன > வித்தியாசமான, விதம்+ஆன> விதமான, விதரணை+ஆன > விதரணையான, விபரீதம்+ஆன>விபரீதமான,

(ஒரு+படித்து)+ஆன> ஒருபடித்தான

(ஒரு+மனது)+ஆன> ஒருமனதான

(ஒரு+முகம்)+ஆன> ஒருமுகமான

(பெரும்+பால்)+ஆன> பெரும்பாலான

ஆன என்ற பெயராக்க ஒட்டு ஆகு என்ற வினையின் 'செய்த' பெயரெச்ச வடிவமாகும் என்று முன்னரே பார்த்தோம். ஆன பெரும்பாலும் பண்பைக் குறிக்கும் பெயர்களுடன் சேர்ந்து பெயரடையாக்கம் செய்யும். ஆன-ஒட்டாக்கப் பெயரடைகளில் பெரும்பாலானவை பெயரடைக்கான சோதனைகளில் தேர்வுறும். ஆன என்பதன் ஒருபொருள் பன்மொழியாக உள்ள, உடைய என்பன வந்து ஒரு குழுமத்திற்படும் பெயர்களுடன் இணைந்து பெயரடையாக்கம் செய்யும் (எ.கா. அழகு+உள்ள > அழகுள்ள, அழகு+உடைய > அழகுடைய, அறிவு+உள்ள > அறிவுள்ள, அறிவு+உடைய > அறிவுடைய, மரியாதை+உள்ள> மரியாதையுள்ள, அடக்கம்+உள்ள>அடக்கமுள்ள). உள்ள, உடைய என்பன முறையே உள், உடை என்ற வேர்ச்சொற்களின் அ பின்னொட்டிய குறிப்புப் பெயரெச்சப் பெயரடைகளாகும்.

ஆன, உள்ள, உடைய என்பன உடன்பாட்டுப் பொருள் தரும் பெயரடைகளை உருவாக்கப் பயன்படும்போது அதற்கு இணையான எதிர்மறைப் பொருள்தரும் பெயரடைகளை உருவாக்க அற்ற, இல்லாத என்பன பின்னொட்டுகளாகப் பயன்படுகின்றன. (எ.கா. அழகு+அற்ற > அழகற்ற, அழகு+இல்லாத > அழகில்லாத, திறமை+அற்ற > திறமையற்ற, திறமை+இல்லாத > திறமையில்லாத). அற்ற (அல்+த்+அ) அல் என்ற குறைவினையின் 'செய்த' பெயரெச்ச வடிவாகும் (பார்க்க). இல்லாத (< இல்+ஆத) என்பது 'செய்யாத' பெயரெச்ச வடிவாகும். உடைய (<உடை+அ) என்பது அவனுடைய (<அவன்+உடைய) என்ற தொடர்களில் ஆறாம் வேற்றுமை உருபான -அது என்பதற்குச் சமமான உடைமைப் பொருள் உணர்த்தவல்ல உருபாகக் கருதப்படு

கின்றது. உடைய என்பது கிரியாவால் இடைச்சொல் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதைப் பெயரின் பின்னால் வரும் பின்னுருபாகவும் கொள்ள இடமுண்டு. ஆன, உள்ள, உடைய, அற்ற, இல்லாத என்பவைகளைப் பொதுத்தன்மை கருதி ஏன் வேறுபட்ட பொருண்மைச் செயற்பாட்டை யுடைய பின்னுருபுகளாகக் கருதலாகாது என்ற கேள்வி எழலாம். அவ்வாறு கருதுவது ஒருவகையான இலக்கணப் பார்வையேயன்றி பிரச்சனைகளை தீர்க்கும் வழியென்று கூறலாகாது.

9.4.3.1.2. என்ற பின்னொட்டியு பெயரடைகள்

என்ற என்பது என் என்ற வினையின் 'செய்த' பெயரெச்ச வடிவாகும். இது தனிநிலையாகவும் கூட்டு நிலையாகவும் வரும் ஒலி உணர்ச்சிக் குறிப்புச் சொற்களின் பின்னால் வந்து பெயரடையாக்கம் செய்யும். கீழ்வருவன கிரியாவில் உட்படுத்தப்பட்டுள்ள 'என்ற' பின்னொட்டிய பெயரடைகளாகும்.

1. தனிநிலைப்பெயரடை

ஒலி உணர்ச்சிக்குறிப்புச் சொல் + என்ற

சில்+என்ற > சில்லென்ற, கணீர்+என்ற > கணீரென்ற, ஜில்+என்ற > ஜில்லென்ற

2. கூட்டுநிலைப் பெயரடை

2.1. முழுஇரட்டிப்புச் சொல் + என்ற

(கட+கட)+ என்ற > கடகட என்ற

(கம+கம)+ என்ற > கமகம என்ற

(தொள+தொள)+ என்ற> தொளதொள என்ற

2.2. பகுதி இரட்டிப்புச் சொல் என்ற

(கச+முச)+என்ற > கசமுச என்ற

(செக்க+செவேல்)+என்ற > செக்கச்செவேல் என்ற

(பச்சை+பசேல்)+என்ற > பச்சைபசேல் என்ற

(ஏனோ+தானோ)+என்ற > ஏனோதானோ என்ற

என்ற என்பது -ஆன போன்று அவ்வளவு விளைவாக்க மானதல்ல என்றாலும் புதிய பெயரடை ஆக்கங்களை உணர்ச்சிக் குறிப்புச் சொற்களிலிருந்து உருவாக்கப் பெரிதும் கைகொடுக்கிறது. (எ.கா. படீரென்ற சப்தம், படாரென்ற அறை).

பெயரெச்சப் பெயரடைப் பின்னொட்டு என்ற ஒற்றுமை கருதி என்ற என்பதையும் ஆன, உள்ள, உடைய, அற்ற, இல்லாத என்பன அடங்கும் பெயராக்கப் பின்னொட்டுகளின் குழுமத்தில் அடக்கலாம். ஆன போன்றன பெயர்களின் பின்னொட்டாக வரும்போது என்ற உணர்ச்சி -ஒலிக்குறிப்புச் சொற்களின் பின்னொட்டாக வருகின்றது.

9.4.3.2. பெயரெச்சப் பெயரடை

பெயரெச்சப் பெயரடைகளை அதன் திரிபு ஒட்டுகள் அடிப்படையில் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. 'செய்' பெயரெச்சப் பெயரடை
2. 'செய்த' பெயரெச்சப் பெயரடை
3. 'செய்கிற' பெயரெச்சப் பெயரடை
4. 'செய்யும்' பெயரெச்சப் பெயரடை
5. 'செய்யாத' பெயரெச்சப் பெயரடை
6. 'செய்யா' பெயரெச்சப் பெயரடை

9.4.3.2.1. 'செய்' பெயரெச்சப் பெயரடைகள்

குறிப்பு வினையடிகள் பெயரடைகளாக வருவது போல் தெரிநிலை வினையடிகளும் பெயரடைகளாக வரும். பின்வருவன கிரியாவில் தரப்பட்டுள்ள தெரிநிலை வினையடிப் பெயரடைகளாகும்.

1. தனிநிலை

அடர், தகு, தெள்ளு, வறட்டு, வெளிர்

2. கூட்டு நிலை

2.1. பெ+'செய்' பெ.எ.

அருள்+மிகு > அருள்மிகு

கண்+கவர்> கண்கவர்

மாண்பு+மிகு> மாண்புமிகு

மே+தகு> மேதகு

2.2. 'செய்' பெ.எ.+'செய்' பெ.எ

விய+தகு > வியத்தகு

'செய்' என்னும் வாய்ப்பாட்டு பெயரெச்சமானது காலங்கரந்த பெயரரெச்சம் என மரபிலக்கணங்கள் அழைக்கும் பெயருக்கும் முன் வரும் அடையாகும். இவை வினையடிகளின் வடிவில் வரும். (எ.கா. சுடு சோறு, படுகாயம், சுழல் காற்று, வீசு தென்றல், கல்லெறிதூரம்). இவ்வாறு பெயர்முன் வரும் வினையடி வடிவுகளை மரபிலக்கணங்கள் காலங்கரந்த பெயரெச்சம் என்று கருதும்போது தற்காலத்தமிழ் மொழியியலாரில் சிலர் இவற்றைப் பெயர்கள் என்று கருதுவர். மேற்கண்ட கிரியாவிலிருந்து எடுக்கப்பெற்ற பெயரடைகள் தற்போக்குப் பொருண்மை மாற்றத்தால் சொல்நிலையாக்கம் பெற்றவை. பெயர் முன் இவ்வகையிலான பெயரெச்ச வடிவுகள் அல்லது வினைப்பெயர் வடிவுகள் பெயரின் அடையாக வருவது விளைவாக்கமுள்ள செயற்பாடாகும். பல கூட்டாக்கங்கள் இவ்வகையிற்படும். (எ.கா. தொடு உணர்வு, புதைகுழி, அழுமூஞ்சி, ஏமாற்று வேலை, தள்ளுவண்டி). 'செய்' பெயரெச்சங்கள் பெயர்கள் முன் அடைகள் போன்று வரவல்லனவாகையால் இவைப் பொருண்மை மாற்றத்தால் பெயரடையாக செயற்பாடு செய்வதற்கான சாத்தியங்கள் கூடுதலாகும். வினையடிப்பெயர்கள் அல்லது வினையடிப் பெயரெச்சங்கள் பெயரடையாக வரவல்ல சாத்தியங்களை விளைவாக்கமாகக் கருத வழியுண்டு. எனவே வினையடிப் பெயரெச்சங்களைப் பெயரடைகளுக்கான மூலதனம் என்று கூறலாம்.

மிகு, தகு என்பன பெயரடை ஒட்டுகள் போன்று ஒரு குழுமத்திற்படும் சொற்களுடன் சேர்த்து பெயரடையாக்கம்

செய்யும் என்று கூறலாம். (எ.கா. கருணைமிகு, இரக்கமிகு, மதிப்புமிகு, பெருமைமிகு). இவற்றையும் உள்ள, உடைய, என்ற பெயரடையாக்க கட்டுருபன்களின் குழுமத்தில் உட்படுத்தலாம் என்று தோன்றுகிறது.

9.4.3.2.2. 'செய்த' பெயரெச்சப் பெயரடைகள்

கிரியாவில் பெயரடைகளாகத் தரப்பட்டுள்ள 'செய்த' பெயரெச்சப் பெயரடைகள் அவற்றின் அமைப்பின்படி வகைபடுத்தப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளன:

1. தனிநிலை

அகண்ட, அகன்ற, அடர்ந்த, அடுத்த, அமர, அற்ற, ஆழ்ந்த, இருண்ட, இழிந்த, இறந்த, உகந்த, உயர்ந்த, உரத்த, உற்ற, ஒட்டிய, ஒடுங்கிய, ஒத்த, ஒருமித்த, ஏகோபித்த, ஏற்ற, கடந்த, கண்ட, கருத்த, கனத்த, குறித்த, குறுகிய, குறைந்த, கூர்த்த, கூர்ந்த, கெட்ட, கொழுத்த, சான்ற, சிறந்த, செம்மாந்த, செவ்விய, செழித்த, சென்ற, சேர்ந்த, தகுந்த, தடித்த, தழுவிய, தழைத்த, தாழ்ந்த, திரண்ட, திறந்த, தெள்ளிய, தேர்ந்த, நீண்ட, நெருங்கிய, பரந்த, பலத்த, பழுத்த, பற்றிய, பார்த்த, பிந்திய, பெருத்த, பொருந்திய, பொறுத்த, போதிய, போன்ற, போன, மிகுந்த, மதர்த்த, மூத்த, முந்திய, வேண்டிய, விழுமிய.

2. கூட்டு

2.1. பெ+'செய்ய' பெ.எ.

அப்பேர்+பட்ட > அப்பேர்பட்ட

ஆனானம்+பட்ட > ஆனானப்பட்ட

இப்படி+பட்ட > இப்படிப்பட்ட

இப்பேர்+பட்ட > இப்பேர்பட்ட

இடை+பட்ட > இடைப்பட்ட

உள்+பட்ட > உட்பட்ட

உடன்+பிறந்த > உடன்பிறந்த

உள்+ஆர்ந்த > உள்ளார்ந்த

உள்+இட்ட > உள்ளிட்ட

ஊர்+பட்ட > ஊர்பட்ட

எப்பேர்+பட்ட > எப்பேர்ப்பட்ட

ஏகம்+பட்ட > ஏகப்பட்ட

ஒப்பு+அற்ற > ஒப்பற்ற

ஒருங்கு+இணைந்த > ஒருங்கிணைந்த

ஒன்று+பட்ட > ஒன்றுபட்ட

ஒன்று+விட்ட > ஒன்றுவிட்ட

குறிப்பு+இட்ட > குறிப்பிட்ட

கேடு+கெட்ட > கேடுகெட்ட

கை+கண்ட > கைகண்ட

கை+தேர்ந்த > கைதேர்ந்த

கோடு+இட்ட > கோடிட்ட

சம்பந்தம்+பட்ட > சம்பந்தப்பட்ட

தலை+ஆய > தலையாய

தறி+கெட்ட > தறிகெட்ட

தனி+பட்ட > தனிப்பட்ட

திக்கு+அற்ற > திக்கற்ற

துப்பு+கெட்ட > துப்புக்கெட்ட

நாள்+பட்ட > நாள்பட்ட

நாள்+ஆர்ந்த > நாளாந்த

பண்+பட்ட > பண்பட்ட

பாடல்+பெற்ற > பாடல்பெற்ற

பின்+தங்கிய > பின்தங்கிய

பிற்+பட்ட > பிற்பட்ட

பெயர்+பெற்ற > பெயர்பெற்ற

பெயர்+போன > பெயர்போன

மட்டு+அற்ற > மட்டற்ற

முன்+பட்ட > முற்பட்ட

முன்+நோக்கிய > முன்னோக்கிய

மேல்+கண்ட > மேற்கண்ட

மேல்+சொன்ன > மேற்சொன்ன

மேல்+பட்ட > மேற்பட்ட

விலை+உயர்ந்த > விலையுயர்ந்த

2.2. பெ.அ+பெ+'செய்த' பெ.எ.

பல+தரம்+பட்ட > பலதரப்பட்ட

பல+திறம்+பட்ட > பலதிறப்பட்ட

2.3. பெ+பெ+'செய்த' பெ.எ.

மாசு+மறு+அற்ற > மாசுமறுவற்ற

2.4. 'செய்து' வி.எ.+'செய்த' பெ.எ.

ஆகி+வந்த > ஆகிவந்த

கடைந்து+எடுத்த > கடைந்தெடுத்த

2.5. பெ+'செய்து' வி.எ.+'செய்த'பெ.எ.

செல்+அரித்து+போன > செல்லரித்துப்போன

2.6. 'செய்ய' வி.எ.+'செய்த' பெ.எ.

செக்க+சிவந்த > செக்கச்சிவந்த

தாழ்த்த+பட்ட > தாழத்தப்பட்ட

'செய்த' பெயரெச்சத்தைச் செய்த எனும்

வாய்ப்பாட்டுப் பெயரெச்சம் என்றும் இறந்தகாலத் தெரிநிலைப் பெயரெச்சம் என்றும் மரபிலக்கணங்கள் குறிப்பிடும். பெயருக்குமுன் அடையாய் வருமாதலால் இவைப் பெயரெச்சங்கள் எனப்பட்டன. (எ.கா. அகன்ற மார்பு, உரத்த குரல்). கிரியாவிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கண்ட பெயரடைகள் 'செய்து' எனும் வாய்பாட்டுப் பெயரெச்சங்கள் தற்போக்குப் பொருண்மை காரணமாக சொல்நிலையாக்கம் பெற்றவையாகும். இப்பெயரெச்சப் பெயரடைகள் அதன் தற்போக்குப் பொருண்மை காரணமாகத்தான் கிரியா அகராதியில் பெயரடைகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. 'செய்து' பெயரெச்சங்கள் பொருண்மை மாற்றத்தால் பெயரடையாக மாறும் அல்லது சொல்நிலையாக்கம் அடையும் சாத்தியங்கள் இருப்பதால் இவற்றைப் பெயரடைகளுக்கான உற்பத்தி மூலங்கள் எனலாம். 'செய்த' பெயரெச்சங்கள் பொருண்மைச் சொல்நிலையாறுகத்தால் பெயரடைகளாக மாறுவதை பெயரடையாக்கச் செயற்பாடு என்று கொண்டால் இதை விளைவாக்கமுள்ள செயற்பாடாகக் கருதலாம் என்று தோன்றுகின்றது; ஏனென்றால் எந்தச் 'செய்த' பெயரெச்சமும் பொருண்மை நிலையாக்கத்தால் பெயரடையாக மாறவல்லன.

ஒரே அடியிலிருந்து ஆக்கப்பெற்ற வேர்ப்பெயரடை களும் பெயர்ப் பெயரடைகளும் ஆ ஈற்று குழுமத்திற்படும் ஒட்டாக்கப் பெயரடைகளும் ஆன/உள்ள/உடைய ஒட்டாக்கப் பெயரடைகளும் 'செய்த' பெயரெச்சப் பெயரடைகளும் தொடர்புள்ள அல்லது ஒருகுழும ஒருமொழிப் பன்மொழிகளாக வருவதை முன்னர்ப் பார்த்தோம். மேற்கண்ட 'செய்த' பெயரெச்சப் பெயரடைகளுக்கு இணையான ஒரே அடியிலிருந்தான பிற பெயரடைகள் ஒப்புமைப்படுத்திப் பார்ப்பதற்காகக் கீழே தரப்பட்டுள்ளன:

அகன்ற - அகலமான, அகலமுள்ள

ஆழ்ந்த - ஆழமான, ஆழமுள்ள

இழிந்த - இழிவான

உயர்ந்த - உயரிய, உயர்வான

ஒடுங்கிய - ஒடுக்கமான

கருத்த - கார், கறுப்பு, கரும், கரிய, கருமையான, கறுத்த

கனத்த - கனமான,கனமுள்ள

குறுகிய - குறு, குறும், குறுகலான

குறைந்த - குறை, குறைவான

கூர்த்த/கூர்ந்த - கூர், சுரிய, கூர்மையான

கெட்ட- கேடு, கெடுதலான

சிறந்த - சிறப்பு,சிறப்பான

செம்மாந்த - செம், செம்மையான

செழித்த - செழிப்பான

தகுந்த - தகு, தகுதியான

தடித்த - தடி, தடிய, தடிப்பான

தழைந்த - தழைவான

தாழ்ந்த - தாழ், தாழ்வான, தாழ்மையான

திரண்ட - திரளான

தெள்ளிய -தெள்ளு

நீண்ட - நீள், நீள, நீளமான

நெருங்கிய - நெருக்கமான

பரந்த - பரவலான

போதிய - போதுமான

மிகுந்த - மிகு, மிக்க, மிகுதியான

கூட்டுப் பெயரெச்சப் பெயரடைகளில் ட்ட என்ற பெயரெச்சம் உள்ள கூட்டுப்பெயரடைகள் மிகுதியாக

உள்ளன. அவற்றை ஒட்டு மொத்தமாகச் சேர்த்துப் பார்க்கையில் -ஆன என்ற பெயரெச்ச அடிப்படையிலான பெயரடை ஒட்டு போல பட்ட என்ற பெயரெச்ச வடிவும் குறைந்தது ஒரு குழுமத்தில்படும் பெயர்களுடன் சேர்ந்து பெயரடை ஆக்கம் செய்வது போல் தோன்றுகின்றது (எ.கா. அப்பேர்பட்ட, ஆனானப்பட்ட, இப்படிப்பட்ட, இப்பேர்ப்பட்ட, ஊர்பட்ட, எப்பேர்பட்ட, ஏகப்பட்ட, ஒன்றுபட்ட, சம்பந்தப்பட்ட, தனிப்பட்ட, நாள்பட்ட, பிற்பட்ட, முற்பட்ட, மேல்பட்ட, பலதரப்பட்ட, பலதிறப்பட்ட).

ஆன என்ற பெயரடை ஒட்டின் எதிர்மறையாக வரும் அற்ற என்ற பெயரெச்ச வடிவும் பின்னொட்டு போல் பெயர்களுடன் சேர்ந்து பெயரடை ஆக்கம் செய்யும் என்று முன்னர் குறிப்பிட்டோம். பின்வருவன சொல்நிலையாக்கம் பெற்றதால் அகராதிப்படுத்தப்பட்ட அற்ற வரும் பெயரடைகளாகும்:

ஒப்பற்ற, திக்கற்ற, மட்டற்ற, மாசுமறுவற்ற

அற்ற என்பதின் ஒருபொருள் பன்மொழியாக இல் என்ற எதிர்மறை வினையின் 'செய்யாத' பெயரெச்ச வடிவமான இல்லாத என்பதும் வரும் என்று முன்னர் குறிப்பிட்டதை இங்கு நினைவுகூர்ந்து பார்க்கவும். அற்ற என்பது இல்லாத என்பதன் உயர்வழக்காகும். கிரியாவில் பட்டியலிடப்படாத அற்ற பின்னொட்டப்பட்ட பெயரடைகள் பயன்பாட்டிலுள்ளன. அவை அற்ற ஒரு விளைவாக்கப் பெயரடையொட்டு அல்லது குறைந்தது ஒரு குறை விளைவாக்கப் பெயரடையொட்டு என்பதை வெளிப்படுத்தும் (எ.கா. அழகற்ற, இனிமையற்ற, கண்ணியமற்ற, தரமற்ற, நாதியற்ற, நிலையற்ற, பண்பற்ற).

கெடு என்ற வினையின் 'செய்த' பெயரெச்ச வடிவான கெட்ட என்ற வடிவும் அற்ற, இல்லாத என்பதன் ஒருபொருள் பன்மொழியாக வருவதைப் பின்வரும் எடுத்துக்காட்டுகள் நிரூபிக்கும்:

இனிமைகெட்ட, துப்புகெட்ட, நன்றிகெட்ட, நாதிகெட்ட, பண்புகெட்ட, குணங்கெட்ட

கிரியாவிலிருந்து எடுக்கப்பட்ட 'செய்த' பெயரெச்சப் பெயரடைகளை எடுத்துக்கொண்டால், அற்ற, ஆய, ஆர்ந்த, இட்ட, இணைந்த, உயர்ந்த, உற்ற, கண்ட, கெட்ட, சொன்ன, தங்கிய, தேர்ந்த, பட்ட, பிறந்த, பெற்ற, போன, விட்ட என்ற செய்த பெயரெச்சங்கள் ஒன்றுக்கொன்று துணைநிலை வருகை முறையிலும் மேலுறுவருகை முறையிலும் பெயரோடு சேர்ந்து வந்த பெயரடையாக்கம் செய்வது போன்று தோன்றுகின்றது. பெயரடையாக்கம் விரிகையில் அற்ற, ஆர்ந்த, இட்ட, கெட்ட, பட்ட, பெற்ற என்பன ஆன என்பது போன்று விரிவான வகையில் அல்லாமல் குறைந்தது ஒரு குழுமத்தில் படும் பெயர்களுடன் சேர்ந்து பெயரடையாக்கம் செய்யும் பின்னொட்டுகளாகப் பொருண்மை நிலையாக்கம் அடையலாம்.

9.4.3.2.3. 'செய்கிற' பெயரெச்சப் பெயரடை

இந்த அமைப்பிற்படும் பெயரடை ஒன்று தான் கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளது. தலை+ போகிற > தலைபோகிற. தலைபோகிற என்பது ஒரு மரபுத்தொடராக 'தவிர்க்க முடியாத/ மிக முக்கியமான' என்ற பொருளில் பெயரடையாக வருகிறது. (எ.கா. தலைபோகிற வேலை, தலை போகிற விஷயம்). 'செய்கிற' பெயரச்சங்களிலிருந்தான பெயரடையாக்கம் 'செய்து' பெயரெச்சப் பெயரடை யாக்கத்தைப் போன்று விளைவாக்கமுள்ளதல்ல. எனவே 'செய்கிற' பெயரெச்சங்களை பெயரடைகளுக்கான உற்பத்தி மூலங்கள் என்று கூற இயலாது.

9.4.3.2.4. 'செய்யும்' பெயரெச்சப் பெயரடைகள்

பிற காலப்பெயரெச்சப் பெயரடைகளைப் போன்று எதிர்காலப் பெயரெச்சங்களும் பெயரடைகளாக நிலையாக்கம் பெற்று கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வருவன கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள 'செய்யும்' பெயரெச்சப் பெயரடைகளாகும்:

1. தனிநிலை

நிகழும், பாழும், வரும்

2. கூட்டு நிலை

எதிர்+வரும்> எதிர்வரும்

கீழ்+காணும்> கீழ்க்காணும்

நடம்+ஆடும்> நடமாடும்

பின்+வரும்> பின்வரும்

'செய்த' பெயரெச்சப் பெயரடைகளை விட இவை மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பெயரடைகளாகும்.

9.4.3.2.5. 'செய்யாத' பெயரெச்சப் பெயரடைகள்

காலப் பெயரெச்சங்களுக்கு எதிர்மறையாக வரும் எதிர்மறைப் பெயரெச்சங்களும் பெயரடைகளாக சொல்நிலையாக்கம் பெற்றுள்ளன. கீழ்வருவன கிரியாவில் தரப்பட்டுள்ள பெயரடைகளாகும்.

1. தனி நிலை

அடாத, அல்லாத, இல்லாத, இன்னாத, தகாத, தாளாத, தெரியாத, வேண்டாத

2. கூட்டுநிலை

2.1. பெ.+'செய்யாத' பெ.எ.

இடை+அறாத> இடையறாத

இடை+விடாத> இடைவிடாத

இணை+பிரியாத> இணைபிரியாத

இனம்+தெரியாத> இனம்தெரியாத

இனம்+புரியாத> இனம்புரியாத

கண்+காணாத> கண்காணாத

மேல்+படாத> மேற்படாத

வரலாறு+காணாத> வரலாறுகாணாத

2.2. பெ.+உக்கு+'செய்யாத' பெ.எ.

கவை+க்கு+உதவாத> கவைக்குதவாத

2.3. (பெ.+ஆல்) +'செய்யாத' பெ.எ.

(கை+ஆல்)+ஆகாத> கையாலாகாத

2.4. (பெ.+பெ)+ 'செய்யாத' பெ.எ.

(கண்+மண்)+தெரியாத> கண்மண் தெரியாத

(தன்+நிகர்)+இல்லாத> தன்னிகரில்லாத

(முன்+பின்)+தெரியாத> முன்பின் தெரியாத

பிற பெயரெச்சங்களைப் போல 'செய்யாத' பெயரெச்சங்களும் பெயருக்குமுன் அடைகளாய் வரும் (எ.கா. அடாத பேச்சு, தகாத சொல், இடையறாத மழை, கண்கொள்ளாத காட்சி). மேற்கண்ட கிரியாவிலிருந்து எடுக்கப்பட்ட 'செய்யாத' பெயரெச்சங்கள் பொருண்மை மாற்றம் காரணமாகச் சொல்நிலையாக்கம் பெற்று அகராதிப்படுத்தப்பட்டுள்ளன. பெயர்முன் அடையாக வரும் 'செய்யாத' பெயரெச்சங்கள் பொருண்மை நிலையாக்கத்தால் பெயரடையாக வர இயலுமாதலால் இவ்வகையிலான பெயரெச்சங்கள் பெயரடையாக மாறும் செயற்பாட்டை விளைவாக்கமாகக் கருத இயலும். மேலும் 'செய்யாத' பெயரெச்சங்களைப் பெயரடைகளுக்கான உற்பத்தி மூலங்கள் எனலாம்.

9.4.3.2.6. 'செய்யா' பெயரெச்சப் பெயரடைகள்

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள் என்று மரபிலக்கணங்கள் குறிப்பிடும் 'செய்யா' பெயரெச்சங்களில் நான்கு தான் சொல்நிலையாக்கம் பெற்ற பெயரடையாக கிரியாவில் தரப்பட்டுள்ளன.

1. பெ.+'செய்யா' பெ.எ.

இணை+பிரியா> இணைபிரியாத
கண்+கொள்ளா> கண்கொள்ளா
மட்டு+இல்லா> மட்டில்லா

2. (பெ.+பெ.)+ 'செய்யா' பெ.எ.

(தன்+நிகர்)+இல்லா> தன்னிகரில்லா

'செய்யா' பெயரெச்சப் பெயரடைகள் 'செய்யாத' பெயரெச்சப் பெயரடைகளை விட எண்ணிக்கையில் குறைவாகத்தான் அகராதிப்படுத்தப்பட்டுள்ளன. 'செய்யா' பெயரெச்சப் பெயரடைகள் யாவும் கூட்டுப் பெயரடைகளாகும். மட்டில்லா என்ற பெயரடை தவிர பிற 'செய்யா' பெயரடைகளுக்கு இணையான 'செய்யாத' பெயரெச்சப் பெயரடைகள் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ளன.

இணைபிரியா–இணைபிரியாத

கண்கொள்ளா–கண்கொள்ளாத

தன்னிகரில்லா–தன்னிகரில்லாத

'செய்யா' பெயரெச்சப் பெயரடைகள் உயர்வழக்குக் குரியவை என்று கூறலாம். 'செய்யாத' பெயரெச்சப் பெயரடைகளுக்கிணையான பின்வரும் 'செய்யா' பெயரெச்சப் பெயரடைகள் அகராதிப்படுத்தப்படவில்லை.

இடையறாத – இடையறா

இடைவிடாத – இடைவிடா

இனம்தெரியாத– இனம் தெரியா

இனம்புரியாத – இனம்புரியா

மேற்படாத – மேற்படா

வரலாறுகாணாத – வரலாறுகாணா

மேற்கண்ட 'செய்யாத' பெயரெச்சப் பெயரடைகளுக்கு இணையான 'செய்யா' பெயரெச்சங்கள் பெயரடைகளாக கிரியாவில் அகராதிப்படுத்தபடா விட்டாலும், அவை பயன்பாட்டில் உள்ளதாய்த்தான் தெரிகின்றது (எ.கா. இடையறா மழை, இடைவிடா வெயில், இனம்தெரியா பய உணர்ச்சி, இனம்புரியா வேதனை, வரலாறுகாணா மக்கட்கூட்டம்). 'செய்யா' என்ற

பெயரெச்சங்களிலிருந்தான பெயரடையாக்கத்தையும் விளைவாக்கமாக கொள்ள இயலும். இவ்வகையிலான பெயரெச்சங்களையும் பெயரடைகளுக்கான உற்பத்தி மூலங்கள் எனலாம்.

9.4.4. வினையெச்சப் பெயரடை

இவ்வகையிலான பெயரடை ஒன்றேயொன்றுதான் கிரியாவில் தரப்பட்டுள்ளது. நிறைய என்ற சொல் வினையடை என்றும் பெயரடை என்றும் கிரியாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வினையடையாகவும் பெயரடையாகவும் வரும் இடங்கள் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் தரப்பட்டுள்ளன. இதன் பொருள் முறையே 'அதிகமாக', 'அதிகமான' என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

எ.கா.

கதிர் வீச்சால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி நிறைய பேசினார்

தொட்டிகள் நிறைய தண்ணீர்

என் சந்தேகத்தை நிறைய பேரிடம் கேட்டேன்

அடிப்படையில் நிறைய ஒரு வினையெச்சம் தான். தொடரியல் மாற்றம் அடிப்படையிலான நிலையாக்கத்தால் இது ஒரு பெயரடையாகவும் செயற்பாடு செய்கின்றது. இது உணர்த்தும் 'கூடுதல்' என்ற பொருள் இதற்குக் காரணமாய் இருக்கலாம். பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதை நமக்கு விளக்கும்:

அவன் தண்ணீர் கூடுதலாகக் குடித்தான்

அவன் கூடுதலாகத் தண்ணீர் குடித்தான்

அவன் கூடுதலான தண்ணீர் குடித்தான்

நிரம்ப, ரொம்ப என்ற வினையடைகளும் 'கூடுதல்' என்ற பொருள் காரணமாய்ப் பெயரடையாகவும் செயற்பாடு செய்வது போல் தெரிகின்றது.

அவன் தண்ணீர் நிரம்பக் குடித்தான்

அவன் நிரம்பத் தண்ணீர் குடித்தான்

அவன் தண்ணீர் ரொம்பக் குடித்தான்

அவன் ரொம்பத் தண்ணீர் குடித்தான்

9.4.5. பெயரடை வகைகளின் புள்ளியியல் தரவு

பின்வரும் அட்டவணையில் க்ரியாவில் வரும் பெயரடை வகைகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

எண்	பெயரடை வகைகள்	எண்ணிக்கை
1.	ஆன ஒட்டு பெற்ற பெயரடைகள்	100+
2.	என்ற ஒட்டு பெற்ற பெயரடைகள்	10+
3.	செய் வகைப் பெயரடைகள்	17+
4.	செய்த வகைப் பெயரடைகள்	117+
5.	செய்கிற வகைப் பெயரடைகள்	1+
6.	செய்யும் வகைப் பெயரடைகள்	7+
7.	செய்யாத வகைப் பெயரடைகள்	22+
8.	செய்யா வகைப் பெயரடைகள்	4+
9.	வடிவுமாற்றமுறாப் பெயர்ப் பெயரடைகள்	22+
10.	ஈற்றயல் மெய் இரட்டித்த பெயர்ப் பெயரடைகள்	5+
11.	ம் ஈறு கெட ஆக்கப்பெற்ற பெயர்ப் பெயரடைகள்	42+
12.	இய ஒட்டு பெற்ற பெயர்ப் பெயரடைகள்	13+
13.	ஐய,அ ஒட்டு பெற்ற பெயர்ப் பெயரடைகள்	20+
14.	பேர் வகைப் பெயரடைகள்	25+
15.	பெரு வகைப் பெயரடைகள்	12+
16.	பெரும் வகைப் பெயரடைகள்	51+
17.	பெரிய வகைப் பெயரடைகள்	51+

17.1 அ ஒட்டு பெற்ற பெயரடைகள்	16+
17.2 இய ஒட்டு பெற்ற பெயரடைகள்	23+
17.3 ஐய ஒட்டுப் பெயரடைகள்	5+

9.4.6. முடிவுரை

ஓர் ஆக்க விதி விளைவாக்கமுள்ளதா என்பது அது புதிய சொற்களை உருவாக்குகிறதா என்பதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். எண்ணிக்கை அடிப்படையில் ஓர் ஆக்கம் விளைவாக்கம் உள்ளதா இல்லையா என்று தீர்மானிப்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இருப்பினும், எண்ணிக்கை அடிப்படை விளைவாக்கத்திற்குப் பின்பலமாய் அமையும். இதுவரை நாம் பார்த்த செய்திகளின் அடிப்படையில் பின்வருவனவற்றை முடிவுகளாகக் கருதலாம்:

* அ என்பது பொதுவான பெயரடை ஒட்டாகும்.

* கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பட்டியலிட்டுள்ள பெயரடைகளில் பெயரோ வினையோ அல்லாத பெயரடைகளில் பெரும்பாலானவற்றை எந்தவித தயக்கமுமின்றிப் பெயரடையாகக் கொள்ளலாம்.

* பெயர்ப் பெயரடைகளில் இய, ஐய, அத்திய ஒட்டு பெற்ற பெயரடைகளைப் பெயரடைகளாகக் கொள்வதில் சிக்கல் ஒன்றுமில்லை.

* பெயர் உருமாற்றத்தாலும் பொருள் மாற்றத்தாலும் பெயரடையாகக் கருதப் பெறுவது மொழி மாற்றங்களுக்குள்ளாகும் போது சொற்களின் இலக்கண வகுப்பும் மாற்றத்திற்குள்ளாகும் என்ற கருத்தனை வலியுறுத்துவதாக அமைகின்றது. பொருள் மாற்றத்திற்குள்ளாகும் பெயர்ச் சொற்களை மொழி விளக்க எளிமை கருதி க்ரியா பெயரடையாகக் கருதுவதாகத் தெரிகிறது. இதனால் மொழியின் இயல்போ இலக்கண விளக்கமோ எந்தவித பாதிப்பையும் அடையாது என்ற நிலையில் க்ரியாவின் இந்த மறுசொல் வகைப்பாட்டை ஏற்றுக்கொள்ளலாம்.

*ஆன என்பதை விளைவாக்கமுள்ள ஒரு பெயரடை ஒட்டாகக் கருதலாம். உள்ள, கொண்ட, மிக்க, அற்ற, கெட்ட, என்ற என்பவைகளையும் பெயரடையாக்க ஒட்டுகளாகக் கருத இடமுண்டு.

* செய்த வகைப் பெயரெச்சங்களும் செய்யாத வகைப் பெயரெச்சங்களும் தனிச்சையான பொருண்மை மாற்றத்தால் பெயரடைகளாக ஆக்கம் அடைய வாய்ப்புண்டு. எனவே செய்த வகை பெயரெச்சங்களையும் செய்யாத வகைப் பெயரெச்சங்களையும் பெயரடைகளின் ஆற்றல் மிக்க மூலங்களாகக் கருதலாம்.

*பெயரடைகளாகச் செயல்படுகிற எல்லாப் பெயரெச்சங்களையும் சொல் அமைப்பு அடிப்படையில் பெயரடைகளாகக் கொள்ளாது வினைகளாகக் கருதுவதில் இலக்கண விளக்க அடிப்படையில் என்ன இலாப நஷ்டம் என்பதை நன்கு ஆய்ந்து தான் தீர்மானம் எடுக்க வேண்டும்.

* வினையோ பெயரோ அல்லாத வேர்ப் பெயரடைகளை ஆய்கையில் பின்வரும் செய்திகள் தெரிய வரும்.

1. இப் பெயரடைகள் வேறுபட்ட வடிவுகளில் ஒரு வரையறைக்கு உட்பட்டு வருகின்றன. பின்வரும் அட்டவணை இதைத் தெளிவாக்கும்.

பேர் வகை	பெரு வகை	பெரும் வகை	பெரிய வகை	பெயர்
அ	–	–	அந்த	–
*அர்	–	அரும்	அரிய	அருமை
?	–	–	இதர	–
இ	–	–	இந்த	–
இன்	–	–	இனிய	இனிமை
*இன்	–	–	இன்ன	–
ஈர்	இரு	–	–	இரண்டு

உப	–	–	–	–
உயர்	–	–	உயரிய	–
*உர்	–	–	உரிய	உரிமை
உள்	–	–	உள்ள	–
எ	–	–	எந்த	–
எண்	–	–	–	எட்டு
*என்	–	–	என்ன	–
ஏழ்	எழு	–	–	ஏழு
ஓர்	ஒரு	–	–	ஒன்று
கார்	கரு	கரும்	கரிய	கருமை
*குற்	குறு	குறும்	–	–
கூர்	–	–	கூரிய	கூர்மை
*கொட்	–	கொடும்	கொடிய	கொடுமை
சதா	–	–	–	–
சாட்சாத்	–	–	–	–
சாதா	–	–	–	–
*சில்	–	–	சில	–
சிற்	சிறு	–	சிறிய	சிறுமை
*சின்	–	–	சின்ன	–
*சீர்	–	–	சீரிய	சீர்மை
செவ்/செம்	–	–	செவ்விய	செம்மை
*திண்	–	–	திண்ணிய	திண்மை
தீம்	–	–	–	–
*தீ	–	–	தீய	தீமை

தென்	–	–	–	தெற்கு
திடீர்	–	–	–	–
தொல்/தொன்	–	–	–	தொன்மை
நல்/நன்	–	–	நல்ல	நன்மை
நா/நால்	–	–	–	நான்கு
நுண்	–	–	நுண்ணிய	நுண்மை
*நெட்	–	?நெடும்	நெடிய	நெடுமை
நேர்	–	–	நேரிய	நேர்மை
*பச்	–	பசும்	பசிய	பசுமை
பல்/பன்	–	–	பல	பன்மை
பழ	–	பழம்	பழைய	பழமை
புத்	புது	–	புதிய	புதுமை
புனர்	–	–	–	–
பேர்	பெரு	பெரும்	பெரிய	பெருமை
மகா	–	–	–	–
மாஜி	–	–	–	–
முத்	முது	–	முதிய	முதுமை
முதல்/முதன்	–	–	முதலிய	முதன்மை
*முழ்	முழு	–	–	முழுமை
மும்	மூ/மு	–	–	மூன்று
மெல்/மென்	–	–	மெல்லிய	மென்மை
*வட்	–	–	வட	வடக்கு
*வற்	–	–	வறிய	வறுமை
வெற்	வெற்று	வெறும்	–	வெறுமை

2. பேர் வகைப் பெயரடைகளின் ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்களை மாற்றுருபன்களாகக் கொண்டு அவை வரும் இடங்களைப் பின்வருமாறு வரையறைப்படுத்தலாம்:

- பேர்உயிர்த் தொடக்கப் பெயர்களின் முன் வரும்.
- பெரும் ஈரிதழ் அடைப்பொலி தொடக்கப் பெயர்களின் முன் வரும்.
- பெரு பிற மெய்கள் முன் வரும்.
- பெரிய சொல் விட்டிசை எல்லை முன் வரும்.

3. நல், பேர் போன்ற பண்புப் பெயரடைகளும் ஓர், ஈர், மூ போன்ற எண்ணுப் பெயரடைகளும் வட, தென் போன்ற திசைப் பெயரடைகளும் முறையே பண்புப் பெயர்களாகவும் எண்ணுப்பெயர்களாகவும் திசைப் பெயர்களாகவும் ஆக்கம் பெறுகின்றன.

4. பெயரடைகளைப் பெயரின் மாற்றுவடிவாகக் கொண்டு ஆய்ந்தால் தேவையில்லாத மற்றும் தனிப்பட்ட அல்லது தன்னிச்சையான உருபொலியனியல் விதிகளை (எ.கா. பெருமை+ஆபத்து > பேராபத்து, இரண்டு+ஆயிரம் > ஈராயிரம், வடக்கு+திசை > வடதிசை) உருவாக்க வேண்டி வரும். மட்டுமல்லாமல் பேராபத்து என்பதை பெருமை+ஆபத்து என்று மீட்டுருவாக்கம் செய்கையில், பெருமை, ஆபத்தின் அடையாக வந்து பொருண்மை அடிப்படையிலான ஒழுங்கின்மையை வெளிப்படுத்தும்.

* பெயரடைகளை ஒரு சொல் வகுப்பாகக் கருதுவது எளிய இலக்கண விளக்கத்திற்கு ஏதுவாக அமையும். எளிய விளக்கம் கருதி மாற்றுக் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை.

* உருபனியல் அடிப்படையிலும் தொடர்பியல் அடிப்படையிலும் தெரிநிலைப் பெயரெச்சங்களும் பெரிய வகையில் படும் குறிப்புப் பெயரெச்சங்களும் ஒற்றுமையைக் காட்டுகின்றன.

*அ/இய/ஐய ஒட்டு பெற்ற பெரிய வகைப் பெயரடைகளை அவற்றோடு தொடர்புடைய குறிப்பு வினைகளின் கால ஒட்டுப் பெறாத பெயரெச்சவடிவுகளாகக் கருத இடமுண்டு.

9.5. வினையடையாக்கம்

ஒரு சில மரபு வினையடைகளைத் தவிர (எ.கா. அங்கு, இங்கு, எங்கு) பிற வினையடைகளெல்லாம் பெயரிலிருந்தும் வினையிலிருந்தும் ஆக்கப்பெற்றவையாகும். இவ்வாக்கங்கள் பெயர்களும் வினைகளும் அவற்றின் திரிபுகளும் செயற்பாடு மாற்றம் மற்றும்/அல்லது பொருள் மாற்றம் அடைந்ததாலும், வினையிலிருந்து மற்றும் பெயரிலிருந்து பெறப்பெற்ற திரிபு வடிவுகள் சொல்நிலையாக்கத்தால் வினையடைகளுக்கான ஒட்டுகளாகச் செயற்பாடு மாற்றம் அடைந்ததாலும் விளைந்தனவாகும். இந்நிலையில் வினையடைகளைச் செயற்பாடு அடிப்படையிலான இரண்டாந்தரச் சொல் வகையாகக் கொள்ள இயலுமேயன்றி தனிச் சொல்வகையாகக் கொள்ள இயலாதே, அவ்வாறு இருக்கையில் இவ்வகையிற்படும் வினையடை ஆக்கத்தை விளைவாக்கமாக எவ்வாறு கொள்ள இயலுமா என்ற ஐயம் எழலாம். இதற்கான விடை காண அகராதிகள் வினையடைகள் என்று பட்டியலிடுகின்ற சொற்களைப் பகுப்பாய்வு செய்து, எவ்வகையான ஆக்கச் செயற்பாடுகள் புதிய வினையடைகளை உருவாக்கப் பயன்படுத்தப் படுகின்றன என்பதை அறிய வேண்டும். பின்னர் தான் வினையடையாக்கத்திற்கென்று தனியாக விதிகள் இருக்கின்றனவா என்பது விளங்கும். இங்கு கையாளப்பட்டுள்ள வினையடைகளின் தரவு கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியிலிருந்து எடுக்கப்பெற்றனவாகும். இவைச் சொல் நிலையாக்கம் அடைந்த காரணத்தால் இவ்வகராதியில் பட்டியலிடப் பட்டுள்ளன என்று பொதுப்படையாகக் கூறலாம். இவற்றைப் பகுப்பாய்வு செய்தால் வினையடைகளின் ஆக்கம் குறித்த ஒரு விளக்கம் கிடைக்கும்.

பகுநிலைவினையடைகள், பகாநிலை வினையடைகள்

பெரும்பாலான வினையடைகளை அவற்றின் வடிவு அடிப்படையில் அதாவது அவற்றின் உருபனியல் பண்பு அடிப்படையில் தெரிந்து கொள்ள இயலாது; இன்ன திரிபாக்கம் பெறுவது வினையடை என்றோ இன்ன ஒட்டு இருப்பது வினையடை என்றோ அறுதியிட்டு கூறுவது இயலாது. தொடரியல் பண்புகள் தான் இதற்கு உதவவேண்டும். வினையடைகளைச் செயற்பாட்டு அடிப்படையில் அடையாளம் காணலாம் என்றாலும் சில பெயர்த்திரிபுகளுக்கும் வினையடைக்கும் சில வினைத்திரிபு களுக்கும் வினையடைக்கும் செயற்பாடு அடிப்படையில் மட்டும் எல்லைக்கோடு இடுவது அவ்வளவு பயன் தராது; அவற்றின் உருபனியல் அமைப்பையும் வரலாற்று அடிப்படையில் ஆய வேண்டும்.

வினையடைகளைப் பகுநிலை வினையடைகள், பகாநிலை வினையடைகள் என்று இரண்டாகப் பிரிக்கலாம். பகுநிலை வினையடைகளின் கீழ் உருபன்களாகப் பகுக்க இயலும் வினையடைகளும் பகாநிலை வினையடைகளின் கீழ் பகுக்க இயலாத வினையடைகளும் வரும். நேற்று, நாளை என்பன பகாநிலை வினையடைகளின் கீழ்வரும். நேற்று, நாளை போன்ற பகாநிலை வினையடைகளையும் வரலாற்று அடிப்படையில் பகுக்க இயலும் என்றாலும் இங்கு நாம் அந்த அளவுக்குச் சொற்பிறப்பியல் நோக்கிச் செல்லவில்லை. அன்று, அப்போது, உடனே என்பன பகுநிலை வினையடிகளின் கண்படும். இங்கு நாம் பகுநிலை வினையடைகளைத் தான் பகுப்பாய இருக்கிறோம். இப்பகுப்பாய்வு தரும் சேர்க்கை வகைகளில் எவை வினையடை ஆக்கத்திற்கு இன்றும் உதவுவன என்பதை அறிவது தான் நம் குறிக்கோள்.

கிரியா அகராதியிலிருந்து எடுக்கப் பெற்ற வினையடிகளை அவற்றின் உருபனியல் அமைப்புப்படி வகைப்படுத்தலாம். வினையெச்சங்கள் வினையின்

அடையாய் வருவன என்பதால் வினையெச்ச வினையடைகளைப் பிற வினையடிகளிலிருந்து பிரித்து விளக்குவது முறையானதாய் அமையும். இதன்படி வினையடைகளைப் பின்வருமாறு பகுக்கலாம்.

1. வினையெச்சமல்லா வினையடைகள்

2. வினையெச்சத்தாலான வினையடைகள்

9.5.1. வினையெச்சமல்லா வினையடைகள்

வினையெச்சமல்லா வினையடைகளையும் இரண்டாக வகைப்படுத்தலாம். வேற்றுமையுருபுகளும் வினைகளை விளக்க வருமாதலால் அவற்றைப் பிற வினையடை களிலிருந்து பிரிப்பது முறையானதாய் அமையும். இதன்படி வினையெச்சமல்லா வினையடைகளைப் பின்வருமாறு பகுக்கலாம்.

1. வேற்றுமையல்லா வினையடைகள்

2. வேற்றுமை வினையடைகள்

9.5.1.1 வேற்றுமையல்லா வினையடைகள்

வேற்றுமையல்லா வினையடைகளை அவற்றின் உருபனியல் அமைப்புப்படி பின்வருமாறு பிரிக்கலாம்:

1. சுட்டு-வினா கட்டுருபன்கள் மற்றும் சில தெரிநிலைப் பெயரெச்சங்கள் அடிப்படையிலான வினையடைகள்

2. எண்ணுப் பெயரடை ஒரு அடிப்படையிலான வினையடைகள்

3. முன், பின் அடிப்படையிலான வினையடைகள்

4. -ஏ என்ற குறைச்சொல்லால் முடியும் வினையடைகள்

5. -உம் என்ற குறைச்சொல்லால் முடியும் வினையடைகள்

6. வரை என முடியும் வினையடைகள்

7. எல்லாம் என முடியும் வினையடைகள்

8. மேல் என முடியும் வினையடைகள்

9. பெயர் இரட்டிப்பு வினையடைகள்

10. இரட்டிப்பு வினையடைகள்

9.5.1.1.1. சுட்டு–வினா கட்டுருபன்கள் மற்றும் சில தெரிநிலைப் பெயரெச்சங்கள் அடிப்படையிலான வினையடைகள்

இதன் கண் படும் வினையடைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளன.

1. {அ,இ,எ} + ங்கு

அங்கு, இங்கு, எங்கு

2. {அ,இ,எ} + ன்று

அன்று, இன்று, என்று

3. {அ, இ, எ} + {-ங்ஙனம், -ங்கனம்}

அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம், அங்கனம், இங்கனம்,எங்கனம்

4. (பொழுது, போது)

4.1. {அ,இ,எ} + {பொழுது, போது}

அப்பொழுது, இப்பொழுது, எப்பொழுது, அப்போது, இப்போது, எப்போது

4.2. தன்+ {பொழுது, போது}

தற்பொழுது, தற்போது

5. படி

5.1. {அ,இ,எ} +படி

அப்படி, இப்படி, எப்படி

5.2. பெ.அ.+படி

மறு+படி > மறுபடி

5.3. 'செய்த' பெ.எ.+படி

கண்ட+படி > கண்டபடி

5.4. பெ.+'செய்த' பெ.எ.+படி

மனம்+போன+படி > மனம்போனபடி

5.5. பெ.+இல்+'செய்த'+பெ.எ. படி

வாய்+இல்+வந்த+படி > வாயில்வந்தபடி

5.6. பெ.+உக்கு+'செய்த' பெ.எ.+படி

வாய்+உக்கு+வந்த+படி > வாய்க்கு வந்தபடி

6. ஆறு

6.1. {அ,இ,எ} +ஆறு

அ+ஆறு > அவ்வாறு

இ+ஆறு > இவ்வாறு

எ+ஆறு > எவ்வாறு

6.2. பெ+'செய்யும்' பெ.எ.+ஆறு

பின்+வரும்+ஆறு > பின்வருமாறு

7. {அ,இ} +இடம்

அவ்விடம், இவ்விடம்

8. இ+நேரம்

இந்நேரம்

9. அ+பால்

அப்பால்

10. அ+புறம்

அப்புறம்

11. அ+வண்ணம்

அவ்வண்ணம்

மேற்கண்ட வினையடைகள் இடத்தையோ காலத்தையோ முறையையோ குறித்து நின்று வினையை விளக்கி வினையடைகளாய்ச் செயல்படுகின்றன. ஆனால் எல்லா இடம் குறித்த சொற்களும் காலம் குறித்த சொற்களும் முறை குறித்த சொற்களும் வினையடைகளாய்ச் செயற்படுவதில்லை. எடுத்துக்காட்டாக இடம், பொழுது, நேரம் என்பன வினையடைகளாகா; இவை அடிப்படையில் பெயர்களாகும். இவை அ, இ, எ என்ற சுட்டு-வினா கட்டுருபன்களை ஏற்கும்போது திசைப்பொருளைப் பெற்று வினையடைகளாய்ச் செயலாக்கம் பெறுகின்றன. தற்போது, தற்பொழுது, மறுபடி என்பன பொருண்மை அடிப்படையில் நிலையாக்கம் பெற்ற சொற்களாகும்; கண்டபடி, மனம்போனபடி, வாயில்வந்தபடி, வாய்க்குவந்தபடி என்பன பொருண்மை அடிப்படையில் நிலையாக்கம் பெற்ற தொடர்ச்சொற்களாகும்.

சுட்டு-வினா கட்டுருபன்களான அ, இ, எ என்பன *ங்கு, ன்று, ங்ஙனம், ங்கனம்* என்ற கட்டுருபன்களுடன் சேர்ந்தோ *இடம், பொழுது, போது, படி, ஆறு, நேரம், பால், புறம்* என்ற பெயர்/இடை சொற்களுடன் சேர்ந்தோ வினையடையாக்கம் செய்கின்றன. இவற்றில் *-ங்கு, இடம்* என்பன இடப் பொருளையும் *-ன்று, பொழுது, போது, நேரம்* என்பன காலப்பொருளையும் *ங்ஙனம், ங்கனம், படி, ஆறு, வண்ணம்* என்பன முறைப்பொருளையும் தரும். *பால், புறம்* என்பன இடப்பொருளையும் காலப்பொருளையும் தரும். இவ்வினையடைகளின் இரண்டாவது வரும் கட்டுருபன்கள்/சொற்கள் எல்லாம் மூன்று சுட்டு-வினா கட்டுருபனுடன் சேர்ந்து வினையடையாக்கம் செய்வதாய்த் தெரியவில்லை. *-ங்கு, -ன்று, ங்ஙனம், ங்கனம், பொழுது, போது, படி, ஆறு* என்பன அ, இ, எ என்ற மூன்று கட்டுருபன்களுடனும் சேர்ந்து வினையடையாக்கம் செய்யும். ஆனால் இடம் என்பது அ, இ என்ற சுட்டு கட்டுருபன்களோடு மட்டும் சேர்ந்து வினையடைகளை ஆக்கும் என்றும் நேரம் என்பது இ என்ற அண்மைச்சுட்டுக் கட்டுருபனுடன் மட்டும் சேர்ந்து வினையடையைத் தரும் என்றும் பால், புறம், வண்ணம்

என்பன அ என்ற சேய்மைச் சுட்டுக் கட்டுருபனுடன் மட்டும் சேர்ந்து வினையடைகளைத் தரும் என்றும் கிரியா அகராதியின் தரவுகள் மூலம் தெரிகிறது. அவ்விடம், இவ்விடம், எவ்விடம், அந்நேரம், இந்நேரம், எந்நேரம், அப்பால், இப்பால், எப்பால், அப்புறம், இப்புறம், எப்புறம், அவ்வண்ணம், இவ்வண்ணம், எவ்வண்ணம் என்று இடம், நேரம், பால், புறம், வண்ணம் என்பன மூன்று சுட்டுவினா கட்டுருபன்களுடன் சேர்ந்து வரலாம் என்றாலும் இவ்விடம், அவ்விடம், இந்நேரம், அப்பால், அப்புறம், அவ்வண்ணம் என்பவை தான் பொருண்மை அடிப்படையில் சிறிது மாற்றம் பெற்றுப் பொருண்மை நிலையாக்கம் அடைந்து சொல்நிலையாக்கம் பெற்ற சொற்களாகக் கருதப்பெற்று அகராதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது. கிரியாவில் தரப்படாத அச்சமயம், இச்சமயம், எச்சமயம் என்பனவும் வினையடைகளாக வரத்தகுதி யுள்ளவை. இங்கு நமது கேள்வி பொருண்மை நிலையாக்கத்தை பெரிதுபடுத்தாமல் வடிவாக்கத்தை மட்டும் கருத்திற்கொண்டு சுட்டு-வினா கட்டு உருபன்களுடன் ஒரு அடைபட்ட குழுமத்திற்படும் தனிமங்கள் (உருபன்கள்) வினையடைகளை ஆக்குவதை ஆக்கமாகக் கருத வேண்டுமா, அல்லது பொருண்மை அடிப்படையில் நிலையாக்கம் பெற்றுவிட்டமையாலும் ஆக்கச் சொற்கள் பட்டியலிடத் தகுந்த எண்ணிக்கையிற்படும் என்ற காரணத்தாலும் ஆக்கங்களாய்க் கருதப் பெறாமல் அகராதிப்படுத்தப்பட்ட, பகுத்தறியத் தேவையில்லாத தனிநிலைச் சொல்லன்களாகக் கொள்ள வேண்டுமா என்பது தான். ஒரு அடைபட்ட குழுமத்திற்படும் தனிமங்களின் சேர்க்கையால் விளையும் ஆக்கங்களை விளைவாக்கமாய்க் கொள்ள இயலாவிட்டாலும், ஒரு சொல்லாக்க விதியிற்படும் ஆக்கங்களாய்க் கொள்வதால் நாம் இவற்றிற்கு இடையே காணப்படும் வடிவ மற்றும் பொருண்மை அடிப்படையிலான தொடர்புகளை வெளிப்படுத்த இயலும். வடிவாக்கத்தின்போது தற்போக்குத்தனமான பொருண்மை யாக்கத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று

தோன்றுகின்றது. தற்போக்குத்தனமான பொருண்மையாக்கம் அகராதியில் பட்டியலிடப்படுவதற்கு வழிவகுக்கும் என்பது அகராதி அடிப்படையான விதியாகும்.

9.5.1.1.2. எண்ணுப் பெயரடை ஒரு அடிப்படையிலான வினையடைகள்

இதன் கீழ் வரும் வினையடைகளைப் பின்வருமாறு பகுக்கலாம்:

(1) ஒரு+ {வேளை, கால், தடவை, மாதிரி, சிறிது}

ஒருவேளை, ஒருகால், ஒருதடவை, ஒருமாதிரி, ஒருசிறிது

(2) அளவைப்பெயர்+உக்கு+ஒரு+தரம்

அடி+உக்கு+ஒரு+தரம் > அடிக்கு ஒரு தரம்

சற்றை+உக்கு+ஒரு+தரம் > சற்றைக்கொருதரம்

ஒரு என்ற எண்ணுப் பெயரடை ஒரு அடைபட்ட குழுமத்திற்படும் சொற்களான வேளை, கால், தடவை, தரம், மாதிரி, சிறிது என்பனவற்றோடு சேர்ந்து வினையடையாக வரும் கூட்டுச்சொற்களை உருவாக்குகின்றது. மேற்சொன்ன குழுமத்திற்படும் சொற்களில் கால் என்ற இடைச்சொல் தவிர மற்றவையெல்லாம் பெயராகச் செயற்படவல்லன. சிறிது தற்போக்குப் பொருண்மை நிலையாக்கத்தால் வினையடையாகவும் செயற்பாடு செய்யும்; தடவை, தரம், மாதிரி என்பன -ஆக என்ற ஒட்டு பெற்று வினையடையாகச் செயற்பட வல்லன. ஒருவேளை போன்ற கூட்டாக்கங்களில் ஒரு -வை வினையடையாக்கியாகக் கொள்ள இயலாது. ஒரு என்பது வேளை, கால், மாதிரி, சிறிது என்ற சொற்களுடன் சேர்ந்து கூட்டாக்கம் மூலம் புதிய பொருண்மையாக்கம் செய்கிறது. இவ்வாக்கம் சீராக இல்லாததாலும் இக்கூட்டுகள் பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் பெற்றுவிட்டபடியால் இவற்றைச் சொல்லாக்க விதியால் தருவிக்கத் தேவையில்லை; அகராதியில் பட்டியலிட்டால் போதுமானது.

ஒருமுறை, ஒரு கால், ஒரு தடவை என்பன 'தடவை' என்ற பொருளில் ஒருபொருள் பன்மொழிகளாகும். ஆனால் ஒருகால் என்பது 'ஒரு வேளை' என்ற தற்போக்குப் பொருளையும் தரும். பலமுறை, பல தடவை என்ற கிரியாவில் தரப்படாத சொற்சேர்க்கைகளும் ஆக்கப் பெறலாம். எனவே குறைந்தபட்சம் ஒரு, பல, இரு என்ற எண்ணுப் பெயரடைகள் முறை, தடவை என்ற சொற்களுடன் சேர்ந்து வருவதுரைக்கத்தக்கப் பொருள் தருவதால் இக்கூட்டாக்கங்களை விதியாக்கங்களாய்அகராதியில் தரலாம்.

9.5.1.1.3. முன், பின் அடிப்படையிலான வினையடைகள்

இதன் கீழ்வரும் வினையடைகளைப் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

1. {முன், பின்} +{ -அர், -ஆல், -ஆடி, -பு}

முன்னர், முன்னால், முன்னாடி, முன்பு, பின்னர், பின்னால், பின்னாடி, பின்பு

2. பிற்+{ பாடு, அகு} (பிற் என்பதை பின் என்பதன் மாற்றுருபனாகக் கொள்ளலாம்.)

பிற்பாடு, பிறகு

முன்னர், முன்னால், முன்னாடி, முன்பு மற்றும் பின்னர், பின்னால், பின்னாடி, பின்பு, பிற்பாடு, பிறகு என்ற வினையடைகள் எல்லாம் முறையே முன், பின் என்ற பெயர்ச்சொற்களிலிருந்து ஆக்கப்பெற்றவையாகும். முன், பின் என்ற இரு அடிச் சொற்களுமே பெயராகவும் இடையாகவும் வினையடையாகவும் செயற்பாடு செய்யவல்லன. பின்னர், பின்பு, பிறகு, பிற்பாடு என்பனவும் முன்பு, முன்னால், முன்னர், பின்னால், முன்னாடி, பின்னாடி என்பனவும் வினையடையாகவும் பின்னுருபாகவும் செயற்பாடு செய்யும். மேற்கூறிய செய்திகளிலிருந்து -அர், -ஆல், -ஆடி, -பு, -அகு என்பன வினையடையாக்க ஒட்டுகள் அல்ல என்பது தெளிவு. செயற்பாடு அடிப்படையில் தான்

இவ்வாக்கச் சொற்கள் வினையடையாக்கம் பெறுகின்றன. மேலும் இச்சொற்கள் ஒரு அடைபட்ட குழுமத்திற்படும் தனிமங்களில் சேர்க்கையால் ஆக்கப்பெறுவதாலும் இக்குழுவிற்படும் தனிமங்கள் ஒருசிலவே என்பதாலும் இவற்றின் ஆக்கங்களைச் சொல்லாக்க விதிகளால் விளக்கத்தேவையில்லை என்று தோன்றுகின்றது. அகராதியிலும் இவ்வாக்கங்களுக்குச் சொல்லாக்க விதிகள் தராமல் சொல்நிலையாக்கம் பெற்ற சொற்களாய்ப் பட்டியலிடுவது தான் உகந்ததாய்ப் படுகின்றது. இவ்வாக்கச் சொற்கள் முன், பின் என்ற அடிகளிலிருந்து ஆக்கப்பெற்றவை என்ற செய்தியை அகராதியில் தர வேண்டுமானால் சேய்மைக்குறிப்பு (cross reference) தரலாம்.

9.5.1.1.4. –ஏ என்ற குறைச்சொல்லால் முடியும் வினையடைகள்

1. இடப்பொருள் தரும் சொல்+ஏ

1.1. சுட்டு-வினா இட வி.அ.+ஏ

1.1.1. {அங்கு, இங்கு, எங்கு} +ஏ

அங்கே, இங்கே, எங்கே

1.1.2. இரட்டிப்பு வி.அ.+ஏ

அங்கங்கு+ஏ> அங்கங்கே

(அங்கு+அங்கு > அங்கங்கு; அங்கங்கு இரட்டிப்பால் ஆக்கப்பெற்றதாகும்)

1.2. முறைவினையடை+ஏ

அப்படி+ஏ > அப்படியே

1.3. இடப்பொருள் தரும் பெயர்/இடைச்சொல்+ஏ

{மேல், உயர், கீழ், கிட்ட, அருகு, நேர், குறுக்கு, வெளி} +ஏ

மேலே, உயரே, கீழே, கிட்டே, அருகே, நேரே, குறுக்கே, வெளியே

1.4. இட/கால பொருள் தரும் பெயர்/ இடைசொல்

{முன், பின், உடன்} +ஏ

முன்னே, பின்னே, உடனே

2. மேற்சொன்னவற்றில் வராத பெயர்/இடைசொல்+ஏ

{முறை, ஒருங்கு, செவ்வன், தனி, அற, வெறுமன்} +ஏ

முறையே, ஒருங்கே, செவ்வனே, தனியே, அறவே, வெறுமனே

3. 'செய்து' வி.எ.+ஏ

தெரிந்து+ஏ> தெரிந்தே

முன்கூட்டி+ஏ > முன்கூட்டியே

4. ஏற்கென/ஏற்கன+ஏ

ஏற்கெனவே, ஏற்கனவே

-ஏ என்பது ஒரு வினையடையாக்க ஒட்டா என்பதுதான் கேள்வி. ஏ என்ற குறைச்சொல் பொதுவாக அதை ஏற்றுவரும் சொல்லின் பொருளுக்கு ஒருவித அழுத்தம் தருவதாய் அமையும். இங்கு -ஏ ஏற்று வரும் அடிகளை ஒரு அடைபட்ட குழுமத்திற்படும் தனிமங்களாகக் கொண்டால், ஏ-வை பயன்பாட்டு அடிப்படையில் வினையடையாக்க ஒட்டாகக் கருத இயலுமா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டிவருகிறது. அங்கு, இங்கு, எங்கு என்பனவும் -ஏ ஏற்றுவரும் அங்கே, இங்கே, எங்கே என்பனவும், முன், பின் என்பனவும் ஏ-ஏற்று வரும் முன்னே, பின்னே என்பனவும் பயன்பாட்டு அடிப்படையில் வேறுபட்டாலும் இவ்விரு இணைக் குழுமங்களும் வினையடைகளாகும். ஆனால் 1.3, 2 இவற்றில் வரும் அடிச்சொற்கள் -ஏ ஏற்றாலே வினையடைப்பொருள் தந்து வினையடையாகச் செயற்படும். எனவே இந்த இரு பிரிவுகளிற்படும் அடிச்சொற்களை ஒரு உட்குழுமத்திற்படும் தனிமங்களாகக் கொண்டு அவை ஏ ஏற்கும்போது வினையடையாக்கம் பெறும் என்ற சொல்லாக்க விதியை அகராதியில் தரவேண்டுமா அல்லது ஆக்க வினையடைகளை

சொல்நிலையாக்கம் பெற்ற தனிநிலைச் சொற்களாகக் கருதி பட்டியலிடவேண்டுமா என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். கிரியாவில் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்பன பெயர்களாகத் தரப்பட்டாலும் இவற்றின் -ஏ ஏற்ற வினையடை வடிவங்களான வடக்கே, தெற்கே, கிழக்கே, மேற்கே என்பன தரப்படவில்லை. இவற்றை ஆக்கத்தால் பெற வேண்டுமானால் -ஏ என்பதை வினையடை ஒட்டாகக் கொண்டு வினையடையாக்க விதி தரப்படவேண்டும்.

9.5.1.1.5. –உம் என்ற குறைச்சொல்லில் முடியும் வினையடைகள்

இதில் வரும் வினையடைகளைப் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

1. இடப்பொருள் தரும் சொல் அடிப்படையிலான வினையடைகள்

   1.1. {எங்கு, எங்கண்} +உம்

   எங்கும், எங்கணும்

   1.2. பெ.+இல்+உம்

   (சுற்று+இல்)+உம்>சுற்றிலும்

   (முற்று+இல்)+உம்> முற்றிலும்

   (நெடுகு+இல்)+உம்> நெடுகிலும்

   1.3. ஒலிப்பியைபு அடிப்படையிலான கூட்டு வினையடைகள்

   1.3.1. ($பெ_1$+உம்)+($பெ_2$+உம்)

   உள்ளும் புறமும்

   1.3.2. ($பெ_1$+$பெ_1$)+உம்

   மேல்+மேல்+உம்> மேன்மேலும்

   1.3.3. ($பெ_1$+$பெ_2$)+உம்

   சுற்று+முற்று+உம்> சுற்றுமுற்றும்

2. காலப்பொருள் தரும் சொல் அடிப்படையிலான வினையடைகள்

2.1. (தினம், என்று, இன், இன்னம்)+உம்

தினமும், என்றும், இன்னும், இன்னமும்

2.2. (அனு+தினம்)+உம்>அனுதினமும்

(ஒரு+கால்)+உம்>ஒருகாலும்

(இது+காற்)+உம்>இதுகாறும்

(அது+காற்)+உம்>அதுகாறும்

3. அளவுப்பொருள் தரும் சொல் அடிப்படையிலான வினையடைகள்

3.1. (பெரிது, முழுது, முற்று,சற்று, மேல், மிக)+உம்

பெரிதும், முழுதும், முற்றும், சற்றும்,மேலும்,மிகவும்

3.2. பெ+இல்+உம்

முற்று+இல்+உம்>முற்றிலும்

4. வினையெச்சம் அடிப்படையிலான வினையடைகள்

4.1. 'செய்து' வி.எ.+உம்

மீண்டு+உம்>மீண்டும்

4.2. ஒலிப்பியைபு அடிப்படையிலான கூட்டு வினையடைகள்

4.2.1. ('செய்து' வி.எ.+உம்)+ (செய்து' வி.எ.+உம்)

போயும் போயும்

4.2.2. (செய்து' வி.எ.+உம்)+(எம.வி.எ+உம்)

(பட்டு+உம்) (படாமல்+உம்)>பட்டும்படாமலும்

5. பிற

மெய்+ஆல்+உம்>மெய்யாலும்

ஏது+ஏன்+உம்>ஏதேனும்

கூடிய+மட்டு+உம் > கூடிய மட்டும்

எதற்கு+எடுத்தால்+உம் > எதற்கெடுத்தாலும்

உம் பலவித செயற்பாடுகள் உடையது; குறிப்பாக இது இணைப்பானாகவும், தேற்றக்குறியாகவும், செயற்பாடு செய்யவல்லது. மேற்கண்ட வினையடைகளில் வரும் -உம்-ஐ ஒரு வினையடையாக்க ஒட்டு என்று கூற இயலுமா என்பதுதான் நமது கேள்வி. எங்கு, எங்கண் என்பன ஏற்கனவே வினையடைகள் தான். -உம் இவற்றில் சேர்ந்து 'முழுவதும்' என்ற பொருளைத் தந்து சொல்நிலையாக்கம் பெறும். தினம் பெயராகவும் வினையடையாகவும் செயற்பாடு செய்யவல்லது; என்று, ஒருகால், மிக என்பன வினையடைகள். இன்னம், இன், இதுகாற், அதுகாற் என்பன -உம் இன்றி தனித்து வராது; பெரிது, முழுது, முற்று என்பன பெயர்கள்; மேல் பெயராகவும், இடைச்சொல்லாகவும் செயற்படவல்லது; இவை -உம் உடன் சேர்ந்து ஒருவித பொருண்மை மாற்றம் பெற்று வினையடையாக நிலையாக்கம் பெற்றுள்ளன. பிற வினையடைகளையும் -உம் சேர்ந்து பொருண்மை மாற்றம் அடைந்து சொல் நிலையாக்கம் பெற்ற சொற்களாய்த்தான் கொள்ள இயலும். -உம் ஒரு அடைபட்ட குழுமத்திற்படும் அலகுகளுடன் சேர்ந்து புதிய சொற்களை உருவாக்கினாலும் இச்சொற்கள் பொருண்மை அடிப்படையில் நிலையாக்கம் பெற்று விட்டபடியாலும், உம் இவ்வலகுகளுடன் சேர்வதை வினையடைச் செயற்பாடாக்கம் என்று கூற இயலாததாலும் -உம் என்பதை ஒரு வினையடை ஆக்கியாகக் கொள்ள இயலாது. -உம் ஒரு அடைபட்ட குழுவிற்படும் சொற்களுடன் சேர்ந்து புதிய சொற்களை ஆக்கும் என்ற சொல்லாக்க விதியைத் தர இயலுமென்றாலும், உம்-ஐ வினையடையாக்கியாகக் கருத இயலாது.

9.5.1.1.6. வரைஎன முடியும் வினையடைகள்

வரை என முடியும் வினையடைகளைப் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

1. சுட்டுப்பெயர்+வரை

இதுவரை

2. சுட்டுப்பெயர்+நாள்+வரை

இதுநாள்வரை

3. 'செய்ய' பெ.எ.+வரை

கூடிய வரை

வரை என்பது கால-இட இடைச்சொல்லாகும். இது இட மற்றும் கால எல்லையைக் குறிக்க வரும். இதுவரை, இதுநாள் வரை என்பன ஒருவிதத் தற்போக்குப் பொருண்மை பெற்றதன் காரணமாய்ப் பொருண்மை அடிப்படையில் சொல் நிலையாக்கம் பெற்ற சொற்களாய்க் கருதப்பட்டு கிரியா அகராதியில் தரப்பட்டுள்ளன. கூடியவரை என்பதும் பொருண்மை அடிப்படையில் சொல் நிலையாக்கம் பெற்றதாகும்; இயல், முடி என்ற வினைகளின் இறந்த காலப் பெயரெச்சவடிவுகளான இயன்ற, முடிந்த என்பதும் வரை என்பதுடன் சேர்ந்து ஆக்கம் செய்யும். இயன்றவரை, முடிந்தவரை என்ற கூட்டுகளும் கூடியவரை என்பதுடன் ஒருபொருள் பன்மொழியத் தொடர்புடையது; இதனுடன் கூடியமட்டும், இயன்றமட்டும், முடிந்தமட்டும் என்ற சொற்களையும் சேர்க்கலாம். எனவே அடைபட்ட குழுவிற்படும் கூடிய, இயன்ற, முடிந்த என்ற இறந்தகாலப் பெயரெச்சங்கள் வரை, மட்டும் என்ற எல்லையைக் குறிக்கும் இடைச்சொற்களுடன் சேர்ந்து ஒருவிதக் கூட்டாக்கம் செய்யும் என்று கூறலாம். இவ்வாக்கங்கள் அகராதியில் ஆக்க விதியால் குறிப்பிடப்பட வேண்டுமா என்பதுதான் நமது கேள்வி; இவ்வாக்கங்கள் குறைந்த விளைவாக்கமுள்ளனவாதலால் சொல்லாக்க விதி சிக்கனமானதல்ல; எனவே வரை இறுதிச் சொற்களை அகராதியில் பகாநிலை/தனிநிலைச் சொற்களாய்ப் பட்டியலிட்டாற் போதுமானது என்று தோன்றுகின்றது.

9.5.1.1.7. எல்லாம் என முடியும் வினையடைகள்

இக்குழுமத்தில் அடங்கும் வினையடைகளைப்

பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

1. 'செய்தது' என்ற வாய்பாட்டு வினைமுற்று வடிவம் +உக்கு+ எல்லாம்

எடுத்தது+ உக்கு+எல்லாம் > எடுத்ததற்கெல்லாம்

தொட்டது+உக்கு+எல்லாம் > தொட்டதற்கெல்லாம்

எடுத்தது, தொட்டது என்பன வினையடி+ இ.கா.+ அது என்ற அமைப்பில் வரும் பெயராக்கங்கள் ஆகும்; -உக்கு இரண்டாம் வேற்றுமை உருபாகும்; எல்லாம் என்பது 'அனைத்தும்' என்ற பொருளில் வரும் பெயராகும். எடுத்ததற்கெல்லாம் தொட்டதற்கெல்லாம் என்பன ஒரு பொருள் பன்மொழிகளாகும்; இவை 'எல்லாவற்றிற்கும்', 'அனைத்துக்கும்' என்ற பொருள் தரும். இதற்கெல்லாம், அதற்கெல்லாம் என்பனவற்றை இவற்றின் மாற்றுச் சொற்களாகக் கொள்ளலாம். எல்லாம் ஒரு வினையடையாக்கியல்ல; எடுத்ததற்கு, தொட்டதற்கு என்ற சொற்களுடன் எல்லாம் சேர்ந்து தற்போக்குப் பொருண்மையாக்கம் பெற்று கூட்டுச் சொற்களாக நிலையாக்கம் பெறும். இக்கூட்டாக்கம் குறை விளைவாக்கமுள்ளதாகையாலும் பொருண்மை அடிப்படையில் நிலையாக்கம் பெற்று விட்டதாலும் சொல்லாக்க விதியால் விளக்கப்பட தேவையில்லை; அகராதியில் பட்டியலிட்டால் போதுமானது.

9.5.1.1.8. மேல் என முடியும் வினையடைகள்

இக்குழுமத்தில் வரும் வினையடைகளைப் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்:

{இனி, கை} +மேல்

இனிமேல், கைமேல்

இனி என்பது ஒரு வினையடையாகும். கை ஒரு பெயராகும்; மேல் ஒரு இடைச்சொல்லாகும். இவற்றால் ஆக்கப்பட்ட இனிமேல், கைமேல் என்ற கூட்டுகள் வினையடைகளானாலும் மேல் வினையாக்கியல்ல. இவ்வாக்கங்களைச் சொல்லாக்க விதியால் விளக்கத்

தேவையில்லை; இவற்றை அகராதியில் பட்டியலிட்டாற் போதுமானது.

9.5.1.1.9. பெயர் இரட்டிப்பு வினையடைகள்

இதன் கண்படும் வினையடைகளைப் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்:

1. எதிரொலிச்சொல் +பெயர்

அக்கம்+பக்கம்> அக்கம்பக்கம்

2. இரண்டாம் வேற்றுமை -உக்கு இடைவர பெயர் இரட்டித்தல்

அடி+உக்கு+அடி > அடிக்கடி

அப்போதை+உக்கு+அப்போது
> அப்போதைக்கப்போது

உடன்+உக்கு+உடன்> உடனுக்குடன்

உள்+உக்கு+உள்> உள்ளுக்குள்

ஏறு+உக்கு+மாறு > ஏறுக்குமாறு

நேர்+உக்கு+நேர்>நேருக்குநேர்

உக்கு இடையில் வந்து பெயர் இரட்டிக்கும் வகையிலான வினையடையாக்கம் விளைவாக்கமுள்ளது என்று தோன்றுகின்றது. (எ.கா. பதிலுக்குப் பதில், வார்த்தைக்கு வார்த்தை, நிமிஷத்திற்கு நிமிஷம், பழிக்குப் பழி).

9.5.1.1.10. இரட்டிப்பு வினையடை

கீழ்வரும் சொல் மட்டுமே இதன் கண் வரும்.

ஆங்கு+ஆங்கு> ஆங்காங்கு

9.5.1.2. வேற்றுமை வினையடைகள்

வேற்றுமை வினையடைகளை இறுதியில் வரும் வேற்றுமை உருபு அடிப்படையில் பின்வருமாறு வகைபாடு செய்யலாம்:

1. -உக்கு இறுதியில் வரும் வினையடைகள்

2. -ஒடு இறுதியில் வரும் வினையடைகள்

3. -உடன் இறுதியில் வரும் வினையடைகள்

4. -இல் இறுதியில் வரும் வினையடைகள்

5. -ஆல் இறுதியில் வரும் வினையடைகள்

9.5.1.2.1. உக்கு இறுதியில் வரும் வினையடைகள்

கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள இதன் கண் வரும் வினையடைகளைப் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

1. பெ.+உக்கு

1.1. அப்போதை+உக்கு > அப்போதைக்கு, அம்மட்டு+உக்கு > அம்மட்டுக்கு, அன்றை+உக்கு> அன்றைக்கு, இப்போதை+உக்கு > இப்போதைக்கு, இன்றை+உக்கு> இன்றைக்கு

1.2. உள்+உக்கு > உள்ளுக்கு, ஒப்பு+உக்கு > ஒப்புக்கு, கடன்+உக்கு > கடனுக்கு, சகட்டு+உக்கு > சகட்டுக்கு, தர்மம்+உக்கு > தர்மத்துக்கு, நாளை+உக்கு > நாளைக்கு, பாட்டு+உக்கு > பாட்டிற்கு, பாடு+உக்கு > பாட்டுக்கு, பெயர்+உக்கு > பெயருக்கு, பேச்சு+உக்கு > பேச்சுக்கு, முன்+உக்கு > முன்னுக்கு, மேல்+உக்கு > மேலுக்கு

2. ($பெ_1$+$பெ_2$)+உக்கு

(சகட்டு+மேனி)+உக்கு > சகட்டுமேனிக்கு

(தன்+சமயம்)+உக்கு > தற்சமயத்துக்கு

(தன்+போதை)+உக்கு > தற்போதைக்கு

(பெயர்+அளவு)+உக்கு > பெயரளவுக்கு

(பேச்சு+துணை)+உக்கு > பேச்சுத்துணைக்கு

3. (பெ.அ.+பெ.)+உக்கு

(ஓர்+அளவு)+உக்கு > ஓரளவுக்கு

(ஒரு+பேச்சு)+உக்கு > ஒரு பேச்சுக்கு

4. ('செய்த' பெ.எ.+பெ)+உக்கு

(கெட்ட+கேடு)+உக்கு > கெட்டகேட்டுக்கு

(கண்ட+மேனி)+உக்கு >கண்டமேனிக்கு

5. ('செய்யா' பெ.எ.+பெ)+உக்கு

(போதா+குறை)+உக்கு > போதாக்குறைக்கு

-உக்கு பெயர்களுடன் திரிபுற்று பெறுபவர், இலக்கு, நோக்கம்,அனுபவிப்பவர், காலக்கூறு, விகிதம், வினியோகம், ஒப்புமை ஆகிய செயற்பாடுகளை வெளிப்படுத்தும்.

எ.கா.

அவன் அவருக்குப் பணம் கொடுத்தான் (பெறுபவர்)

அவர் சென்னைக்குச் சென்றார் (இலக்கு)

குழந்தைக்குப் பசிகிறது (அனுபவிப்பவர்)

பணத்திற்குப் பணிவிடை செய்கிறான் (நோக்கம்)

கண்ணன் பத்து மணிக்கு வருவான் (காலக்கூறு)

மேற்கண்ட கிரியாவின் பட்டியலின்படி -உக்கு வேற்றுமைத் திரிபாக்கச் சொற்கள் தற்போக்குப் பொருள் பெற்றுப் பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் அடைந்து வினை அடையாக மாறியுள்ளன. -உக்கு என்பதை வினையடையாக்கியாகக் கொள்ள இயலாது. ஆனால் -உக்கு திரிபுள்ள பெயர்கள், கூட்டுப்பெயர்கள் பெயர்த்தொடர்கள் ஆகியன பொருண்மை அடிப்படையில் வினையடைகளாகச் சொல்நிலையாக்கம் பெறலாம். உக்கு வினையுடன் பலவிதமான செயற்பாட்டின் அடிப்படையில் தொடர்பு கொண்டுள்ளதால் உக்கு-ஆல் திரிபுற்ற பெயர்கள் வினையடையாகச் செயல்மாற்றம் அடைவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. எனவே -உக்கு-ஆல் திரிபுற்ற சொற்கள் வினையடையாக்கத்திற்கான ஆற்றலுள்ள ஆதாரம் எனலாம்.

9.5.1.2.2. ஓடு இறுதியில் வரும் வினையடைகள்

கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள ஓடு இறுதியில் வரும் வினையடைகளைக் கீழ்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

1. பெ.+ஓடு

அடி+ஓடு > அடியோடு, இரவு+ஓடு > இரவோடு, கட்டு+ஓடு > கட்டோடு, கூண்டு+ஓடு > கூண்டோடு, கை+ஓடு > கையோடு, பூண்டு+ஓடு > பூண்டோடு

2. (பெ.அ.+பெ)+ஓடு

(முழு+மனம்)+ஓடு > முழுமனத்தோடு

-ஓடு என்பது பெயருடன் சேர்ந்து வினையுடன் உடனிகழ்ச்சி வேற்றுமை உறவை வெளிப்படுத்தும் ஒட்டாகும்.

எ.கா.

அவன் தன் மனைவியோடு சென்றான்

அவன் பேனாவோடு ஒரு புத்தகமும் வாங்கினான்

இது சேர்க்கை, இடம், திசை, உட்படுகை, கட்டுத்திட்டம் ஆகிய பொருள்களை வெளிப்படுத்த வரும்.

1. சேர்க்கைப்பொருள்:

எ.கா.

ராமு நான்கு தோசையோடு மூன்று சப்பாத்தியும் சாப்பிட்டான்

2. இடப்பொருள்:

எ.கா.

ராமு தெருவோடு நடந்தான்

3. உட்படுகைப்பொருள்:

எ.கா.

சித்திரை மாதத்தோடு தமிழ் ஆண்டு தொடங்குகிறது

4. கட்டுத்திட்டம்:

எ.கா.

இராமனுக்கு ஒரு குழந்தையோடு சரி

கிரியாவிலிருந்து எடுக்கப்பட்ட ஓடு -வால் திரிபுற்ற பெயர்கள் தற்போக்குப்பொருள் பெற்று பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் அடைந்து வினையடைகளாக அகராதிப்படுத்தப்பட்டுள்ளன. ஓடு-வும் வினையோடு நேரடி உறவு கொள்வதால் இதுவரும் பெயர்கள், பெயர்க் கூட்டுகள், பெயர்த்தொடர்கள் என்பன பொருண்மைத் தற்போக்கால் வினையடையாக மாற்றம் பெறுவது தடுக்க இயலாதது. எனவே -ஓடு திரிபாக்கங்களும் வினையடைகளுக்கான ஆற்றலுள்ள ஆதாரம் எனலாம்.

9.5.1.2.3. உடன் இறுதியில் வரும் வினையடைகள்

கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள உடன் இறுதியில் வரும் வினையடைகளைப் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

1. பெ.+பெ.+உடன்

மேளம்+தாளம்+உடன்> மேளதாளத்துடன்

2. பெ.அ.+பெ.+உடன்

முழு+மூச்சு+உடன்> முழுமூச்சுடன்

-உடன் என்ற வேற்றுமை உருபும் -ஓடு என்ற உருபைப் போன்று வினையுடன் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்.

எ.கா.

அவள் தன் கணவனுடன் ஊருக்குச் சென்றாள்

அவன் புத்தகத்துடன் பென்சிலும் வாங்கினான்

கிரியாவிலிருந்து எடுக்கப்பெற்ற உடன்-ஆல் திரிபுற்றபெயர்கள் தற்போக்குப் பொருண்மை பெற்று பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் அடைந்து பெயரடைகளாய் அகராதிப்படுத்தப்பட்டுள்ளன.

-உடன் திரிபாக்கங்களையும் வினையடைகளுக்கான ஆற்றலுள்ள ஆதாரம் என்று கூறலாம்.

9.5.1.2.4. –இல் இறுதியில் வரும் வினையடை

இல் இறுதியில் வரும் வினையடைகள் பல கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன. இல் ஈற்று வினையடைகளின் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

1. பெ.+இல்

அசப்பு+இல் > அசப்பில், அம்மட்டு+இல் > அம்மட்டில், அருகு+இல் > அருகில், எட்டம்+இல் > எட்டத்தில், எதிர்+இல் > எதிரில், ஒட்டு+இல் > ஒட்டில்,கணக்கு+இல் > கணக்கில், சடுதி+இல் > சடுதியில், சார்பு+இல் > சார்பில்,சமயம்+இல் > சமயத்தில், திட்டம்+இல் > திட்டத்தில், நேர்+இல் > நேரில், பாடு+இல் > பாட்டில், பெயர்+இல் > பெயரில், பேர்+இல்> பேரில், முதல்+இல்> முதலில், மொத்தம்+இல்> மொத்தத்தில், வலு+இல்> வலுவில், வெளி+இல் > வெளியல்

2. (பெ.$_1$+பெ$_2$)+இல்

(காலம்+கிரமம்)+இல் > காலக்கிரமத்தில், (கால்+அடி)+இல் > காலடியில், (காலம்+போக்கு)+இல் > காலப்போக்கில், (காற்று+வாக்கு)+இல் > காற்று வாக்கில், (சுழல்+முறை)+இல் > சுழல்முறையில், (துரிதம்+கதி)+இல்> துரிதகதியில், (நடு+வழி)+இல்> நடுவழியில், (நாள்+அடைவு)+இல் > நாளடைவில், (நூல்+இழை)+இல் > நூலிழையில், (பேச்சு+ வாக்கு) +இல்> பேச்சுவாக்கில், (நேர்+வாக்கு)+இல்> நேர்வாக்கில், (முன்+நிலை)+இல் > முன்னிலையில், (பெயர்+அளவு)+இல்> பெயரளவில், (மயிர்+இழை) +இல்> மயிரிழையில்

3. (பெ.அ+பெ.)+இல்

ஒரு+வகை+இல்> ஒருவகையில்

ஒரு+விதம்+இல்> ஒருவிதத்தில்

பெரும்+அளவு+இல் > பெருமளவில்

முழு+வீச்சு+இல்> முழுவீச்சில்

கூடுமான+வரை+இல்>கூடுமானவரையில்

4. (பெ.அ+ஏ+பெ)+இல்

(ஒரு+ஏ+மூச்சு)+இல்> ஒரே மூச்சில்

5. $பெ_1$+ஆம்+$பெ_1$+இல்

(காலம்+ஆம்+காலம்)+இல்> காலாகாலத்தில்

6. ($பெ_1$+ஆம்+$பெ_2$)+இல்

(நாள்+ஆம்+வட்டம்)+இல்> நாளாவட்டத்தில்

(குருடு+ஆம்+போக்கு)+இல்> குருட்டாம்போக்கில்

7. ('செய்த' பெ.எ.+பெ)+இல்

(எடுத்த+எடுப்பு)+இல்> எடுத்த எடுப்பில்

(கூடிய+விரைவு)+இல்> கூடிய விரைவில்

8. (பெ.எ.+'செய்த' பெ.எ.+பெ)+இல்

(நேரம்+கெட்ட+நேரம்)+இல்>நேரம்கெட்டநேரத்தில்

-இல் இட வேற்றுமை உருபாகும். இது பெயர்களுடன் திரிபுற்று வந்து வினையுடன் பின்வரும் உறவுகளை வெளிப்படுத்தும்:

1. காலத்திலும் வெளியிலும் இடப்பொருளைக் குறிப்பிடும்

2. வேறுசூழலில் வினைநோக்கை வெளிப்படுத்தும்

எ.கா.

வெளியில் இடம்:

ராமு நாற்காலியில் உட்கார்ந்தான்

காலத்தில் இடம்:

ராமு ஒரு வாரத்தில் வருவான்

காலத்தில் காலநீட்சி:

ராமு ஒருவாரத்தில் இந்தப் புத்தகத்தை படித்தான்

வினைநோக்கு:

ராமு ஆங்கிலத்தில் பேசினான்

இல் -ஆல் திரிபுற்ற பெயர்கள் தற்போக்குப் பொருள் பெற்று பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் அடைந்து வினையடைகளாக கிரியா அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ளன. -இல் வினையோடு நேரடி உறவு கொள்வதால் இது ஒட்டி வரும் பெயர்கள், கூட்டுப்பெயர்கள், பெயர்த்தொடர்கள் என்பன பொருண்மைத் தற்போக்கால் வினையடைகளாக மாற்றம் பெறுவது தடுக்க இயலாதது. எனவே -இல் திரிபாக்கங்களும் வினையடைகளுக்கான ஆற்றலுள்ள மூலாதாரம் எனலாம்.

9.5.1.2.5. ஆல் இறுதியில் வரும் வினையடைகள்

கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள ஆல் இறுதியில் வரும் வினையடைகளின் பகுப்பாய்வு கீழ்வருமாறு அமையும்:

1. பெ+ஆல்

பெயர்+ஆல் > பெயரால்

2. ($பெ_1$+$பெ_2$)+ஆல்

(ஓரம்+கண்)+ஆல்> ஓரக்கண்ணால்

(சந்தர்ப்பம்+வசம்)+ஆல்> சந்தர்ப்பவசத்தால்

ஆல் திரிபுற்ற பெயர்கள் கருவி, வழி, மூலப்பொருள், காரணம் ஆகிய செயற்பாடுகளை வெளிப்படுத்தும்.

அவன் கத்தியால் பழத்தை வெட்டினான். (கருவி)

அவள் தன் சொந்த அனுபவத்தால் பேசுகிறாள். (வழி)

அது மண்ணால் செய்த பொம்மை. (மூலப்பொருள்)

வெயிலால் துணி உலர்ந்தது. (காரணம்)

மேற்கண்ட கிரியாவின் பட்டியலின்படி -ஆல் வேற்றுமை திரிபாக்கச் சொற்கள் தற்போக்குப் பொருள் பெற்று பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் அடைந்து வினையடைகளாக மாறியுள்ளன. இம்மாற்ற வினையடையாக்கத்தை விளைவாக்கமாகக் கொள்ள இயலுமா என்பது தான் கேள்வி. ஆல் வேற்றுமை ஒட்டு பெற்ற பெயர்கள் தற்போக்குப் பொருண்மை பெற்று வினையடையாக மாறலாம் என்பதை மறுக்க இயலாது. வினைத்தொடருக்குள் வினையுடன் உறவுகொண்டு வரும் எந்த தனிமமும் பொருண்மைச் செயற்பாட்டு மாற்றத்தால் வினையடைகளாகும் தன்மையன என்பது பொதுவான விதியாகும்.

9.5.2. வினையெச்சத்தாலான வினையடைகள்

வினையெச்சங்கள் வினைகளின் அடையாக வரும் என்பதில் ஐயமில்லை. இவ்வினையெச்சங்கள் வினையடைகளாகக் கருதப்படவேண்டுமா என்ற கேள்விக்கான விடைகளை முன்னர் பார்த்தோம். வினையடைகளாகச் சொல்நிலையாக்கம் பெற்று அகராதிப்படுத்தப்பட்டுள்ள வினையெச்சத்தாலாகிய வினையடைகளைப் பின்வருமாறு மூன்றாகப் பாகுபாடு செய்யலாம்:

1. வினையெச்சம் பின்னொட்டாக வந்து ஆக்கப்பட்ட வினையடைகள்
2. வினையெச்சம் பின்னுருபாக வந்து ஆக்கப்பட்ட வினையடைகள்
3. வினையெச்ச வினையடைகள்

9.5.2.1. வினையெச்சம் பின்னொட்டாக வந்து ஆக்கப்பட்ட வினையடைகள்

இதன்கண் அடங்கும் வினையடைகளை பின்னொட்டாகச் செயற்பாடு செய்யும் வினையெச்சங்களின் அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தலாம்:

1. -ஆக பின்னொட்டிய வினையடைகள்

2. -என்று பின்னொட்டிய வினையடைகள்

3. -என பின்னொட்டிய வினையடைகள்

9.5.2.1.1. ஆக பின்னொட்டிய வினையடைகள்

ஆக என்பது ஆகு என்ற வினையின் 'செய்ய' வினையெச்ச வடிவாகும் என்றும் இது ஒரு ஒட்டாக வந்து வினையடையாக்கம் செய்யும் என்றும் முன்னர் பார்த்தோம். கிரியாவில் அகராதிப்படுத்தப்பட்ட வினையடைகள் அவற்றின் அமைப்பொழுங்கு அடிப்படையில் கீழே வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன.

1. தனிநிலைப்பெயர்+ஆக

அகஸ்மாத்தம்+ஆக>அகஸ்மாத்தாக, அகாரணம்+ ஆக> அகாரணமாக, அடி+ஆக> அடியாக, அப்பட்டம்+ஆக> அப்பட்டமாக, அமுக்கம்+ஆக >அமுக்கமாக, அநாதை+ஆக > அநாதையாக, அநேகம்+ஆக> அநேகமாக, அங்ஙனம்+ஆக > அங்கனமாக, அலட்சியம்+ஆக > அலட்சியமாக, அலாக்கு+ஆக > அலக்காக, அவ்வளவு+ஆக > அவ்வளவாக, அனாதை+ஆக > அனாதையாக, அனேகம்+ஆக > அனேகமாக, ஆணித்தரம்+ஆக > ஆணித்தரமாக, உருப்படி+ஆக > உருப்படியாக, எடுப்பு+ஆக > எடுப்பாக, ஏதேட்சை+ஆக > ஏதேட்சையாக, ஏக்கம்+ஆக> ஏக்கமாக, ஓடு+ஆக> ஓடாக, கட்டாயம்+ ஆக > கட்டாயமாக, கண்டிப்பு+ஆக > கண்டிப்பாக, கணிசம்+ஆக> கணிசமாக, கமுக்கம்+ஆக> கமுக்கமாக, குறிப்பு+ஆக> குறிப்பாக, கெட்டி+ஆக> கெட்டியாக, சகிதம்+ஆக > சகிதமாக, சடுதி+ஆக > சடுதியாக, சரி+ஆக > சரியாக, சார்பு+ஆக >சார்பாக, சாஷ்டாங்கம்+ஆக > சாஷ்டாங்கமாக, சீக்கிரம்+ஆக > சீக்கிரமாக, அடங்கல்+ஆக> அடங்கலாக, சுத்தம்+ஆக> சுத்தமாக,சுமார்+ஆக> சுமாராக, சுயம்+ஆக> சுயமாக, சுளை+ஆக> சுளையாக, செம்மை+ஆக>செம்மையாக, செமத்தி+ஆக> செமத்தியாக, தவறு+ஆக> தவறாக,

தவறுதல்+ஆக > தவறுதலாக, தாம்+ஆக > தாமாக, தாராளம்+ஆக > தாராளமாக, தான்+ஆக > தானாக, திருத்தம்+ஆக > திருத்தமாக, துடி+ஆக > துடியாக, துப்புரவு+ஆக > துப்புரவாக, தொடர்ச்சி+ஆக> தொடர்ச்சியாக, தொடர்பு+ஆக > தொடர்பாக, நன்று+ஆக >நன்றாக, நிதானம்+ஆக > நிதானமாக, நீளம்+ஆக >நீளமாக, நேரம்+ஆக > நேரமாக, நைசு+ஆக > நைசாக, பக்கா+ஆக >பக்காவாக, பரவல்+ஆக > பரவலாக, பேஷ்+ஆக > பேஷாக, பொது+ஆக > பொதுவாக, மரியாதை+ஆக > மரியாதையாக, முக்கியம்+ஆக > முக்கியமாக, முற்று+ஆக > முற்றாக, முன்னது+ஆக > முன்னதாக, நிச்சயம்+ஆக > நிச்சயமாக, நிமித்தம்+ஆக > நிமித்தமாக, மாறு+ஆக > மாறாக, பொது+ஆக > பொதுவாக,மேல்+ஆக > மேலாக, யதேட்சை+ஆக > யதேட்சையாக, லேசு+ஆக > லேசாக,வகை+ஆக > வகையாக, வசம்+ஆக > வசமாக, வித்தியாசம்+ஆக > வித்தியாசமாக, வள்ளிசு+ஆக >வள்ளிசாக, விரைவு+ஆக> விரைவாக, விளைவு+ஆக> விளைவாக

2. கூட்டுநிலைப்பெயர்+ஆக

2.1. முழு இரட்டிப்புச்சொல்+ஆக

2.1.1. ($பெ_1$+$பெ_1$)+ஆக

அக்கு+அக்கு+ஆக> அக்கக்காக

காலம்+காலம்+ஆக> காலம்காலமாக

கீலம்+கீலம்+ஆக > கீலம்கீலமாக

சுக்கல்+சுக்கல்+ஆக> சுக்கல்சுக்கலாக

சுக்கு+சுக்கு+ஆக> சுக்குசுக்காக

சாரி+சாரி+ஆக> சாரிசாரியாக

தனி+தனி+ஆக> தனித்தனியாக

படி+படி+ஆக > படிப்படியாக

மலை+மலை+ஆக > மலைமலையாக

முதல்+முதல்+ஆக > முதல்முதலாக

முதல்+முதல்+ஆக > முதன்முதலாக

வழி+வழி+ஆக > வழிவழியாக

வேறு+வேறு+ஆக > வேறுவேறாக

2.1.2. ($பெ_1$+ஆக)+($பெ_1$+ஆக)

(நாள்+ஆக)+(நாள்+ஆக) > நாளாக நாளாக

2.1.3. ($பெ_1$+ஒடு+$பெ_1$)+ஆக

(காது+ஒடு+காது)+ஆக > காதோடுகாதாக

(இரவு+ஒடு+இரவு)+ஆக > இரவோடுஇரவாக

(சூடு+ஒடு+சூடு)+ஆக > சூட்டோடுசூடாக

2.1.4. ($பெ_1$+$பெ_2$+$பெ_1$)+ஆக

(வாழை+அடி+வாழை)+ஆக > வாழையடிவாழையாக

2.2. ஒலியியைபுச்சொல்லடுக்கு+ஆக

2.2.1. ($பெ_1$+$பெ_2$)+ஆக

(அழுத்தம்+திருத்தம்)+ஆக > அழுத்தம்திருத்தமாக

(எக்கம்+சக்கம்)+ஆக > எக்கச்சக்கமாக

(ஏறு+மாறு)+ஆக > ஏறுமாறாக

(கண்டம்+துண்டம்)+ஆக > கண்டந்துண்டமாக

(காரம்+சாரம்)+ஆக > காரசாரமாக

(கரடு+முரடு)+ஆக > கரடுமுரடாக

(குண்டு+கட்டு)+ஆக > குண்டுக்கட்டாக

(சரம்+மாரி)+ஆக > சரமாரியாக

(சாங்கோ+பாங்கம்)+ஆக > சாங்கோபாங்கமாக

(சாடை+மாடை)+ஆக > சாடைமாடையாக

(தாறு+மாறு)+ஆக> தாறுமாறாக

(தெட்டம்+தெளிவு)+ஆக> தெட்டத்தெளிவாக

(திட்டம்+வட்டம்)+ஆக> திட்டவட்டமாக

2.2.2. ($பெ_1$+$பெ_2$)+($பெ_3$+$பெ_4$)+ஆக

(இலை+மறைவு)+ (காய்+மறைவு)+ஆக >இலை மறைவுகாய்மறைவுஆக

2.2.3. (உம்மைத்தொடர்)+ஆக

2.2.3.1. ($பெ_1$+உம்)+($பெ_2$+உம்)+ஆக

(எதிர்+உம்)+(புதிர்+உம்)+ஆக> எதிரும்புதிருமாக

(எலும்பு+உம்)+(தோல்+உம்)+ஆக > எலும்பும் தோலுமாக

(கண்ணீர்+உம்)+(கம்பலை+உம்)+ஆக > கண்ணீரும் கம்பலையுமாக

(கண்+உம்) + (கருத்து+உம்)+ஆக > கண்ணும் கருத்துமாக

(குற்றுயிர்+உம்)+(குறையுயிர்+உம்)+ஆக>குற்றுயிரும் குலையுயிருமாக

(குறுக்கு+உம்)+(நெடுக்கு+உம்)+ஆக> குறுக்கும் நெடுக்குமாக

(கை+உம்)+(களவு+உம்)+ஆக> கையும் களவுமாக

(கை+உம்)+(மெய்+உம்)+ஆக> கையும் மெய்யுமாக

(தப்பு+உம்)+(தவறு+உம்)+ஆக> தப்பும் தவறுமாக

(நுங்கு+உம்)+(நுரை+உம்)+ஆக> நுங்கும் நுரையுமாக

(மப்பு+உம்)+(மந்தாரம்+உம்)+ஆக > மப்பும் மந்தாரமுமாக

(மூக்கு+உம்)+(முழி+உம்)+ஆக> மூக்கும்முழியுமாக

(வத்தல்+உம்)+(தொத்தல்+உம்)+ஆக > வத்தலும் தொத்தலுமாக

2.2.3.2. (வி.அ+உம்)+(வி.அ+உம்)+ஆக

(அங்கு+உம்)+(இங்கு+உம்)+ஆக> அங்குமிங்குமாக

(இங்கு+உம்)+(அங்கு+உம்)+ஆக> இங்குமங்குமாக

2.2.4. ($பெ_1$+உக்கு+$பெ_2$)+ஆக

(ஏறு+உக்கு+மாறு)+ஆக> ஏறுக்குமாறாக

2.2.5. ($பெ_1$+ஓடு+$பெ_2$)+ஆக

(ஆதி+ஓடு+அந்தம்)+ஆக> ஆதியோடந்தமாக

2.2.6. ($பெ_1$+உக்கு+$பெ_2$+$பெ_3$)+ஆக

(முன்+உக்கு+பின்+முரண்)+ஆக > முன்னுக்குப்பின் முரணாக

2.2.7. (எதிர்மறை பெ.எ.+பெ)+ஆக

(தெரியா+தனம்)+ஆக> தெரியாத்தனமாக

(பரா+பரி)+ஆக > பராபரியாக

(வேண்டா+வெறுப்பு)+ஆக> வேண்டாவெறுப்பாக

(விடா+பிடி)+ஆக> விடாப்பிடியாக

2.3.பிறவகைச் சொற்சேர்க்கை+ஆக

2.3.1. ($பெ_1$+$பெ_2$)+ஆக

(அக்கினி+சாட்சி)+ஆக> அக்கினிசாட்சியாக

(ஆக்கம்+பூர்வம்)+ஆக> ஆக்கப்பூர்வமாக

(ஆதாரம்+பூர்வம்)+ஆக> ஆதாரபூர்வமாக

(இசை+கேடு)+ஆக> இசைகேடாக

(உடன்+பிறப்பு)+ஆக > உடன்பிறப்பாக

(உடன்+அடி)+ஆக> உடனடியாக

(எதிர்+முகம்)+ஆக> எதிர்முகமாக

(கலா+பூர்வம்)+ஆக> கலாபூர்வமாக

(கால்+நடை)+ஆக> கால்நடையாக

(குருடு+அடி)+ஆக> குருட்டடியாக

(கை+பிசகு)+ஆக> கைபிசகாக

(சுக்கு+நூறு)+ஆக> சுக்குநூறாக

(சோதனா+பூர்வம்)+ ஆக> சோதனாபூர்வமாக

(சோதனை+பூர்வம்)+ஆக> சோதனைபூர்வமாக

(தர்க்க+ரீதி)+ஆக> தர்க்கரீதியாக

(தற்+காலிகம்)+ஆக>தற்காலிகமாக

(நடு+நாயகம்)+ஆக> நடுநாயகமாக

(நெடுஞ்சாண்+கிடை)+ஆக> நெடுஞ்சாண்கிடையாக

(மனம்+பூர்வம்)+ஆக> மனப்பூர்வமாக

(ரத்தினம்+சுருக்கம்)+ஆக> ரத்தினச்சுருக்கமாக

(வலு+கட்டாயம்)+ஆக> வலுக்கட்டாயமாக

(விலா+வாரி)+ஆக> விலாவாரியாக

2.3.2. ($பெ_1$+ஆம்+$பெ_2$)+ஆக

(குருடு+ஆம்+போக்கு)+ஆக>குருட்டாம்போக்காக

2.3.3. (பெ.அ.+பெ)+ஆக

(ஏகம்+மனது)+ஆக> ஏகமனதாக

(ஒரு+மாதிரி)+ஆக> ஒருமாதிரியாக

(ஒரு+முகம்)+ஆக> ஒருமுகமாக

(ஒரு+வழி)+ஆக> ஒருவழியாக

(ஒரு+ஆறு)+ஆக> ஒருவாறாக

(ஒரு+விதம்)+ஆக> ஒருவிதமாக

(செம்+தூக்கு)+ஆக> செந்தூக்கமாக

(நல்ல+காலம்)+ஆக> நல்லகாலமாக

(நல்ல+படி)+ஆக> நல்லபடியாக

(நெட்டு+குத்தல்)+ஆக> நெட்டுகுத்தலாக

(பல்+ஆறு)+ஆக> பலவாறாக

(முழு+மூச்சு)+ஆக> முழுமூச்சாக

2.3.4. (பெ.அ.+ஏ+பெ)+ஆக

(ஒரு+ஏ+மூச்சு)+ஆக> ஒரே மூச்சாக

(ஒரு+ஏ+அடி)+ஆக> ஒரேயடியாக

2.3.5. 'செய்த'பெ.எ.+ ஆக

(அடுத்த+படி)+ஆக>அடுத்தபடியாக

(பட்ட+வர்த்தனம்)+ஆக> பட்டவர்த்தம் ஆக

2.3.6. (பெ$_1$+'செய்த'பெ.எ.+பெ$_2$) +ஆக

(மேல்+எழுந்த+வாரி)+ஆக> மேலெழுந்தவாரியாக

ஆக என்பதற்கு ஆய் என்ற வேறுபட்ட வடிவமும் உண்டு. ஆகு என்ற வினையில் 'செய்ய' (எனும் வாய்பாட்டு) வினையெச்சம் தான் ஆக; அதன் 'செய்து' (எனும் வாய்பாட்டு) வினையெச்சம் தான் ஆய். இரண்டும் ஒரே பொருளில் பெயருடன் சேர்ந்து தற்போக்குப் பொருண்மை பெற்று ஒட்டாக வினையடையாக்கம் செய்யவல்லன.

அண்ணாமலை (1968), லேமன் (1989), கோதண்டராமன் போன்றோர் ஆக/ஆய் என்பதை ஒரு வினையடையாக்க ஒட்டாகக் கருதவில்லை அல்லது கருதத் தயங்குகின்றனர் எனலாம். ஆக/ஆய் பெரும்பாலான எல்லா பெயர்களுடனும் சேர்ந்து முறை வினையடையாக்கம் செய்யும் என்று கூற இயலாது. லேமன் ஆக/ஆய் ஒரு வினையடை ஒட்டில்லை, ஆனால் இது சேர்ந்து வரும் அமைப்புகளைத் தொடரியல் அடிப்படையில் வினையடைத் தொடராகக் கொள்ளலாம் என்கிறார் (லேமன், 1989:146). இவர் பெரும்பாலான இடங்களில் ஆக ஒரு வேற்றுமை உருபு போல செயற்பாடு செய்வதைச் சுட்டிக்காட்டுகிறார். பின்வரும் எடுத்துக்

காட்டுகளில் ஆக பல பொருண்மைச் செயற்பாடுகளில் வருவதை எடுத்துக்காட்டுகிறார் (லேமன் 1989:140-146):

1. முறைமைப் பொருள்

எ.கா.

குமார் ஆத்திரமாகப் பேசினான்

2. பங்குமுறைப் பொருள்

எ.கா.

இப்போது உன் முதலாளியாகப் பேசவில்லை. உன் அப்பாவாகப் பேசுகிறேன்

3. நிலைமாற்றத்தின் விளைவுப்பொருள்

எ.கா.

குமார் பயித்தியக்காரனாக மாறிவிட்டான்

இதை இரண்டாக வெட்டு

குமார் தண்ணீரை ஐசாக ஆக்கினான்

4. ஒப்புமைப்பொருள்

எ.கா.

ஒரு மாசம் ஒரு நிமிஷமாகப் போயிற்று

குமார் பெட்டிப்பாம்பாக அடங்கினான்

5. குறிப்பில்லா இடப்பொருள்

எ.கா.

குமார் சாயங்காலமாகப் போய்விட்டான்

குமார் கதவோரமாக உட்கார்ந்தான்

6. உடனிகழ்ச்சிப் பொருள்

எ.கா.

குமார் பென்சிலும் புத்தகமுமாக வந்தான்

7. பொருட்டுப் பொருள்

எ.கா.

குமார் ஒரு வேலைக்காகப் போனான்

8. காலநீட்சிப்பொருள்

எ.கா.

மதராசில் நான்கு வருஷமாக இருக்கிறான்

குமார் இங்கு பத்து மாதமாக வேலை செய்கிறான்

9. தற்செயல்திறன் பொருள்

எ.கா.

(நான்) நானாக இந்த கடிதத்தை எழுதுகிறேன்

(அவன்) அவனாக அந்த வீட்டைக் கட்டினான்

10. அளவுப்பொருள்

எ.கா.

இராமேஸ்வரத்தில் அய்யர்களாக இருக்கிறார்கள்

அங்கே வீடாக இருக்கிறது

குமார் காப்பியாகக் குடிக்கிறான்

11. சீர்மைப்பொருள்

எ.கா.

குமார் ஒவ்வொரு சொல்லாகச் சொன்னான்

குமார் இட்லி ஒன்று ஒன்றாகச் சாப்பிட்டான்

12. கணநேரப்பொருள்

எ.கா.

குமாருக்கு ஆத்திரமாக இருந்தது

13. அடுக்குப் பொருள்

எ.கா.

குமார் வாசலுக்கும் தெருவுக்குமாக நடந்தான்

14. உறழ்ச்சிப்பொருள்

எ.கா.

குமார் என்னைப் பார்க்கிறதும் அவ்வைப் பார்க்கிறதுமாக இருந்தான்

15.கவனக்குவிப்புப்பொருள்

எ.கா.

சிறிதுசிறிதாக ஆப்பிள் வாங்கு

லேமன் மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளில் -ஆக எப்பொழுதும் பெயருடனோ பெயர்த்தொடருடனோ சேர்ந்து வினையடையாகச் செயற்பாடு செய்யாததையும் தற்செயல்திறன் பொருளிலும் அளவுப்பொருளிலும் வருகையில் முறையே எழுவாயோடும் செயப்படு பொருளோடும் -ஆக ஒட்டப்படுவதைச் சுட்டிக்காட்டி, சூழ்நிலைக்குத் தக்கவாறு -ஆக என்பதை ஒரு சுட்டுப் பின்னுருபனாகவோ குறைச்சொல்லாகவோ ஆயலாம் என்று குறிப்பிடுகிறார். கிரியாவிலிருந்து நாம் எடுத்துள்ள தரவுகள் -ஆக ஒட்டப்பட்ட பல பெயர்கள் வினையடையாகச் செயலாக்கம்பெற்று பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் பெற்றுள்ளதைக் காட்டுகின்றன. ஆக ஒட்டப்பெற்ற பெயரில் காணப்பெறும் தற்போக்கான பொருண்மையும் பெயரிலிருந்து வினையின் அடையாக மாறியுள்ள அவற்றின் செயற்பாட்டு மாற்றமும் அவற்றை அகராதியில் பட்டியலிடப்படும் எல்லைக்கு கொண்டு சென்றுள்ளன. ஆக ஒட்டப்பெற்ற சொற்கள் வினையடை களாகக் கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன. இதிலிருந்து ஆக ஒட்டப்பெறும் எந்தப் பெயரும் எதாவது ஒரு சூழ்நிலையில் அல்லது கால கட்டத்தில் தற்போக்கான பொருண்மை பெற்றுவினையடையாக மாறத்தகுதி பெறும் என்பது தெளிவு. இத்தகைய ஆக்கங்கள் மொழியில் மேலும் விளைவாக்கமாகப் பயன்படுத்தப்பட்டுப் பொருண்மை நிலையாக்கத்தால் அகராதியில் பட்டியலிடப்படும் தகுதியும் பெறலாம். இதன் காரணமாக -ஆக என்பதை ஒரு ஆக்க

ஒட்டாகக் கொண்டு அவை ஒரு அடைபட்ட குழுவைச் சார்ந்த பெயர்களுடன் சேர்ந்து வினையடை ஆக்கம் செய்யும் என்ற சொல்லாக்க விதியை அகராதியில் தருவதுதான் உசிதமாகப் படுகிறது.

எண்ணிக்கை அடிப்படையில் தனிநிலைப்பெயர் + ஆக ஆக்கங்கள் தான் ஆக ஒட்டிய பிறஆக்கங்களை விட முன்னணியில் நிற்கிறது. ஒரு பெயரும் ஆக என்ற ஒட்டும் சேர்ந்த சொல் எந்தச் சூழ்நிலையிலாவது காலகட்டத்திலாவது தற்போக்கான பொருண்மை மாறுபாட்டால் வினையடை யாய் மாற இயலுமாதலால் இவ்வமைப்பாக்கம் விளைவாக்க முள்ளது எனலாம். இதற்கு அடுத்தபடியாக ஒலியியைபுச் சொல்லடுக்கு + -ஆக ஆக்கங்கள் வரும். இரட்டிப்புச் சொல்லடுக்கு+ ஆக ஆக்கங்கள் ஒலியியைப்புச் சொல்லடுக்கு + ஆக ஆக்கங்களை விட எண்ணிக்கையில் குறைவானவை. இரட்டிப்புச் சொல்லடுக்கு + ஆக ஆக்கங்களும் சொல்லியைபுச் சொல்லடுக்கு + ஆக ஆக்கங்களும் விளைவாக்கமுள்ளதாய்த் தெரிகிறது. ஏனென்றால் கிரியா அகராதியில் தரப்படாத இவ்வகையிலான ஆக்கங்கள் பயன்பாட்டில் உள்ளன. பெயர்+பெயர் கூட்டுப்பெயர் களிலும், பெயரடை+ பெயர் கூட்டுப்பெயர்களிலும் ஆக சேர்ந்து வினையடையாக்கம் செய்கிறது. இவ்வகையிலான ஆக்கங்களும் விளைவாக்க முள்ளவைதான்.

9.5.2.1.2. என்று பின்னொட்டிய வினையடைகள்

ஆக பின்னொட்டிய வினையடைகளைப் போல் என்று பின்னொட்டிய வினையடைகளும் எண்ணிக்கையில் பிற வகையிலான வினையடைகளை விஞ்சும். கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள இவ்வினையடைகளை அவற்றின் அமைப்பொழுங்கு அடிப்படையில் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

1. ஒற்றை உணர்ச்சி - ஒலிக்குறிப்புச்சொல்+என்று

அக்கடா+என்று > அக்கடாவென்று, உம்+என்று > உம்மென்று, ஓ+என்று > ஓவென்று, ஓகோ+என்று > ஓகோவென்று, கணிர்+என்று > கணீரென்று, கம்+

என்று> கம்மென்று, குப்+என்று > குப்பென்று, குபீர்+என்று > குபீரென்று, கொல்+என்று > கொல்லென்று, கோ+என்று > கோவென்று, சட்+என்று> சட்டென்று, சடார்+என்று > சடாரென்று, சதக்+என்று > சதக்கென்று, சரேல்+என்று > சரேலென்று, சள்+என்று > சள்ளென்று, சிக்+என்று > சிக்கென்று, சில்+என்று > சில்லென்று, சிவனே+என்று> சிவனேயென்று, சுள்+என்று > சுள்ளென்று, சுளீர்+என்று >சுளீரென்று, சொத்+என்று > சொத்தென்று, சோ+என்று>சோவென்று, டக்+என்று> டக்கென்று, டாண்+என்று >டாணென்று, திடீர்+என்று> திடீரென்று, திடும்+என்று >திடுமென்று, நறுக்+ என்று> நறுக்கென்று, பட்+என்று>பட்டென்று, பளார்+என்று > பளாரென்று, பளிச்+என்று> பளிச்சென்று, பளீர்+என்று> பளீரென்று, புஸ்+என்று> புஸ்ஸென்று, பொக்+என்று > பொக்கென்று, பொசுக்+என்று > பொசுக்கென்று, மெத்+என்று > மெத்தென்று, விசுக்+என்று > விசுக்கென்று, லபக்+என்று > லபக்கென்று, வள்+என்று > வள்ளென்று, விர்+என்று > விர்ரென்று, விருட்+என்று> விருட்டென்று, வெறிச்+என்று > வெறிச்சென்று, ஜம்+என்று > ஜம்மென்று, ஜில்+ என்று> ஜில்லென்று

2. இரட்டிப்பு உணர்ச்சி - ஒலிக்குறிப்புச் சொல்+என்று

2.1. உருபன் இரட்டிப்பு+என்று

2.1.1. முழு உருபன் இரட்டிப்பு+என்று

கடகட+என்று > கடகடவென்று, கணகண+என்று> கணகணவென்று, கபகப+என்று > கபகபவென்று, கமகம+என்று > கமகமவென்று, கருகரு+என்று > கருகருவென்று, கறுகறு+என்று > கறுகறுவென்று, சிடுசிடு+என்று > சிடுசிடுவென்று, கிறுகிறு+என்று > கிறுகிறு, குடுகுடு+என்று > குடுகுடுவென்று, குபுகுபு+என்று > குபுகுபுவென்று, குளுகுளு+என்று >

குளுகுளுவென்று, கொட்டுகொட்டு+என்று > கொட்டுகொட்டுஎன்று, கொழுகொழு+என்று > கொழுகொழுவென்று, கொளகொள+என்று > கொளகொளவென்று, சளசள+என்று > சளசளவென்று, சிலுசிலு+என்று > சிலுசிலுவென்று, சுறுசுறு+என்று > சுறுசுறுவென்று, சொதசொத+என்று > சொதசொத வென்று, தகதக+என்று > தகதகவென்று, தரதர+என்று> தரதரவென்று, திகுதிகு+என்று > திகுதிகுவென்று, திடுதிடு+என்று > திடுதிடுவென்று, திமுதிமு+என்று > திமுதிமுவென்று, திருதிரு+என்று > திருதிருவென்று, துருதுரு+என்று > துருதுருவென்று, தொளதொள +என்று > தொளதொளவென்று, நச்சுநச்சு+என்று > நச்நச்சென்று, நசநச+என்று > நசநசவென்று, நெடுநெடு + என்று > நெடுநெடுவென்று, பகபக+என்று > பகபகவென்று, பரபர+என்று > பரபரவென்று, பளிச்பளிச்+என்று >பளிச்பளிச்சென்று, பிலுபிலு+ என்று > பிலுபிலுவென்று, புசுபுசு+என்று > புசுபுசுவென்று, பொதுபொது+என்று > பொதுபொதுவென்று, பொலபொல+என்று> பொலபொலவென்று, மசமச+என்று> மசமசவென்று, மளமள+என்று > மளமளவென்று, மினுக்மினுக்+ என்று > மினுக்மினுக்கென்று, மொடமொட+என்று > மொடமொடவென்று, மொழுமொழு+என்று > மொழுமொழுவென்று, வதவத+என்று > வதவத வென்று, வளவள+என்று > வளவளவென்று, விடுவிடு+என்று > விடுவிடுவென்று, விறுவிறு+ என்று> விறுவிறுவென்று, விண்விண்+என்று > விண்விண்னென்று, ஜிலுஜிலு+என்று > ஜிலுஜிலு வென்று, ஜேஜே+என்று > ஜேஜேயென்று

2.1.2. பகுதி உருபன் இரட்டிப்பு + என்று

கசமுச+என்று > கசமசவென்று, கடாமுடா+என்று> கடாமுடாவென்று, கப்சிப்+என்று > கப்சிப்பென்று, கன்னாபின்னா+என்று > கன்னாபின்னாவென்று, காமாசோமா+என்று > காமாசோமாவென்று,

தத்துப்பித்து+என்று > தத்துப்பித்தென்று, தாட்டுபூட்டு +என்று > தாட்டுபூட்டென்று, திடுதிப்+என்று > திடுதிப்பென்று

3. சொல் இரட்டிப்பு+என்று

பகுதிச்சொல் இரட்டிப்பு+என்று

3.1. அசட்டுபிசட்டு+என்று > அசட்டுப்பிசட்டென்று

ஏனோதானோ+என்று > ஏனோதானோவென்று

குய்யோமுறையோ+என்று
> குய்யோமுறையோவென்று

3.2. கன்னங்கரேல்+என்று > கன்னங்கரேலென்று

செக்கச்செவேல்+என்று > செக்கச்செவேலென்று

பச்சைப்பசேல்+என்று > பச்சைப்பசேலென்று

வெள்ளைவெளேர்+என்று > வெள்ளைவெளேரென்று

என்று என்பது என் என்ற வினையின் 'செய்து' வினையெச்ச வடிவம். (அதாவது செய்து எனும் வாய்பாட்டு வினையெச்ச வடிவம்). இது பல செயற்பாடுகளையுடையது. இது நிரப்புக்கிளவியாக வந்து ஒர வாக்கியத்தைத் தலைமை வாக்கியத்தில் உட்படுத்தும்.

எ.கா.

குமார் தபால் வந்தது என்று சொன்னான்

குமார் மதுரைக்குப் போய் இருக்கிறான் என்று நினைத்தேன்

குமார் டில்லிக்குப் போகலாம் என்று ஆசைப்படுகிறான்

குமார் ஒரு திருடன் வருவான் என்று பயப்படுகிறான்

குமார் வந்தானா என்று பார்

குமார் நல்லவன் என்று நினைத்தேன்

என்று என்பது மேற்கோள் வாக்கிய நிரப்புக் கிளவியாகவும் வரும்.

எ.கா.

குமார் ''நான் நாளை பள்ளிக்கு வரமாட்டேன்'' என்று கூறினான்.

என்று இவ்வாறு ஒரு கூற்றை நிரப்ப உதவும் நிரப்புக்கிளவியாக வரும் செயற்பாடு, சொல்நிலையில் ஒரு ஒலிக்குறிப்பை அல்லது உணர்ச்சி ஒலிக்குறிப்பை நிரப்பும் செயற்பாடு அளவில் விரிந்துள்ளது. இச்செயற்பாடு காரணமாக உணர்ச்சி-ஒலிக்குறிப்புடன் என்று சேர்ந்து வரும் தொடர்கள் பொருண்மை அடிப்படையான சொல்நிலை யாக்கத்தால் சொல்லாக்கம் பெறுகின்றன. என்று என்பது என் என்ற வினையின் வினையெச்ச வடிவம் ஆதலால் இது பின்னொட்டாக ஒட்டப்பட்டு வரும் உணர்ச்சி ஒலிக்குறிப்புச் சொற்கள் வினையடைகளாய் ஆக்கம் பெற்றுள்ளன. என்று இவ்வாறு ஒரு வினையடையாக்கியாக அதாவது வினையடையாக்கப் பின்னொட்டாகச் செயற்பாடு செய்கின்றது. பெரும்பாலும் என்று உணர்ச்சி-ஒலிக்குறிப்புச் சொற்களுடன் ஒட்டப்பெற்றே வினையடையாக்கம் செய்கின்றது. மேற்கண்டஎடுத்துக்காட்டுகள் இதை விளக்கும். குறைந்த அளவில் என்று சொல் இரட்டிப்புகளில் சேர்ந்தும் வினையடையாக்கம் செய்யும். முந்தியதில் ஒற்றை உணர்ச்சி -ஒலிக்குறிப்புச் சொல் + என்று, முழு உருபன் இரட்டிப்பு+ என்று, பகுதி உருபன் இரட்டிப்பு+என்று என்ற சொல் அமைப்புகளில் படும் ஆக்கங்கள் அடங்கும். பிந்தியதில் பகுதி சொல் இரட்டிப்பு + என்று என்ற சொல்லமைப்பிற்படும் ஆக்கங்கள் அடங்கும்.

உணர்ச்சி-ஒலிக்குறிப்புச் சொற்களைச் சில பொருண்மைப்பரப்பில் வருவதாய் ஓரளவுக்குப் பாகுபாடு செய்யலாம்.

எ.கா.

வேகம்: கபகப,குபுகுபு, சுறுசுறு, திடுதிடு, திமுதிமு, பகபக, பரபர, மளமள, விறுவிறு, வெடவெட, பட்பட், படபட

ஈரத்தன்மை: கசகச, குழகுழ, கொளகொள, சொதசொத, நசநச, பிசுபிசு, பொதுபொது, பொத்துபொத்து

ஒலி: கரகர, கபகப, கடகட, கலகல, கிணுகிணு, குசுகுசு, சரசர, சலசல, சளசள, நறநற, படபட, முணுமுணு, கிசுகிசு, குசுகுசு

தங்குதடையின்மை: கடகட, சரசர, தரதர, மடமட

ஒளி: தகதக, பளபள, பளிச்பளிச், மினுக்மினுக்

நடுக்கம்: கிடுகிடு, வெடவெட

கோபம்: சிடுசிடு, புஸ்புஸ்

தொடுஉணர்வு: சிலுசிலு, கிளுகிளு, குழுகுழு, பரபர

கடினம்: சொரசொர, பொருபொரு, மொடமொட, கடுகடு

உணர்ச்சி-ஒலிக்குறிப்பு வினையடைகளை அவை விளக்கவரும் வினையின் அடிப்படையிலும் ஓரளவுக்குப் பாகுபாடு செய்யலாம்.

எ.கா.

கலகலவென்று	சிரி
கடகடவென்று	
படபடவென்று	பேசு
குசுகுசுவென்று	
கிசுகிசு வென்று	
வளவளவென்று	
நறநறவென்று	பல்லைக்கடி
தரதரவென்று	இழு
வெடவெடவென்று	நடுங்கு

பெரும்பாலும் இவ்வினையடைகள் இவைகள் சேர்ந்து வரும் வினைகளின் அடிப்படையில் பொருள் பெறும்.

கிரியாவில் தரப்படாத பல என்று-ஒட்டாக்க வினையடைகள் பயன்பாட்டில் உள்ளன. புதிய என்று-ஒட்டாக்க வினையடைகள் பொருண்மை நிலையாக்கத்தால் ஆக்கம் பெறுகின்றன. எனவே என்று என்பதை ஒரு விளைவாக்கமுள்ள வினையடையாக்கியாக அதாவது வினையடையாக்க ஒட்டாகக் கருதலாம்.

9.5.2.1.3. என பின்னொட்டிய வினையடை

கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள என பின்னொட்டிய வினையடையின் அமைப் பொழுங்கு பின்வருமாறு அமையும்.

உணர்ச்சி - ஒலிக்குறிப்புச்சொல்+என

வெள்+என > வெள்ளென

என என்பது என் என்றவினையின் 'செய்ய' வினையெச்சமாகும். இது என்று என்ற வினையடை ஒட்டை இடம்பெயர்க்கலாம். (எ.கா. கலகலவென, படபடவென). கிரியாவில் என ஒட்டுவரும் சொல்லாக மேற்கண்ட சொல் மட்டும்தான் தரப்பட்டுள்ளது. இருப்பினும் என என்பதும் என்று என்பதைப் போல் விளைவாக்கமுள்ள வினையடையாக்கி ஆகும்.

9.5.2.2. வினையெச்சம் பின்னுருபாக வந்து ஆக்கப்பட்ட வினையடைகள்

கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள போல்/போல என்ற இடைச்சொல் இறுதியில் வரும் வினையடைகளைப் பின்வருமாறு பகுத்தாயலாம்.

1.'செய்தால்' வி.எ.+போல்/போல

(வினை+இறந்தகாலஒட்டு+ஆல்)+போல

அடுத்தால்+போல>அடுத்தாற்போல

எதிர்த்தால்+போல்>எதிர்த்தாற்போல்

சேர்ந்தால்+போல்>சேர்ந்தாற்போல்

தொடர்ந்தால்+போல்>தொடர்ந்தாற்போல்

2.பெயர்'செய்தால்' வி.எ.+போல்/போல

நறுக்கு+தெறித்தால்+போல்>

நறுக்குத்தெறித்தாற்போல்

3.'செய்து' வி.எ.+'செய்தால்' வி.எ.+போல்/போல

சொல்லி+வைத்தால்+போல>

சொல்லிவைத்தாற்போல

போல்/போல என்ற இடைச்சொல் போல் என்ற வினையிலிருந்து ஆக்கப்பெற்றதாகும். போல் இவ்வினையின் திரிபுறா வடிவாகும்; போல இவ்வினையின்'செய்ய' எனும் வாய்பாட்டு வினையெச்சமாகும். இது பெயருக்குப்பின் பின்னுருபாகவும், வினைக்குப் பின் நிரப்புக்கிளவியாகவும் செயற்பாடு செய்யும். இது பெயருக்குப் பின் பின்னுருபாக வந்து ஒப்புமையைக் காட்டப் பயன்படுத்தப்படும் உருபாகச் செயற்படும்.

எ.கா.

அவன் குழந்தையைப் போல்/போல தூங்குகின்றான்

ராதை கோதையைப் போல்/போல அழகானவள்

ராமு வரைந்தது போல்/போல ராஜாவும் வரைந்தான்

போல்/போல என்பது என்று, ஆகு என்பன போன்று நிரப்பியாகவும் செயற்படும்.

எ.கா.

ராமு நல்லவன் போல்/போலத் தோன்றுகின்றது

மழை வரும் போல்/போலத் தெரிகின்றது

போல என்பது ஒரு நிரப்புக்கிளவியாகக் காலங்காட்டும் நிபந்தனை எச்சத்தொடரையும் உட்படுத்தும். நிபந்தனை எச்சத்தொடரானது இறந்தகால எச்சத்தொடராகவோ (எ.கா. செய்தால்+போல> செய்தாற்போல) நிகழ்கால எச்சத் தொடராகவோ (எ.கா. செய்கிறால்+போல > செய்கிறாற் போல) வரும். இந்த நிபந்தனை எச்சத்தொடரின் வகைப் பாட்டு நிலைமை தெளிவில்லாததாகும். காலங்காட்டும்

நிபந்தனை எச்சத்தொடர் வினையடையாகவோ தெரி, தோன்று போன்ற தோற்ற வினைகளின் நிரப்பியாகவோ வரும். போல ஒரு வினையடையாக முறை வினையடையாகவோ ஒப்புமை வினையடையாகவோ வரலாம்.

எ.கா.

முறைவினையடை

நான் சொல்கிறாற்போலச் செய்

நான் சொன்னாற்போலச் செய்

புனையப்பட்ட ஒப்புமை

கெட்ட கனவு காண்கிறார்போல ராமு முணுமுணுக்கிறான்

கிரியாவின் தரவுகள் அடு, எதிர், சேர், தொடர், நறுக்குத்தெறி, சொல்லிவை என்ற வினைகளின் 'செய்தால்' வினையெச்சம் போல்/போல என்ற சொல்லுடன் சேர்ந்து பொருண்மை மாற்றத்தால் சொல்நிலையாக்கம் அடைந்து வினையடையாய் செயற்பாடு செய்வதைக் காட்டுகின்றன. கிரியாவில் பட்டியலிடப்படாத பினவரும் வகையிலான ஆக்கங்களும் பயன்பாட்டிலுள்ளன.

அவன் அடித்தாற் போல பேசினான்

அவன் மடைதிறந்தாற் போல ஒப்பித்தான்

அவன் மணிஅடித்தாற் போல வந்து நின்றான்

அவள் விடிந்தாற்போல வருவாள்

சில பெயர்களுடன் போல பின்னுருபாக வந்து ஒருவித பொருண்மையாக்கம் செய்கிறது.

அவள் சாயங்காலம் போல வருவாள்

அவன் விருப்பம்போல சாப்பிட்டான்

அடித்தாற்போல, விருப்பம்போல போன்ற ஆக்கங்கள் போல ஒரு விளைவாக்க வினையடை ஒட்டாகப் பயன்படுத்தப்படுவதை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

9.5.2.3. வினையெச்ச வினையடைகள்

வினையெச்சங்களே வினையடைகளாகச் செயற்பாடு செய்யும் வினையடைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. 'செய்ய' வினையெச்ச வினையடை
2. 'செய்து' வினையெச்ச வினையடை
3. 'செய்யாமல்' வினையெச்ச வினையடை
4. 'செய்யாது' வினையெச்ச வினையடை
5 'செய்தால்' வினையெச்ச வினையடை

9.5.2.3.1. 'செய்ய' வினையெச்ச வினையடைகள்

கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள 'செய்ய' வினையெச்ச வினையடைகளைப் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்.

1. தனிநிலை – வினையடி + அ

அகல, எழுந்த, எட்ட, ஒட்ட, கனக்க, கிட்ட, குப்புற, கூட, சால, சுருக்க, தழைய, தாழ, திருந்த, திரும்ப, தீர, தூர, நிரக்க, நிரம்ப, நிறைய, நெடுக, படுக்க, பரக்க, பழுக்க, பைய, முழுக்க, மிக்க, மிக, மெள்ள, வலிய, ரொம்ப

2. கூட்டு நிலை

2.1. பகுதி உருபன் இரட்டிப்பு

பரபரக்க

2.2. முழுச்சொல் இரட்டிப்பு

கொட்டகொட்ட, சிறுகசிறுக, சொட்டச்சொட்ட, [illegible], மலங்க மலங்க, மிரண்டமிரண்ட, முழுக்கமுழுக்க, வாவா விடியவிடிய

2.3. ஒலிஇயைபுச் சொல்லடுக்கு

அரக்கபரக்க, அலங்கமலங்க, இழுக்கபறிக்க,

ஆறஅமர, ஏறத்தாழ, ஏறக்குறைய, கூடக்குறைய, கூடமாட, தெள்ளத்தெளிய, வியர்க்கவிறுவிறுக்க

2.4. 'செய்த' வி.எ.+ 'செய்ய' வி.எ.

சுற்றி+வர > சுற்றிவர

2.5. பெ.+செய்ய வி.எ.

உள்+ஊர > உள்ளூர, கண்+ஆர > கண்ணார, காது+பட>காதுபட, காற்று+ஆட> காற்றாட, கை+பட> கைப்பட, கை+நிறைய> கைநிறைய, சரி+வர > சரிவர, மார்பு+உற > மார்புற, மூக்கு+பிடிக்க > மூக்குப்பிடிக்க, மூக்கு+முட்ட> மூக்குமுட்ட, தலை+குப்புற > தலைகுப்புற, தலை+தெறிக்க > தலைதெறிக்க, திறம்+பட > திறம்பட, தெற்+என > தெற்றென, தெள்+என > தெள்ளென, தொண்டை+கிழிய > தொண்டைகிழிய, நிரல்+பட>நிரல்பட, நீக்கம்+அற> நீக்கமற, படை+சூழ > படைசூழ, பொழுது+இருக்க > பொழுதிருக்க, மனது+அறிய >மனதறிய, மனம்+தளர > மனம்தளர, வயிறு+முட்ட > வயிறுமுட்ட, வாய்+கிழிய > வாய்கிழிய

2.6. பெ.அ.+'செய்ய' வி.எ.

ஒரு+சேர > ஒருசேர

பல+பட > பலபட

'செய்ய' வினையெச்சம் வரும் எச்சத்தொடர் முற்றுத்தொடருக்குள் வினையெச்சச் செயற்பாடு செய்யும். இவ்வினையெச்சச் செயற்பாடு (1) நோக்கம், (2) காரணம், (3)காலம், (4)விளைவு போன்ற பொருண்மைச் செயற் பாட்டில் வரலாம்.

எ.கா.

நோக்கம்: ராமு என்னைப் பார்க்க வந்தான்

நான் கல்லூரிக்குப் போக அப்பா அதிகம் உழைத்தார்

காரணம்: ராமு கல்லால் அடிக்க மண்டை உடைந்தது

காலம்: ராமு தூங்க ராஜா படித்தான்

விளைவு: ரத்தம் வர ராமு ராஜாவை அடித்தான்

'செய்ய' வினையெச்சம் வினையடையாகச் செயற்பாடு செய்வது இயல்பு. கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள மேற்கண்ட காலங்காட்டா வினையெச்சங்கள் தற்போக்குப் பொருண்மை பெற்று சொல்நிலையாக்கம் பெற்றவை. இவ்வினையடைகளில் தனிநிலை வினையடைகளை விட கூட்டுநிலை வினையடைகள் தான் அதிகம். கூட்டு வினையடைகளிலும் பெயர் + வினையெச்சம் என்ற (2.5) அமைப்பாக்கங்கள் தாம் அதிகம். முழு இரட்டிப்புச் சொல்லடுக்கு வினையடைகளும் ஒலியிையைபுச் சொல்லடுக்கு வினையடைகளும் பட்டியலில் அடங்கும். 'செய்ய' வினையெச்ச வடிவுகள் தற்போக்குப்பொருண்மை பெறுவதற்கான சாத்தியங்கள் இருப்பதால் இவ்வினையெச்ச வடிவங்கள் வினையடையாக்கம் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இவ்வாய்ப்பு காரணமாய் இவ்வகையான ஆக்கங்களை விளைவாக்கங்களாய்க் கருத இயலும். முழுசொல் இரட்டிப்பு வினையடைஆக்கங்களும் ஒலியிையைபுச் சொல்லடுக்கு வினையடை ஆக்கங்களும் விளைவாக்கங்கள் தாம்; ஏனென்றால் கிரியா அகராதியில் பட்டியலிடப்படாத இவ்வமைப்புகளிற்படும் வினை அடைகள் பயன்பாட்டில் உள்ளன.

எ.கா.

அவன் வரவர செலவழித்தான்

அவன் ராமுவை கதறகதற அடித்தான்

அவன் இரைக்கஇரைக்க ஓடிவந்தான்

அவன் செழிக்கச்செழிக்கச் சாப்பிட்டான்

பெயர்+'செய்ய' வினையெச்ச அமைப்பும் விளை வாக்கமுள்ளது தான். அகராதியில் கூறப்படாத

இவ்வமைப்பிற்படும் சொற்கள் பயன்பாட்டில் உள்ளது இதனை நிரூபிக்கும்.

எ.கா.

காதார, வயிறார, தெளிவுபட, மனமுருக

பெயர்+'செய்ய' வினையெச்சம் என்ற அமைப்பின்கண் வரும் சில வினைகள் விளைவாக்கம் காரணமாகவும் பொருண்மைநிலையாக்கம் காரணமாகவும் ஆக என்ற வினையடை ஒட்டு போல் செயற்பாடு செய்யும்.

எ.கா.

பெயர்+பட

வெளி+பட > வெளிப்பட, உள்+பட > உட்பட, திறம்+பட > திறம்பட, இசை+பட > இசைபட, இருபொருள் +பட > இருபொருள்பட, காது +பட > காதுபட, கை +பட >கைட்ட, மேல்+பட > மேற்பட, கறை +பட> கறைபட, அர்த்தம் +பட> அர்த்தம்பட

பெயர்+ஆர

கால்+ஆர> காலார, கண்+ஆர> கண்ணார, நெஞ்சு +ஆர > நெஞ்சார, மனசு+ஆர> மனசார, மனம்+ஆர> மனமார

9.5.2.3.2. 'செய்து' வினையெச்ச வினையடைகள்

கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள 'செய்து' வினை எச்ச வினையடை வடிவங்களைப் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

1.தனிநிலை

அடித்து, அடுத்து, அனைத்து, அயர்ந்து, அனுசரித்து, ஆழ்ந்து, இழிந்து, இழுத்து, உற்று, ஊன்றி, எட்டி, எடுத்து, எதிர்த்து, என்று, ஏகோபித்து, ஒட்டி, ஒருக்களித்து, ஒருமித்து, கவிழ்ந்து, கழித்து, கிடந்து, குவித்து, கூர்ந்து, சற்று, செம்மாந்து, சேர்த்து, சேர்ந்து, தள்ளி,தாங்கி, தாண்டி, திரும்பி, தொடர்ந்து, தூக்கி, நிறுத்தி, நோக்கி, நுணுக்கி, பற்றி, பார்த்து, போன்று, மறித்து, முந்தி, வருந்தி, வெலிந்து, வாரி, விதந்து

2. கூட்டுநிலை

2.1. பெ.+'செய்து' வி.எ.

அடி+ஒற்றி > அடியொற்றி, குத்து+இட்டு > குத்திட்டு, சத்தம் +போட்டு> சத்தம்போட்டு, சாக்கு+இட்டு> சாக்கிட்டு, தயவு+செய்து> தயதுசெய்து, துப்பு+கெட்டு> துப்புகெட்டு, தலை+தட்டி> தலைதட்டி, தறி+கெட்டு> தறிகெட்டு, தொன்று+தொட்டு> தொன்றுதொட்டு, பொடி+வைத்து> பொடிவைத்து, மனம்+திறந்து > மனம்திறந்து, மனம்+விட்டு > மனம்விட்டு, மனம்+உவந்து > மனமுவந்து, முன்+இட்டு > முன்னிட்டு, முன்+நோக்கி > முன்னோக்கி, மேல்+கொண்டு > மேற்கொண்டு, வாய்+விட்டு > வாய்விட்டு, வாய்+அடைத்து > வாயடைத்து

2.2. பெ.+ஐ+'செய்து' வி.எ.

கை+ஐ+விட்டு > கையைவிட்டு

2.3. பெ.+பெ.+'செய்து' வி.எ.

சிரம்+மேல்+கொண்டு > சிரமேற்கொண்டு

2.4. பெ.அ+பெ+'செய்து' வி.எ.

ஒரு+மனம்+பட்டு > ஒருமனப்பட்டு

2.5. முழு இரட்டிப்பு வி.எ.

படித்து+படித்து > படித்துப்படித்து

பன்னி+பன்னி > பன்னிப்பன்னி

பொத்தி+பொத்தி > பொத்திப்பொத்தி

மாய்ந்து+மாய்ந்து > மாய்ந்துமாய்ந்து

மாறி+மாறி > மாறிமாறி

வரிந்து+வரிந்து > வரிந்துவரிந்து

விக்கி+விக்கி > விக்கிவிக்கி

விட்டு+விட்டு > விட்டுவிட்டு

விழுந்து +விழுந்து > விழுந்துவிழுந்து

2.6. ஒலியியைபுச் சொல்லடுக்கு வி.எ.

'செய்து' வி.எ.$_1$+'செய்து' வி.எ.$_2$

அடித்து+பிடித்து > அடித்துப்பிடித்து

தப்பி+தவறி > தப்பித்தவறி

2.7. 'செய்து' வி.எ.$_1$+'செய்து' வி.எ.$_2$

கட்டி+கொண்டு > கட்டிக்கொண்டு

கூட்டி+கொண்டு > கூட்டிக்கொண்டு

பிய்த்து+கொண்டு > பிய்த்துக்கொண்டு

2.8. பெ.+'செய்து' வி.எ.$_1$+'செய்து' வி.எ.$_2$

கண்ணை+மூடி+கொண்டு > கண்ணைமூடிக்கொண்டு

கை+கட்டி+கொண்டு > கைகட்டிக்கொண்டு

2.9. 'செய்து' வி.எ.$_1$+ 'செய்து'வி.எ.$_2$+ 'செய்து' வி.எ.$_3$

அலறி+புடைத்து+கொண்டு

> அலறிப்புடைத்துக்கொண்டு

பதறி+அடித்து+கொண்டு > பதறிஅடித்துக்கொண்டு

வரிந்து+கட்டி+கொண்டு > வரிந்துகட்டிக்கொண்டு

வாரி+சுருட்டி+கொண்டு > வாரிசுருட்டிக்கொண்டு

விழுந்து+அடித்து+கொண்டு > விழுந்தடித்துக்கொண்டு

உடன்பாடு-மறுப்பு என்ற அடிப்படையில் வினையெச் சங்களை உடன்பாட்டு வினையெச்சம் என்றும் எதிர்மறை வினையெச்சம் என்றும் இருவகையாய்க் காணலாம். உடன்பாட்டு வினையெச்சம் வினையடி+ வினையெச்ச ஒட்டு என்ற அமைப்பில் வரும். லேமேனின் (Lehman 1989:72) கருத்துப்படி வினையெச்ச ஒட்டு இறந்தகால ஒட்டின் ஒரு சொல் போலியாகும்; இவ்வொட்டு மெய்யில் முடிந்தால் ஒலித்துணையுயிர் உ இறுதியில் சேர்ந்து வரும். இவ்வினையெச்ச வடிவினை வினையடி+ இறந்தகால ஒட்டு+ வினையெச்ச ஒட்டு என்று பகுப்பாய்வு செய்து உ வை வினையெச்ச ஒட்டாகவும் பூஜியத்தை அதன்

மாற்றுருபனாகவும் எடுப்பதுண்டு. இப்பகுப்பாய்வில் இறந்தகால ஒட்டு இறந்தகாலம் உணர்த்தலை இழக்கும்.

கிரியாவிலிருந்து எடுக்கப்பெற்று மேலே தந்துள்ள தரவுகளிற்படும் வினையெச்சங்கள் இவ்வமைப்பிற்படும் உடன்பாட்டு வினையெச்சங்களாகும். இதுவும் 'செய்ய' வினையெச்சங்களைப் போலக் காலங்காட்டா வினையெச்ச மாகும்; இவை முற்றுத் தொடரில் வரும் வினையால் காலக்குறிப்பு பெறும். மட்டுமன்றி வினையெச்ச ஒட்டு வினையெச்சத்திற்கும் முற்றுத்தொடருக்கும் உள்ள பொருண்மை உறவைச் வெளிப்படையாகக் காட்டாது; இப்பொருண்மை உறவைச் சூழல் மூலம் பொருள்கோள் செய்யலாம். இச்சூழல் மூன்று வகைப்படும்: (1) இணைப்பு நிரப்பி, (2) வினையடை எச்சத்தொடர், (3) வினைநிரப்பி.

1. இணைநிரப்பி

எ.கா.

ராமு இங்கே வந்து என்னைக் கூப்பிட்டான்

2. வினையடை எச்சத்தொடர்

2.1. கால/காரண வினையடை எச்சத்தொடர்

எ.கா.

ஐந்து நாட்கள் கழித்து ராமு இங்கு வந்தான்

ராமு இங்கு வந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன

மழை பெய்து பயிர் நன்றாக வளர்ந்தது

2.2. முறை வினையடை எச்சத்தொடர்

எ.கா.

ராமு தன் பணத்தைக் குடித்துப் பாழாக்குகிறான்

3. வினை நிரப்பி

எ.கா.

ராமு இந்த புத்தகத்தை படித்து இப்போது முடித்தான்

'செய்து' வினையெச்சங்களை ஒரு திரிபாகக் கொள்ளாமல் ஒரு ஆக்கமாகக் கொண்டு இவ்வடிவுகளை வினையடைகளாகக் கொள்பவரும் உளர். நாம் கிரியாவிலிருந்து எடுத்துள்ள வினையடைகளில் வரும் இவ்வகை வினையெச்சங்கள் தற்போக்குப் பொருண்மை பெற்றுச் சொல்நிலையாக்கம் அடைந்து அகராதியில் இடம்பெறும் நிலையை அடைந்துள்ளன. ஒவ்வொரு 'செய்து' வினையெச்சத்தையும் அது பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கம் பெறும் சாத்தியம் காரணமாக வினையடையாக ஏற்றுக்கொள்ள இயலுமா தலால், 'செய்து' வினையெச்சவடிவுகளை வினையடைகளை ஆக்கும் விளைவாக்க வடிவுகளாய்க் கொள்ளலாம் என்றுதோன்றுகின்றது. கூட்டுநிலை வினையெச்ச வினையடையாக்கங்களில் முழு இரட்டிப்பு வினை எச்சங்கள் பெயர் + 'செய்து' வினையெச்சம் என்ற வினையடை ஆக்கம் விளைவாக்கம் உள்ளதாய்த் தெரிகின்றது. ஏனென்றால் கிரியாவில் பட்டியலிடப்படாத இவ்வமைப்புகளிற்படும் வினையெச்ச வினையடைகளும் பயன்பாட்டில் உள்ளன.

எ.கா.

குழைந்துகுழைந்து, கொஞ்சிக்கொஞ்சி

வினையெச்சம் அடுக்கிவரும் வினையடை அமைப்புகளில் கொண்டு இறுதியில் வரும் வினையடை அமைப்பு குறிப்பிடத்தகுந்ததாகும்.

9.5.2.3.3. 'செய்யாமல்' வினையெச்ச வினையடைகள்

கிரியாவிலிருந்து எடுக்கப்பட்ட இவ்வகையிற்படும் வினையடைகளின் அமைப்பொ ழுங்கைப் பின்வருமாறு பகுக்கலாம்.

1. தனிநிலை

(வினையடி+ஆமல்)

அறியாமல், இல்லாமல், ஒட்டாமல், ஓயாமல்,

தப்பாமல், தவறாமல், தாளாமல், தெரியாமல், பேசாமல்

2. கூட்டுநிலை

2.1. பெ+ 'செய்யாமல்' வி.எ.

இடை + அறாமல் > இடையறாமல், இடை + விடாமல் > இடைவிடாமல், இணை + பிரியாமல் > இணை பிரியாமல், ஓசை + படாமல் > ஓசைபடாமல், கண்+ தெரியாமல் > கண்தெரியாமல்

2.2. ஒலியியைபுச் சொல்லடுக்கு வி.எ.

2.2.1. பெ.+பெ.+'செய்யாமல்' வி.எ.

மூன்பின் யோசிக்காமல், கண்மண் தெரியாமல்

2.2.2. 'செய்த' பெ.எ.+பெ.+'செய்யாமல்' வி.எ.

வைத்த+கண்+வாங்காமல் > வைத்தகண்வாங்காமல்

2.2.3. 'செய்து' வி.எ.+உம்+'செய்யாமல்' வி.எ.

கண்டு+உம்+காணாமல் > கண்டும்காணாமல்

2.2.4. 'செய்யாமல்' வி.எ. + 'செய்யாமல்' வி.எ.

ஓயாமல் ஒழியாமல்

வினையெச்சங்களைச் 'செய்ய' வினையெச்சம், 'செய்து' உடன்பாட்டு வினையெச்சம், 'செய்யாமல்' எதிர்மறை வினையெச்சம் என பின் ஒட்டுகள் அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கலாம்என்று கண்டோம். சில பொதுச் செயற்பாடுகளின் அடிப்படையில் உடன்பாட்டு வினையெச் சத்தையும் எதிர்மறை வினையெச்சத்தையும் ஒரு தலைப்பில் அடக்கலாம். இவை முறையே உடன்பாட்டுப்பொருளையும் எதிர்மறைப்பொருளையும் தந்து இரண்டாகப் பிரியும். ஆமல், ஆது என்பன எதிர்மறை வினையெச்ச ஒட்டுகள் ; ஆது உயர்வழக்கின்கண்படும். எதிர்மறை வினையெச்சத் தொடர் முற்றுத்தொடருக்குள் வரும். எதிர்மறை வினையெச்சத்திற்கும் முற்றுத் தொடரில்

வரும் வினைமுற்றிற்கும் இடையில் சில பொருண்மை உறவுகள்காணப்பெறும். அவை கால உறவு, காலமில்லா இணைப்பு உறவு,உடனிகழ்வு உறவு, காரண உறவு, பொருட்டு உறவு என்பன.

1.இணைப்புறவு அல்லது உடனிகழ் உறவு

எ.கா.

ராமு என்னைப் பார்க்காமல் வீட்டுக்குப் போனான்

2.உடனிகழ் உறவு

எ.கா.

ராமு ஒரு வார்த்தையும் சொல்லாமல் அங்கே நின்றான்

3.காரண உறவு

எ.கா.

மழை நீண்டநாள் பெய்யாமல் பயிர் வாடிப்போயிற்று

4.பொருட்டுறவு

எ.கா.

குமார் குழந்தை அழாமல் பார்த்துக்கொண்டான்

உடன்பாட்டு வினையெச்சங்களைப் போலவே எதிர்மறை வினையெச்சங்களைத் திரிபுகளாகக் கருதாமல் ஆமல் என்ற வினையடையாக்க ஒட்டால் வினையடிகளிலிருந்து ஆக்கப்பெற்ற வினையடைகளாய்க் கருதுவோரும் உளர். கிரியாவிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கண்ட வினையடைகள் எதிர்மறை வினையெச்சங்களாகும். இவை தற்போக்கான பொருண்மை பெற்று சொல்நிலையாக்கம் அடைந்து வினையடைகளாக அகராதியில் பட்டியலிடப் பெற்றுள்ளன. எதிர்மறை வினையெச்சங்கள் எச்சூழலிலாவது காலப்போக்கில் தற்போக்கான பொருண்மை பெற்று சொல்நிலையாக்கம் அடையவல்லனவாதலால் இவ்வகையான ஆக்கச் செயற்பாங்கை விளைவாக்கமாய்க் கருத இயலும். இந்தப்

பொதுவிதி தனிநிலை எதிர்மறை வினையெச்ச வினையடை களுக்கும் கூட்டுநிலை வினையெச்ச வினையடைகளுக்கும் பொருந்தும்.

9.5.2.3.4. 'செய்யாது' வினையெச்ச வினையடை

இவ்வகையிற்படும் பின்வரும் வினையடை மட்டும் தான் கிரியாவில் உட்படுத்தப்பட்டுள்ளது.

'செய்யாது' வி.எ. + 'செய்யாது'வி.எ.

ஓயாது ஒழியாது

ஆமல், ஆது என்பன எதிர்மறை வினையெச்ச ஒட்டுகள் என்றும் ஆது உயர் வழக்கிற்படும்என்றும் குறிப்பிட்டோம். 'செய்யாமல்' வினையெச்ச வினையடைகளாகக் காட்டியுள்ள எல்லா வினையடைகளுக்கும் இணையான -ஆது பின்னொட்டிய வடிவுகள் வரலாம் (எ.கா. அறியாது, இல்லாது, ஒட்டாது, ஓயாது, தப்பாது, தவறாது). 'செய்யாமல்' வினைஎச்ச வினையடைகளைப் பற்றி முன்னர் கூறிய செய்திகள் இவற்றிற்கும் பொருந்தும்.

9.5.2.3.5. 'செய்தால்' வினையெச்ச வினையடைகள்

கிரியாவில் வினையடைகளாகப் பட்டியலிடப் பட்டுள்ள இவ்வகையிலான வினையடைகளின் அமைப்பொழுங்கைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. தனிநிலை

(வினையடி + இறந்த கால ஒட்டு + ஆல்)

என்று+ஆல் > என்றால்

2. கூட்டுநிலை

2.1. ஒலிக்குறிப்புச் சொல் + 'செய்தால்' வி.எ.

முணுக்+என்றால் > முணுக்கென்றால்

2.2. 'செய்ய' வி.எ.+ 'செய்தால்' வி.எ.

சுருங்க+சொன்னால் > சுருங்கச்சொன்னால்

சொல்ல+போனால் > சொல்லப்போனால்

2.3. 'செய்து' வி.எ.+'செய்தால்' வி.எ.

மிஞ்சி+போனால்> மிஞ்சிப்போனால்

'செய்தால்' வினையெச்சத்தை வினையடி இறந்த கால ஒட்டு+ ஆல் என்று பகுப்பாய்வு செய்யலாம். நிபந்தனை எச்ச ஒட்டு -ஆல் முன் இறந்த கால ஒட்டு தன் காலங்காட்டும் செயற்பாட்டை இழந்து விடுகின்றது. நிபந்தனை வினையெச்சத்தொடர் முற்றுத்தொடரில் வரும் வினையுடன் நிபந்தனை உறவு கொண்டுவரும்.

எ.கா.

ராமு வந்தால் கோபாலும் வருவான்.

'செய்தால்' வினையெச்ச வடிவுகளும் பிற வினையெச்ச வடிவுகளைப் போல வினையடையாகப் பொருண்மை அடிப்படையில் சொல்நிலையாக்கமுறும் ஆற்றல் உள்ளன. ஆனால் 'செய்தால்' வினையெச்ச வடிவுகளின் வினையடை யாக்கம் பிற வினையெச்ச வடிவுகள் வினையடையாக்கம் செய்யும் அளவுக்கு விளைவாக்கமுள்ளதல்ல. கிரியாவில் ஐந்து 'செய்தால்' வினையெச்ச வடிவுகள் தான் வினையடைகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. இவ்வினை யெச்ச வடிவுகள் தற்போக்குப் பொருண்மை பெற்றுச் சொல்நிலையாக்கம் அடைந்து அகராதிப்படுத்தப்பட்டுள்ளன.

9.5.3.வினையடை வகைகளின் புள்ளியியல் தரவு

பின்வரும் அட்டவணையில் க்ரியாவில் வரும் வினையடை வகைகளின் எண்ணிக்கைத் தரப்பட்டுள்ளது.

எண்	வினையடைகள்	எண்ணிக்கை
1.	சுட்டு-வினா கட்டுருபன் மற்றும் சில தெரிநிலைப் பெயரெச்சங்கள் அடிப்படையிலான வினையடைகள்	37
2.	எண்ணுப்பெயரடை ஒரு அடிப்படை யிலான வினையடைகள்	7

3.	முன், பின் அடிப்படையிலான வினையடைகள்	10
4.	ஏ என்ற குறைசொல்லால் முடியும் வினையடைகள்	25
5.	உம் என்ற குறைச்சொல்லால் முடியும் வினையடைகள்	28
6.	வரை என முடியும் வினையடைகள்	3
7.	எல்லாம் என முடியும் வினையடைகள்	2
8.	மேல் என முடியும் வினையடைகள்	2
9.	பெயர் இரட்டிப்பு வினையடைகள்	2
10.	இரட்டிப்பு வினையடை	1
11.	வேற்றுமை உருபு உக்கு ஒட்டிய வினையடைகள்	26
12.	வேற்றுமை உருபு ஓடு ஒட்டிய வினையடைகள்	7
13.	வேற்றுமை உருபு உடன் ஒட்டிய வினையடைகள்	2
14.	வேற்றுமை உருபு இல் ஒட்டிய வினையடைகள்	43
15.	வேற்றுமை உருபு ஆல் ஒட்டிய வினையடைகள்	3
16.	வினை எச்சம் ஆக பின்னொட்டிய வினையடைகள்	167
17.	வினை எச்சம் என்று பின்னொட்டிய வினையடைகள்	103
18.	வினை எச்சம் என பின்னொட்டிய வினையடைகள்	1

19.	வினை எச்சம் போல்/போல பின்னொட்டிய வினையடைகள்	6
20.	செய்ய வினை எச்ச வினையடைகள்	79
21.	செய்து வினை எச்ச வினையடைகள்	87
22.	செய்யாமல் வினை எச்ச வினையடைகள்	19
23.	செய்யாது வினைஎச்ச வினையடை	1
24.	செய்தால் வினை எச்ச வினையடைகள்	5

9.5.4. முடிவுரை

ஆக்கங்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஒரு ஆக்கம் விளைவாக்கமுள்ளதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க இயலாது என்று கண்டோம்; ஒரு ஆக்கம் புதிய சொற்களை உருவாக்க இயலுமானால் அவ்வாக்கத்தை விளைவாக்கம் உள்ளது என்று கூறலாம் என்றும் தீர்மானித்தோம். ஒரு ஆக்கம் புதிய சொற்களை உருவாக்க இயலாவிட்டாலும் அவ்வாக்கத்தைப் பற்றித் தெளிவாக விளக்க இயலுமானால் அவ்வாக்கம் விதியின் கண்படும் என்றும் கண்டோம். இதன் அடிப்படையில் பின்வரும் முடிவுகளை எய்தலாம்.

- வேற்றுமை உருபு மற்றும் வினை எச்சம் இவற்றின் அடிப்படையில் அல்லாத வினையடை ஆக்கங்கள் ஆக்க விளக்கத்திற்கு அப்பாற்பட்டதாலும் விதிகளால் சரியாக வரையறைப்படுத்துவது இயலாதாகையாலும் அவற்றை கருத்தில் கொள்ள வேண்டிய தேவை இல்லை என்று தோன்றுகின்றது.

- வேற்றுமைத் தொடர்கள் அதாவது வேற்றுமை உருபுகள் பின்னொட்டிய வினையடைகள், குறிப்பாக நான்காம் வேற்றுமை உருபு உக்கு-உம் ஏழாம் வேற்றுமை உருபு இல்-உம், பின்னொட்டிய வினையடைகள் வினை யடைகளாக மாற்றமுறும் ஆக்கம் விளைவாக்க முள்ளதாய்த் தெரிகிறது.

- பெயர்+ஆக, பெயர்+என்று என்பன விளைவாக்க முள்ள வினையடை ஆக்கச் செயல் முறைகள் என்று கூறலாம்.
- வினை எச்சங்கள், குறிப்பாகச் 'செய்ய' வினை எச்சங்களும் 'செய்து' வினை எச்சங்களும் சொல்நிலை யாக்கம் அடிப்படையில் மாற்றமுறும் ஆக்கம் விளை வாக்கமுள்ளதாய்த் தெரிகின்றது.

10

முடிவுரை

10.1. சொல்லாக்கம் பற்றிய நெறிகள் மற்றும் கோட்பாடுகளில் ஒருமித்த கருத்தின்மை

சொல்லாக்கத்தை பற்றி ஆய்வதில் எந்த நெறிமுறையை அல்லது கோட்பாட்டைப் பின்பற்றுவது என்பதில் ஒருமித்த கருத்து இல்லாததன் காரணமாய் ஒரு மொழியின் சொல்லாக்கம் பற்றிய முடிவுகளில் ஒரு தெளிவில்லாமை இருப்பதை நாம் உணரலாம். நாம் குறைந்தது இரு வகைப்பட்ட சொல்லாக்கம் பற்றிய கருத்துகளைக் கண்டோம். ஆரனோப் (1976) ஆக்க முறை இலக்கணத்துடன் இணைந்த சொல்லாக்கம் பற்றிய ஒரு பகுதியின் தேவையைக் கூறுவதோடு சொல்லாக்க விதிகள் மூலம் சொல்லாக்கத்தைப் பற்றி விளக்க முற்படுகிறார். இவர் சொல் என்பதைச் சொல்லாக்கத்திற்கான அடிப்படை அலகாகக் கொள்கிறார். ஆனால் பார் (1983) சொல்லாக்கச் செயற்பாட்டைத் தொடரியல் செயற்பாடாக வாக்கிய உருவாக்கத்துடன் ஒப்பிட்டு இரண்டிற்கும் அதிக வேற்றுமையில்லை என வாதாடுகிறார். நமது நோக்கம் இரண்டில் எதைத் தமிழின் சொல்லாக்கத்தை விளக்கப் பயன்படுத்துவது என்பதல்ல; இரண்டின் முக்கியக் கூறுகளை எடுத்துக்கொண்டு தமிழின் சொல்லாக்கத்தை விளக்குவதுதான்.

10.2. சொல்லாக்கம் பற்றிய ஆய்வின் தொய்வும் உய்வும்

சாம்ஸ்கி 1965-ஐத் தொடர்ந்து சிறிது காலக்கட்டத்திற்கு சொல்லாக்கம் பற்றிய ஆய்வில் தொய்வு ஏற்பட்டது. தொடரியலின் அடிப்படையிலான வாக்கிய ஆக்கத்திற்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் சொல்லாக்கத்திற்கு மறுக்கப்பட்டிருந்தது. ஆனால் சாம்ஸ்கியின் 'Remarks on Nominalization' என்ற கட்டுரைக்குப் பின்னர் சொல்லாக்கம் பற்றிய ஆய்வுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இவைப் பொதுவாக ஒலியனியல் அடிப்படையிலோ உருபனியல் அடிப்படையிலோ தொடரியல் அடிப்படையிலோ பொருண்மையியல் அடிப்ட'டையிலோ மேற்சொன்னவற்றின் ஒன்றிரண்டின் ஒருங்கிணைப்பின் அடிப்படையிலோ அமைகின்றன. சொல்லாக்கம் பற்றிய ஆய்வுகள் ஆங்கிலம் போன்ற மொழிகளில் விரிவான அளவில் வெளிவந்துள்ளன. தமிழிலும் சொல்லாக்கம் பற்றிய ஆய்வுகள் பெரிய அளவில் இல்லாவிட்டாலும் குறிப்பிடத்தக்க அளவில் நடைபெற்றுள்ளன. இத்தகைய ஆய்வுகளில் பெரும்பாலானவை கலைச்சொல் ஆக்கம் பற்றியன என்பதை நாம் இங்கு குறிப்பிட வேண்டும். இருப்பினும் தமிழின் சொல்லாக்கம் பற்றிய ஒட்டு மொத்தமான ஆய்வு இன்னும் அச்சிடப்பட்டு வெளிவரவில்லை எனலாம். தற்போதைய ஆய்வு இதை நிறைவு செய்யும்.

10.3. சொல் விளைவாக்கமும் சொல் நிலையாக்கமும்

10.3.1. விளைவாக்கம்

சொல்லாக்கம் விளைவாக்கமுள்ளது என்பதன் அடிப்படையில் நாம் இந்த ஆய்வினை மேற்கொண்டாலும், சொல்லாக்கம் விளைவாக்கமுள்ளதா என்ற கேள்வி சர்ச்சைக்குரியதாகவே இருந்து வருகின்றது. ஒரு குறிப்பிட்ட சொல்லாக்கம் விளைவாக்கமுள்ளதா என்று ஆய்வதைக் காட்டிலும் எந்த அளவுக்குச் சொல்லாக்கத்தைப் பொதுவாக விளைவாக்கமாகக் கொள்ள இயலும் என்பதை ஆய்வது சிறப்பாய் அமையும் என்பது பாரின் (1983) கருத்து.

தமிழை எடுத்துக்கொண்டாலும் ஆங்கிலத்தை எடுத்துக்கொண்டாலும் சில சொல்லாக்கச் செயல்முறைகள் விளைவாக்கமுள்ளவை என்பது தெளிவான கருத்தாகும். விளைவாக்கம் படைப்பாக்கத்தினின்றும் வேறுபட்டு நிற்கின்றது. சொல்லாக்கத்தை ஒருகால அடிப்படையில் மட்டுமன்றி காலமாற்ற அடிப்படையிலும் காண்பது சொல்லாக்கத்தின் விளைவாக்கத்தைப் பற்றிய வரலாற்று அடிப்படையிலான செய்திகள் கிடைக்க வழிவகுக்கும். தொடரியலில் விதிகளின் அடிப்படையிலான வாக்கிய விளைவாக்கத்திற்கும் உருபனியலில்/ சொல்லியலில் விதிகளின் அடிப்படையிலான சொல் விளைவாக்கத்திற்கும் எடுத்துக்கூறத்தக்க வேறுபாடு இல்லை என்பது பாரின் (1983) கருத்து.

ஒரு ஒட்டை விளைவாக்கமுள்ளது என்று கூறவேண்டுமானால் அடிப்படையான வழி அந்த ஒட்டு புதிய சொற்களில் வரவேண்டும் என்பதாகும். இந்தச் சொற்கள் புதிய வடிவங்கள் என்பதைத் தவிர கூடுதலாக வளர்ச்சியடையாது. இல்லாவிட்டால் அவை நாளடைவில் நிலைநாட்டப் பட்டவைகளாகிவிடும். மாறாக ஒரு விளைவாக்கமல்லாத ஒட்டு அது வருமிடங்களில் அது இணைந்து வரும் அடிகளின் பட்டியலின் அடிப்படையில் தான் கணக்கிட்டுக் கூறும்படியாக அமையும். விளைவாக்கமில்லாத ஒட்டுகள் தாம் ஓரினமாதல், அசையழுத்த அமைப்பொழுங்கு மாற்றம் இவற்றை அனுமதிக்கும் என்பது சரியல்ல.

ஒரு கூட்டம் விளைவாக்க ஒட்டுகளுக்குள் சில பிறவற்றைக் காட்டிலும் மிகுந்த விளைவாக்கமுள்ளதாய் இருக்கும். விளைவாக்கத்தரம் அடிகளின் எல்லைக் கட்டுப்பாடுகளின் கண்டிப்பு என்பதற்கிணங்கவும் அமையும்; அவற்றை அளப்பது சிரமம்; ஒரு குறிப்பிட்ட வகையான புதிய சொல்லனின் தேவை, விருப்பத்தேர்வு, அழகுணர்ச்சி, எல்லைக்கட்டுப்பாடு (செவிக்கினிமை) என்பன இதன்பாற்படும்.

எல்லைக்கட்டுப்பாட்டின் கீழ்க்கோடியில் இருப்பது ஒப்புமையாக்கமாகும். இதன்படி ஒரு புதிய வடிவு மட்டும்தான் இருக்கலாம். மேல்நிலை எல்லைக்கட்டுப்பாடு தெளிவின்றி இருக்கின்றது. ஒரு ஒட்டு எந்த அடியுடனும் இணையும் என்ற கருத்தில் எல்லைக் கட்டுப்பாடே இல்லாத சொல்லாக்கம் இருப்பது இயலாத ஒன்றாகும். ஒரு ஒட்டு பொருண்மை, தொடரியல் அல்லது ஒலியனியல் பண்புக் கூறுகளால் விளக்கத்தக்க எல்லா அடிகளுடனும் பயன்படுத்தப்பட்டு வருவது முழு விளைவாக்கமாகும். இந்தக் கருத்தில் கூட ஒரு செயற்பாங்கு முழு அளவில் விளைவாக்கமுள்ளது என்று குறிப்பிட இயலும் என்பது ஐயமாகவேயுள்ளது; ஏனென்றால் ஏற்கனவே இருக்கின்ற ஒரு சொல்லன் அடிக்கடி இதற்குத் தடையாக அமையலாம்.

சுருக்கமாக ஒரு உருபனியல் செயற்பாடு எத்தனைப் புதிய சொற்களை உருவாக்கப் பயன்படுகிறது என்பதன் அடிப்படையில் ஒரு ஆக்கம் கூடுதல் அல்லது குறைந்த விளைவாக்கமுள்ளது என்று கூறலாம்.

10.3.2. நிலையாக்கம்

ஒரு சொல் கடன் வாங்கப் பெற்றிருந்தாலும் சரி, புதிதாய் உருவாக்கப்பட்டிருந்தாலும் சரி முதன் முதலில் தோன்றும் போது அம்மொழியைப் பேசுபவர் அச்சொல்லின் புதுமையை அறிந்துள்ளதாகத் தோன்றுகின்றது. அதாவது அவர்கள் மொழியின் விளைவாக்க அமைப்பு பயன்படுத்தியுள்ளமை பற்றி அறிவார்கள். புதிய சொல் வழக்கில் பயன்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவதற்குக் குறிப்பிடத்தகுந்த பல காரணங்கள் உள்ளன.

பேசுபராலோ எழுத்தாளராலோ புதிய தேவையைப் பூர்த்தி செய்ய உருவாக்கப்பெறும் கலவை வடிவத்தைத் திடீர் விளைவாக்கம் என்று கூறுவர். ஒரு சொல்லனின் வரலாற்றில் அடுத்த கட்டமாக வருவது அத்திடீர் உருவாக்கம் பேசுபவரால் அறியப்பட்ட சொல்லாக்கக் கருதப்படுவதாகும். இந்தக் குறிப்பிடத்தகுந்த கட்டத்தில் வரத்தக்கப் பொருள் மயக்கங்கள் புறக்கணிக்கப்பட்டு ஆக்கப்பட்ட சொல் ஒரே பொருளில்

அல்லது ஒரு சில பொருளில் தான் பயன்படுத்தப்படும். மொழியமைப்பில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாய் ஒரு சொல்லின் விளைவாக்க விதிகளால் பெறப்படாத வடிவத்தைக் கொள்வது கடைசி நிலையாகும். இந்த நிலையில் அந்தச் சொல்லன் சொல்நிலையாக்கம் அடைந்து விட்டது என்று கூறலாம். மொழியின் ஒவ்வொரு நிலையிலும் சொல் நிலையாக்கம் ஏற்படுகின்றது. ஒலியனியல் நிலையிலும் உருபனியல் நிலையிலும் தொடரியல் நிலையிலும் பொருண்மைநிலையிலும் சொல் நிலையாக்கம் ஏற்படுகின்றது. இவை இணைந்த சூழ்நிலையிலும் சொல்நிலையாக்கம் ஏற்படலாம்.

சொல்நிலையாக்கம் பற்றிய ஆய்வு சொல் விளைவாக்கம் மற்றும் நிலையாக்கம் என்பதன் அடிப்படையில் அமையவேண்டும். அப்பொழுதுதான் சொல்லாக்கம் பற்றிய முழுமையான செயற்பாங்கைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள இயலும்.

10.4. சொல்லாக்கத்தில் பிரச்சினைகள்

சொல்லாக்கத்தில் ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் அடிப்படையிலான பிரச்சனைகள் வருவதையும் அப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான அணுகுமுறைகளையும் பார்த்தோம்.

10.5. தமிழில் சொல்வகைப்பாடு

ஒரு மொழியின் சொற்களைச் சொல்லியல் அடிப்படையிலும் தொடரியல் அடிப்படையிலும் பொருண்மையியல் அடிப்படையிலும் வகைப்பாடு செய்யலாம் என்று கண்டோம். தமிழில் வினை, பெயர் என்பன முக்கிய சொல்வகைப்பாடுகளாகவும் பெயரடை, வினையடை என்பன அவற்றை ஒட்டிய இரண்டாவது நிலையிற்படும் சொல் வகைப்பாடுகளாகவும் அமைகின்றன. இவை தவிர இணைப்பான்கள், குறைச்சொற்கள், வினைசார் கிளவி, உணர்ச்சி வெடிப்புச்சொல், உணர்வுக் குறிப்புச் சொல், விளிப்புச்சொல், விளி ஏற்புச் சொல் என்பன மூன்றாவது நிலையிற்படும் சொல்வகைப்பாடுகளாக அமைகின்றன.

10.6. தமிழில் சொல்லாக்க வகைப்பாடு

பொதுவாகச் சொல்லாக்கத்தை (1) கூட்டாக்கம், (2) முன்னொட்டாக்கம், (3) பின்னொட்டாக்கம், (4) மாற்றம், (5) பின்வடிவாக்கம், (6) கத்திரிப்பாக்கம், (7) கலப்பாக்கம், (8) தலைப்பெழுத்தாக்கம், (9) சொல் உருவாக்கம் எனப் பகுக்கலாம் என்று கண்டோம். தமிழில் சொல்லாக்கங்களில் மிகவும் பரவலானவை கூட்டாக்கங்களும் பின்னொட்டாக் கங்களும் தான். பல புதிய சொற்கள் கூட்டாக்கங்களால் பெறப்படுகின்றன. பெயர்+பெயர் கூட்டாக்கம் விளைவாக்கம் மிகுந்ததாகும். புதிய வினைகள் பெயர்+ வினை (வினையாக்க வினை அல்லது வினையாக்கி) என்ற கூட்டாக்கத்தாற் பெறப்படுகின்றன. மறைமலை (1984) ஆட்சிச் சொல்லாக்கம் பற்றி ஆய்கையில் சில தனிச்சொற்கள் கண்டுண்ட உருபன்களாய்ச் சொல்லுக்கு முன் வந்து பின்னொட்டாக்கம் செய்வதைக் குறிப்பிடுகிறார். குறைந்த அளவில் ஒருவிதமான கத்திரிப்பாக்கம் ஊர்ப்பெயராக்கத்தில் நகழ்கின்றது. தமிழும் பிற மொழியும் (குறிப்பாக வடமொழியும் ஆங்கிலமும்) கலந்த கலப்பாக்கங்கள் உருவானாலும் அவ்வகையிற்படும் ஆக்கங்கள் 'தமிழ்ச் செம்மையாக்கம்' என்ற செயற்பாட்டால் வழக்கிழந்து வருகின்றன. தலைப்பனெழுத்தாக்கம் அவ்வளவு விரிவாகத் தமிழில் பயன்படுத்தப்படவில்லை. பொருள் அடிப்படையில் அமையாது எழுத்துக்களின் கூட்டில் உருவாக்கப்பெறும் ஆக்கச் செயற்பாடு தமிழில் இல்லையென்று கூறலாம்.

10.7 தமிழில் சொல்லாக்கம்

தமிழ் தனக்கென்றே உரிய சொல்லுருபன்களையும் சொற்களையும், ஒட்டுகளையும் கொண்டு சொல்லாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு தனது சொற்களஞ்சியத்தைப் பெருக்கியுள்ளது. வினையிலிருந்து பெயர், பெயரிலிருந்து பெயரடை, பெயரிலிருந்து வினையடை, வினையிலிருந்து பெயரடை, வினையிலிருந்து வினையடை என்று ஒரு இலக்கணக்கூறிலிருந்து பிற இலக்கணக்கூறில் படும்

சொல்லாக்கங்களை உருவாக்குவதில் தமிழ் தன் தனித்தன்மையை இழக்காமல் வெற்றிகண்டுள்ளது. ஒலிபெயர்ப்பு, கடன் மொழிபெயர்ப்பு, கடன் சொல்உருவாக்கம் போன்ற செயற்பாடுகளைப் பயன்படுத்தி கலைச்சொற்களை உருவாக்கித் தன் பயன்பாட்டை ஆட்சிமொழிப் பயன்பாடு, அறிவியல் மொழிப் பயன்பாடு பொறியியல் மொழிப் பயன்பாடு என்று விரிவுபடுத்தி வருகின்றது.

துணைநூற்பட்டியல் [ஆங்கிலம்]

Adams,V.1973. An introduction to Modern English Word Formation, London: Longman.

Agesthialingom,S. 1964. " Tamil nouns", Anthropological Linguistics 6:1, 7-12.

---------- 1976. "Adjectives in Dravidian", Dravidian Linguistics - Proceedings of the Seminar on Dravidian Linguistics-V, S.Agesthialingom and P.S.Subrahmanyam(eds), Annamalainagar: Annamalai University Publications.

---------- 1978. "Participial noun in old Tamil", Journal of Annamalai University (Humanities) Vol 30, Annamalainagar: Annamalai University.

---------- 1979. A grammar of old Tamil with special reference to *patiRRuppattu* (phonology and verb morphology), Annamalainagar: Annamalai University.

Allen,M.R.1978. Morphological investigations, unpublished Ph.D., dissertation, The University of Conecticut.

Anderson,S.R. 1982. "Where's Morphology?" Linguistic Inquiry 13,571-612.

Andronov,M.1972. " Notes on the nature and origin of the adjectives in Tamil " In S.Agesthialingom and S.V.Shanmugam (eds). Third Seminar on Dravidian Linguistics, Annamalainagar: Annamalai University.

Annamalai,E. 1969. Adjectival Clauses in Tamil, unpublished Ph.D. dissertation, Chicago: University of Chicago.

---------- 1968. The so-called adverbs in Tamil, unpublished M.A., dissertation, Chicago: University of Chicago.

----------1982. "Dynamics of Verbal extensions in Tamil", Internal Journal of Dravidian Linguistics 11, 22-166.

Annamalai,E.(ed.) 1997. Adjective clause in Tamil, Tokyo: Institute for the study of Language and culture of Asia and Africa.

Anvita Abbi, 1992. Reduplication in South Asian Languages, New Delhi: Allied Publishers Limited.

Arokianathan,S.1981. Tamil Clitics, Trivandrum: Dravidian Linguistics Assocition.

Aronoff, M. 1976. Word Formation in generative grammar, Linguistic Inquiry Monograph I, Cambridge, Mass: MIT Press.

----------1987. Word Formation in Kannada, paper presented atOsmania University, Hyderabad.

Aruna Bharathi, N. 1976. Glossary of Technical Terms in Linguistics, Madras: Tamil Noolagam.

Asher,R.E.1982. Tamil, Lingua descriptive studies, Amsterdam: Northholland Publishing Company.

Babby,H.L.1973. "The deep structure of adjectives and participles in Russian", Language 49: 2,349-360.

----------1975. A transformational grammar of Russian adjectives, The Hague: Mouton.

Bach,E.1968. "Nouns and noun-phrases," In Bach,E.& Harms,R.T.(eds). 90-122.

Bach,E and Harms,R.T. (eds) 1968. Universals in Linguistic Theory, New York: Holt, Rinehart & Winston.

Balasubramaniam,K.1973. "Postpositions reconsidered." In *aindtaavatu karuttarangku aayvukkoovai,* Madras.

Bauer,L. 1977. "On teaching compound nouns", Moderna Spak 71,325-36.

---------- 1978a. "On Lexicalization", Archivum Linguisticum 9, 3-14.

----------1978b. "Compounding the difficulties - a look at some nominal compounds in Danish", Acta Philogica Scandinavia, 32, 87-113.

---------- 1978c. "Productivity in Word-Formation", In Gregersen,K.(ed), 1978. Papers from the Fourth Scandinavian Conference of Linguistics, Odense University Studies in Linguistics 3, Odense: Odense University Press.

----------1978d. The grammar of Nominal compounding with special reference to Danish, English and French. Odense University Studies in Linguistics 9, Odense: Odense.

----------1978e. Remarks on "Remarks..." Publication of the English Institute of Odense University, 12.

----------1979a."On the need for pragmatics in the study of nominal compounding", Journal of Pragmatics 3, 45-50.

----------1979b." Review of Berkle & Rastovky (eds) (1977)", Journal of Linguistics 15, 364-9.

----------1979c. "Against Word-based Morphology", Linguistics Inquiry 10, 508-9.

---------- 1979d. "Patterns of Productivity in new formations denoting persons using the suffix -er in Modern English", Cashiers de Lexicologie 35: 11, 26-31.

----------1983. English Word-formations, Cambridge: Cambridge University Press.

---------- 1988. Introducing linguistic morphology, Edinburgh: Edinburgh University Press.

Beard,R. 1977. "On the extent and nature of irregularity in the lexicon", Lingua 42, 305-41.

---------- 1981. "On the question of lexical regularity", Journal of Linguistics, 17, 31-7.

---------- 1982 . "The plural as a lexical derivation", Glossa 16:2, 133-148.

Bhat, D.N.S. 1991. An Introduction to Indian Grammars: Part three: Adjective. Report submitted to University Grants Commission.

Bierwisch,M. 1967. "Some Semantic Universals in German adjectives", Foundations of Language 3:1, 1-36.

Boas,H.U. 1974. "OnHalles' 'Prolegomena to a theory of Word formation' or What is a linguistic generalization? " Linguistics, 134, 5-8.

Bolinger,D. 1967. "Adjectives in English: attribution and predication", Lingua 18:1, 1-34.

---------- 1972 Degree Words, The Hauge: Mouton.

Botha, R.P.1968. The Function of the Lexicon in Transformational Generative Grammar. The Hauge. Mouton.

Bowers,F. 1969. "The deep structure of abstract nouns", Foundations of Language 5, 520-33.

Brekle,H.E. 1970. Generative Satzsemantik and transformationalle Syntax im System der englischen Nominalkomposition. München: WilhelmFink Verlag.

Bybee,J. 1988. "Morphology as lexical organization", In Michael Hammond and Michael Noonan (eds) Theoretical Morphology 119-142.

Byrd,R.J. Judith L.Aronoff,M. and Anshen,F. 1986. "Computer Methods for Morphological analysis", Proceedings of the Conference 24, ACI Annual Meeting, 120-1277 Newyork: Columbia University.

Caldwell,R. 1856, A comparative grammar of the Dravidian or South Indian family of languages, Reprinted in 1987 by Asian Educational Services, New Delhi.

Carroll,J.M. 1979. "Complex Compounds: Phrasal embedding in lexical structures", Linguistics 17, 863-77.

Chapman,R.W. 1939. "Adjectives from proper names" Society for Pure English Tract 52. Oxford: Oxford University Press.

Chomsky,N. 1957. Syntactic Structures. The Hague: Mouton.

----------1965. Aspects of the theory of Syntax, Cambridge: Mass: MIT Press.

---------- 1970. "Remarks on nominalization", In Jacobs & Rosenbaum (eds), 189-221.

Chomsky,N. Halle,M. 1968. The Sound Patterns of English. New York: Happer & Row.

Clark,E.V. and Clark,H.H. 1979. "When nouns surface as verbs", Language 55 767-811.

Danks,H. 1971. "Psychological scaling of adjective orders", Journal of verbal language and verbal behaviour 10: 1, 63-67.

Downing,P. 1977. "On the creation and use of English compound nouns", Language 53, 810-842.

Dhamodaran,G.R. 1985. "Dictionary of technical terms in Tamil", Kalaikkathir: Coimbatore.

Dowty,D. 1979. Word meaning and montague grammar, Dordrecht: Reidel.

Dryer,M. 1985. "The role of thematic relations in adjectival passives", Linguistic Inquiry 16, 320-326.

Filmore,C. 1968. "The case for case". In Bach and Harms (eds) 1-88.

Fleischman,S. 1977. "Cultural and linguistic Factors in Word-formation", University of California Publication in Linguistics, 86.Berkeley and Los Angles :University of California Press.

Fraser,B. 1970. "Some remarks on the action nominalization in English," In Jacobs and Rosenbaum (eds) 83-98.

Glossary of technical terms (mimeo), Thanjavur: Tamil University.

Glossary of technical terms, Madras: Tamilnadu Textbook Society.

Glossary of technical terms, Sri Lanka: Dept. of Language Development.

Gopal,A. 1981. Adjectives in Tamil, Ph.D. Thesis, Annamalainagar, Annamalai University.

Gruber,J.S. 1976. Lexical Structures in Syntax and Semantics, Amsterdam: North Holland.

Guerssel,M. 1983. "A Lexical approach to Word Formation in English", Linguistic Analysis 12-3, 183-243.

Gunter,R. 1978. "English derivation," Journal of Linguistics 8,1-19.

Hakulinen,A. 1978. "Some unsolved problems in the lexicon," In Gregersen (ed) 325-32.

Halle,M. 1973. "Prolegomena to a theory of word formation," Linguistic Inquiry 4, 3-16.

Halle, M. and Mohanan,K.P. 1985. "Segmental Phonology of modern English," Linguistic Inquiry 16, 57-116.

Hatcher,A.G. 1960. "An Introduction to the analysis of English noun compounds," Word 16, 356-73.

Israel,M.1966. "Parts of Speech," Proceedings of the first International Conference Seminar of Tamil Studies, Kualalumpur: International Association of Tamil Research, 2, 587-595.

Jakendoff,R. 1975. "Morphological and Semantic regularities in the Lexicon," Language 51, 639-67.

Jacobs R. and Rosenbaum,P. (eds) 1970. Readings in English Transformational grammar, Waltham, Mass. : Ginn.

Jesperson,O.1924. The Philosophy of grammar, London: Georgen Allen and Yuwin.

---------- 1942. A Modern English grammar on historical principles, Part VI. Morphology, London and Copenhagen: George Allen & Unwin and Ejnar Munksgaard.

Joshi,S.D. 1966. Adjectives and substantives as a single class in parts of speech. Publications of the centre of advanced study in Sanskrit. class A., No.9, Poona: University of Poona 1-30.

Kamakshi,S. 1996. Productivity and Lexicalization of deverbal noun formation in Tamil, unpublished M.Phil. Thesis, Thanjavur: Tamil University.

Kamaleswaran,K.S. 1974. Nouns in Tamil, Unpublished Ph.D. Thesis, Annamalai nagar: Annamalai University.

Kandiah,T. 1979. "On the structure of two classes of 'Manner adverb' in Tamil" Indian Journal of Dravidian Linguistics 8:2, 205-217.

Karthikeyan,A.1983. Compound verbs in Tamil, Unpublished Ph.D. Thesis Annamalainagar: Annamalai University.

Karunakaran,K and Jeya,K. 1994. "Word Formation and Word Function in Tamil," To be published in the Proceedings of National Workshop-cum-seminar on Lexical typology, Hyderabad: Telugu University.

Kastovsky,D. 1977. "Word formation, or: at the crossroads of morphology, Syntax, Semantics and the lexicon," Folia Linguistica 10, 1-33.

Kata,J.J. & Fodor,J.A. 1963. "The Structure of a semantic theory," Language 39, 170-210.

Kiparsky,P. 1983. "Word-formation and the lexicon," In Ingerman (ed) Proceedings of the Mid America Linguistics Conference, University of Kansas.

Kothandaraman,R. 1978. "Adjectives in Tamil: A stative outlook," Seminar on Dravidian Syntax, Annamalainagar, Annamalai University.

---------- 1980. A brief on K-adjectivals in Tamil, Pulamai 6:1.

Lakoff,G.1970. Irregularity in Syntax. New York: Holt, Rinehart & Winston.

Lazarus,L.M. 1973. "The deep structure of the prenominal adjective in English," Linguistics 102, 41-57.

Lees,R.B. 1960. "A Multiplicity ambiguous adjectival construction in English," Language, 33, 207-221.

---------- 1960. The grammar of English nominalizations, 5th edn, 1968, The Hague: Mouton.

---------- 1970. "Problems in the grammatical analysis of English nominal compounds," In Bierwish & Heidolph, (eds) 74-86.

Lehmann,T. 1989. A grammar of modern Tamil, Pondicherry: Pondicherry Institute of Linguistics and culture.

Levi, J.N. 1973. "Where do all those other adjectives come from?" Papers from the Regional meetings of the Chicago Linguistic Society, 91 332-45.

---------- 1978. The Syntax and Semantics of complex nominals, New York, etc: Academic Press.

Lieber,R. 1980. On the organization of the lexicon, MIT dissertation.

Lightner,T.M. 1975. "The role of the derivational morphology in generative grammar," Language 51, 617-638.

Lindholm,J. 1975. The conceptual basis of the Tamil adverbial participle, Unpublised Ph.D. dessertation, Chicago: University of Chicago.

Ljung,M. 1970. English denominal adjectives. A generative study of the semantics of a group of high-frequency denominal adjectives in English. Gothenburg Studies in English 21, Lund: Acta Universitatis Gothoburgensis.

---------- 1977. "-ed adjectives revised." Journal of Linguistics 12, 159-68.

---------- 1977. "Problems in the derivation of instrumental verbs," In Berke and Kastovsky (eds), 165-179.

Lyons,J. 1977. Semantics, Vol 1 & 2, Cambridge: Cambridge University Press.

Maraimalai,I. 1984. Word-formation in Modern Tamil with special reference to administrative terms.Unpublished Ph.D. thesis, Madras: University of Madras.

Marchand,H. 1969. The categories and types of present-day English word-formation, 2nd edn. Munchen:C.H.Beck.

Matthews,P.H. 1974. Morphology: an introduction to the theory of word structure, Cambridge: Cambridge University Press.

Meys,W.J. 1975. Compound adjectives in English and the ideal speaker-listner, Amsterdam: North Holland.

Miller,G.A. 1978. "Semantic relations among words," In M.Hagle, J.Breshan & G.A.Miller (eds) Linguistics Theory and Psychological reality, Cambridge, Mass, MIT Press, 60-118.

Mohanan,K.P. 1986. The theory of lexical phonology, Dordrecht: D.Reidel Publishing company.

Moody, M.D. 1978. Some preliminaries to a theory of Morphology Glossa 12:1, 16.37.

Murugarathnam,T. 1971. "Adjectives in old Tamil," Proceedings of the Second International Conference of Tamil Studies, R.E.Asher (ed.), Madras: International Assiciation of Tamil Research, 1, 394-400.

Nadkarni,M.V. 1971. "The nature of adjectives in Kannada," Indian Linguistics 32: 3,179-193.

Nannan,M. (ed) 1983. Glossary of administrative terms in Tamil Madras: Directorate of Tamil Development.

Newmeyer,F. 1970. The derivation of English action nominalization Papers from the Regional meetings of the Chicago Linguistic Society, 6, 408-415.

----------1971. "The source of nominals in English ", Language 47,786-7.

Nida,E. 1949. Morphology, Ann Arbor: University of Michigan Publication in Linguistics.

Paramasivan,K. 1972. "Verbal nouns in Tamil," Proceedings of theFirst Conference of Dravidian Linguistics, Trivandrum: Dravidian Linguistic Association, 240-246.

---------- 1979. Effectivity and causativity in Tamil, Trivandrum: Dravidian Linguistic Association.

Pannanen,E.V. 1966. Contributions to the study of back-formation in English, Tampere: Aata Academiac Socialis, Ser.A.Vol.40.

---------- 1980, 1972 "Current views of Word-formation," Neuphilologische Mitteilungan 73, 292-308.

----------1975. "What happens in back-formation?" In Hovdhaugen (ed), 216-229.

---------- 1980. "On the function and behaviour of stress in English noun compounds," English Studies, 61, 252-63.

Perlmutler,D. 1988. "The split morphology Hypothesis: Evidence fromYiddish," In Theoretical Morphology Michael Hammord and Michael Noonan (eds), 70-100, New York: AP.

Premalatha,T.K. 1989. "Deverbal nominalizations in Malayalam: Certain Semantic aspects," (Manuscripts) Hyderabad: CIEFL.

Quirk, R.Greenbaum. S. Leech,G.N. & Svartvik,J. A Comprehensive grammar English, London: Longman.

Rajendran,S. 1978. Syntax and semantics of Tamil verbs, Unpublished Ph.D thesis, Poona: University of Poona.

----------1995. "Productivity and lexicalization of deverbal noun formation in Tamil," Unpublished paper read in 23rd All India Conference of Dravidian Linguistics, Trivandrum: ISDL.

----------1997. "Grammtical Formalism and Computational Analysis of Nominal Compounds in Tamil," South Asian Language Review 7:1, 27-46.

----------2000. "Strategies in the Formation of Compound Verbs in Tamil," International Journal of Dravidian Linguistics, 29:2, 107-126.

----------2000. "Types of Word Formation," In:R.E.Asher and R.Harris (eds), Linguisticoliterary, Delhi:Pilgrims Book Pvt.Ltd.

----------2001. Word Formation in Tamil (A Computer Assisted Study) (Unpublished Project Report), Thanjavur: Tamil University.

----------2001. "Typology of Nominalization in Tamil," Language in India 1:7, www.languageinindia.com.

----------2003. "Strategies in the formation of Adjectives in Tamil," Language in India 3:5, www.languageinindia.com.

----------2003."Strategies in the formation of Nouns in Tamil," Language in India 3:7, www.languageinindia.com.

----------2004. "Strategies in the formation of Compound Nouns in Tamil," Language in India 4:7, www.languageinindia.com.

Ramkrishna Reddy,B.1994. "Lexical doublets or copulative compounds," Unpublished manuscript.

Ramamurthy,L. 1985. Modernization of Tamil in Administration, Unpublished Ph.D. thesis, Annamalainagar: Annamalai University.

Rangan K., and Chandrasekaran,G. 1994. A Glossary of Standardized technical terms in linguistics English-Tamil, Thanjavur: Tamil University.

Roeper,T and Siegel, M.E.A. 1978. "A lexical transformation for verbal compounds," Linguistic Inquiry 9, 199-260.

Rohrer,C. 1974. "Some problems of word formation," In C.Rohrer and N.Ruwet (eds) Actes du collogue Franco-

Allemand de grammaire transformationelle 11: Tubingen: Niemeyer, 113-23.

Romaine,S. 1983. "On the productivity of word formation rules and limits of variability in the lexicon," Australian Journal of Linguistics 3, 177-200.

Rose,J.H. 1973. "Principled limitations on productivity in denominal verbs." Foundations of Language 10,509-526.

Ross,J.R. 1969. "Adjectives as noun phrases" In Modern Studies in English: Readings in Transformational Grammar. David A.Reibel and Stanford A.Schane, Eaglewood Cliffs, N.J (eds) Prentice-Hall, 352-360.

Sailaja,P. 1995. Issues in Lexical phonology, Hyderabad: Booklinks Corporation.

Selkirk,E.O. 1983. The Syntax of words, Cambridge, Mass: MIT Press.

Shanmugam Pillai,M. 1961. "Derivative nouns in Modern Tamil," Indian Linguistics, 22 145-159.

Siegel,D. 1974. Topics in English Morphology, Unpublished Ph.D. dissertation, MIT.

Smith,L.R. 1982. "An analysis of affixal verbal derition and complemtnation in Labrador Inuttut." Linguistic analysis, 10:2, 161-189.

Soudek,L.I. 1978. "The relation of blending to English word-formation: theory, structure and typological attempts," In Dressler & Meid (eds) 464-466.

Spencer,A. 1988. "Arguments for Morpholexical ruks," Journal of Linguistics 24,1-29.

---------- 1991. Morphological theory: an introduction to word structure in generative grammar, Cambridge: Basil Blackwell.

Spencer,A. and Zwicky,A.M. 1998. A Hand Book of Morphology, Oxford: Blackwell.

Sproat,R. 1992. Morphology and Computation, Cambridge, Mass: MIT Press.

Stein,G. 1976. "Semi-Productive lexical rules: a note on ed-adjectives," Journal of English Linguistics, 10, 30-3.

---------- 1977. "The place of word-formation in linguistic description," In Brekle & Kastovsky (eds). 219-235.

Stemberger,J.P. and Macwhinney,B. 1988. "Are inflected forms stored in lexicon?" In Theoretical Morphology, Michael Hammond and Michael Noonan (eds), 101-116.

Strauss,S.L. 1980. "How abstract is English Morphology," Glossa 14, 89-112.

Sundaram,R.M. (ed) 1982. Proceedings of the seminar on technical terms in Tamil (memeo), Thanjavur: Tamil University.

---------- 1995. "Coining of technical terminology", (Unpublished paper), Trivandrum: 13th All India Conference of Dravidian Linguistics.

Sussex,R. 1974. "The deep structure of adjectives in noun phrases," Journal of Linguistics, 10:1, 111-131.

Technical Terms prepared by Department of Scientific Tamil, Unpublished document, Thanjavur: Tamil University.

Thompson,S.A. 1975. "On the issue of productivity in the Lexicon," Kritikon, Litterarumu, 332-349.

Udaya Shankar,P.N. 1986. "Standardisation of Scientific Tamil in Education: Methodology revisited," 'Ariviyal Tamilkkovai' (ed). Coimbatore: Bharathiar University.

Uma Maheswar Rao,G. 1994. "Derived Lexicon problems of recognition." A paper presented at National seminar on lexical

typology, Telugu University, Hyderabad & CIIL, Mysore.

---------- 1994. "On certain aspects of word formation process: a case study of Telugu," A paper presented at National seminar on word formation in Indian languages, Osmania University..

Varadarajan,M. 1964. "Adjectives in Tamil: Old and New." Annals of Oriental Research 19: 2, 1-8.

Velupillai, A. 1969. "Adjectives in Tamil," Proceedings of the first International Conference seminar on Tamil Studies, Kualalumpur: International Association of Tamil Research, 2, 815-23.

Vendler,Z. 1968. Adjectives and Nominalizations, The Hague: Mouton.

Vijayavenugopal,G. 1979. Nominal composition in Tamil, Madurai: Madurai Kamaraj University.

Warren,B. 1978. Semantic Patterns of noun-noun compounds, Gothoburg Studies in English, 41, Lund: Acta Universetatis Gothoonburgensis.

Williem de Groot,A. 1956.57. "Classification of Word-groups," Lingua 6, 113-157.

Zugusta,L.1967. Manual of Lexicography, Mouton: Hague.

Zvelebil,K.1961. "More about adverbs and adjectives in Tamil," Tamil culture 9:3, 281-290.

துணைநூற்பட்டியல் [தமிழ்]

அகத்தியலிங்கம், ச. 1979. மொழியியல்: சொல்லியல் 1: பெயரியல், அண்ணாமலைநகர்: அனைத்திந்திய தமிழ் மொழியியற்கழகம்

---------- 1982. மொழியியல்: சொல்லியல் 2: வினையியல் 1, அண்ணாமலைநகர்: அனைத்திந்திய தமிழ் மொழியியற்கழகம்.

அரங்கன், கி. 1995. ''மொழி வளர்ச்சியும் கலைச்சொல் லாக்கமும்,'' தமிழர் கண்ணோட்டம், 16-19.

ஆட்சிச்சொல்லகராதி, தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ்நாடு அரசு.

இராசேந்திரன், ச. 1989. ''தமிழில் சொல்லாக்கம்,'' மொழியியல்: 13: 1-4, 14: 1-4, 163-192.

----------2000. ''பெயரடையாக்கம்,'' எச். சித்திரபுத்திரன் மற்றும் பிறர் (பதிப்பாசிரியர்கள்), நாஞ்சில், தஞ்சாவூர்: நியூ விசன் வெளியீட்டகம், பக்கம் 66-97.

----------2001. தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம், தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

இராதா செல்லப்பன். 1985. கலைச்சொல்லாக்கம், சென்னை: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்.

கருணாகரன், கி. 1981. மொழி வளர்ச்சி, சிதம்பரம்: மணிவாசகர் நூலகம்.

கருணாகரன், கி. மற்றும் பிறர் (பதிப்பாசிரியர்கள்) 1986. அறிவியல் தமிழ்க்கோவை, கோயம்புத்தூர்: பாரதியார் பல்கலைக்கழகம்.

---------- 1987. அறிவியல் உருவாக்கத்தமிழ், சிதம்பரம்: மணிவாசகர் நூலகம்.

கார்த்திகேயன், ஆ. 1981. ''கூட்டு வினைகளும் அவற்றைக் கண்டறியும் விதிகளும்,'' மொழியியல், 5:1, 119-127.

---------- 1982. ''வினையாக்கிகள்,'' மொழியியல், 5:3, 99-108.

கிரியாவின் தற்காலத்தமிழ் அகராதி. 19, சென்னை: கிரியா.

குழந்தைசாமி, வி. சி. 1978. அறிவியல் தமிழ், சென்னை: பாரதி பதிப்பகம்.

----------1978. ''அறிவியல் தமிழாக்க நெறிமுறைகள்,'' கோயம்புத்தூர்: கலைக்கதிர்.

கோதண்டராமன், பொன். 1971. ''தன் வினை பிறவினை,'' மொழியியல் 1:1 & 2 37-44.

---------- 1972. இலக்கிய உலகில் புதிய பார்வை, சென்னை: தமிழ் நூலகம்.

---------- 1975. ''சொல்லாக்க நெறிமுறைகள்,'' தமிழ் ஆய்வு-7, சென்னை: சென்னைப்பல்கலைக்கழகம்.

---------- 1979. ''அடிநிலைக்கோட்பாடு,'' மொழியியல் 3:1, 103-110.

---------- 1980. ''இ என்ற வினையாக்க விதி,'' மொழியியல் 4:1 &2, 39-45.

---------- 1981. இலக்கண உலகில் புதிய பார்வை, தொகுதி 2, சென்னை: தமிழ் நூலகம்.

---------- 1989. ''சொல் வகை அல்லது இலக்கணக் கூறுகள்,'' வெளியடப்படாத கட்டுரை, தமிழ் இலக்கணக் கருத்தரங்கு, தஞ்சாவூர்: மொழியியல் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம்.

கோவிந்தராசன், சி. 1987. கல்வெட்டுக்கலை, சொல் அகராதி, மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

சக்திவேல், சு. மற்றும் இராசேந்திரன், ச. 1994. சொற்கள் (வாழ்வும் வரலாறும்) சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

சிவள்ளி, சி. 1987. சமயச் சொல்லகராதி, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சண்முகம், செ.வை. 1984. சொல்லிலக்கணக்கோட்பாடு-1, அண்ணாமலைநகர்: அனைத்திந்திய மொழியியற்கழகம்.

---------- 1986. சொல்லிலக்கணக்கோட்பாடு-2, அண்ணாமலைநகர்: அனைத்திந்திய மொழியியற்கழகம்.

சண்முகம், சாமி. 1990. மருத்துவக் கலைச்சொற்கள், சென்னை: பூங்கா பதிப்பகம்.

சண்முகசுப்பிரமணியன் வெங்கடாச்சலம், 1994. சட்டத்தமிழ் அகராதி, தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

சண்முகம் சி, 1989. ''முறைமைவினையடையும் இலக்கண விளக்கமும்.'' வெளியிடப்படாத கட்டுரை, தமிழ் இலக்கணக் கருத்தரங்கு, தஞ்சாவூர்: மொழியியல் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம்.

சித்திரபுத்திரன், எச். 1982. ''செயப்படுபொருள் குன்றிய/குன்றா வினைகளும் காரண வினைகளும்,'' மொழியியல், 5:3, 41-74.

---------- 1996. ''தமிழ் இரட்டிப்புச் சொற்களின் அமைப்பும் சொற்பொருண்மையும்,'' வெளியிடப்படாத ஆராய்ச்சிக் கட்டுரை, பண்பாட்டியல் ஆராய்ச்சி அரங்கம், தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

சுந்தரம், இராம. 1983. ''தமிழில் கலைச்சொல்லாக்க முயற்சிகள்,'' தமிழ்க்கலை 1:1, தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

----------1984. தமிழ் வழி அறிவியல், தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

---------- 1985. (தொகுப்பு) தொழில்நுட்பத்தமிழ், தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

சுப்பிரமணியம், ச.வே. 1972. இலக்கணத்தொகை-சொல், நாகர்கோயில்: ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்.

சுப்பையா, கோ. 1982. ''கூட்டுவினைகள்-ஓராய்வு,'' மொழியியல் 6:1, 81-89.

---------- 1984. ''வினையடிப்பெயர்,'' மொழியியல் 7:1 &2, 95-111.

---------- 1984. ''கூட்டுப்பெயர்,'' மொழியியல், 7:1 & 2, 187-191.

ஞானப்பிரகாசம், 1994, கால்நடைவளம் (Dictionary of Veterinerary Science Terms), Madras: University of Veterinerary Science.

தாமோதரன், ஜி.ஆர். (பதி.) கலைச்சொல்லகராதி, தொகுதி 3, கோயம்புத்தூர்: கலைக்கதிர்.

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்- இளம்பூரணர் உரை (பதிப்பு 1973), சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-கல்லாடனார் உரை (பதிப்பு 1964) சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-சேனாவரையர் உரை (பதிப்பு 1963), சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-தெய்வச்சிலையார் உரை (பதிப்பு 1974), சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-நச்சினார்க்கினியர் உரை (பதிப்பு 1962), சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

நன்னூல் காண்டிகையுரை (பதிப்பு 1972) சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

பத்மநாபன், டி. (பதிப்பாசிரியர்), அறிவியல் தமிழ், கோயம்புத்தூர்: கலைக்கதிர்.

பரமசிவன், கு. 1973. இக்காலத்தமிழ் மரபு, சிவகங்கை: அன்னம்(பி)லிமிடெட்.

முத்துவீரப்பன், பழ. 1982. வ.சுப.மாணிக்கனாரின் சொல்லாக்கம், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

முஸ்தாபா, எம். 1991. அறிவியல் கலைச்சொல் களஞ்சியம், தொகுதி 1, சென்னை: மீரா பிரசுரம்.

---------- 1994. அறிவியல் கலைச்சொல் களஞ்சியம், தொகுதி 2, சென்னை: மீரா பிரசுரம்.

மூர்த்தி, எ.கே. 1994. அறிவியல் அகராதி, சிதம்பரம்: மணிவாசகர் பதிப்பகம்.

ராம்குமார், 1991. கணிப்பொறி அகராதி, சென்னை: சைவ சித்தாந்த நூல் வெளியீட்டுக்கழகம்.

ரேணுகாதேவி, வீ. 1987. ''தமிழில் வினையடைகள்,'' மொழியியல் 10: 1-4, 93-108.

வையாபுரிப்பிள்ளை, எஸ். 1956. சொற்கலை விருந்து, சென்னை: பாரி நிலையம்.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005

அண்மைவெளியீடுகள்

அறிவியல் களஞ்சியம் தொகுதி – 13	700.00
பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும், பாவேந்தரும் மொழிபெயர்ப்பும்	30.00
பழந்தமிழ்த் தொடரியல் வரலாற்று ஆய்வு	70.00
தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி – 5	150.00
உயிர்வேதியியல்	270.00
குழந்தை நல மருத்துவம் தொகுதி – 1	210. 00
குழந்தை நல மருத்துவம் தொகுதி – 2	170. 00
சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி – 2 (மறுபதிப்பு)	400.00
வாழ்வியல் களஞ்சியம் தொகுதிகள் 5 – 9 (மறுபதிப்பு) ஒவ்வொன்றும்	700.00
அருங்கலைச் சொல் அகர முதலி (மீள்பதிப்பு)	600.00
திருமுறைத் திருநெறி தொகுதி – 1	105.00
தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி–2	85.00
வைத்திய சிந்தாமணி	80.00
அயல்நாட்டவர்க்குத் தமிழ் – கருத்துப் பரிமாற்ற இலக்கணம்	70.00
சுந்தரர் தேவாரப் பாடல்களில் இசை	70.00
தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி – 1 (மறுபதிப்பு)	200.00
உலகநாடுகளில் தமிழ்ப் பண்பாடு	50.00
108 ஆடலியக்கத் தமிழ்ப் பெயரீடும் அமைவுகளும்	50.00
தமிழக அறிவியல் வரலாறு	60.00
இசைத் தமிழ்ப் பேரறிஞர்கள் தொகுதி – 1	60.00
தன்வந்தரி வைத்தியக் கும்மி	50.00

தொடர்பு முகவரி :

இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)

தஞ்சாவூர் – 613 001. தொ.பே. 04362 – 239221